MADRAS GOVERNMENT ORIENTAL SERIES

Published under the authority
of the
Government of Madras

General Editor:
T. CHANDRASEKHARAN, M.A., L.T.,
Curator, Government Oriental Manuscripts Library,
Madras.

No. CXIII

திருவாசக வியாக்கியானம்

இரண்டாம் பகுதி

பதிகங்கள்

TIRUVĀCAKA VYĀKHYĀṆAM

BY

KĀḶI TĀṆḌAVARĀYAR

PART II

Edited by :

R. VISVANATHAIYAR

Published by :

Mahamahopadhyaya Doctor V. Swaminathaiyar Library,
Adyar, Madras 20.

1954

Price Rs. 7-8-0

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிய

திருவாசகத்துக்கு

சீகாழித் தாண்டவராயர் அவர்கள்

இயற்றிய

திருவாசக அநுபூதி உரை

என்னும்

திருவாசக வியாக்கியானம்

[இரண்டாம் பகுதி]

பதிப்பாசிரியர் :

ரா. விசுவநாதையர்

மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

அடையாறு, சென்னை-20.

1954

முதற்பதிப்பு—1954
(உரிமைப்பதிவு)

விலை ரூ. 7–8–0.

ரத்தினம் பிரஸ் (பிராஞ்ச்), 65, திருப்பள்ளி தெரு, சென்னை-1.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

முன்னுரை

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பிரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே

—(திருவாசகம்)

'ஆதி சீர் பரவும் வாதவூரண்ணல் மலர் வாய்ப் பிறந்த வாசகத் தேனை'ன இத்தெய்வத்திருமுறையின் அநுபூதி உரையென்னும் இவ்வியாக்கியானத்தின் முதற்பகுதி இறைவனருளால் 19—2—54 அன்று வெளியாயிற்று. அதன் பிற்பகுதி இப்பொழுது வெளி வருவதற்கு உதவிய அத்திருவருளைத் திரிகரணங்களாலும் வணங்கு கின்றேன்.

இதனில் திருச்சதகம் முதல் அச்சோப்பதிகம் ஈறுகவுள்ள நாற்பத்தேழு பதிகங்களுக்குமுள்ள உரை அடங்கியுள்ளது. உரை யாசிரியர் முதல் நான்ககவல்களுக்குக் கூறியபடி மேற்கோள்களை விரிவுபடுத்தாமல் பாசுரங்களுக்குள்ள உரையைமட்டுமே இங்கு அமைத்துச் செல்கின்றார். அவர் முடிந்தவரை பாசுரங்களிலுள்ள சொல்லமைதியையொட்டியே உரை வகுத்துச் செல்லுகின்றரெனி னும், சிற்சிலவிடங்களில் அப்பாசுரங்களில் உட்பொருள்களாக அமைந்துள்ளவற்றையும் விளக்கிச் சென்றிருப்பது அவருடைய பக்தியையும் நுண்ணறிவையும் விளக்குகின்றது. பிற நூல்களி லிருந்து எடுக்கப்பெறும் மேற்கோள்களை உரையிலே அமைத்துச் செல்வது அவருடைய இயல்புகளுள் ஒன்று.

உரையாசிரியரைப் பற்றி ஏட்டின் முன்பகுதியிலிருந்து கிடைத்த செய்திகள் முதற்பகுதியின் முன்னுரையிலும், சிறப்புப்

பாயிரத்திலும் கூறப்பெற்றன. அவ்வேட்டின் இறுதியில் கண்ட ஒரு குறிப்பால் உரையாசிரியரின் முழுப்பெயர் 'சீகாழி இராசாத்துரை பிள்ளைக்குப் பிரதிநாமமான தாண்டவராயன்' என்பதும், இவ்வுரை 'மன்மத வருடம் மார்கழித் திங்கள் ஆரும் தேதியில் தில்லைச் சிற்றம்பலவாணநாதனுர் சந்நிதியில் திருவுளமிரங்கித் திருச்சீட்டு அருளிற்று இவ்வுரை; அடியார்களே ஏல்வை கொள்ளும்படியாக அநுக்கிரகம் பண்ணியது' என்பதும் கிடைத்தன. ஏட்டின் முடிவில், 'அகண்டாகார சச்சிதானந்த தாயுமான சற்குரு சந்ததி விளங்கவும், அடியேன் சனனம் நீங்கவும், மானிடச்சட்டை(யில்) எழுந்தருளிய சாட்சாத் குழந்தைவேல் குருநாதசுவாமிகள் பாதமே துணை' என்றும் எழுதப்பெற்றிருக்கிறது. இவற்றுல் உரையாசிரியர், அவருடைய குரு, அவரது சந்ததி ஆகியவை புலப்படுகின்றன.

உரையின் நடையை இக்காலத்தினர் பின்பற்றுவதற்கு உதவியாகச் சந்திகளைப் பிரித்தும், புள்ளிகளிட்டும், விடுபட்டனவாகத் தோன்றும் பகுதிகளை நகவளைவுகளுக்குட் காட்டியும் அமைத்துள்ளேன். அச்சில் வெளிவந்துள்ள வேறு உரைகளுக்கும் இவ்வுரைக்கும் உள்ள மாறுபாடுகளையும், உரையில் மயக்கமாயுள்ள பகுதிகளுக்குத் தெளிபொருள்களாகக் காண்பவற்றையும், அருஞ்சொற்களுக்குப் பொருள்களையும், சில இடங்களில் முடிபுகளையும் அடிக்குறிப்புக்களில் அமைக்க முயன்றுள்ளேன். இவற்றையேயன்றி உரைமூலத்தில் யாதொரு மாற்றமும் செய்யப் பெறவில்லை.

இவ்வுரையின் அருமை இதனை ஒருமுறை பார்ப்பவர்களுக்கே விளங்கும். இதுவரையில் வேறு எவராலும் காட்டப்பெறுத பல அருமையான திருவாசகக் கருத்துக்கள் இவ்வுரையால் வெளியாகின்றன. சிற்சில இடங்களில் பாடங்களும் திருந்தியுள்ளன. இத்தகைய அருமைவாய்ந்த ஏட்டுச்சுவடியைச் சேகரித்து வைத்த ஸ்ரீ ஐயரவர்களுக்குச் சைவத்தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. அவர்களுடைய நூருவது ஜன்ம விழா நிகழும் இவ்வாண்டில் இந்நூல் முழுமையும் வெளிவருவதும் மகிழ்ச்சிக்குரிய செய்தியே.

இவ்வுரையாலும் தெளிவுபெறு இடங்கள் பல இருக்கின்றன. அவற்றைக் காணும்போது ஸ்ரீ மாணிக்கவாசகர் பெற்ற அநுபூதியின் பெருமையும் நுட்பமும் நம்மை வியப்புறச் செய்கின்றன.

இந்நூலைப் பதிப்பிக்க நம் சென்னை அரசியலார் இந்நூல் நிலயத்துக்குப் பேருதவிபுரிந்துள்ளனர். இப்பதிப்பு சென்னை அரசியலார்

நூற்பதிப்பு வரிசையின்கீழேயே வெளிவருகின்றது. இவ்வுதவிக் காக அரசியலார்க்கும், இவ்வரிசையின் பொதுப்பதிப்பாசிரியரான அரசாங்கக் கீழ்த்திசைக் கையெழுத்துப் பிரதிகள் நூல் நிலையத் தலைவரான ஸ்ரீ T. சந்திரசேகரன், M.A.. L.T., அவர்களுக்கும் இந்நூல் நிலையம்தன் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றது.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் தமிழ்க் கும் சைவத்துக்கும் செய்துவரும் அருளறங்கள் உலகமறிந்தனவே. அவர்கள் இந்நூலின் அருமையை அறிந்து, இதன் முதற்பாகத்தின் பிரதிகளிற் பலவற்றை வாங்கி நம் பாரத நாட்டிலுள்ள எல்லாப் பல்கலைக்கழகங்களுக்கும, தமிழகத்திலுள்ள எல்லா உயர்தரக் கலாசாலைகளுக்கும் தம் அன்பளிப்பாக உதவி அருளினர்கள். இவ் வாறு அவர்கள் ஊக்கிக் காட்டியருளிய பேரன்புக்கு இந்நூல் நிலையம் செய்யக்கூடிய கைம்மாறு யாதுளது? அவர்களுடைய புகழ் என்றும் விளங்குவதாகுக.

ஏடுகளைப் பார்க்குங்காலத்தும், பிரதிசெய்யும்போதும், அரும் பத அகராதிகளை முறைப்படுத்தும் காலையும் எனக்கு உடனிருந்து அன்புடன் உதவி செய்த இந்நூல் நிலைய உதவியாளர்களான வியாகரண சிரோமணி ஸ்ரீ தி. இராமாநுஜ ஐயங்கார் அவர்களுக்கும், சிரஞ்சீவி P. R. வைத்தியநாதனுக்கும் என் நன்றி பெரிதும் உரித்து. இந்நூலை விரைவிலும் அழகாகவும் அச்சிட்டுக் கொடுத்த இரத்தினம் பிரஸ் (பிராஞ்சு) அச்சுக்கூடத்தாருக்கும் நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்றுக்கும் பற்றுத எளியேனை இப்பணியில் ஈடுபட அருளிய ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமானின் கருணையை என்றும் எண்ணி மனங்கரைகின்றேன். இப்பதிப்பிலுள்ள குற்றங்களைப் பொறுத்துக் கொண்டு, அவற்றைத் திருத்த உதவ வேண்டுமென்று தமிழுலகை வேண்டுகிறேன்.

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைப்
சீயேது மில்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ

—(திருவாசகம்)

திருச்சிற்றம்பலம்

19—12—54. ரா. விசுவநாதன்

பொருளடக்கம்

	நூல்		பக்கம்
5.	திருச்சதகம்	...	455
6.	நீத்தல் விண்ணப்பம்	...	538
7.	திருவெம்பாவை	...	572
8.	திருவம்மானை	...	598
9.	திருச்சுண்ணம்	...	614
10.	திருக்கோத்தும்பி	...	631
11.	திருத்தெள்ளேணம்	...	644
12.	திருச்சாழல்	...	657
13.	திருப்பூவல்லி	...	672
14.	திருவுந்தியார்	...	684
15.	திருத்தோணோக்கம்	...	696
16.	திருப்பொன்னூசல்	...	705
17.	அன்னைப்பத்து	...	712
18.	குயிற்பத்து	...	719
19.	திருத்தசாங்கம்	...	727
20.	திருப்பள்ளியெழுச்சி	...	735
21.	கோயில் மூத்த திருப்பதிகம்	...	744
22.	கோயில் திருப்பதிகம்	...	753
23.	செத்திலாப்பத்து	...	761
24.	அடைக்கலப்பத்து	...	770
25.	ஆசைப்பத்து	...	776
26.	அதிசயப்பத்து	...	782
27.	புணர்ச்சிப்பத்து	...	791
28.	வாழாப்பத்து	...	799
29.	அருட்பத்து	...	806
30.	திருக்கழுக்குன்றம்	...	814
31.	கண்டபத்து	...	820
32.	பிரார்த்தனைப்பத்து	...	826

	நூல்		பக்கம்
33.	குழைத்தபத்து	...	833
34.	உயிருண்ணீப்பத்து	...	841
35.	அச்சப்பத்து	...	848
36.	திருப்பாண்டி விருத்தம்	...	855
37.	பிடித்தபத்து	...	862
38.	திருவேசறவு	...	870
39.	திருப்புலம்பல்	...	876
40.	குலாப்பத்து	..	878
41.	அற்புதப்பத்து	..	884
42.	சென்னிப்பத்து	...	891
43.	திருவார்த்தை	...	898
44.	எண்ணப்பத்து	...	907
45.	யாத்திரைப்பத்து	...	912
46.	திருப்படையெழுச்சி	...	920
47.	திருவெண்பா	...	922
48.	பண்டாய நான்மறை	...	928
49.	திருப்படையாட்சி	...	932
50.	ஆனந்தமாலை	...	941
51.	அச்சோப்பதிகம்	...	947
	திருவாசகப் பதிக வரிசை	...	952
	திருவாசகப் பதிகத் தொகை	...	954
	செய்யுண் முதற்குறிப்பகராதி	...	955
	நூலிற் கண்ட அரும்பதம் முதலியவற்றின் அகராதி	...	964
	உரையிற் கண்ட அரும்பதம் முதலியவற்றின் அகராதி	...	990

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவாசக அநுபூதி உரை

என்னும்

திருவாசக வியாக்கியானம்

இரண்டாம் பகுதி

திருச்சிற்றம்பலம்

5. திருச்சதகம்

(திருப்பெருந்துறையில் அருளியது)

திருச்சதகமான திருவருள் விநியோகம் அருளிச் செய்யப் புகுகின்றனவாவன :

இவைக்கு அகத்திய சூத்திரம் :

மிகையறும் பொருட்டிருச் சதகம் பத்து
வகையது வாக விரட்சித்த முறைமை.

இனிப் பொழிப்புரை அநுபவமாவன :—

முன்னருளிய நான்கு திருவருட் பாக்களிலும் முதலிடமான தலைமையருளி, இத்திருச்சதகம் (5) முதல், நீத்தல் விண்ணப்பம் (6 காறும் இரண்டாமிடமான திருவருளே தலைமையெனவருளி, திருவெம்பாவை (7) முதல், திருப்பள்ளியெழுச்சி (20) வரை திருவருட் செயலே தன்செயலாக மூன்றுமிடமென்றருளி, அப்பால் கோயில் மூத்த திருப்பதிகம் (21) முதல், சுத்தாநுபோக சாங்குசித்தத் திருத்தொண்டின் இயல்பை நான்காமிடமாகவருளி, அவற்றுள் முதலிடமான நான்கு அகவல்களும் நான்கு வேதங்களாகவும், நால்வகைப் பொருள்களாகவும், சத்திநிபாதமுடையவர்கட்கு நிட்டையநுபோக நிலைமைகளாகவும், சொரூப அநாதிமுறைமையும், தடத்தத்தின் பெருமையும், பெருங்கருணையின் அதிசயமும், வணங்குதற்கெளிய வாழ்வும், சிவஞானபோதப் பதினெரு சூத்திரக் கருத்தும் அருளி,

அணைந்தோர் தன்மையும், பன்னிரண்டாம் சூத்திரக்கருத்தின் பயனும் அப்பயன் முழுதும் [1]நாற்பத்தேழு பதிகங்களாகவும் அருளிற்று.

அவற்றுள், இச்சதகத்தில், அணைந்தோர் தன்மையின் பெருமையெல்லாம், அன்பு நெகிழ்ச்சியாயுள்ள சத்துக்களுக்கு மன வாக்குக் காயங்களெல்லாம் அடிமைத் திறமே தோன்ற ஒன்றும் பெருதவர்களைப் போலவும், பெற்ற அநுபோகங்களாகவும், பெறு தற்கரிய பேறெனவும் போலும் இருப்பதாதலால், அவையும் இங்ஙனம் பத்து வகையான பரிபாக சத்தியாயிருக்கும்.

அவையாவன :—இத்திருச்சதகம் பதிற்றுப்பத்தாந்தியாகப் பத்துக்கொத்திட்டமையால்,

முதற்கொத்துப் பத்துத் திருப்பாவில், தேகத்திற் காணும் பரிபாகச் சின்னங்களைச் செலுத்தும் சிவசத்தி, இரண்டாம் கொத்து, மனதைப் பரிபாகப்படுத்தும் சிவசத்தி, மூன்றாங் கொத்து, அன்பைப் புலப்படுத்துஞ் சிவசத்தி, நான்காம் கொத்து, மறைக்கும் மறதியைத் தரிசிப்பிக்கும் சிவசத்தி, ஐந்தாங் கொத்து, ஆகையைப் பரிபாகப்படுத்துஞ் சிவசத்தி, ஆறாங் கொத்து, தோத்திரமே அநுபவமெனப் புலப்படுத்தும் சிவசத்தி, ஏழாங் கொத்து, கரணம் பலவழிச் சென்றாலும் அருள்வழி நிறுத்துஞ் சிவசத்தி, எட்டாங் கொத்து, பெற்றோர் பயன்போலப் பெறக் கிடைத்ததில்லையென்று பேரின்ப அவாக்கொடுக்கும் சிவசத்தி, ஒன்பதாங் கொத்து, கொடுத்த வாழ்வெல்லாம் பேரின்பமே யென் றுணர்த்துஞ் சிவசத்தி, பத்தாங் கொத்து, தோத்திரஞ் செய்யவும், மனமுருகவும், பேரின்பம் பெறவும், தேகபாசம் நீங்கவும், யான் எனதென்பது அறவும், இன்ப சுகம் கிடைக்கவும் அணுக்கிரகம் பண்ணுகிறதே வரமென்றுணர்த்தும் சிவசத்தி. இப்பத்துச் சத்திகளும் திருப்பாக்களில் வரும் முறைமையைக் காண்க.

இச்சதகம் திருப்பெருந்துறையிலோதியதெனக் காண்க.

---

1. முதல் நான்கு அகவல்களையும் தனியே ஒரு தொகுதியாக்கி, எஞ்சியவற்றை நாற்பத்தேழாகக் கூறியது. இவற்றிற்குப் பதிகங்கள் என்ற பெயர் கொடுக்கப்பெற்றது.

திருச்சதகம்

குறிப்பு

சதகம் என்பது நூறு பாட்டுக்களைக் கொண்ட பகுதி என்று பொருள் படும். சதம் - நூறு. இஃது அந்தாதித்தொடையால் அமைக்கப்பெற்றுள்ளது. ஒரு பாட்டின் இறுதியிலுள்ள தொடர், சீர், அசை, எழுத்து இவற்றுள் ஏதேனுமொன்று அடுத்த பாட்டின் ஆதியாகத் தொடுப்பது அந்தாதியாகும். இச்சதகம் 'மெய்தான் அரும்பி' என்று முதற்பாட்டில் தொடங்கி 'மெய்யர் மெய்யனே' என்று நூறாவது பாட்டில் முடிகின்றது. திரு என்னும் அடைமொழிக்குத் தெய்வத்தன்மை வாய்ந்த என்பது பொருள்.

திருச்சதகத்தின் சிறப்பைப்பற்றிப் பழைய திருப்பெருந்துறைப் புராணம் 'சத்தியஞானந்தருதே சிகர்மோகஞ்சதகமதாம்' என்று கூறுகிறது.

இச்சதகம் திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகப்பெருமானால் அருளப்பட்டது. மணிவாசகப்பெருமான் மதுரையினின்று திருப்பெருந்துறைக்குத் திரும்பியபின், சிவபெருமான் நரபாலரை மட்டும் பூமியில் இருத்திப் பிற அடியார்களைத் தடாகத்தில் எழுந்த சோதியில் மறையச் செய்து அவர்களைச் சிவகணங்களாக்கி அவர்களுடன் மறைந்த பின்னர், மணிவாசகர் பெருமானின் பிரிவாற்றுமையால் பலவாறு புலம்பலுற்று இத்திருச்சதகத்தை அருளினர் என்பர்.

திருவாசகத்தின் ஒவ்வொரு பதிகத்துக்கும் உட்கருத்தாகத் தலைப்புக்கள் இடப்பெற்றிருப்பதை நாம் எல்லா அச்சுப்பிரதிகளிலும் பல ஏட்டுப் பிரதிகளிலும் காண்கிறோம். அவற்றின்படி திருச்சதகத்துக்குக் கொடுக்கப்பெற்றிருக்கிற தலைப்பு, 'பக்தி வைராக்கிய விசித்திரம்' என்பது. இச்சதகம் பப்பத்துப் பாடலைக்கொண்ட பத்துப் பிரிவுகளாக அமைந்திருக்கிறது; ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு தலைப்பு உண்டு. அவ்வாறு அச்சுப் பிரதிகளில் காணப்படும் தலைப்புக்கள் திருவாசகத் திருவுள்ளக்கிடை என்ற தலைப்பில் அடிக்குறிப்புக்களுள் காட்டியுள்ளோம். எங்கள் நூல் நிலையத்திலுள்ள ஒரு சுவடி (எண் 560-B) யில் 'அகத்தீச சுவாமி அருளிச்செய்த மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்துக்குக் குறள் செய்து முத்திரை வைத்தது' என்று எழுதப்பெற்றவைகளுள். திருச்சதகம் என்ற தலைப்பின்கீழ் பின்வருபவை காணப்படுகின்றன :—

5-வது திருச்சதகம்

1-வது மெய்யுணர்வு—தேகாதி பிரபஞ்சங்களைக் கண்டு நீங்கல்,

முதற்கொத்து

கட்டளைக்கலித்துறை

5. இவை, முதற்கொத்துத் திருப்பாவாவன பத்திலும் தேகத்திற் காணும் பரிபாக சின்னங்களைச் செலுத்தும் சிவசத்தியின் பெருமையின் திருவருள் விநியோகமாவன:—

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னும்
கைதா னெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டுகொள்ளே.

2-வது அறிவுறுத்தல்—பேரறிவோடே (பொறியோடே) கூடுதல்-குருதரிசனம்.

3-வது சுட்டறுத்தல்—தன் செயலற்றது.

4-வது ஆத்மசுத்தி—அநுபவத்தெழுதல்.

5-வது கைம்மாறு கொடுத்தல்—சிவனிடத்திலே கொடுத்தது.

6-வது அநுபவசுத்தி—

7-வது காருணியத்திரங்கல்—சிவனுடைய அபேதப்பட்டிரங்கல்.

8-வது ஆனந்தத்தழுந்தல்—

9-வது ஆனந்தபரவசம்—

10-வது ஆனந்தாதீதம்—

இத்தலைப்புக்களே சிற்சில மாறுபாடுகளுடன் அச்சு நூல்களிலும் காணப்படுகின்றன.

இவை நிற்க, இவ்வுரையாசிரியர் பிறவிடங்களில் அகத்திய சூத்திரங்களென மேலே காட்டிய சுவடியில் உள்ள தலைப்புக்களையே பெரும்பாலும் கொண்டிருக்க, இத்திருச்சதகத்திற்கு மட்டும் இவற்றைக் கொள்ளாமல் வேறு வகையாகக் கொண்டமை குறிக்கத்தக்கது. அவ்வாறு அவர் கொண்டமை பெரிதும் பொருத்தமுடையதாயிருப்பதும் காண்க.

இக்கொத்துக்குத் திருவாசகத் திருவுள்ளக்கிடை :—மெய்புணர்தல்.

5. மெய் அரும்பி - உடல் பொடித்து. விதிர்விதிர்த்து - நடுங்கி. விரை ஆர் கழல் - மணம் நிறைந்த திருவடி. உள்ளம் வெதும்பி என மாற்றுக. வெதும்பி என்பதற்கு உடல் இளைத்து என்றும் கொள்வர். கண்டு - பார்த்து. கொள் - ஏற்றுக்கொள்க.

(இதன் பொருள்). மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து உன் விரை ஆர் கழற்கு (என்றது)—நாதனே! தேவரீருடைய அருள் மணம் வீசும் பொற்பாத கமலங்களே அடியேன் திருவருளால் தேகம் பரவசமுற்றுப் புளகாங்கிதமாக, உரோமக் கால்தோறும் மயிர்க் கூச்சிட்டது (எனக் காண்க); கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்பி (எ - து)—இரண்டு கைகளும் சிரசின்மேல் அஞ்சலி கூப்பி இரண்டு கண்களிலும் ஆநந்த நீர் ததும்பி (எ - க); வெதும்பி உள்ளம் பொய்தான் தவிர்ந்து (எ - து)—'எனது உள்ளம் யான்' என்ற பொய் திருவருளால் நீங்கவே, அதனால், ஆராமை வெப்பம் கொண்டு எனது என்ற புறப்பற்றும் தவிர (எ - க); உன்னைப் போற்றி சய சய போற்றி என்னும் (எ - து)—தேவரீர் திருவடி கண்டு, இப்பாவுக்கு முன் அகவலில் இறுதியிற் சொல்லிய தொடர்ச்சியாகவே, ஸீமிசையாகவே, அடிமையை இரட்சிக்க வேண்டுமெனத் திருவடியில் வணக்கமுற்றிருப்பவனை என்னை (எ - க); கைதான் நெகிழ விடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே (எ - து)—சுதந்தர ஈனனைச் சருவசுதந்தரமாக்கி, என்னை அநாதியே அடிமை கொண்ட நாதா! என்னை இரட்சிப்பாய் (எ - க). (1)

6. இனி, என்னை எவ்விதத் துன்பம் வந்தடரினும் தேவேரூர் தெய்வத்தையும் அத்தெய்வப் பதவியையும் பொருளெனக் கொள்ளாத திருவருள் விநியோகம் அருளிச் செய்யப் புகுகின்றதாவன :—

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளே னினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னியல் லாதெங்க ளுத்தமனே!

(இ - ள்), கொள்ளேன் புரந்தரன் மால் அயன் வாழ்வு குடி கெடினும் (எ - து)—நாதனே! தேவரீர் திருநோக்கம் பாலியாது அடியேன் குடிகெடுவதானாலும் என் மனம் வேறு தெய்வங்களான விட்டுணு, பிரமன், இந்திரன் முதலியோர் செல்வம் பொருளென நினையாது (எ - க); நள்ளேன் நினது அடியாரொடல்லால் நரகம் புகினும் (எ - து)—கொடிய நரக வேதனையில் அழுந்தினேனாயினும் உனது சீரடியார் கூட்டம் சேர்வனேயல்லாது வேறுள்ளாரை நண்ணேன் (எ - க); எள்ளேன் திருவருளாலே இருக்கப் பெறின் (எ - து)—திருவருளால் இம்மையிலே இருப்பேனாயினும், ஒரு

காலமும் இகழ்ந்தெண்ணேன் (எ - க); இறைவா, உள்ளேன் பிற தெய்வம் (எ - து)—நாதனே! பிறதெய்வம் உண்டென உட்கொண்டு எண்ணேன் (எ - க); உன்னே அல்லாது எங்கள் உத்தமனே! (எ - து)—சகல தேவர்களுக்கும் சிரேட்டமாயுள்ள மகாதேவனே! தேவரீர் திருவடியல்லாது உள்ளேன் (எ - க). (2)

7. இனி, தன்னே உலகத்தார் சிவனடியானென எண்ணுவார் களோ என்ற (தி. ன.) :—

உத்தம னத்த னுடையா னடியே னினைந்துருகி
மத்தம னத்தொடு மாலிவ னென்ன மனநினைவில்
ஒத்தன வொத்தன சொல்லிட வூரூர் திரிந்தெவரும்
தத்த மனத்தன பேசவெஞ் ஞான்றுகொல் சாவதுவே?

(இ - ள்). உத்தமன் அத்தன் உடையான் அடியேன் நினைந்து உருகி மத்த மனத்தொடு (எ - து)—நாத! உத்தமனே! உன்னைச் சருவசிரேஷ்டனென்றும், எனது அப்பனென்றும், என்னை உடை யவனென்றும் அடியேன் நினைந்து அன்பாலுருகி உன்மத்தனைக அடியேன் நிற்க, என்னைக் கண்ட உலகத்தார்கள் (எ - க); மால் இவன் என்ன மன நினைவில் ஒத்தன ஒத்தன சொல்லிட (எ - து)—சிவராகமோகமுடைத்தாகத் (தன்னை) ஒத்துக்கொண்டானென அதிசயமாகச் சொல்லுகின்றார்; என்னவே, அவர்கட்கு ஒப்பல்ல வெனக் காண்க. ஊரூர் திரிந்து எவரும் தத்தம் மனத்தன பேச எஞ்ஞான்று கொல் சாவதுவே (எ - து)—அவ்வுலகத்தார் இழிவு சொல்லும்படி ஊர்கள் தோறும் நான் அலைய, என்னைக் கண்டவர் கள் தாங்கள் தாங்களே இவ்விழிவான அடிமை யியல்பை எக்காலம்

---

6. குடிகெடினும் என்பதைக் கொள்ளேன் என்பதனோடு கூட்டிப் பொருள் கூறியதையும், இருக்கப்பெறின் என்பதை இருக்கப்பெறினும் என்று கொண்டு எள்ளேன் என்பதனோடு கூட்டியுரைத்ததையும் நயந்து ஓர்க. இவ்வாறே இச்செய்யுளிலுள்ள பிற வினைகளுக்கும் முடிவு காட்டி யுள்ளது கண்டு இன்புறத்தக்கது.

புரந்தரன் - இந்திரன்; மால் - திருமால்; அயன் - பிரமன். கள் ளேன் - கூடேன். எள்ளேன் - இகழேன். உள்ளேன் - நினையேன்.

பேசுவார்களோ அப்படிப் பேசாதொழிந்தால் சாவதே முறையென அருளியதைக் காண்க. (3)

8. சங்கார கர்த்தாவான நாதனே முதலாளி என்பதொழிந்து அவ்வாஞ்ஞாசத்திக்குட்பட்ட விட்டுணு பிரமனுடன் எண்ணிக்கையாகப் பொதுவிற் பேசியது மகாபாதகம் என்ற (தி. ன.) :—

சாவமுன் னுட்டக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சமஞ்சி
ஆவவெந் தாயென் றவிதா விடுநம் மவரவரே
மூவரென் றேயெம் பிராலெடு மெண்ணிவிண்
[ணண்டுமண்மேல்
தேவரென் றேயிறு மாந்தென்ன பாவந் திரிதவரே.

(இ - ள்). சாவ முன்னுள் தக்கன் வேள்வி தகர் தின்று நஞ்சம் அஞ்சி ஆவ எந்தாய் என்று அவிதா விடும் (எ - து)—முன்னமே ஒரு காலத்தில் தக்கன் நாதனே இகழ்ந்து மற்றுள்ள தேவர்களே அழைத்து வேள்வி செய்யும்போது உடனிருந்து எல்லாத் தேவர்களும் வெந்தது போதுமென்று ஆட்டவிர்ப்பாகம் விரைவிலே வாங்கிப் புசித்து அவர்கள் ஆலகால விடங் கண்டவுடன், ‘ இறந்து

---

7. உத்தமன் என்ற சொல்லுக்கு இருளைக் கடந்தவன் என்றும் பொருள் கூறுவர். அத்தன் - தந்தை. மத்தம் - உன்மத்தம்; களிப்பும் ஆம். மால் இவன் - இவன் மயக்கமுடையவன்.

உலகத்தவர் எவ்வாறு பேசினும் அடியார் தம் நிலையிலேயே நிற்க விரும்புவதைக் கூறியது; அடியார் நிலை உன்மத்த நிலை என்று தெரியப் படுத்தியதும் ஆம்.

8. தக்கன் வேள்வி யழித்தமை சிவபிரானின் அட்டவீரங்களுள் ஒன்று. தகர் - ஆடு; யாகப்பசு. நஞ்சம் - திருப்பாற்கடல் கடைந்த காலத்தில் அங்குத் தோன்றிய விடம். சாவ என்றதனைத் தின்று என் பதோடு கூட்டுக; சாவ அஞ்சி என்றும் கூட்டலாம். ஆவ - ஐயோ! ஆ, அ என்றும் பிரிக்கலாம். ஆவவெந்தாயென்றவிதாவிடும் என்றதற்கு வெந்தது போதுமென்று விரைவிலே வாங்கிப்புசித்து என்று ஓர் உரை கூறுகிறது. எந்தாய் - என்தந்தையே! அவிதாவிடுதல் - முறையிடுதல். நம்மவர் - தேவர்களே நம்மவர் என்றது, அவர்களும் மக்களைப்போல் பிறப்பிறப்புக்களுக்கு உட்பட்டவராதலால்.

போவோம்' என்று பயந்தோடாநின்றவர்கள் (எ - க); நம்மவர் அவரே மூவர் என்றே எம்பிரானேடும் எண்ணி விண்ணுண்டு மண் மேல் தேவரென்றே இறுமாந்து என்ன பாவம் திரிதவரே (எ - து)— அத்தேவர்கணம் போலியர்கள்; இறக்கின்றவர்கள்; அவர்களைச் சங்காரநாதனுடன் கூட்டி மூவர் எனக்கருதி, வேறு வத்து உண்டென்று, விண்ணிலேயும் மண்ணிலேயும் இறுமாப்புக் கொண்டு திரியும் பாவத்தை எக்கொடிய பாவமெனக் கருதுவேனென அருளியதைக் கரண்க. (4)

9. இனி, நற்குலத்திலுற்பவித்து நாதன் அடித்தாமரையில் அர்ச்சனை செய்யாத காலம் அவகாலம் என்ற (தி. ன.) :—

தவமே புரிந்திலன் தண்மல ரிட்டுமுட் டாதிறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினை யேனுனக் கன்பருள்ளாம்
சிவமே பெறுந்திரு வெய்திற்றி லேனின் திருவடிக்காம்
பவமே யருளுகண் டாயடி யேற்கெம் பரம்பரனே!

(இ - ள்). தவமே புரிந்தலன் (எ - து)—எனது நாதன் தாளில் உண்மை ஞானத்தவம் செய்பவில்லை (எ - க); தண் மலர் இட்டு முட்டாது இறைஞ்சேன் (எ - து)—வாசனை பொருந்திய நால்வகை மலர்களால் ஒரு காலமும் தவறாது சிவார்ச்சனை செய்து வழிபடுகின்றிலன் (ன் - க); அவமே பிறந்த அருவினையேன் (எ - து)—வீணுள் கழிக்க வந்த பாதகன் (எ - க); உனக்கு அன்பர் உள்ளாம் சிவமே பெறும் திரு எய்திற்றிலேன் (எ - து)—தேவரீர் சீரடியார் பெறும் செல்வம் அடியேன் பெறுகின்றிலன் (எ - க); இன் திருவடிக்காம் பவமே அருளு கண்டாய் அடியேற்கு எம் பரம்பரனே! (எ - து)—முற்பதச் சிவபணி யாதும் செய்யாவிடினும், அநாதியாய் வழித்தொண்டு கொள்ளும் நாதனே! தேவரீர், திருவுளப்பணி செய்யும் உத்தம தேகம் அனுக்கிரம் செய்ய வேண்டுமென அருளியது (எ - க). (5)

---

9. முட்டாது - குறைவில்லாமல். இறைஞ்சேன் - வணங்கேன். சிவமே பெறும் திரு - சிவஞானச் செல்வத்தை; மங்களகரமான செல்வத்தை எனலும் ஆம். பவம் - பிறப்பு.

10. இனி, சிவனடியார் உள்ளத்து அகலாததென்ற(தி.ன.):—

பரந்துபல் லாய்மல ரிட்டுமுட் டாதடி யேயிறைஞ்சி
இரந்ததெல் லாமெமக் கேபெற லாமென்னு மன்பருள்ளம்
கரந்துநில் லாக்கள்வ னேகின்றன் வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாயரு ளாய்நின்னை யேத்த முழுவதுமே.

(இ - ள்). பரந்து பல் ஆய் மலர் இட்டு முட்டாது அடியே இறைஞ்சி (எ - து)—பரபரப்பாகப் பலவித நன்மலர் ஆய்ந்து காலம் தவறுது திருவடியில் அர்ச்சனை வணக்கம் செய்து, (எ - க); இரந்தது எல்லாம் எமக்கே பெறலாம் என்னும் (எ - து)—நாதன் வைத்த பெருங்கருணையெல்லா வழக்கும் தனக்கொழிய வேறொரு வர்க்கும் இல்லையென்னும், (எ - க); அன்பர் உள்ளம் கரந்து நில்லாக் கள்வனே! (எ - து)—முற்பத விநியோகமுடைய அன்பர்கள் உள்ளத்தில் அன்புமயமாகப் பிரத்தியட்சப் பொருளாகிய 'எனது உள்ளங் கவர் கள்வன்' (திருஞான. 1:1) (எ - க); நின்தன் வார் கழற்கு அன்பு எனக்கு நிரந்தரமாய் அருளாய் நின்னை ஏத்த முழுவதுமே (எ - து)—தேவரீருடைய திருவடிக்கு அன்பு அடியேன் செய்ய ஏகதேசமின்றி எங்கும் சிவமாக, முழுதும் பரப்பிரம சந்நிதானமாய் வணங்க அடியேற்கு அநுக்கிரகம் செய்ய வேண்டும், என அருளியதைக் காண்க. (6)

11. இனி, 'மகாவிட்டுணு செய்த பூசைக்கு அகப்படாத நாதன் பேயோடு அகப்பட்டாடினமையைக் கூறும் (தி. ன.):—

முழுவதுங் கண்ட வனைப்படைத் தான்முடி சாய்த்துமுன்னுள்
செழுமலர் கொண்டெங்கும் தேடவப் பாலனிப்
[பாலெம்பிரான்
கழுதொடு காட்டிடை நாடக மாடிக் கதியிலியாய்
உழுவையின் தோலுடுத் துன்மத்த மேல்கொண் டுழிதருமே.

---

10. பரந்து - பரபரப்பாக நின்று, என்று இவ்வுரை கூறுகின்றது. பரந்து, பல இடங்களுக்கும் சென்று என்றும் பொருள் கொள்ளலாம். ஆய் மலர், புட்பவிதியில் கூறப்பெற்றவண்ணம் ஆராய்ந்தெடுத்த மலர். இரந்த - கெஞ்சிக்கேட்ட. அன்பால்லார் மனத்துள் கரந்தும், அன்பர் மனத்துள் வெளிப்பட்டும் நிற்றல் கூறப்பட்டது. நிரந்தரம் - இடையீடின்றி யிருக்கும் நிலை.

(இ - ள்). முழுவதும் கண்டவனைப் படைத்தான் முடி சாய்த்து முன்னுள் செழுமலர் கொண்டு எங்கும் தேட அப்பாலன் (எ - து)—நாதனுடைய திருவடியினது முடியை முடியக் கண்டதாகச் சங்கிதானத்தில் துணிவாக மேல்வரும் ஆக்கினையை எண்ணுது பொய் சொன்ன பிரமதேவனைச் சிருட்டித் தொழிலுக்காகப் புத்திரனைப் பெற்ற திருமாலானவன் திருமுடியை விதிப்படி வணங்கு முன்னமே நன்மலரால் அருச்சனை வழிபாடு செய்து எங்கும் திருவடியைத் தேட அவனுக்கு எட்டாதே நின்றது (எ - க); இப்பால் எம்பிரான் கழுதொடு காட்டிடை நாடகம் ஆடிக் கதியிலியாய் உழுவையின் தோல் உடுத்து உன்மத்தம் மேல்கொண்டு உழிதருமே (எ - து)—முற்பத விகியோகத்துக்கெட்டாத நாதன் இப்பிரகிருதி மாயா புவனத்தின் கண் மயானத்திலே வாசமாகிய பேய்களுடனே வேறு கதியற்றுப் புலித்தோலாடையாகத் தரித்துக்கொண்டு நடனம் செய்து உன்மத்தனாக எவ்விடத்தும் அடியார் காண எழுந்தருளி அநுக்கிரம் செய்யும் பொருளென அருளியது (எ - க). (7)

12. இனி, காலமே கடவுளாகக் கொள்ளாது, காலாதீதப் பொருள் நாதனெனத் (தி. ன.) :—

உழிதரு காலுங் கனலும் புனலொடு மண்ணும்விண்ணும்
இழிதரு காலமெக் காலம் வருவது வந்ததற்பின்
உழிதரு காலத்த வுன்னடி யேன்செய்த வல்வினையைக்
கழிதரு காலமு மாயவை காத்தெம்மைக் காப்பவனே !

(இ - ள்). உழிதரு காலும் கனலும் புனலொடு மண்ணும் விண்ணும் (எ - து)—தேவரீர் திருவுளப்பிரசாதத்தால் உளதாகிய ஊழியான கற்பகால சங்கற்பத்தில் உண்டான பஞ்சபூதம் (எ - க); இழிதரு காலம் எக்காலம் வருவது (எ - து)—அப் பஞ்சபூதமும், அவற்றுளவாகிய கருவியும், அக்கர்த்தாக்களும் ஒடுங்கும் காலம் எந்தக் காலம் எனவே, திரிகால முடிவை அறியக்கூடாது (எ - க); வந்ததற்பின் உழிதரு காலத்த (எ - து)—காலவிறுதி வரும் நியமம் தப்பாது வருவது; அக்காலப் பிரேரகமும், எனது அப்பனே !

---

11. முழுவதும் கண்டவனை என்பதற்கு எல்லாப் பொருள்களையும் படைத்தவனை பிரமனை என்று பிறர் பொருள் கூறுவர். அப்பாலன் - அப்பாற்பட்டவன். கழுது - பேய். கதி - ஆதாவு; புகலிடமும் ஆம். உழுவை - புலி. உழிதருதல் - திரிதல்.

உனது ஏவலே (எ - க); உன் அடியேன் செய்த வல்வினையைக் கழிதரு காலமுமாய் (எ - து)—அநாதியே உனதடிமை யாதலால், ஆண்டவனே அக்காலமுன்னிலையாற் செய்த கொடிய இருவினைத் துன்பத்தைத நீக்கித் துன்பத்துக்குக் காரணமாயிருந்த மூன்றுகால வியல்பானது (எ - க); அவை காத்து எம்மைக் காப்பவனே! (எ - து)—அக்காலங்களே எற்றைக்கும் திருவருள் உடையேமென அருட்பணிக் காலமாய் இரட்சிக்கும் (எ - க). (8)

13. இனி, பெத்த முத்தமிரண்டிலும் அடிமையென்ற (தி. ன.):—

பவனென் பிரான்பனி மாமதிக்
கண்ணிவிண் ணோர்பெருமான்
சிவனென் பிரானென்னை யாண்டுகொண்
டானென் சிறுமைகண்டும்
அவனென் பிரானென்ன நானடி
யேனென்ன விப்பரிசே
புவனென் பிரான்றெரி யும்பரி
சாவ தியம்புகவே.

(இ - ள்). பவன் என்பிரான் (எ - து)—எனது உயிரை இரட்சிப் பவன் (எ - க); பனிமா மதிக் கண்ணி விண்ணோர் பெருமான் (எ - து)—உலக ரட்சைக்குச் சந்திரனை மாலையாகச் சிரசில் தரித்து விண்ணோர்களை இரட்சித்தவன் (எ - க); சிவன் என்பிரான் என்னை ஆண்டு கொண்டான் என் சிறுமை கண்டும் (எ - து)—எல்லா உலகரக்ஷகரான பரமசிவன், என்னை இரட்சிப்பதாக; வேறொருவரு மில்லை; சுதந்தர ஈனன் எனத் திருவுளமிரங்கி அடிமையாகச் செய்து கொண்டான் (எ - க); அவன் என்பிரான் என்ன, நான்

---

12. உழிதரு கால் - உலவுகின்ற காற்று. கனல் - நெருப்பு. புனல் - நீர். மண் - பூமி. விண் - ஆகாயம்: ஐம்பூதங்களும் கூறப்பட்டன. இழி தருதல் - அழிதல். உழிதரு - நிலைத்திருக்கிற. காலத்த என்பதை கால் அத்த என்று பிரித்து நடனமுடைய திருவடியை உடைய என்றும், காலத்த என்று கொண்டு காலதத்துவத்தையுடையவனே என்றும் பிறர் பொருள் கொள்வர்.

இச்செய்யுள் மிக நுட்பமான பொருளுடையது. இதற்குப் பிறர் பிறவாறு பொருள் கூறுவர்.

அடியேன் என்ன, இப்பரிசே (எ - து)—இவ்வகை என்னை ஆண்ட வனே, எற்கேற்ப, என் ஆன்மநாதன்; அவனுக்கு நானே அடிமை; இவை பிரமாண அநுபூதியே (எ - க); புவன் என்பிரான் தெரியும் பரிசாவது இயம்புகவே (எ - து)—இவ்வடிமையை ஆண்ட இயல்பு சகல புவன கர்த்தாவான நாதனுக்கே திருவுளம் அறிவது; அவை ஏதினுலென்னில், 'ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதிமாண் பும், கேட்பான் புகிலவை கிளர்க்க வேண்டா' (திருஞான. 3-ஆம் திருமறை. பொது) என்று ஆளுடைத் தொண்டர் செய்த ஆண் மையும், தம்மைக் கொல்ல வாளினைக் கொடுத்து நின்ற வளவனுர் பெருமைதானும், 'நாளு மற்றவர்க்கே நல்குநம் பர்தா மளக்கிலன்றி, நீளுமித் தொண்டின் றன்மை நினைக்கிலா ரளக்க வல்லார்' (பெரிய: எறிபத்த: 56) என்ற சிவாகமக்காட்சியாலும் அநுபூதி காண்க. (9)

14. இனி, நாதன் இவ்வகையாண்ட பரிசு கண்டு உலகத்தார் இவன் போதாதென நகை செய்யும் (தி. ன.):—

புகவே தகேனுனக் கன்பருள்
யானென்பொல் லாமணியே
தகவே யெனையுனக் காட்கொண்ட
தன்மையெப் புன்மையரை
மிகவே யுயர்த்திவிண் ணேரைப்
பணித்தியண் ணுவமுதே!
நகவே தகுமெம் பிரானென்னை
நீசெய்த நாடகமே.

(இ - ள்). புகவே தகேன் உனக்கு அன்பருள் யான் என் பொல்லா மணியே (எ - து)—ஒருவராலும் பிரேரிக்கவொண்ணுத் தற் பிரேரகமே! முற்றுப் பெற்ற சீவரத்தினப் பிரகாச நாதனே! உனது

நான்கடிகளிலும் எம்பிரானென்றே அச்சுப்புத்தகங்கள் காட்டும்.

13. பவன் - சிவபிரான் திருநாமங்களுள் ஒன்று; எல்லாப் பொருள் களுக்கும் பிறப்பிடமாயுள்ளவன் என்பது பொருள். கண்ணி - தலைமாலை. சிவன் - மங்களத்தைத் தருபவன். என்சிறுமை கண்டும் ஆட்கொண்டான் என்று மாற்றுக. பரிசு - தன்மை. புவன் - ஸ்வயம்பு; பிற பொருள் களும் கூறுவர்; இதனைப் புவனம் என்பதன் மரூஉவாகக் கொள்பவரும் உண்டு; இவ்வுரைகாரர் புவனகருத்தா என்றனர்.

சீரடியார் கூட்டத்திற்கு அன்பு செய்யத் தகாதவன் (எ - க); தகவே எனைஉனக்கு ஆட்கொண்ட தன்மை (எ - து)—ஒன்றுக்கும் பற்றுத என்னை உனது அடிமையாக்கிய அருமை வினவில், (எ - க); எப் புன்மையரை மிகவே உயர்த்தி விண்ணோரைப் பணித்தி அண்ணு அமுதே! (எ - து)—திருவடி ஞானமின்றிப் புசிக்கப்படாத அருள மிர்தே! எவற்றினுக்கும் கீழான சிற்றறிவுடைய அடியேனை யாவர்க் கும் மேலாக்கி, மேலான தேவர்களைக் கீழாக்கி (எ - க); தகவே தகும் எம்பிரான் என்னை நீ செய்த நாடகமே (எ - து)—வானுந் தையமும் வந்து தாள் வணங்கச் செய்த தேவரீர் திருவுளப் பிரசாதத் திரு விளையாட்டான நாடகத்தை உலகத்திலுள்ள அடியார்கள் நகைப் பார்களே, என் ஆன்ம நாதனே (எ - க). (10)

---

14. 'யான் உனக்கு அன்பருள் புகவே தகேன்' என்று மாற்றுக. பொல்லாமணி - பொள்ளாமணி; துளையிடப்படாத இரத்தினம். தகவே, தகவோ என்னும் பொருளில் வந்தது. அண்ணு, என்பதற்குத் தந்தையே என்று பிறர் பொருள் கூறுவர்.

இரண்டாம் கொத்து

இப்பாப்பத்தும் மனதைப் பரிபாகம் செய்யும் சிவசத்தியனுபவம் எனக் காண்க.

[1]தரவுகொச்சகக்கலிப்பா

15. இனி, உள்ளன்பின்றி அடிமைப்பணி செய்வது அருமை என்ற (தி. ன.) :—

நாடகத்தா லுன்னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே! இடையரு வன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம் மூடையானே.

(இ - ள்). நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து நான் நடுவே (எ - து)—தேவரீர் சீரடியார் நடுவுள் வஞ்சமனத்தான் படிற்றொழுக்கமாகத் திருவேடந் தாங்கி உள்ளன்பில்லாதவடிகளைப் போலவே திரியும் (எ - க); வீடு அகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன் (எ - து)—பொய்வேடம் காட்டியதுமன்றி, இப்போதே பரமுத்தியடைவான் போன்று வெகு பரபரப்பாக ஓயாது முயற்சியுற்றேன் (எ - க); ஆடகச் சீர் மணிக் குன்றே! இடையரு அன்பு உனக்கு (எ - து)—பொன் அசலம் போல் சிறப்புள்ளதான சிவரத்தின மலையே! தேவரீர் திருவடியிலே கன்றைத் தேடும் பசுத்தாய்போல, அடியேற்கு அன்பு தந்தருளி, (எ - க); என் ஊடகத்தே நின்று உருகத் தந்தருள் எம் உடையானே! (எ - து)—எனது உயிர் உருக, அதுவாய்ப்போக, அனுக்கிரகம் செய்ய வேண்டும், ஆண்டவனே! (எ - க).

அருள்வதற்கநுபூதி :—பொற்குன்றம் என்றமையால், "பொன்னசலஞ்சேர் பொருளுள்ள முயக்கும் புற்போல் தன்னையு மன்றே கொண்டது ஞானந் தானுக" (கோயிற்பு : நடராச : 44) என்ற புராண அநுபூதி காண்க. (11)

இவ்விரண்டாங் கொத்தின் திருவாசகத் திருவுள்ளக்கிடக்கை :— 'அறிவுறுத்தல் - பொறியோடே கூட்டுதல்; அருள்நிரிசனம், குரு தரிசனம்' என்பன. அச்சு நூல்களில் அறிவுறுத்தல் என்ற தலைப்பே கொடுக்கப்பட்டிருக்கிறது.

1. கலிவிருத்தம் என்று எட்டில் எழுதப்பெற்றுள்ளது.

15. வீடகம் - முத்தியுலகு. ஆடகக்குன்று - பொன்மலை. என் அகத்தூடே என்று மாற்றுக.

16. இனி, பிறப்பிறப்புக்கு உள்நடுவகித் திருவருளை இரந்த (தி. ன.) :—

யானேதும் பிறப்பஞ்சேன்
இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன்
மண்ணுள்வான் மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச்
சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநா
ளென்றென்றே வருந்துவனே.

(இ - ள்). யான் ஏதும் பிறப்பு அஞ்சேன் ; இறப்பதனுக்கு என் கடவேன் ? (எ - து)—தேவரீர் அடியேன் பக்குவமடைய நினைந்த நாள் தொடங்கி எனைப்பல யோனிகளில் பிறந்து பிறந்து வரப் பயமுற்றவனல்லனே ! இறப்புக்கே என் செய்வேன் என அஞ்சுவனே ? நான் என் செய்வேன் ? (எ - க) ; வானேயும் பெறில் வேண்டேன், மண்ணுள்வான் மதித்துமிரேன் (எ - து)—நாதனே ! உன் சீர்பாதமன்றிப் பிறப்பிறப்பான வேதனைக்கு விண், மண் இரண்டின் உளவான பிறந்திறக்கும் தெய்வப்பிணங்களை அடியேன் வருந்திப் பெறுவதும் மதிப்பதுமில்லை (எ - க).

ஆனல், என் செய்வாய் என்னில்,

தேன் ஏயும் மலர்க்கொன்றைச் சிவனே ! எம்பெருமான் ! எம் மானே ! உன் அருள் பெறும் நாள் என்று என்றே வருந்துவனே ! (எ - து)—நாதனே ! இன்பக்கொன்றைமலர்மாலை அணியும் சிவனே ! ஆன்மநாதனே ! தேவரீர், திருவுளப் பிரசாதம் பெறுவது எக் காலமோ என வருந்தி அடிமைத் தொழில் செய்வேனே ஒழிய வேறில்லை (எ - க). (12)

---

16. 'யாஅமிரப்பவை, பொருளும் பொன்னும் போகமுமல்ல, நின் பால் அருளும் அன்பும் அறமு மூன்றும்' என்ற பரிபாடல் (5 : 78 - 80) அடிகளும், 'இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகமாளுமச்சுவை பெறினும் வேண்டேன்' என்ற ஆழ்வார் பாசுரமும் ஒப்பிடத்தக்கன.

17. இனி, சீரடியார் பெறும் சிவஞானம் அவன் அருளில்லா தார்க்கு இல்லை என்ற(தி-ன) :—

வருந்துவனின் மலர்ப்பாத மவைகாண்பா னுயடியேன்
இருந்துநல மலர்புனையே னேத்தேனுத் தழும்பேறப்
பொருந்தியபொற் சிலைகுனித்தா யருளமுதம் புரியாயேல்
[1]வருந்துவனற் றமியேன்மற் றென்னேநா னுமாறே.

(இ - ள்). வருந்துவன் நின் மலர்ப் பாதமவை காண்பான் (எ - து)—தொழுது, தூய மலர் தூவி, அழுது, காமுற்று, அரற்று கின்ற சீரடியார் திருவடி காண்பது நியமம் ; அடியேனெவனில், (எ - க) ; நாயடியேன் இருந்து நன் மலர் புனையேன் ; ஏத்தேன் நாத்தழும்பேற (எ - து)—செய்ந்நன்றி குன்றுவதான நாயேன் அற வோய்ந்து, கருத்தொன்றி, நால்வகை நல்மலரான் பூமாலை புனைந் தேத்துகின்றிலன் ; புகழ்ந்து இடைவிடாது துதிக்கின்றிலன் ; இவ்வகை யாதும் செய்கின்றிலன் (எ - க) ; பொருந்திய பொற்சிலை குனித்தாய் ! அருள் அமுதம் புரியாயேல், (எ - து)—மகாமேருவை வலயத் திருவளங்கொள்ளவில்லையோ ? நாதனே ! அதனிலும் வலிதோ ஆனது ? திருவளின்ப அமிர்தம் பாலிக்காதே, பராமுக மானால், (எ - க) ; வருந்துவன் நல் தமியேன் ; மற்று என்னே நான் ஆமாறே ! (எ - து)—சுதந்தர வீனன் ; பிறவிநோயால் துன்பமுறு வனே யொழிய, என்னால் முயற்சி யாதொன்றுமில்லை (எ - க). (13)

18. இனி, சதுரறியாமை நீங்கிச் சற்பணி செய்யும் (தி. ன.):—

ஆமாறுன் றிருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் றிருக்கோயி றூகேன்மெழுகேன்
[கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே !

(இ - ள்). உண்மை நிலை பெறுமாறு எண்ணித் திருவடியில் அன்பாற் குழைந்திருக்கில்லேன். நித்தலும் எம்பிரானுடைய

---

17. 1. (பி - ம்.) வருந்துவனத்தமியேள். அடியேன் காண்பான் வருந்துவன் என இயைக்க. நா தழும்பு ஏற ஏத்தேன் என்க. பொற்சிலை - மேருமலையாகிய வில்.

கோயில் புக்கு, புலர்வதன்முன் அலகிட்டு, மெழுக்கிட்டு, பூமாலை கொய்து ஏத்திப் புகழ்ந்து, உரையாடி, கூத்தாடித் தேவர் கோவே !' என அலறி அன்பு செய்யாது, சாவே நியமமாகச் சதுர் அறியாமையால் பாசச் சார்புணர்ந்து கெட்டேன் (எ - க). (14)

19. இனி, எல்லாப் பொருளும் சிவப்பிரேரகமேயல்லாது வேறில்லை என்ற (தி - ன.) :—

வானகி மண்ணகி வளியாகி யொளியாகி
ஊனகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானகி நின்ரூயை யென்சொல்லி வாழ்த்துவனே.

(இ - ள்). வானென்ன, மண்ணென்ன, வளியென்ன, ஒளி யென்ன (ஆகிய) நால்வகைப் பெரும் பூதமாகி, இவற்றுளதாகிய தேகமாகி, அதனுள் தேகியாகி, அத்தேகிக்கு உண்மையான அறிவாகி, இவைகளில் தோயாது அத்துவிதமாகி, அவ்வுயிர்போல் தனிப்பரவத்துவாகி, முற்சொல்லிய தத்துவங்களையும் ஆன்மாக்களையும் அதிகார கர்த்தாக்களையும் சத்திகளையும் தனித்தனிப் பொருளாய், 'யான் ; எனது' எனப் பிரேரித்து நிற்கும் நாதனே ! அடியேற்கு வாக்குளவோ ? என் சொல்லித் துதிப்பேன் ? என்னவே, 'இருந்துதி என் வயிற்கொண்டதும் கொள்வது சிவனே' (எ . க).

20. இனி, பயன் நோக்கித் தவம் செய்யும் தேவர்களை நோக்கிப் பயன் நோக்காது கடவுளை வணங்கும் (தி. ன.) :—

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனநின்பால்
தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மையெல்லாந்
[தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே.

18. சதுர் - சதுரப்பாடு ; அறிவு. புத்தேளிர் - தேவர். குழைதல் - கனிதல். தூகேன் - அலகிடேன்.

19. ஒளி, இங்குத் தீயைக் குறித்தது. சூரியன், சந்திரன், அக்னி என்னும் மூன்று ஒளியுடைப் பொருள்களையும் குறிக்கும் என்றும் கூறுவர். நான்கினைக் கூறவே இனம்பற்றி ஏனும் அடங்கிற்று என்க.

(இ - ள்). நாதனே! தேவரீர் திருவடியைத் தேவர்கள் தோத்திரம் செய்வதும், மனதால் வணங்குவதும், இவை முதலான தவஞ் செய்வதும் ஏது நிமித்தமெனில், தங்களை யாவரும் வணங்கிப் பணி செய்யும் அதிகாரப் பொருட்டு; அடியேனெனெவெனில், திருவுள மறியச் சொல்கின்றேன்; வண்டுகள் ஆரவாரிக்கும் பூமாலையணியும் மகாதேவனே! அத் தேவர்கள் வேண்டும் போக தேகம் பாழான அருவருப்பாகும்; அதனை நீக்குவாயென அடியேன் துதிப்பான் தவம் செய்வேன்; எனவே, பயன் நோக்காத தவம் இவை (எ - க).

21. இனி, பரமசிவன் ஒருவராலும் அறியப்படாத அத்துவிதப் பொருளென்ற (தி - ன.) :—

பரவுவா ரிமையோர்கள் பாடுவன நால்வேதம்
குரவுவார் குழன்மடவாள் கூறுடையா ளொருபாகம்
விரவுவார் மெய்யன்பி னடியார்கள் மேன்மேலுன்
அரவுவார் கழலிணைகள் காண்பாரோ வரியானே!

(இ - ள்). விட்டுணு முதலான தேவர்கள் காலந்தவறாது பூசிப்பார்கள்; நான்கான வேதங்களும் தோத்திரம் செய்கின்றன; பேதை முதலாகப் பேரிளம்பெண் ஈறாகப் பெண்கள் தங்கட்குரித்தான குரவைத்துதி செய்கின்றார்கள். மெய்யன்புடைய அடியார்கள் அர்த்த நாரீசுவரமான பராசத்தி நாதனைப் பொருளென விரைவிலே பணிசெய்கிறார்கள். இவர்கள் தவிர, இன்னமும் மேன்மேல் உனது ஆடரவக்கிண்கிணி யணியும் சபை குஞ்சிதபாதத் திருவடிகளை வேறாய் நின்று காணத்தகுமோ? யாவர்க்கும் அரிய நாதனே!

எனவே, அதுவாய் நிற்பவர்க்கே அபேத அத்துவித தரிசனம் (எ - க).

(17)

---

20. வாழ்வான் - வாழும் பொருட்டு. சூழ்த்து - சூழ்ந்து; வலித்தல். மதுகரம் - வண்டு; தேனை ஈட்டுவது என்பது பொருள். தாரோய் - மாலையையுடையோனே!

21. இமையோர்கள் பரவுவார்; வேதம் பாடுவன; மடவாள் கூறுடையாள்; அடியார்கள் விரவுவார்; கழலிணை எவரும் காண்பரோ என்று கொண்டு கூட்டுக. பரவுவார், வாழ்த்துவார், குரவுவார் என்பதற்கு உரையாசிரியர் கொண்டுள்ள பொருள் ஆராயத்தகுந்தது. குராமலரை யணிந்த நெடிய கூந்தலையுடைய மடவாளான உமாதேவி ஒரு பாகம் கூறுடையாள் என்று பிறர் பொருள் காண்பர். விராவுதல் - கலந்து இன்புறுதல். அரவு - ஒலிக்கும்; வார் - நீடிய.

22. இனி, தற்செயலற்ற திருவருட்பணியை வியக்கும் (தி - ன.) :—

அரியானே யாவர்க்கு மம்பரவா வம்பலத்தெம்
பெரியானே சிறியேனே யாட்கொண்ட பெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர்தூவேன் வியந்தலறே னயந்துருகேன்
தரியேனு மாறென் சரவேனுன் சாவேனே.

(இ - ள்). யாவரும் தற்சுட்டால் காணக்கூடாத நாதன் ஞானகாசருவபூத ஆதாரன் ; திருவம்பலத்தில் எவர்க்கும் பெரியோனுஞ் சபாபதி ; யாவர்க்கும் கீழ்மையுடைய என்னை எளிமையுற அடிமை கொண்ட ஆண்டவன் ; (எனினும் நான்) திருவடிக்கீழ் நின்று வாசனை மலரால் பக்திமலர் தூவுகின்றிலன் ; திருவருளைக் கண்டு 'அதிசயமே எனை யாண்டது!' என்று அலறுகின்றிலன் ; அற்புதத்தால் தலையன்புளனுய் ஊனுயிர் கரைய நின்றிலன் ; சங்கிதானத்துக் கேற்ப எவ்வகைப் பணியும் செய்யாத நான், இப்பூமியில் தரியாது சாவதே கடனென அருளியதை அன்பாற் காண்க. (18)

23. இனி, மோக விகாரம் உறும் மனதை நோக்கி, ஆன்ம நாதனைக் கண்டு உருகாதே போனமையைக் கூறும் (தி - ன.) :—

வேனில்வேள் மலர்க்கணைக்கும் வெண்ணகைச்செவ்
[வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே!
ஊனெலாம் நின்றுருகப் புகுந்தாண்டா னின்றுபோய்
வானுளான் காணுய்நீ மாளாவாழ் கின்றுயே!

(இ - ள்). வீணுட் கழிக்கும் பாழான நெஞ்சே! திருவடிபாசையின்றி, மன்மத பஞ்ச பாணத்துக்கும், அவற்றிற்குக் காரணமான ஒள்ளிய தந்தமும், சிவந்த வாயும், பாலினும் இனிய உருவுங் கொண்ட மாயா நோக்கியரைக் கண்டு உருகுதலும், அவருடன் கூட வேண்டுமென்னும் பதைப்பும் உடையவனே! கேட்பாயாக. உண்மை நின்மல நாதன், அன்று உன் மலதேகத்தில் எழுந்தருளி, பழைய வாசனை அற அத்தேகமும் அக்கருவியும் அன்பால் உருகச்செய்து, உயிரை அடிமைகொண்ட சுவாமியை, இப்போதே விரைவாகப் போய்த் தரிசிப்பாயாக. எவ்விடம் போவதெனக் கருதுவாயாகில்,

---

22. யாவர்க்கும் அரியானே என்று மாற்றுக. அம்பரவா - ஞானகாசனே! அம்பலம் - திருவம்பலம்.

அவன் சருவ வியாபக ஞானகாச சொரூபன் ஆதலால், எங்குமுள்ள அவன் சன்னிதானம் குறுகாது போவாயாலல் நீ சாவது நன்று; அல்லாது, மயக்க வாழ்வையுடைய உனக்கு யான் என் செய்வேன்? (எ - க). (19)

24. இனி, சிவனை நினையாது கெட்ட மனதை நோக்கித் திருவடியைத் துதிப்பதே நியமம் என்ற (தி - ன.): —

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்றாய் ஆழாமற் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே.

(இ - ள்). திருவடி ஞானமான உண்மை கொண்ட நித்தியப் பொருளை இழந்த மனதே! கொடிய வேதனையை இன்பமாகக் கொண்டு அதிலே அழுந்தினையே! அத்துன்பம் உன்னை அடராது இரட்சிக்கும் நாதனைத் தோத்திரம் செய்யாதே போன, பாழான கேடுடையாய்! இடைவிடாத அவலமான கடலின் வெள்ளத்து அகப்பட்ட உனக்கு என் சொல்வேன்!, (எ - க).

---

23. வேனில் வேள் - வசந்தகால மன்மதன். நகை - புன்சிரிப்பு; பற்களும் ஆம். கரிய பானல் ஆர் கண்ணியர் - கரிய குவளை மலர் போன்ற கண்ணையுடையர்; பால் நல்லார் என்று பிரித்து உரையாசிரியர் பொருள் கொண்டுள்ளனர். 'இன்று போய் நாளையான்' என்றது திருப்பெருந்துறையில் அடிகளுக்கு உபதேசஞ் செய்தருளி ஈசன் மறைத்ததைக் குறித்தது என்பர்; எனினும் இங்கு உரையாசிரியர் காட்டிய விளக்கம் உணர்ந்து இன்புறுதற்குரியது.

24. வாழாத நெஞ்சம் - நிலைத்த வாழ்வான பேரின்ப வாழ்வைப் பெறாத நெஞ்சம். வாழ்கின்றாய் - அழியாமலிருக்கின்றாய். உனக்குக் கேடு சூழ்கின்றாய் என்க. சூழ்தல் - எண்ணுதல். அவலக்கடல் - துன்பக்கடல்.

மூன்றுங் கொத்து

இனி, மூன்றுங் கொத்து, **அன்பைப் புலப்படுத்தும் சிவசக்தி விநியோகம்.**

இனி வரும் திருவருட்பா பத்தும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

25. அரிய தவஞ்செய்வோர் நிற்ப, அவமுடையேனை ஆண்ட திருவருள் விநியோகமாவன :—

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னை யாண்டாய்க்
குள்ளந்தான் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணு யண்ணு
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சங் கல்லாம்
கண்ணிணையும் மரமாந்தீ வினையி னேற்கே.

(இ - ள்). உலகத்தை இரட்சிக்கும் பொருட்டுச் சருவலோக சத்தியாகிய கங்கையைச் சர்வ வியாபகத் திருச்சடையில் தரித்தோய்! சகல தேவர்களையும் அடிமைப்பணி கொள்வோய்! புண்ணிய சொரூப இடபத்தைப் பிரத்தியங்கமாக உடையோய்! சுருதி, குரு, வாக்குடன் கேள்வியரான இருஷிகள் திருவடி காணவேண்டுமென்கிற அவாவினாலே தாழ்ந்த ஜலத்திலாழ்ந்தித் தலைகீழாக நின்று யோக சமாதி செய்தும், அவர்கள் காணுது பதைத்துருகி ஒரு சார்பு நிற்க, ஒன்றுக்கும் பற்றுத என்னை அடிமையாகச் செய்தாய். இவ்வகை ஆண்ட அன்பால் என் நெஞ்சம் உச்சியளவும் தானே நின்று உருகவில்லையே! தேகமெல்லாம் உரோமத் துவார வழியாக ஆனந்த வெள்ளம் பரவிக் கண்ணீரோட்டத்தால் மாயவில்லையே! ஆனதால், தீவினையுடைய அடியேன் எஞ்சுதல் கணமாம்; என அன்பால் ஆராமையுற்று அருளியதெனக் காண்க. (21)

இக்கொத்துக்குத் திருவாசக திருவுள்ளக் கிடக்கை :—சுட்டறுத்தல் - தன் செயலறுத்தல்.

25. விடை - இடபம். வேட்ட நெஞ்சம் - விரும்பின மனம். பதைத்துருகும் அவர் - இருஷிகள். தீவினையினேன் - பாவி.

26. இனி, அன்பு இன்மையைக் கூறும் (தி - ன.) :—

வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேட னென்பாய் போல
இனையன்நா னென்றுன்னை அறிவித் தென்னை
ஆட்கொண்டெம் பிரானுனக்குக் கும்பின் பாவை
அனையநான் பாடேனின் றூடே னந்தோ
அலறிடேன் உலறிடேன் ஆவி சோரேன்
முனைவனே முறையோநான் ஆன வாறு
முடிவறியேன் முதலந்தம் ஆயி னானே.

(இ - ள்). திருவடியில் அநாதியே மலவ்சமாய்ப் பிரிப்பின்றிக் கிடக்கும் என்னுள் எழுந்தருளி, கேவலம் நீக்கி, சகல தசையில் வரும்போது அடியனே வினைதிராவண்ணம் கண்டு, 'கேடுடைய பாவி' யென, தேவரீர் திருவடியும் அறிவித்து, என்னை உள்ள படியேயாம்படி அடிமை செய்து, வெளியிலும் எழுந்தருளி என் மூல வினையையும் என்னையும்.....; இவ்வளவான பெருங்கருணையான அன்பால் இன்புருது, மந்த கதியான இரும்பின் பாவையைப்போல் சடமானேன்; துதியேன்; கூத்தாடேன்; ஐயையோ! அலறேன்; உளறேன்; உயிர் சோரேன்; யாவர்க்கும் முன்னவனே! ஓலம்! ஓலம்! என்னை உற்பவம், முடிவு செய்கின்ற திருவுளமறியேன்; எனது உயிர்க்கு ஆதியந்தமான நாதனே! எனவே இரட்சிப்பது கடன் (எ - க). (22)

27. இனி, வம்பனை பேயனை அன்புருவாக ஆண்ட அதிசயப் புதுமை என்ற (தி - ன.) :—

---

26. கிடந்தேனைப் புகுந்து - கிடந்தவனுகிய என்பால் வலியவந்து. 'போது; நான் வினைக்கேடன்' என்ற சொற்கள் சிவபிரானுடையவை. நான் இனையன் என்று உன்னை அறிவித்து - 'நான் இத்தன்மையன்' என்று காட்டி உன் உண்மையை நான் உணரச் செய்து. எம்பிரான் ஆனுய்க்கு - எனக்கு நாயகனுன உன்னிடம். இரும்பின் பாவை உணர்ச்சி யற்றது என்க. உலறுதல் - உரைதடுமாறல். முனைவன் - முன்னவன்; கடவுள்.

ஆயகான் மறையவனு நீயே யாதல்
அறிந்தியான் யாவரினும் கடைய னைய
நாயினே னுதலையும் நோக்கிக் கண்டும்
நாதனே நானுனக்கோ ரன்ப னென்பேன்
ஆயினே னுதலா லாண்டு கொண்டாய்
அடியார்தா மில்லையே யன்றி மற்றோர்
பேயனே னிதுதான்நின் பெருமை யன்றே
எம்பெருமான் என்சொல்லிப் பேசு கேனே.

(இ-ள்.) தேவரீர் அருளிய சிவஞானபோத உபதேச பாவ பரஞானப் பொருளை அநுபவத்துடன் ஆராயுமிடத்து, தேவரீரே திருவாய்மலர்ந்தருளிய வேதம் நான்கினும் மெய்ப்பொருளான வேதாந்த வத்துவான பரமகுரு; அடியேன் யாவரினும் இழிவான வருண நாயானவன்; என நன்றாய் ஆராய்ந்து, 'யானெங்கே? முத்தி நலமான தேவரீர் எங்கே?' எனத் திருவடி கண்டு அன்பு செய்யக் கூடாதென நின்றேன். அவை திருவுளத்தாற் கண்டு, 'நாம் ஆண்டாலொழிய வேறே பரம் காணேம்' என அடிமைப்பணி கொண்டாய்; அப்படி அடிமை கொள்ள அன்புள்ள அடியார்கள் வேறில்லையோ, அடியேன் ஒழிய?' ஆகிலும், மலபோதப் பேயனை என்னை அடிமை கொண்டது பெருங்கருணை வழக்கேயன்றி, வேறு தாரஞ் காணேன். இப்பெருமைக்கு எவ்வகைக் கண்டு தோத்திரம் செய்வேன்? எனவே, கருணைக்குக் கைம்மாறில்லை (எ. க). (23)

28. இனி, சிரடியாரையாண்ட திருவுள்ளம் சிறியேனையும் ஆண்டது என்ற :—

பேசிற்றீ மீசனே யெந்தா யெந்தை
பெருமானே யென்றென்றே பேசிப் பேசிப்
பூசிற்றுன் திருநீறே நிறையப் பூசிப்
போற்றியெம் பெருமானே யென்று பின்று
நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
ஆண்டானே அவாவெள்ளக் கள்வ னேனை
மாசற்ற மணிக்குன்றே யெந்தா யந்தோ
என்னீ யாட்கொண்ட வண்ணந் தானே.

---

27. ஆய - ஆராயப்படுகின்ற. நோக்கி அகன்று நிற்பதைக் கண்டும், என்று விரிக்க. அன்பன் என்று பாவிக்கும் பண்பொன்றிற்கே ஆட்கொள் ளப்பெற்ற அருமையை வியக்கின்றார். பேயனேன் அன்றி மற்றோர் அடியார்தாம் இல்லையோ? என்று வினவியபடி.

(இ - ள்). தேவரீர் திருவடி ஞானத்தாற் பெற்ற திருநாமப் பொருளைத் திருத்தொண்டால், " என் ஆன்ம ரட்சகரே ! எனது அப்பனே ! என் தாயே ! பெருமையனே !" என்று நாத்தழும்பேறத் தோத்திரம் செய்து, முழுநீறணிந்து, பஞ்சப்பிரம ஷடங்க வாழ்வுடன் குஞ்சிதபாத சேவை நேசமுடைய அடியார்களின் பிறவிப் பிணி தீர அடிமை கொள்ளும் சுவாமி ! அடியேன் உண்மை வினவில், அவாவில்லாதைப் போல உலகத்தார் காண நடித்து, மூவேடணை யும் உள்ளே வைக்கும் கள்வன் ; எல்லை யாண்ட குற்றமற்ற இரத் தின அருண் மலையானதால், எந்தாய் ! ஐயையோ ! இவ்வற்புதமான அழகுக்கு என் செய்வேன் ! (எ - க). (24)

29. இனி, பிறவா வண்ணம் செய்தமையைக் கூறும் (தி - ன.) :—

வண்ணந்தான் சேயதன்று[1] வெளிதே யன்ற
நேகனேகன் யணுவணுவி லிறந்தா யென்றங்
கெண்ணந்தான் தடுமாறி யிமையோர் கூட்டம்
எய்துமா றறியாத வெந்தா யுன்றன்
வண்ணந்தா னதுகாட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்க ளவைகாட்டி வழியற் றேனைத்
திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டாய்
எம்பெருமான் என்சொல்லிச் சிந்திக் கேனே.

(இ - ள்). தேவரீர் திருவடியை, ' இப்படியன், இவ்வுருவன், இவ்வண்ணத்தன், இவ்வெளியன், இவ்வரியன் ' என அறிவொண் ணாத பொருளை, செத்துப் பிறக்கும் தேவர்கள், தங்களைப் போலவே அணுபட்ச அதிகாரப் பொருளாய் இருந்தமையால், அவ்வணுக்கள் இறக்கும்போது அவற்றின் அதிஷ்டானப் பொருளும் இறக்குமென எண்ணமுடைத்தாய், தடுமாறித் திருவடி பரமகதியானதை அறி யாதே, என் தாயே ! திருவருளால் அவ்வுருவன், அவ்வண்ணத்தன், அவனிறைவனே ' அடி காட்டி ஞானவழியற்ற அடியேனைப் பிறவா வண்ணம் காத்து இரட்சிக்கும் பெருமானே ! உள்ளும் புறமுமாய்

---

1. தாம் பேசில் என மாற்றுக. என் தாய் என்று கொண்டு ' என் தாயே ' என்று பொருள் கூறினர் போலும். ஈசன் - ஈசுவரன் ; சகல ஐசுவரியங்களையும் உடையவன். பின்ரு நேசம் - பிறழா நேசம், அந்தோ, கழிவிரக்கச் சொல்.

நின்ற நாதனை எவ்வகைச் சிந்திப்பேன் எனவே, அவனருளால் அவன் தாள் வணங்குவதே பொருளென அருளியதைக் காண்க. (25)

30. இனி, இவ்விதம் அநுக்கிரகம் செய்த நாதனுக்குக் கைம் மாறு செய்த (தி - ன.) :—

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே.

(இ - ள்). கைம்மாறு செய்த உதவிகளாவன :—சிந்தனைநின் தனக்கு ஆக்கி (எ - து)—சிந்திக்கத் தக்கதாக, அந்தக்கரணக் கருவியைக் கெடுத்துப் பிறவற்றைச் சிந்தியாமல் தேவரையே சிந்திக்கச் செய்தது (எ - று); நாயினேன் தன் கண்ணிணைநின் திருப்பாத போதுக்கு ஆக்கி (எ - து)—நாயினுங் கடையாய எனக்குக் கண்கள் இரண்டுங் கொடுத்தது, பார்க்குமிடம் எல்லாம் தேவரீருடைய சிற்பாதகமலங்களையே பார்க்க (எ - று); வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி (எ - து)—திரிவித கரணங்களாற் செய்யும் வணக்கங்கள் எல்லாம் சிற்பாத கமலங்களுக்கே அமைத்தும் (எ - று); வாக்கு உன் மணி வார்த்தைக்கு ஆக்கி (எ - து)—வாக்கினாற் சொல்லும் துதியெல்லாம் திருவடிப்புகழும் தோத்திரமுமாக அமைத்து (எ - று); அதுவுமன்றி, ஐம்புலன்களார வந்தனை யாட்கொண்டு (எ - து)—செவிகளாற் கேட்கும் சத்தமெல்லாம் தேவரீருடைய புகழ்களாகிய தோத்திரங்களையே கேட்கவும், தேகத்துக்குச் சுகமாகிய பரிசங்களெல்லாம் சிவபூசை பணிவிடைச் சுகங்களாகவும், கண்ணாலே காணும் ரூபங்களெல்லாம் சிவாகமக் காட்சியாகவும், நாவுக்குச் சுக

---

29. வண்ணம் - நிறம். சேயது - சிவந்தது. வெளிது - வெண்மையானது. அநேகன் - பிலர். அணு - அணுவாவாய்; அணுவில் இறந்தாய் - அணுவினையும் கடந்த நுட்பமானாய். இமையோர் கூட்டம் தடுமாறுதற்கும் காரணமாக உரை காட்டிய அருமையை ஓர்க.

மாகிய ரசபதார்த்தங்களெல்லாம் குருலிங்க சங்கமத்துக்கே ஆகவும், ஆக்கிராணத்துக்குச் சுகமாகிய கந்தபதார்த்தங்களெல்லாம் சிவார்ச்சனைக்கே ஆகவும் தேவருக்கே கொண்டருளி, வெளியிலேயும் தோன்றத் தக்கதாகத் திருமேனி கொண்டெழுந்தருளி அடிமை கொண்டது; அதன்றியும், (எ - று); உள்ளே புகுந்த விச்சை (எ - து)—உயிருக்குள்ளே புகுந்திருந்து இப்படி யெல்லாம் பிரேரிக்கின்ற, ஒருவர்க்குந் தெரியாத, நீ எல்லாம் வல்லதாகிய சித்து வித்தையையுடைத்தாயும் (எ - று); மால்அமுதப் பெருங்கடலே (எ - து)—தேவரீர் கொடுத்த பேரானந்த இன்பசுகப் புசிப்பைப் புசிக்கப் புசிக்கத் தொலையாமலும் தெவிட்டாமலும் அளவுபடாமலும் இருக்கும் பெரிய அமிர்தக்கடலே (எ - று); மலையே (எ - து)—எந்த எந்தப் பொருளும் அறிந்தும் அறியாதும் அறியப்போவதும் உடைத்தாயும், பெருமைக்கெல்லாம் பெருமையுடைத்தாயும் இருப்பதான மலையே எனத் துதித்தது (எ - று); உன்னைத் தந்தனை (எ - து)—இவ்வகைக் கருவிகளையுங் கொடுத்து உள்ளேயும் நின்று பிரேரித்து என்னிடத்தினின்று, தேவரே செய்தலால், அத்தேவரை எனக்கே கொடுத்தது (எ - று).

என்று கருணையைத் துதித்தவுடன், அதற்குச் சுவாமி திருவுளம் பற்றினதாவது. "நீ இப்படியெல்லாம் தோத்திரம் பண்ணினது உத்தி தந்திரக் கதையாயிருக்கிறது; இவ்வகை துதித்த உன்னுடைய சொரூபமும் கர்த்தாவாகிய நம்முடைய சொரூபமும் துதித்ததற்குக் காரணமும், என்ன குறைவால் என்ன வேண்டித் துதித்தது என்றும், அநுபவத்துடன் நாமனுக்கிரகம் பண்ணினபடி உன்கருத்திற் பதிந்தது இன்னதென்றும் சொல்லுவாயாக" என்று திருவுளம் பற்றினதைக் கண்ட விளக்கமான அநுபூதி விண்ணப்பம் செய்ததென்ன வென்றால்—செந்தாமரைக் காடனைய மேனித் தனிச்சுடரே (எ - து)—வேதாந்தத் தெளிவான சைவ சித்தாந்த அநாதி சற்காரிய சொரூப அநுபூதியான திருத்தொண்டின் இயல்பெல்லாம் இவ்வாக்கியத்துள் அடங்கி யிருக்கும்; அவையாவன—

தனிச்சுடர், ஒப்பற்ற சூரியன்; செந்தாமரைக் காடனைய மேனியாவன—செந்தாமரை மலர்க் கூட்டங்கள் போலும் அந்தச் சூரியனுடைய பிரகாசமென்னவே, அச்சூரியப் பிரகாசத்தாற் சூரியனைக் கண்டது கண்ணென்னவே; முன்காணும்ல் மறைத்ததுவே, இருள்; இவற்றில் ஆறு பொருள்களும் அடங்கிய வகை; கதிரவனைப் போலப் பதியாகிய சிவம்; கதிரவன் பிரகாசம் போல அச்சிவனைப்

பிரியாத அருட்சத்தி ; அந்த விருள்போல ஆணவம் ; அந்தக்கண் சூரியனைக் கண்டும், வேறே கண்ட பதார்த்தங்கள் மாயாமலம் ; வேறே காணத்தக்கதாகப் பண்ணினது கன்மமலம் ; ஆகவே சிவமுமருளும் பதியென்னும் பொருளாயிற்று ; ஆன்மாவென்னவே பசுப்பொருளாயிற்று. மலமாயா கன்மமென்னவே பாசப்பொருளாயிற்று. ஆகவே முப்பொருளில் ஆறு பொருளும் அடங்கின. இவ்வாறு பொருளால் முடிந்த காரியமாவன:—பதியாகிய சிவன், அருளாகிய சத்தியுடன் கூடிப் பசுவாகிய ஆன்மாவை எடுத்து மலமாயா கன்மங்களை நீக்கித் தானுக்கிக் கொள்ளும்.

இவ்வாறும் அநாதி நித்திய வியாபகமாகையால் எப்படிக் கூட்டி முடியுமென்னில், கதிரவன் காட்டிக் கொண்டே யிருக்கும் ; கண் அப்பிரகாசத்தால் கண்டு கொண்டே யிருக்கும் ; ஆணவம் காணும் தன்மையைக் கொடுத்துக் கொண்டே யிருக்கும் ; மாயை அது கொடுத்தலை விளக்கிக் கொண்டே யிருக்கும் ; கன்மம் அந்த விளக்கம் விளைத்தலைப் பண்ணிக் கொண்டே யிருக்கும் ; என்ற அனுபவப் படிக்கு விண்ணப்பஞ் செய்யுமிடத்தில், அவைக்குச்சுவாமி திருவுளம் பற்றினது ; 'இப்படி யெல்லாம் அநுபூதி பெற்றிருந்து நிட்டைகூடி இருப்பதால் உனக்கொரு சுதந்தரமும், எல்லாமறியுந் தன்மையும் உண்டாகையால் நீயுமொரு கர்த்தாவாகிற்றே' யெனத் திருவுளம் பற்றின விடத்தில் மாணிக்கவாசக சுவாமியார் விண்ணப்பஞ் செய்தது.

'இரண்டுமிலித் தனிய னேற்கே' யென்றது—அடியேனுக்குச் சுதந்தரமேது ? கர்த்தவியமேது ? இரண்டுங் கெட்டவனானேன் ; எனவிரண்டுங் கெடுதலால் தனியனாவதென்ன ? சூரியன் காட்டுகிறதற்கு முன் இருளால் மறைந்திருந்தபோது அவ்விருளின் செய்தியெல்லாம் எனக்கென்றொரு தன்மை யில்லையே. சூரியப் பிரகாசத்தால் ஒளியா நின்ற போதும் கண்போன்ற வெனக்கு அவ்வொளியாகிய திருவருட் பிரகாசமின்றி எனக்கென்றொரு வேறொரு தன்மை யில்லையே ; ஆகையால் கர்த்தவியமுமில்லையே ; ஆனது கொண்டு தனியனாகிய வெனக்குப் பெருங்கருணையால் இவ்வளவு கிருபை செய்தது அநுக்கிரகம் பண்ணின சுவாமிக்கு நானென் கைம்மாறு பண்ணப் போகிறேன் ! நாதனே ! உன் திருவடியிலடங்கி யடிமை யாவதே கைம்மாறுதவி யெனக் காண்க.

இவைக்குச் சுருதி வேதத்தில், 'நீயறியாச் செயலுண்டோ' என்றும், ஆகமத்தில் 'அவனுடைய வறிவெல்லா நமையறியு

மறிவு' (பெரியபு : கண்ணப்ப : 157) என்றும், புராணத்தில் 'ஓரு ணராவர்' என்றும், சாத்திரத்தில் 'உடந்தை' யென்றும், 'தாமே தருபவர்' என்றும், 'அவனிவனுவ தவனருளே' என்றும் வருவன வற்றுற் காண்க.

இப்பா விநியோகப்படி இத்திருவாசகத் திருவருட்பா மகா வாக்கிய முழுதும் அவ்வநுபூதி யிருப்பதால் அவை எழுதி முடியா தென்றுஒரு பாவுக்குக் காட்டினது; எவ்வகை யென்னில் சர்க்கரைக் கட்டியில் ஒரு புறத்திற் பிட்டு வாயிலிட்டால் கட்டிமுழுதும் அவ் வின்பமே யெனக் கொள்வது போலவே கொளத் தக்கது. (26)

31. இனிப் பிறவிப்பிணிக்குத் திருநாமம் புனையானதென்ற (தி - ன.) :—

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக்
[1]கனியினேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
[2]முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே.

(இ - ள்). தேவரீர் திருவருட் சகாயமின்றி யாதொரு பற்றுக் கோடில்லாது ஆணவமல வேதனையிலுலே அளவில்லாத பிறவிச் சாகரத்தில் சுதந்தர னனுனை அடியேன் வீழ்ந்திகழ்ச்சியாகிய துன் பத் திரையால் அலைந்து உருண்டு ஓடுகையில், யாதொரு ஆதரவு மில்லாமல், கொவ்வைக் கனியும் பவளமும் போன்ற வாயை யுடைத் தான பெண்களாகிய காற்றினுல் அச்சமுத்திரத்தில் ஓரிடமும் தரி யாது அலையும்போது, இச்சையாகிய பல முயற்சியான சுறுமீன் வாயிலகப்பட்டு, இனி ஒரு காலத்தினும் அருட்கரை கிட்டாது; எவ்வகை பிழைப்பதென அலையுங்காலம், நுகத்தின் துணை வழி

30. சிந்தனை - நினைவு. கண் இணை - இரு கண்கள். பாதப் போது - திருவடிகளாகிய தாமரைமலர்கள். வந்தனை - வணக்கம். அம் மலர் - திருவடிகள். விச்சை - வித்தை.

31. (பி - ம்.) 1. கனியை நேர். 2. முன்னவனே.

க்ழி நேர்பட்டது போல, பரமகுரு வெழுந்தருளி உபதேசித்த திருநாமத் தெப்பத்தை மிதப்பாகப் பிடித்துக் கிடக்கும் என்னை, "முன்னவனே! ஆதியந்தமில்லாதோய்! திருவருளான திருவடி ஞானக் கரைகாட்டி யடிமைப் பணி கொண்டாய்; மூர்க்கனுக்கு" எனவே, நல்லோர் பெறுவது புல்லோரும் பெற்றதென அருளிய தைக் காண்க. (27)

32. இனி, நாய்க்குத் தவிசிட்டது போல, திருவடி ஞானங் காட்டியதென்ற (தி - ன.) :—

கேட்டாரு மறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே.

(இ - ள்). எவராலும் வாசகக் கேள்வியில் அகப்படான்; நாச மில்லான்; மாயாசுற்றமில்லான்; ஓதாதுணர்ந்தான்; இவ்வகை யான நாதன் சிவஞானமுடையோர், இதென்னவென விழித்தபடி யிருப்ப, இப்பூமியிலே நாயடியேனே மேலோரிருப்பதான இரத்தின சிம்மாசனத்திலேற்றி, நாயிற்கடையான வடியேற்கு உண்மையாக இவ்வரையிற் காணுத திருவருளைக் காட்டிப் பின்னுங் கேளாத சிவ ஞானம் உபதேசித்து, இனிப் பிறவாவண்ணம் அருள்செய்த வென் சுவாமி, தேவரீர்! செய்த எல்லாம்வல்ல சித்தை என்னெனைக் காண் பேன்! அந்தோ! பேதைமையினிடத்து என்ன குணங்கண்டு என் பிணி தீர்த்து என் பெற்றாய்? ஆசை, குரோதமிலாய்!

---

31. பௌவம் - கடல். எவ்வம் திரை - துன்பமாகிய அலை. தடம் - பெருமை. துவர் வாய் - சிவந்த வாய். கால் - காற்று. வான் - பெரிய. காம சுறவு - காமமாகிய சுறுமீன். உய்யும் ஆறு - பிழைக்கும் வழி. புணை - தெப்பம். முனைவன் - கடவுள். மல்லல் கரை - வளம் பொருந்திய முக்திக்கரை.

குற்றமே குணமாகக் கொள்வது நின்குணமோ? ஐயாஎன சித்தான லீலையிற் காண்க. (28)

33. இனி, உள்ளன்பே கோயிலாகக் கொண்டதென்ற (தி - னை.) :—

விச்சைதா னிதுவொப்ப [1]துண்டோ கேட்கின்
மிகுகாத லடியார்தம் மடிய னுக்கி
அச்சந்தீர்த் தாட்கொண்டா [2]யமுத மூறி
[3]அகநகவே புகுந்தாண்டா யன்புகூர
அச்சனுண் பெண்ணெலியா [4]காய மாகி
ஆரழலா யந்தமா யப்பா னின்ற
செச்சைமா மலர்புரையு மேனி யெங்கள்
சிவபெருமா னெம்பெருமான் தேவர் கோவே.

(இ - ள்) அடியார்களே! நீங்கள் கேட்குங் காலையில் சுவாமி செய்த வித்தையான விளையாடற்கொப்புளதோ? எப்படி யென்னில், அடியேனை மிகுந்தவாசை திருவடியில் வைத்தடிமை செய்யும் உண்மை அடியார்கட்கு என்னை அடிமையாக்கி, அடியாருடன்சேர்வேனெனக் கொண்ட பயத்தைத் தீர்த்தாளாக்கியதன்றியும், என்னுள் புகுந்து இன்ப அமிர்தம் நினைக்குமுன் ஊறச் செய்து, அருளிலாத என் நெஞ்சே என்னைச் சுடும்படி நகைப்ப, உள்ளமே கோவிலாகக் கொண்டாய், அன்பு மிகுந்து நிற்ப; இதன்றியும் எனது அப்பன், அவன் அவள் அதுவாயும், ஆகாயமாயும், அக்கினியாயும், முடிவாயும், அவைக்கப்பாலாயும், வெட்சிமலர்போலச் சிவந்தமேனியன், எங்கட்குப் பரமசிவன், பெருமையிற் சிறந்தோன், மகாதேவன் அவனது திருவருள் இவ்விளைவு; என அருளியதைக் காண்க. (29)

---

32. ஆரும் கேட்டு அறியாதான் என மாற்றுக. கிளை - உறவு. ஞாலம் - பூமி. தவிசு - ஆசனம். விச்சை - வித்தை.

33. (பி - ம்.) 1. தன்றே. 2. னமுத. 3. அகநெகவே. 4. காச. அகம் நகவே - என்னை மனம் பரிகசிக்க. பிறர், அகம் நெகவே என்று கொண்டு நெஞ்சு உருகவும் என்று பொருள் உரைப்பர். அச்சன் - தகப்பன். ஆர் அழல் - நிறைந்த நெருப்பு. செச்சை - வெட்சி.

34. இனித் திருவடிஞான முடையரை யாவர்க்கு மேலாக்கும் என்ற (தி - ன.) :—

தேவர்கோ வறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னுய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோ னெண்ணெயும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோ மியாது மஞ்சோ
மேவினே மவனடியா ரடியா ரோடு
மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே.

(இ-ள்) சம்புபட்சமான திருவுருவைத் தேவேந்திரன் முதலியோர் அறியாத மகாதேவனுயிருப்பினும், அணுபட்சமான திருவுருவில் உலகங்களைச் சிருட்டி திதி சங்காரஞ் செய்வதற் பொருட்டுச் சங்காரப் பொருளாயும், மற்றிருவர்க்கும் பிரேரகனுயும், ஆதி முதல்வனுயும் எக்கர்த்தாக்களுக்கும் முன்னேனன பாட்டன் தகப்பனுயும், வாம பாகம் அம்மையை ஆளச் செய்தோனுயும், எல்லோர்க்கும் நாதனுயும் இராநின்ற சுவாமி என்னைப் பொருளாக அடிமை கொண்டான்; ஆனதால், ஒருவருக்குங் கீழ்க்குடியல்லன்; அஞ்ச வருவதுமில்லை; அஞ்சப்படுவதுமில்லை; அவனது சிரடியார் பாதஞ் சேர்ந்தவர்கள் திருவுளப்பணி செய்து தட்டமிட்டுக் கூத்தாடி இன்புற்றிருப்ப தல்லாது வேறு பேறில்லை; என அருளியதைக் காண்க. (30)

---

34. தேவர்கோ - இந்திரன். பொழில்கள் - உலகங்கள். பயந்து - தோற்றுவித்து; மூர்த்தி, வடிவுடையவன் என்றும் அட்டமூர்த்தம் என்றும் கொள்ளலாம்.

நான்காம் கொத்து

இனி நான்காவது கொத்து மறக்கும் மறதியைத் தரிசிப்பிக்கும் சிவசத்தியின் அநுபூதி.

இப்பாப் பத்தும் அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

35. திருவடியை மறந்தகாலத்திரங்கி மறவாவண்ணம் நெஞ் சுக்குக் கூறிய (தி - ன.) :—

ஆடு கின்றிலே கூத்துடை யான்கழற்
கன்பிலே யென்புருகிப்
பாடு கின்றிலே பதைப்பதுஞ் செய்கிலே
பணிகிலே பாதமலர்
சூடு கின்றிலே சூட்டுகின் றதுமிலே
துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலே தெருவுதோ றலறிலே
செய்வதொன் றறியேனே.

(இ - ள்). அநாதியே என்னை விட்டுப் பிரியாத திருவடி விட் டுப் பிரிந்து, திரும்ப அவனருளாற் கண்டவுடன் இறந்தகால மற தியை நினையாது உயிர்த்துணையற்ற சவமான மனதே! கூத்தாட்டஞ் செய்யவில்லை ; நடராச குஞ்சிதபாதத் தொடர்ச்சியில்லை ; ஊனுயிர் கரையத் துதிப்பதில்லை ; எப்போது காண்போமெனப் பதைபதைப் பதில்லை ; வணங்கவில்லை ; திருவடியைச் சுமக்கவில்லை ; அத்திரு வடிக்குப் பாமாலை பூமாலை அணியவில்லை ; முன்கண்ட திருவுரு எங்கேயென ஓடித் தேடவில்லை ; காணுவிடில் தெருக்கள் தோறுங் 'கண்டவருண்டோ?' என அலறவில்லை ; இப்பணி யொன்றுஞ் செய்வதற்கறிவில்லாய் ; எனவே, எவ்வகை திருவடிக் குரித்தாவது?—(எ - க). (31)

நான்காம் கொத்தின் திருவாசக உள்ளக்கிடக்கை :—ஆத்துமசுத்தி—அநுபவத்தழுந்தல்.

35. பாதமலர் சூடுகின்றிலே என்பதற்குத் திருவடியாகிய மலரைத் தலையிலே வைப்பதில்லை என்றும், பாதம் மலர் சூட்டுகின்றிலே என்பதற்கு திருவடியில் மலர்களால் அர்ச்சிப்பதில்லை என்றும் பொருள் காண்க. துணையிலி - ஒப்பிலி என்றும் இகழ்ச்சிப் பொருளிலும் பொருள் காண்பர்.

36. இனி, எக்காலமும் பிரியாதிருந்த மனதைப் பார்த்துத் 'திருவருளைக் காட்டாது கெடுமாறு செய்தாய்' என்ற (தி. ன.) :—

அறிவி லாத வெனைப்புகுந்
தாண்டுகொண் டறிவதை யருளி[1]மெய்ந்
நெறியெ லாம்புல மாக்கிய
வெந்தையைப் பந்தனை யறுப்பானைப்
பிறிவி லாதவின் னருள்கள்பெற்
றிருந்துமா றுடுதி பிணநெஞ்சே
கிறியெல் லாமிகக் கீழ்ப்படுத்
தாய்கெடுத் தாயென்னைக் கெடுமாறே.

(இ - ள்). 'மடித்தாடு மடிமைக் கணன்றியே' திருவடி மறந்த சவமான மனதே! திருவருளுண்மை கேட்பாயாக; கேவலா தீதமே உண்மையாகிய என்னைப் பெருங்கருணையால் மகாகேவலத்தில் எழுந்தருளி, துணைக்கருவி கொடுத்து, அறியும் பொருள் நானென திருவருட்பாலித்து, தன்னிலருளிய சகல வதிட்டானப் பொருள்களைப் பிரத்தியட்ச அநுபூதி செய்த பரமகுருவான தகப்பனை, மலத்தைத் தீட்சித்தவனை, அநாதியே துணையெனத் திருவருள் பெற்றிருந்தும் அவை மறந்ததுமன்றி, அவனது கிரியாவழியான சத்தியாலருளிய சுத்த பஞ்ச கிருத்தியத்தை, உன்னருளைத் தந்து நீ யொன்றிடினும், என்போதம் என்னை மிகப்பண்ணி என்னைக் கீழாக்கி, அடுத்தவனைக் கெடுத்தாற்போல் கெடுத்தாயே! இக் கெடுமாறுக்கு என்செய்வேன்? என இரங்கி யருளியதைக் காண்க.

37. இனி, மறதியான் மாறுபட்ட மனதைக் கண்டிரங்கித் திருவடி சேர்வதற்குரித்தான—(தி. ன.) :—

மாறி நின்றெனைக் கெடக்கிடந்
தனையையெம் மதியிலி மடநெஞ்சே
தேறு கின்றில மினியுனைச்
சிக்கெனச் சிவனவன் றிரடோண்மேல்

---

36. (பி - ம்). 1. மேல். மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே (சுந்தரர் தேவா. 90 கோயில் 1). புலமாக்கிய - புலப்படுத்தின; பிரத்தியட்ச அநுபூதி செய்த என்பது உரை. மாறுடுதி - மாறுபட நின்றாய். கிறி - பொய்ந்நெறி;

நீறு கின்றது கண்டனை
யாயினு நெக்கிலை யிக்காயம்
கீறு கின்றிலை கெடுவதுன்
பரிசித து கேட்கவுங் கிற்றேனே.

(இ - ள்). அநாதியே பிரிவில்லாத திருவடியின் அருமை தெரியாதபடி மலவசமாய்க் கிடக்கும்படி என்னை விட்டு நீ பிரியாதிருந்த என் உறவான, புத்திகெட்ட, அறிவிலாத மனதே! உனக்கு எவ்வகைப் பிழைக்கும் வண்ணம் சொல்லியும் சொன்ன என்னையும், உன்னைப்போலவே, கெடுத்தாய். இருவரும் தெளியும் வகை காணேம். இனியாகிலும் அதிவிரைவாய் நம் பொருட்டுச் சகளீகரித்த பரமசிவன் திருமேனியில் தரித்திராகின்ற விபூதியை நீ கண்டவுடன் நமது பிறவியறத் தரித்ததென, நெக்குநெக்காக உருகவில்லையே! அவ்வண்ணம் அன்பால் உருகாத தேகத்தை வெட்டவில்லையே! ஏதினுல் என்னில், கெடுவதுண்மை யாதலால் உனதுண்மையால், கிட்டிக் கேட்பதில்லை, (எ - க). (33)

38. இனி, அடிமையானுல் சிவசாட்குணியம் பெறலாகும் என்ற (தி. ன.) :—

கிற்ற வாமன மேகெடு
வாயுடை யானடி நாயேனை
விற்றெ லாமிக வாழ்வதற்
குரியவன் விரைமலர்த் திருப்பாதம்
முற்றி லாவிளந் தளிர்பிரிந்
திருந்துநீ யுண்டன வெல்லாமுன்
அற்ற வாகின் னறிவுகின்
பெருமையு மளவறுக் கில்லேனே.

---

37. எனை மாறி நின்று, (எனைக்) கெடக்கிடந்தனையை என்பது நோகப் பொருள் கொள்ளும் முறை. உரையாசிரியர் கொள்ளும் உரை கூர்ந்து நோக்கற்பாலது. இனி, உனைச் சிக்கெனத் தேறுகின்றலம் என்றுகூட்டலாம்; தேறுகின்றலம் என்ற தற்குத் தம்மையும் நெஞ்சையும் கூட்டிப் பொருள் கூறுகின்றார்; சகளீகரித்த என்ற ஒரு சொல்லை உனை, என்பதனோடும் கூட்டி உரை செல்கின்றது.

(இ - ள்). வாழி நெஞ்சமே! பிரிவில்லாது வா; வராத போனற் கெட்டே போவாய்; ஆனது கொண்டு, உண்மையைக் கேட்பாயாக. அநாதியே நமது ஆண்டவன்; நாய் அடியேன்; ஒற்றியல்லேன்; விற்று எல்லா வின்பமுந் தனதின்பமாகச் செய்யுங் கருணைநிதி; அவனுடைய சருவ வியாபக வாசனையுடைய, வற்றுத, முற்றிலாத, குழைவான திருவடியைப் பிரிந்தாய். உனக்குள்ள சருவஞான வாழ்வும் இழந்தாயே. உன்னுடைய அறிவையும் பெருமையையும் அளவிடக் கூடாது;

எனவே, அறியாமையே பொருள்; அடிமையான ஆன்மாவுக்குச் சிவகுண முழுமையும் உண்டு என்பதற்குக் "கூடிய தன்னிடத்தானும்" என்ற திருப்பாவில் "இவையா மெம்மய னெனவே" என்றருளிய பொன்வண்ணத் தந்தாதிப் பிரபந்தச் சுருதியிற் (60) காண்க. (34)

39. இனி, உள்ளக்கள்ள மறுத்து உருகச்செய்த (தி. ன.) :—

[1]அளவ றுப்பதற் கரியவ
னிமையவர்க் கடியவர்க் கெளியானங்
களவ றுத்துங்கின் ரூண்டமை
கருத்தினுட் கசிந்துணர்ந் திருந்தேயும்
உளக றுத்துனை நினைந்துளம்
பெருங்களஞ் செய்தது மிலைநெஞ்சே
பளக றுத்துடை யான்கழல்
பணிந்திலை பரகதி புகுவானே.

(இ - ள்). என் மனதே! கேட்பாயாக. சுவாமியை அளவைகளால் அளக்கத் தேவர்கட்கும் அரிது; உள்ளபடி தன்னை அடைந்தவர்கட்கு எழுந்தருளும் எளிய நாதன்; நமது உள்ளக் கள்ளமாகிய பசுபோதத்தை அறுத்து நம்மைச் சிவமாக்கி, அடிமை செய்த வியப்பைக் கருத்தினுட் கசிந்துருகி, உனதுண்மை மலத்தை யறுத்து உன்னுடனிருந்த திருவடியை இடைவிடாது கருதி, பெரிய

---

38. கிற்றவா என்றதனை 'கில், தவா' என்றும், 'கிற்று அவாம்' என்றும் பிறவாறும் பிரித்து, 'ஆற்றல் கெடாதிருக்கும்', 'வேண்டுகிற தெல்லாம் ஆசைப்படுகிற', 'முடிந்தவரை', என்றும்; கிற்றல் - செய்தல் எனப்பொருள்கொண்டு, 'நீ செய்தவாறு என்னே' என்றும்; கிற்றல் - சுழலுதல் எனக்கொண்டு, 'சுழலுதலை விரும்புகிற' என்றும் பிறர் பல வாறு பொருள் கூறுவர்.

இடமாகச் செய்யாது நின்றுயே ! இனியாகிலும் பரகதி புக, நஞ்சை யணியு நாதன் திருவடிக்கேற்பத் திருவருட்பணி செய்; நற்கதி கிடைக்கும்—(எ - க). (35)

40. இனி, திருவடி ஞான வின்பப் பெருமையைக் கூறிய (தி. ன.) :—

புகுவ தாவதும் போதர
வில்லதும் பொன்னகர் புகப்போதற்
குகுவ தாவது மெந்தையெம்
பிரானென்னை யாண்டவன் கழற்கன்பு
நெகுவ தாவது நித்தலு
மமுதொடு தேனெடு பால்கட்டி
யிகுவ தாவது[1] மன்றெனின்
மற்றிதற் கென்செய்கேன் வினையேனே.

(இ - ள்). சத்து அசத்து இரண்டின் பாலும் தடையின்றிப் பிரவேசிக்கும் சதசத்தான மனதே ! உள்ளபடி சார்வதேது ? சாராததேது ? கேட்பாயாக. சொர்க்காதி போகத்தை விரும்புவது நன்றன்று. எனதப்பனுய், இரட்சிப்பவனுய், என்னை யடிமை படைப்பவனுய், உள்ள நாதன் திருவடிக்கன்பு செய்து உருகி அவனது திருவடி சேர்வதே நன்று. எப்படி என்னின், நித்தியமான பேரின்பக் கரும்பைத் தேனைப் பாலைக் கனியமுதைக் கண்டைக் கட்டியை ஒத்திருப்பதான திருவடி இன்பத்தை விட்டுப் பிறந்திறக்கும் சுவர்க்க வின்பம் நன்றென்று கொள்வது உன் குணமன்று ; என் விதி வினையால் நீ சார்ந்ததொழிய வேறில்லை—(எ - க). (36)

---

39. (பி - ம்). 1. அளவறுப்பதையரியவன் என்பது ஏட்டிலுள்ள பாடம். உள கறுத்து உனை நினைந்து உளம் பெருங்களம் செய்ததும் இலை - உனக்குள்ள குற்றங்களைக் கடிந்து, உன் நிலையை எண்ணி, உன் உள்ளத்தை அவன் தங்குதற்குரிய பேரிடமாகச் செய்ததில்லை. பளகு அறுத்து - குற்றங்களை நீக்கி. 'பள கறுத்துடையான்' என்று கொண்டு, 'நஞ்சையணியும் நாதன் என்று இவ்வுரை பொருள் கூறுகின்றது.

40. (பி - ம்). 1. மின்றெனின். பொன்னகர் என்பதனுக்குச் சுவர்க்காதி போகங்கள் என இங்குப் பொருள் கூறப்பெற்றுள்ளது. பிறர் இதற்குச் சிவலோகம் என்றும் வீடு என்றும் பொருள் கூறுவர். இங்குக் கூறப்பெற்ற உரையின் சிறப்பை ஓர்க.

41. இனி, தினைப்போதளவேனும் திருவடியை யிகன்று நில்லாத ஆன்ம வின்பப் பெருமையைக் கூறிய (தி. ன.) :—

வினையென் போலுடை யார்பிற
ராருடை யானடி நாயேனைத்
தினையின் பாகமும் பிரிவது
திருக்குறிப் பன்றுமற் றதனலே
முனைவன் பாதநன் மலர்பிரிந்
திருந்துநான் முட்டிலேன் றலைகீறேன்
இனையன் பாவினை யிரும்புகல்
மனஞ்செவி யின்னதென் றறியேனே.

(இ - ள்). உலகத்தில் என்னைப்போல் கொடிய வினைசெய்த உயிரைக் கண்டதில்லை. எதனலென்னில், தினைப்போதென்றது காலவளவுசெ யுருவக மாதலால், அநாதியே என்னை விட்டுப் பிரிந் திருப்பதோர் காலமும் திருவுளச் சம்மதமுமில்லை. அவை வினவில், கடையான நாய்போன்ற எளிமை பற்றும் அடிமையாதலால், நாதன் திருவடி ஒப்பற்ற ஞானமலர்; அடி யேனை வாசனை. ஆனதால், அடிமை அகன்று நிற்பதெங்கே? அவ்வுயிர் போல நின்ற திருவடி யைக் கண்டும் பிரிந்த பாவியான நான் உடனே தலையைப் பாறையில் முட்டவில்லை; வாளால் தேகத்தைச் செகுக்கவில்லை. அன்புள வடியார் செய்தபடி செய்யாவிடினும் கிரியாயோக பாவனையாகினும் திருவடிப்பணி செய்ய நினையாத மனம் கல்லே. இவ்வுபதேசங் கேளாத செவி இரும்பே. இவையோ, இவைக்கு மேலோ? அடி யேன் அறிவது யாது?—(எ - க). (37)

---

41. என்போல் வினையுடையார் பிறர் ஆர் என்று மாற்றுக. உடையான் - கடவுள். அடி - அடிமை. தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப்பன்று - அடியேனைச் சிறிதளவேனும் பிரிந்து நிற்றல் இறைவன் திருக்குறிப்பன்று. அப்படியிருக்க நான் பிரிதல் தக்கதன்று என்று கூறியதாம். மலர் என்பதற்கு உரையாசிரியர் காட்டும் உரை நயத்தை ஓர்க. இனையன் பாவினை யிரும்பு கல்மனம்செய என்பதற்கு உரையாசிரியர் கொள்ளும் பொருளைக் கவனிக்க. பாவினை - சிந்தனை; பாவனை இரும்பு, மனம் கல், செவி இன்னதென்றறியேன் என்று நேராகவும் கூறலாம்.

42. இனி, திருவடி பொருந்தாத துன்பத்தைப்பொருத மனத்தைப் பற்றிக் கூறிய (தி. ன.) :—

ஏனை யாவரு மெய்திட
லுற்றுமற் றின்னதென் றறியாத
தேனை யானெயைக் கரும்பினின்
றேறலைச் சிவனையென் சிவலோகக்
கோனை மானன நோக்கிதன்
கூறனைக் குறுகிலே னெடுங்காலம்
ஊனை யானிருந் தோம்புகின்
றேன்கெடு வேனுயி ரோயாதே.

(இ - ள்). சிரடியார் அனைவோரும் பெற்றிருப்பதான குஞ்சித பாத பரமுத்தி இன்பத்தேன், பசுவின்நெய், கரும்பின் இரதம், எனவும் இன்னமும் உளதான சுகம் இவ்வகையென அடியேன் அறியாதுமன்றி, நம்சிவனை, கயிலாசநாதனை, மான்விழி போன்ற ஞானக் கண்ணுடைய (அம்மையை) வாமபாகத்திற் கொண்டானை, உண்மைப்பணி செய்து, திருவடி சேர்கின்றிலன். ஊழிக்காலங்கடோறும், என் செய்திருந்தாயென்னில், தேகமே பொருளென, அவ்விரட்சையின் அவாவினுல் முயற்சி செய்து உள்ளவரை, ஓயாது கெட்டுப் போனேன்—என்று இரக்கத்தால் அருளியதெனக் காண்க. (38)

43. இனி, கண்ட திருமேனிப் பிரிவால் மயங்கிய வின்பத்தைக் கூறும் (தி. ன.) :—

ஓய்வி லாதன வுவமனி
லிறந்தன வொண்மலர்த் தாடந்து
நாயி லாகிய குலத்தினுங்
கடைப்படு மென்னைநன் னெறிகாட்டித்

---

42. 'ஏனை யாவரும் எய்திடலுற்று இன்னதென்றறியாத' என்பதற்குப்பிறர், 'மற்றையோரெல்லாம் அடைய முயன்று அடையாமலும் அதன் தன்மை அறியப்படாமலும் நின்ற' என்று பொருள் கொள்வர். இவ்வுரைகாரரோ, 'சிரடியார் பெற்றிருப்பதும், தான் அறியாததுமான' எனப்பொருள் காண்கின்றூர்.

ஆன்நெய் - ஆனெய். தேறல் - இரசம்; சாரம். மான் அன்ன நோக்கி. நெடுங்காலம் குறுகிலேன். ஊன் - தேகம்.

தாயி லாகிய வின்னருள்
புரிந்தவென் றலைவனே நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன் றிண்வரை
யுருள்கிலேன் செழுங்கடல் புகுவேனே.

(இ - ள்). பிறந்த நாள், மேலும் பிறக்கு நாள் போலும் அள விலாத காலம் வீணுட்கழிப்பதாயின. செய்ந்நன்றி மறவாத நாய்க் குலத்தினுங் கடைப்பட்ட திருவருட்சகாயம் மறந்த அடியேற்கு ஒள்ளிய பொற்பாத கமலத் திருவடி யளித்துத் தன்னுல் அருளிய வேதாகம முடிவான அடிமைத் திறப்பணியும் அனுக்கிரகஞ் செய் தாய்; தாய்போல, அன்பின்பு அருளிய ஆன்மநாயகனே—உள்ளும் புறம்பும் ஒரு தன்மைக் காட்சிப் பொருளே—கட்புலப்படாக் காணுத நான், பதி இறக்கக் கேட்டு இறந்த பத்தினி தீப்புகல் போல, பிரிவு தோன்றினவுடன் தீயில் வீழ்ந்தேனல்லேன்; மலையிலிருந் துருண்டு அடியில் வீழ்ந்தேனல்லேன்; செழுங்கடல் புகவே வேண்டும்.

என்னவே, யாதொன்றுஞ் செய்யாத தேகவாழ்வை நோக்கித் திருவருட் பிரியும் அருமை காட்டி யருளிய தெனக் காண்க. (39)

44. இனிப் பெண்ணுசையால் திருவடி மறந்த மறதியினைக் கூறும் (தி. ன.) :—

வேனில் வேள்கணை கிழித்திட
மதிசுடு மதுதனை நினையாதே
மானு லாவிய நோக்கியர்
படிறிடை மத்திடு தயிராகித்
தேனி லாவிய திருவருள்
புரிந்தவென் சிவனகர் புகப்போகேன்
ஊனு லாவியை யோம்புதற்
பொருட்டின்ன முண்டுடுத் திருந்தேனே.

---

43. ஓய்விலாதன உவமனிலறந்தன ஆகிய தாள் என்றியைத் தலியல்பு. இவ்வுரை வேறு வகையாகக் கொண்டு உரை கூறுவதைக் காண்க. உவமன் - உவமை. தாள் தந்து, காட்டி, புரிந்த தலைவன் என்று கூட்டுக. தீயில் வீழ்தல், வரை உருளல் பத்தினியின் தொழில் களாகக் கூறிய நயம் ஓர்க.

(இ - ள்). மன்மதபாணம் வீசும் வேனிற் காலத்தில் விரகதாப சந்திர வெப்பத்தால், மான்போலும் வெருட்சியுடைய பெண்களுடைய பொய் மயக்கத்தில், மத்தின்கண் கடைவதற்ககப்பட்ட தயிர்போல, நினைந்து அலையும் அடியேன், ஈயறியாப் பூந்தேனை பேரின்பக் கருணை யளித்த பரமசிவன் வாழும் தலத்திலே அடியேன் பணி செய்யப் போகாமல், காலினெடு கைகளும் தளர்ந்து, காமநோய் தன்னால் ஏல வார்குழலினர் இகழ்ந்துரைப்ப, மாயாதேக விரட்சிப்பே பொருளென, உண்பது முடுப்பதே முயற்சியானேன். "மாலினெடு நான்முகன் மதித்தவர்கள் காண்கிலா, நீலமேவு கண்டனர் நிகழ்ந்த காழி" சேராமற் போனது—என அன்பாலிரங்கி யருளியதைக் காண்க. (40)

ஐந்தாம் கொத்து

இனி, ஐந்தாங் கொத்து, **வாக்கைப் பரிபாகப்படுத்துமீ சிவசத்தி யனுபூதி.**

இத்திருப்பா பத்தும் கலிவிருத்தம்.

45. இப்பா தஞ்சாவூர்த் தட்டான்(?) என்ற திருவருள் மூலத் (தி. ன.) :—

இருகை யானையை யொத்திருந் தென்னுளக்
கருவை யான்கண்டி லேன்கண்ட தெவ்வமே
வருக வென்று பணித்தனை வானுளோர்க்
கொருவ னேகிற்றி லேகிற்ப னுண்ணவே.

(இ - ள்). பெருமை பொருந்திய தும்பிக்கையை யுடைத்தான ஆனையைப்போல—உருவத்தில் வாயுங் கையுமொன்றுகவே—தேக ரட்சையிலிருந்தேன். [உட்கருத்தாவெனில், அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் என்னும் பழமொழிப்படி, அநாதியே என்னுயிர்க்கு உள் மூல முதலாயிருந்து, என்னை அவனருளால் வெளியிற் கொண்டு வந்ததுமன்றித் தானு மென் போலவே எழுந்தருளி, பரமுத்தி வரைக்கும் அடிமையெனச் சாதித்தருளிய சகாயத்தை மறந்தது அவ் யானைக்கொப்பு. கொல்லுதல் என்றது மறவான பிரிவெனக் கொள்க]. திருவடியை அடியேன் கண்டது இகழ்வான

துன்பமேயன்றிப் புகழல்லவெனத் திருவுளமறிவதானதால், வலிய இழுத்து அடிமையெனச் செய்யும் மகாதேவ! ஏகப்பொருளே! தேவரீர் திருவடி யணுகித் திருவருளைப் புசிக்கக் கிஞ்சிக் ஞானதலால் அடிமை படைத்தவரே யாள்வது நியமமென அருளியது. கருவென்பதுண்மை யாண்ட தென்க. (41)

இவை சம்பிரதாய சிருட்டி.

46. இனி, அத்துவித வுண்மை கூறிய (தி. ன.) :—

உண்டோ ரொண்பொரு ளென்றுணர் வார்க்கெலாம்
பெண்டி ராணலி யென்றறி யொண்கிலைத்
தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றினுய்
கண்டுங் கண்டில னென்னகண் மாயமே.

(இ-ள்). இச் சகத்தை நடத்துவதற்காக ஒரு வத்து உள தென அறிபவர்கட்கு அவன் அவள் அதுவாக இருப்பதை அனுபூதியாற் பெறுகின்றிலே. தேவரீரடிமையான எனக்குள்ளே இச்சைப் பொருளாய் எழுந்தருளிய நாதன், அத்துவிதமாய் அநுபூதியருளியதே; ஒழிய, வேறு காணுத மாயமென்ன மாயம்! என வருளியதைக் காண்க. (42)

ஐந்தாங் கொத்தின் திருவாசக உள்ளக்கிடை :—கைம்மாறு கொடுத்தல் —தன்னைச் சிவனிடத்திலே கொடுத்தல்.

45. இருமை - பெருமை. இருகை யானை - இரண்டு கைகளையுடைய யானை என்று தம்மை இழித்துக் கூறியதாகவும் கொள்ளலாம். கரு - உண்மையாண்டது என்று பொருள் கூறப்பட்டுள்ளது. கரு, என்பதற்கு மேன்மையென்றும், உள்ளத்தினுள்ளே விளங்கும் மூலப்பொருள் என்றும், அத்துவிதபாவனையால் விளைந்த கரு என்றும் பிறர் பிறவாறு கூறுவர். எவ்வம் - துன்பம்.

கிற்றிலேன் - ஆற்றல் பெற்றிலேன். கிற்பன் - ஆற்றலுடையேன். உண்ணவே கிற்பன்; காணும் கிற்றிலேன் என ஓட்டுக. கிற்றல் - செய்யும் திறம்; கொள்கை (சிலப். 16, 183).

46. அறியொண்கிலை என்பதனைத் தம் மனத்தை நோக்கித் தாம் கூறுவதாகக் கொண்டு பொருள் கூறப்பெற்றுள்ளது. அலி, என்பதற்கு அது என்று அஃறிணைப் பொருள் கூறப்பெற்றுள்ளது. 'உள்ளவா வந்து தோன்றினுய்' என்பதற்கு, 'அத்துவிதமாய் வந்து தோன்றினுய்' என்று பொருள் காட்டப்பெற்றது.

இதற்குப் பிறர் வேறு விதமாகப் பொருள் கூறுவர்,

47. இனி, காலாதீதக் கடவுளெனக் கூறிய (தி. ன.) :—

மேலை வானவ ரும்மறி யாததோர்
கோல மேயெனை யாட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும்[1]பேயிவை வந்துபோங்
கால மேயுனை யென்றுகொல் காண்பதே.

(இ - ள்). தேவர்கள் கட்புலப்படாத திருவுருவான நாதனே! என்னைப் பொருளாக வடிமை கொண்ட நடராசனே! பிருதிவி முதல் ஆகாசம் வரை, இப்பூதவகையில் தோற்ற வொடுக்கமான காலமளவில்லை யாதலால், அவற்றிற் கட்டுண்ட சென்ன மரண முடையவன் நான். காலாதீதப் பொருளே! எப்போது காண்பேன்! எனவே, இப்போதே அனுக்கிரஹம் செய்ய வேண்டுமென அருளி யதைக் காண்க. (43)

48. இனிப் பன்றிக் குட்டிக் கிரங்கும் அருள் அடியேற்கருள வேண்டுமென்ற (தி. ன.) :—

காண லாம்பர மேகட் கிறந்ததோர்
வாணி லாப்பொரு ளேயிங்கொர் பார்ப்பெனப்
பாண னேன்படிற் றூக்கையை விட்டுனைப்
பூணு மாறறி யேன்புலன் போற்றியே.

(இ - ள்). நாதனே! அடியேன் திருவடியைக் காண்பேனே வெனில், அவைகட் புலப்பட மாயையில் வாழ்வதல்ல; ஆனலும் அடியேன் பன்றிக்குட்டி யானலல்லவோ திருவடி காண்பேன். அவை போலப் பரிபாக முடையேனல்லேன். வீணுட் கழிக்குமடி யேன்; பூதபரிணம தேகத்திலே தேவரீர் அருளாற் சிவன் முத்தி தசையே பரமுத்தி யடைவதன்றிக் காயங் கழிந்தால் விதேகமுத்தி பெறுமாறறியேன். ஆனதால் அடியார்கட்குப் புலப்படும் சுவாமி!

---

47. கோலம் - அழகு. வந்துபோம் காலம் - தோற்றி ஒடுங்கு கின்ற காலம்.

அடியேனை இத்தேகத்திலே தானே திருவடி கொடுத்து இரட்சிக்க வேண்டும்—என அருளியதைக் காண்க. (44)

49. இனி, நிக்கிரகமே அநுக்கிரகமாகச் செய்யும் என்னும் (தி. ன.) :—

போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்துநின்
ரூற்றன் மிக்கவன் பாலழைக் கின்றிலேன்
ஏற்று வந்தெதிர் தாமரைத் தாளுறும்
கூற்ற மன்னதொர் கொள்கையென் கொள்கையே.

(இ - ள்). "பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தற்குப் பத்தராகி, அரும்பொரு மலர்கள் கொடார்வத்தையுள்ளே வைத்துப் பாலி னெய்த் தயிரினெடு பலபலவாட்டி" யர்ச்சித்துத் துதித்து அடியில் வீழ்ந்து அங்கப் பிரதட்சணம் செய்து, கருணை வலிமை பற்றி அன் பால் அடியேனை இரட்சிக்க வேண்டும் என்ற மார்க்கண்டிகளைப் போலப் பெரிய அன்பேனல்லேன். அடியாரெனத் தெரியாது எதிர்த்து வந்த எமனை அடியார்க்கருளும் திருவடி தீட்சையாக நிக்கிரகஞ் செய்ததைக் கண்டு கொண்டு திருவடி அன்பால் அடைய வந்தது எனதுண்மை யாதலாற், குற்றமே செய்யினுங் குணமாகக் கொள்வது பெருங்கருணைபற்றி அடியேனையும் இரட்சிக்க வேண் டும்"—என அருளியதைக் காண்க. (45)

---

48. காணலாம் பரமே என்பதற்கு 'உன் நிலை காணக்கூடிய தன் மையதோ ? ' என்று பொருள் கொள்கின்றார். பிறரெல்லாம், 'காணத் தக்க பரம் பொருளே' என்று பொருளமைப்பர். இறந்தது - கடந்தது. வாள் நிலாப் பொருளே - ஒளி மிக்க உருவமே. பார்ப்பு - பறப்பவற்றின் இளமை ; (தொல். பொ. 559) ; விலங்கின் குட்டி(பிங்). இங்குப் பன்றிக் குட்டிகளுக்கு முலைகொடுத்த திருவிளையாடலைக் குறிப்பதாக உரை கொண்டுள்ளது. (போற்றித் : 166 ; 207). பிறரெல்லாம் பறவைக் குஞ்சு என்று பொருள் கொண்டு, பருவம் வந்ததும் அது கூட்டை விட்டுப் பறந்து செல்வதுபோல 'என்று விரிப்பர். பாணனேன் - வீணன் ; வீணட்கழிக்கும் அடியேன் என்பர். பாழ்நன், பாணன் என்றுயிற்று. படிறு ஆக்கை - பொய்யாகிய உடல். சீவன்முத்தி - இம்மையிலேயே பெறும்முத்தி - விதேக முத்தி - உடல் நசிக்கப்பெறும் முத்தி.

இச்செய்யுளுக்குக் கூறப்பெற்ற உரை கூர்ந்து நயக்கற்பாலது.

49. எதிர் ஏற்று வந்து - எதிர்த்து வந்து. கூற்றம் - இயமன். என் கொள்கை கூற்றத்தின் கொள்கை, என்றதால் அன்பாலமைந்த தன்று என்பதாயிற்று.

50. இனி, ஆன்மாக்கள் தோறும் அத்துவிதமாக நின்ற தன்மையைக் கூறும் (தி. ன.) :—

கொள்ளுங் கில்லெனை யன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டு மருமலர்க் கொன்றையான்
நள்ளுங் கீழுளு மேலுளு யாவுளு
மெள்ளு மெண்ணெயும் போனின்ற யெந்தையே.

(இ - ள்). சீரடியார் திருக்கூட்டத்தில் அடியேன் சென்று திருவுளப் பணிசெய்யக் கருணை கூரவேண்டும், நாதனே ! தேவரீர் திருமுடியில் சொரியுங் கொன்றை மலரணிந் திருப்பதை வண்டு களான வடியார்கள் புசிப்பதையும் தரிசித்தேன். அதன்றியும் எல்லா உயிர்களிலும், ஆதிஅந்த நடுவாக, மேலுங்கீழும், பண்இசை, வெம்பருதி, மதி, திலம் தயிலமும் போலவே பூரண வியாபக அபேத அத்துவிதமான பொருளே ! எனதப்பனே ! அடியார்க்கடியனாக இரட்சிக்க வேண்டும்—என அருளியதைக் காண்க. (46)

51. இனி, அநாதியே எனதுள்ளத்தில் எழுந்தருளி யிருப்ப வன் என்ற (தி. ன.) :—

எந்தை யாயெம் [1]பிரான்மற்றி யாவர்க்கும்
தந்தை [2]யாய்தம் பிரான்றனக் கஃதிலான்
முந்தி யென்னுள் புகுந்தனன் யாவரும்
சிந்தை யாலு மறிவருஞ் செல்வனே.

(இ - ள்). அடியேனுக்கு ஆண்டவனாகிய இரட்சகராய் மற் றெவ்வுயிர்க்குந் தகப்பனான ஆன்ம நாதனானாலும், தனக்கு இரட்சை கர்த்தாவும் உற்பத்திக்குத் தந்தையுமின்றி, தான்றானே முன்னே தனதிச்சை பேரன்ற அருளாரு வடையான். அடியேன் உளத்திற் றானே எழுந்தருளி இருந்தவன். யாவராலும் தன்னறிவாற் சிந்திக் கப்படாத திருவருட் செல்வமுடைய சுவாமி—எனக் காண்க. (47)

---

50. கில்லெனை - ஆற்றலில்லாதவனே. கூய் - கூவி. பணிகொள் ளும் என்றியைக்க ; கூய்ப்பணி என்றும் இயைப்பர். நள் - இடை.

51. (பி - ம்). 1. பிரான்மற்று மியாவர்க்கும். 2. தந்தைதாய். எந்தை ஆய் என்று பிரித்து என் தந்தையும் தாயும் என்று பிறர் பொருள் காண்பர். எந்தையாய் என்று கொள்வது இவ்வுரை.

52. இனி, தேவர் முதலான யாவர்க்கும் காண அரிதான திருவடி யென்ற (தி. ன.) :—

செல்வ நல்குர வின்றிவிண் ணோர்புழுப்
புல்வ ரம்பின்றி யார்க்கு மரும்பொருள்
எல்லை யில்கழல் கண்டும் பிரிந்தனன்
கல்வ கைமனத் தேன்பட்ட கட்டமே.

(இ - ள்). இம்மையிலுளதாகிய வழி, செல்வமும் வறுமையும் என்ற இரண்டுமின்றி, மறுமையிலுளதாகிய சுவர்க்க போக முதல் நாராயணன் பதிவிகாறும் அநித்தியச் சிற்றின்ப வாழ்வு புழுவினுட் காலச்செலவோரளவுமின்றி, மற்றுள எப்பதவி எத்தேவர்கட்கும் அருமையான, கணக்கு வழக்கிலகப்படாத, அகண்ட பரிபூரண சச்சிதானந்த நித்திய சுத்தமான திருவடியை அத்துவிதமாக வெள்ளியிரிற் கண்டு தரிசித்தும், அவை வேறுகக் கண்டு பிரிவுற்றது 'திணியான மனேசிலே'யானதால் துன்பப்படுவது காரணமாதல் ஒழிய வேறென் செய்வேன்! என அருளியதைக் காண்க. (48)

53. இனி, சீரடியார் திருச்சபைக்காளாக்கியதைக் கூறும் (தி. ன.) :—

கட்ட றுத்தெனை யாண்டுகண் ணீரீ
றிட்ட வன்பரோ டியாவருங் காணவே
பட்டி மண்டப மேற்றினை யேற்றினை
எட்டி னோடிரண் டும்மறி யேனையே.

(இ - ள்). சுவாமி! அடியேன் பஞ்சமலக்கட்டை திருவருணோக்கத்தால் தீட்சித்து, என்னைத் திருவடிக்கடிமை செய்ததுமன்றி, அன்பாக முழுநீறு பூசிய அடியார் திருச்சபையில் 'நம தடிமை இவனென' அருளி, அவ்வடியார் நடுவுள்ளிருக்கும்படியாக, சத்தி சிவ சொரூப இயல்பறியாதவென்னை அடியார்க்கடியனுக்கிய

---

52. விண்ணோர் புழு புல் வரம்பின்றி என்பதற்கு வானோர், புழு, புல் என்ற வரையறையின்றி என்று பிறர் பொருள் கூறுவர். இங்கு, சுவர்க்கபோகக் காலஅளவு மிகச்சிறியது என்று குறிப்பித்தபடி. கட்டம் • கஷ்டம்.

கருணைக்கென் செய்வேன்! எனவே அடிமைப்படுதலே அநுபூதி யெனக் காண்க. (49)

54. இனி, ஆன்மா சத்துமன்று அசத்துமன்று, சதசத் தென்ற—(தி. ன.):—

அறிவ னேயமு தேயடி நாயினேன்
அறிவ னுகக்கொண் டோவெனை யாண்டதும்
அறிவி லாமையன் றேகண்ட தாண்டநாள்
அறிவ னேவல்ல னேவரு ளீசனே.

(இ-ள்). அறிவுக்கு அறிவான பிரோகப் பொருளே! புசிக்கப் படாத அமிர்தே! நாயடியேன் அநாதியே சுதந்தர வறிவுளனுயிருப் பனுகிற் காட்டறிவான சுவாமி வேண்டுவதில்லையே! யானேது மறியாமல், என்னுள் வந்து, நல்லனவும் தியனவும் காட்டாய் நின்று, அடிமை செய்தலால், அடியேன் அநாதியே அறிவுளனல்லன். இரண்டின் பாலுய்ப்பதான தென வருளியதைக் காண்க.

இவ்வநுபூதி முதலகவலில் "ஏகன் அனேகன்" (பக்க. 32-235) என்ற உரையிற் றிருக்கருத்தருளிய வுண்மை காண்க. (50)

---

53. ஏற்றினை ஏற்றினை, அடுக்குத்தொடர்; வியப்புப்பொருளில் வந்தது. ஏறச்செய்து ஏற்றமளித்தாய் என்றும், ஏறு - இடபத்தினை யுடையாய், என்னை ஏற்றினை யென்றும் கூறுவர். கட்டு - பஞ்சமலக்கட்டு. பட்டி பண்டபம் - வித்யா மண்டபம். 'எட்டினேடிரண்டும் அறியேன்' என்பது ஒரு பழமொழி. இதற்கு 'அ, உ அறியாமை' என்று பொருள் கொண்டு வேறு பொருளுரைப்பாருளர்.

54. இது, இறைவன் ஆட்கொண்டதால் தன் அறியாமை நீங்கி யதை வியந்தது.

ஆரும் கொத்து

இனி ஆருங்கொத்து. தோத்திரமே அனுபவ மென்றுணர்த்தும் சிவசத்திப் பொருள்.

இத்திருப்பா பத்தும் அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

55. இனி, நினைக்கும் வண்ணம் ஒன்றுமில்லாத என்னை இரட்சிக்க என்றிரங்கும் (தி. ன.) :—

ஈச னேயென் னெம்மானே
யெந்தை பெருமா னென்பிறவி
நாச னேநான் யாதுமொன்
றல்லாப் பொல்லா நாயான
நீச னேனை யாண்டாய்க்கு
நினைக்க மாட்டேன் கண்டாயே
தேச னேயம் பலவனே
செய்வ தொன்று மறியேனே.

(இ - ள்). சருவ உயிர்களையும் இரட்சிக்கும் நாதனே! எனது உயிரே! எனதப்பனே! எனது துன்பப்பிறவியைக் கெடுப்பதான சங்கரனே! அடியேன், தேவரீர் திருவுளப் பாங்கிலொன்றும் சேராத, மலகுண கடைப்பட்ட, நீசன்; என்னை இவ்விதப் பரிசொன்றும் திருவுளங் கொள்ளாது அடிமை செய்த சுவாமியை நினைத்துத் துதியேன். ஏனென்னில், தேசோரூபமாய் சிற்சபையில் ஆனந்த நடன சுவாமி திருவுளப் பணிக்கு யாதொரு சுதந்தர மில்லாதவன்;— எனவே சருவ சுதந்தரமும் திருவருளாதலால், அவனருளால் அவன்ருள் வணங்குவதே திருவுள மெனக் காண்க. (51)

ஆரும் கொத்தின் திருவாசக உள்ளக்கிடை :—அநுபோகசுத்தி—சுகமேலீடு.

55. ஈசன், ஈசுவரன் என்பதன் திரிபு; பெருஞ் செல்வத்தை யுடையவன், இறைவன். தேசன் - ஒளியுருவன்.

56. இனி, ஊணும் உடையும் நமன் தூதுவராக் கண்ட (தி. ன.) :—

செய்வ தறியாச் சிறுகாயேன்
செம்பொற் பாதமலர் காணப்
பொய்யர் பெறும்பே றெத்தனையும்
பெறுதற் குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாத
மேவக் கண்டுங் கேட்டிருந்தும்
பொய்ய னேனு ணுண்டுடுத்திங்
கிருப்ப தானேன் போரேறே.

(இ - ள்). தேவரீர் என்னை ஆண்ட உண்மை சற்றும் தெரியாத நாய்க்குட்டி யானதால், திருவடியருமை எனக்குத் தெரியாது ; அநித்திய வாழ்வுடையார் பெறும் பேறை உரித்தாக அநுபூதி பெற்றவன் ; அநித்தியம் நீக்கி நித்தியானந்தத் திருவருட் செல்வ முடைய அடியரால் அருட்குண வாசனை பொருந்திய திருவடி சேர் வதையும் கண்டும் கேட்டும் அவை பொருளெனக் கொள்ளாது உண்பதுடுப்பதே பொருளென நம்பிக் கெட்டேன் ; பாச விமோசன சிங்கமே !—என அருளியதைக் காண்க. (52)

57. இனி, சிரடியார் சீர்ப்பாதம் பெற, ஊர்ப்பெரதுவில் கண்ணில்லாத எருது போலலைந்தமையைக் கூறும் (தி. ன.) :—

போரே றெகின் பொன்னகர்வாய்
நீபோந் தருளி யிருணீக்கி
வாரே றிளமென் முலையாளோ
டுடன்வந் தருளி யருள்பெற்ற
சீரே றடியார் நின்பாதஞ்
சேரக் கண்டுங் கண்கெட்ட
வூரே ருயிங் குழல்வேனே
கொடியே னுயிர்தா னுலவாதே.

---

56. செம்பொற் பாதமலர் காணப் பொய்யர் ; அநித்திய வாழ்வுடையார் என்றார். வெறி - வாசனை ; அருட்குண வாசனை என்றார்.

(இ - ள்). எனதுண்மை மலவிமோசன பரமகுருவான சிங்கமே! உனதடிக்கே சீரடியார் சேர்வதற் பொருட்டு தரிசனமே முத்தியென, பொன்னம்பலத்திலே உமையோடும் பாச கோடிகளறுத்து எழுந்தருளி, அவர்கட்கு அநுக்கிரகம் செய்து, அவர்கள் உண்மை பெற்றதைக்கண்டும், அடியேன் அவர்கட்கடிமை செய்யாது, ஏசமானனில்லாத பொதுவாகிய கண்கெட்ட எருது துன்பப்படுவது போலப் படுவதை திருவுளங் காணவில்லையோ? பாவியேன் உயிர் கெடக் காணேனே!—எனவே, உயிர் நித்தியமாதலால் இரட்சிக்க வேண்டுமென அருளியதைக் காண்க.

58. இனி, திருவடியி லன்பில னென்ற (தி. ன.) :—

உலவாக் காலந் தவமெய்தி
[1]யுறுப்பு வெறுத்திங் குனைக்காண்பான்
பலமா முனிவர் நனிவாடப்
பாவி யேனைப் பணிகொண்டாய்
மலமாக் குரம்பை யிதுமாய்க்க
மாட்டேன் மணியே யுனைக்காண்பான்
அலவா நிற்கு மன்பிலே
னென்கொண் டெழுகே னெம்மானே.

(இ - ள்). 'என்பே விறகா யிறைச்சி யறுத்திட்டுப் பொன் போலனலிற் பொரிய வறுத்து' வெகுகாலந் தவஞ்செய்தவர்கள் திருவடி காணுது, வெகு இருடிகள், அலம்வந்து நிற்ப, பாவியான என்னை அன்போடுருகி அகங்குழைய அடிமையாகத் திருவுளப் பிரசாதமாகியும், மலமாயா தேகத்தை விட்டுப் பரமபதமடையாமல் ஞானவொளியே! தேவரீரைக் காணவேண்டுமெனத் திரும்பவும் கருதினேன். அடியேன் கருத்தோவெனில், பரப்பமைந்த தலையன் பாய் இன்புள்ள வல்லவனல்லேன்; எவ்வகைத் திருவடி காண்பேன்? —எனவே அன்பர்க்கே வெளிப்பட்டருள்வனென அருளியதைக் காண்க. (54)

---

57. பொன்னகர் - பொன்னம்பலம். இருள் - பாசஇருள். கண் கெட்ட ஊர் ஏறு - 91ஆம் செய்யுளையும் காண்க. உலவாதே - அழியாமல். உயிர் உலவாதே இங்கு உழல்வேனே என்று கூட்டுக.

58. (பி - ம்). 1. உறுப்பும். உலவாக் காலம் - எல்லையற்ற காலம். உறுப்பு - அங்கங்கள். மலமா குரம்பை - மலமயமான தேகம். மணியே - மணி போன்றவனே! ஞானவொளியே என்பர். அலவா நிற்கும் - துன்புற்று நிற்பேன்; அலவா நிற்கும் அன்புலேன் என்று கூட்டிப் பொருள் கூறுவர் பிறர்.

59. இனி, திருவுளப் பிரசாதத்தாற் றிருவடிசேர வடியேன் வீண்தேகமாயிருந்த—(தி. ன.) :—

மானேர் நோக்கி யுமையாள்
பங்கா வந்திங் காட்கொண்ட
தேனே யமுதே கரும்பின்
றெளிவே சிவனே தென்றில்லைக்
கோனே யுன்றன் றிருக்குறிப்புக்
கூடு வார்நின் கழல்கூட
ஊனுர் புழுக்கூ டிதுகாத்திங்
கிருப்ப தானே னுடையானே.

(இ - ள்). ஞானமான் போன்ற வருட்கண்மை பாகனே! என் போல எழுந்தருளி என்னை ஆண்ட வுள்ளத்தேனே! இன்ப வமிர்தே! ஞானக்கரும்பின் இரதமே! பரமசிவனே! தென்னர் மன்றுள் இறையே! தேவரீர் திருவுளப்பிரசாதக் குறிப்பால் அடியார் நின் திருவடி சேர, நான் புழுப்பொதிந்த மலமூத்திர பாத்திரத்தைப் பொருளென உட்கொண்டேன்! அடியேனடிமை யுடையவனே! இரட்சிக்க வேண்டும்—என வருளியதைக் காண்க. (55)

60. இனி, நாற்றமுள தேகங் காவலானமையைக் கூறும் (தி. ன.) :—

உடையா னேநின் றனையுள்கி
யுள்ள முருகும் பெருங்காதல்
உடையா ருடையாய் நின்பாதஞ்
சேரக் கண்டிங் கூர்நாயிற்
கடையா னேனெஞ் சுருகாதேன்
கல்லா மனத்தேன் கசியாதேன்
முடையார் புழுக்கூ டிதுகாத்திங்
கிருப்ப தாக முடித்தாயே.

(இ - ள்). அநாதியே ஆண்டநாதனே! தேவரீர் திருவடியை நினைந்து உள்ளம் உருகும் பேராசையுடைய வுண்மை யடியார்மீது திருவருளுடையீர்! அவர்கள் உனது திருவடி பெற்றது அடி-

59. கூடு - உடம்பு.

யேன் கண்டும் அவ்வகை யாகாமல், ஊரிலுள்ள நாய்க்கும் பாதுகாப் பானில்லாத நாயானேன்! அன்புருகாதேன்! கல்மனமானேன்! உட்கசி வில்லாதேன்! இவ்வகை யாதொன்று மில்லாதேன்! நாற்ற மூள புழுக்கூட்டைப் பாதுகாக்க விச்சை செய்த முடிவு செய்ததும் திருவுளந்தானே! அடியேன் செய்வகை காணேன்—என அன்பரு ளருளியதைக் காண்க. (56)

61. இனி, திருவடி அருமை தோன்றுது பெண்ணாசையால் கெட்ட தன்மையைக் கூறும் (தி. ன.) :—

முடித்த வாறு மென்றனக்கே
தக்க தேமுன் னடியாரைப்
பிடித்த வாறுஞ் [1]சோராமற்
சோர னேனிங் கொருத்திவாய்
துடித்த வாறுந் துகிலிறையே
சோர்ந்த வாறு முகங்குறுவேர்ப்
பிடித்த வாறு [2]மிவைபுணர்ந்து
கேடென் றனக்கே சூழ்ந்தேனே.

(இ - ள்). தேவரீர் அடியேன் பக்குவம் திருவுளத்தடைத்து, பொய்க்கூட்டை மெய் வீடாகச் செய்வித்த அடியேற்குத் தகு மானதே! முன்னமே சீரடியாரை யடியேன் பொருளெனப் பிடித்தும், என் மனஞ் சோர்விலாது, உள்ளத்திற் கள்ளமை பூண்டு அடிமைத் திறப்பணியை இழந்து, பெண்வலை மோக, அதரத் துடிப்பால், துகில்சோர, முகங்குறுவேர் பொடிப்ப, அவை பொருளெனப் புணர்ந்த கெடுதல் எனக்கே பலிப்புளதே தவிர, திருவருட் குற்றங் காணேன்—என உள்ளக் கருத்தை வெளிப்படுத்தி யருளியதைக் காண்க. (57)

---

60. உள்கி - நினைத்து. மூடை - புலால் நாற்றம். ஆர் - நிறைந்த. முடித்தாய் என்பதற்கு, அவ்வாறு செய்ததும் அவன் அருளே என்று உரை கூறும்.

61. (பி - ம்). 1. சோராமல். 2. இவை புணர்ந்து. முடித்த வாறு - எனக்கு அருள் செய்த விதம். தக்கதே - இகழ்ச்சிக்குறிப்பு சோராமல் - சோர்வடையாமல். சோரன் - கள்ளன். எனக்கு உன் அருள் இருந்தும், அடியார்களே தான் பின்பற்றியும் கீழ்மையான காத லுக்கு ஆளானேனே என்று இரங்கியவாறு வேர் - வியர்வை. புணர்ந்து - கூடி. யான் என்தனக்கே கேடு சூழ்கின்றேன் என்க.

62. இனி, திருவருளாண்ட பெருமையைக் கூறும் (தி. ன.) :-

தேனைப் பாலைக் கன்னலின்
தெளியை யொளியைத் தெளிந்தார்தம்
ஊனை யுருக்கு முடையானை
யும்ப ரானை வம்பனேன்
நானின் னடியே னீயென்னை
யாண்டா யென்ரு லடியேற்குத்
தானுஞ் சிரித்தே யருளலாந்
தன்மை யாமென் றன்மையே.

(இ - ள்). சுவாமி, தேவரீர் அடியார்கட்கு உள்ளத்தில் விளைந்த அன்புத் தேன் ; இன்பப்பால் ; ஆனந்தக் கரும்பி னிரதம் ; தெளிவிற் கண்ட சிவஞான வொளி ; திரி பதார்த்த நிச்சயத் தெளிவுடையாரின் ஊனை உருகுதற் செய்யும் ஆண்டவன் ! மகாதேவன் நின் சந்நிதான விண்ணப்பம் ! வம்பனை நான், தேவரீர் அடியேன் எனத் திருவுளங்கொண்டு அடிமை செய்தால் தகுமோ ? ஒருவன் தானே நகைத்துத் தன்மேற் கருணை வைத்துக் கொண்டவன், அவனுக் கின்பமுண்டாமோ ? அப்படிப்போலவே முடியுமே—எனவே, என்னை அன்பனுக்கி இரட்சிக்க வேண்டுமென அருளிய உண்மை காண்க.

63. இனி, மகவைத் தாய் இரட்சிப்பது போல நாதன் பாது காக்க வேண்டுமென்ற (தி. ன.) :—

தன்மை பிறரா லறியாத
தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை யாண்டையா
புறமே போக விடுவாயோ
என்னை நோக்கு வார்யாரே
யென்னென் செய்கே னெம்பெருமான்
பொன்னே திகழுந் திருமேனி
யெந்தா யெங்குப் புகுவேனே.

---

62. தேன் முதலாக உள்ள உயர் பொருளை ஒத்த நின்னை, என்னை ஆண்டவன் என்று யான் கூறிக் கொள்ளுதல் உனக்கு நகைப்பையே தரும் ; அவ்வாறு இகழ்ந்து நகைத்தேனும் என்னை அருளல் வேண்டும் என்று இரங்கியபடி.

(இ - ள்). தேவரீர் பெருமை, வேருன யாவர்கட்கும் அறி வொண்ணுத முதற்பொருளே ! விண்ணப்பம். அடியேன் நாயினுங் கொடிய பாவி ! [அத்தகைய] புல்லறிவினைக் கருணையால் மகா கேவ லத் தினின்றெடுத்து அடிமைப் படுத்தத் திருவுளங் கொண்ட சுவாமி ! சகல தசையில் பராமுகமானுல், அடியேன் புறம்போனுல், விட்டு விடுவது கருணையோ ? என்னை இரட்சிப்பதற்கு வேறு கடவுளுளரோ ? அடியே னென் செய்வேன் ? என் ஆன்ம ரட்சகரே ! பொன்போலொளிரும் திருமேனி யழகரே ! என் தாயே ! மகவானது வேறிடந் தெரிந்து போமோ ? எனவே இரட்சிக்கக் கடன் பெற்ற வட்கே யாகையால், அடியேனையும் இரட்சிக்க வேண்டும் என இரந்து உண்மை யருளியது எனக் காண்க. (59)

64. இனி, அன்பில்லாத உயிர்க்குக் கருணை அளிக்க வேண்டு மென்ற (தி. ன.) :—

புகுவே னெனதே நின்பாதம்
போற்று மடியா ருண்ணின்று
நகுவேன் பண்டு தோணேக்கி
நாண மில்லா நாயினேன்
நெகுமன் பில்லை நினைக்காண
நீயாண் டருள வடியேனும்
தகுவ னேயென் றன்மையே
யெந்தா யந்தோ தரியேனே.

(இ - ள்). தேவரீர் அடியார் திருச்சபையில், எனதென, அச்ச மில்லாமற் பிரவேசிப்பேன் ! அடியார்கட்குள்ளே நானும் அவர்களைப் போல் தோள் கொட்டி ஆநந்தக் களிப்புறுவேன். எதனுலென்னில், வெட்கமில்லாத நாயானவன், ஆதலால் ; உருகுதலில்லாதவன் ; அன்புளனலேன் ; எவ்வகையேனும், தேவரீரே ! அடியேற்கு உண்மை யநுபூதி அருள வேண்டும். பரிபாக மில்லை யெனத்

---

63. தன்மை - பெருந்தன்மை பிறரால் அறியாத தன்மைத் தலைவர் என்றும் கூட்டலாம், புன்மையேன் - இழிவுடையேன். எந் தாய், என்பதற்கு என்தாயே என்று பொருள் கொள்கின்றார். எந்தை - என்தந்தை.

திருவுளப்பிரசாத முண்டாகாவிட்டால், எந்தாயே! ஐயையோ! இத் தநுகரண போகத்தில் வசியேன்! எனை இரட்சிக்க வேண்டும்— என அருளியதைக் காண்க. (60)

ஏழாம் கொத்து

இத்திருப்பாப் பத்தும் **கரணம் பலவழிச் சென்றுழும், அருள் வழியாகச் செலுத்தும் சிவசத்தி யநுபூதி.**

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

65. இனி, அடிமையை ஆண்டவன் இரட்சிப்பதே நியம மென்ற (தி. ன.) :—

தரிக்கிலேன் காய வாழ்க்கை
சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி யெங்கள்
விடலையே போற்றி யொப்பில்
ஒருத்தனே போற்றி யும்பர்
தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி யெங்க
ணின்மலா போற்றி போற்றி.

(இ - ள்). சுவாமி! அடியேன் குடியிருப்பதான பொய்த்தேக இன்பம் இனிப் பொறுக்க முடிவதில்லை; எல்லா உயிர்கட்கும் சுகங் கொடுக்கும் சங்கரா! அடியேனை இரட்சிக்க! தத்துவ உற்பத்தி

---

64. எனதே - எனக்குச் சொந்தமானதே என்றெண்ணி. நகுவேன் - களிப்புறுவேன். தோள் நோக்கி - தன் தோள்களைக் கொட்டி ஆரவாரித்து, அடியார்களின் ஆநந்தப் பூரிப்படைந்த தோள்களை நோக்கி, ஆடும் இறைவன் தோளழகினை நோக்கி என்று பலவாறுகப் பொருள் கொள்ளலாம். தோள் நோக்கம் என்னும் ஆட்டத்தைச் செய்து என்றும் கூறுவர். நெகும் அன்பு - மனமுருகும் அன்பு. தகுவனே - தகுவனோ? என் தன்மையே - என்ன தன்மையோ? தரியேன் - சகியேன்.

யனே ! இரட்சிக்க ! எங்கட்குண்மையான திண்ணிய பேரின்பமே ! இரட்சிக்க ! சமம் பரம் இல்லாத ஏகப்பொருளே இரட்சிக்க ! மகா தேவனே ! இரட்சிக்க ! மன்றுளாடிய பொருளே ! இரட்சிக்க ! எல்லா உயிர்களினும் பற்றற நிற்கும் நிட்களப்பொருளே ! அடியேனை இரட்சிக்க ! இரட்சிக்க !—எனத் துதித்ததை அன்பாற் காண்க. (61)

66. இனி, திருவடிப் புகலலாது, வேறிட மில்லை யென்ற (தி. ன.) :—

போற்றியோ நமச்சி வாய
புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சி வாய
புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சி வாய
புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சி வாய
சயசய போற்றி போற்றி.

(இ - ள்). தேவரீர் திருவடிக்கோலம் அடியேனை இரட்சிக்க ! பஞ்சாக்கர சதா நடனத் திருமேனியானே ! பொய் மயக்கமுற்றேன் ; அடியேன் ஓலமிட்டும் அபய இரட்சை பராமுகமானால், அடியேனை இரட்சிப்பதற்கு (வேறு) ஓரிடமுமில்லை ; எனவே, சிவனே ! பஞ்சாக்கர சொரூபனே ! இரட்சிக்க ! ஓலம் ! இவ்வகை ஓலத்தினும் அடியேனைப் புறம்பே தள்ளாமல் என்னெளிமை கண்டிரட்சிக்க ! ஓலம். பஞ்சாட்சரப் பொருளே, அடியேற்கு கதி ! திருவடியல்லாது வேறில்லை ! நாதனே ! ஓங்கார எனதுண்மையனே ! தேவரீர் திரு

ஏழாம் கொத்தின் திருவாசகத் திருவுள்ளக்கிடை : காருணியத்திரங் கல் ; சிவனுடைய வெற்றிப் பாட்டிரங்கல்.

65. காயம் - உடம்பு. சங்கரன் - சுகத்தைத் தருபவன். வானம் வீருத்தன் - பரவெளியில் வாழும் பழையோன் ; இங்கு, தத்துவ உற்பத்திபன் என்கின்றார். விடலை - யௌவனன் ; திண்ணிய பேரின்பம் என்றார். சமம் - ஒப்பு ; பரம் - உயர்வு. உம்பர் தம்பிரான் - தேவதேவன் ; மகாதேவன். நின்மலன் - மலரகிதன் ; நிட்களப் பொருள்.

வடிக்கோலம் அடைக்கலம்! இரட்சை! இரட்சை! அடியேனை! என வருளிய கருணையைக் காண்க. (62)

67. இனி, அட்டமூர்த்த சொரூபத்தினைக் கூறிய (தி. ன.) :—

போற்றியென் போதும் பொய்யர்
தம்மையாட் கொள்ளும் வள்ளல்
போற்றிநின் பாதம் போற்றி
நாதனே போற்றி போற்றி
போற்றிநின் கருணை வெள்ளப்
புதுமதுப் புவன நீர்தீக்
காற்றிய மானன் வான
மிரு சுடர்க் கடவுளானே.

(இ - ள்). தேவீர் அடிமை அடியேனை இரட்சிக்க! எவ்வகையென்னில், என்போலியர்களான தேகவின்பக் கிஞ்சிக்கினுமே அடிமை செய்யும் வள்ளல்! எனவே, வரையாதுண்மை அருளும் சுவாமி! அடியேனையும் இரட்சிக்க! தேவீர் திருவடியில் மும்மை வணக்கஞ் செய்தேன். நாதனே! இரட்சி! இரட்சி! இன்னமும் வணங்குதலானேன்! கருணைநிதித் தேனை வின்ப வெள்ளமே! அட்டமூர்த்தமான நாதனே! இரட்சிக்க!—என அருளியதை யன்பாற் காண்க. (63)

68. இனி, சிவன் முத்தித் தரையில் பரமுத்தியருள வேண்டும் என்ற (தி. ன.) :—

கடவுளே போற்றி யென்னைக்
கண்டுகொண் டருளு போற்றி
விடவுளே யுருக்கி யென்னை
யாண்டிட வேண்டும் போற்றி

---

66. புயங்கன் - பாம்பணியையுடையவன். புயங்கம் என்னும் கூத்தினைப் பொருளாகக் கொண்டு இங்கு, 'பஞ்சாக்கர சதா நடனத் திரு மேனியனே' என்றார்.

67. அட்டமூர்த்தம்: 'பூமி, நீர், தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், இயமானன் வருமட்ட மூர்த்தமாம் வாழ்வே' (கந்தர்கலி. 65). கருணை வெள்ளப் புது மது - கருணைநிதித் தேனை இன்ப வெள்ளம், மது - தேன்.

உடலிது கலைந்திட் டொல்லை
உம்பர்தந் தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த
சங்கரா போற்றி போற்றி.

(இ - ள்). சருவான்மாக்களுக்கும் முடிவான முத்தியருளும் நாதனே! இரட்சிக்க! என்னை எளியனெனக் கண்டருளும் சுவாமி! இரட்சிக்க! எல்லா மலப்பற்றும் விட என்னுள் எழுந்தருளி அன்பால் உயிர் உருக்கி அடிமை கொண்டு இரட்சிக்க! இக்காயத்தை அருளால் நீக்கி அதிவிரைவாய்ப் பரமுத்தி இம்மையில் அருளி இரட்சிக்க! ஏது நிமித்தமெனில், உலகத்தை இரட்சிக்கத் திருச் சடையிலே கங்கையைத் தரித்த சங்கரன் ஆனதால் அடிமைக்கு இரங்கி இரட்சிக்க!—என அருளியதைக் காண்க. (64)

69. இனி, பரமசிவனைத் தவிர வேறொருவர்க்கும் அன்பு செய்வதில்லை யென்ற (கி. ஸ.) :—

சங்கரா போற்றி மற்றோர்
சரணிலேன் போற்றி கோலப்
பொங்கரா வல்குற் செவ்வாய்
வெண்ணகைக் கரிய வாட்கண்
மங்கையோர் பங்க போற்றி
மால்விடை யூர்தி போற்றி
இங்குவாழ் வாற்ற நில்லை
னெம்பிரா னிழித்திட் டேனை.

(இ - ள்). தேவரீர் திருவடி யல்லது வேறொரு தெய்வத்தைச் சரணஞ் செய்யேன்; என்னை இரட்சிக்க! அழகு பொருந்திய பாம்பின் படம் போன்ற அல்குலையும் சிவந்த வாயையும், ஒள்ளிய தந்தத்தையும், கருமை நிறத்தையும், வாட்போல் அகன்று குறுகிப் புரண்டு பிரகாசிக்கும் என்னை இரட்சிப்பதாள கண்களையுமுடைய இவ்வழகுடைய தேவி பாகனே இரட்சிக்க! புண்ணிய விடையேறி இரட்சிக்க! இப்பிரபஞ்ச வின்பம் பொறுப்பதில்லை; விட்டு விட்டேன்; சுவாமி! அடியேனை இரட்சிக்க—என அருளியதைக் காண்க.

---

68. விட - எல்லாப் பற்றையும் விடும் வண்ணம். ஒல்லை - விரைவாக. உம்பர் - பரமுத்தியை.

69. கோலம் - அழகிய. பொங்கு - சீறு. அரா - பாம்பு. மால் - பெரிய. இழித்தல் - வெறுத்தல்.

70. இனி, புன்மையன் செய்த குற்றத்தைப் பெரியோர் பொறுப்பதே வழக்கென்ற (தி. ன.) :—

இழித்தன னென்னை யானே
யெம்பிரான் போற்றி போற்றி
பழித்திலே னுன்னை யென்னை
யாளுடைப் பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கை யெல்லாம்
பெரியவர் கடமை போற்றி
ஒழித்திடிவ் வாழ்வு போற்றி
யும்பர்நாட் டெம்பி ரானே.

(இ - ள்). சுவாமி ! 'யான் எனது' என்ப தொழிந்து, தேவரீரே பிரானென்னும் அடிமையை இரட்சிக்க ! இரட்சிக்க ! என்னை யடிமை கொள்ளும் திருவடி யெனத் துதியாதவனை இரட்சிக்க ! எவ்வகை யென்னில், அடிமை செய்த குற்றம் ஆண்டவனே பொறுப்பதென உலகநீதி யாதலால் அடியேனை இரட்சிக்க. இந்தப் பொய்ம்பம்மீக்கி, மகாதேவனே ! இரட்சித்தருள்க !—என அருளியதைக் காண்க. (66)

71. *

எம்பிரான் போற்றி வானத்
தவரவ ரேறு போற்றி
கொம்பரான் மருங்குன் மங்கை
கூறவெண் ணீறு போற்றி
செம்பிரான் போற்றி தில்லை
திருச்சிற்றம் பலவ போற்றி
உம்பரா போற்றி யென்னை
யாளுடை யொருவ போற்றி.

(இ - ள்). எனதுயிர்க்கு ஆண்மநாயகனை நாதனே ! இரட்சிக்க ! தேவர்களில் தற்போதமதமாகித் தேவரீரை மறந்தவர்களை அவரவர்கட்குத் தகுதியான நிக்கிரகமான அநுக்கிரகம் செய்யும் சிங்கமே ! இரட்சிக்க ! வல்லி சாதகக் கொம்பு போலும், சர்ப்பம் போலும் இடையையுடைய பார்வதி சமேதராக, வெண்ணீறு தரிக்கும் சுவாமி இரட்சிக்க ! செம்பொருளாகிய தேவனே இரட்சிக்க ! திருத்தில்லை ஞான நடராசனே இரட்சிக்க ! யாவர்க்கும் மேலானேய்,

70. உன்னை பழித்திலேன் ; யானே என்னை இழித்தனன் என்க. இழித்தனன் - இழிவு வருத்திக்கொண்டேன்.

இரட்சிக்க ! என்னை ஆண்ட ஏகபரப் பிரம்மே இரட்சிப்பாய் அடியேனை !—என அருளியதைக் காண்க. (67)

72. இனி, வலிய ஆட்கொண்ட தன்மையைக் கூறும் (தி. ன.) :—

ஒருவனே போற்றி யொப்பி
லப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி யெங்கள்
கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால்
வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி
தமியனேன் தனிமை தீர்த்தே.

(இ - ள்). ஏகநாதனே ! அடியேனை இரட்சிக்க ! ஒப்புவமை யிலாத தகப்பனே ! இரட்சிக்க ! தேவர்கட்கவர்களைப் போலக் குரு வானவனே இரட்சிக்க ! பச்சை நிறம் போன்ற அம்மைக்கு ஆனந்தக் கொழுந்தே ! இரட்சிக்க ! வலிய காருணியத்தால் அழைத்து என் போத மைவேதனங் கொண்டோய் ! இரட்சிக்க. தேவரீர் திருவடிக் காட்சி கொடுத்திரட்சித்தால் என் சுதந்தர வீனத் துன்பம் தீர்ந்தது —எனவே அருளிப்பாடே வேண்டுவதென அருளியதைக் காண்க.

73. இனி, தலைப்பட்ட அன்புக்கு மேம்பட்ட அன்பின் திறம் கூறிய (தி. ன.) :—

தீர்ந்தவன் பான வன்பர்க்
கவரினு மன்ப போற்றி
பேர்ந்துமெள் பொய்மை யாட்கொண்
டருளிய பெருமை போற்றி

---

71. *இச் செய்யுளுக்கு முகவுரை எழுதப் பெறவில்லை. ஏறு, என்பதற்குக் காட்டிய உரை நயத்தை ஓர்க. வல்விசாதகம் - கற்பகத்தில் படரும் கொடிவகை ; இது வல்லிசாதம் எனவும் படும். சர்ப்பம் போலும் என்றதற்கு மூலத்தில் சொல் இல்லை.

72. ஒருவனே - ஒப்பற்றவனே ! கோமளம் - மென்மை ; அழகு ; இளமை. வாங்கிட - அழைத்திட ; அழைத்துப் போத மைவேதனங் கொண்டோய் என்று பொருள் கூறுவர்.

தனிமை நீக்க வேண்டி வணங்குதல்.

வார்ந்தநஞ் சயின்று வானோர்க்
கமுதமீ வள்ளல் போற்றி
ஆர்ந்தகின் பாத நாயேற்
கருளிட வேண்டும் போற்றி.

(இ - ள்). பெரிய அன்புள்ள, குணவன்புடைய நாயன்மார்கட்கு அவரினும் எளிமை வலிமை காட்டி அருள்வோய் இரட்சிக்க. அடியேன் பசுபோதத்தைப் பதிபோதமாக்கிய பெருமையோய்! இரட்சிக்க! தேவைதைகள் பிழைக்கும் வண்ணம் நஞ்சருந்தி அவர்கட்கு அமிர்தம் ஈந்த வள்ளலோய்! இரட்சிக்க! அபேத அத்துவிதத் திருவடி அடியேனுள்ளத்தில் இருப்பதாக நாயேற்கருளிய சுவாமி! இரட்சிக்க!—என அருளியதைக் காண்க. (69)

74. இனி, ஆதி நடு அந்தமான அளவிறுதி யில்லாத் தன்மையைக் கூறும் (தி ன.) :—

போற்றியிப் புவன நீர்தீக்
காலொடு வான மானாய்
போற்றியெவ் வுயிர்க்குந் தோற்ற
மாகிநீ தோற்ற மில்லாய்
போற்றியெல் லாவுயிர்க்கு
மீறுயீ றின்மை யானாய்
போற்றியைம் புலன்க ணின்னைப்
புணர்கிலாப் புணர்க்கை யானே.

(இ - ள்). பஞ்சபூத அதிட்டான சிவனே! இரட்சிக்க! எல்லா வுயிரும் திருவடியின்றி தேகியாகா; அவற்றிற் பற்றிலாதோய்! இரட்சிக்க. சருவ உயிர்க்கும் சங்கார கர்த்தாவாய் அதினும் தோயாதோய் இரட்சிக்க! அடியேன் ஐம்புலனும் பயன்பட அடிமைப்பணி புரிந்தேனுயினும் அவைக்கு எட்டாதோய்! இரட்சிக்க!—என அருளியதைக் காண்க. (70)

---

73. தீர்ந்த அன்பு - பெரிய அன்பு என்பர். அவரினும் அன்ப என்பதற்குக் காட்டிய பொருள் நயத்தைக் காண்க.

74. தோற்றம் - பிறப்பிடம். புணர்க்கை - தந்திரம்.

எட்டாங் கொத்து

இனி, எட்டாங்கொத்து, பெற்றேர் பயன்பேலப் பெறக்கிடைத்த தில்லையெனப் பேரின்பவீ வாக்குக் கொடுக்கும் சிவசத்தி யனுபூதி.

இத்திருப்பாப் பத்தும், எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

75. இனி, அபேத அத்துவித அன்பு நிலையான (தி. - ன.):—

புணர்ப்ப தொக்க வெந்தை யென்னை
யாண்டு பூண நோக்கினாய்
புணர்ப்ப தன்றி தென்ற [1]போதெ
னின்னை டென்னை டென்னிதாம்
புணர்ப்ப தாக வன்றி தாக
வன்பு நின்க ழற்கணே
புணர்ப்ப தாக வங்க ணாள
புங்க மான போகமே.

(இ - ள்). தேவரீர், திருவடியில் அநாதியே பிரிப்பின்றி அபேத மாய் (நின்றும்), மலவசம்போன்று ஈசனடி யென்பதறியாது கிடந்த என்னை, திருவருள் இரங்கிப் பிரித்தருமை காட்டிக் கூட்டுவதாகத் திருவருள் நோக்கம் செய்தாய்; அப்பிரிவை அடியேன் பக்குவக் குறைச்சலினால் பிரிவிலாமையைக் காட்ட வந்ததல்லாவெனக் கொள்ளாது, ஈசனடியிலிருக்கையிலே ஈசனடி தேடி வேறெனக்கருதி நின்றேன். அவை அடியேனறியாமை யாதலால் திருவுளமிரங்கி, பிரியாமையும் பிரிவொன்றுதலும் பிரியிற்றரியாமையும் ஒருங்கே ஓர் மொழியருளி திருவடியிலன்புளாலுக்கக் கருணை வைத்துப் பழைய செல்வனடியிற் சேர்ப்பதே திருவடி ஞான சிவானுபவ சிவானுபூதிக வபேத வத்துவித வன்பின்பான சித்தாந்தமென வருளியதைக் குரு சம்பிரதாய உபதேச அனுபூதி காண்க. (71)

எட்டாங் கொத்தின் திருவாசகத் திருவுள்ளக் கிடக்கை. ஆனந்தத் தழுந்தல்.

75. (பி - ம்). 1. போது. இங்குக் காட்டப்பெற்றது குரு சம்பிரதாய உபதேச அநுபூதி உரை எனக்கொள்க. இச்செய்யுளுக்கு, கருத்து வேறுபாடின்றி, வேறு வகைகளாலும் பிறர் பொருள் கூறுவர். அவை விரிவஞ்சி விடப்பட்டன.

76. இனி, உயிரை அன்புருவாக்கிய தன்மையைக் கூறும் (தி. - ன.) :—

போகம் வேண்டி வேண்டி லேன்பு
ரந்த ராதி யின்பமும்
ஏக நின்க ழலி ணைய
லாதி லேனை னெம்பிரான்
ஆகம் விண்டு கம்பம் வந்து
குஞ்சி யஞ்ச லிக்கணே
ஆக வென்கை கண்க டாரை
யாற தாக வையனே.

(இ - ள்). சுவாமி! தேவரீர் திருவடி ஞான பரமுத்தியின்றிச் சுவர்க்க போக பரமுந்தியின்பம் அடியேன் விரும்புகின்றதில்லை; வேண்டும் வரம் விண்ணப்பமாவன :—திருவடியை எக்காலமும் பிரியாமையாக அத்துவித அன்பாக எனதுள்ளத்தில் எழுந்தருளி, ஆன்மநாயகனுகி, முற்பிரிவும் இனிப்பிரியாமையும் கண்டு, தேகம் பரவசத்தாற் புளகாங்கிதமுற்று விம்மல் தழுதழுப்புளனுய் ஆனந்த பாட்பம் இருகண்ணீரும், அடைக்குந் தாளிலாதாதலால் ஆறுபோற் புரண்டோடும் வண்ணம், குஞ்சித பாதத்தின் கீழ்க்கும்பிட்டுத் தட்டமிட்டிருப்ப, அடைக்கலமாக வைத்துப் பாதுகாப்பதே வரம்— என அருளியதைக் காண்க. (72)

77. இனி, மேலான வரம் அன்பன்றி வேறிலை யெனக் கூறும் (தி. - ன.) :—

[1]ஐய்ய நின்ன தல்ல தில்லை
மற்றொர் பற்று வஞ்சனேன்
பொய்க லந்த தல்ல தில்லை
பொய்மை யேனை னெம்பிரான்

---

76. புரந்தராதியின்பம் - சுவர்க்க போக பரமுத்தியின்பம். புரந்தரன் - இந்திரன். ஏக - ஒப்பற்ற. கின் கழல் இணை அலாது இலேன். ஆகம் விண்டு - தேகம் பிளந்து; புளகாங்கிதமுற்று. கம்பம் வந்து - நடுக்கமுண்டாகி; விம்மல் தழுதழுப்புளனுய். குஞ்சி அஞ்சலிக் கண்ணே என் கை ஆக. குஞ்சி - தலைமயிர். கண்கள் தாரை ஆறு அது ஆக. குஞ்சி அஞ்சலி என்பதற்குக் குஞ்சித பாதத்தின் கீழே கும்பிட்டு என்று இங்குப் பொருள் கொள்வர்.

மைக லந்த கண்ணி பங்க
வந்து நின்க ழற்கணே
மெய்க லந்த வன்ப ரன்பெ
னக்கு மாக வேண்டுமே.

(இ - ள்). 'மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப்பாதமே யன்றி' யறியேனே. ஒருவன் வைத்த நிதி கவரும் வஞ்சன்போலப் பொய்யுண்மை கருதி இருப்பதானேன். எம்பிரானே! இமைப் படிந்த கண்ணி பங்கனே! தேவரீர் திருவடியில் சத்திய போத சாங்ரு சித்த, அநிய அபேத அன்புள அடியார் பெறுமன்பே அடியேன் வேண்டினேன். அவை கருணை செய்ய வேண்டும்—என வருளியதைக் காண்க. (73)

78. இனி, திருவடி கண்டிறந்தும், பிறவாது பிறந்தாலும், பேரின்பம் பெறுந் தன்மையைக் கூறும் (தி. - ன.) :—

வேண்டு நின்க ழற்க ணம்பு
பொய்மை தீர்த்து மெய்மையே
ஆண்டு கொண்டு நாயி னேனை
யாவ வென்ற ருளுநீ
பூண்டுகொண் டடிய னேனும் போற்றி
போற்றி யென்று மென்று
மாண்டு மாண்டு வந்து வந்து
மன்ன நின்வ ணங்கவே.

(இ - ள்). அடியேன் வேண்டுவது திருவடிக்கன்பு தவிர வேறு பொருளில்லை; கருணை செய்து என் மலபோதப் பொய்யைக் கெடுத்து, அருளின்பமாக, நாயான என்னை, அருளாக்கித் திருவடியில் சேர்த்த நாதனே! அடிமை எக்காலமும் ஆனதால், இரட்சிக்க! இரட்சிக்க! இதன்றியும் இச்சகத்தில் பிறப்பிறப்புளனுய் வந்தாலும், இறவாத பேரின்பம் பெறும் அடிமைப் பணிசெய்ய அருளவேண்டும் —என அருளியதைக் காண்க. (74)

---

77. (பி - ம்). 1. ஐய. மை கலந்த கண்ணி - அஞ்சனம் தீட்டிய கண்களையுடைய உமை. அல்லது இல்லை - ஆம்.

78. பற்று - ஆதாரம். நின் வணங்கவே நின் கழற்கண் அன்பு வேண்டும் எனக் கூட்டுக. அன்பு - அடிமைப்பணி.

79. இனி, திருவடி நீங்காத பேரன்பினைக் கூறும் (தி. - ன.) :-

வணங்கு நின்னை மண்ணும் விண்ணும்
வேத நான்கு மோலமிட்
டுணங்கு நின்னை யெய்த லுற்று
மற்றெ ருண்மை யின்மையின்
வணங்கி யாம்வி டேங்க ளென்ன
வந்து நின்ற ருளுதற்
கிணங்கு கொங்கை மங்கை பங்க
வென் கெலோ நினைப்பதே.

(இ - ள்). தேவரீர் திருவடியை வானிலுள்ள நாராயணன் முதலியோரும், மண்ணிலுள்ள மனு முதலியோரும், நான்கு வேதமும், வணங்கியும் கூப்பிட்டும் காணாது வாடி மயங்கி நிற்ப, அடியேன் எளிதாகவே திருவடி ஞானம் பெற்றமையான், வேறுண்மை இல்லாததால், அடிமைப்பணி விடாது நிற்ப, எனது உயிர்க்கிரங்கி அணுக்கிரகம் செய்ய வேண்டும். முதிராவிளமுலைப் பாவையுடன் கலந்தருளும் அர்த்தநாரீசுவரனே ! திருவருளாலாது நினைப்பது எவ்வண்ணம்?—எனவே, அவனருளால் அடிமை யாவதென அருளியதைக் காண்க. (75)

80. இனி, திருவடி யாவராலும் அறிதற்கருமை யென்ற (தி. - ன.) :—

நினைப்ப [1]தாவ சிந்தை செல்லு
மெல்லை யேய வாக்கினுல்
தினைத்த னையு மாவ தில்லை
சொல்ல லாவ கேட்பவே
அனைத் துலகு மாய நின்னை
யெம்பு லன்கள் காண்கிலா
எனைத்தெ னைத்த தெப்பு றத்த
தெந்தை பாத மெய்தவே.

---

79. ஓலமிட்டு வணங்கும் உணங்கும் என்க. என் கொலோ நினைப்பது என்பதற்கு, இவ்வுரை 'யாம் வேறு எதனை நினைக்கக்கூடும்' என்று கூறுகிறது. பிறர் இதனைக் கடவுள் மீது சார்த்தி உரை கூறுவர்.

(இ - ள்). தேவரீர் திருவருட் பெருமை அடியேன் சிந்திக்க மனத்துக்கெட்டாதே. பெரியோர்பால் கேட்பத் தினையளவும் அன்பு கூடவில்லையே ! எவ்வகைப் பெறுவேன் ? அகண்டாகார சச்சிதானந்தப் பொருளாய் நின்றும் பஞ்சவிந்திரியப் புலனுள் தரிசனமில்லையே? ஆனதால் எங்ஙன் இருந்ததென்று எவ்வண்ணம் சொல்லுகேன் ! எனதப்பனே ! சீர்பாதம் பெற ?—எனவே எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்கு ' இங்கே யென்று ' அருள் செய்யும் நாதனென அருளிய வண்மை காண்க. (76)

81. இனி, ஆன்ம சுதந்தர வீனத்தைத் தெரிவிக்கும் (தி. - ன.) :—

எய்த லாவ தென்று நின்னை
யெம்பி ரானிவ் வஞ்சனேற்
குய்த லாவ துன்க ணன்றி
மற்றெ ருண்மை யின்மையிற்
பைத லாவ தென்று பாது
காத்தி ரங்கு பாவியேற்
கீத லாது நின்க [1]ணேறும்
வண்ண மில்லை யீசனே.

(இ - ள்). தேவரீர் திருவடி பெறுவது, என தான்ம ரட்சகரே ! எக்காலம்? தேவரீரை யல்லாது, பொய்யுண்மையனை இரட்சிப்பதற்கு வேறெருரு கடவுளருமுளரோ ? அத்தேவர்களை உண்மை கொள்வனே ? ஆதலால் திருவடிக்கன்புசெய அறிவிலாதவனை ஆண்டவனே ! இரட்சிக்க இரங்கவே வேண்டும். அப்படிக் கருணை செய்யாவிடில் அடியேற்கு எவ்வகைச் சுதந்தரமுண்டு? யாதொன்றும் காணேன் ! ஈசனே !—என அருளியதைக் காண்க. (77)

---

80. (பி - ம்). 1. தாக. இச்செய்யுளுக்குப் பிறர் பிறவாறு பொருள் கூறுவர்.

81. (பி - ம்). 1. ணென்றும். எய்தல் - பெறுதல். என்று - எக்காலம். உய்தல் - உஜ்ஜீவித்தல். பைதல் - துன்பம். ஈது அலாது நின் கண் எறும் வண்ணம் இல்லை. வண்ணம் - வகை.

82. இனி, அடிமைப் பணியன்றி வேறு சிவப்பேறில்லை யென்ற (தி. - ன.) :—

ஈச னேநீ யல்ல தில்லை
யிங்கு மங்கு மென்பதும்
பேசி னேனெஞ் சேத மின்மை
பேதை யேனை னெம்பிரான்
நீச னேனை யாண்டு கொண்ட
நின்ம லாவொர் நின்னலால்
தேச னேயொர் தேவ ருண்மை
சிந்தி யாது சிந்தையே.

(இ - ள்). நாதனே ! தேவரீரை உள்ளென்றும் புறமென்றும் இரண்டிடத்தும் வியாபகப் பொருளென்றும், வாசகத்தால் அள வளாவிஞ பேதைமையுடைய னுதலால், எனது ஆன்மநாதன் அவை கண்டு, 'எல்லாச் சென்மத்துக்கும் கடையன் இவன் ; எவ்வகைத் திருவடி சேர்வான்' என{இரங்கி அடிமை காட்டிய நிட்கள சிவனே ! தேசோரூபனே ! வேறொரு தெய்வ முண்டென உட்கொளேன்—என அருளியதைக் காண்க. (78)

83. இனி, உள்குவார் உள்ளப்பொருள் என்ற (தி. - ன.) :—

சிந்தை செய்கை கேள்வி வாக்குச்
சீரி லம்பு லன்களால்
முந்தை யான கால நின்னை
யெய்தி டாத மூர்க்கனேன்
வெந்தை யாவி ழுந்தி லேனென்
உள்ளம் வெள்கி விண்டிலேன்
எந்தை யாய நின்னை யின்ன
மெய்த லுற்றி ருப்பனே.

(இ - ள்). தேவரீர் திருவடியைச் சிவஞானத்தால் சிந்தித்து, அருட்பணி அங்கத்தால் செய்து, திருத்தொண்டின் பெருமையைப் பெரியோர்பால் கேட்டபடியே துதித்து, ஐம்பொறியான புலன்களை

---

82. சொற்களால் அளவிடற்கரிய சிறப்பினையுடையனைச் சில சொற்களாற் பேசிய குற்றம் என்று கொள்க. 'பேதமின்மை'—பாகு படுத்திப் பேசத்தக்கவனல்லன் என்றதைக் குறித்தவாறு.

சிர்பாதத்தில் செலுத்தி இவ்வகை செய்யாமல் அநாதியே இவ்வகை ஒன்றும் தெரியாத மூடனான நான், அக்கினியிலே தகனப்பட்டே னல்லேன். குருவே! கீழே விழுந்தேனல்லேன்! எனதுள்ளம் வெட்கி ஒருவருடன் சொல்லாது நின்றேன். எனதப்பனே! இன்ன மும் திருவடிபெற நினைந்திருந்தேன்—எனவே, துணியாது துணிந்த கருத்தென நொந்ததென அருளியதைக் காண்க. (79)

84. இனி, தன்னை விட்டுத் திருவருள் பிரிந்த அருமையைக் கூறும் (தி. - ன.) :—

இருப்பு நெஞ்ச வஞ்ச னேனை
யாண்டு கொண்ட நின்ன தாட்
கருப்பு மட்டு வாய்ம டுத்தெ
னைக்க லந்து போகவும்
நெருப்பு முண்டி யானு முண்டி-
ருந்த துண்ட தாயினும்
விருப்பு மூண்டு நின்க ணைன்க
ணைன்ப தென்ன விச்சையே.

(இ - ள்). திணிந்த இரும்பு போன்ற பொய்மை யுடையேனை அடிமை கொண்ட தன்றியும், தேவரீர் திருவருளானது கரும்பின் இரதமென வாயிற் கலப்ப, அவ்விரதம் சுவைப்பித்தால் கசந்தது போல உட்கொள்ளாத என்னைப் பிரியவே, அவனைக் கண்டும் அவ் விடத்தில் அக்கினியும் அடியேனும் இருந்தேனே! இவ்வகைத் துணிவுடையேன். தேவரீர் திருவடியில் ஆசையுற்றேன் என்ற வித்தைக்கு நானென் சொல்வேன்! என அருளியதைக் காண்க. (80)

---

83. விண்டிலேன் - வெடித்திலேன் என்றும் பொருள் கொள்வர்.

84. இச்செய்யுளிலுள்ள சொற்களைப் பிரித்துக் கூட்டிப் பொருள் சொல்வதில் பலர் பலவிதமாகச் சென்றிருக்கின்றனர். 'யானும் உண்டு; இருந்தது உண்டு' என்றும், 'யானும் உண்டிருந்தது உண்டு' என்று பிரிப் பாரும்; 'என்ன விச்சையே,' என்றும், 'என் அவிச்சையே' என்று பிரிப்பாரும் உளர்.

'என்னைக் கலந்து போகவும்' என்பதற்கு இவ்வுரை காட்டும் கார ணம் கவனிக்கத்தக்கது. 'அக்கினி திருக்குளத்தில் காண, நான் அத னிடம் விழுந்து முத்தி பெறுமல் நின்றேனே' என்றபடி.

ஒன்பதாங் கொத்து

இனி, ஒன்பதாங்கொத்து, கொடுத்த வாழ்வெல்லாம் பேரின்பமே என அருளும் சிவசத்தி அநுபூதி.

இப்பாப் பத்தும் கலிநிலைத் துறை.

85. இனி, சீரடியாரனைவோரும் திருவடி சேரத் தான் தனிமையுற்ற (தி. - ன.) :—

விச்சுக் கேடுபொய்க் காகா தென்றிங் கெனைவைத்தாய்
இச்சைக் காளு ரெல்லாரும் வந்துன் ரூள்சேர்ந்தார்
அச்சத் தாலே யாழ்ந்திடு கின்றே ளுருரெம்
பிச்சைத் தேவா வென்னுன் செய்கேன் பேசாயே.

(இ - ள்). இவ்வுலகத்திலே பொய்க்கேடான வித்து பரிபாகமாக என்னை இப்பூமியில் வைத்து, தேவரீர் திருவுளப்பணி செய்யும் அடியார்கள் திரும்ப வாராது பரகதி ஆளுர்கள். அடியேனே வெனில், தேவரீர் ஆண்ட வியல்பை மெய்யென அநுபூதி பெருமல் சம்சய முற்றபடியால் இம்மாயை வசமானேன். திருவாரூர் வாழும் பிச்சாடனத் தியாகராசனே! அடியேன், என் செயலாலாவதென்ன! நாதனே! திருவாய் மலர்ந்தருளாவிடில் கதியில்லை—என வருளியதைக் காண்க. (81)

ஒன்பதாங் கொத்து, திருவாசகத் திருவுள்ளக்கிடக்கை :—ஆனந்த பரவசம்.

85. பொய்க்கு விச்சுக்கேடு என்று பிரித்துக் கூட்டிப் பிறர் பொருள் கொள்வர். இவ்வுரை பொய்க்கேட்டின் வித்து என்று கொண்டு கூறியதன் நயம் கூர்ந்து நோக்கி இன்புறத்தக்கது. இவ்வாறு மாணிக்க வாசகரை மட்டும் உலகில் வைத்தது 'பரிபாகமாக' என்கினரூர். அவருடைய பரிபாகமாகவேனும், உலகத்தின் பரிபாகவாகவேனும் கொள்க. பிற்கருத்து அடிகள் கொண்டிருத்தல் கூடாதேனும், உண்மை அவ்வாறிருத்தலே ஓர்க. அச்சம் என்பதற்குச் சமுசயம் என்று பொருள் கொள்ளப் பெற்றிருக்கிறது.

86. இனி, சிவனடியாரெனை உலகத்துள்ளார் அஃறிறுவ தான செய்தியைக் கூறும் (தி. - ன.) :—

பேசப் பட்டே னின்னடி யாரிற் றிருநீறே
பூசப் பட்டேன் பூதல நாலுன் னடியானென்
றேசப் பட்டே னினிப்படு கின்ற [1]தன்மையால்
ஆசைப் பட்டே னுட்பட் டேனுன் னடியேனே.

(இ - ள்). சிரடியார் என்னையும் அடியாரெனைப் பேசப் பரிபாக முற்றேன். அச்சபையார் காணப் பரையொளியாகிய விபூதி தாரணந் தரிக்கப் பெற்றேன் ; அவையார் திருவேடம் பூணவே, உலகத்தார் பித்தனெனப் பழி பேசவுள்ளானேன். இனி எல்லாரும் துன்ப முறுவதாதலால், தேவரீர் திருவடியிலாசையுற்று அடிமையானேன். என்னுண்டவனே !—எனவே வேறு கதி இல்லை யென வருளியதைக் காண்க. (82)

87. இனி, சிரடியார் போல அடிமை யாமேனு வென்ற (தி. - ன.) :—

அடியே னல்லேன் கொல்லோதானெனை யாட்கொண்
[டிலகொல்லோ
அடியா ரானு ரெல்லாரும் வந்துன் னுள்சேர்ந்தார்
செடிசே ருடல மிதுநீக்கமாட்டே னெங்கள் சிவலோகா
கடியே னுன்னைக் கண்ணுரக் காணுமாறு காணேனே.

(இ - ள்). தேவரீர் திருவடிக்காட் செய்யப் பரிபக்குவ மில்லாதே போனால், ஆளக்கடமை இல்லையோ ? வேறெருவருண்டோ ? சிரடியார் அனைவோரும் பரகதி யடைந்தார்கள். அடியேனுவெனில், குற்றமுள்ள இத்தேகத்தை நீக்க அடியனுற் கூடுமோ ? சிவலோக நாயகனே ! பேயேனுனவன் திருவடி காணக் கிட்டுமோ ? நாதனே ! என் செய்வேன்—என அருளியதைக் காண்க. (83)

---

86. (பி - ம்). 1. தமையாதால். 'நின் அடியாரிற் பேசப்பட்டேன்' என்றதற்கு 'உன் அடியார்களால் சொல்லப்பட்டேன்' என்றும், 'உன் அடியார்களுள் ஒருவனுகப் பேசப்பட்டேன்' என்றும், 'உன் அடியாரைப் போலப் பேசப்பட்டேன்' எனவும், பிறவாறும் பிறர் பொருள் கூறுவர். பூதலர் - உலகத்தார். 'இனிப்படுகின்றதமையாதால்' என்ற பாடத்தையே பிறரெல்லோரும் கொண்டு பொருள் கூறுவர்.

87. செடி - குற்றம் ; பாவம். கடியேன் - கொடியவன் ; பேயன்.

88. இனி, பரமகுருவைக் கண்டும் வீணட்கழித்த தன்மையைக் கூறும் (தி. - ன.) :—

காணுமாறு காணேனுன்னே யங்காட் கண்டேனும்
பாணே பேசி யென்றன்னைப் படுத்ததென்ன பரஞ்சோதி
ஆணே பெண்ணே யாரமுதே யத்தாசெத்தே போயினேன்
ஏணி ணில்லா நாயினே னென்கொண்டெழுகே
[னெம்மானே.

(இ - ள்). தேவரீர் திருவடியைப் பசு போதத்தால் காணபதில்லையே. அநாதியே உன்னைப் பரமகுருவாய்த் தரிசித்த போது, என்னைப் போல வெண்ணி, பொழுது போகப் புறங்கணிப்பாகப் பேசிக் கெடும்படி. யருளியது என் விதியே. மேலான நிட்களச் சோதியானவனே! பெண் ஆணனவனே! அமிர்தப் பிழம்பே! என்னப்பனே! அடியேன், இவ்வகை வழக்கால், சவமாய்ப் போனேனே! ஆகில் உயிரென உற்பத்தியுள்ளவர்களுக்குச் சுதந்தரமுண்டோ? எவ்வகை ஆளாவேன்! நாயேன் :—எனவே (நான்) சிவவபச் சிவனேயல்லாத் தனிப்பொருளல்லன் என அருளியதைக் காண்க. (84)

89. இனி, சிறியேன் செய்பிழை பொறுத்தல் வேண்டுமென விண்ணப்பிக்கும் (தி. - ன.) :—

மானேர் நோக்கி யுடையாள் பங்கா
மறையீறறியா மறையோனே
தேனே யமுதே சிந்தைக்கரியாய்
சிறியேன் பிழைபொறுக்கும்
கோனே [1]சிறிதென் கொடுமைபறைந்தேன்
சிவமா நகர்குறுகப்
போனை ரடியார் யானும்பொய்யும்
புறமே போந்தோமே.

---

88. பாணேபேசி - பாழேபேசி ; புறங்கணிப்பாகப் பேசி என்பது இவ்வுரை. படுத்தது - கெடுத்தது. அத்தா - தகப்பனே! ஏண் - வலிமை ; உயர்ச்சி. ஏண் ஆணில்லா நாயேன் என்று பிரித்துக் கொண்டனர் ; ஏண் நாணில்லா நாயேன் என்று பிரிப்பர் பிறர். ஆண் - சுதந்தரம் ; நாண் - நாணம்.

(இ - ள்). மான் போன்ற திருநோக்கமுடைய அம்மைக்கு வாம பாகம் அளித்த நாதனே ! வேத முடிவிற் காணுது (நிற்கும்) மறைப் பொருளோய் ! அன்புத்தேனே ! இன்பவமிர்தே ! சிந்தனைக் கெட் டாத சிவமே ! அடியேன் செய்யும் பிழை அநேகத்தையும் பொறுக் கும் நாதனே ! அடியேன் (படும்) கொடுமை சிலவற்றைச் சந்நிதான த்தில் விண்ணப்பம் செய்தேன். சிவனடியர் சிவபுரம் சேர்வதானுர்கள். அடியேனும் எனதுண்மை மலபோதமான யானெனதென்ற பொய்யும் புறமானேம் ; என் செய்வேன் !—என அருளியதைக் காணுக. (85)

90. இனி, திருவடிக் கன்பே யின்பென்ற (தி. - ன.) :—

புறமே போந்தோம் பொய்யும் யானு மெய்யன்பு
பெறவே வல்லே னல்லா வண்ணம் [1]பெற்றேனியான்
அறவே நின்னைச் சேர்ந்த வடியார் மற்ருன் றறியாதார்
சிறவே செய்து [2]வழுவாது சிவனே நின்ருள் சேர்ந்தாரே.

(இ - ள்). சத்தியபோத சிவசன்னிதானப் பெருமை விலாச மணுகாது, யானெனதென்ற விருவகைப் பற்றும், அவை யுண்மை யான உயிரும் புறமானதுமன்றி (யான்) மெய்ஞ்ஞானம் பெற உரித்தல்லேன் : பேறுளதோ, திருவடி ஞானமன்றி ? சருவசங்க நிவிர்த்தியுடைய சிரடியார் திருவடியன்றி மற்ருென்றறியார்கள் ; ஆனதால் அவர்களை மலம் அணுகாவண்ணம் வழுவாது சீர்ப்புள் ளாகப் பாதுகாத்து, பரமசிவனே ! தேவரீர் திருவடி சேர்ந்தார்களே ! அடியேன் என் செய்வேன் ! பற்றுடையேன் !—என வருளியதைக் காண்க. (86)

---

89. (பி - ம்). 1. *சிறிதே. கேர் - போன்ற. மறையோன், அந் தணன் என்றும் ஆம். பறைந்தேன் - கூறினேன்.*

90. (பி - ம்). 1. *பெற்றேன்யான். 2. வழிவந்து. பொய், இங்கு இருவகைப் பற்றென்று கூறப்பட்டது. அல்லாவண்ணம் பெற்றேன் - மெய்ம்மையல்லாத நிலையைப் பெற்றேன். சிறவு - சிறப்பு ; சீர்ப்பு என்று இங்கு உரை எழுதப் பெற்றுள்ளது.*

91. இனி, திருவடிக்கன்பில்லாத அன்புடையே னென்ற (தி. - ன.) :—

தாரா யுடையா யடியேற் குன்ரு ளிணையன்பு
பேரா வுலகம் புக்காரடியார் புறமே [1]போந்தேனியான்
ஊரா [2]மிலைக்கக் குருட்டா [3]மிலைத்திங் குன்ரு ளிணையன்புக்
காரா யடியே னயலே மயல்கொண் டழுகேனே.

(இ - ள்). சுவாமி! அடியேன் பேரில் கருணை செய்து அன்பு அருள வேண்டும். சீரடியார் நித்திய முத்தி வீடடையக் கண்டேன். யானே புறமானேன். அஃது எவ்வகை யென்னில், ஊரிலுள்ள பசுக்கள் தன்கன்றிருக்கு மிடமறிந்து சேர, கண்கெட்ட பசு கன்றெதுவென ஓரிடமும் தெரியாது மயங்குவது போலத் தேவரீர் திருவடி எவ்விடமோ என்போக்குணர்வினுலே புறந்தேடி அகப்படாது அம்மயக்கத்தால் அழுவனே யொழிய, என் செய்வேன்?— எனவே திருவருள் காட்டக் காணவேண்டுமென அருளியதைக் காண்க. (87)

92. இனி, சீரடியார் அடி சேராது பழுதான பெண்ணுசை யுற்ற (தி. - ன.) :—

அழுகே னின்பா லன்பா மனமா யழல்சேர்ந்த
மெழுகே யன்னர் மின்னர் பொன்னர் கழல்கண்டு
தொழுதே யுன்னைத் தொடர்ந்தா ரோடுந் தொடராதே
பழுதே பிறந்தே னென்கொண் டுன்னைப் பணிகேனே.

(இ - ள்). தேவரீர் திருவடியான பேரின்ப சுகத்தைக் கருதி அன்பால் எப்போது கிடைக்குமென அழேன். என் மனம் (வேறு)

---

91. (பி - ம்). 1. போக்தேன்யான். 2. மலைக்க. 3. மிலைத்தங் குன்; மிலைத்தாங்குன்; மலைத்திரங்கு. தாராய் - கொடுத்தருள்வாய். உன் தாள் இணை அன்பு தாராய் என்க. பேரா உலகம் - மீளா உலகமான வீடு. யான் புறமே போந்தேன். ஊர் ஆ - ஊரிலுள்ள பசுக்கள். மீலைக்க - கனைக்க. 'எப்படி யூரா மிலைக்கக் குருட்டா மிலைக்கு மென்னும்' (திவ். இயற். திருவிருத். 94) 'கோவுடனே கூடியதோர் குருட்டாவும் ஊர புகுதும்' (திருத்தொண்டர் புராண வரலாறு 10). இவ்வுரை, சேர என்று பொருள் கூறும். மிலைதல் - மயங்குதல் 'மிலைத்தலைந்தேனை' (திருவாச. 6, 40).

என் செய்யும் என்னில், அன்னம்போல நடையும், மின்போல இடையும், பொன்போல் அழகுமுள்ள பாதம் கண்டவுடன் அவற்றின் மீதுள்ள மோக விகாரத்தால் அழல் சேர்ந்த மெழுகுபோல் உருகுவதன்றி திருவடியைத் தொடர்ந்தன்பு செய்யும் அடியருடன் சேர்ந்தடிமைப்பணி செய்யாது. வீணுடலெடுத்து விருதாவானேனே! சுவாமி! எவ்வண்ணம் உன் பணி செய்யப் போகிறேன்—என இரந்தருளிய தெனக் காண்க. (88)

93. இனி, விரைவிலே திருவருள் வேண்டுமென்ற (தி. - ன.):

பணிவார் பிணிதீர்த் தருளிப் பழைய வடியார்க்குன்
அணியார் பாதங் கொடுத்தி யதுவு மரிதென்றுள்
திணியார் மூங்கி லனையேன் வினையைப் பொடியாக்கித்
தணியார் பாதம் வந்தொல்லை தாராய்பொய்தீர் மெய்யானே.

(இ - ள்). தேவரீர் திருவடிக்கடிமை செய்யும் சீரடியார்கள் பிறவிப் பிணியை நீக்கி அனுக்கிரகித்துப் பழம் செல்வமான திருவருள் நல்கியது பிரயாசமன்று. அவை சகசவுண்மை; அரிதான கருணை. எவையென்னில் கெட்டியான கல்மூங்கிலைப்போன்ற என் மனதைப் பொடியாக்கி அவையாலுண்டாகிய வினையை அறுத்துக் குளிர்ந்த திருவடி விரைவிலே அனுக்கிரகம் செய்வதே பற்றில்லாத திருமேனியுடைய மெய்கண்ட நாதனே அரிதான கருணை யென வருளியதைக் காண்க. (89)

---

92. இச்செய்யுளுக்குப் பிறரெல்லாம் வேறு விதமாகப் பொருள் வர். 'மின்னுர்.....கழல்' என்பதற்குச் சிவபெருமானின் திருவடி யென்று பொருள் கொண்டு, உண்மை அடியாரோடு தொடராதே பழுதே பிறந்தேன் என்று கூறி முடிப்பர். மனம் அழல் சேர்ந்த மெழுகே ஆ, நின்பால் அழுகேன் எனக் கூட்டுக.

93. பணிவராகிய பழைய அடியார் என்க. இவ்வுரை பழைய பாதம் என்று கூட்டிப் பழம் செல்வமான திருவருள் எனறு கூறுகிறது. திணியார் மூங்கில் - கெட்டியான கல்மூங்கில்; இயல்பிலே வலிவுள்ள மூங்கில் என்றும் பிறர் பொருள் கூறுவர். 'திணியார் மூங்கிற் சிந்தையேன்' (பிரார்த். 8) என்பர் பின்னும். ஒல்லை - விரைவாக.

94. இனி, திருவடி பெறுவது எத்தவத்தாலு மில்லை. உள்ளன்பால், அழுதால் பெறலாமென்ற (தி. - ன.) :—

யானே பொய்யென் னெஞ்சும் பொய்யென் னன்பும்பொய்
ஆனால் வினையே னழுதா லுன்னைப் பெறலாமே
தேனே யமுதே கரும்பின் றெளிவே தித்திக்கும்
மானே யருளா யடியே னுனைவந் தடுமாறே.

(இ - ள்). சுவாமி! அடியேன் மலபோத ஞானதால் அவையாலுளதாகிய யானென்ற செருக்குப்பொய்; அவை யுள நெஞ்சும் பொய். அவையாற் செய்யும் அன்பும் பொய்யே. முழுதும் பசுக்குணமானால், அடியேன் கதியடைவதற்கு ஏது ஒன்றும் இலையோ வெனில், ஒன்றுண்டு விண்ணப்பம், நாதனே! இருவினையேன், உன் அருளால் அன்புருகி இடையருது அழுவேனானால், நீ இரங்கியருள்வாய். தேவரீரோ அடியாருள்ளத்தேனே! அவராற் புசிக்கப் படும் அமிர்தே! கன்னலின் சுவையே! நினைதொறுங் கருத்தில் தித்திக்கும் பெருமையனே! அடியேனைத் திருவடி சேர அனுக்கிரகம் செய்வாய்—என அருளியதைக் காண்க. (90)

பத்தாங் கொத்து

இனி, பத்தாங்கொத்து, நோத்திரம் செய்யவும், மனமுருகவும், பேரின் பத்தைப் பெறவும், பாசத்தன்மை நீங்கவும், யானெனதென்பதறவும், இன்பசுகம் கிடைக்கவும், அனுக்கிரகமே வரமென்று உணர்த்தும் சிவசத்தி யனுபூதி.

இத்திருப்பாப் பத்தும் எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

95. இனி, மண்ணிலே வந்த பிறவியே இன்பமெனக் கொள்ளாது, கீழானது என்ற (தி. - ன.) :—

மாறி லாதமாக் கருணை வெள்ளமே
வந்து முந்தினின் மலர்கொ டாளினே
வேறி லாப்பதப் பரிசு பெற்றகின்
மெய்மை யன்பருன் மெய்மை மேவினர்

---

94. மான் - மதான் என்பதன் சிதைவு. அடியேன் உனை வந்து மாறு அருளாய் எனக் கூட்டுக.

ஈறி லாதநீ யெளியை யாகிவந்
தொளிசெய் மானிட மாக நோக்கியும்
கீறி லாதநெஞ் சுடைய நாயினேன்
கடைய னுயினேன் பட்ட கீழ்மையே.

(இ - ள்). அன்று முதலின்றளவும் வற்றுது முற்றுது பெருகிய கருணை வெள்ளமேயாக, பரமகுருவாய், எழுந்தருளியது கண்டு, முன்னே தேவரீர் திருவடிக் கபேத வத்துவித அன்பு செய்து சத்திய போத மெய்யடியார் அப்போதத்தில் உடனடங்கி அத்திருவடி சேர்ந் தார்கள். அடியேனே சுவாமி விண்ணப்பம். தேவரீர் அடியேன் பொருட்டுச் சகளீகரித்து உடலுக எழுந்தருளி, முடிவிலாத நாதனே ! என் கருத்து முடியும் வண்ணம் இன்பப் பிறவியும் நல்கி, இத்தேகம் திருவருட்பணிக்காகத் திருவருணேக்கம் செய்தும், அடியேன் மன முருகாத வன்மையனுயினேன். அவை திருவருட் குற்றமல்ல ; நாயினும் கடையனுனதால் எனது கீழ்மை ; என வருளியதைக் காண்க. (91)

96. இனி, அடியேன் அறியாமையான குணமுடையனேனும் என்னைத் திருவருள் விட்டுப் போவது நீதியன்றெனக் கூறிய (தி. - னை.) :—

மையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலால்
அரியை யென்றுனைக் கருது கின்றிலேன்
மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
மெய்ம்மை யன்பருன் மெய்மை மேவினர்
பொய்யி லங்கெனைப் புகுத விட்டுநீ
போவ தோசொலாம் பொருத்த மாவதே.

இக்கொத்தின் திருவுள்ளக்கிடை—ஆனந்தாதீதம்.

95. (பி - ம்). 1. மானுடம். முந்தி - முன்னே. வேறிலாப்பதம் - அபேத அத்துவிதம். மெய்மை மேவினர் - மெய்ப்பொருளாகிய திருவடி யடைந்தார். ஒளிசெய் மானிடமாக, எளியையாகி வந்து நோக்கியும் என்று அமைக்க. கீறிலாத - பிளவுபடாத ; உருகாத.

(இ - ள்). மைப்படிந்த கண்ணுளான சத்தி பாகனே ! அவ்வடிவாக வெழுந்தருளி மெய்ஞ்ஞான போதம் காட்டி அடியேன் அனுபூதி பெற்ற பின்னும், அவ்வனுபவ அருமை யுரிமை அன்படிமை தெரியாது குழந்தைகள் கையிலகப்பட்ட சொர்ணபாத்திர அருமை காணாது, மண்ணிலுலான எல்லாப் பாத்திரங்களுடன் இதுவும் ஒன்றென எண்ணினது போலவே, நாதனே ! எண்ணிக் கெட்டுப் போனேன். சீரடியார்களோ திருவடி சேர்ந்தார்கள். மெய்ப்போதத் தால் ; அடியேனை இம்மாயையில் விட்டு முழுதும் அதுவாய்ப்போக, சுவாமி எழுந்தருளியதென்ன சம்பந்தமோ அறியேன் !—என வருளியதைக் காண்க. (92)

97. இனி திருவருட் சத்திய ஞானமில்லாதே போனலும் திருக்கண்ட அடியேன் கண்ணுக்குத் தீங்குளவோ வென்ற (தி. - ன.) :—

பொருத்த மின்மையேன் பொய்ம்மை யுண்மையேன்
போத வென்றெனைப் புரிந்து நோக்கவும்
வருத்த மின்மையேன் வஞ்ச முண்மையேன்
மாண்டி லேன்மலர்க் கமல பாதனே
அரத்த மேனியா யருள்செ யன்பரும்
நீயு மங்கெழுந் தருளி யிங்கெனை
இருத்தி னுய்முறை யோவெ னெம்பிரான்
வம்ப னேன்வினைக் கிறுதி யில்லையே.

(இ - ள்). சைவ சம்பந்த அத்துவிதக் காட்சியுடையேனல்லேன் ; கேவலாதீதமே யுண்மை யுடையவன் ; இவ்வகை அறிவிலாத பாவியேன் திருவடி சேரத் திருநோக்க இரட்சை செய்யும் கருணையில் எவ்வளவேனும் நம்பொருட்டல்லவோ திருமேனி (எழுந்தருளியது) என வருத்தமுற்றிலேன் எதனுல் என்னில், பொய்ப் போதனுதலால் அவை கண்டு மாளாதே போனேன். செந்தாமரை மலர்போன்ற ஞானபாதனே ! அக்னி வடிவுடையாய் ! தேவரீரால் கிருபைபெற்ற சீரடியாரான திருக்கூட்ட வன்பர்களும் திருவுத்தர

---

96. மை - அஞ்சனம். மழ - குழந்தை 'மழக்கை யிலங்கு பொற் கிண்ணம்' (இலக்கணக்கொத்து பாயிரம் 11). அரியை - நீ அரியவன் என்று. மெய்மை மேவினர் - மெய்ப்பொருளாகிய உன் திருவடி சேர்ந் தார்கள். பொய்யில் - மாயையில்.

கோசம்ங்கையில் எழுந்தருளி திருப்பெருந்துறையில் அடியேனைத் திருவடி சூமக்கும் வண்ணம்வ்வருமை தெரியாது வைத்தாய். ஓலம் ஓலம் எனதுயிர்ப்பொருளே ! வம்பனை எனக்கும் என் வினைக்கும் முடிவில்லை யெனத் திருவுளமறியாதோ ? நாதனே ! என்செய்வேன்? —என இரங்கியருளியதைக் காண்க. (93)

98. இனி, கருணையாற் கல்லைக்கனியாக்குவது போலவாண்டடைதைக் கூறும் (தி. - ன.) :—

இல்லை நின்கழற் கன்ப தென்கணே
ஏல மேலுநற் குழலி பங்கனே
கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்
டென்னை நின்கழற் [1]கன்ப னாக்கினாய்
எல்லை யில்லைநின் கருணை யெம்பிரான்
ஏது கொண்டுநா னேது செய்யினும்
வல்லை யேயெனக் [2]கின்னு முன்கழல்
காட்டி மீட்கவும் மறுவில் வானனே.

(இ - ள்). தேவரீர் திருவடியன்பு, அம்பனைதால் இல்லை எனதுள்ளத்திலே வண்டுகள் சத்திப்பதான ஞானப்பூங்கோதை யம்மனை வாமபாகமுடையோய் ! கல்லைக்கனி செய்வது உன் திருவிளையாட்டாதலால் அடியேனும் அன்பு செய்ய வருள்வதானாய் ; ஆனதால் தேவரீர் திருபாகடாட்சத்துக்கு வரம்பில்லை யானதால், ஆன்மநாயகனே ! அடியேன் எங்கேனும் யாதாகிப் பிறந்தாலும்,

---

97. பொருத்தம் - பொருந்தற்குரியதான அத்துவிதக் காட்சி. உண்மை - உள்ளதன்மை. பொய்மை என்பதற்குக் கேவலாதீதம் என்ற பொருள் கூறுகின்றார். போத என்று - திருவடி சேர வருக என்று. புரிந்து நோக்குதல் - அன்புடன் திருநோக்கினைப் புரிதல். வருந்தமின்மை, பெருமான் எழுந்தருளிய கருணையையும் தன் எளிமையையும் எண்ணி வருத்தமின்மை. வஞ்சமுண்மை இங்குப் பொய்ப்போதம் என்று உரை கூறப்பெற்றது. வஞ்சமுண்மை - வஞ்சகமுடைமை. அரத்தம் - சிவப்பு. இச்செய்யுளில் நாயனார் சரித்திரப்பகுதி கூறப்பட்டிருப்பதை உரையினின்று காண்க. இப்பகுதிக்குப் பிறர் வேறுவகையிற் பொருள் கூறுவர். வம்பன் - வீணன்.

அவ்வப்பொழுதின் பொழு இட்டதே மலருஞ் சொன்னதே மந்திர மும் உண்மையாகக் கொண்டு, சுவாமி! எழுந்தருளி திருவடி காட்டிப் பிறவாவண்ணம் அருள் செய்வாய்! நின்மல மகாதேவனே!— என வருளியதைக் காண்க. (94)

99. இனி, ஊனநாடக மொருபாலும் ஞானநாடக மாற்றொரு பாலும் மாடியதைக் கூறும் (தி. - ன.) :—

வான நாடரு மறியொ ணாதநீ
மறையி னீறுமுன் றொடரொ ணாதநீ
ஏன நாடருந் தெரியொ ணாதநீ
என்னை யின்னிதா யாண்டு கொண்டவா
ஊன நாடக மாடு வித்தவா
உருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடக மாடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே.

(இ - ள்). தேவரீர் திருவடியை வானிலுள்ளதாகிய நாராயணன் முதலியோரும் அறியார்கள். வேதங்களாலும் உன்னைத் தொடர வொண்ணாது; மற்றுள்ள மனு முதலான விருடிகட்கும் நீ தெரியாப் பொருளாவாய்; அப்படியிருந்தும் நீயே எழுந்தருளி, அடியேனை நயங்காட்டி, எல்வழி நின்று, உனது சீரடிக்கு என்னைப் பணியாளாக்கியதும் தவிர, தூலபஞ்ச கிர்த்திய நடனத்தால் பெத்த திசையில் என்னை ஆட்டுவித்தவா! அன்பால் உருகித் திருவருளின்பத்தேனைப் புசிக்க வைத்தவனே! பரமுத்தி தசையிலே சூட்சும நடனத்தால் சுத்த பஞ்ச கிர்த்தியம் செய்து அருள் நாடகம் ஆடுவித்தவா! உனது கருணை வினவில், இப்பிரபஞ்சத்திலே செய்வதான திருவருள் வித்தையே யலது வேறு காணேனே!—என இவ்வாறு அருளியது

---

98. (பி - ம்). 1. அன்பதாக்கினுய். 2. கின்னமுன்கழல். ஏலம் - மயிர்ச்சார்த்து. 'ஏலவார் குழலிமார்' (திருவாச. 29 - 3). விச்சை - வித்தை. மீட்கவும்வல்லே என்பதற்குப் பிறப்புக்களினின்றும் மீட்க வல்லே என்று பொருள் கொள்வர் இவர். இன்னும் - மறுபடியும். மறுவில் - மலமற்ற.

இப்பஞ்சாக்கர சதாநடனை சம்பிரதாயம் ; முதலகவலின் முதல்மொழிப் பொருளான வநுபூதி உரையிற் காண்க. (95)

100. இனி, தம்தடிமையைத் தானே இரட்சிப்ப தொழிய வேறு துணையில்லை யென்ற (தி. - ன.) :—

விச்ச தின்றியே விளைவு செய்குவாய்
விண்ணு மண்ணக முழுதும் யாவையும்
[1]வச்சு வாங்குவாய் வஞ்சகப் பெரும்
புலைய னேனினின் கோயில் வாய்தலிற்
பிச்ச னுக்கினுய் பெரிய வன்பருக்
குரிய னுக்கினுய் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமர மாயி னுங்கொலார்
நானு மங்ஙனே யுடைய நாதனே.

(இ - ள்). பிருதிவி முதற் குடிலை பரியந்தமான தத்துவத் தோற்ற வொடுக்கமான தேகாதிப் பிரபஞ்சத்துக்கு ஓர் வித்துமில்லா மல் தன் கருணையால் பஞ்சகிர்த்தியம் செய்வாய். வஞ்சகப்பெரும் பறையனே தேவரீர் திருக்கோவில் வாய்தலிற் பற்றற்றவனுக வடிமை செய்து வைத்துப் பின்னும் சிரடியார்க் கடிமைப்பணி திருவுளமேற் பச் செய்யும்படி கிருபை செய்ததை வினவில், தன்னுல் உண்டாக்கித் தானே இரட்சிப்பதான விருட்சம் தனக்கும் பிறர்க்கும் உபகார மில்லதாயினும், யாவர்க்கு நஞ்சளிப்பதாயிருந்தபோதும், அந்த விருட்சத்தைக் கொல்லார்கள் அபிமானத்தால் பிரபஞ்சத்தார். அது போல அடியேனும் அநாதியிலே திருவடியில் பிரியாதிருந்தேனுத

---

99. மறையின் ஈறும் முன் தொடர் ஒணுத நீ—இதனுள் முன் என் பதனை மறையின் என்பதன் முன் கூட்டிப் பண்டை மறையும் என்று பொருள் கொண்டு, மறையின் ஈறுகிய ஞான காண்டத்தால் அறியப்படாத நீ என்றும், ஈறும்முன் என்பதற்கு, மறையின் இறுதியிலும் ஆதியிலும் உள்ள ஓம் என்பதால் உணர்த்தப்படாதவன் நீ என்றும் பிறர் பலவாறு உரை கூறுவர். நைய என்பதற்கு ஒழிய என்று பொருள் கொண்டு, 'எனக்கு உலகவாசை ஒழியும் பொருட்டு இவ்வளவையும் செய்தாய் என்று அவர் பொருளமைப்பர். இவ்வுரைக்காரர் காட்டும் நயத்தை ஓர்க. வையகத்துடை விச்சையாகிய அஞ்ஞானம் நீங்க, ஞானநாடகம் ஆடுவித்தவா என்றும் கொள்ளலாம்.

லால் அடியேனுள்ளபடி ஆண்டவும் ஈசன் (நான்) உருக்கக் கைவிடா னென அன்பால் இரங்கி யருளியதைக் காண்க. (96)

101. இனி, திருவடி யலது மற்றுப் பற்றெனக்கில்லே யென்று கூறிய (தி. - ன.) :—

உடைய நாதனே போற்றி நின்னலாற்
பற்று மற்றெனக் காவ தொன்றினி
உடைய ஞேபணி போற்றி யும்பரார்
தம்ப ராபரா போற்றி யாரினும்
கடைய ஞயினேன் போற்றி யெம்பெருங்
கருணை யாளனே போற்றி யென்னேகின்
அடிய ஞக்கினுய் போற்றி யாதியும்
அந்த மாயினுய் போற்றி யப்பனே.

(இ - ள்). எனை அடிமைப்படுத்திய நாதனே! இரட்சிக்க. தேவரீரன்றி வேறுபற்றுளனே? இனி, அடியேனைத் திருவருட் பணிக்காக்கி இரட்சிக்க. சகல தேவர்கட்கும் பராபரமான பரம சிவனே! இரட்சிக்க. யாவரினும் கடையான நாயடியேனை இரட் சிக்க! பெருங்கருணைநிதிப் பொருளான ஆண்டவனே இரட்சிக்க! எனைத் திருவடிக்கடிமையாக்கிய அருளே இரட்சிக்க! என் உயிர்க்கு உற்பத்தியும் முடிவுமானவனே! இரட்சிப்பாய்—என அருளியதைக் காண்க. (97)

---

100. (பி - ம்). 1. வைச்சு. 2. வாயிலில். விச்சு - வித்து. வச்சு - வைத்து. வினவு, இங்குப் பஞ்சகிருத்தியம். வைத்து வாங்கு வாய் - படைத்து அழிப்பாய். வாய்தல் - வாசல். 'ஒழுகு மாடத்து ளொன்பது வாய்தலும்' (தேவா. 338, 7). பிச்சன் - பித்தன். மாமரம் - பெரியமரம்.

விஷ்ணுருத்ரோபி ஸம்வர்த்ய ஸ்வயம் சேத்து மஸாம்ப்ரதம் என்ற குமாரசம்பவம் (2 - 55) கருத்து இங்கு ஒப்பிடத்தக்கது.

101. பணி போற்றி என்பதற்கு 'நின் திருவருட்பணிக்கு ஆக்கி இரட்சிக்க' எனப் பொருள் கூறுகின்றார். பிறர் பணி என்பதனை ஏவல் வினைமுற்றாகக் கொண்டு 'பணித்தருள்வாய்' என்று பொருள் கூறுவர்,

102. இனி, இறைவன் சீரடியார்க்கருளின்ப வைப்பானவன் என்ற (தி. - ன.) :—

அப்ப னேயெனக் கமுத னேயா
னந்த னேயக நெகவள் ளூறுதேன்
ஒப்ப னேயுனக் குரிய அன்பரில்
உரிய னையுனைப் பருக நின்றதோர்
துப்ப னேசுடர் மூடிய னேதுணை
யாள னேதொழும் பாள ரெய்ப்பினில்
வைப்ப னேயெனை வைப்ப தோசொலாய்
நைய வையகத் தெங்கள் மன்னனே.

(இ - ள்). எனது ஆன்மநாதனே ! அமிர்தே ! சிவானந்தனே ! என் உள்ளங்கனிந்து இன்பமூறுந் தேனே ! கருணையொப்புடையோய் ! அடியார்க்கடியனுக்கு அப்பணியருளால் திருவடியின்பம் புசிப்பதாக அருளும் ஆனந்தபரிசுத்தனே ! ஞானம் பிரகாசிப்பதான மகுடசடையனே ! என்னுடைய தோழனே ! தோன்றாத் துணையான ஆண்டவனே ! அடிமைப் பணி செய்யும் சீரடியார்க்கு அருள் வைப்பே ! அடியேனை இவ்வுலகத்தில் வைத்துத் தேவரீர் பிரிவரக விருப்பது திருவுளமோ ? எங்கள் நாதனே !—என அருளியதைக் காண்க. (98)

103. இனி, எவ்விடத்தும் நிறைவான நாதன் திருப்புகழ் ஓதுவதான (தி. - ன.) :—

மன்ன வெம்பிரான் வருக வென்னெனை
மாலு நான்முகத் தொருவன் யாரினும்
முன்ன வெம்பிரான் வருக வென்னெனை
முழுதும் யாவையு மிறுதி யுற்றநாட்

---

102. அகம் நெக அள் ஊறு தேன் ஒப்பனே - மனம் நெகிழும்படி, செறிந்து ஊறுகின்ற தேனை ஒப்பவனே. அள் - செறிவு. வள் ஊறு எனப்பிரித்து, வனமாகச் சுரக்கின்ற என்றும் கூறலாம். துப்பன் - நுகர் பொருளானவன் ; அறிவுருவன் எனலும் ஆம். துணையாளன் என்பதற்குத் தோழன் என்று இங்குப் பொருள் கூறுகின்றார். எய்ப்பினில் வைப்பு - தளர்ந்த காலத்துக்குதவும் சேமநிதி. வையகத்து (நான்) நையு னை வைப்பதோ சொலாய்.

பின்ன வெம்பிரான் வருக வென்னெனைப்
பெய்க ழற்கணன் பாயெ ஞவினற்
பன்ன எம்பிரான் வருக வென்னெனைப்
பாவ நாசநின் சீர்கள் பாடவே.

(இ - ள்). நாதனே! அடியேன் பொருட்டு எழுந்தருள்க, சுவாமி! தேவரீரோ, விட்டுணு பிரமா இருவருடன் அணுபட்சத்தில் உருத் திரனுக நின்ற ஏகவத்துவே! எல்லாவற்றினுக்கும் முன் நின்றருளும் முதற்பொருளே! அடியேன் பொருட்டு எழுந்தருள்க! சர்வ சங்கார மகா ஊழிக்காலம் பின்னுமுள பொருளே! அடியேன் பொருட்டு இரப்பதானேன். எழுந்தருள்க! தேவரீர் திருவடியைப் பன்னருசீர் வாய் அதுவேயாக அடியேன் வினைதீரத் தோத்திரம் செய்யக் கண்ணே பரிந்திட எழுந்தருள்க'—என வேண்டியருளிய தெனக் காண்க. (99)

104. இனி, பரமுத்தியடைவது திருவடியே என்ற (தி. -.ன.):

பாட வேண்டுநான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டுநான் போற்றி யன்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டுநான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டுநான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே!

(இ - ள்). தேவரீர் திருவடியைத் துதிப்பதாக அருள வேண்டும்! நாதனே! இரட்சிக்க! பின்னும் அன்பு கண்டு உருகி நெக்கு நெக்காகத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியவேண்டும்! இரட்சிக்க!

---

103. என்னெனை என்பதற்கு இவ்வுரை பொருள் கூறவில்லை. பிறரெல்லாம் வருக என்பதற்கு வரக்கட்டளையிட்டருள்க என்று பொருள் கூறுவர்: அவர்கள் எனை வருக என் என்று அமைத்துக்கொண்டு பொருளமைக்கின்றார்கள். இங்குக் காட்டப்பெற்ற உரையின் சிறப்பை ஓர்க.

பன்ன - பலகாற் சொல்ல; புகழ.

திருவம்பல அதிரகசியநடனம் செய்யும் குஞ்சிதபாதமே! அடியேனை இரட்சிக்க! இப்போதே பரமுத்தி சேர்வதாக, நாதனே! மாயாதேகம் போக, இரட்சிக்க! யான் எனதென்ற பற்றற இரட்சிக்க! சிவன் முத்த சஞ்சரிப்பிலேதானே பரமமோட்சம் அனுக்கிரகம் செய்யவேண்டும். சத்தியஞான மெய்கண்ட நாதனே!—என வருளிய அன்பின்ப வல்லாசப் பெருவாழ்வை அநுபூதியாற் காண்க. (100)

திருச்சிற்றம்பலம்

---

104. நான் நின்னையே பாடவேண்டும், எனக்கூட்டுக. நெக்கு நெக்கு - மிகவும் நெகிழ்ந்து. புழுக்கூடு - உடம்பு. வீட - அழிய. மெய்யர் மெய்யன் - அடியார்களின் மெய்ப்பொருளே என்றபடி.

முக்கரணங்களும் இறைவன்பால் கூடவேண்டும் எனக்கூறியது. அன்றியும் இவையும் அவனருளாலேதான் கைகூடவேண்டும் என்றும் காட்டியவாறும்.

திருச்சிற்றம்பலம்

6. நீத்தல் விண்ணப்பம்

இனி நீத்தல் விண்ணப்பம் திருவுத்தர கோசமங்கையில் கட்டளைக் கலித்துறையாகத் துதித்தது.

அகத்தியச் சூத்திரமாவன :—

நீத்தோர்க் குணர்த்து நீத்தல் விண்ணப்பம்
ஆர்ந்த மான பிரபஞ்ச வைராக்கியம்.

பொழிப்புரையாவன :—திருச்சதகம்வரை முதலிடமான சிவ சொரூப மருளி, இனி இரண்டாமிடமான அச்சிவத்தை விட்டுப் பிரியாத திருவருளே தலைமையென, 'முன்னருளிய பத்துவகைச் சிவசத்தியும் பிரேரித்தருளிய பேரின்பவல்லாச வாழ்வு உயிரை விட்டுப் பிரியாதிருக்க வேண்டும்' என்றும், அவ்வன்புத் தொடர்ச்சியாகச் சுகத்துக்குப் பிரிவில்லை யென்றும், உள்ளுறை குறிப்பு வைத்து, அவ்வின்பமே அருளின்பமாகக் காணும்போது இப்பிரபஞ்சப்பற்று விட்டும், திருவருள் கைவிடாது உயிரை இரட்சித்தலால் அந்தப் பெருங்கருணையை வியந்து அநுபூதி பெறத் திருவருள் பெருக அருளியதெனக் காண்க.

நீத்தல் விண்ணப்பத்திற்குத் திருவாசகத் திருவுள்ளக்கிடை :—
பிரபஞ்ச வைராக்கியம்.

பழைய திருப்பெருந்துறைப் புராணத்திற் கூறிய திருவாசகச் சிறப்பு :—

மித்தையுலகினையகற்றிவிடாமலெனையாண்டருளென்
றத்தரறிந்திடநீத்தல்விண்ணப்பமறைந்ததுவாம்.

நீத்தோர் - உலகப்பற்றுக்களை விட்டு விலகியவர். ஆர்த்தமான - துன்பமிக்க.

105. இனிவரும் திருப்பாவின் கருத்தாவன :—

அநாதி முதல் ஆன்மாவைத் திருவருள் கலந்து உள்ளிருந்து இரட்சித்த திருவருள் வினியோகம் அருளிச் செய்யப் புகுகின்ற தாவன :—

கடையவ னேனைக் கருணையி னற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்றோல்
உடையவ னேமன்னு முத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேனெம்பிரா னென்னைத் தாங்கிக்
[கொள்ளே.

(இ. ள்). யாவர்க்கும் கீழான கடையனும் அறிவிலாதவனுமான என்னை எவற்றினுக்கு மேலான பெருங்கருணையாற் கலந்ததின் பிரிவில்லாத அநாதியே அடியேனை அடிமைப் பணிகொண்ட எருதேறும் எங்கள் பரமனே! அறிவிலாதவனெனத் திருவுளமிரங்கும் அடியேனைப் பராமுகங் கொள்வது கருணையோ? புலித்தோலுடையாகத் தரித்தோய்! அநாதியாயுள்ள திருவுத்தரகோசமங்கைக்கரசே! திருச்சடையோய்! அடியேன் பிறந்திளைத்தேன்! ஆன்மநாயகனே! அடியேனைக் கிழ்விடாது பாதுகாக்க வென அருளிய அன்புத் தொடர்ச்சியான இன்பத்தைக் காண்க.

கடையவனென்றது உண்மைக்கீழ் என்றதை; தந்தாய னெனக் கொள்க. பெருங்கருணை என்றது. அநாதி வழக்கெனக் கொள்க. கலப்பென்றது அநாதியே திருவடியிற் பிரியாதிருத்தல். அடிமை யென்றது திருவருளாற் பிரிவற்று உண்மைப் பொருளாய்ப் பழையபடி பிரிவில்லாததுவாய்ப் போவதே ஆண்டவனடிமை எனக் கொள்க. விடை, உடை, சடை, இவை பெரிய நல்லடையாளங்கள்; அவை யெவ்விடத்தும் எப்பாலிலும் வரும். இவைக்கு அனுபவச் சுருதி முதல் அகவலான "வேந்தனடி" வாக்கியப்பயனிலும், திருச்சதகச் "சிந்தனை" என்ற வாக்கியத் திருப்பாவினும், தேவாரமான "தோடுடைய" "ஒருரு" வென்றதினும் அநுபூதி காண்க. (1)

---

105. **விட்டிடுதி கண்டாய் என்றதற்கு, 'அடியேனைப் பராமுகம் கொள்வது கருணையோ' என்பது இவ்வுரை. இவ்வாறு வினைப்பொருளிலன்றி என்னை விட்டு விடுகின்றாய்', 'என்னைப் பாசத்தினின்று நீக்கி அருள்க என்றும்' கூறுவாரும் உளர்.**

விறல் - வலிமையையுடைய. மன்னும் - நிலைபெற்ற.

106. இனி, அடிமை விஷயரூபியாலுலும் ஆண்டவன் கருணை செய்ய வேண்டுமென்ற (தி. - ன.) :—

கொள்ளேர் பிளவக லாத்தடங்
கொங்கையர் கொவ்வைச்செவ்வாய்
விள்ளே னெனினும் விடுதிகண்
டாய்நின் விழுத்தொழும்பின்
உள்ளேன் புறமல்லே னுத்தர
கோசமங் கைக்கரசே
கள்ளே னெழியவுங் கண்டுகொண்
டாண்டதெக் காரணமே.

(இ - ள்). நெருங்கிய அழகு குடிகொண்ட விசாலமான தனத்தையும், கொவ்வைக் கனிபோன்ற சிவந்த வாயையுமுடைய மாதரார் ஆசையே பொருளெனப் பிரியாதிருப்பனே யெனினும், அடியேனைப் பராமுகமாகத் திருவுளங் கொள்வது கருணையோ? சுவாமி! அடியேன் சிரடியார் செய்யும் பணிவுட் கொள்ளேன். அப்பணிவுடையனல்லனுமினும், திருவடி அகன்று நிற்பதெங்கே? திருவுத்தரமங் கைக்கரசே! கள்ளன், என் கள்ளத் தொண்டைச் செய்து கழியுங் குணம் திருவுளத்தடைத்தும் அடியேனைத் திருவடிக்கன்பு செய்ய அடிமை கொண்ட நிமித்தம் எக்கருணையோ? என அன்பால் இரங்கி அருளியதெனக் காண்க. (2)

---

106. கொள் ஏர் பிளவு அகலாத் தடம் கொங்கை - கொள்ளின் அழகாகிய பிளவும் நீங்காத மலைபோலும் தனங்கள்; ஏர்பு கொள் பிளவு அகலா தடம் கொங்கை - எழுச்சி கொண்ட இளஞ் செவ்வி நீங்காத பெருங்கில்; என்றும் வேறு விதமாகப் பிறர் பொருள் கொள்வர். விள்ளேன் - விட்டு நீங்கேன். விழுத்தொழும்பின் உள்ளேன் - சிரடியார் செய்யும் பணிவை உட்கொள்ளேன் என்று இவ்வுரை கூறுவதன் நயத்தை ஓர்க. புறம் அல்லேன் என்பதற்கும் இவ்வுரை, 'திருவடி அகன்று நிற்பதெங்கே?' என்று வினுப்பொருளில் பொருள் கூறும். உள்ளேன் புறமல்லேன் என்பதற்குப் பிறர் 'நான் தொண்டினுள்ளேன் புறத்தினேனல்லன்' என்று பொருள் கூறுவர். இவ்வாறு உரைப்பது அடிகள் முன்னும் பின்னும் கூறியவற்றிற்குப் பொருந்தாமை காண்க.

107. இனி, மாதரின்பத்தின் அழுந்துவனுனும் அன்பால் இரங்க வேண்டுமென்ற (தி. - ன.) :—

காருறு கண்ணிய ரைம்புல னுற்றங் கரைமரமாய்
வேருறு வேனை விடுதிகண் டாய்விளங் குந்திருவா
ரூருறை வாய்மன்னு முத்தர கோசமங் கைக்கரசே
வாருறு பூண்முலை யாள்பங்க வென்னை வளர்ப்பவனே.

(இ - ள்). கருமை போன்ற கண்ணையுடைத்தான மாதரார் இச்சையில் இந்திரியமைந்தையும் (அழுத்தி), அவ்வழி ஆற்றங்கரை மரம் வேரூன்றியதுபோல நிற்கும் என்னைப் பராமுகஞ் செய்வது கருணையோ? திருவருட் செல்வத் திருவாரூரில் எழுந்தருளிய புற்றிடங்கொண்ட தியாகராசனே! நிலைபெற்ற திருவுத்தர மங்கைத் தலப்பொருளே! அடியேன் பருவமுதிர்வதான கச்சிறுகத்தரிக்கும் திருவருள் தனமுடைய பராசத்தி வாமபாக நாதனே! என் நிமித்தம் பஞ்சகிர்த்தியம் செய்து என்னை உருவாக்கும் சுவாமி! அன்பால் இரங்கி அடியேனைக் கருணை செய்வதென வருளியதைக் காண்க. (3)

108. இனி, மேன்மேலுளதாகிய பெருங்கருணையைச் சுதந்தர ஈனலுகிய தான் இழந்ததைக் கூறும் (தி. - ன.) :—

வளர்கின்ற நின்கரு ணைக்கையில் வாங்கவு நீங்கியிப்பான்
மிளிர்கின்ற வென்னை விடுதிகண் டாய்வெண்
[மதிக்கொழுந்தோன்
ரெளிர்கின்ற நீண்முடி யுத்தர கோசமங் கைக்கரசே
தெளிகின்ற பொன்னுமின் னும்மன்ன தோற்றச்
[செழுஞ்சுடரே.

(இ - ள்). தேவரீர், திருவடி ஞானம் பேரன்பாற் கருணை பொழிவதான திருக்கையாற் சீயத்தம் வைத்தும், அவை தெரியாதே திருவடி விட்டு நீங்குவதான பெருமை யன்பனைப் பராமுகம் செய்வது கருணையோ? சுவாமி! தேவரீர் உலகவிரட்சைக்காக ஒள்ளிய பூமல ரணியும் திருச்சடையிலே வெண்மதிக் கொழுந்தணியும் திருவுத்தர

107. கார் - கருமை அழகு. ஐம்புல ஆற்றங்கரை என்று உருவகப் படுத்தினதாகக் கொள்க. ஆற்றங்கரையில் வேர் வீழ்த்திய மரம் விழுந்து விடும் என்பது குறிக்கப்பெற்றது. வார் - கச்சு. உமாபரமேசுவரர் என்னை வளர்ப்பவர், காருறுகண்ணியர் என்னை வளர்ப்புவர்போல் காட்டி அழிப்பவர் என்பது கூறப்பெற்றது.

கோச மங்கைநாதா ! தேவரீர் திருமேனியில் தெளிந்தோடும் மாற்றுப் பொன்போலப் பிரகாசிக்கும் அருளுடைச் செஞ்சோதி யாதலால் அடியேனைக் கருணை செய்ய விண்ணப்பமென வருளியதைக் காண்க. (4)

109. இனி, வலிய இழுத்தடிமை செய்தமையைக் கூறும் (தி. - ன.) :—

செழிகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி யாரிற்பன்னாள்
விழுகின்ற வென்னை விடுதிகண் டாய்வெறி வாயறுகால்
உழுகின்ற பூமுடி யுத்தர கோசமங் கைக்கரசே
வழிநின்று நின்னரு ளாரமு தூட்ட மறுத்தனனே.

(இ - ள்). விட்டிலானது விளக்கொளியைக் கனியெனப் போய் வீழ்ந்திறந்ததுபோல, நயமுடையார்போல மிருதுமொழி பேசும் மாதரார் இன்பமே பொருளென வெகுகாலம் விழைந்திறக்கும் என்னை, அவ்வகையே போகப் பராமுகம் செய்வது கருணையோ? வண்டுகளான வாலகில்லியரான அடியார்கள் எப்போதும் இன்பப் புசிப்பாக அளவளாவும் மலர்முடியுடைய திருவுத்தரகோச மங்கைக் கரசே ! பிறவி தோறும் அலையும் வழியினின்று, வலிய எழுந்தருளி அடிமை செய்து அன்பான அமிர்தசுகமருளிய சிவஞானத்தை உட்கொளாது போனது என் விதியே யல்லாது வேறு காணேன் ; என அன்பாலிரந்துண்மை யருளியதெனக் காண்க. (5)

---

108. நின் கருணைக் கையில் வாங்கவும் என்பதற்கு நான் திருவடி ஞானம்பெறத் தேவரீர் ஸ்ரீஹஸ்தம் வைத்து என்னைத் தீக்ஷித்ததும் என்று பொருள்பட உரை அமைந்திருப்பதைக் காண்க. வாங்கவும் என்பதற்கு என்னை வளைத்துப் பிடிக்கவும் என்று பிறர் பொருள் கூறுவர். இப்பால் மிளிர்கின்ற என்னை என்பது இகழ்ச்சிக் குறிப்பு ; பெருமை அன்னை என்ற உரைக்குப் பெருமையற்ற அன்னை என்று பொருள் கொள்க.

109. என்னை நின்று ஊட்ட மறுத்தனனே என்று முடிக்க.

செழிகின்ற தீ - வளர்கின்ற தீ. வெறி - மணம். அறுகால் - வண்டு. வாலகில்லியர் - கட்டை விரலளவு வடிவுடைய ஒருசார் முனிகணத்தார்.

110. இனி, கிஞ்சிஞ்ஞன் செய்யும் குற்றத்தைச் சாட்குணிய நாதனே பொறுப்பரென்ற (தி. - ன.) :—

மறுத்தனன் யானுன் னருளறி யாமையி லென்மணியே
வெறுத்தெனை நீவிட் டிடுதிகண் டாய்வினை யின்றெருகுதி
ஒறுத்தெனை யாண்டுகொ ளுத்தர கோசமங் கைக்கரசே
பொறுப்பரன் றேபெரி யோர்சிறு நாய்கடம் பொய்யினையே.

(இ - ள்). தேவரீர் அடியேற்கு உதவிய பெருங்கருணை இன்பத்தைப் பொருளென உட்கொள்ளாது போனது என் அறியாமையாதலால், எனது கண்மணியான சிவப்பிரகாசமே! பராமுகம் செய்வது கருணை வழக்கோ? ஏனெனில், விண்ணப்பம்; என் தலைவிதி; அவ்வூழின் குணத்தைத் திருவுளம் இரங்கி ஆட்படுத்தியருளவேண்டுமே! அவை யாவையோ? என் விண்ணப்பம். திருவுத்தரகோசமங்கைப்பதியில் அடியேன் பொருட்டு எழுந்தருளியதால், நாதனே! புல்லறிவுடைய நாயானது செய்த குற்றம் குணமாகக் கொள்வது நீதியாதலால், அடியேனையும் அவ்வகைக் கருணை செய்வதென, அன்பால் அருளியதைக் காண்க. (6)

111. இனி, வழுவை யுரிபோர்த் தாடுவதான (தி. - ன.) :—

பொய்யவ னேனைப் பொருளென வாண்டொன்று
[பொத்திக்கொண்ட
மெய்யவ னேவிட் டிடுதிகண் டாய்விட முண்மிடற்று
மையவ னேமன்னு முத்தர கோசமங் கைக்கரசே
செய்யவ னேசிவ னேசிறி யேன்பவந் தீர்ப்பவனே.

(இ - ள்). சுவாமி மலபோதப் பொய்யுண்மையினை இரட்சிக்கத் திருவுளம் இரங்கி ஆள்வதான நாதனே! சீரடியார்க்காக யானையை யுரித்துத் திருமேனிப் போர்வையாகச் செய்து நடனம் செய்தோய்! பராமுகமாவது கருணையோ? பின்னும் மாறுபட்ட தக்கன் யாகத்

---

110. கிஞ்சிஞ்ஞன் - சிற்றறிவினன். சாட்குணிய நாதன் - ஆறு குணக்கடவுளே.

இவ்வுரை நேர் பொழிப்புரையாக ஆகாமல், ஒருவகையாக எழுதப் பெற்றுள்ளது.

வினையின் தொகுதி ஒறுத்து, என்னை ஆண்டுகொள் என்று பிரிக்க, பொய் - குற்றம்.

திலே சிவனே மறந்தவிர்ப்பாகங் கொண்ட நாராயணன் முதலான தேவர்கள் நஞ்ச மஞ்சியோட விசுவாச நேய மற்றவத் தேவதைகளே இரட்சிக்க நஞ்சணி கண்டனேனெய் ! திருவுத்தர கோசமங்கைக் கிறையோய் ! பின்னுமிராவணன் ஸ்ரீக்கு உபதேச நிமித்தம் அம்மைக்கிடப்பில் வைத்து விளையாடற் செய்யச் சேயனேனெய் ! பரமசிவனே ! புல்லறிவன் பிறவியையும் தீர்ப்பதான நாதனே ! என அன்பாற் செய்ததெனக் காண்க. (7)

112. இனித் திருவடியைத் தேடி இன்பங் கொள்ளுதலைக் கூறும் (தி. - ன.) :—

தீர்க்கின்ற வாறென் பிழையையின் சீரரு
[ளென்கொலென்று
வேர்க்கின்ற வென்னை விடுதிகண் டாய்விர வார்வெருவ
ஆர்க்கின்ற தார்விடை யுத்தர கோசமங் கைக்கரசே
ஈர்க்கின்ற வஞ்சொடச் சம்வினை யேனை யிருதலையே.

(இ - ள்). சுவாமி ! அடியேன் செய்ந்நன்றி குன்றிய குற்றம் தீர்ப்பதற்குத் திருவுளமே. அவை யறிந்தும் எவ்விடமோ எங்கேயோ தேவரீர் திருவருள் ? என்னை விட்டுப்போலாதாய ஞாலந் தலை கெடுத்த தற்கேடரையொத்து(?), வேதனைப்படும் அடிமையைப் பராமுகம் செய்வது கருணையோ ? தன்னை உள்ளபடி நம்பாத பேர் எமன் முதல் எத்தேவர்களாயிருந்தாலும் அவர்களுள்ளம் நடுங்கும்படி சத்திக்கும் நவரத்தின மணிமாலை அணியும், விடையேறும் திருவுத்தரகோச மங்கைக்காசே ! வீணுட்கழிக்க என்னை இழுக்கும் பஞ்சவிந்திரிய வேடருடன் இருவினையின் இடமாகப் பயந்து அலையும்

---

111. ஒன்று பொத்திக்கொண்ட மெய்யவன் - முத்தியாகிய ஒன்றினை மறைத்துக்கொண்ட உண்மைப் பொருளே, என்று பிறர் பொருள் கொள்வர். ' என்னையும் உன்னோடு ஒன்றாக அணைத்துக் கொண்டவனே, என்றும் பொருள் கூறுவாரும் உளர். பிடற்று மையவன் - நஞ்சணி கண்டன். மை - கருமை. இராவணன்ஸ்ரீ - மண்டோதரி. செய்யவன், என்றதனைச் சேயவன் என்று கொண்டார். பவம் - பிறப்பு.

என்னைக் கருணை வைத்து அன்பால் இரங்கவெனை அருளியதைக் காண்க. (8)

113. இனி, வேறுபடாப் பேரின்பத் திருவருள் என்னை அபேத அத்துவிதமாய் உள்ளத்திருந்தும் அவை அறியாத நிலையைக் கூறிய (தி. - ன.) :—

பொலிகின்ற நின்ரூள் புகுதப்பெற் ரூக்கையைப்
[போக்கப்பெற்று
மெலிகின்ற என்னை விடுதிகண் டாயளி தேர்விளரி
ஒலிகின்ற பூம்பொழி லுத்தர கோசமங் கைக்கரசே
வலிகின்ற திண்சிலை யாலெரித் தாய்புர மாறுபட்டே.

(இ - ள்.) தேவீர் திருவடித் திருவருட் பொலிவுபெற நின்றது; அவை சேர்வதான பரிபாக இன்பமுளனாய், மாயாதேகம் பொய்யெனச் சிவப்பேறுடையனாயிருந்தும், வேறு பாடாகிய துன்ப வேதனைப்படுவதான அறிவிலாதவனைப் பாராமுகஞ் செய்வது கருணையோ? மருதப்பண்பாடும் வண்டு சூழ்ந்த ஞானப்பிரகாசத் திருமலர் சூடும் திருமுடியையுடைய திருவுத்தரகோச மங்கைக்கரசே! மகாமேருவே வில்லாக வளைத்தபடியிருக்க, திருப்புன்முறுவலால் திரிபுரதகனஞ்செய்த நாதனே! என வருளியதைத் தீட்சாவநுபூதியாகக் காண்க. (9)

---

112. ஏட்டில் சொற்சிதைவுகள் நிலைகெட்டும் பிழைபட்டும் கிடக்கின்றன. கூடியவரை உள்ளவாறே அச்சிடப்பட்டது.

சீரருள் என்கொல் என்றதற்கு, 'திருவருள் எவ்விடம் அல்லது எங்கே, எனக்குக் குற்றம் தீர்க்கத் திருவருள் கொண்டுள்ளது' என்று பொருள்பட உரை எழுதப்பெற்றுள்ளது. ஆர்க்கின்ற - சத்திக்கும்; சத்தமிடும். தார் - மாலை; நவரத்னமணிமாலை என்ரூர்.

113. அளி - வண்டு. தேர் - தேர்ந்து பாடுகின்ற. விளரி - ஒரு பண். பூம்பொழில் உத்தரகோச மங்கை என்க. பொழில் - சோலை. இங்கு பூ என்பதனை முடிக்கு அடைமொழியாக்கினர். மாறுபட்டு - பகைத்து.

114. இனி, விரிந்த மனங்குவிந்து திருவடி பெறுவதான் (தி. - ன.) :—

இருதலைக் கொள்ளியி னுள்ளெறும் பொத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண் டாய்வியன் மூவுலகுக்
கொருதலை வாமன்னு முத்திர கோசமங் கைக்கரசே
பொருதலை மூவிலை வேல்வல னேந்திப் பொலிபவனே.

(இ - ள்). தேவரீர் திருவடியை விட்டுப் பிரிந்து மாயாவசத்தனுகச் சீரடியாரையும் அவர்கள் திருவேடத்தையுங் கண்டவுடன் தலையால் வணங்காது இருபுறமும் எரியாநின்ற இந்தன மத்தியில் அகப்பட்டலைந்து துன்பமுறும் எறும்பேபோல உலாவிய என்னைப் பராமுகஞ்செய்வது கருணையோ? மாயாபுவன மூன்றுக்கும் கர்த்தாவே! அநாதியாயுள்ள திருவுத்தரகோச மங்கைக்கரசே! மூன்று சத்தியையும் முக்கவராகவுடைய சூலாயுதத்தை யடியேனை யிரட்சிக்கும் பொருட்டு வல அத்தத்தில் தரிக்கும் நாதனே! என வருளியதைக் காண்க. (10)

115. இனி, திருவடியுண்மை தெரியாது வேறுபட்ட தன்மையைக் கூறும் (தி. - ன.) :—

மாறுபட் டஞ்சென்னை வஞ்சிப்ப யானுன் மணிமலர்த்தாள்
வேறுபட் டேனை விடுதிகண் டாய்வினை யேன்மனத்தே
ஊறுபட் டேமன்னு முத்தர கோசமங் கைக்கரசே
நீறுபட் டேயொளி காட்டும்பொன் மேனி நெடுந்தகையே.

(இ - ள்). சுவாமி! அடியேற்குத் துணைக்கருவியாய் அருளிய மனநிலை பெறுமாறு எண்ணுது, பஞ்ச விந்திரிய வேடருடன் கூடி வஞ்சனையால் மெய்யறிவைக் கொள்ளைகொள யானும் அவற்றின் வசமாகிச் சீவரத்தின யொளியான பொற்பாத கமலத் திருவடியை யுண்மை கொள்ளாது, வேருனவனை, அப்படியே விட்டுப் பராமுகஞ் செய்வது கருணையோ? அடியேன் வினையாற்றுன்பமுள மனதிலிருப்பது நீதியலவெனத் திருவுத்தரகோச மங்கைக்கரசாகி நிலைமை பெற்றருளே! தேவரீர் திருமேனியில் தரித்த நீற்றொளி பொன்போற் பிரகாசிப்பதானதால் சருவ வியாபகப் பெருமையனே! என்று உளத்

---

114. விரிதலையேன் - தலைவிரிகோலமுடையேன்; அலங்கோலன் என்றபடி. சூலமேந்தியது வலக்கை என்றபடி.

திலுமிருந்து துன்பமிலாது இரட்சிப்பாயாக—என அன்பால் அருளியதை யின்பாற் காண்க. (11)

116. இனித் திருவருட் பெருமையால் ஆண்டும், அடிமைப் பணி செய்யாத தன்மையைக் குறித்த (தி. - ன.) :—

நெடுந்தகை நீயென்னை யாட்கொள்ள யானும்
[புலன்கள்கொண்டு
விடுந்தகை யேனை விடுதிகண் டாய்விர வார்வெருவ
அடுந்தகை வேல்வல்ல வுத்தர கோசமங் கைக்கரசே
கடுந்தகை யேனுண்ணுந் தண்ணீ ரமுதப் பெருங்கடலே.

(இ - ள்): சுவாமி! தேவரீர் பெருங்கருணை வழுக்காமல் அடியேனை மல பரிபாகம் பெறத் திருவடியை விட்டுப் பிரித்துச் சகலப் படுத்தும்போது, அக்கருணை தெரியாது, பஞ்ச விஷய ரூபனாகித் திருவருளைக் கைவிட்ட பாவியைத் திருவுளம் நோக்காது பராமுகஞ் செய்வது கருணையோ? தேவரீர் திருவடிக்கன்பில்லாத உயிரை நிக்ரகஞ் செய்யச் சூலாயுதந்தரித்த நாதனே! அடியார்க்கநுக்ரகஞ் செய்யத் திருஉத்தரகோச மங்கையில் எழுந்தருளிய மகாதேவனே! அடியேன் மலபோத வுண்மை விடத்தைப் புசிப்பதான எனக்குக் குளிர்ந்தவமிர்தப் பெருங்கடலான சிவானந்தத்தை உன்னவருளிய அநுபூதிக்கென் செய்வேனெனவே அருட்குக் கைமாறில்லை யென வருளியதைக் கொண்க. (12)

---

115. அஞ்ச மாறுபட்டு என்னை வஞ்சிப்ப என மாற்றுக. அஞ்ச - பஞ்சேந்திரியங்கள். ஊறு பட்டே என்பது பிற அச்சுப்புத்தகங்களிற் காணும் பாடம் - உரையில் மனதிலிருப்பது என்றதற்கு மனதுடன் இருப்பது என்று பொருள்க.

116. யான் ஐம்புலன்கள் கொண்டு விடுந்தகையேனை, என்பதற்குக் கூறப்பெற்ற உரையை ஓர்க. வேலின் தன்மையும், உத்தரகோசமங்கையில் எழுந்தருளிய காரணமும் மிக நயம்படக் கூறப்பெற்றுள்ளன. கடும் தகையேன். கடு - விஷம் எனப்பொருள் கொண்டு பொருள் கூறப்பட்டிருக்கிறது. பிற அச்சு நூல்களில் 'தெண்ணீரமுதப் பெருங்கடலே' என்ற பாடம் கொள்ளப் பெற்றிருக்கிறது.

117. இனி, சிரடியார் காயமே கோயிலாகக் கொண்டமைமையக் கூறும் (தி. - ன.) :—

கடலினுள் நாய்நக்கி யாங்குன் கருணைக் கடலினுள்ளம்
விடலரி யேனை விடுதிகண் டாய்விட லில்லடியார்
உடலில மேமன்னு முத்தர கோசமங் கைக்கரசே
மடலின்மட் டேமணி யேயமு தேயென் மதுவெள்ளமே.

(இ - ள்). தேவரீர் திருவருளின்பக்கடல் எங்கும் சருவ வியாபக மாக விருக்க, அந்தச் சிவாநந்தக்கடலில் குடம் போலமூந்தாது, நாயானது கடல்நீரை நக்குவதேபோல், மாயாபோகப் புசிப்பானேன் ; அந்த அறிவானந்த சமுத்திரத்தில், மனஞ்செல்லாத எளிமையுடையேனைப் பராமுகஞ் செய்வது கருணையோ ? தேவரீர் பெருங்கருணையை வினவில், எல்லாப்பற்றும் விட்ட சிரடியாருள்ளமே கோவிலாகவும், திருவுத்தரகோச மங்கைக்கரசாகவும், அறிவரிய மலர்மடலின் திருவடியாகிய தேனே போலும், (ஆனாலேனே !) அறிவுக்கறிவான சிவரத்தினச்சோதியே ! இன்பவடிவான சிவஞானக்கட்டியே ! அடியார் புசிப்பதான அருளானந்தத்தேனே ! இவ்வகையாக அநுபவமான நாதனே ! அன்புதந்தருள்க—என அருளியதைக் காண்க. (13)

118. இனி, இடைவிடாது விரும்புஞ் சிரடியார்க் கருள்வதான (தி. - ன.) :—

வெள்ளத் துணைவற்றி யாங்குன் னருள்பெற்றுத்
[துன்பத்தின்றும்
விள்ளக் கிலேனை விடுதிகண் டாய்விரும் பும்மடியார்
உள்ளத்துள் ளாய்மன்னு முத்தர கோசமங் கைக்கரசே
கள்ளத்து ளேற்கரு ளாய்களி யாத களியெனக்கே.

(இ - ள்). தேவரீர் திருவருளைப்பெற்றும் அவை தெரியாது சாணிப்பறவையைப்போற் பிரவாகத்துடன் வசித்தும் நாவலர்ந்து தவித்ததுபோல, நற்பிறவியருளியும் அவை கொண்டு திருவடி வணங்காது தேகபோக மயக்கமுற்ற வென்னைப் பராமுகஞ்செய்வது கருணையோ ? பேணுவார் இச்சை செய்யும் உண்மைப்பொருளே !

---

117. விடலில் அடியார் - எல்லாப் பற்றுக்களையும் விட்ட அடியார் என்று பொருள் கொள்கின்றார். விடுதல் இல்லாத அடியார் என்று பிறர் பொருள் காண்பர். மட்டு - தேன்.

திருவுத்தரகோச மங்கைக்கரசே! கள்ளனேன் கள்ளத் தொண்டை நீக்கி, உள்ளங் கவர் கள்வனை சுவாமி! அத்துவித சிவானந்தம் அருள்வாய்—என அருளியதை அன்பாற் காண்க. (14)

119. இனி, சோதிக்குட் சோதியானவன் என்ற (தி. - ன.) :—

களிவந்த சிந்தையொ டுன்கழல் கண்டுங் கலந்தருள
வெளிவந்தி லேனை விடுதிகண் டாய்மெய்ச் சுடருக்கெல்லாம்
ஒளிவந்த பூங்கழ லுத்தர கோசமங் கைக்கரசே
எளிவந்த வெம்தைபி ரானென்னை யாளுடை
[யென்னப்பனே.

(இ - ள்). தேவரீர் திருவடி ஞானம் விதிப்படி பெற்றும் அவ்வருளே அபேத அத்துவிதமாய் அநுபவம் பெறுத மருளுடையேனை அப்படியே ப்ராமுகஞ் செய்வது கருணையோ? எவ்வகை அதிட்டிதச் சோதிக்கும் மேற்பட்டுத் தானே விளங்கும் திருவடி ஞானமே! உத்தரகோச மங்கைக்கரசே! அடியேன் போ.....ஓர் ஆதாரமில்லையெனத் திருவுருக்கொண்டெழுந்தருளி அநுக்கிரகஞ் செய்யுந் தகப்பனே! அடியேனை அடிமைப்பணி கொள்வதான ஆன்மநாதனே! என அருளியதைக் காண்க. (15)

120. இனி, அடியேனை அடைக்கலம் காப்பதற்கு வேறு ஒரு வருமில்லை யென்ற (தி. - ன.) :—

என்னையப் பாவஞ்ச லென்பவ ரின்றி நின்றெய்த்
[தலைந்தேன்
மின்னையொப் பாய்விட் டிடுதிகண் டாயுவ மிக்கின்மெய்யே
உன்னையொப் பாய்மன்னு முத்தர கோசமங் கைக்கரசே
அன்னையொப் பாயெனக் கத்தனெப் பாயென்
[னரும்பொருளே.

---

118. விள்ளக்கிலேன் - விலகும் ஆற்றலில்லேன். களியாத களி - என்றும் சுவைத்தறியாப் பெருங்களிப்பு; சிவானந்தம்.

119. சுடருக்கெல்லாம் ஒளி வந்த பூங்கழலே என்று பிரித்து விளியேற்றிப் பொருள் கூறினர். எளிவந்த - எளிதாய் எழுந்தருளின. புள்ளியிட்ட இடங்களிலுள்ள எழுத்துக்கள் ஓலைங்களில்லை.

(இ - ள்). சுவாமி! எனது ஆன்மநாதனே! அடியேனே இரட்சிப்பதற்கு ஒருவருமில்லாதே பிறந்து, இறந்து, இளைத்து, ஓய்ந்து, அலையா நின்றேன்; தேவரீரோ, மின் மறைந்தாற்போலக் கண்ட படியே கண்டு, காணுமை காணுமை யானுய். கொண்டபடியே கொண்டிராது, பராமுகஞ் செய்வது கருணையோ? திட்டாந்தர தாட்டாந்தர உவமான உவமேயத்தால் அளவையிட்டால், தேவரீர்க்கொப்புத் தேவரீரல்லாது (வேறு ஆர்?) என்பது பிரமாணமே; திருவுத்தர கோச மங்கைப் பதிக்கு அரசே! அடியேற்குத் தாயும் தகப்பனும் போல் என் உயிரைப் பாதுகாத்துக் கொண்டருளும் பொருளான நாதனே!—என வருளியதைக் காண்க. (16)

121. இனித் திருவடியே தாரகமானது என்ற (தி. - ன.):—

பொருளே தமியேன் புகலிட மேநின் புகழிகழ்வார்
வெருளே யெனைவிட் டிடுதிகண் டாய்மெய்ம்மை
[யார்விழுங்கும்
அருளே யணிபொழி லுத்தர கோசமங் கைக்கரசே
இருளே வெளியே இகபர மாகி யிருந்தவனே.

(இ - ள்). அநாதி நித்தியப்பொருளே! சுதந்தர வீனனை அடியேனே விட்டுப் பிரிவுறுத குடிலையே! தேவரீர் அருண்மொழித் துதியை இகழ்ச்சி கொள்வாரிடஞ் செல்ல அச்சமுடையோய்! அடியேனைப் பராமுகஞ் செய்வது கருணையோ? கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியான திருவருளே! அழகு தானே உருகொண்ட சோலை சூழ்ந்த திருவுத்தரகோச மங்கைப்பதிக்கரசே! பஞ்ச பாசத்துக்கும் இடமே! அவை வெளிப்படுத்தும் இகபரமே! இவ்வகையிருப்பதான பிரேரகப் பீரேரியமே!—என வருளியதைக் காண்க. (17)

---

120. எய்த்து - இளைத்து. மின்னே ஒப்பாய், தொழிலுவமப் பொருள் கூறிய நயம் காண்க.

121. இருள் - பஞ்சபாசத்துக்கிடம். வெளி - அவற்றை வெளிப்படுத்தும் இயல்பு. இருளே வெளியே என்பதற்கு அறியாதார்க்கு இருளாய் மற்றவர்க்கு வெளியாய் இருப்பவனே என்று பொருள் கொள்வர் பிறர். இகம் - இம்மை. பரம் - மறுமை.

122. இனி, அடிமைத்திற அநுபூதி கூறிய (தி. - ன.) :—

இருந்தென்னை யாண்டுகொள் விற்றுக்கொ ளொற்றிவை
[யென்னினல்லால்
விருந்தின னேனை விடுதிகண் டாய்மிக்க நஞ்சமுதா
அருந்தின னேமன்னு முத்திர கோசமங் கைக்கரசே
மருந்தின னேபிற விப்பிணிப் பட்டு மடங்கினர்க்கே.

(இ - ள்). சுவாமி! அடியேன் உள்ளத்தில் அபேத அத்துவித மாக எழுந்தருளியிருந்து, என்னை அடிமையாக்கி, அவை நிலைபெற விலைகூறி ஒற்றிவை; (என்று சொல்வதல்லால்) வேறு என் செய் கேன்! நாலை, சன்னிதானத்தில் புதிய விருந்தினன் போலத் திருமுகம் பார்த்திருப்பனல்லாது, பழைய அடியார் போல உன்னை உபசரிக்கும் வண்ணம் ஒன்றுமில்லாத சுதந்திரவீனன்; அடியேனைப் பராமுகஞ் செய்வது கருணையோ? தேவர்கட்காகக் கொடிய விடத்தை அமிர்த போனகமாகக்கொள்ள வில்லையோ? அதனினும் கொடியனலை? திரு வுத்தரகோச மங்கைப்பதிக்கரசனே! மருந்தும் அவை, மந்திரம் அவை யாய்த் தீராநோய் தீர்த்தருளும் நாதனே! இப்பிணி தீர்ப்பாய்—என அருளியதைக் காண்க. (18)

123. இனி, திருநோக்கத் திருவடியாற்றீட்சை செய்வதான (தி. - ன.) :—

மடங்கவென் வல்வினைக் காட்டைநின் மன்னருட்
[டீக்கொளுவும்
விடங்கவென் றன்னை விடுதிகண் டாயென் பிறவியைவே
ரொடுங்களைந் தாண்டுகொ ளுத்தர கோசமங் கைக்கரசே
கொடுங்கரிக் குன்றுரித் தஞ்சுவித் தாய்வஞ்சிக்
[கொம்பினையே.

(இ - ள்). தேவரீர் திருவடியான திருநோக்கால் என்னை மடங்க வைத்த பஞ்ச பாசக்காட்டை எரியச்செய்த காரண காரியங் கடந்த கருணை வடிவோய்! என்னை இப்போது பராமுகஞ் செய்வது கரு ணையோ? அப்படியே எனது பிறவியை அடியோடு மறுத்து அடிமை

---

122. ஆண்டு கொள்தல், விற்றல், ஒற்றி வைத்தல் ஆகியவை அடிமைகளை முதலாளி செய்வன. விருந்து - புதுமை; பழைமையல் லாமை. மடங்கினர்க்கு - முடங்கிக் கிடந்தவர்க்கு.

செய், ஆண்டவனே ! திருவுத்தரகோச மங்கைப்பதிக்கரசே ! வழுவை யுரி போர்த்தாடும்போது இடப்பாக மிருந்த கற்பகப்பூங்கொம்பை யொத்த திருமேனியுடைய பராசத்தி பயப்படச்செய்யுங் திருவிளை யாடலான சுவாமி ! கருணைசெய்க — என வருளியதைக் காண்க. (19)

124. இனி, திருவடியே துணை என்ற (தி. - ன.) :—

கொம்பரில் லாக்கொடி போலல மந்தனன் கோமளமே
வெம்புகின் றேனை விடுதிகண் டாய்விண்ணர் நண்ணுகில்லா
உம்பருள் ளாய்மன்னு முத்தர கோசமங் கைக்கரசே
அம்பர மேநில னேயனல் காலொடப் பானவனே.

(இ - ள்). சுவாமி ! திருவருள் திருமேனியுடையோய் ! விண்ணப்பம் ; அடியேன் இத்தேகாதி பிரபஞ்சத்திற் கொழுகொம்பு ஊன்றுத பயிர்க்கொடிபோலத் திருவருள் துணையின்றிப் பிறவிபால் அலைவுற்று வேதனைப்படும் பாவி ! அப்பாவியை திருவுளமறிந்தும் பராமுகஞ் செய்வதுங் கருணையோ ? தேவர்கட் கெட்டாதவனே ! அத் தேவரைப்போல, அநுக்கிரக நிமித்த மகாதேவனு யிருந்தவனே ! திருவுத்தரகோச மங்கைப்பதிக்கரசே ! பஞ்சபூத சொரூபப் பொரு ளானவனே ! கருணைகூர்க — என அருளியதைக் காண்க. (20)

125. இனி, ஊனுயிர் கரைய அன்புதந்த கருணையை வியந்த (தி. - ன.) :—

ஆனைவெம் போரிற் குறுந்தூ றெனப்புல னலைலப்புண்
டேனையெந் தாய்விட் டிடுதிகண் டாய்வினை யேன்மனத்துத்
தேனையும் பாலையுங் கன்னலை யும்மமு தத்தையுமொத்
தூனையு மென்பினை யும்முருக் காநின்ற ஒண்மையனே.

---

123. அருள் என்பதற்கு, திருவடியான திருகோக்கு என்று விளக்கம் கூறுகின்றார். விடங்கன் - ஒருவரால் செய்யப்படாதவன் ; ஸ்வயம்பு. காரணகாரியங் கடந்த கருணை வடிவோய் என்கின்றார். கரிக்குன்று - யானை. வஞ்சிக்கொம்பு - பராசத்தி.

124. கோமளம் - அழகு ; திருவருள் திருமேனியழகு என்றனர். கொம்பர் - கொம்பு ; கொள்கொம்பு. அலமந்தனன் - அலைவுற்றேன். நண்ணுதல் - நெருங்குதல். உம்பர் உள்ளாய் - தேவர்களுக்கெட்டாத பொருளாயிருந்தும், அநுக்கிரகம் செய்யும் பொருட்டுத் தேவர்களுள் ஒருவராகி மகாதேவராய் விளங்குபவரே. அம்பரம் - ஆகாசம் ; நிலம் - பூமி ; அனல் - நெருப்பு. கால் - காற்று. அப்பு - நீர்.

(இ - ள்). மும்மத வேழங்கள் கர்வமாச்சரியத்தால் உயுத்தம் செய்யும் மத்தியில் அகப்பட்ட, சிறிய தூறு அலைந்தாற்போல, இந்திரிய வேடரால் இத்தேக போக விஷயத்தில் அதுவாய்க் கிடந்து அலையும் என்னைத் தாயினும் நல்ல தயாவுடையாய்! பராமுகஞ் செய்வது கருணையோ? தேவரீரோ பாவியான எனது உள்ளத்தில் தேன், பால், கரும்பு இரதம், அமிர்தம், இவை கலந்த ருசி போலச் சிவானந்தமாகி எனது உடலையும் என்பையும் உருகும்படி கருணை செய்யும் நின்மல! அமலப்பேறே!—என அருளியதைக் காண்க. (21)

126. இனி, நலமிலன் நண்ணுர்க்கு, நண்ணினார்க்கு நல்லவன் என்ற (தி. - ன.) :—

ஒண்மைய னேதிரு நீற்றையுத் தூளித் தொளிமிளிரும்
வெண்மைய னேவிட் டிடுதிகண் டாய்மெய் யடியவர்கட்
கண்மைய னேயென்றுஞ் சேயாய் பிறர்க்கறி தற்கரிதாம்
பெண்மைய னேதொன்மை யாண்மைய னேயலிப்
[பெற்றியனே.

(இ - ள்). நிட்களமானவனே! முழுநீறணியும் வெண்மையொளியே! என்னைப் பராமுகஞ் செய்வது கருணையோ! சுவாமி! சீரடியார்க்குச் சமீபப்பொருளே! வேருனவர்கட்கு அறிவொண்ணுத பெண்ணுடல் பெற்ற அநாதியே! எத்தேவர்கட்கும் வீரிய பராக்கிரமமான நாதனே! அவன் அவள் அதுவாகிய பெருமையனே! என வருளியதைக் காண்க. (22)

---

125. ஆனைப்போரில் அகப்பட்ட குறும் தூறுபோல் என்பது பழமொழி. புலன் - ஐம்புலன்கள். கன்னல் - கரும்பு ரசம், ஒத்து என்பதற்கு முன்சொன்ன நான்கினையும் கலந்த சுவையை ஒத்து என்கின்றூர். ஒண்மையன் - ஒளியன்.

126. உத்தூளித்து - விபூதியை நீரிற் குழையாது வரியின்றிப் பூசுதல். இதனையே முழு நீறணிதல் என்றனர். அண்மையன் - அருகிலுள்ளவன். பிறர்க்கு என்றும் சேயாய் என மாறுக. சேயாய் - தூரத்தில் உள்ளவனே. இச்சொற்கு உரை கூறப்படவில்லை. பெண்மையனே என்பதைத் தனியே பொருள் கொள்ளாமல் பெண்மையன், ஆண்மையன், அலி என்று கூட்டிப் பொருளுரைத்தல் ஆம். இங்கு உரையில் காட்டிய பொருள் நயத்தையும் காண்க.

127. இனி, இற்றைவரை திருவருளுதவியும் அவை தெரியாத (தி. - ன.) :—

பெற்றது கொண்டு பிழையே பெருக்கிச் சுருக்குமன்பின்
வெற்றடி யேனை விடுதிகண் டாய்விடி லோகெடுவேன்
மற்றடி யேன்றன்னைத் தாங்குக ரில்லையென் வாழ்முதலே
உற்றடி யேன்மிகத் தேறிநின் றேனெனைக் குள்ளவனே.

(இ - ள்). என்னால் அறியப்படாத பதமாகிய இன்பத்தநுகரண புவன போக மருளியும் அவை அருளென அநுபூதி பெருமல், 'யான், எனது' எனச் செருக்குற்று உண்மை அன்பிலாது வீணை பாவியான என்னைப் பராமுகஞ் செய்வது கருணையோ? அப்படியே திருவுளமானால் அடியேன் அனர்த்தத்தில் ஆழ்வேனே யொழிய வேறு பாதுகாக்கத் திருவுளங் காணேன்! எனது உயிர்வாழ் திருவடியே! தேவரீர் அருளே எனக்குத் துணையல்லாது வேறில்லை எனத்துணிவு பெற நின்றேன்; எனது அடிமை கொள்ளும் ஆண்டவனே! என அருளியதை யன்பாற் காண்க. (23)

128. இனி, திருவடி ஞானமான உள்ளது கருதாது இல்ல தான அபாவங்கருதுவன் என்ற (தி. - ன.) :—

உள்ளன வேநிற்க இல்லன செய்யுமை யற்றுழனி
வெள்ளன லேனை விடுதிகண் டாய்வியன் மாத்தடக்கைப்
பொள்ளனல் வேழத் துரியாய் புலனின்கட் போதலொட்டா
மெள்ளன வேமொய்க்கு நெய்க்குடந் தன்னை
[யெறும்பெனவே.

(இ - ள்). தேவரீர் திருவடி அநாதியே பிரிவிலாது உள்ளபடி அடியேன் உள்ளத்திருப்ப, அவை இழந்து, இல்லாத சூனியத்திற் கருதி, மயக்கறிவால் மாறுபட்டுப் பலமுயற்சி செய்யும் வெள்ளறிவான என்னைப் பராமுகஞ் செய்வது கருணையோ? வழுவை உரிப்பதான நாதனே! தேவரீர் திருவடி நெய்க்குடம்போல் நிறைந்திருப்ப, அவை புசிக்க விதியில்லாது எறும்பு அக்குடத்தைச் சுற்றித்திரிந்து

---

127. பெற்றது.....வெற்றடியேன் - இப்பகுதிக்குப் பிறர் வேறு பொருள்கள் கொள்வர்; சுருக்குமன்பு என்பதை அன்புசுருக்கும் என்று மாற்றுக. வெற்று அடியேன் - வீணைபாவியான என்னை. வாழ்முதல் - வாழ்வுக்கு மூலம்; திருவடியென்றூர். எனக்கு உள்ளவனே - என் ஆண்டவனே! (என் ஆண்டையே).

அலைந்ததுபோல், சிற்றின்பம் கருதி அலைவுற்ற என்னைத் திருவருட் கருணை யளித்துக் காக்கவேண்டும்— என அருளியதைக் காண்க. (24)

129. இனி, காலசங்காரஞ் செய்தமையைக் கூறும் (தி. - ன.) :

எறும்பிடை நாங்கூ ழெனப்புல னுலரிப் புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதிகண் டாய்வெய்ய கூற்றெடுங்க
உறுங்கடிப் போதவை யேயுணர் வுற்றவ ரும்பரும்பர்
பெறும்பத மேயடி யார்பெய ராத பெருமையனே.

(இ - ள்). புழுவானது எறும்புகளிடத்தில் அகப்பட்டு அரிப் புண்டு அலந்தது போலவே, ஐம்புலாதி வேடரில் அகப்பட்டுத் துன்பமுறும் பாழான சுதந்தர வீனனைப் பராமுகஞ் செய்வது கரு ணையோ? தேவரீர் திருவடி அருமையோ? பெருமையோ? அளவிடு வதோ? சிரடியார் நிமித்தியம், காலசங்காரஞ் செய்யும்போது, அப் போது மாத்திரம் தேவர்கள் சுவாமியே பொருளெனப் பிரஞ்ஞையுண் டானார்கள்; ஒழிய இடைவிடாதன்பு செய்ய ஞானமுடையாரல்லர்; சிரடியார் இடைவிடாது துன்ப இன்பம் இரண்டிலும் அநுபூதி பெறுவர்; ஆதலால் அவர்கட்கு இன்பம் மாறுதருஞந் திருவடி; என அருளியதை அன்பாற் காண்க. (25)

---

128. அபாவம் - இல்லாதது. உள்ளனவே நிற்க, இல்லன செய் யும், என்றதற்கு உரையருளிய அநுபூதிப் பொருளை ஓர்க. மையல் - மயக்கம். தழனி - ஆரவாரம்; இங்குப் பல முயற்சி செய்தல் என்கின் றார். வெள்ளன் - வெள்ளறிவன். வெள்ளன், அலேன் என்று பிரித் தும் பொருள் கூறுவர் பிறர். வெள்ளனலேன் என்று ஒருமித்துப் பொருள் காண்டலும் பொருந்துமாயிற் கொள்க. தடக்கைப் பொள்ளல் வேழம் என்க. உரி - தோல். புலன் நின் கண் போதல் ஒட்டா - ஐம் புலன்களையும் உன்னிடத்திற்குச் செலுத்தமாட்டாமல் (சிற்றின்பம் கருதி அலைகின்ற) எறும்பின் முயற்சி பயனளிக்காதது என்பது குறிப்பு. உள்ளேயுள்ள சிவனை அணுகமாட்டாமல் புறம்பேயுள்ள சிற்றின்ப முயற்சி யில் ஈடுபடுவதை இகழ்தலாகும்.

129. நாங்கூழ் - காகப்பூச்சி. அலந்த - வருந்திய. வெய்யகூற்று ...பெருமையனே - என்ற பகுதிக்குப் பிறர் பின்வருமாறு உரை கூறுவர். 'கொடிய யமன் ஓடுங்கும்படி அவன் மேற்சென்ற மனம் பொருந்திய தாமரை மலர்களாகிய அடிகளையே அறியலுற்றவர் தேவர்க்கும் மேலாகப் பெற்ற பதத்தை அடைந்த அடியவராவார்'; இன்னும், உம்பர் உம்பர் பெறும் பதம் என்பதற்கு - மேலும் மேலும் பெறும் பதவி என்றும் சிலர் உரைப்பர். இங்குக் கூறப்பட்டுள்ள உரை வேறானது.

130. இனித் திருமுடிக் கங்கையிற் சந்திரன் திருத்தோணி யானமையைக் கூறும் (தி. - ஸ.) :—

பெருமீ ரறச்சிறு மீன்றுவண் டாங்கு நினைப்பிரிந்த
வெருநீர்மை யேனை விடுதிகண் டாய்வியன் கங்கைபொங்கி
வருநீர் மடுவுள் மலைச்சிறு தோணி வடிவின்வெள்ளைக்
குருநீர் மதிபொதி யுஞ்சடை வானக் கொழுமணியே.

(இ - ள்). ஆழ்ந்த வெள்ளத்திலிருப்பதான மச்சம் அந்நீர் வற்றத் துன்பம் அடைவதுபோல, ஆனந்த வெள்ளத்திலழுந்திய அடியேன் இவ்வநுபூதி தெரியாது, திருவடி வேறெனப் பிரிந்த ஞான்று மற்ற பாவியான என்னைப் பராமுகஞ் செய்வது கருணையோ? தேவீர் திருவுருவான திருமுடியிற் கங்கை திருச்சடை வழியாகப் பெருகும்போது, அவ்விடத்திலிருந்த வெண்பிறை மலை மேலிருந்த திருத்தோணி அலைவற்றதுபோல அலையா நின்ற திருச்சடா பார முடைய சிவரத்தினப் பிரகாசமணியே! எனவே 'வெள்ளத்தே தோன்றிக் கழுமலத்தே வீற்றிருந்த எம்னுள்ளத்தே நின்ற ஒளி மணி யெனக் கொள்க. (26)

131. இனிக் குருவ்டிவு கண்டின்புற்றமையைக் கூறும் (தி. - ன.) :—

கொழுமணி யேர்நகை யார்கொங்கைக் குன்றிடைச்
[சென்றுகுன்றி
விழுமடி யேனை விடுதிகண் டாய்மெய்ம் முழுதுங்கம்பித்
தழுமடி யாரிடை யார்த்துவைத் தாட்கொண்
[டருளியென்னைக்
கழுமணி யேயின்னுங் காட்டுகண் டாய்நின் புலன்கழலே.

(இ - ள்). முத்துப்போன்ற தந்த பந்தியுடைய மாதரார் தனத்தில் ஆசை வைத்து அதுவாய்க் கெட்டு விழும் அடியேனை அப்படியே திருவுளம் பராமுகஞ் செய்வது கருணையோ! நாதனே! தேவீர்! பரமகுருவா யெழுந்தருளித் தேகமுழுவதும் பரவசமுற்று,

---

130. பெருமீரறச் சிறுமீன் துவள்தல்; முரணின் நயம் காண்க. வெரு நீர்மை - அஞ்சுதலாகிய குணம். வெரு என்றது எதுகை நோக்கி வெரு என்றுனதாகக் கொண்டனர் உரைகாரர். வியன் - பெரிய. குரு - நிறம். வானமணி.

விம்மி, அழுஞ் சிரடியார் மத்தியிலே அடிமைப் பணி செய வைத்தும், பின்னும் எனது மலவழுக்கைத் திருநோக்கு ஆட்கொண்டு போக்கு விக்கும் சிவஞான ரத்தினமே—என அருளியதைக் காண்க. (27)

132. இனி, நஞ்சை யமுதாகக்கொண்டமையைச் சொல்லும் (தி. - ன.) :—

புலன்கடி கைப்பிக்க யானுந் திகைத்திங்கொர்
[பொய்ந்நெறிக்கே
விலங்குகின் றேனை விடுதிகண் டாய்விண்ணு
[மண்ணுமெல்லாம்
கலங்கமுந் நீர்நஞ் சமுதுசெய் தாய்கரு ணாகரனே
துலங்குகின் றேனடி யேனுடை யாயென் றொழுகுலமே.

(இ - ள்). ஆணவமலவசமான புலாதி ஐந்தும் விஷயமே பொருளென மயக்கஞ் செய்வன ; அவ்வழியே யானும் மயக்கறிவுகெ பொய்ப்போகமான தனு ரட்சையிலே பிரதிபந்தப்பட்ட என்னைப் பராமுகஞ் செய்வது கருணையோ ? சுவாமி ! விண்ணுளோர் மண்ணு ளோர் எல்லாரும் அஞ்சும்படி பாற்கடலிற் பிறந்த விடத்தை அமிர்த மாகக்கொண்ட கருணைதித் தெய்வமே ! அடியேன் பிறவித் துன்ப வேதனைப்படுகின்றேன் ; என்னையுடைய வழியடியார் தொண்டு செய்ய அருளும் நாதனே !—என அருளியதைக் காண்க. (28)

133. இனி, மகாமேருவை வில்லாயுடைமையைக் கூறும் (தி. - ன.) :—

குலங்களைந் தாய்களைந் தாயென்னைக் குற்றங்கொற்
[றச்சிலையாம்
விலங்கலெந் தாய்விட் டிடுதிகண் டாய்பொன்னின்
[மின்னுகொன்றை
அலங்கலந் தாமரை மேனியப் பாவொப்பி லாதவனே
மலங்களைந் தாற்சுழல் வன்றயிரிற் பொரு மத்துறவே.

---

131. ஏர் நகை - அழகிய பற்கள். குன்றி - மெலிந்து. கம்பித்து - நடுங்கி. ஆர்த்து - நிரம்பப்பெருத்தி. கழுமணி - கழுவிய இரத்தினமே. காட்டுகண்டாய் - காட்டுவாய்.

132. திகைப்பிக்க - மயக்க. முந்நீர் - கடல். கருணாகரன் - கரு ணைக்கிருப்பிடமானவன். துலங்குதல் - நடிங்குதல். தொழுகுலம் - வேதியன்.

(இ - ள்). சுவாமி! அடியேன் பரம்பரையான கோத்திரமுங் குலமுங் கொண்டென்ன பயன், என்னத் திருவுளம் இரங்கி எனது உடல் நவையும் நீக்கினாய், அடியேனைப் பிழை யணுகாது விளங்க; மகாமேருவை வில்லாகச் செய்தாய்; எந்தாயே! இப்போது பராமுகஞ் செய்வது கருணையோ? பொன்வண்ணமான கொன்றைமாலை தரித் தோய்! அழகிய செந்தாமரை மலர்போலுஞ் சிவந்த திருமேனி யுடைய அப்பனே! ஒருவராலும் ஒப்பிடக்கூடாத நாதனே! அடி யேன் பஞ்சமல காரிய சத்தியால், தயிரிற் பொருந்திய மத்துப்போல முன்பின் இல்லாது அலையும் எனதுயிரைத் திருவுளமிரங்கிக் கருணை செய்ய வேண்டும்—என அருளியது. (29)

134. இனி, அர்த்தநாரீசுவரமானமையைக் கூறும் (தி. - ன.):

மத்துறு தண்தயி ரிற்புலன் தீக்கது வக்கலங்கி
வித்துறு வேனை விடுதிகண் டாய்வெண் டலைமிலைச்சிக்
கொத்துறு போது மிலைந்து குடர்நெடு மாலைசுற்றித்
தத்துறு நீறுட னேரச்செஞ் சாந்தணி சச்சையனே.

(இ - ள்). சுவாமி! அடியேன் திருவடியை விட்டுப் பிரிந்து மத்தினாற் கடையப்பட்ட தயிர் அலைவுற்றதுபோல, ஐம்புலத்தீயால் வெதுப்பப்பட்டு, (நிற்கும்) மாயா வித்தாகிய என்னைப் பராமுகஞ் செய்வது கருணையோ? தேவரீர் திருக்கூத்தாவெனில், பிரம கபாலங்களையும் அவற்றுடன் பூமாலைகளையும், அணியும்போது, குடருடன் மாலை சுற்றித் தத்துறுவதும், அந்தத் திருமேனியில் நீறும் ஒருபாற் சந்தனகளப வாசனையும் அணிந்து, பூதங்களுடன்

---

133. குலம் கலைத்தாய் - நீ குலமற்றவன் என்றும், என் குலப் பற்றை நீக்கினாய் என்றும் பிறர் வெவ்வேறு வகையாய்ப் பொருள் கூறு வர். கொற்றச்சிலையாம் விலங்கல் - மகாமேரு. அலங்கல் - மாலை. மலம் ஐந்தால் - பஞ்ச மலங்களால். பஞ்ச மலங்கள் - ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதானம் என்பன.

கூடித் திருக்கையாற் கொட்டியாடும் நாதனே! எவ்வகையும் அருளாதலால், கருணைகூற வேண்டுமென வருளியதைக் காண்க. (30)

135. இனி, கச சங்காரமான உண்மையைக் கூறும் (தி. - ன.):

சச்சையனே மிக்க தண்புனல் விண்கால் நிலநெருப்பாம்
விச்சைய னேவிட் டிடுதிகண் டாய்வெளி யாய்கரியாய்
பச்சைய னேசெய்ய மேனிய னேயொண் படவரவக்
கச்சைய னேகடந் தாய்தடந் தாள அடற்கரியே.

(இ - ள்). சச்சை கொட்டிய பூதநாதா! பஞ்சபூதமான மிகுந்த சித்து வித்தையுடைய சுவாமி! பராமுகமடியேனைச் செய்வது கருணையோ? புறம்பே எழுந்தருள்வாய்! சருவசீவ சாட்சியே! கோமள நிறமுடையாய்! ஒருபாற் சிவந்தமேனியுடையோய்! சுத்தமான படத்தையுடைய பாம்பைக் கச்சையாகக் கட்டியோய்! கசமுக விராட்சதனைச் சங்கரித்து நிக்ரகஞ் செய்த சுவாமி! கருணை கூர்ந்து அன்பு பாலிக்க—என அருளியதைக் காண்க. (31)

---

134. இதற்குத் தலைப்பு அர்த்தநாரீசுவரம் என்று கூறியது பொருத்தமற்றதெனக் காண்கிறது. இஃது இறைவனின் கொடுகொட்டி ஆடல் கோலத்தைக் கூறுவதாம். புலன்தீ புலனுகியதீ. கதுவ - பற்ற. வித்து உறுவேனை - (மாயா) வித்தாயிருக்கிற என்னை. மிலேச்சி - தரித்து. போது - பூ. மிலைந்து - சூடி. கபாலமும் பூமாலையும் சுழலும்போது குடல்களும் மாலைகளும் தத்துறுகின்றன என்பது வருணனை. நீறு - விபூதி. ஆரம் - சந்தன மரம். ஆரச்செஞ்சாந்து - சந்தனக்குழம்பு. சச்சையன், இவ்வுரை சச்சை கொட்டியவன் என்று பொருள் கூறுகின்றது. பிறர் இச்சொல்லுக்கு வேறு பல பொருள்கள் கூறுவர்.

135. விச்சையன் - சித்துவித்தையுடையவன். வெளியாய் - வெண்மை நிறமுடையவனே, கரியாய் - கரிய நிறமுடையவனே என்றும் கொள்க. இவ்வுரையின் நுண்மையை ஓர்க. கோமளம் - இளமை; அதனைப் பசுமையாகக் கொண்டு கோமள நிறமுடையாய் என்றனர் போலும். தடம் தாள - பெரிய கால்களையுடைய. அடல் - வலிமை, கரி - யானை.

136. இனி, திருமிடற்றில் நஞ்சணியாகக் கொண்டமையைக் கூறும் (தி. - ன.) :—

அடற்கரி போலும் புலன்களுக் கஞ்சி யழிந்தவென் னை
விடற்கரி யாய்விட் டிடுதிகண் டாய்விழுத்
[தொண்டர்க்கல்லால்
தொடற்கரி யாய்சுடர் மாமணி யேசுடு தீச்சுழலக்
கடற்கரி தாயெழு நஞ்சமு தாக்குங் கறைக்கண்டனே.

(இ - ள்). கொல்வதான துன்பஞ் செய்யவரும் யானைபோல, பஞ்சவிந்திரியப் புலன்களுக்குப் பயந்து அவ்வழியாகக் கெட்டுப் போன என்னை அநாதியே பிரிவிலாதோய்! பராமுகஞ் செய்வது கருணையோ? சீரடியாரல்லாது வேறொருவராலுங் கிட்டுதற்கரியோய்! சிவஞானப்பிரகாச சிவரத்தினமே! வடவாமுகாக்கினிபோற் சுழன்று வருவதான விடத்தை அமிர்தப்பிழம்பாகத் திருமிடற்றில் தரித்த திருநீலகண்டனே! அடியேனைக் கருணை கூர்க—என அருளியதைக் காண்க. (32)

137. இனி, அநாதியாயிருந்த பழைய அடியேனைப் பிரிவில் லாதபடி அருள வேண்டுமென்ற (தி. - ன.) :—

கண்டது செய்து கருணைமட் டுப்பரு கிக்களித்து
மிண்டுகின் றேனை விடுதிகண் டாய்நின் விரைமலர்த்தாள்
பண்டுதந் தாற்போற் பணித்துப் பணிசெயக்
[கூவித்தென்னைக்
கொண்டெனைந் தாய்களை யாய்களை யாய குதுகுதுப்பே.

(இ - ள்). தேவரீர் சகளீகரித்து எழுந்தருளிய திருமேனியைத் தரிசித்துக் கிருபாகடாட்சத் திருவருள் இன்பம் புசிப்பும் புசித்துத் திருவடியில் அடிமையென அடக்கமில்லாது சம வேறுபாடாக மிண்டிய என்னைப் பரமுகம் செய்வது கருணையோ? சுவாமி அருள் மணம் நாறும் திருவடியை அநாதியே பிரிவிலாது இருந்தபடி இருத்தித் திருவருட்பணிக்கு ஆட்செய்து அப்படியே பணி அடியேன் செய்வதாகப் பிரேரக காண்டங்களுக்கு ரூபமாக இரட்சித்த என்

---

136. ஐம்புலன்களுக்கு யானை உவமை. அழிந்த - கேடுற்ற. விழு - மேன்மையான. கடற்கு - கடலிலே; பரற்கடலும் கரிதாகும்படி எழுந்த என்னும் கொள்க. கறை - விடம்; கருநிறமும் ஆம்.

தாயே! ஆணவக் களையைத் திருநோக்கால் நீக்கி மலபோத இறு மாப்பைத் திருஞானத்தால் அடக்குவாய்—என அருளியதைக் காண்க. (33)

138. இனி, திருவுளக்குறிப்பே யின்பமென்ற (தி. - ன.) :—

குதுகுதுப் பின்றிநின் றென்குறிப் பேசெய்து
[நின்குறிப்பில்
விதுவிதுப் பேனை விடுதிகண் டாய்விரை யார்ந்தினிய
மதுமதுப் போன்றென்னை வாழைப் பழத்தின்
[மனங்கனிவித்
தெதிர்வதெப் போது பயில்விக் கயிலைப் பரம்பரனே.

(இ - ள்). தேவரீர் திருவடி ஞான வின்பத்தில், குதூகலஞ் செய்யாது நின்றேன். போத வழியே பொருளெனக் கொண்டின்ப முற்று, நாதனே! உனது திருவுளக் குறிப்பான கருணையை யிழந்த துன்மலனைக் கருணை செய்யாது பராமுகஞ் செய்வதோ? வாசனை பொருந்திய இன்பத்தேன் சொரியும் மது வெள்ளம்போல் அடியேனைச் செய்து, மனத்தையும் வாழைக்கனி குழைவது போலக் குழைந்திருப்பச் செய்வது எந்தக்காலமோ? பாரம் பரியமாகச் சீரடியார் பொருட்டு எழுந்தருளிய வெள்ளியங்கிரியையுடைய சுவாமி! எனை அருளியதைக் காண்க. (34)

---

137. கண்டது செய்து - கண்ணுற் கண்ட காரியங்களைக் கண்டபடி செய்து என்று பிறர் பொருள் கூறுவர். இங்கு 'எழுந்தருளிய திருமேனியைத் தரிசித்து' என்பது உரை. மட்டு - தேன்; இன்பம். களித்து மிண்டுகின்றேனை - அம்மட்டிலுல் உண்டான கள்மயக்கத்தால் மிண்டுகின்ற என்னை. களித்து - கள்ளைப்பருகி வெறி கொள்ளுதல். பிரேரக காண்டம், பக். 290. கூவித்து - கட்டளையிட்டு; கூவுவித்து. குது குதுப்பு - இறுமாப்பு.

138. முதலிரண்டடிகளுக்கும் இங்கு வகுக்கப்பெற்ற உரையின் அருமையைக் காண்க.

(முன்பு) நின்றேன்; செய்தேன் (இப்பொழுது) விதுவிதுப்பேன் என்பது உரை. இது முன் செய்யுள் சென்ற முறையைப் பின்பற்றுவதாகும். பிறரெல்லாம் 'நின்று, என் குறிப்பே செய்து, விதுவிதுப்பேன் என்று கொள்வர். பயில் - பழமையாக எழுந்தருளிய. வி பயில் கயிலை என்றும், பயில் வி கயிலை என்றும், பயில்வு இக்கயிலை என்றும் வெவ்வேறு விதமாகப் பிறர் பிரித்துப் பொருள் கூறுவர். வி - விசும்பு; அழகு; மலர்.

139. இனி, சீரடியாரருள் சேர்வதான (தி. - ன.) :—

பரம்பர னேநின் பழவடி யாரொடு மென்படிறு
விரும்பர னேவிட் டிடுதிகண் டாய்மென் முயற்கறையின்
அரும்பர நேர்வைத் தணிந்தாய் பிறவியை வாயரவம்
பொரும்பெரு மான்வினை யேன்மன மஞ்சிப்
[பொதும்புறவே.

(இ - ள்). திருக்கயிலாச பராம்பரியமான பரமசிவனே! தேவரீர் அடிமைப் பணி செய்யும் அடியாருடன் அடியேன் சேர்வதாக; யான் எனது என்ற பொய்யைத் திருவுளக்கிருபையால் இரங்கி இச்சை வைத்து அவை கெடும்படியருளிப் புசிப்பாகக் கொள்வோய்! அரனே! பராமுகஞ் செய்வது கருணையோ? தேவரீர் அடியேன் படிறு கொள்வதரிதோ? கொடிய விடத்தை எல்லா உயிர்களையும் இரட்சிக்கும் வண்ணம் திருநீலகண்டந் தரித்தாய்! எது நிமித்த மென்னில், பிறவித் துன்பமான ஐவாய் அரவத்தின் வாயகப்பட்டுப் பயந்து, வினையேன் மனம் நடுங்கி மலப்போதப் பொந்தில் ஒளிப்ப தானேன்! பெருமையுடையோய்;—எனவே கருணை செய்வாயென அருளியதைக் காண்க. (35)

140. இனி, சிங்கமே யுன்னடிக்கே போதுகின்றே னென்ற (தி. - ன.) :—

பொதும்புறு தீப்போற் புகைந்தெரி யப்புலன் தீக்கதுவ
வெதும்புறு வேனை விடுதிகண் டாய்விரை யார்நறவம்
ததும்புமந் தாரத்திற் ரூரம் பயின்றுமந் தம்முரல்வண்
டதும்புங் கொழுந்தே னவிர்சடை வானத் தடலரைசே.

---

139. பரம்பரன் - பராபரன்; மேலானவற்றிற்கெல்லாம் மேலானவன். முன் செய்யுளிலுள்ள 'கயிலைப் பரம்பான்' என்பதற்குக் கூறிய உரையை ஒட்டி இங்கும் கூறுகின்றார். படிறு - பொய். என் படிறு (நீக்க) விரும்பு அரனே எனப்பிரிக்க.

மென்முயல் கறையின் அரும்பு - பிறை; அர - பாம்பு; ஆகவே பிறையையும் பாம்பையும் ஒரு சேர வைத்தாய் என்று பிறர் பொருள். கொள்வர். உரையாசிரியர் கொண்ட உரையின் பொருத்தம் ஆராயத் தக்கது.

(இ - ள்). சுவாமி! மரப் பொதும்பிலுளதாகிய தீ கொளுத்த அது புகைந்து எரிவதுபோல, பஞ்ச விந்திரிய விஷயத்தால் துன்பப் படும் என்னைப் பராமுகஞ் செய்வது கருணையோ? வாசனை பொருந் தியதாயும், தேன் சொரிவதாயும், இராகின்ற மந்தாரப்பூவின் மாலை யில் வண்டு அவ்வின்பம் புசித்து, தேக்கிட்டொலியா மாலைகின்ற திருச்சடையிற் பிரகாசமாக விளங்கிய சடையப்பரான விண்ணோர்க் கரசரான சிங்கமே! உனது சீர்ப்பாதஞ் சேர்க்க அருள்வாய்—என அருளியதைக் காண்க. (36)

141. இனி, திருவடியே சரணுகதி என்ற (தி. - ன.) :—

அரைசே யறியாச் சிறியேன்
பிழைக்கஞ்ச லென்னினல்லால்
விரைசேர் முடியாய் விடுதிகண்
டாய்வெண் ணகைக்கருங்கண்
திரைசேர் மடந்தை மணந்த
திருப்பொற் பதப்புயங்கா
வரைசேர்ந் தடர்ந்தென்ன வல்வினை
தான்வந் தடர்வனவே.

(இ - ள்). எனது ஆன்மநாதனே! அநாதியே அறிவிலாதவன் அடிமையென அநுபவம் பெருத குற்றம் பொறுத்து அபயமருள் வது தேவரீரல்லாது வேறுளரோ? திருவருண்மணமுடைய திரு முடியோய்! அடியேனைப் பராமுகஞ் செய்வது கருணையோ? முத்துப் போன்ற தந்தமும், கருமை போன்ற கண்ணுமுடைய பாற்கடலிற் பிறந்த பராசத்தியை மணஞ்செய்த பொற்பாத கமல குஞ்சிதமே!

---

140. 'சிங்கமே உன்னடிப் போதுகின்றேன்' என்பது அப்பர் சுவாமிகள் திருவாக்கு.

பொதும்பு - பொந்து. புலன் தீ கதுவ - புலன்களாகிய நெருப்பு பற்ற. விரை - வாசனை. கறவம் - தேன். மந்தாரத்தில் - மந்தார மாலையில். தாரம் பயின்று மந்தம் முரல் வண்டு. தாரம் - வல்லோசை. மந்தம் - மெல்லோசை. அதுப்பும் - அழுந்துகின்ற. அடல்அரசு - வலிமை மிக்க அரசு; சிங்கம்.

என் வினை மலைகளுள்ள மார்க்கம் போலத் துன்பஞ் செய்வதைச் செய்யாமற் கருணை செய்ய வேண்டும்—என அருளியதைக் காண்க.

142. இனி, சிரடியார்க்குள்ளத் தமுதென்ற (தி. - ன.) :—

அடர்புல னினிற் பிரிந்தஞ்சி யஞ்சொனல் லாரவர்தம்
விடர்விட லேனை விடுதிகண் டாய்விரிந் தேயெரியும்
சுடரனை யாய்சுடு காட்டர சேதொழும் பர்க்கமுதே
தொடர்வரி யாய்தமி யேன்றனி நீக்குந் தனித்துணையே.

(இ - ள்). சுவாமி! புலன்கள் அடியேனைத் துன்பஞ் செய்வதற்குப் பயப்பட்டு, அழகிய வஞ்ச நயமொழியார்களுடைய சிற்றின்பத்தை மிகு போகியாக அழுந்தும் என்னைப் பராமுகஞ் செய்வது கருணையோ? சேணுறும் தழற்பிழம்பானவனே! இடுகாட்டுக்கிறையே! சிரடியார் உள்ளத்தமிர்தமே! ஒருவராலுங் கிட்டுதற்கரியோய்! எனது பிறவிப் பிணி தீர்ப்பதான ஒப்பற்ற உயிர்த்துணையே! என வருளியதைக் காண்க. (38)

143. இனி, காயக்கிலேச மறவேண்டுமென்ற (தி. - ன.) :—

தனித்துணை நீநிற்க யான்றருக் கித்தலை யானடந்த
வினைத்துணை யேனை விடுதிகண் டாய்வினை யேனுடைய
மனத்துணை யேயென்றன் வாழ்முத லேயெனைக்
[கெய்ப்பில்வைப்பே
தினைத்துணை யேனும் பொறேன்றுய ராக்கையின்
[றிண்வலியே.

141. அரைசே - அரசனே. அஞ்சல் என்னின் அல்லால் - அபயம் அருளினாலல்லாமல். திரைசேர் மடந்தை மணந்த என்பதற்குத் திருமகள் வணங்கிச் சார்ந்த என்றும், திரைசேர் மடந்தை என்பது கங்காதேவியைக் குறிக்கும் என்றும் பிறர் பிற பொருள் கூறுவர். திருவாரூரில் திருமகள் தவம்புரிந்த வரலாற்றைச் சிலர் குறிப்பர். இங்கு, பாற்கடலிற் பிறந்த பராசக்தியை மணந்தமையைக் குறித்தது ஆராயத்தக்கது. புயங்கர - பாம்பணியுடையோனே! வரைசேர்ந்து அடர்ந்தென்ன - மலைகள் ஒன்று கூடி நெருங்கினாற்போல. அடர்வன - துன்பம் செய்வன.

142. அடர் புலனால் நிற் பிரிந்து என்பதற்குப் பொருள் எழுதப்படவில்லை. என்னை வருத்துகின்ற ஐம்புல வேட்கையால் உன்னைப் பிரிந்து என்று பொருள் உரைக்க. சேண் நாறும் - தூரத்திலே தெரியும். தொழும்பர் - அடியார். தமியேன்தனி - தனிமையாயுள்ள என் தனிமையை

(இ - ள்). சுவாமி! எனது உளத்திலே தோன்றுத் துணையாக எழுந்தருளி யிருப்பதை மறந்து, மாறுபாடாகத் தலையாலே நடந்து செல்வதான என் வினையை முன்னிலையாகக் கொண்ட் என்னை அப்படியே பராமுகஞ் செய்வது கருணையோ? பொல்லாவினையேற்கு மனப்பிரேரகமே! யான் வாழுமுதலே! யான், எனது என்றவை அற்றவிடத்தில் இருப்பதான சேமமே! தினையளவு காலமும் பொறுக்கமாட்டேன்; துன்பதேக போக பாசத்தை; எனவே கருணை செய்ய வேண்டுமென அருளியதைக் காண்க. (39)

144. இனி, ஸ்ரீகயிலாய மலையிலெழுந்தருளினமையைக் கூறும் (தி. - ன.) :—

வலைத்தலை மானன்ன நோக்கியர் நோக்கின் வலையிற்பட்டு
மிலைத்தலைந் தேனை விடுதிகண் டாய்வெண் மதியினெற்றைக்
கலைத்தலை யாய்கரு ணைகர னேகயிலாய மென்னும்
மலைத்தலை வாமலை யாள்மண வாளவென் வாழ்முதலே.

(இ - ள்). வலைக்குள் அகப்பட்ட மான் போம் வழியில்லாது அதனுள் நின்று மயங்குவது போல, மாயா நோக்கமுடைய நாரி மோகக் கண்ணின் வலையிலகப்பட்டுப் போகமுற்று அலைவதான வென்னைப் பராமுகஞ் செய்வது கருணையோ? உதய முதல் நாள் மதியைச் சூடுஞ்சிரசோய்! கருணைதி யாலயப்பொருளே! எல்லா மலைகளுக்கும் மேற்பட்ட வெள்ளியங்கிரியே கோயிலாக உடையாய்! இமைய வல்லிக்கு மணவாளக் கோலமுடையோய்! என்னுயிர் வாழ்வதான விடமே!—எனவே, திருவடியே தாரகமென வருளியதைக் காண்க.

---

143. தருக்கி - கருவமடைந்து. வினைத்துணையேனை - வினையைத் துணையாகக்கொண்ட என்னை. எய்ப்பில் - இளைத்த காலத்துக்குதவுமாறு. வைப்பு - சேமநிதி, வலை - பாசம்.

144. வலை தலை மான் - வலையில் அகப்பட்டமான். வலைத்தலை மானன்ன நோக்கு - வெருண்ட நோக்கு. மிலைத்து - பிரமித்து. மலை யாள் - உமை.

145. இனிற் திருவடி கேட்பவோல மிடுவதான (தி. - ன.) :—

முதலேச்செவ் வாய்ச்சியர் வேட்கைவெந் நீரிற் கடிப்பமூழ்கி
விதலேச்செய் வேனே விடுதிகண் டாய்விடக் கூன்மிடைந்த
சிதலேச்செய் காயம் பொறேன்சிவ னேமுறை
[யோமுறையோ
திதலேச்செய் பூண்முலே மங்கைபங் காவென் சிவகதியே.

(இ - ள்). சுவாமி! அடியேன் நெட்டி மலர் போன்ற செவ்வாய ரான மாதரார்மேல் ஆசையான வெப்பநீரின் முழுகினது போல அழுந்தி வீணுட்படும் என்னைப் பராமுகம் செய்வது கருணையோ? விடத்தினுலுளதாகிய குற்றமே யுருவான அநித்திய தேக போகம் பொறுப்பதில்லே; சிவனே! தேவரீர் திருவடிக்கு ஓலம்! ஓலம்! அழகு தேமல் பூத்த சகலாபரண தன மங்கைப்பாகா! என்னுயிர் பெறுவதான பரமமுத்த சிவனே!—என அருளியதைக் காண்க. (41)

146. இனி, திருவடியே பரம்முத்தி யென்ற (தி. - ன.) :—

கதியடி யேற்குன் கழல்தந் தருளவு மூன்கழியா
விதியடி யேனை விடுதிகண் டாய்வெண் டலேமுழையிற்
பதியுடை வாளரப் பார்த்திறை பைத்துச் சுருங்கவஞ்சி
மதிநெடு நீரிற் குளித்தொளிக் குஞ்சடை மன்னவனே.

(இ - ள்). தேவரீர் அடியேற்குச் சிவன்முத்த சஞ்சரிப்பிலே, பர முத்தியான திருவடி யருளியும், இத்தேகமான பொய்ப்போகம் என் றலே விதியால் விடாத வென்னைப் பராமுகம் செய்வது கருணையோ?

---

145. முதலே - கோரை வகை (Cyperus dubius); பூடுவகை Polygonum Carbaralim) இதனை முதலேப்பூண்டு என்றும் சொல்லுவர்; செங்கிடை (Seshania Aculaeta). இவை சென்னைப் பல்கலேக் கழகத் தமிழ்ராதியில் உள்ளவை. நெட்டிமலர் என்று இங்கு உரைவகுத்தது இவற்றுள் ஒன்றையோ, இவைபோன்ற ஒன்றையோ குறிக்கும். அச் சிலுள்ள பல உரைகளும் முதலே என்பதை நீர்வாழும் பிராணியாகவே பொருள்கொண்டு உரைக்கும்.

கடிப்பமூழ்கி - ஆழமூழ்கி. விதலே - நடுக்கம். விடக்கு ஊன் மிடைந்த காயம் என்றும் பிரித்துக் கொள்க. விடக்கு - மரமிசம். இதற்குத் தசையும் கொழுப்பும் கலந்த உடல் எனப் பொருள்கொள்வர். இங்கு விடத்தாலுண் டாகும் குற்றத்தாலமைந்த காயம் என்று உரை எழுதுகின்றூர். சிதலே - நோய். திதலே - தேமல்.

சுவாமி! திருமுடியில் தரிப்பதான கபாலத்தில் சர்ப்பம் அதில் குடியாயிருந்தும், ஓர்காலம், அது தன் முகத்தைக் கபாலத்துக்குட் பிரவேசிக்கப்போங்காலம், அதனைச் சந்திரன் கண்டு பயமுற்று, திருச்சடையிலிருந்த கங்கையிலே பொளித்து நிற்கும் சடைமுடி யுடைய இராசனே! எனவே, இவை சூடிய பதார்த்தம் அடியார் பொருட்டன்றி வேருன விளைவன்று; முதலகவலின் முதல்மொழி யுரைக்குத் திட்டாந்தரமான, **திருவெழுகூற்றிருக்கை** உரையநுபூதியிற் (பக். 97-98) கண்டு கொள்ளத்தக்கது. (42)

147. இனி, வேதாகமம் அருளிய திருவருளைக் கூறும் (தி. - ன.) :—

மன்னவ னேயொன்று மாறறி யாச்சிறி யேன்மகிழ்ச்சி
மின்னவ னேவிட் டிடுதிகண் டாய்மிக்க வேதமெய்ந்நூல்
சொன்னவ னேசொற் கழிந்தவ னேகழி யாத்தொழும்பர்
முன்னவ னேபின்னு மானவ னேயிம் முழுதையுமே.

(இ - ள்). எனது ஆன்மநாதனே! ஓர்வகையும் திருவுளப்பாங் காகத் தெரியாத அற்பவின்பனை என்னை, மின்னைப்போல விட்டு விளங்குவோய்! என்னைப் பராமுகஞ் செய்வது கருணையோ? மகத் தான ஆகம வேதமருளிய சுவாமி! வாசகமெட்டாதவனே! திருவடி யகலாத சீரடியார்க்கு முன்னிலைப்பொருளே! யாவைக்கும் பிற் பொருளே! ஆதியுமந்தமுமுள பரிபூரண சருவ வியாபகப்பொருளே! —எனக் காண்க. (43)

---

146. உன் கழல் அடியேற்குக் கதி (யெனத்) தந்து என மாற்றுக. ஊன் கழிதல் - உடலை மாய்த்தல். வெண்டலை - கபாலம்; தலைமாலையி லுள்ளது. முழை - துவாரம். பதியுடை அரவு - நுழையப் போகும் பாம்பு. பதியுடை - பொருந்தியுள்ள என்றும் கூறுவர். இறை பைத்துச் சுருங்க; இதற்கு உரை எழுதப்படவில்லை. சிறிது படமெடுத்துப் பிறகு அதனைச் சுருக்கிக்கொள்ள என்பது பொருள். நெடுநீர் - கங்கை நீரினுள்.

147. மகிழ்ச்சிச் சிறியேன் என்று கூட்டி அற்ப இன்பனை என்னை என்று பொருள் கூறுவர். மகிழ்ச்சிமின் என்றுகூட்டி உமையவளைக் குறிப் பதாகவும், மகிழ்ச்சி மின்னவனே, என்று, மகிழ்ச்சி விளைக்கும் சோதிய னை இறைவனைக் குறிப்பதாகவும், மகிழ்ச்சி மின்னலைப்போன்று தோன்றி மறைவதான தன் நிலையைக் குறிப்பதாகவும் இன்னும் பல வாறும் பிறர் கூறுவர். முழுது - பரிபூரணவஸ்து.

148. இனி, சிரடியார்பாற் சேர்வதே பொருளென்ற (தி. - ன.) :

முழுதயில் வேற்கண் ணியரென்னு மூரித் தழன்முழுகும்
விழுதனை யேனை விடுதிகண் டாய்நின் வெறிமலர்த்தாள்
தொழுதுசெல் வானற் றொழும்பரிற் கூட்டிடு
[சோத்தெம்பிரான்
பழுதுசெய் வேனை விடேலுடை யாயுன்னைப் பாடுவனே.

(இ - ள்). சுவாமி! தேவரீர் திருவடியை மறந்து, வேல்போலுங் கூர்மையுடைய கண்களையுடைய மாதரார் ஆசையென்னும் அக்கினியில் அழுந்தி, விழுதூன்றி, அதுவாய் விரிந்து போன என்னைப் பராமுகம் செய்வது கருணையோ? இன்பத்தேன் சொரியும் பொற்பாத கமலங்களைப் பொருளெனத் தொழும் அடியார் திருக் கூட்டத்தில் அடியேனைச்சேர வைத்தருள்க; பெருமையிற் சிறந்தோய்! அடியேன் செய்த மறவியான வென்னை விடாது பாதுகாக்க! யான் செய்வது, துதியல்லது வேறுளவோ? என அருளியதைக் காண்க.

149. இனித் திருவடி கண்டனரோவென ஓடாது நின்றதைக் கூறும் (தி. - ன.) :—

பாடிற்றி லேன்பணி யேன்மணி நீயொளித்
[தாய்க்குப்பச்சூன்
வீடிற்றி லேனை விடுதிகண் டாய்வியந் தாங்கலறித்
தேடிற்றி லேன்சிவ னெவ்விடத் தானெவர் கண்டனரென்
றோடிற்றி லேன்கிடந் துள்ளுரு கேனின் றுழைத்தனனே.

(இ - ள்). தேவரீர் திருவடியைப் பாழ் வாயால் துதித்தேன் அல்லேன்; வீண் தேகத்தாற் பணிவிடை செய்கின்றிலன்; அறிவு சொரூபப் பிரகாசமாக எழுந்தருளிய தேகக் கோயிலுள்ளிருந்த திருவடியை மறைப்பித்து ஊன்வடியும் பொய்ப்போக தேகமே இவையெனக் கருதும் பாவியைப் பராமுகம் செய்வது கருணையோ? திருவடியின் நயப்பருமை அன்புருக அலறித் தேடுகின்றிலேன்! சிவனே! தேவரீர் அருளிடந்தேடேன்; திருவடி கண்டனருண்டோவென விரைவாய்ச் செல்லேன்; உள்ளன்பாலுருகேன்! பொய்யிலே யின்ப முளதெனக் கருதி யுழப்பதானேன்! என அருளியதைக் காண்க. (45)

---

148. அயில் - கூர்மை. மூரிதழல் - பெருநெருப்பு. விழுது - வெண்ணெய். வான் - பெரிய, நற்றொழும்பரின் - நல்ல தொண்டர் கூட்டத்தில். சோத்து - வணக்கம்; இழிந்தார் செய்வது.

149. பச்சூன் வீடிற்றிலேன் - பசுமை ஊன் நிறைந்த இவ்வுடலை அழித்தேனல்லேன் என்பது பொருள்.

150. இனி, பழித்துதி செய்த (தி. - ன.) :—

உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத் தீயினைப்பாய்
விழைதரு வேனை விடுதிகண் டாய்விடின் வேலைநஞ்சுண்
மழைதரு கண்டன் குணமிலி மானிடன் தேய்மதியன்
பழைதரு மாபர னென்றென் றறைவன் பழிப்பினையே.

(இ - ள்). மான்போலுங் கண்ணையுடைய மாதரார் தனத்திலே, பலவின் கனியிலே ஈ வீழ்வது போல் இடைவிடாது உழலும் என்னைப் பராமுகஞ் செய்வது கருணையோ? பராமுகமானால் தேவரீரைப் பழித்துதி செய்வேன்; சுவாமி! விண்ணப்பம்; நஞ்சுண்ணி; நீல கண்டன்; குணமிலி; என் போல மானிடன்; தேய்ந்தமதியன்; பழையோன்; பரம்பரையோன், என இவ்வகை பழிக்கஞ்சியருள வேண்டும்— என அருளியதைக் காண்க. (46)

151. இனி, கங்கை சூடினமையைக் கூறும் (தி. - ன.) :—

பழிப்பினின் பாதப் பழந்தொழும் பெய்தி விழப்பழித்து
விழித்திருந் தேனை விடுதிகண் டாய்வெண் மணிப்பணிலம்
கொழித்துமந் தாரமந் தாகினி நுந்தும்பந் தப்பெருமை
தழிச்சிறை நீரிற் பிறைக்கலஞ் சேர்தரு தாரவனே.

(இ - ள்). தேவரீர்! திருவடியாதொரு பழிப்பின்றி யிருப்பதைச் சிரடியார் தரிசித்துப் பணிவதைக் கண்டு இகழ்ந்து உண்மையிலாது விழிப்பெய்தி யிருப்பதான வீணனைப் பராமுகம் செய்வது கருணையோ? இன்பமுத்தும் சங்கும் கொழிப்பதான ஞானக்கங்கை ஞானகாசத்திலே அலைபுரள, அந்நீரிற் பிறை கப்பலென அலையும் அழகான சுவாமி யெனக் காண்க. (47)

---

150. உழை - மான். விழைதருதல் - விரும்புதல். மானிடன் - மானை இடப்பக்கத்தில் உடையன் என்றுமாம். மாபரன் என்பதற்கு, உமாதேவியின் பகுத்தான்; பெரிய மேலோன்; பெரிய ஆண்டி; வெறுக்கத்தக்க அயலான் என்று பலவாறு பிறர் பொருள் கொள்வர்.

151. பழிப்பில் நின் பாதம். தொழும்பு - தொண்டு. பணிலம் - சங்கு. மந்தாகினி - கங்கை. பந்தம் - அழகு. தழி - தழுவி. பிறை கலம் 130-ஆம் செய்யுளைப் பார்க்க. தாரவன் - கொன்றைமாலையை யணிந்தவன்; வெற்றியுடையோன் என்றும் கூறுவர்.

152. இனி, உலகம் பழிப்பில்லாது அருள வேண்டுமென்ற (தி. - ன.) :—

தாரகை போலுந் தலைத்தலை மாலைத் தழலரப்பூண்
வீரவென் றன்னை விடுதிகண் டாய்விடி லென்னைமிக்கார்
ஆரடி யானென்னி னுத்தர கோசமங் கைகரசின்
சீரடி யாரடி யானென்று நின்னைச் சிரிப்பிப்பனே.

(இ - ள்). ஆகாசத்திலே துருவனைப் போலேயொன்று தனித்தும் மற்றவை கூட்டமுமாய் நட்சத்திரங்கள் விளங்கியனபோல, ஞானாகாசத் திருவுருவிலே, தனித்து இருக்குங் கபாலந்தவிர, அனேகம் சிரமாலைகளை அணிந்திருப்ப அவற்றில் சர்ப்பங்களையும் ஆபரணமாகவுடைய சுவாமி! என்னைப் பராமுகம் செய்வது கருணையோ? அப்படியே பராமுகமானால் அடியேனைக் கண்டவுடன் அடிகளானவர்கள் என்னை, "இவன் யார், உண்மையில்லாதவன்? திருச்சபையில் உலாவுவது என்?" என வினவுங்கால், அவ்விடத்திலுள்ளாரின், விடையாவன, "திருவுத்தரகோச மங்கைப்பதிக்கரசான சுவாமியின் வழித்தொண்டு செய்யுஞ் சீரடியார்க் கடிமையானவன்;" எனவே, "தேவரீர் திருவுளம் இப்படியோ? அறிவிலாதவனையுஞ் சேர்ப்பதுளவோ?" என நகைப்பார்களே! அப்படி நகையாமல் அடிமைப் பணி அறிவுளதாய்க் கருணை செய்ய வேண்டும்" என அன்பால் இரங்கியருளிய தெனக் காண்க. (48)

153. இனி, திருவடிச் சுதந்திரம்பற்றி ஏசுவதான (தி. - ன.) :

சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத்
தொழும்பையு மீசற்கென்று
விரிப்பிப்ப னென்னை விடுதிகண்
டாய்விடின் வெங்கரியின்
உரிப்பிச்சன் தோலுடைப் பிச்சனஞ்
சூண்பிச்ச னூர்ச்சுடுகாட்
டெரிப்பிச்ச னென்னையு மாளுடைப்
பிச்சனென் றேசுவனே.

---

152. தாரகை - நக்ஷத்திரம். தலை - தலையில். தலைமாலை - சிரமாலை. பாம்பு. பூண் - ஆபரணங்களாகவுடைய. என் தன்னை - என்னை. மிக்கார் - மேலோர் 'ஆர் அடியான்' என்பதுவினை; 'உத்தரகோசகைக்கு அரசின் சீரடியார் அடியான்' என்பது விடை. சிரிப்பிப்பன் - பிறர் உன்னை நகைக்கச் செய்வேன்.

(இ - ள்). தேவரீரை நகைக்கும்படி எவ்விடமும் சஞ்சரிப்பன்; உம்மை யிகழ்வன்; திருவுளப் பணி நாதனுக்கே யென எல்லோரும் அறிய உரைப்பன்; என்னைப் பராமுகம் செய்வது கருணையோ? பராமுகமே திருவுளமாயுல் அடியேன் தேவரீரை, "கரித்தோலுடைய பித்தன்; நஞ்சுண்ணும் பித்தன்; இடுகாடுடைய பித்தன்; என்னையும் ஆண்ட பித்தன்;" எனப் பழிப்புகழாதுவேன்; ஆதலாற் கருணை செய்க—என்று அருளியதைக் காண்க. (49)

154. இனிக் கருணைப் பெருக்கமான அன்பால் நஞ்சுண்டமையைக் கூறும் (தி. - ஸ.) :—

ஏசினும் யானுன்னை யேத்தினு மென்பிழைக் கேகுழைத்து
வேசறு வேனை விடுதிகண் டாய்செம் பவளவெற்பின்
தேசுடை யாயென்னை யாளுடை யாய்சிற் றுயிர்க்கிரங்கிக்
காய்சின ஆலமுண் டாயமு துண்ணைக் கடையவனே.

(இ - ள்). தேவரீரை அடியேன் இகழினும் புகழினும் யான் செய்யும் பிழையைத் திருவருள் இரக்கத்தாற் பாதுகாக்க; திருவடியருமை தெரியாத என்னைப் பராமுகம் செய்வது கருணையோ? சுவாமி! பவளமலை போலச் சிவந்த தேசுடைய நாதனே! என்னை அடிமையாகக் கொள்ளும் சுவாமி! சிவானந்த போக உருவனே! கிஞ்சிஞ்ஞனரான விண்ணோர்க்கிரங்கி கொடிய விடமுண்ட நாதனே! அடியேனைத் திருவடிக் கன்புதந்தருளி, இரட்சிக்க, சிவனே! என அன்புத் தொடர்ச்சியாக அருளியதெனக் காண்க. (50)

திருச்சிற்றம்பலம்

---

153. நீ சீறும் என் பிழைப்பைச் சிரிப்பிப்பன் என்று கொண்டு, நீ என் குற்றத்தைக் கண்டு சீறும் காரணத்தால் உன்னை உலகம் சிரிக்கும்படி செய்வேன் என்று பொருள் கொள்க. இப்பொருளாலே, 'தேவரீரை நகைக்கும்படி எவ்விடமும் சஞ்சரிப்பன்' என்று உரைக்கின்றார். தொழும்பு - திருவுளப்பணி. விரிப்பிப்பன் - எல்லாரும் அறிய உரைப்பேன். கரி - யானை. எரிப்பிச்சன் - நெருப்போடு ஆடுகின்ற பித்தன்.

154. ஏத்துதல் - புகழுதல். வேசறுதல் - துக்கித்தல்.

திருச்சிற்றம்பலம்

7. திருவெம்பாவை

[திருவண்ணுமலையில் அருளியது]

இனி, திருவெம்பாவையான திருவருள் விநியோகம் அருளிச் செய்யப் புகுகின்றதாவன :—

அகத்தியச் சூத்திரம் :—

திருவெம் பாவையார் தசசத் திகளையும்
மருவி வியந்து வாய்மொழி பகர்ந்தது

பொழிப்புரை அநுபூதி :—

இப்பதிகம் மூன்றும் இடமான திருவருட்செயலே நன் செயலாக வருவதென அருளியது. முன் பதிகத்தில் திருவருள் அன்புத் தொடர்ச்சி தனது அறிவிற் பிரியாதிருக்க அருளாய் நின்று இரங் தருளியது ; பரிபாகச் சிவசத்தியால் பிரியாத அன்பே இன்பாய்ப் பெற்றபோது உளத்தில் சிவானந்தம் மேன்மேலும் நிகழும்.

நிகழ்தலாவது, சகலமும் புதிதாய்த் தோன்றல். அவையாவன :—அநாதியே அபேத சுகவின்ப வாழ்வு கிடைத்ததெனப் புதிது புதிதாகத் தோன்றல். அப்பிரபஞ்சமெல்லாம் இப்போது தான் உற்பத்தியாயின என்று அநுபவத்திற்கு உற்பவமெல்லாம் அருளியது. உற்பவமாவது :—அநாதியாயிருக்கிற பரமசிவம் அநாதியாயிருக்கிற ஆன்மாவை அநாதிமலம் நீங்க அநாதி மாயை அருளிக் காரியப்படுத்துவதாகத் தோன்றுவதே உற்பவம். அவை விரித் தருளுமிடத்து, அநாதியாகிய மலசத்தியைத் திரோதான சத்திகள் எழுப் பெடுத்தல்போல, ஒரு பெண்ணைப் பல பெண்கள் உறக்கத்தை விட்டுப் பிரித்து நீராட்டுத்துறைக்கு அழைத்துப் போதல் போலாம். இவை முதல் பத்துத் திருப்பாக்களிலும் கூறப்படும்,

மற்றத் திருப்பாப் பத்திலும், அருட்சத்தி மேலீடாய் ஆனந்த நீராடலைப் பெறுவிக்கிற பரையாக இருக்கும். இவையும் குடிலை யினின்று பிரபஞ்ச முழுவதும் உற்பத்தியான திறமெல்லாம் அடங்கி யிருக்கும். ஒருவர் ஒருவர்க்குச் சொல்லுகிறதுபோல இருந்தாலும்,

சொன்னதுவும், கேட்டதவும், கேட்கும் பொருளும், அதனல் விளையும் இன்பமும் பரம்பொருளாகவே இருக்கும்.

இப்பா, கூன்பெற்று வந்த எட்டடிப் பஃறொடை வெண்பா.

திருவெம்பாவை (திரு எம்பாவை) என்னும் இந்நூலும் திருவம்மானையும் அடிகளால் திருவண்ணுமலையில் அருளிச் செய்யப்பெற்றது என்பர். திருவாதவூரர் புராணம், திருவம்பலச் சருக்கம் (39-41) செய்யுட்கள் இந்நூல் எழுந்த வரலாற்றைப் பின்வருமாறு கூறும்.

மாதர்சொண் மாதரெல்லா மார்கழித் திங்க டன்னில்
ஆதிரை முன்னீ ரைந்தே யாகிய தினங்க ளெல்லாம்
மேதகு மனைகடோறு மழைத்திருள் விடிவதான
போதிவர் தம்மிற் கூடிப் புனற்றட மாடல்செய்வார் (40)

அன்னவரியல்பு கண்டா ராங்கவர் புகன்றதாக
மன்னிய திருவெம் பாவைவாசகம் பேசிப் பின்னர்க்
கன்னியர் பாடியாடுங்கவின் கொளம்மனே கண்டன்னூர்
பன்னிய பாடலாக வம்மனைபாடல் செய்தார் (41)

திருவெம்பாவைக்குத் திருவாசக உள்ளக்கிடை.

சத்தியை வியந்தது; சத்திகளாவார்:—அம்பிகை, கணம்பிகை, கௌரி, கங்கை, உமை, பராசத்தி, ஆதிசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என ஒன்பதின்மர்.

திருவெம்பாவைக் கருத்து என்ற தலைப்பின்கீழ், திரு. இராமசாமி முதலியார் அவர்களின் திருவாசகப்பதிப்பில் (1897) காணப்படுவதாவது:—

"ஆடிமாத முதல் மார்கழி மாதம் வரைக்கும் இரவும், தைமாத முதல் ஆனி மாதம் வரைக்கும் பகலுமாகத் தேவர்களுக்கு ஒரு நாளாகும். சங்கார காலத்துக்கும் சிருட்டி காலத்துக்கும் பிராமணமாக இந்த ஆறு மாதமும் பிரிந்து நடக்கும். மார்கழி மாதம் உதயகாலமாய்ச் சிருட்டிக் கேதுவாயிருக்கும்.

பிரபஞ்ச சிருட்டியைத் திருவுளத்தடைத்து வயிந்தவச் சத்தியைச் சிருட்டிக்கத் தொடங்கும் அவதரம் திருப்பள்ளியெழுச்சி என வழங்கும்.

இனி அந்தச் சுத்தமாயை நாத விந்துக்களாகவும், சாதாக்கிய மாகவும், மகேசுவரமாகவும், சுத்த வித்தையாகவும், இவ்வாறு ஐந்து தலங்களாயிருக்கும். நாதவிந்துக்களாகிய தலங்களிலே பரமும், பரையும் அதிட்டிக்கும்; சாதாக்கிய தலத்திலே சதாசிவமூர்த்தி எழுந்தருளியிருப்பர். போகாங்கங்களாகிய அணுசதாசிவர் சேவிக்கவும், இதன்

155. இனி, தசசத்திகளுள் முதற்சத்தியான பராசத்தியின் அநுபூதியான திருவருள் விநியோகம் அருளிச் செய்யப் புகுகின்றதாவன :—

ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டிலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தா ளென்னேயென்னே
ஈதேயெந் தோழி பரிசே[2]லோ ரெம்பாவாய்.

கீழே ஈசுரர்க்கு அதிட்டானமாகிய மகேசுரதலத்திலே அநந்தாதி அட்டவித்தியேசுரர் சேவிக்கவும், இதன் கீழே உருத்திரர்க்கதிட்டான மாகிய சுத்தவித்தியா தலத்திலே மந்திரேசுரர் சேவிக்கவும், இப்படிப் பிரபஞ்ச அனுக்ரக காரியமாகப் பராசத்தியிற் ரோன்றிய ஞானக்கிரியைகள் ஒத்த இச்சையே திருமேனியான சதாசிவ மூர்த்தி திருவருளால் அந்த மகேசுவர தத்துவத்திலே சத்தி மண்டலத்திலிருந்த மநோன்மணி சத்தியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி சருவபூத தமனியைச் சிருட்டிக்க. அந்தச் சருவபூத தமனி பெலப்பிரமதனியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி பெலவிகரிணியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி காளியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி இரௌத்ரியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி சேட்டையைப் பிரேரிக்க, அந்தச் சத்தி வாமையைப் பிரேரிக்க, இப்படிப் பிரேரியா நிற்க நவசத்திகள் பிரோகத்தினுல் மாயையை அதிட்டித்திருக்கிற அநந்த தேவராலே அசுத்தமாயை காரியப்பட்டுப் பிருதுவி முடிவான பிரபஞ்ச காரியம் நடவாநிற்கும்".

பழைய திருப்பெருந்துறைப்புராணத்தில் திருவாசகச் சிறப்புரைத்த, அத்தியாயத்திலுள்ள திருவாசகச் சிறப்பிற் கண்டது :—

"மலவிருளுற்றுமங்காமன் மன்னுபரிபாகருருட்
செலமுழுக வருகவெனச் செப்பறிவெம்பாவை"

பிறர் உரைகளெல்லாம் நவசத்திகளையே கூற, இவ்வுரை தசசத்திகளைக் கூறுகின்றது. அவற்றின் பெயர்களும் மாறியுள்ளன.

முதலிடம் இறைவனின் தலைமை; இரண்டாமிடம் திருவருளின் தலைமை (திருச்சதக முகவுரையைக் காண்க).

வெண்டலையான் வந்த இயற்றரவினைக் கொச்சகக்கலிப்பா என்பர் பிறர்.

(இ - ள்). உற்பத்தி நாசம் இல்லாததாய், அடிஞானமில்லாதார்க்கு அளவிட வரிதான எச்சோதி ஈசான மூர்த்திகட்கு மேலானதோ, அச்சிவச்சோதியை நாங்கள் அனைவரும் 'திருவடி கதி' எனத் தோத்திரம் செய்ய, "மூலமலசத்தியே! உள்ளத்து இருப்பானதாயே! திருச்செவி கேட்டும், விழித்தடங்கண் பெற்ற மாதாவான மூலமல சத்தியே! ஆனந்த அனந்தலோ?" எனப் பராசத்தி மலசத்தியை நோக்கிக் கூறிப் பின்னும், "உன்னுடைய பாங்கியரான திரோதானச் சத்திகள் அழைப்பக் கேளாதிருந்தாயே! வன் செவியோ நின்செவி? மகாதேவரை அச்சத்திகள் துதித்தது, தத்துவ சோபான வீதிதோறும் அத்துதி அதிட்டித்து நிற்கக் காண்கிலையோ?" எனப் பரசத்தி அருளால் மலசத்தி பரிபாகமாகிப் பரவசமுற்றுத் தழுதழுத்து மாயா பூ அமளியின் மேல் புரண்டு, "இவ்விடம் நமக்கில்லை" என யாதொரு பற்றுக்கோடுமின்றிச் செயலற்ற அநுபூதி.

பராசத்தி திருவுளம் கொண்டு, "திரோதானச்சத்தித் தோழியர்களே! இதுவென்ன! இதுவென்ன! அற்புதம்! எனது உயிர்ப்பாவாயான பெண்ணே! இவ்வகை ஞானம் ஈசன்பால் அன்பே இப்பரிசு—என அருளியதை அன்பாற் காண்க.

பரம் உயிரைப் பற்றலே பராசத்தி என்ற அநுபூதி. (1)

156. இனி, முற்பராசத்தியே [1]ஞானசத்தியான மெழியின்பத் (தி. - ன.) :—

பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ வினையாடி

இச்செய்யுள் மஞ்ஞன்மணி யென்னும் சத்தியின் திருவாக்காய்ச் சர்வபூததமனியை உணர்த்துகின்றது என்பர் பிறர்.

'ஏலோரெம்பாவாய்' என்பது பாவைச் செய்யுட்களின் இறுதியில் காணப்படும் அடிநிலை. இஃது பாவை நோன்பு நோற்பவர் அப்பாவையையே விளித்து முன்னிலைப் படுத்திக் கூறுவதாகும். 'ஏழ்மை டையபாவை போல்பவளே! இதனை ஏற்றுக்கொள் ஆராய்ந்துபார்' என்று இதற்குப் பொருள் கூறுவர்.

பரம் உயிரைப் பற்றல் 56 ஆம் பக்கம் பார்க்க.

ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனுர்க் கன்பார்யா மாரேலோ ரெம்பாவாய்.

(இ - ள்). 'ஆணவமல சத்திப் பிரேரக ஞானசத்தியே! கேள்! நாங்கள் திரோதான சத்திகள் அனைவோருமாகக் கூடி அழைத்தும் மலசத்தி பரிபாகம் காணவில்லை' என,

அவைக்கு விஞ, 'பதி, பசு, பாசப் பரப்படங்கப் பார்த்து' என, 'பதி, பசு, பாசப் பரப்பாயிருந்த வண்ணம் பாசப் பிரேரகப் பொருளே பரமசிவனே சோதிக்குட் சோதி' யென அன்பாய் என் புருக இரவும் பகலும் மகாதேவர் திருநாமத்துதி செய, அவைக்கு மலசத்தி.....ராது மாயாபோக அமளிக்கு நேசம் வைத்தால், தாயான ஞானசத்தியே! எப்போ திருவடி சேர்வது?" எனவே,

விடை, சிவஞானம் சொல்வது:—"மலத்துக்குப் பரிபாகமுளது; சகல தத்துவாபரணத் திரோதான மாதே!".

"ஈ! ஈ! இவையோ விடை; நீங்கள் விளையாடற் செய்து நிந்தையாகத் துதிப்பதற்கு இவ்விடந்தானே கண்ணுற்றீர்கள்? நீங்கள் துதிப்பதான திருவடி நாராயணன் முதலான தேவர்கள் கிட்டிப் பூசிக்கக் கிட்டாத பொற்பாத கமலம். அது, ஏதோ உம்மையும் நம்மையும் இரட்சிப்ப எழுந்தருளியது; தேசோரூபன், தில்லை நேர் போய் மன்றுள் ஆடும் அம்பலவனை ஈசன்; அவன் அடிக்கு அன்பு செய்ய நாம் உரியரல்லோம்; என் உயிர்த்தோழியே! ஈசன்பால் அன்பே ஞானம்" என்றனர்.

ஞானமுண்டாராதலால் அனைவோரும்கூடி அன்பு செய்வதே அநுபவம் என அருளியதைக காண்க. (2)

---

156. இப்பாடலின் உரை ஏட்டில் சிதைந்துள்ளது; ஒருவாறு சேர்த்து எழுதப்பெற்றுள்ளது.

1. சர்வபூததமனி பலப்பிரமதனியை எழுப்புவதாக அமைந்தது என்பர்.

முன் செய்யுள் மூலமல சத்தியை நோக்கிக் கூறியதாகவும், இச் செய்யுள் திரோதான சத்திகளுக்கும் ஞானசக்திக்கும் இடையே உண்டான உரையாடலாகவும் உரைவகுக்கப்பெற்றிருக்கிறது.

உறங்குகிறவனை நோக்கி வந்தவர், 'எப்போதும் இறைவனிடம் பாச முண்டு என்று கூறும் இயல்பினளாகிய நீ இப்போது எங்களுடன் கூடி அவனைத் துதிக்க வராமல் உறங்குகின்றாயே!" என்ன, "நீங்கள் பேசுவது வீளையாட்டுப் பேச்சு! அவனுடைய திருவடிப்பெருமை எவ்வளவு உயர்ந்தது! நாம் அவனிடம் பாசம் வைக்கத் தக்கோமோ?" என்பது வெளிப்படையான உரை.

157. இனி, [1]இச்சாசக்தி வாய்மொழியான (தி. - ன.) :—

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனு னந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோகின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய்.

(இ - ள்). திரோதான சத்திகள் அனைவோரும் கூடி மூலமலமிருந்த கன்மமல சத்தியை வெளிப்படுத்த, அப்பிரேரக இச்சாசத்தியை முன்னிலையாக அருளிய வினை :—

" முத்துப்போலும் தந்த பத்தியையுடைய மஹாதான இச்சாசத்திப்பொருளே! கேள். யாவர்க்கும் முன் எதிரே தோன்றி, ' எனது உயிர்ப்பொருளான அப்பனே! ஆனந்தனே! அமிர்தனே!' என உள்நெகிழ்ந்து ஊறித் தித்திக்க நாதன் திருநாமம் துதிப்பதாக நியமமுடையீ தாயே! விரைவிலே அம்மலபரிபாகமுறத் திரோதான மான திருப்பொற் கதவின் கபாடவாசல் திருவடி காணத் திறவாயோ?" என,

கன்மமல சத்திப் பிரேரக இச்சாசக்தி அருளிய விடை :—

" திரோதானப் பெண்களே! கேண்மோ! பரமசிவன் திருவடியிலே அநாதியே அன்பே ஞானமாகத் தொடர்ச்சியுடையீர்! சுவாமிக்குப் பாரம்பரியமான வழித்தொண்டுடையீர்! திருவுளப்படி அடிமையுடையீர்! நாங்களோ புதுமைபற்றி அடிமைப்பணி செய்ய வந்தோம்; ஆகிலும் எங்களுடைய புல்லறிவை நீக்கிச் சிவ அறிவாக அடிமைப்படுத்திக் கொண்டால் திருச்சபையார் பொல்லாங்கு உண்டாமோ? ஆனல், நீங்கள் நடிப்பது அன்பு எளிமைதானே? இவற்றின் உள்ளக்கருத்தெல்லாம் வள்ளல் அறியாரோ? உள்ளபடி சித்தம் தெளிவான சிவானந்த அழகுடையார் திருநாமம் வாயாரச் சொல்லித் தோத்திரம் செய்யார்களோ, நமது உயிரில் அபேதமாக எழுந்தருளிய பரமசிவனை? இப்போது அருளிய சாங்குசித்தத் தன்மையெல்லாம் எமக்கும் வேண்டியனவே ".

எனவே, தங்களுக்கும் வேண்டியது ஞானம் ஈசன்பால் அன்பே எம்பாவாய்—என அருளியதைக் காண்க. (3)

158. இனி, மாயாமலப் பிரேரகக் கிரியாசத்தி வாய்மொழி பகர்ந்த (தி. - ன.) :—

ஒண்ணித் திலகையா யின்னம் புலர்ந்தின்றே
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய்.

(இ - ள்). "நின்மல முத்துப்போன்ற தந்தபத்தியையுடைய 'மாலிட்டெனை மறைத்து, மாருமலின்றளவும் மேலிட்ட கங்குலான' மாயாமலப் பிரேரகக் கிரியாசத்தித் தாயே! திருவருள் உதயமாகியும் பரை வெளியிலே விழியாமல், மலபாகம் பெருமல், ஆனந்த அனந்தலோ?" என, வெளியே நின்று இத்திரோதான சத்திகள்கூற, உள்ளே இருப்பதான மலசத்திப் பிரேரகக் கிரியாசத்தி கூறும் உத்தரமாவன :-

வினை :—"உங்களில் அழகு பொருந்திய சுகமொழியார் அனைவரும் அதிட்டானப்படி வந்தார்களோ?" என,

விடை :—"அப்படியே பிரேரகப்படி தத்துவநிறைவாளும்; எங்கள் அநுபூதி கேண்மோ! அருளுதயமாகியும் திருவடியைக் காட்டாது அனந்தலிலே வீணுட்கழிக்காதே; தேவதைகள் அகப்பிணி தீர்க்கும் வைத்திய மணி மந்திர ஔஷதமாளனை, வேதாந்த வத்துவை,

---

157. இது பெலப்பிரமதனி பெலவிசாணியை உணர்த்தியது என்பர்.

அன் ஊறி - வாய் ஊறி. பத்து - பற்று; பக்தி. பாங்கு உடையீர் - உரிமையுடையீர்; மேன்மையுடையீர் எனலும் ஆம்.

இச்செய்யுள் மூன்று பேச்சுக்களை உடையதாகக் காண்கிறது. 'கடைதிறவாய்' என்பது வெளியிலுள்ளார் வேண்டுகோள்; 'பொல்லாதோர்' என்பது உள்ளிருந்தவள் சாக்குப்பேச்சு; 'இத்தனையும் வேண்டுமோ' என்பது வெளியிலுள்ளார் சலித்துச் சொன்னது. இது வெளிப்படை உரை.

சீரடியார் கண்ணும் கருத்தும் களிகூர்வனானைத் திருநாமம் சொல்லித் தோத்திரம் செய்து உள்ளே கசிந்துருக அன்பு நாங்கள் அறியோம்; தாயே! நீயே வந்து எண்ணக் குறையிலாது, பரைவெளியிலே விழித்தபடி நிட்டை பொருந்த அருள்வாய்; ஞானமே! அன்பான பாவாய்!" என அருளியது. ஏல் அசையெனக் காண்க. (4)

159. இனி, ஆதிசத்தி திருவாய் மலர்வதான (தி. - ன.) :—

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினும் உணரா யுணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

(இ - ள்). "அநாதி மூலமல திரோதப் பிரேக ஆதிசத்தியே! கேண்மோ! விட்டுணு பிரமன் இருவரும் திருவடியினது அடிமுடி தற்போதத்தால் தேடியும் அளவு காணாத ஞான அக்கினிமலை வடிவான சுவாமியை நாம் அனைவோரான மாயாமல சக்திகளால் தெரிந்ததுபோலப் பேசும் பொய்ப்பொருளுடைய பாலும் தேனும் ஊறும் வாயை உடைத்தான வஞ்சப்பெண் வாழ்க்கையால் வாழலுற்றவளே! உனது மயக்கக் கபாடம் திறந்தருள்வாய்" எனப் பக்குவ சத்தி கூற,

விடை :—"அப்பொருள், ஆகாசமோ, பூமியோ, மற்றும் உம்பராலும் அளவிடப்படான்" என்று அச்சத்தி கூற,

---

158. 1. இச்செய்யுள் பலவிகரணி என்னும் சத்தி கலவிகரணி என்னும் சத்தியை எழுப்புவதாக அமைந்தது என்பர். பெலவிகரணி காளியை உணர்த்தியது என்றும் கூறுவர்.

ஒள் நித்தில நகையாய் - ஒளிவீசும் முத்துக்கள் போன்ற பற்களையுடையவளே!

முதலடி வெளியிலுள்ளார் வினா. இரண்டாமடி உள்ளிருப்பவள் வினா. பின் அடிகள் வெளியிலுள்ளவர் வெறுத்துக்கூறும் விடை. இவை வெளிப்படை.

"கேண்மோ! தாயே! நம் பொருட்டு வடிவு கொண்டு எழுந் தருளி, அடிமைப்படுத்தி, நமது குற்றமெல்லாம் குணமாகச் செய்து, உண்மை அருளும் பரமசிவனே" என ஓலமிட்டு அழைத்ததைக் காண்க. (5)

160. இனித் திருவருளின்பச்சத்தி திருவாய் மலர்வதான (தி. - ன.) :—

மானேநீ நென்னலே நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றது நாணுமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றே
வானே நிலனே பிறவே யறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே யுருகா யுனக்கே யுறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.

(இ - ள்). தமோமயமான மூலமல இன்பசத்தியை நோக்கித் திரோதான பக்குவ சத்திகள் அனைவோரும் கூடிக் கூறுவதாவது :-

"பெருமையிற் சிறந்த தாயே! அநாதியே எங்களை ஓர்மொழி உண்மையால் பரைவெளியிற் பிரவேசிக்கச் செய்வேன் (என்றனையே); சொன்மொழி தவறினால் அதனால் வெட்கமடையாது எத்திசை சென்றருளினாய்? இன்னும் திருவருள் உதயமாகவில்லையோ?" என,

மறுமொழி,

"நீங்கள் கூறுவதான நாதன் ஆகாயமோ, பூமியோ, அவற் றிலுள்ளோரோ, மற்றேரோ, எவராலும் அறிதற்கரியவன்; ஆன தால், பரிபாக காலத்தில் தானே எழுந்தருளிப் பேரன்பான கருணை அளித்து அடிமையாகக் கொண்டருள்வான்";

---

159. 1. கலவிகரணி காளியை எழுப்புவதாக அமைந்தது என்பர். இன்னும், காளி என்னும் சத்தியின் திருவாக்காய் இரவுத்திரி என்னும் சத்தியை உணர்த்துகின்றது என்றும் கூறுவர்.

மாலறியா மலை, நான்முகனும் காணுமலை என அமைக்க. மலை - திருவண்ணுமலை. படிறு - வஞ்சகம். எலம் - மயிர்ச்சாந்து.

இச்செய்யுள் முழுவதையும் வினாவிடையாய் அமையாமல் வெளியி லுள்ளார் உள்ளே இருப்பவரை எழுப்புவதற்காக ஒரு தொடராகக் கூறிய தாக அமைந்துள்ளது வெளிப்படைப் பொருள்.

என மொழியலும்,

" அப்படி அநுக்கிரகம் செய்வனனலும், தாயே ! நீ எங்கட் காகத் திருவடி நாமம் அருளித் துதித்துத் திருவாய் மலராயோ ? அவை கொண்டு ஊன், உயிர் கரைய நாங்களும் துதியோமோ ? உனக்கே தகுமோ ? எமக்கும் ஏனோர்க்கும் உயிர்ப் பிரேரகனன நாதனைத் துதிப்பதே அநுபூதி ; ஞான அன்புப் பாவாய் " என மகடூஉ முன்னிலையாக அருளியதைக் காண்க. (6)

161. இனி, பரையின்பத் தெருள்சத்தி அருள்வதான (தி. - ன.) :

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியா னெருவ னிருஞ்சீரான்
சின்னங்கட் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னவென் னுமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னனை யென்னரைய னின்னமுதென் றெல்லோமும்
சொன்னேங்கேள் வெவ்வேரு யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

(இ - ள்). " சிவானந்தம் விளைப்பதான மூலமல இன்பத் தெருள் சத்தியான தாயே கேள் !" என வெளியே நின்ற திரோ தான சத்திகள் கூறும். " இவ்வரையில் வெளிப்படாமையால் உன்னுடைய அநுபூதியிற் சிறிதாகத் திருவடியை நினைவுறு தலோ(?) அநேகவித தேவர்களாலும், நினைவான தற்போதத்தால்,

---

160. இது காளியும் பிற சக்திகளும் சொளத்திரி என்னும் சத்தியை எழுப்பதாக அமைந்துள்ளது என்றும், இரவுத்திரியின் திருவாக்காய்ச் சேட்டையென்னும் சத்தியை உணர்த்துகின்றது என்றும் இருவகையாகக் கூறுவர்.

நென்னல் - நேற்று. ' நானே வந்து உங்களை எழுப்புவன் என்று கூறின அச்சொல் போனதிசை பகராய் ' என்பது விளை. ' எமக்கும் ஏனோர்க்கும் பாடல் உறும் ; உனக்கு வாய்திறவாமையும் உருசாமையும் உறும், என்றவாறு.

இவ்வுரையின்படி இச்செய்யுள் விளவிடைகளாக அமைந்துள்ளது. ஊனே உருகா என்று கொண்டு, உயிர் கரைய என்று உரை எழுதப் பெற்றுள்ளது. பாடேல் என்றது பாடல் என்று கொள்ளப்பட்டது.

இவ்வுரை நயத்தை ஊன்றிக் காண்க.

கிட்டவொண்ணாது, ஏக பரப்பிரம சொரூபனான தேவன், எல்லாப் பெருமைகளுக்கும் மேலான சிறப்புளன்; அவனது திருநாமப் பரிகலப் பரிச்சின்ன ஓசை திருச்செவி கேட்ப, நமது உயிர்ப்பொருள் சிவனென்றே திருவாய் மலர்ந்தருளாய்; அஃது என்ன நிமித்தம்? அக்கினி சேர்ந்த மெழுகு உருகுதலைப்போல உருகி, அன்பிலால் எனது உயிர்ச் சத்தியபோதன், ஆன்மநாயகன், அமிர்தவடிவான வன்; அவனது திருப்புகழை இப்போது துதித்ததுமன்றி முன்னமே பல பிரகாரமாகத் துதித்தோமே! அவற்றுள் யாதும் திருச்செவி புகாது உள்ளம் நெகிழாவண்ணம் இன்னமும் அனந்தலோ? அறிவிலாத வன்மை மனமுடையாரைப் போல இருந்தால், இவை எவ்வகை நிட்டை என உண்மை கொள்வோம்? ஞானப்பெண்ணே!" என அருளியதைக் காண்க, (7)

162. இனி, தெருட்சத்தி அருளியபின் அருட்சத்தி யருள்வதான (தி. - ன.) :—

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழி லியம்ப வியம்பவெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினெங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்
ஆழியா னன்புடைமை யாமாறு மிவ்வாரே
ஊழி முதல்வனுய் நின்ற வொருவனே
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

---

161. ரௌத்திரி உள்ளிட்ட சத்திகள் சேட்டையைத் துயிலெழுப்புவதாக அமைந்தது இப்பாடல் என்றும், சேட்டை வாமையை உணர்த்தியது என்றும் இருவகையாக இச்செய்யுட்கு அமைதி கூறுவர்.

உன்னற்கு - கருதற்கு. இருஞ்சீர் - பெரிய சிறப்பு. சின்னம் - திருச்சின்னங்கள். தென்னு - தென்னுட்டையுடையோனே; அழகுடையவனே என்றும் கூறலாம். என்னுனே - எனக்கு இனியனே. ஆறு - இனிமை, நன்மை: ஆனே - யானே போன்றவனே என்றும் கூறுவர். அரையன் - அரசன். பரிசு - தன்மை.

வாய்திறப்பாய் என்பதற்குத் திருவாய் மலர்ந்தருளாய் என்று பொருள் கூறப்படுகிறது.

(இ - ள்). திரோதான சத்திகள் திருவருட்சத்தியை நோக்கி, "மலசத்திப் பரிபாகமுற அருள்வதான குடிலையிலே நின்று பிரபஞ்ச உற்பத்தியாகிற இன்பத்தொடர்ச்சிக்காக நாதமான பிரணவக்கோழி கூவுகிறதே! அதனின்று, பிரேரகாண்ட சுத்தமாயைப்பட்சி ஆர வாரிக்கின்றதே! ஏழிசையான சங்கான அசபை வாக்கு தோன்றிச் சத்தம் தொனிக்கிறதே! மந்திர மந்திரீசுவரர்கள் அதிட்டான சத்தம் கேட்கிறதே! அதனின்று அசுத்தமாயையும், அதனின்று மகாமேரு, துருவ, நவக்கிரகம் முதலான அண்டகோச நானவித நாம ரூப ஜகத்தும் இன்பமாய்க் கண்டோமோ? உவமையில்லாத ஐடச்சித்தெங்கும் பூரணமான நித்தியானந்த சோதியென்றும், குற்றமற்ற பெருங் கருணையென்றும், ஒப்பில்லாத சாட்குணியச் சிவனென்றும் நாங்கள் செய்த திருத்துதி கேட்கவில்லையோ? எங்களை விட்டுப் பிரியாத தாயே! மலவசமாய் அனந்தலோ? திருவாய் மலர வேண்டும்" என்று கூற,

விடையாவன :—

"நீங்கள் ஆழியை மாலுக்கு அருள்வதான நாதனிடத்தில் வைத்த அன்பும் இப்படியோ? கால அதீதனுனலும் எக்காலத்துக்கும் முதற்பொருளாய் நின்ற ஏக பரம்பிரும்ம சொரூப சிவனை, தேவியைப் பாகம் வைத்த சுவாமியை, இடைவிடாது துதிப்பீர்களாக; ஞானப்பெண்களே!"—என அருளியதைக் காண்க. (8)

---

162. சேட்டை உள்ளிட்ட சத்திகள் வாமையை எழுப்பியது என்றும், வாமை திருவாக்காய்ச் சுத்தமாயையைப் பிரேரிக்கிற அனந்த தேவரை ஆசரித்து அப்பால் பிரகிருதியில் விகுர்த்யான ஆன்மதத்துவம் கடத்தற்பொருட்டு விட்டுணுவினிடத்தில் அதிட்டிக்கிற சிவசத்தியை நோக்கி, 'ஆழியானன்புடைமை யாமாறு மிவ்வாறே' என்று பிரேரித்ததாகக் கருதியது என்றும் இருவகையாகக் கூறுவர்.

சிலம்ப - கூவ. குருகு - பறவைகள். எழில் இயம்ப - எழிசையான சங்கு ஒலிக்க. ஆழியான், இங்குச் சிவபெருமானைக் குறிக்கும் என்பது உரை; சிலர் திருமாலைக்குறிக்கும் என்று கூறுவர்.

இச்செய்யுள் இருவர் கூற்றாக அமைந்துள்ளதெனக் கொண்டுள்ளது உரை.

163. இனி, அன்பே இன்பான சிவசத்தி அருள்வதான (தி. - ன.) :—

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிராஞகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே
[பாங்காவோம்
அன்னவரே யெங்கணவர் ஆவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய்.

(இ - ள்). திரோதான சத்திகள் மூலமல அன்பே இன்பாகிய சிவசத்தியை நோக்கிக் கூறுவன :—

"கணவர்க்குத் தோன்றி மற்றவர்க்குத் தோன்றுத கற் புடைய மூலமல இன்ப ஆதாரத்தாயே! கேள்! நம்து நாதன் திருவடி அநாதியாயிருக்கின்ற திரிபதார்த்த அறுவகைப் பொருட் கும் அநாதி வியாபகப்பொருளே! அவ்வகைப் பொருள் பஞ்சகிருத் தியம் புதிது புதிதாக உற்பத்திக்கும், பரமுத்த பஞ்சகிருத்தியத்தில் பின்னும், அன்படியார் அநுபூதிக்கு அத்துவிதப் பெருமையனே! தேவரீரை ஆன்மரட்சராகப் பேறுடைய சீர்பாத அடிமைப்பணி உடையோம். தேவரீர் அடியார்க்கு அடிமையாக அவர்கள் திருவடிப் பணி செய்வோம்; அவர்கள் திருவுளப்பணி ஏவல் சென்னியிற் புரிவோம்;"

இவற்றிற்கு விடை :—

"எனக்குத் தாயான கண்மணியே! கேள்! இப்போது நீங்கள் அருளிய நாதன் எனக்குக் காதலனுனவரே. அந்த நாதனே அன்பால் இன்புகந்து சொன்ன உண்மைப்படி அடிமை நாமெல் லோரும் செய்வோம்; இந்தத் திருவடி மகிமை எம்க்கு நாதன் அரு ளியதால் யாதொரு துன்பமான குறைவுமில்லை யென அநுபூதி பெற்றோம். ஞானப்பெண்ணே"—என அருளியதைக் காண்க. (9)

---

163. இது சுவசத்திகள் தம்முள் சொல்லியது என்பர் பிறர்.

முதல் இரண்டடிகளைப் படர்க்கையிலும் பின் இரண்டடிகளை முன் னிலையிலும் வைத்துத் திரோதான சக்திகள் இறைவனைப் புகழ, இன் பான சிவசக்தி எனைய அடிகளால் விடை கூறியதாக உரை வகுக்கின்றது. இதன் நயத்தை ஆராய்க.

164. இனி, இன்பாதீத சிவசத்தி அருள்வதான (தி. - ன.) :—

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத வுலவா வொருதோழன் ரெண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணைப் பிள்ளைகாள்
ஏதவ்னூர் ஏதவன்பேர் ஆருற்ரூர் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

(இ - ள்). திரோதான சத்திகள் அனைவோரும் முன் இருப்பதான மூலமலசத்தி வெளிப்பட இன்பாதீத அருட்சத்தியை நோக்கிக் கூறுவதாவன :—

"பாதலத்தின் எழுவகை லோகமும் அதன்கீழ் சொல்லிய வர்க்கான பாச ஞான அளவைக்கெட்டாத திருவடி ; அடியார் பூசிப்பதான நன்மலர் அணிவதான திருமுடி ; அவை அபர பர ஞானம் இரண்டின் முடிவான சிவானந்தப் பொருள் ;" எனக்கூற,

விடை :—

"மூலமலப் பிரேரக இன்ப சத்தியானது வெளியுற நின்ற திரோதான சத்திகளே ! கேண்மோ ! இப்போதருளிய திருவடி, திருமுடிகளே அறியாமையே பொருளானவர்களே ; நமது நாதனுக்கு வடிவு அர்த்தநாரீசுவரம் ; அதுவும் தனிமையன்று ; அவையே வடிவாய் பஞ்சவிம்சதி வடிவுண்டு ; அப்படி உளதாகிய திருவுருவை அளவை முதலானவைகளாலும், வேதம் முதலான சுருதிகளாலும்,

---

அனைவரும் ஒன்றாகக் கூடித் துதித்ததாகக் கொள்வது வெளிப்படை.

"உன் அடியார் என்றது, அணுசதாசிவர், அனந்தாதி அட்டவித்தியேசுவரர், சத்தகோடி மகா மந்திரேசுவர் என்ற விஞ்ஞான கலருள் மூவகையினரைக் குறிக்கும் என்பதும், இன்னும் நிரைநிரையாக அணுசதாசிவர் தாள் பணிவோம், அட்டவித்தியேசுவரருக்குப் பாங்காவோம், சத்தகோடி மகாமந்திரேசுவரர்கள் எங்கள் பர்த்தாக்கள் ; அவர்களேவலால் அசுத்தமாயையைப் பிரேரியா நிற்போம்" என்பது ஒருரை (இராமசாமி முதலியார் பதிப்பு.)

நோன்பு செய்யும் கன்னிமார் தக்க கணவரைத் தமக்கு அருளுமாறு விண்ணப்பித்தல் என்பது வெளிப்படைப் பொருள்.

விண்ணிலுள்ள இந்திரன் முதலிய இறைவர்களாலும், மண்ணிலுள்ள இருடிகள் முதலோராலும் துதித்தாலும் அத்துதிக்கு எட்டாத சுவாமி, 'என்னுடைய தோழனுமாய் யான் செய்யும் துரிசுகளுக்கு உடனுவன்' என்ற அடியார் உள்ளக் கோயிலான குற்ற மற்ற கோயிலே கோயிலாகவுடைய சிறுபட்சி சாதியொத்த காரிய சத்தியானவர்களே! என்னே வெளியுற அழைக்கிறீர்கள்; மலபரிபாகமாகி வருவது உளது. உங்களுடன் நானும் கூடினால் நீங்களும் நானும் சேர்ந்து துதிப்பதற்கு, 'ஒப்புடையனல்லன்; ஓரூனல்லன்; உவமையில்லி; உற்றருண்டோ? பகைவருண்டோ?' எவ்வகை உண்மையன்பால் துதிப்போம், எனது உயிரான ஞானப்பெண்ணே! அருள்வாய்" என அருளியதைக் காண்க. (10)

---

164. இதுவும் சுவசத்திகள் அனைவரும் பாடியது என்பர். இன்பாதீத சுவசத்திக்கும் திரோதான சத்திகளுக்குப் இடையே நிகழ்ந்த உரையாடலாகக் கொள்வது இவ்வுரை.

கழிவு - அளவுக்கெட்டாதது. ஒன்றல்லன் - பலவடிவுகளையுடையன். ஓதஉலவா - சொல்ல முடியாத. தொண்டர் உளன் - அடியார் உள்ளத்திலிருப்பவன். பிணை - பெண்.

"பாதாளமேழினும் கீழ் சொற்கழிவுபாதமலர்" என்பது எண்பது நூறுயிரம் யோசனையான பூமியின் கணத்துக்கும், சிவஞானமின்றியே தபசு பண்ணுகிறவர்கள் சென்றிருக்கும் இடமாகிய பாதாளத்துக்கும் அதன் கீழே உண்டாகிய அசுரகண்டம், சர்ப்பகண்டம், இராக்கத கண்டம் இப்படி ஒவ்வொன்று மும்மூன்று ஆடகேசுரர்க்குப் புவனமுமாயிருக்கிற ஏழு பாதாளத்துக்கும், அதன் கீழாக ரவுரவம், கும்பீபாகம், அவிசிகம் என்று சொல்லப்பட்ட மயிராராச நரகம் மூன்றும், இவையுட்படப் பதின்மூன்று நரகம் ஓர் அடுக்காகவும், பத்து நரகம் ஓர் அடுக்காகவும், ஒன்பது நரகம் ஓர் அடுக்காகவும், ஆகமுப்பத்தெட்டு நரகமும் இவைகளைச் சூழ்ந்து சேவித்திருக்கிற நூற்றெட்டு நரகமுமாக நூற்றுநாற்பது நரகமும் கூர்மாண்ட தேவரென்னும் உருத்திரர்க்குப் புவனமாயிருக்கப்பட்ட நாக புவனங்களுக்கும் கீழ்க் காலாக்னி உருத்திரர் புவனம் பதினேழுகோடி யோசனையாய் அண்டகடாக மூடப்பட்ட புவனமாயிருக்கும்; இப்படிச் சொல்லப்பட்ட பிரமாண்ட முதலாக அண்டங்களனைத்துக்கும் ஆதார பூதமாய்க் சிவசக்தியான ஆதாரசத்திக்கும் அப்பால் சிவனுடைய பூரணத்துக்குள் எல்லைப்படுத்தி இன்னமட்டென்று சொல்லுதற்கு முடியாதாதலால் சொற்கழிவாயிருக்கப்பட்டது மலர்போன்ற சீபாதமாகையாலும்.

''போதார் புனைமுடியுமெல்லாம் பொருண்முடிவே' என்பது. இனிப் பிருதிவியண்டம் முன்சொன்ன அண்டகடாகமுதல் ஐம்பதுகோடி யோசனைபுட்பட மேல் புவலோக முதல் சிவலோகமளவாக ஏழுலோகமும், மேல் அண்டகடாகமுட்பட ஐம்பதுகோடி யோசனையுமாகப் பிரமாண்டம் நூறுகோடி யோசனை ; அதற்குமேல் அதிற் பதின்மடங்கு அப்பு அண்டம், அதற்குமேல் அதன் பதின்மடங்கு தேயு அண்டம், அதன்மேல் அதன் பதின்மடங்கு வாயு அண்டம், அதற்குமேல் பதின்மடங்கு ஆகாச அண்டம், அதற்குமேல் பதின்மடங்கு ஆங்கார அண்டம், அதற்குமேல் பதின் மடங்கு குண அண்டம், அதன்மேல் நூறுமடங்கு அராக வண்டம், அதன் மேல் நூறு மடங்கு வித்தை அண்டம், அதன்மேல் நூறுமடங்கு கலை அண்டம், அதன்மேல் நூறுமடங்கு நியதி அண்டம், அதன்மேல் நூறு மடங்கு கால அண்டம், அதன்மேல் ஆயிரமடங்கு அசுத்தமாயை, அதன் மேல் பதினாயிரமடங்கு சுத்தமாயையில் சுத்தவித்தை, அதன்மேல் பதினா யிரமடங்கு மகேசுவரம், அதற்குமேல் சாதாக்கியம், அதற்குமேல் பாவிந்து அதற்குமேல் பரநாதம், அப்பால் சிவனுடைய பூரணம் அளவு எல்லைப் படாதாதலால் எல்லாப்பொருளுக்கு முடிவுமாயிருப்பது திருமுடியாத லால், சிவபாதமும் சிவமுடியும் ஒருவருக்கும் அளவுபடுத்த முடியாதாத லாலும்,

'பேதையொருபாற் றிருமேனி யொன்றல்லன்' என்பது, முன் சொல்லப்பட்ட லோகங்களிடத்தும் அதற்கு மேலும் கீழும் சக்தி சிவன் மகபூரணமாக இருக்கையாலே, ஒருவடிவாய் ஏகதேகியுமாயிரான் ; ஆதலா லும், ''வேதமுதல் விண்ணேடும் துதித்தாலுமோதவுலவாவொரு தோழன் றொண்டருளன்' என்பது, சதுர்வேதங்களும் பிரமவிட்டுணுக் களாகிய தேவர்களும் பூமியிலுள்ளவர்களும் அளவற்ற தோத்திரம் பண்ணினாலும் அந்தத் தோத்திரத்தினால் இன்னமட்டென்று அளவு படுத்த முடியாமல், முன்சொன்னதேவர்கள் திரட்சியாகிய வீட்டங்கள் தோன்றலுள் சாத்திரங்களாக் கிளறிக்கிளறிப் பலபடப்பன்னியும் தெரி யாத வஸ்துவை, 'கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பின்னாகாள்'' என்பது, உபாதி சூனியனாய், நிர்மலனாய், அரனென்றும் திருநாமத்தை யுடையவனுமாய் இருக்கிற சிவனுக்கு ஆலயமான சுத்தமாயையில் சுத்த வித்தையிலிருந்து தம்பிரானார் பணிவிடையாகப் பிரபஞ்ச காரியத்தைப் பண்ணுமவர்வாமை முதலாகிய சிவசத்திகள்.

'ஏதவனூர்.....எம்பாவாய்' என்பது, இப்படியே யுணர்ந்தார்க்கும் உணர்வரியோனாகிய சிவபெருமானுக்கு ஊர் ஏது, பேர் ஏது, உறவர், அடுத்தோரார் இவைகளொன்றுமில்லாமையால் இந்த முறைமையுடைய சிவபெருமானைப்பாடும் வண்ணம் எவ்வண்ணமோ தோழி என்றவாறு

(இராமசாமி முதலியாரவர்கள் பதிப்பு)

165. இனி, முன் திருப்பாக்கள் பத்திலும் தச சத்திகள் விஞ விடைகள் அருளியதில் உள்ளிருந்த **மலசத்தி** பரிபாகமானதால், வெளியில் எழுந்தருளி, திரோதானமே அருளாகித் தானற நின்று ஆடுதலான பேரின்ப நீராடற் பெறுதற் பொருட்டு, மலவுறக்கம் பரைவெளியிலே விழித்துச் சுகாதீத நீராடலான (தி. - ன.) :—

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐய வழியடியோம் வாழ்ந்தோங்கா ஞரழல்போற்
செய்யாவெண் ணீரூடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோ
மெய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய்.

(இ - ள்). திருவருளழகு பொருந்திய விசாலமான சிவஞான தீர்த்தத்திலே புகுந்து, நவரச அநுகரண அலங்கார ஓசையுடன் அளவளாவி விளையாடும்போது, திருவடியைத் துதித்து, 'எமது உயிர்க்குருவே'. தொன்றுதொட்டு அடிமைப்பணி செய்து நாங்கள் பிரிவின்றிச் சுகமானேம். அக்கினிபோற் சிவந்த மேனியில் பரையொளியாகிய விபூதி தரிப்பதான ஞானச் செல்வோய்! சிறிய மருங்குல் பெண்ணுருடன் அருட்பிரிவில்லை யென்பது தோன்ற அருளும் கலியாணசுந்தரனே! பரமகுருவே! தேவரீர் அடிமை கொண்டு திருவிளையாடல் செய்யும் சுத்த பஞ்ச கிருத்திய அநுபூதியில் உண்மையடியார்கள பெறுவதான அன்பு மார்க்கங்களெல்லாம் தெரிந்தவர்களைப்போல நடித்து அன்பிலாமை உள்ளக் கருத்தறிந்து நாமே ஒழிந்தோமேயானதால் ஏதும் அறியாமையுடைய எங்களை இரட்சிப்பதே பொருள்; ஞானப்பெண்ணே!—என அருளியதைக் காண்க. (11)

---

165. மொய் ஆர் - வண்டுகிறைந்த. முகேர், ஒலிக்குறிப்பு. உய்யும் வகையெல்லாம் உய்ந்து ஒழிந்தோம்' என்பதற்கு 'உய்தி கூடுகின்றவர்கள் பிழைத்துக் கதிசேரும் வகைகளிலெல்லாம் யாங்களும் படிப்படியாக உய்திகூடி முடித்தோம்' என்று பிறர் பலரும் பொருள்கூற இவ்வுரை கூறும் வேறுரை உய்த்துரைத் தக்கது. எய்யாமல் - இளைக்காதபடி.

166. இனி, முற்பாவில் பொய்கை என்ற தீர்த்த மகிமையருளி, இப்போது சீத இரும் சுனையான பேரின்பத் தீர்த்த மகிமை கூறும் (தி. - ன.) :—

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய வணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்.

(இ - ள்). பரிபாக தாகமுடைய சிவசத்திகள் அனைவரும் அள வளாவிய துதி :—பஞ்சபாசப் பிறவித் துன்பம் நமது உயிர்க்குக் கெடுவதாக ; நாம் அலங்கார ஓசையுடன் விளையாடல் செய்யும் ஞானனந்தத் தீர்த்த சொரூபன் ; திருத்தில்லை ஞான மன்றுள் ஆனந்த நடனம் அக்கினியைத் திருக்கையில் ஏன் பிணி தீர்ப்பது சத்தியமென ஏந்தி நடிப்பதான சுவாமி ; இப்பிருதிவி, வானம் இவற்றுள் அடங்கிய கருவிக.....ளையும் சுத்தான்மாக்கட் பொருட்டுச் சிருட்டி, திதி, சங்கார நிருத்யத் திருவிளையாடல் செய்பவன் ; திருத்தொண்டாகிய திருப்புகழை அளவளாவித் தோத்திரம் செய்து, திருக்கை வளை ஓசைப்பட, திருவழகான கேசபார மலரின் பம் புசிப்பதான வண்டுகள் ஓசைப்பட, தாமரை முதலான மலர் பொலியும் ஞான தீர்த்தத்தில் விளையாடும்போது, என்னை ஆண்ட பொற்பாதத்தைத் துதிசெய்து இருஞ்சுனையான திருவருள் தீர்த்தத் திலே அபேத அத்துவதமாக அழுந்துவாய் ஞானப்பெண்ணே ! —என அருளியதைக் காண்க. (12)

---

166. ஆர்த்த - பிணித்த ; பஞ்சபாசப்பிறவித் துன்பம் என்றுர். ஆர்த்து - ஆரவாரித்து ; அலங்கார ஓசையுடன் என்றுர். தீர்த்தன் - பரிசுத்தன். வார்கலைகள் ஆர்ப்பரவம் செய்ய ; இதற்கு உரை இல்லை. கலை - ஆடை ; மேகலையும் ஆம்.

167. இனி, திருவடி ஞானப் பங்கயப் பூம்புனலான தீர்த்தத்திலே நீராடலான (தி. - ன.) :—

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னு மரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப்பூப் புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

(இ - ள்). திருவருளான சத்திகள் ஒருவர்க்கொருவர் அளவளாவி அருள்வதான :—

சிவானந்தபோத தீர்த்தத்தில் உளதாகிய திரோதான சத்தியான நீலோற்பலம் அருள் வாசனையாகிறது ; இன்பவித்தான மலப் பிரேரக கருணையான செந்தாமரை.....சத்தி ;.....தத்துவ பட்சிகள் சத்திக்கின்றன. இன்னும் அநேகம் திருநாமவொலிகள் கேட்கின்றன. சீரடியார் தங்கள் மலபாச விமோசனம் பொருட்டுச் சார்வுற்றார்கள். அவர்கள் நிமித்தம் பரம்சிவனும் பராசத்தியும் குணகுணி பாவமாகி அத்துவிதமாக எழுந்தருளினார்கள். அந்தத் திருவடிப்பான ஞானனந்த மடுவில் எரிபுகு நீர்க்குடம்போல் அழுந்தி, அத்துவித மாகி, கைவளையோசையும் பாதத்திருச் சிலம்போசையும் ஆரவாரிக்க, இரண்டான அபர, பர ஞானத்தநுபூதி மேன்மேலும் விளைய, விளையாடற் செய்யும்போது உள்ளன்பால் திருவருளான தீர்த்தமும் பொங்கி யெழுவதாக ; பங்கயப் பூம்புனலான ஞானமே பொருளாக ஆடுவீர்கள் ஞானப்பெண்களே !—என அருளியதைக் காண்க.

---

167. மடு இறைவனும் இறைவியும் ஒன்று சேர்ந்திருந்தமையை ஒத்தது. குவளை பிராட்டி போன்றும் தாமரை பிரான் போன்றும் நின்றன ; குருகினம் - பறவையினம் ; வளையலும் ஆம். இங்குத் தத்துவப்பட்சிகள் என்றார். அரவம் ; ஒலி ; பாம்பும் ஆம். பொய்கையில் உடல் மலம் கழுவுதலும் திருவடியில் அடியார்தம் மும்மலம் கழுவுதலும் ஒப்பு. சங்கம் - சங்கவளையல். சிலம்பு - காற்சிலம்பு.

168. இனி, சிதப்புனலான சிவஞான தீர்த்தத்தில் நீராடியதான (தி. - ன.) :—

காதார் குழையாடப் பைம்பூண் கலனுட
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய்.

(இ - ள்). திருவருட் சத்தியால்.....சத்திகள் கூடித் திருவடியான ஞானதீர்த்தத்தில் அடிமைப் பணித் திருவிளையாடல் செய்து, சுத்தான்மாவைப் பரமுத்தியான குஞ்சிதபாதத்தில் சேர்ப்பதான சிவானந்தபோதக் களிப்பில், (நிகழ்ந்தவை) :—சத்திகட்குத் திருக்காதுகளில் அணிவதான ஜீவரத்தினை குண்டலம் அசையாமல் அசைய, தத்துவத் திருவாபரணங்கள் அப்படியே அசைய, ஞானப் பூங்கோதையான திரோதான கேசம் அவ்வகை அசைய, அச்சத்திகள் வசமுறும் உயிரான மூவகையோரும் அசைய, சிவஞானமான குளிர்ந்த சிதப்புனலில் அழுந்தி, தற்போதங்கெட்டு, 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதார்' என்ற அநுபூதிப்படி, ஞானகாச மன்றினுள் ஆடும் நாதனைத் துதித்து, 'வேதத்துக்குக் காரணப் பொருளே!' எனத் துதித்து, 'அவ்வேதாந்த வத்துவே!' எனத் துதித்து, 'சோதிக்குட் சோதியே!' எனப் புகழ்ந்து, திருமுடியில் தரித்த கொன்றைமாலை தான் பெறுவதெனப் புகழ்ந்து, எல்லாப் பொருட்கும் ஆதியான அருட்டிறம் புகழ்ந்து, திருவடி பிரியாத உயிரைப் பிரித்துத் திரோதானமாக்கி, திரும்பக் கருணையாகிய தெருட்சத்தியால் பெத்தம்போல முத்தியென்ற அநுபூதி காட்டிய திருவருட் பரையை நாடி, இவையெல்லா அத்துவித அசைவுகளும் திருவடியே யென, ஞானப்பெண்களே! குளிர்ந்த புனலில் அழுந்தி விளையாடுவீர்.—என அருளியதைக் காண்க. (14)

168. கோதை - பூமாலை. அப்பொருள் - வேதப்பொருள். ஆம் ஆ பாடி. பேதித்து...பெய்வளை - இருமபைப் பொன்னுக்கினுற்போல, சிவஞானத்தின்னமுதம் கூட்டி, பசுபோதக் கடுமை நீக்கிச் சிவஞான ஒளி தந்து, பொன்னைச் செய்து அந்நிலையிலிருந்து தாழாமே வளர்த்தெடுத்த திருவருட் சித்சத்தி என்னும் பிறவாறும் பிறர் பொருள் கூறுவர்.

169. இனி, பதின்மூன்றும் திருப்பாவில் அருளிய திருவருளின்பப் பூம்புனலின் விளையாடலான (தி. - ன.) :—

ஒரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தஞையாள் விண்ணேரைத்
[தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

(இ - ள்). பராசத்தி மற்ற சிற்சத்தி முதலானவர்களை நோக்கி அருள்வதான, திரோதான நீக்கலான விளையாடல் : அவையாவன :-

" எனது ஆன்ம நாதனே !.....எம் பெரிய பெருமான் ! எக்காலமும் எம்மைப் பிரியாது உள்ளிருப்பவரான சுவாமியைத் திருவடிச் சிறப்போதி, அழைப்பொழியாத வாயுடையாளாய், ' சித்தம் தெளிபவளான ' சிவானந்தமூற்று, திருவடியின் பெருமையநுபூதி ஒழியாது அழுது, மேலெலாம் கண்ணீர் சோர, அதுவாய் நிற்கும்போது, பாரிலுள்ளார் விண்ணினுள்ளாரைப் பொருளெனப் பணிவு செய்யார் ; " (இங்ஙனம் பேரரையற்கு ஈடுபட்டு) அரையன் என்று நாம்முடையீரே !.....ஆண்மைப் பொருளான, மருங்குடைய, ' ஆரூர் கேட்டாள் ; பெயர்த்தும் அவனுக்கே பிச்சியாகி ' த்தன் அடி சேர்வதாக என்வண்ணம் அவ்வண்ணமாக அடிமைப் பணி இம்மையிற் கொள்ளும் சித்து வித்தையுடைய சுவாமியை, கச்சு நெருங்கிய இரத்னபரணம் தரித்த தனமுடைய சிற்சத்திகளே ! இடைவிடாது நாவில் துதியாக வைத்து, திருவருளழகு பொருந்திய சிவஞானப் பொலிவுளதான தீர்த்தப் புனலிலே விளையாடற் செய்வீர் ஞானப்பெண்களே !—என அருளியதைக் காண்க.

திருப்பா பதிஞென்று முதல் அருளிய தீர்த்தம் திருஉத்தரகோச மங்கைத் தலத்தும் திருவண்ணமலையிலும் உளது. (15)

முதல் நான்கு அடிகளும் இறைவர்க்குப் பித்தொருவரான நிலைமை, ஒரு பெண்மேல் வைத்துக் கூறப்பட்டது.

இவ்வுரை சிறந்த பொருளைக் கொண்டிருந்தும் சொற்றொடர் பொருத்தமில்லாமல் அமைந்திருக்கிறது. ஒருவர் இங்ஙனே பித்து

170. இனி, பராசத்தியே அருள்மேகமாக வந்த (தி. - ன.) :—

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

(இ - ள்). என் உயிர்த்தோழியரான ஞானப்பெண்களே ! கேண்மோ ! அநாதி உயிரை விட்டுப் பிரியாத திருவருளானது உயிர்ப் பரிபாகம் பெற நினைத்துத் தத்துவ அதிட்டானப்படி, பராசத்தியே அருள்மேகமாகி, பிறவிச் சாகரத்தைத் தன்னுள் அடக்கிப் பிரேரகப் பிரேரியப் பொருளாய், ஆன்ம சிற்சத்தியாகி, விளங்கி, நம்மை ஆளும் தாயான பரையின் இடைபோல மின்னின் பிரகாசமாகி, என் உயிர்த்தாயான திருவடியின்மேற் [1]'பொன்னசலஞ்சேர் பொருள்' போலாகி, சத்திச்சுய அம்மையின் திருப்புருவம்போல வானத்தின் வில் இலகி, என்னை ஆளும் பொருட்டு என் தாயான வள் தன்னை விட்டுப் பிரியாத பரமசிவன் திருவுளச் சிரடியார்க்கும் அநாதியான சத்தியான தாயானவள் நம் போல்வார்க்கும் தொன்று தொட்டு வராநின்ற தேவர்கட்கும் திருவருளான ஞான மழையறிவு விளங்கப் பொழிவதான பேரின்பமேகம், ஞானப்பெண்களே !—என அருளியதைக் காண்க. (16)

ஆமாறு ஆட்கொள்ளும் வித்தகர்தாள் நாம் பாடி பூம்புனலாடுவோம் என்று இயைக்க. பார் ஒருகால் வந்தனையாள் - ஒரு முறை நிலத்திலே வந்து நின்றவள் போன்றவள் ; நிலத்தில் தரித்தலுமுள் என்றபடி. வித்தகர் - ஞான உருவர். ஏர்உருவம் - அழகு உருவம் ; ஏர் - எழுச்சியும் ஆம்.

170. நாடு பருவமழை பெற்று வளமடையும் பயனைக் கூறும் செய்யுள்.

முன்னி - நினைத்து. பிறர், முன் இக்கடலை என்று பிரித்துப் பொருள் தேடுவர். இட்டிடை - மிகச்சிறிய இடை. 'பொன்னஞ் சிலம்பிற் சிலம்பி' இங்குக் காட்டப்பெற்ற உரையின் நயம் போற்றத்தக்கது. முன்னி - முந்தி ; கருதி எனலுமாம்.

இது மழையை நோக்கிப் பாடியது.

1. கோயிற்புராணம், சடராச, 44.

171. இனி, நாராயணன் முதலிய தேவர்கட்குக் கிட்டாத பேரின்பம் தனக்குக் கிடைத்தமையைக் கூறும் (தி. - ன.) :—

செங்க ணவன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பால்
எங்கு மிலாததோர் இன்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனே
அங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

(இ - ள்). பராசத்தி சொரூப பரிபாக சுத்தான்மப் பிரேரக சத்திகளே ! கேண்மோ ! பசுவர்க்க பிரமன் மால் மற்றுள்ள தேவாதிகட்கும், எங்கணும் யாதாகி நின்றோர்க்கும், கிட்டுதற்கரிதாகிய சிவபோத பரமானந்த இன்பத் திருவடி நமக்குக் கிடைக்கும் பொருட்டு, வாசனையுடைய அளகபாரமுடையார்களே ! நமது பாச விமோசனஞ் செய்து, உள்ளமே பெருங்கோயிலாக, அத்துவிதமாக எழுந்தருளி, சிவந்த தாமரைமலர் போன்ற திருவடியைச் சிந்தையிலும் சென்னியிலும் வைத்தருளி எழுந்தருளும் பரிமேலழகரான பரியாளனை, திருவாலவாயில் நாதனை, உண்மை யடியார்க்கு அமிர்த இன்பனை, நமது இரட்சகனை, துதித்து நயம்பெற்ற திருவடியிலே பிரியாது அழுந்தி விளையாடுவீர்களாக, ஞானப்பெண்களே—என அருளியதைக் காண்க. (17)

172. இனி, திருவண்ணாமலையில் எழுந்தருளிய நாதன் திருவடி மகிமையான (தி. - ன.) :—

அண்ண மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ண ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ண ரொளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்

171. கொங்குண் கருங்குழலி விளி. கொங்கு - மணம். கோதாட்டி, ஈராட்டி என்றும் பொருள் கூறுவர். இல்லம் - உள்ளமாகிய கோயில் என்றனர். சேவகன் - வீரன்; இப்பொருட்கு இயையப் பரிமேலழகர் என்றனர். அங்கண் அரசு - இங்குத் திருவாலவாய் நாதன் என்றார். அழகிய கண்ணையுடைய அரசும் ஆம்.

பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ
[ரெம்பாவாய்.

(இ - ள்). திரோதான முதலிய சத்திகளைப் பராசத்தி நோக்கி அருள்வதாவன :—

லிங்கோற்பவமாகிய சேணுறும் தழற் பிழம்பான சகளாகளத் திருமேனியுடைய சுவாமியான அண்ணாமலைநாதன் திருவடியைத் தரிசிக்கப்போன நாராயணன் முதலான தேவர்கள் திருமுடி தண்டம் போல் விழுந்தபடி அநுக்கிரகம் வருமளவும் கிடப்பதான மகுட ரத்தின ஒளி அளவிலாது பிரகாசிப்பதுபோல, வெய்யோன் அணைந்த விழி வேறற்ற காட்சியைப்போல, ஞானசூரியன் உயிராகிற பூதாகாசத்தில் அபேத அத்துவிதமாக ஒளிவர, முன் அவ்விடத்திலிருந்த நட்சத்திரவொளி அருளொளியில்டங்க, பேரொளியான சிவன் அவன் அவள் அதுவாகிச் சோதிக்குட் சோதியாகிப் பாரொடு விண்ணாகி, மண்முதற் காரணமெல்லாம் [1]அணுவசத்ததாகி, அத்துவிதமாகி, வேறாகி, கண்ணிலஃதொன்றும் பேரின்பமாகி, சருவவியாபகமான நாதன் திருவடியிலே விளையாடுவீர்கள்; ஞானப் பெண்களே !—என அருளியதைக் காண்க. (18)

---

172. திருவெம்பாவை திருவண்ணாமலையிலே அருளிச் செய்யப் பெற்றமைக்கு இச்செய்யுள் அறிகுறி. திருவடியே தீர்த்தமாகக் கூறப் பெற்றது.

வீறற்றாற்போல - பெருமை கேட்டதுபோல. விண்ணோர் முடி மணித்தொகையின் ஒளி இறைவன் பாத ஒளியின் முன் வீறற்றது. கண் ஆர் இரவி கதிர் வந்து கார் கரப்ப - பெருமை பொருந்திய சூரியன் தன் கதிர்களோடு வந்து மேகத்தில் மறையவும் என்பது வெளிப்படையான பொருள்; இங்குச் சூரியனைப் பார்த்த கண் பிறபொருள்களைக் காண மாட்டாததைப்போல என்று பொருள்பட உரைக்கின்றார். கண்ணார்..... தரமகல; இப்பகுதி விடியற்கால நேரத்தை வருணித்த வாறாகக் கொள்க. கண்ஆர் அமுதமாகி - கண்ணில் அஃதொன்றும் பேரின்பமாகி.

1. அணுவசத்ததாகி என்றும் படிக்கலாம்.

173. இனி, கலிஞானி காதலான (தி. - ன.) :—

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தால்
எங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன் றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

(இ - ள்). திரோதானசத்தி திருவருளால் இரக்கமுற்றுப் பரா சத்தியை நோக்கி, " தாயே ! அநாதி வழக்கச் சொற்படி உனது சீர் பாதம் அடைந்த பிள்ளையான ஆன்மாவைத் தாயான நீயே கடை விடாது இரட்சிப்பது உன் கடன் " என அருளி, மேலும், " இவ் வரையில் உயிர் பரிபாகமில்லாது திருவடி பிரிவுற்று வேரு நின்ற பழக்கமான பயத்தால் திரும்ப அடைக்கலம் புகுவது " என மொழிந் தது. [வேந்தனடி என்ற வாக்கிய அநுபூதியில் (பக். 236-240) எழு திய மன்னவன்றன் மகன் (பக். 236 முதல்) என்ற தொடர்ச்சி இவ் விடத்தில் துணிபெறத் தக்கது]. அப்பராசத்தி உயிரைத் திரோ தானம் நீக்கிச் சிவமான திருவடியிற் சேர்க்க, அவ்விடத்திற் சேர்ந்த சுத்தான்மா, " அநுபூதி விண்ணப்பம்; நாதனே ! அடியேன் ஞானக் கொங்கை இன்பம் தேவரீர் சீரடியார் திருவருட் பணிக்கே சேர்வது ; ஒழிய, மற்றின்பம் சேரேன் " என்றும், " போதத்தைத் தேவரீர் திருவடிப் பணி செய்வதொழிய வேறில்லை ; இரவு பகல் என்ற பெத்த முத்மாகிய இரண்டு தசைகளிலும் எனது உயிர் நாதன் திருவடியைக் கண்களாற் பருகி உண்பதொழிய வேறு காண்கின் றிலன் ; இவ்வகை உண்மை பரமசிவன் அருளால் எய்துவனுலல், ' ஞாலமதில் ஞான நிட்டையுடையோர்க்கு நாடுவது ஒன்றில்லையே !' ஆனதால், கால வரையுறுவதான கதிர் எவ்விடத்தில் உதித்தாலும் அடியேற்கு ஆவதொன்றில்லையே ! ஞானப்பெண்ணே !—என் அருளியதைக் காண்க.

(19)

---

173. பழஞ்சொல் - பழமொழி. கங்குல் - இரவு. பரிசு - தன்மை. எங்கோன், வினி - சிவனடி பற்றி நிச்சிந்தையாய் நிற்பாருக்கு உலக வியவகாரங்கள் பாதிக்கமாட்டா என்பது கருத்து.

174. இனி, பரமுத்தி பஞ்சகிருத்தியத் (தி. - ன.) :—

போற்றி யருளுகநின் னுதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீரு மிணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணுத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

(இ - ள்). திருவருளான உயிர் எல்லாப் பிரபஞ்சமும் புதிதான அநுபூதியால் தேவீர் திருவடியே அடியேனை இரட்சிக்க! முதற் பொருளே அந்தமும்; சிவந்த மலர்போன்ற திருவடியே இரட்சிக்க! எல்லா உயிர்க்கும் போகம் திருவடியே யாதலால் அவை இரட்சிக்க! எல்லா ஆன்மாக்களுக்கும் சங்காரகர்த்தா திருவடியே யாதலால் அவை இரட்சிக்க! திருவடியைப் பிரமா விட்டுணு காணுத திரோபாவமாதலால் அவையே இரட்சிக்க! மார்கழித் திருவிழா நீராடலான **அத்துவித அன்பு இன்பக் காட்சியும் திருவடியே** யாதலால் குஞ்சித பாதமே அடியேனை அடைக்கலமாக இரட்சிப்பது! விண்ணப்பம்! ஞானப்பெண்களே! என அருளியதைக் காண்க. (20)

திருச்சிற்றம்பலம்.

---

174. இச்செய்யுளில் திருவடியின் பஞ்சகிருத்தியங்கள் கூறப் பெற்ற நுட்பத்தைக் காண்க.

திருச்சிற்றம்பலம்

8. திருவம்மானை

இனி, திருவம்மானை யான திருவருள் வினியோகம் அருளிச் செய்யப் புகுகின்றதாவன :—

அகத்தியச் சூத்திரமாவன :—

தேனுந் துஞ்சொற் றிருவம் மானை
ஆனந் தயோகக் களிப்பது வாகும்.

பொழிப்புரை யனுபூதியாவன :—

முற்பதிகத் திருவெம்பாவையில் தசவித சத்தியின் வாய் மொழியும், அப்பதிகவரை மூன்றுமிடமான **திருவருளின் செயலே தன் செயலாக வருளி**, இந்நாலாமிடமான திருவருளான **கருணையின் பெருமை** யைக் கண்டு கூறிய சிவானுபவ சுவானுபூதிகப் பேரின்ப நீராடினேர் களுடனே சிவதரிசனம் பண்ணி, தோத்திரம் பண்ணுகிறபோது, கருணையின் அனுபவமும் பெருமையும் எல்லாம் புதிது புதிதாகத் தோன்றும் ;

அம்மானையாடும்போது திரிவித கரணமும் அதிலே செல்லு மன்றி, வேறொன்று நிகழாது ; அம்மானை யாடுவதில் ஒரு தரம் ஏறி யிறங்கின அம்மானை மீள. மீளவும் அப்படியே கரணத்தைச் செலுத் தும் ; அப்படியே செலத்துகிற போதும், பாடுகிற போதும், (1) குருவாய் வந்தருளின பெருமையும், (2) அரிதான பொருள் எளி தான முறைமையும், (3) பிறருக்கு கிடையாது, (4) கிடைத்தலுந் தவத்தாலும் வரமாட்டாத செய்தியுங், (5) கல்லிலக் கனியாக்குந் தன்மையும், (6) அருள் செய்தவியல்பும், (7) அன்புடை யோடுவப் பும், (8) அடியார்க்கெளி வருதலுங், (9) கண்டவிட மெல்லாந் தோன் றலும், (10) அவற்றுள் திருவடையாளங்களும், (11) எவ்விடமும் தன்னிடமென்றலும், (12) ஐயந்தோன்றுமலுணர்த்தலும், (13) மெய் யர்க்கு மெய், பொய்யர்க்குப் பொய்பா யிருத்தலும், (14) விஷயத்திற் கின்பாசங் கண்டாற்போலு யிர்க்கின்பப் பாசங்கண்டலும், (15) அடி யார்க் கிடையூறு தீர்த்தலும், (16) எவ்வுயிர்க்குங் கருணை செய்த லும், (17) பெற்றும் பெருமை தோன்றலும், (18) அடியார்க்கு எளிவருதலும், (19) உயிர்க்குத் தாமின்றி வேறின்பமில்லை யென்ப

தும், (20) பிறரறியாமல் தானே யறிந்து பேறுற்று ஆனந்தத்தை யுறலும், இம்முறையாக அமைந்துள்ள இருபது (செய்யுட்களைக்) காண்க.

இப்பதிகம் திருவண்ணமலையில் ஓதியது; ஒப்புவமைபற்றி வந்த ஆறடித்தரவுக் கொச்சகக் கலிப்பா.

175. இனி, பரமகுருவா யெழுந்தருளிய (தி. - ன.) :—

செங்க ணெடுமா லுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பா தம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமு மாட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கண னந்தண னறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்கா ணம்மானாய்.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! மூன்று மாயா புவனமே இடமாக, திருவருளுண்டையால் ஏறியிறங்குவதான பிரேரகப் பிரேரிய சுத்த பஞ்சகிர்த்தியத் திருவிளையாடல் தரிசனமான திருவடியைத் திருமால் முதலான பேர்கள் ஆழத்திற் பசு போதமாய்ச் சென்று காண்பதற் கெட்டாத நாதனடி, எம் பொருட்டுத் திருமேனி கொண்டு இப்பிரகிருதி யிடமாக வெழுந்தருளி, எமது பிறவிப்பிணி வாராது பாதுகாத்து, எமது பரிபாகம் எவ்வகையிருப்பினும் அவை கருணை கூர்ந்த வின்பத் தென்னை விருட்ச ஞானச்சோலை சூழ்ந்த தட்சிண திருவருட் பெருந்துறை சுவாமி, அழகிய இன்ப இடத்தில் விப்பிரவர்க்க வடிவாக அடியேற்குள, 'மூலையிருந்தாரை முற்றத்தே விட்ட', ஓர் மொழிப் பிரேரக மகாகேவல முதலாகப் பரமுத்திவரை, மகாமந்திர உபதேசஞ் செய்து அடிமைப்பணி கொண்டருளி, குஞ்சிதபாத பரமுத்தி யளிப்பதான திருவருள் அழகிய

திருவம்மானை

திருவம்மானைக்குத் திருவாசக உள்ளக்கிடை : ஆனந்தக்களிப்பு : எ - து சுகமேலீடு.

'நலமுறு மந்தணர் வடிவாய் நாரணன் காண்பரியபத
நிலமதில் வந்தான் கருணை நினைந்தாட லம்மானே

(பழைய திருப்பெருந்துறைப்புராணம்).

கருணை கடாட்சத் திருவடியைத் துதித்திருந்தபடி இருந்தாடுவீர்கள் —என வருளியதெனக் காண்க. (1)

176. இனி, நாராயணன் முதலான தேவர்கள், இருடிகள், நாகர், மற்றுள்ளாரும் அறிவரிய பரமசிவன் பரத வேடரா யெழுந் தருளியதைக் கூறும் (தி. - ன.) :—

பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தார்
ஆராலுங் காண்டற் கரியா னெமக்கெளிய
பேராளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் னுளம்புகுந்த
ஆரா அமுதாய் அலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்கா ணம்மானாய்.

(இ. ள்). பூமியிலுளராகிய இருடிகள் முதல் பெருஞ் சுவர்க்க பத இந்திரன் முதலோரும், பாதலத்திலுளராகிய நாகர் முதலியோரும் மற்றுள்ள மூன்று மாயா புவன வாசிகளும் காண்பதற்கு ஊனக் கண்ணுக் கெட்டாத நாதன் அடியேன் போல்வார் கண்ணுக்கு எளிய வடிவுடைய பெருங்கருணையாளனுய்த் தட்சிண திசையே தன் திசை யாக வுள்ளவன் ; அத்திசையிலுள்ளதாகிய திருவருட் பெருந்துறை யிலெழுந்தருளிய பரமகுருவான சுவாமி, அடியேனை ஞானப்பித்த னாகச் செய்து, இளிப் பிறவா வழி அநுக்கிரகஞ் செய்து, எனதுள் ளமே கோயிலாகக் கொண்ட இன்ப அமிர்தாகி, சமுத்திரத்திலே வாழும் மச்சங்களைக் கருணை வலையால் வீசி அருளளிக்கும் பெரிய வின்பக் கடலான சுவாமி ; அவரைப் பாடியாடுவீர்கள் அம்மானையை, ஞானப்பெண்களே !—என வருளியதை அன்பாற் காண்க. (2)

---

175. இடந்தும் - பிளந்தும். காண்பு - காணுதல். எம் தரமும் ஆள்கொண்டு - எம் தன்மை (பரிபாகம்) எவ்வாறிருப்பினும் அதனைப் பொருளாக்காமல் கருணையால் ஆட்கொண்டு. தரம் - கூட்டம் என்று பொருள்கொள்வாருமுளர். தென்னன் - தென்னுடன் ; தென் நன் என்று பிரித்து அழகும் நன்மையும் கொண்ட, என்றும் பொருள் கூறுவர். அறை கூவுதல் - வலிய அழைத்தல். பாடுதும் - பாடுவோம். பிற செய்யுட்களிலும் இவ்வாறேகொள்க.

அம்மானாய் அம்மனை ஆடும் பெண்ணே என்பது பொருள்.

176. பேராளன் - பெருமையை ஆள்கின்றவன் எனினும் ஆம். மீன் விசிறும் - மீனின் பொருட்டு வலைவீசின. திருவிளையாடற் புராணத் தில் 'வலைவீசின திருவிளையாடலைக்' காண்க. பேராசை வாரி - பெரிய இன்பக்கடல். வாரி - கடல்.

177. இனி, வேருனவர்கட்கு அறிவரிதானமையைக் கூறும் (தி. - ன.) :—

இந்திரனு மாலயனு மேனேரும் வானேரும்
அந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி
எந்தரமு மாட்கொண்டு தோட்கொண்ட நீற்றனுய்ச்
சிந்தனேயை வந்துருக்குஞ் சீரார்பெருந் துறையான்
பந்தம் பரியப் பரிமேற்கொண் டான்தந்த
அந்தமிலா ஆனந்தம் பாடுதுங்கா ணம்மானுய்.

(இ - ள்). ஞானப்பெண்களே! பரமசிவன் திருவடியைச் சிவ ஞான மில்லாத புறமுடைய இந்திரன், மால், அயன் மற்றுள கர்த் தாக்களும், தேவர்களும் அந்தரமார்க்கமாக நிற்க, அடியோங்கட் பொருட்டுப் பார்மிசை மானிடம் போல வடிவு கொண்டெழுந்தருளி, பரிபாக முடையனுகத் திருவுளங் கொண்டு என்னே யடிமையாகச் செய்து, திருநீற்றைத் தரிப்பதான தோனேயுடையன், எனது சிந் தையை அன்பாலுருக்கக் கருணே செய்யுஞ் செல்வச் சிர்ச் சிறப்பின் பத் திருப்பெருந் துறைநாதன், எனது பாச விமோசனஞ் செய்வதே நியமமாக அருள்வதற்காகப் பரிமேலெழுந்தருளிய நாதன், அதுக் கிரகஞ் செய்த சிவானந்தத்தை நினேத்துப் பேரானந்த மென வாயாற் றுதித்து, உருண்ட, அருளம்மானே, ஆடுவீர்கள், அருட்பெண்களே! —என வருளியதைக் காண்க. (3)

178. இனி, பசுபோத தவத்தால் வெளிப்படாத திருவடி யின் (தி. - ன.) :—

வான்வந்த தேவர்களும் மாலயனே டிந்திரனும்
கானின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போல் தலேயளித்திட்
டூன்வந் துரோமங்க ளுள்ளே யுயிர்ப்பெய்து
தேன்வந் தமுதின் தெளிவி ளெளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்கா ணம்மானுய்.

---

177. அந்தரம் - இடைவெளி. அவனி - பூமி. தோளில் நீறு கொண்டவனுய் என்று மாற்றுக. பந்தம் - பாசம். பரிய - நீங்க. பரி மேற்கொண்டது 'நரிகுதிரையான் திருவிளையாடல்'.

(இ - ள்). அம்மானே யாடாதே யாடும் ஞானப்பெண்களே! கேண்மோ! பரமசிவன் திருவடியைச் சிவஞான அன்பில்லாத வைராக்கியத்தால் காணவே துணிவு கொண்ட சுவர்க்கலோக தேவர்கள் முதலாய பிரமன், விட்டுணு, இந்திரன் முதலியோர்களும் கரும யோகமான, வாயு தாரணையாதி பற்றி யொருகால் மேல்நின்று இந்திரிய முதலிய அந்தக்கரணம் அடக்கியும், வெகு காலமான தால் தேக முழுதும் புற்றெழுந்தும், அவர்கள் கருத்துக் கெட்டாத சுவாமி, தாமே எழுந்தருளி, யாதொரு முயற்சியுஞ் செய்யாத நாயானவனைத் தாய் இரக்கம் பூண்டு, பெருங்கருணை செய்து, உள்ளே பெழுந்தருளி, ஞான இன்பாற் பரவச மூச்செய்திய பேரின்பத் தேனின் அமிர்தத் தெளிவில் ஒளியாகிய பிரகாச ஞானத் திருவடியைப் பொருளெனப் பாடியாடுவீர்கள்; சத்திகளே! அருளம்மையீர்! என வருளியதைக் காண்க. (4)

179. இனி, திணியான மனோசிலையைக் கனியாகச் செய்தமையைக் கூறும் (தி. - ன.) :—

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி விணைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலமன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்கா ணம்மானாய்.

(இ - ள்). அம்மானையாடும் ஞானப்பெண்களே! கேண்மோ! எனது உயிராண்ட சுவாமி, என் மலபோதக் கல்லினும் வலிதான நாயின் மனத்தை, சருவஞான வல்லமை யுடையனுமாய்த் தட்சிணத் திருப்பெருந்துறைப் பதியாளன், என்னை ஞானப்பித்தனுகக் கல்லைக் கனியாக உருகச் செய்து, அன்பனுக்கித் தனது காருணிய கருணையில் அத்துவிதமாகச் செய்து, விணையை நீக்கியருளி, அபேதப் பொருளானனை, திருத்தில்லை நகரின்கண் எழுந்தருளி நடனஞ் செய்

---

178. கான்நின்று - காட்டில் நின்று. வற்றியும் - உலர்ந்தும். புற்று - கதையான் புற்று. தலையளித்தல் - பேரன்பு செய்தல்; இரக்கம் பூணுதல். உரோமங்கள் வந்து, உள்ளே உயிர்ப்பு எய்து என்னும் பிரிக்க. வான் - ஒளி.

யும் ஞானகாசனை, அடியாரை யிரட்சிக்கும் பொருட்டு விரைவாய்ச் சேறலுடைய புண்ணிய விடையுடையவனை, பாடியாடுவீர்கள்; அம் மானையை என வருளியதைக் காண்க. (5)

180. இனி, உயிரைத் திருவருளாக்கி அடிமைப்பணி கொண்ட இயல்பைக் கூறும் (தி. - ன.) :—

கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆட்டான்கொண் டாண்டவா பாடுதுங்கா ணம்மானாய்.

(இ - ள்). திருவம்மானைத் திருவிளையாடற் செய்யும் என் னுயிர்ப் பாங்கியரான ஞானப்பெண்களே! ஓரற்புதமான திருவிளை யாடற் கேண்மோ! பரமசிவன் அடியேன் பொருட்டாக நானுவித விசித்திர சித்திர மெழுதிய திருமதில் சூழ்ந்த தட்சிணத் திருப் பெருந்துறையில் எழுந்தருளி, தன்னை, வினையை, தலைவனை, காட்டாத மூலமல விருளை, திருவருளாற் காட்டி, அம்மலப் பிரேரகப் பொருளாகிய பரசிவத்தை அவனருளாற் காட்டி, பின்னுந்தனது பெருங்கருணையான அனுதியின்பப் பொருள் தானெனக் காட்டி, சிவஞான நாட்டமுடைய அடியார்கள், 'இதுவோ தாம்' எனச் சிரிப்ப, பரமுத்தியான திருவடி என்னுயிரிற் காட்டி, அவ்வுயிரின்ப வழித் தான அபேத அத்துவித வாழ்வைக் காட்டி, அடிமை செய்த, ஓர் காலமுங் குறைவிலாத கருணைப் பொருளைப் பாடியாடுவீர்கள் அம் மானையை; என வருளியதைக் காண்க. (6)

---

179. வல்லாளன் - வல்லமையுடையன்; வினை - இருவினைகளை யும்; ஒல்லை - விரைவு; விடை - இடபம்.

180. கிறி - மாயவித்தை; தீட்டுதல் - எழுதுதல்; தாள்தாமரை. ஆள்தான் கொண்டவர.

181. இனி, அன்புடைய இன்பான ஒருவப்புக் கூறிய (தி. - ன.) :—

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கு முள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நம்தம்மை யாட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே யுலகேழும்
ஆயானை யாள்வானைப் பாடுதுங்கா ணம்மானாய்.

(இ - ள்). திருவம்மானை இருந்தபடி இருந்தாடும் ஞானப்பெண்களே! கேண்மோ! இடைவிடாது சச்சிதானந்த அத்துவித வாழ்வையுள்குவார் உள்ளக் கோயிலாக உடைய பிரிவில்லாதானை, அத்தன்மையில்லாதார்க்குத் தூரமானவனை, பரியாளனை, தட்சிணத் திருப்பெருந்துறை நாதனை, வேதமுடையானை, அர்த்தநாரீசுவரனை, நாயான நம்போலவர்களை அடிமைப்பணி கொண்ட சருவ சிரேட்டனை, தாயான செல்வனை, தத்துவ சொரூபனை, எல்லா வுலகானவனை, ஆண்டவனை, பாடி ஆடுவீர்கள், அம்மானை! என வருளியதைக் காண்க. (7)

182. இனி, சிவனடியார்க் கெளிதாய் அருள்வதான (தி. - ன.) :—

பண்சுமந்த பாட்டிற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானாய்.

(இ - ள்). திருவுடைய ஞானப்பெண்களே! கேண்மோ! திருவருளிசையையுடைய திருவருட்பாதத் துதிக்கு, தருமி பாணர் முதலிய அடியார்கட்குச் சிவஞானச் செல்வமருள்வதான பராசத்தி வாமபாகன், பெரியபெருமான், திருப்பெருந்துறைநாதன், மேலுல

---

181. உள்குதல் - தியானித்தல். சேயானை - தூரத்திலுள்ளவன். சேவகன் = பரிமேலழகன் என்றுரை. தத்துவன் - உண்மையனுமாம். உலகேழும் ஆள்வானை என்றும் கூட்டுக.

குள்ளவர்கள் புகழும் புண்ணிய சீர்த்தியுடைய ஆதார சத்திமுதற் (மூலமல) சத்திவரைப் பிரேரக சிவன், சிவஞானமே கண்ணுக நெற்றி யிலுடையவன், திருநாம ஓசையுடைய திருமதுரையிலே வந்தியம் மைக்காக உதிர்ந்தபிட்டுண்டுத் திருவடி நோவ திருமுடியிற் திருமண் சுமந்ததுமன்றி, பாண்டியன் கைப்பிரம்படித் திருமேனி வடுப்படக் கொண்ட திருவருளைப் பாடி ஆடுவீர்கள், அம்மானை! என வருளிய தைக் காண்க. (8)

183. இனி, கண்டவிட மெல்லாஞ் சிவனுகப் பேறுற்ற தன்மையைக் கூறும் (தி. - ன.) :—

துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்ட புரிநூலான் கோலமா வூர்தியான்
கண்டங் கரியான்செம் மேனியான் வெண்ணீற்ரன்
அண்டமுத லாயினு னந்தமிலா வானந்தம்
பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளும்
அண்டம் வியப்புறுமா பாடுதுங்கா ணம்மானுய்.

(இ - ள்). அம்மானை யாடுவதான ஞானப்பெண்களே! கேண்மோ! 'குறிகளும் அடையாளங்களுங் கோயிலு நெறிகளும் வர நின்றதோர் நேர்மையும்', வினவில், உலக ரட்சைக்கு அர்த்த சந்திரனைச் சிரசிலே தரித்தவன்; அடியார் பணிசெய்ய வேதத்தை அருளுவதானவன்; திருப்பெருந்துறைக் குருமணியானவன்; ஒன்பது கொண்ட மூன்று புரிநூல் நாணுக ஆன்மாக்களுக்கு அறிவு விளங்கத் தரித்தவன்; அடிமையை இரட்சிக்க அழகிய பரிமேலெழுந்தருளிய சுவாமி; தேவர்களை இரட்சித்த கருணை தோன்ற சாட்சியாகத் திருமிடற்றில் நஞ்சைத் தரித்தவன்; 'சேணு றுந்தழற் பிழம்பாய்' அடியார் காணத் திருமேனியுடையவன்; பரையொளியே ஒள்ளிய நீருகத் தரித்தவன்; அண்டகோடி

---

182. பாடற்படைத்தருளினமையைத் தெரியறுத்த திருவிளையாடலி லும், திருமுகங்கொடுத்த திருவிளையாடலிலும் காண்க. வியன் மண்டலத் தரசன் என்பதற்குக் காட்டிய உரையைக் காண்க; அகன்ற மண்டலங் களுக்கு நாயகன் என்பர் பிறர்- மண் தலம் எனப் பிரித்துப் பூமிக்கு நாயகன் என்று கூறுவாரும் உளர். கலி - ஒலி முழக்கம். கோ - அரி மர்த்தன பாண்டியன். இவ்வரலாறுகளை மண்சுமந்த திருவிளையாடலில் காண்க.

களுடைய வடிவையுடையவன் ; அளவிலாத பேரானந்த இன்பத்தைச் சுத்தான்மாக்களின் பண்டை யறிவொழிந்து பண்டைச் சிவமாய் மொண்டு அழுந்திப் போவதே பரமமுத்தியெனு அருள்வதான நாதன் ; எனப் பாடியாடுவீர்கள் அம்மானே !—என வருளியதைக் காண்க. (9)

184. இனி, பெரிய நல்லடையாளங்களைக் கூறும் (தி. - ன.) :-

விண்ணளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணளு மன்னவர்க்கு மாண்பாகி நின்றனைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ண மலையானைப் பாடுதுங்கா ணம்மானாய்.

(இ - ள்). ஞானப்பெண்களே கேண்மோ ! நம்முடைய சுவாமி எல்லாத் தேவர்கட்குந் தேவனுகிய மகாதேவனை இரு பிறப்பாளனை, வேதப்பொருளானை, பிருதிவியிலுளனை இராசனுக்கும் அமிர்த மானவனை, தமிழே நிரதிசய வின்பமென வனுக்கிரகஞ் சீரடியார்க்கு அருளும் தட்சிண பாண்டிய ஞானராசனை, வாமபாகம் பராசத்தியைத் தரித்தவனை, யாவரும் வணங்குந் திருப்பெருந்துறையிலே அடியேன் இரண்டு கண்களுங்காண மலரடி காட்டி நாயான என்னை அடிமை செய்தாண்ட திருவண்ணுமலை நாதனை, அருளுருவுடைய சோதியனை, அவன் அருளியதைப்பாடி., அம்மானை யாடுவீர்கள் !—என வருளியதை அன்பாற் காண்க. (10)

---

183. தண்டு - ஒற்றைப்பிறையைக் குறித்தது. அர்த்தசந்திரன் உபசார வழக்கு ; கோல - அழகிய. மா - பரி. கோலம் ஆ என்று பிரித்து எருது என்ற பொருளும் கொள்வர்.

184. மண்ணளு மன்னவர் - அரிமர்த்தனன் போன்றவர்க்குத் தமிழ் அளிக்கும் என்றமையால் தமிழிக்குத் தாயானவன் என்று கூறிய வாறு. கண் ஆர் - என் கண்கள் நிறைந்து காணும்படி. அண்ணமலை இப்பாடல் அருளிய இடத்தைச் சுட்டியது என்க.

185. இனி, சடசித்து எங்களுக் திருவருளே யென்ற (தி. - ன.) :—

செப்பார் முலைபங்கன் தென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்கும் தன்மையினன்
அப்பாண்டி நாட்டைச் சிவலோக மாக்குவித்த
அப்பார் சடையப்ப னனைந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த வுள்ளத்தா ருள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்கா ணம்மானாய்.

(இ - ள்). திருவம்மானையாடும் ஞானப்பெண்களே! கேண்மோ! முதிரா இளமுலைப்பாவையுடன் இருந்த நாதன் தானே திருப்பெருந் துறையான தட்சிண சிவகுரு சுவாமியாகி, அடியேற்கு உபதேசஞ் செய்த திருவருளைப் பெற்ற முத்தம் இரண்டு தசையினும் பெற்றமே போல் முத்தமெனத் திருவடி பிரியாது சருவ சுதந்திரம் அவை தாமெனத் திரிவின்றி [பரிபூரணனந்த ஞானநிட்டையுடையோர் மனத்தை, உருக்குவன் என்றபடி] செய்வதான பெருமையன்; திருப்பாண்டி நாட்டைச் சிவலோகமாக அடியார்க்குக் காட்டுவித்த சருவஞான கங்கா பாமேசுவரன்; அவனது திருவடி ஞானமே ஞானம்; அவைக்கவையே யொப்பொழிய வேறு சமம, பரம் இல்லாதாதலால், அவ்வருண் ஞானநிட்டையுடையார் உள்ளத்தில் அபேத அத்துவித மாக வாழுஞ் சிவன்; இத்திருவருண் ஞானமில்லாத ஊனஞான முடையார் கருத்தில் அகப்படாது மேம்பட்ட பரமசிவன்; அவனைப் பாடி ஆடுவீர்காள்அம்மானை; என வருளியதைக் காண்க. (11)

186. இனி, ஐயம் திரிவின்றி சிவஞானவநுபூதி பெறுவ தான (தி. - ன.) :—

மைப்பொலியுங் கண்ணிகேள் மாலயலே டிந்திரனும்
எப்பிறவி யுந்தேட என்னையுந்தன் இன்னருளால்
இப்பிறவி யாட்கொண் டினிப்பிறவா மேகாத்து
மெய்ப்பொருட்கட் டோற்றமாய் மெய்யே நிலபேரூய்
எப்பொருட்குந் தானேயாய் யாவைக்கும் வீடாகும்
அப்பொருளா னஞ்சிவனைப் பாடுதுங்கா ணம்மானாய்.

---

185. செப்பு - சிமிழ்: நெஞ்சுருக்கும் தன்மை. திரு. போப் ஐயர் திருவாசகத்தை நெஞ்சுருக்கி என்றழைத்தமை இங்குக் கருதற்பாலது. அப்பு - நீர். அப்பாலைக்கு அப்பாலை - அப்புறத்துக்கும் அப்புறத்தானை.

(இ - ள்). மைப்படிந்த கண்ணுளான சத்தி சொரூப ஞானப் பெண்களே! கேண்மோ! பரமசிவனது திருவடியைத் திருமால், அயன், இந்திரன் முதலிய வானவர்கள் அநேகம் பிறவி பிறந்தும் காணமாட்டாத சுவாமி, திருவருளால் என்னைச் சனனம் ஒன்றிலே சிவன் முத்தனுக்கி, இனிப் பிறவாவண்ணம் ஆண்டு பாதுகாத்த ஐடையான்; எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்யான சத்தியஞான பரமமோட்சமாய், சத்தியபோத ஞான சொருபனுய், தானன்றி வேறு போதமில்லாய், எல்லா உயிர்க்கும் ஞானதாரமான எனதுயிர்ப் பொருளுடையவனைப் பாடி ஆடுவீர்கள் அம்மானையை; என வருளியதைக் காண்க. (12)

187. இனி, உண்மை அடியார்க்குச் சத்திய போதமான (தி. - ன.) :—

கையார் வளைகிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை யெங்குஞ் செறிந்தானை யன்பர்க்கு
மெய்யானை யல்லாதார்க் கல்லாத வேதியனை
ஐயா றமர்ந்தானைப் பாடுதுங்கா ணம்மானாய்.

(இ - ள்). அம்மானையாடும் ஞானப்பெண்களே! உங்களுடைய திருக்கைவளை சத்திக்க, திருக்காது குண்டலமாபரணம் அசைந்தாட, கருமையுடைய கேசம் புரள, அதிலுளவாகிய பூவின்றேனையுண்டு வண்டுகள் சத்திக்க, நமது நாதனான திருவருள் அழகிய செவ்வண்ணனை, ஒள்ளிய நீறணி கடவுளை, தனக்கு மேற்பட்ட கடவுளிலாமையாற் கூம்புதலில்லாத திருக்கையானை, பூத பௌதிக சருவவத்துக்களிலும் எரியுறு நீர்போல் நின்றானை, அடியார்க்குப் பிரத்தியட்சப் பொருளானை, அடியாரல்லாதார்க்கு வேறாய் நின்றானை, வேதப்பொருளானை, திருவையாறு அகலாத செம்பொற் சோதியானை, துதித்து அம்மானை யாடுவீர்கள்; என வருளியதைக் காண்க. (13)

---

186. மை - அஞ்சனம். கண்ணி, ஒருமை; பன்மையிற் பொருளமைக்கின்றார்.

187. மை - கருமை. குழல் - கூந்தல். செய்யான் - செவ்வண்ணன். சேர்ந்தறியாக் கையான் - சேர்ந்து அறியவொண்ணாத ஒழுக்கத்தையுடையவனை என்னும் பொருள் கூறுவர்;

188. இனி, ஆன்மாவில் ஆனந்த மருள்வதான (தி. - ன.) :—

ஆனையாய்க் கீடமாய் மானிடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை
ஊனையும் நின்றுருக்கி என்வினையை ஓட்டுகந்து
தேனையும் பாலையுங் கன்னலையு மொத்தினிய
கோனவன்போல் வந்தென்னைத் தன்றொழும்பிற்
[கொண்டருளும்
வானவன் பூங்கழலே பாடுதுங்கா ணம்மானைப்.

(இ - ள்). திருவம்மானை யாடாதேயாடிடும் ஞானசத்தியானவர்களே ! கேண்மோ ! நம் பொருட்டுச் சற்குருவாய் எழுந்தருளி, யானை முதற் புழு ஈருயிர்ள்ள தேவர் மானுடர் என்ற எழுவகைப் பிறவித் துன்பத்தும் பிறந்திறந்திளைப்பதான, கலியைத் துரத்தி, ஊனுயிர் கரைய, சிவஞான அன்பருளி, கருப்பைத் தேனைப் பாலையொத்த பேரின்பம் என்னுயிர்க்கருளி, ஆன்ம நாயகனாகி, என்னை அடிமைப் பணிக்கு உரித்தாக்கி ஆள்வதான ஞானப்பிரகாச பொற்பாத கமலங்களையே தோத்திரம் செய்தாடுவீர்கள் அம்மானை ; என அருளியதைக் காண்க. (14)

189. இனி, அடியார்க்கிடையூறு தீர்த்தருள்வதான (தி. - ன.) :—

சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்றன் வேள்வியினில்
இந்திரனைத் தோணெரித்திட் டெச்சன் றலையரிந்
தந்தரமே செல்லு மலர்கதிரோன் பல்தகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களை யோட்டுகந்த
செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்கா ணம்மானைப்.

(இ - ள்). திருவம்மானை ஆடும் ஞானப்பெண்களே : கேண்மோ ! சிவனடியார்க்கு இடையூறு தீர்ப்பது நியமம் என அது பூதி பெற, தேவசிரேட்ட மகாதேவன் என அறியும்படி, தலைவனை பரமசிவத்தை இகழ்ந்த தக்கன் யாகத்திற் சென்ற சந்திரனை அகோர

---

188. கீடம் - புழு. சிவபுராணம் 26-31 வரையிலுள்ளவற்றையும் காண்க. எய்த்தேனை - மெலிந்த என்னை. ஓட்டுக்கந்து - ஓட்டுதலை விரும்பி. கோன் - தலைவன். தொழும்பு - அடிமைப்பணி.

வீரபத்திரநாதனுர் திருவடியால் தேய்த்தும், இந்திரனைப் புசமறுத்தும், யாகத்தலைவனை சிரசறுத்தும், ஆகாசவாச சூரியன் பல்லைப் பிடுங்கியும், மற்றுமுள்ள தேவர்கள் திக்குக்களில் ஒளித்தோடும்படி நிக்கிரகஞ் செய்த சிவந்த பூக்கள் மாலைபோற் சூழ்ந்த சோலைகளையுடைய தட்சிணத் திருப்பெருந்துறைக் குருநாதன் அவனது பொன்னரி மாலையை நமக்கருள வேண்டித் துதித்து அம்மானை பாடுவீர்கள் ஞானப்பெண்களே ! என அருளியதைக் காண்க. (15)

190. இலி, சகலான்மாக்களுக்கும் கருணை செய்வதான (தி. - னை.) :—

ஊனு யுயிரா யுணர்வாயென் னுட்கலந்து
தேனு யமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானே ரறியா வழியெமக்குத் தந்தருளும்
தேனுர் மலாக்கொன்றைச் சேவகனுர் சீரொளிசேர்
ஆனு அறிவா யளவிறந்த பல்லுயிர்க்கும்
கோனுகி நின்றவா கூறுதுங்கா ணம்மானுய்.

(இ - ள்). திருவருளுண்டையால் பொலிந்த அம்மானை யாடும் ஞானப்பெண்களே ! கேண்மோ ! 'ஊனுகி உயிராகி அதனுள் நின்ற உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய்' நின்ற தேனருங் கொன்றையனே ! எனதுளத்தில் தத்துவ பரிணம தேகியாய், அவைக்குப பிரேரகக் கருணையாய், இன்பவமிர்தத் தேனுய், அறிவிற்கலந்த தித்திப்பான கரும்பின் கட்டியாகி, தேவர்கள் அறியாத இன்பவடிமைப் பொருளான சிவஞான மார்க்கம் அருளி, கொன்றைமாலை தரித்த பரியாள் நாதன், அறிவில், ஒளியில், திருவடி ஞானமே எல்லா உயிர்க்கும் அறிவென அருளும் இறைவனுகிய சுவாமியைத் தோத்திரமே அநுபூதியெனச் சொல்லி ஆடுவீர்கள் அம்மானை ; என அருளியதைக் காண்க, (16)

---

189. எச்சன் - யாககருத்தா (தக்கன்). அந்தரம் - ஆகாய வீதியிலே. மந்தாரம் - ஐந்தருவிலொன்று.

190. ஆனு - அமையாத ; நீங்காத. கரும்பின் கட்டி - வெல்லக் கட்டி ; கற்கண்டுமாம். அமுதம் இடையிலே வைக்கப்பெற்றது, சிறப்பு நோக்கி.

191. இனி, திருவருளின்பம் பெற்றும் பெருமையான அநுபவத்தைக் கூறும் (தி. - ன.) :—

சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்
றாடுவேன் செவ்வாய்க் குருகுவே ணுள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்து மலர்வே னனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்கா ணம்மானுய்.

(இ - ள்). திருவம்மானை ஆடும் ஞானப்பெண்களே! நான் பெறுவதான பேரின்பத்துறை அநுபூதி கேண்மோ! நாதனே! தேவரீர் திருமுடியில் இன்பவிதழியணிந்த மாலையைத் தேவர் திருக்கண் காண எனதுச்சியில் அணிந்து கொள்வேன். அவை அளித்தவுடனே தன் ஆகத்து என் ஆகம் ஒடுக்கும் வண்ணம் முலைப்பாடே படத்தழுவிப் போகவொட்டேன்; திரும்பவும் திருவடியே கண்டு மயக்கமுற்று, ஓர் காலமுங் காணுதவர்களைப் போலக் காமத்துக்கு இன்பம் ஊடலெனப் பிரிவுபோல நிற்பேன். உடனே நின் பவளவாய்ச் சோதியில் அடங்கி உருகுவேன். உருவெளித் தோற்றம்போலக் கண்டு திருவடி காணுதாடுவேன். தேடிப் பாவனாதீதமாகச் சிந்திப்பேன். அவை காணுதுபோல மோகத்தால் அதுவாக வருமோவென ஆடுவேன். திரும்பவும் என்னுள் வந்ததாக அகமலர்ச்சி கொள்வேன். ஆனதால், இவ்வகை இன்பம் சத்தியமென, ஞானமழுவேந்தி ஞானமன்றுள் நடிப்பதான பரமசிவத்தைத் தோத்திரம் செய்து அம்மானை யாடுவீர்கள்; ஞானப்பெண்களே! என அருளியதைக் காண்க. (17)

192. இனி, சிவனடியார்க்கெளிதில் எழுந்தருளுவதைக் கூறும் (தி. - ன.) :—

கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனே
வெளிவந்த மாலயனுங் காண்பரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையில்
எளிவந் திருந்திரங்கி எண்ணரிய இன்னருளால்
ஒளிவந்தென் றுள்ளத்தி னுள்ளே யொளிதிகழ
அளிவந்த அந்தணனைப் பாடுதுங்கா ணம்மானுய்.

---

191. கொன்றையை இன்பவிதழ் என்றூர். மலர்வேன் - களிப்பென். அனலேந்தி என்றிருக்க, ஞானமழுவேந்தி உரை கூறுகின்றூர்.

(இ - ள்). திருவம்மானை ஆடும் ஞானப்பெண்களே ! கேண்மோ ! நமது பரமசிவன் திருவருட் சுக மொழியான ஓர் வார்த்தை அருளும் பராசத்தி வாமபாகன். அவனது திருவடியை உள்ளிருப்பதை வெளியிலே தேடிய திருமால் அயனும் காணுதற் கரிய பெருமையனும் சிவஞானத் தெளிவுடையார்கள் உள்ளத்தேனு மான இன்பமே என்பொருட்டுத் திருமேனிகொண்டு திருப்பெருந் துறையில் எளிய மானிடமான சுவாமி பெருங்கருணையால் அளவைக் கெட்டாத திருவடிஞானம் எனதுயிரில் விளங்க அருளியதால், அறிவில் ஒளியாகி சிவஞானம் மேன்மேலும் அநுபூதி பெறக்கருணை கூர்ந்த அழகிய தட்ப சிவகுருவைப் பாடுதலே நியமமாக அம்மானை ஆடுவீர்கள் ! ஞானப்பெண்களே ! என வருளியதைக் காண்க. (18)

193. இனி, பரமுத்தான்மாக்களுக்குத் திருவடியின்பமின்றி தனித்தின்பமில்லை யென்ற (தி. - ன.) :—

முன்னினை மூவர்க்கு முற்றுமாய் முற்றுக்கும்
பின்னினைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னினை வானவனை மாதியலும் பாதியனைத்
தென்னினைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னினை யென்னப்ப னென்பார்கட் கின்னமுதை
அன்னினை யம்மானைப் பாடுதுங்கா ணம்மானாய்.

(இ - ள்). திருவம்மானை ஆடும் ஞானப்பெண்களே ! கேண்மோ ! நமது பரமசிவன் இந்திரன் முதலிய மூவர்க்கும் பின் யாவருற்பத்திக்கும் அநாதியே சொய விச்சையாக உபகாரப்பொருட்டு முன்னமே திருமேனி உடையவன். முடிந்தலாபத்துக்கும் மூத்த பொருளானன் ; எல்லா முடியுங்காலும் பின் புனருற்பத்திக்கு ஆதார மான நாதன் ; பிஞ்ஞகன் ; வணங்கும் பெருமையுடைய திருப்பெருந் துறையிலே பதியாக விருப்பவன் ; ஆன்மநாயகன், அர்த்தநாரீசு வரம் அம்மைக்கு அளித்திருப்பவன் ; தட்சிண பாண்டியவிராசன் ; நாணனவன் ; எனதுயிரப்பன் என இவ்வகை அருளிப்பாடோதும் அடியார்கட்குள் இன்பவமிர்த சொரூபனே, திருவானைக் காவிலுறை

---

192. சுரும் - இளி. சேம் - நிறம் : ஒளியுமாம். இளரும் - விளங்கும். வித்தகன் - ஞான வடிவானவன். தெளிவுற்ற தேறல் - தெளிந்த தேன். எளிவந்து - எளிமையாக வந்து. ஒளிவந்து - ஒளியுருவாய் வந்து. அளி - தலையளி ; கருணை. அந்தணன், அழகிய தட்ப சிவகுரு என்று விளக்கினர்.

சிவனே, தன்னைக் கண்டவென் வண்ண மவ்வண்ணமானானே, என அம்மானே அசையாதாடுவீர்கள் பாடி ஞானப்பெண்களே ! என வருளியதைக் காண்க. (19)

194. இனி, பிறரறியாமல் தானே அறிந்துண்மைப் பேறுற்ற சிவானந்தத் (தி. - ன.) :—

பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் தொல்புகழே
பற்றியிப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம் பாடுதுங்கா ணம்மானாய்.

(இ - ள்). திருவருளம்மானை ஆடும் ஞானப்பெண்களே ! கேண்மோ ! நமது பரமசிவன் பெருமையான திருவடி ஞானத்தை உள்ளும் புறமும் ஒரு தன்மைக் காட்சி யில்லாதவர்களின் அநாதிக் கெட்டாதவன் ; திருப்பெருந்துறைச் சிவகுருநாதன் ; திருவருட் பரிமேலெழுந்தருளி வந்து, தனதுண்மை யடியார் செய்யும் குற்றங்களைக் குணமாகக் கொண்டு, மறதியை நீக்கி, அடியாரைச் சுற்றிய மாயா பிரதிபந்தத் தொடக்கைக் கருணையால் அறுத்து, திருவடி ஞானமே ஞானமென அறிவில் பதித்து, ‘ மற்றுப் பற்றெனக்கின்றி நின் திருப்பாதமே ’ பற்றும் புகழைப் பற்றுவித்து, பஞ்சபாச விமோசனம் திருநோக்கால் செய்து, ‘ பற்றுக பற்றற்றான் பற்றினை ’ —என்று உண்மை அடிமை செய்து, இவையே பேரானந்தமென அன்பாய் இன்பால் அருளிய திருப்புகழைப்பாடி, ஆடாமலிருந்தபடி ஆடுவீர்கள் ; ஞானப்பெண்களே ! அம்மானையை ; என அருளியதை அநுபூதியால் காண்க. (20)

திருச்சிற்றம்பலம்

---

193. மூவர்க்கும். இந்திரன் முதலிய மூவர்க்கும் எனப் பொருள் உரைக்கின்றார். முற்றும் ஆய் முழுதும் ஆகி ; முடிந்த லாபத்துக்கு மூத்த பொருளான் என்றார். பிஞ்ஞகம் - ஓர்வகைத் தலைக்கோலம். அதனை உடையவன் பிஞ்ஞகன். மாது - உமை. காவிலானை - திருக்காவி லுள்ளவன் ; கா - சம்புகேச்சுரம். அன்னானை - தன்னைக்கண்ட வென் வண்ணம் அவ்வண்ணமானானை என்றார். அழுதம் அன்னானை, என்றும் கூட்டியுரைக்கலாம்.

194. பெற்றி - தன்மை, கொற்றம் - வெற்றி. கோதாட்டி - சீராட்டி. பாசப்பற்றறும்படி நாம் பற்றின பேரின்பத்தைப் பாடுவோம்.

திருச்சிற்றம்பலம்

9. திருச்சுண்ணம்

அகத்தியச் சூத்திரமாவன :—

மோனந்த மாக மொழிதிருச் சுண்ணம்
ஆனந்த மலையை மாமென மதிப்பர்.

பொழிப்புரையாவன—கருணையின் பெருமை கண்டு அம்மானை ஆடினோர்கள் கருணையில் மூழ்குதற்குச் சுண்ணமிடித்தல் காரணமாகச் சிவானந்தவநுபூதியின் மூழ்குதலான அநுபவமாகையால், அந்நீராடற்குச் சுண்ணங் கருவி யாமே; அச்சுண்ணம்; ஆனந்தத்தில் அழுந்தினவர்கட்கு அவ்விளையாட்டுக்களெல்லாம் அந்த ஆனந்தத் தொழில் விளையாட்டாக இருக்கும். அந்தச் சுண்ணத்தை இடித்தலும், உரலும், உலக்கையும், சுண்ணமிடிக்கிறவர்களும், அவ்விடமும், அதனுற்பெறும் பேறும் ஆனந்த விளைவாகையால் அதைச் சொல்லுமிடத்து அவ்வருள்மேல் வைத்துச் சொல்லுகிறபோது அதற்கேற்ற அலங்காரமும், தூபதீபாதி உபசாரமும், அதை இடிக்கிற சக்திகளும், பாடுகிற பாட்டுக்களும், அதனால் வரும் பேறும், அதனுளெல்லாம் அடங்கியிருக்கும்; இம்முறையே உபதேசப் பொருளான தால் திருப்பாவின் முறையே அநுபூதி காண்க.

இத்திருப்பா ஆசிரிய விருத்தம். நிருத்தில்லையில் ஓதினது.

பிற அச்சுப் பிரதிகளில், 'திருப்பொற்சுண்ணம்' என்னும் பெயரே காணப்படுகிறது. அகத்தியச் சூத்திரத்தில் காட்டியபடி திருச்சுண்ணம் என்பதே இங்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

சுண்ணமிடித்தல் மிகப் பழங்கால முதற்கொண்டே பெண்டிர் செய்யும் ஒரு தொழிலாயிருந்து வந்தது. இத்தொழிலுக்குரிய பாடல்களும் எழுந்தன. பிற்காலத்தார் இதனை வரிக்கூத்தினுள் ஒன்றாக அமைத்து, அதற்கேற்ற பாடல்களையும் யாத்தனர்.

இப்பாடல் நிலையிலே அருளப்பெற்றது. இச்செய்தியைத் திருவாத ஆர் புராணம், திருவம்பலச் சருக்கம் (63-64) பாடல்கள் பின்வருமாறு கூறும்.

கைவளை சிலம்பச் செம்பொற் கிண்கிணி கறங்கச் சூழ்ந்து
மைவளர் குழன்மேல் வண்டு மருண்டிசை திரண்டு பாட
மெய்வியர் வரும்ப வெம்போர் விழிக்கயல் புரட்டி ஞாங்க
ரிவ்வகை நின்று சுண்ண மிடித்தனர் மடந்தை நல்லார். (63)

195. இனி, அட்டசிவ சத்தியும் திருவையாறும் அகலாத செம்பொற் சோதியை வணங்குதலான (இ. - ன.) :—

முத்துநற் றூமம்பூ மாலைதூக்கி
முனைக்குடந் தூபநற் றீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தனை யாறனம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

(இ - ள்). குஞ்சிதபாத பரங்கருணையின் சூழ்குவோரான சுத்தான்மாக்களுக்கும் பரமுத்தியிற் கண்ட முத்தி பஞ்சாக்கர பஞ்சநத நாதன் எழுந்தருளிய சுத்த சைதனிய போதாகாசமே திருஞானச் சுண்ணம் இடிப்பதற்கிடம்; திருவருளழகான முத்தி மண்டப அலங்கார அநுபோகம் விளைவதே வாலறிவான அநுபோகம்; முத்து மாலை தொங்குவதாக நவந்தரபேத நவதானியப் பாலிகை அருட்குடம்; நகாரமகார மற்றச் சிவஞான தீபமாலை தூபம்; செறிந்தகையராகி நம் தேவதேவனை மகாதேவனை ஞானசத்தியும் சோமசத்தியும், பூசத்தியும், கலைசத்தியும் திருப்பல்லாண்டு கூறலும், சிற்சத்தியும் கௌமாரிசத்தியும் பார்ப்பதிசத்தியும், கங்கைச்சத்தியும் சிவஞான கவரி வீசலும் இவ்வாறு உபசரித்து, 'அப்பனென்றும் ஐயாறனென்றும் திருவருளழகிய மணவாளனென்றும், இடைவிடாது

அத்திரு வனையர் பாடல் கேட்ட வரிசைத் ததாக
மெய்த்த மிழதன னன்கு மிகுதிருச் சுண்ண மோதி
மைத்திகழ் நாவி னூடு வருகலு மங்கே பொய்தல்
தத்தமின் முயலுங் காதற் சிறுமியர் தம்மைக் கண்டார். (64)

திருச்சுண்ணத்தின் திருவாசக உள்ளக் கிடக்கை :—

ஆனந்த மலையம் எ - து; தானன்றி கிற்றல்.

திருவாசகச் சிறப்பு (பழைய திருப்பெருந்துறைப் புராணம்)

சத்தி களாற்றலு கரண புவன போகங் கடமை
அத்த னுக்குச் சுண்ண மவையா யிடிக்கக் கூவுதலே
ஒத்த திருச்சுண் ணமுயர் போத மொருவண் டாகச்
சித்தவி காரத் தாது செப்பிவிடல் கோத் தும்பி.

பாடித் திருவிளையாடலான வேறின்மைத் திருஞானச் சுண்ணம் ஞானத்தால் மலத்தை இடிப்போம்; நாமாகிய ஞானப்பெண்களே! என அருளியதை அன்பாற் காண்க. (1)

196. இனி, சத்தி சிவமாகி யடிமை கொண்ட (தி. - ன.) :—

பூவியல்வார் சடையெம் பிராற்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் ரெண்டர் புறநிலாமே
குனிமின் ரெழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே.

(இ - ள்). சோதி யிதழி மலர் இயல்பாகவே அணிந்திருப்பதான திருவருட் சடையுடைத்தான எனது ஆன்மரட்சகர் சன்னிதானத்துக்குச் சிவஞான சொர்ணச் சுண்ண மிடிக்க வேண்டுவதாதலால், மாவடு வகிர்ந்தன போலத் திருக்கண்களையுடைய சிவசத்தியான பெண்களே! வாருங்கள்; வந்தவுடனே பரமசிவனைப் பெரிய நல்லடையாளங்களைக் கண்டு துதியுங்கள்; சுருதியால் ஓலமிடுங்கள்; அடியார் திருச்சபையில் புறம்பே போகாது உண்மைக் கூத்தாடுங்கள்; அடியுறப் பணியுங்கள்; எமதான்ம நாதனுன அப்பன் திருவருளுடன் நம்மை அடிமை கொளச் சிவஞானச் செம்பொனுற் சேர்வதான சுண்ணமிடிப்ப வாருங்கள்; ஞானப்பெண்களே! என அருளியதைக் காண்க. (2)

---

195. நல்முத்து தாமம் பூமாலை தூக்கி - நல்ல முத்து மாலையையும், பூமாலையையும் தொங்கவிட்டு. முலைக்குடம் - நவதானியப்பாலிகை. சோமி - சோமசத்தி. சித்தி - சிற்சத்தி. ஐயாறன் - திருவையாற்றையுடையவன். ஆட - பரடியாட என்றும், பாடி, ஆடுவதற்கு அபிஷேகத்திற்காக என்றும் கொள்ளலாம். இடித்தும் - இடிப்போம்.

196. பூ இயல்வார் சடை - அழகுபொருந்திய நீண்ட சடையுடைய என்றும் பொருள் கூறுவர். பொற்றிருச்சுண்ணம் என்னும் பெயர் இங்கு அமைந்துள்ளமை காண்க; இவ்வாறே பின்னும் கூறுவர். வகிர் - பிளவு. கண்ணீர், விளி. நிலாமே - நில்லாமே.

197. இனி, சண்முகற்குத் தகப்பன் என்ற (தி. - ன.) :—

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் றன்பெருமான்
ஆழியா னுதனல் வேலன்றுதை
எந்தமை யாளுமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ண மிடித்துகாமே.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! சிவாகமக் காட்சியான உள்மாசு படக் கழுவுவதரன, உபநிடதப் பொருளான, திருவருளழகிய விபூதியை அணிந்து, சுத்த தத்துவத்தால் மெழுகி, ஞானப் பொன்றெளித்து, சிவநிதி பரப்பி, இந்திராதிபதம் ஆசையற அருட் கற்பகம் நடுவுற நாட்டி, சடசித்தெங்கணும் ஞானமாகத் திருவிளக்கு விளங்க வைத்து, இடப வெற்றிக் கொடி எடுங்கள். இந்திரன், அயன், திருமால் இவர்கட்கு நாதனையும், அறுமுகவற்குத் தகப்பனையும், எம்மையாளும் உமைக்குக் கணவனையும் இருக்கிற பரமசிவனுக்கியல்பான ஞானச்சுண்ண மிடிப்போம், வாருங்கள் ; ஞானப் பெண்களே ! என அருளியதை இன்பாய்க் காண்க. (3)

198. இனி, திருவேகம்பநாதன் என்ற (தி. - ன.) :—

காசணி மின்க ளுலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலே
நேச முடைய வடியவர்கள்
நின்று நிலாவுக வென்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோவில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே.

---

197. சுந்தரம் - அழகு. இந்திரன் கற்பகம் நாட்டி, இதற்கு உரையாசிரியர் கூறுவதைக் காண்க. இந்திரனுக்குரிய கற்பகம் என்பது வெளிப்படைப்பொருள். அந்தரர்கோன் - இந்திரன். எய்ந்த - இயைந்த.

(இ - ள்). சிற்பிரகாச மின்போன்ற ஞானப்பெண்களே ! உங்கள் திருக்கையில் திருச்சுண்ணமிடிப்பதற்கான திருவருளுலக்கைக்கு இன்பரத்தின வடம் அணியுங்கள் ; திருவருளாதார உரலுக்கு நவரத்தினப் பட்டாடை அணியுங்கள் ; சிவனடியே சிந்திக்கும் அடியார்கள் நின்றுலாவி விளையாடுகவென வாயார வாழ்த்தி, எல்லா உலகத்தாரும் புகழும் கச்சியேகம்பன் திருக்கோயிலை இடைவிடாது நாவால் துதித்து, நமது பஞ்சபாச வினையை வேரோடுங்களைவதான திருவருளைப்பாடி ஆனந்தச்சுண்ணம் இடிப்போம் ; ஞானப்பெண்களே ! என அருளியதைக் காண்க. (4)

199. இனி, திருமணக்கோலத்தின் தரிசனத்தைக் கூறும் (தி. - ன.) :—

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னேடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லா
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதி லெய்தவில்லித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

(இ - ள்). வெள்ளியங்கிரியில் திருமணக்கோலத் திருச்சன்னிதானத்தில் அன்படியார் இன்புறத் தரிசனம் காட்டி, பரமசிவனும் பார்ப்பதியும் அருளும் காலம், திருமாலும் அயனும் அர்ச்சனைக்கு உகந்த அட்சதை யெடுத்து விதிப்படி அன்பால் லயாங்க போகாங்க மாகச் சிரமுதற் பஞ்சப்பிரம சடங்க பஞ்சாக்கர நாமத்தால் திருமேனியில் பூசிக்க, மற்றுமுள்ள இந்திராதி தேவாதிக் கர்த்தாக்களும், அவர் பகுப்பான நயமுடைய கணங்களும், ஒருவர்க்கொருவர் முன்பின் பிறழ்ந்தாராகத் தடைசெய்து தாமே முன்னேறிப் பூசிப்பார்கள் ; ஆதலால், ஞானப்பெண்களே ! இப்பெருமையுடைய நாதன் திரிபுர

198. காசு - இரத்னவடம். காம்பு - பட்டுத்துணி, அணிமின்கள் ; காம்பு என்பதற்கு பூண் என்று பொருள் கொண்டு உலக்கைக்குக் காப்பையும் உரலுக்குப் பூணையும் அணியுங்கள் என்று உரைப்பாருமுளர். கறையுரல் - கருங்காலியாற் செய்யப்பட்ட உரல். நின்று நிலாவுக என்பதற்கு நிலை பெற்று விளங்குக என்பது நேர்பொருள்.

மலதகனன் ; திருக்கச்சியேகாம்பர நாதன் , அவனது செம்பொருள் ஞானக்கோவிலைப் பாடித் தந்த பத்தியுடைய புன்சிரிப்பும் சிவந்த வாயுமுடையோர்களே! திரிநேத்திர சிவஞானத் தகப்பனைத் திருவிளை யாடற் செய்யும் பொருட்டு திருஞானத்தால் மலம் பொடியாகவே செம்பொற் சுண்ணம் அருளாலிடிக்க வாருங்கள் ; என வருளியதைக் காண்க. (5)

200. இனி, திருவடி யர்ச்சனைப் பிரசாதமான (தி. - னை.) :—

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெல் லாமுரல் போதாதென்றே
கலக்க வடியவர் வந்துநின்றூர்
காணவு லகங்கள் போதாதென்றே
நலக்க வடியோமை யாண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ண மிடித்துநாமே.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! திருக்கலியாணத் திருவருட் சிறப்பின்படி வல்லாச திருச்சுண்ணச்சாந்து திருமேனியிற் பூசிக்கும் பொருட்டு ஆன்மாக்களிடத்து வைத்த பெருங்கருணையால் மாயையை ஓச்சும் ஐந்தவ(?)\ சரீரிகளான கர்த்தாக்கள் மூன்று மாயா புவன வுரலும் போதுமோவென ஞானவுலக்கையைத் திருக்கையாற் கொண்டார்கள். [இவை அநுபூதி பெற்ற அபேதவத்துவித அன்பு இன்பு அடிமைத் திறக்காட்சியோர் இவ்வுலகமே உருவமென நிட்டை யுற்றார்கள்.] இன்ன நலம்பெற அடியோமை யாண்டு கொண்டதன்றியும், திருவடியர்ச்சிக்க நாண்மலரான பொற்பாத கமலம் அருள்வதான இமயபர்வதராசன் தவவரிமைக்கு மருகனை

---

199. அறுகு - குடவிளக்கு முதலாயின ; இங்கு அகூதை என்று கூறப்பட்டது ; தேவர் கணங்களெல்லாம் .....எடுக்கவொட்டோம் - நமக்குப் பின்னுலல்லது தேவர்களே நமக்கு முன்பே அறுகு முதலியன வற்றை எடுக்கவொட்டோம் என்றபடி. இதற்கு இவ்வுரை வேறுவகை யாகப் பொருள் கூறுகின்றது. செறிவு - பெருமை ; நெருக்கம். வில்லி - வில்லையுடையவர். அப்பன்கு - அப்பற்கு.

சுவாமியைப் பாடியாடி சிவஞானச் செம்பொற்சுண்ணம் இடிப்போம் வாருங்கள்—என வருளியதைக் காண்க. (6)

201. இனி, திருவருளலங்காரப் பிரேரகப் பெருமை கூறும் (தி. - ன.) :—

சூடகந் தோள்வளை யார்ப்பவார்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்பவார்ப்ப
நாமு மவர்தம்மை யார்ப்பவார்ப்பப்
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்னகோவுக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! நமதுயிர் நாயக னான பரமசிவன் சந்நிதியிலே உங்களுடைய திருக்கை வளையான இரத்தினபரணமும் திருத்தோள் வளையமும் ஒலிக்க, சிவனடியார் கூட்டமுந் திருநாமமோதலானதும் ஒலிக்க, நாட்டிலுள்ளார் இவ்வதி சயங் கண்டு ஒலிக்க, நாமும் அவர்களைக் கண்டு உங்களுறவு விட் டோமென ஒலிக்க, திருவடியிற் சாத்திய அம்மை பாடகச் சீவரத்தின மொலிக்க, மங்கைபாகனை எங்கள் பராபர சிவனுக்குப் ' பொன்ன சலஞ்சேர் பொருள் ' போல எல்லா வடிவும் தமதுருவான நாதனுக்கு அணிவதான சிவவின்பச் சுண்ணம் இடிப்போம் மலங்கழிய, வாருங் கள் ; ஞானப்பெண்களே ! என வருளியதைக் காண்க. (7)

---

200. உலகங்களை யெல்லாம் உரலாகக் கொள்ளினும் அமையாது என்று பெரியர் பலர் பல உலக்கைகளை எடுத்துக் கூட்டமாக வந்து நின்ற னர் என்க. கலக்க - கலந்துகொள்ள. நலக்க - நன்மைமிக. மலை - இமயம்.

201. சூடகம் - கைவளை. நாடவர் ஆர்த்தது, இகழ்ச்சியால் ; நாமார்ப்ப என்றது, பெருமிதத்தால். பாடகம்-காலணி. ஆடக மாமலை - பொன் அசலம்.

202. இனி, இம்மையிலே யம்மை முத்திபருள்வதான (தி. - ன.) :—

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை யார்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

(இ - ள்). ஞானவாள்போல நீண்ட கண்களையுடைய ஞானப் பெண்களே ! உங்களுடைய கைவளை சத்திக்க, கொங்கை பொங்கியின்பம் வளர, திருக்காதுத் தோடும் அசைய, நெற்றியிலே திரிபுண்டர நீற்றொளி பிரகாசிக்க, உரிமையுள்ள பெருமையுடைய நாதனை ஆண்மரட்சகரென்று இடைவிடாது துதித்து, காலாதீதக் கடவுள் தானே மலரடிகாட்டி, நாயினும் கடையான அடியேமை இம்மையிலே சிவன் முத்தளுக்கிய கருணையழகைப் பாடித் திருலீலைக்குச் சுண்ணம் இடிப்போம் வாருங்கள் ஞானப்பெண்களே ! என அருளியதைக் காண்க. (8)

203. இனி, அண்டமே அருளுருவான அலங்காரத் (தி. - ன.) :

வையக மெல்லா முரலதாக
மாமேரு வென்னு முலக்கைநாட்டி
மெய்யெனு மஞ்ச ணிறையவட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொ னுலக்கை வலக்கைபற்றி
ஐய ணிதில்லை வாண னுக்கே
ஆடப் பொற்சுண்ண மிடித்துநாமே.

---

202. வாள் தடம் கண். வரள், ஒளியுமாம். வரிவளை - கீற்றுக் கோடு கூடிய வளைகள். தோள் திரு முண்டம் துதைந்து இலங்க, என்றும் பிரிப்பர்; தோடு என்று பிரித்துக் கூறுவது உரை. முண்டம் - நெற்றி. சோத்து - தோத்திரம். நாட்கொண்ட நாண்மலர் - பூக்கும் பருவங்கொண்ட அன்றுபூத்த தாமரைமலர்.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! நம்து சிவனுக்குத் திருச்சாந்தபிஷேகங் கொள்வதற் பொருட்டு, ஆதாரப் பிருதிவியே சிவஞானவுரலாகக்கொண்டு, இன்பமாமேருவே அருளுலக்கையாக நாட்டி, சத்தியபோதத் திருமஞ்சள் நிறையவிட்டு, மேன்மை பொருந்திய தென்பாண்டிநாடன், திருப்பெருந்துறைக் குருமணிநாதன் திருவடியைத் துதித்து, சிவஞான மோட்சப் பிரேரக உலக்கையை வலக்கையால் பற்றி, சுவாமியான அழகிய திருச்சிற்றம்பல நடேசுவரற்குத் திருஞானச் சுண்ணம் சிவயோகம் நாமடைய இடிப்ப வாருங்கள்; ஞானப்பெண்களே!—என வருளியதைக் காண்க. (9)

204. இனி, சடசித்தெங்கணும் சிவப்பிரேரகமான (தி. - ன.) :-

முத்தணி கொங்கைக ளாடவாட
மொய்குழல் வண்டின மாடவாடச்
சித்தஞ் சிவனெடு மாடவாடச்
செங்கயற் கண்பனி யாடவாடப்
பித்தெம் பிரானெடு மாடவாடப்
பிறவி பிறரொடு மாடவாட
அத்தன் கருணையொ டாடவாட
ஆடப் பொற்சுண்ண மிடித்துநாமே.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! அருளின்பச் சுண்ணமலத்தை ஞானத்தால் இடிக்கும்போது உங்கள் ஞான முத்தாபரண மணிவதான மூலவருளின்பக் கொங்கை, தானுடத் தசையாடுமாபோல, அதிட்டானமே அதிட்டிதமாக ஆட, அவ்வதிட்டானப்படி திரோதானசத்தி சொரூப அளகபார வண்டுகளாட, அவ்வதிட்டானப்படி நாதவிந்துவான தத்துவப் பிரேரக 'சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை' யென ஆட, செங்கயல் போன்ற விந்து சத்தியும் ஆட, பித்தாவென்ற என்துயிர்ப் பிரேரக சிவனுமாட, சகல தத்துவக் கூட்ட வின்பத் தேகமும் கருவியுடனுட, பரம சிவனை என் தகப்பனும் அவரைப் பிரியாத கருணைவடிவான தாயுமாட, பிருதிவிமுதல் நாதம்வரை என் பொருட்டதிட்டித்தாட சுண்ணமிடியுங்கள் ஞானப்பெண்களே! என் வருளியதைக் காண்க.

---

203. அட்டி - இட்டு. செய்ய - சிவந்த.

205. இனி, அடிமைகொண்ட அதிசய விண்பத் (தி. - ன.) :—

மாடு நகைவா ணிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமினந் தம்மை யாண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமி னெம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமி னம்பலத் தாடிஞனுக்
காடப் பொற்சுண்ண மிடித்துநாமே.

(இ - ள்). ஞானப்பெண்களே! உங்களுடைய சிவஞானச் செல்வ இன்பப் புன்சிரிப்பு நிலவுபோல வெளியுறப் பிரகாசிப்ப, திருவாய் மலர்வது பவளம் போலழகு துடிப்பத் துதியுங்கள். அவ் வகை யாதெனின், நம்மை யாவர்க்கும் மேலாக ஆண்ட கருணையையும் திருவடிப்பணி செய்ய அருளிய அழகையும், துதித்துத் திரு மேனி காண அன்புடன் எவ்விடமெனத் தேடுங்கள். நமது பெரு மானைக் கண்டவுடன் பிரிவால் மயங்கித் தெளிவால் திருவம்பல நடன நாதனுக்கே சுண்ணநான மிடிப்போம்; வாருங்கள்; என அருளியதைக் காண்க. (11)

206. இனி, சத்திய போதர்க்குச் சத்திய ஞானமாக விளங்கும் (தி. - ன.) :—

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்றன்னை
ஐயனை யையர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோட்
பையர வல்குல் மடந்தைகல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே.

---

205. மாடு - பக்கம். எறிப்ப, துடிப்ப பாடுமின் என்க. திகைத்தல் பிரிவால் என்பர். ஆடுமின் அம்பலத்து ஆடிஞன் என்னும் பிரித்தலும் ஆம்.

(இ - ள்). தாமரைமலர்போலும், வண்டுபோலுமான திருக் கண்ணும் சொர்ணத் தோள்வளையும் பாம்பின் படம்போல அழ குடைய அல்குலுமுடைய ஞானப்பெண்களே! கேண்மோ! நம துண்மை அடியார்கள் சிவஞானச் சுண்ணவின்பம் திருவடியே எனப் பெறும்படியாக நஞ்சணி நாதனை, தேவநாடர்கட்கு அருமையான சிவ மருந்தினை, ஞானமாணிக்க கிருத்தனை, எனது குருவான அப்பனை, எனதுயிரான்ம ரட்சகரை, நம்மைத் தன்வழிவரத் திருவருளால் ஆட்கொண்டு பிரித்து அருமைகாட்டிக் கூட்டும் பரமசிவனை, 'மெய்யர்க்கு மெய்யன் வினைக்கு வினையாயினன், பொய்யர்க்குப் பொய்யாய பொய்யினன்' ஆகிய சுவாமியை, இடைவிடாது துதித் துத் திருஞானச்சுண்ணம் மலரகிதமாக இடிக்க வாருங்கள்; ஞானப் பெண்களே! என அருளியதை அன்பாற் காண்க. (12)

207. இனி, பராசத்தியான பார்வதி அம்மைக்கு முதல்வன் சிவனே என்ற முறையை இன்பம் பெறக்கூறிய (தி. - ன.):—

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்றகப்பன்
தமைய னெம்மையன் ரூள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே.

(இ - ள்). விட்டு விளங்கும் மின்போல் இடையும், பவளம் போல வாயும், கருமை போன்ற ஞானக்கண்ணும், நின்மல வெள்ளை யான புன்சிரிப்பும் இசைவடிவான வாக்கும் உடைய ஞானப்பெண் களே! பரமசிவன் திருவடியின்பச் சாந்தின் அநுபூதி அடியாரும் நாமும் பெறும் பொருட்டாக அன்பாய் இன்புறக்கேண்மோ! அடி யேன் புசிப்பதான ஆராவமுதன், எனது உயிர்ப்பிரேரகத் தகப்பன், எனது சுவாமி, அன்றி எனதுயிரை விட்டுப் பிரியாத அத்துவித குணமான பராசத்தி சொரூபமே இமயபர்வத ராச அன்புடையோர்

---

206. மை - விடம். கண்டம் - கழுத்து. ஐயர்பிரான் - தேவர் பிரான் என்று கொள்க. பிரான் - வள்ளல். போது அரி. கண் - பூப் போலும் செவ்வரி பரந்த கண்கள்.

மக்ட்குப் பஞ்சகிர்த்தியப் பொருட்டுக் கணவனுயும், அப்பராசத்திக் குத் திருவுருவால் மகவாயும், பிரேர(க) கர்த்தாவால் தகப்பனுயும், அனுக்கிரக கர்த்தாவாற் குருவாயும், எமதடிகளாயும் எழுந்தருளிய திருவடிகளே, " தவளத்த நீறணியும் தடந்தோளண்ணல் தன்னு ருவா, லவளத்தனு மகனுந் தில்லேவாணனெனப் " (திருச்சிற். 112). பாடித் திருஞானப்பொடிச் சுண்ணம் மாயை அகல இடிப்போம் வாருங்கள் ; ஞானப்பெண்களே ! என அருளியதைக் காண்க. (13)

208. இனி, திருச்சடையின்பத் (தி. - ன.) :—

சங்க மரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை யிரைப்ப வராவிரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே.

(இ - ள்). ஞானப்பெண்களே ! உங்களுடைய கைவளே ஒலிக் கத் திருப்பாதச் சிலம்போசையிட, மாலையணிவதான அளகபார பூமாலே ஆடுதல் செய்ய, சிவந்த கனிபோன்ற அதரவாய் துடியெழ, வற்றுத முற்றுத அருளே ஆபரணமாக வுடையோர்களே ! கேண்மோ ! நமது நாதன் திருவடியின்பச் சுண்ணம் கன்மம் மலேய, ஞானத்தாலி பட, சுவாமிவர, சிவலோகத்தையும்பாடி, சுவாமி திரு முடியில் அணிவதான சருவஞான சத்தியான கங்கைத் திரையசையா மலிரைப்ப, அதின் பக்கலணிவதான பரித்திரிப்த சத்தியான நாகம் ஒலிப்ப, இவ்வலங்காரவருளுருச் சடாதாரியான நாதன் திருவடியே காதலாகிக் கொங்கை இன்பம் பெருகத் திருஞானச் சொர்ணப்

---

207. துவர் - பவளம். பண் - இசை. ஆரமுது - நிறைந்த அமுது. இமவான் - மலேயரசன். இமவான்மகட்குக்கேள்வன், மகன், தகப்பன் தமையன், 'சிவஞசத்திதன்னே ஈன்றுஞ் சத்திதான் சிவத்தை யீன்றும்' என்ற சிவஞான சத்தியார் அடியையும், 'கனக மார் கவின் செய் மன்றில், அனகநாட கற்கெம் மன்னே, மனேவிதாய் தங்கை மகள் ; என்ற சிதம்பர செய்யுட் கோவைச் செய்யுளேயும் ஒப்பிடுக.

பொடிச் சுண்ணம் இடிக்க வாருங்கள்; ஞானப்பெண்களே! என அருளியதை அன்பாற் காண்க. (14)

209. இனி, சித்தம்புகுந்த திருவருளின்பத் (தி. - ன.) :—

ஞானக் கரும்பின் றெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினனைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே.

(இ - ள்). ஞானப்பெண்களே! உங்களுடைய மொழி பாலினும் இன்பமுள தாயும் விசாலமான அறிவே கண்ணுகவுமிருப்பதால், நீங்க ளறிவு விளங்கவே எமதுயிர்ப் பொருளின்பச் சுண்ணம் இடிக்கும் பொருட்டு, கேட்டல், சிந்தனை, தெளிதல், நிட்டைக்கு மேலுள தாகிய சிவஞானவன்பே, கன்னலின் சுவையே, அவ்வின்பத்தெளிவே, அமைவே இன்புருவான திருவருட்பாகை, பசுபோதத்தால் காண் டற்கரிய சிவானந்த நலத்தை, கேடிலாத பெருங்கருணை இன்பத் தேனை, அருள் பழுத்தளிந்த கருணை வான் கனியை, சிவனடியாருள் ளம் புகுந்தின்பம் அளிக்கும் இனிய சருவஞான விராசனை, எனது மாயைப் பிறப்பை இன்பப் பிறவியாகத் திருவடிக்கன்பு செய அரு ளும் ஞானக்கூத்தனை, அவனது திருநாமத்தை நாத்தழும்பு கொள்ளத் துதிப்பீர்கள்; ஞானப்பெண்களே! என அருளியதைக் காண்க. (15)

---

208. சங்கம் - சங்கு வளையல். அரற்ற - ஒலிக்க. இரைப்ப - ஒலிக்க. ஆர் - பரம்பு.

209. பானல் - கருங்குவளை. இங்கே, பால் நல் தடம் கண் என்று பிரித்துப் பொருள் கூறுகின்றார்; தெளி - தெளிவு. பாகு - சர்க்கரைப் பாகு. நந்தா - சுவைகுன்றாத.

210. இனி, சிவனது திருவடி எத்தேவர்களும் அறியாரென்ற (தி. - ன.) :—

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ
டாட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க [1]ளென்றுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவக மேந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவக ணமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ண மிடித்குநாமே.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! சாந்தபீச மயமான சிவமயச் சீவனுகும் வகையாகி, அடியருடன் திருவடிக்கடிமைப்பணி கொள்ளுந் திருவருளழகைத் துதித்து, தேவர்கள் கண்டறியாத செம்மலர் நோன்றாளை எனது போதச் சிரசில் சூட்டும் ஞானச்செல்வனே ! பாசவியோசனை வெற்றி இடபக்கொடியானே ! திரிபுர மலதகன சிவப்பொருளே ! என்று, திரண்ட குதிரைப் பரியாளனின் திருநாமங்களைத் துதித்துப் பசும்பொன்னுற் பொடியாக்குவதாகிய திருவருட்சுண்ணம் இடிப்போம் ; வாருங்கள் ; ஞானப்பெண்களே ! என வருளியதைக் காண்க. (16)

211. இனி, விண்ணினுள்ளார் மண்ணினுள்ளார் பிழைப்பதாக நஞ்சுண்டமையைக் கூறும் (தி. - ன.) :—

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மான்மழுச் சூலம்பாடி
உம்பரு மிம்பரு முய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே.

---

210. (பி - ம்). 1. கனுவிலுங். ஆவகை - ஆகும்வகை ; சிவமயச் சீவனுகும்வகை என்றார். சேவகம் என்பதனை சே அகம் என்று பிரித்து இடபத்தைத் தன் அகத்தே தாங்கும்வெல் கொடி என்றும் பொருள் கூறுவர்.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! திருச்சுண்ணம் ஆநந்த இன்பம்பெற, ஆனந்தத்தேன் சொரியுந் திருவருட்பணி சோதியிதழி திருமுடியில் அணிந்திருப்பதையும், அவனது உண்மை அடியார் காயமே கோயிலான சிவபுரத்தையும், திருவருட்சடை மேலுலக ரட்சைக்காகத் தரித்த இளம்பிறையையும், புண்ணிய சொரூப விடையையும், திருவலக்கையில் ஏந்தும் அறம் பொரு ளின்ப வீடான நாற்பாத மானையும், எம்மை இரட்சிப்பதே சத்திய மென ஏந்தும் மழுவையும, மூவகைச்சத்தி சொரூப சூலாயுதத்தை யும், எல்லாத் தேவர்கள் மனுஷர்கள் உயிர் பிழைக்க நஞ்சை அமு தாகக் கொண்ட இவ்வருமை பெருமைகளையும், இவை நம் பொருட் டன்றி வேறல்லவெனப் பாடிச்சுண்ணம் இடிப்பதே பாச விமோசன மென வாருங்கள் ; ஞானப்பெண்களே ! என அருளியதைக் காண்க.

212. இனி, இழந்த சிரசை எடுப்பித்துக்கொள்ள மாட்டாத படைப்புத்தொழிலுடைய அயன் தலையை வட்டாடல் கொண்டமை யைக் கூறும் (தி. - ன.) :—

அயன்றலை கொண்டுசெண் டாடல்பாடி
யருக்க னெயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலா லுதைத்தல்பாடி
இயைந்தன முப்புர மெய்தல்பாடி
ஏழை யடியோமை யாண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ண மிடித்துநாமே.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! திருவருட் சுண் ணச்சிவஞான அநுபூதிபெற, நமது உயிரான நாதன் செய்தருளிய நிக்கிரக பரிபாக சுத்த பஞ்சகிர்த்தியமாவன :—பிரமதேவன் தனக் கொப்பாக நின்மல சிவத்தை நினைந்த அகம் அழிய, படைப்புத் தொழில்சிவசத்தி பிரேரகமெனத் தோன்ற, தனது தலையை உண்டு பண்ணிக்கொள்ள மாட்டாமலும் தன் தகப்பன் இரட்சைத் தொழி

---

211. அகம் - உட்கொண்ட. வான் அகம் மா மதி பிள்ளை - வானத்தை இடமாகக்கொண்ட பெரிய சந்திரனின் பிறையை. ஊன் அகம் ஆம் - தசைக்கு இடமாகிய. 'மா மழுச் சூலம்' என்பது பிற அச்சு நூல்கள் கொண்ட பாடம். போனகம் - உணவு.

லுடையவனுலே அவனுலாகிலும் பெற்றுக்கொள்ளாத பிரஞ்ஞை சிவமே பரமென்ற அநுபூதிபெற, பரமசிவன் பிரமனவனது தலேயைக் கிள்ளி வட்டாடற்போல எறிந்து திருவிளையாடற் செய்ததையும்; புறவொளியுடைய சூரியன் பிரகாச முள்ளொளி சிவஞானவொளி யென அவனது பல்லேப் பிடுங்கியும்; மலவிமோசனஞ் சிவனுலல்லது வேறுராலுங் கூடாதென யானேயை உரிசெய்து போர்த்துக் கொண் டும்; அடியாரான மார்க்கண்டர் பொருட்டு அவருத்துவான காலம் பொருளன்று எனவும் அடைந்தோரை இரட்சிப்பது நியமமெனத் தோன்றவும் இயமனேச் சங்கரித்ததும்; முப்புரக்கோட்டையிலுள் ளாரிற் சிவார்ச்சனே மறந்தவர்களேப் புன்சிரிப்பான கருணையால் எரி செய்ததும்; அறிவிலாத நம்மைப் பொருளெனத் திருவுளங்கொண் டடிமைசெய்த பெருங்கருணையையும்; தட்டமிட்டுக் கூத்தாடித் துதித்து நடராசநாதனுக்கே இன்பச்சுண்ணமலம் பொடிபட இடிப் போம்; வாருங்கள்; ஞானப்பெண்களே! என அருளியதைக் காண்க. (18)

213. இனி, செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே யென்ற (தி. - ன.) :—

வட்டமலர்க் கொன்றை மாலேபாடி
மத்தமும் பாடி மதியம்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லேபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் ரூடு மரவம்பாடி
ஈசற்குச் சுண்ண மிடித்துநாமே.

(இ - ள்). ஞானப்பெண்களே! சிவானந்தநாதற்கு அருளபி ஷேகச்சுண்ணம் இடிக்கும் பொருட்டுப் பரமசிவனது திருச்சிரசில் அடியார் அநுபூதி பெறும் பலகைத் தரித்த சோதி இதழியையும், யாவர்க்கும் மேல் இறையென உண்முகமத்த மலரும் அணிவதை யும், அன்றி மூவாயிரமுனிவர் முதலியோர் அடிகள் வாழுந் தட்

---

212. செண்டு ஆடல் - பூப் பந்தாடல். அருக்கன் - சூரியன்; எயிறு - பல். கயம் - யானே. காலன் - இயமன். இயைந்தன - தம் முள் கூடினவான. எய்தல் - அம்பு எய்து அழித்தல். நயம் - நன்மை.

சிணதிக்கு விளங்குவதான தில்லைமாநகரையும், அங்ஙகரில் விளங்கும் அழகிய அம்பல நித்தியானந்த நிருத்த அருட்செல்வத்தையும், அரையில் கட்டிய திரோதானப் பாம்பின் கச்சையையும், அர்த்த ஞரீசுவரவம்மை திருக்கை கங்கண வளையையும், சுவாமி திருக்கை மேல் அடியேன் போதநாகம் ஆட்டிடுவதான இன்பத்தையும், பாடி நாதற்குத் திருவடிஞானச்சுண்ணம் இடிப்போம்; வாருங்கள்; ஞானப்பெண்களே! என அருளியதைக் காண்க. (19)

214. இனி, அத்துவிதி அன்பிற்றெழுந் (தி. - ன.) :—

வேதமும் வேள்வியு மாயினர்க்கு
மெய்மையும் பொய்மையு மாயினர்க்குச்
சோதியு மாயிரு ளாயினர்க்குத்
துன்பமு மாயின்ப மாயினர்க்குப்
பாதியு மாய்முற்று மாயினர்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினர்க்
காதியு மாயந்தமு மாயினருக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! நம்து சிவன் திருவடி யின்பம் அழுந்துவதான திருஞானச்சுண்ணம் இடிக்கும் பொருட்டு, வேதம், வேள்வி; மெய், பொய்; சோதி, இருள்; துன்பம், இன்பம்; பாதி, முற்றும்; பந்தம், வீடு; ஆதியந்தம் இவை உடலுயிர்கண், அருக்கன் அறிவொளிபோல அத்துவிதமாகச்சுவாமி பிரிப்பின்றிப் பேரின்பமாகச் சிவானந்த வாழ்வான சபாபதிக்கு நம துளத்தில் இவ்வகை வாழ்வதே கருணையெனப் பாடி அசையாம லிருந்தபடி யிருந்து திருஞான வேறின்மைச்சுண்ணம் உணர்வுபெற, அன்பால் இன்புறத் தொடர்ச்சி தோன்ற, திருப்பாவநுபூதி பெற்று, பாசச்சேதனமாக இடிப்போம் வாருங்கள்; ஞானப்பெண்களே! என வருளியதைக் காண்க. (20)

திருச்சிற்றம்மலம்

---

213. வட்டமாலை என்று கொள்க; வட்டமலர் என்று கொண்டு, பிரணவ வடிவான மலர் என்று கூறுவர். உண்முகமத்தம் ஊமத்தம் என்றுமினது போலும். சிட்டர் - மேலோர். சிற்றம்பலத்துச் செல்வம்- அருட்செல்வம். மாசுணம் - பாம்பு. அரவம் - பாம்பு.

214. இறைவனது பரிபூர்ண வியாபகம் இங்குக் கூறப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்

10. திருக்கோத்தும்பி

இனி, அருள்வதான திருக்கோத்தும்பியான திருவருள் வினியோகம் அருளிச் செய்யப் புகுகின்றதாவன :—

அகத்தியச் சூத்திரம் :—

சிவனே டைக்கியம்

இதன் கருத்தான பொழிப்புரை :—சடசித்தெங்கணும் தாமே நிறைந்த சிவானுபவ சுவானுபூதிகம் விளைந்த அடியார்கள் அவ்விளக்கம் 'எனக்குங் கிடைத்தது உனக்குங் கிடைத்தது' என்று ஒருவர்க்கொருவர் மடிபிடித்துக் கொண்டு வண்டு சுழலுகிறது போலச் சுற்றும் ஆனந்த விளையாட்டில் சொல்லுகிற பாடல்களெல்லாம், (1) அரிய திருவடியின்பப் பெருமையும், (2) அப்பெருமை யறிதற்கு நானுரென்பதும், (3) திரிவிதகரணங்களுக்கும் இனித்துத் தோன்றலும், (4) சற்றும் அன்பில்லாத யானென தென்ற அநுபவமும், (5) அதுவிதுவென ஐயப்படாத முறைமையும், பெருமையும், (6) சித்தக்கலக்கந் தெளிவித்தலும், (7) நினைக்க அரிதென்றலும், (8) ஒன்றுயிருந்தும் எங்கும் பரத்தலும், (9) பிறப்பிறப்பென்கின்ற ஐயந்தீர்த்தலும், (10) தாய்போற் கருணை செய்தலும், (11) அரிதென்று விடாமல் அருளுதலும், (12) அருளுந்தானும் ஒன்றுகவே கருணை செய்தலும், அப்படி அருளாவிட்டாற் பெறுதற் கருமையும், (13) நினைக்கப் படாததை நினைத்தலும், (14) துயர் முழுவதையு மொழித்தலும், எல்லாம் வியப்புற எமக்களத்தலான வெளிமையும், இத்திருப்பாவினுள்ளுறையாக வருளியதைக் காண்க.

திருப்பாக் கலி விருத்தமாகத் திருத்தில்லையிலோதினதெனக் காண்க.

திருக்கோத்தும்பி

இதன் உள்ளக்கிடை சிவனேடைக்கியம் எ - து. சிவனுடன் இடையறாது நிற்றல்.

'உயர்போத மொருவண்டாகச், சித்த விகாரத் தூது செப்பிவிடல் கோத்தும்பி' என்பது பழைய திருப்பெருந்துறைப் புராணம்.

"ஞானங்களின் முரலுந் தும்பி தன்னையு நயந்து நாதன், பூங்கழல் வழுத்துகென்று புனிதர் கோத்தும்பி சொன்னார்" (திருவாதவூரர் புராணம் ; திருவம்பலச்சருக்கம் 66).

215. இனி, பரம்சிவன் திருவடியினருமை பெருமையான (தி. - ன.) :—

பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியு நாரணனு நான்மறையும்
மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! ஆரவாரமாகத் தும்பி பறந்து விளையாடல் செய்யுங் காலம் திருவருட்பணியாகத் திருவடியின் பெருமையைப் பிரமாவும், இந்திரனும், வாக்கின் செல்வியும், மாலும், மறை நான்கும், அந்த வேதாகமங்களில் கூறப்பெற்ற மும்மண்டலப் புறச்சோதியும், அகச்சோதியும், அகப்புறச்சோதியும் ஆகிய இவ்ற்றிற்கு எட்டாத திருவருட் சோதியை எல்லாத் தேவர்களும் எருதுடையான் அடிமையெனப் பழமொழி அனுபவப்படியே துதித்து, தும்பி விளையாடற் செய்யுங்கள்; ஞானப்பெண்களே! என அருளிய திருவடி இன்பமெனக் காண்க. (1)

மேலே கூறிய இரு புராண மேற்கோள்களையும் ஒத்துப் பார்க்கும் போதும், பதிகப்பொருளினை நோக்கும்போதும், அடிகள் வழியில் தும்பியைக்கண்டு, அதனைத் தலைவி தன் தலைவனுக்குக் கூற அனுப்பும் தூதாக அமைத்து, 'சிவஞ்டைக்யம்' என்ற தத்துவப்பொருளைக் கொண்டு இயற்றியதாக கொள்ளலாம், இவ்வுரையே, 'தும்பி' என்பது ஒரு விளையாடல் என்று கூறுகிறது. திருவாசகத்தில் பல நாட்டு விளையாடற் பெயர்களே பதிகப்பெயர்களாக அமைந்திருத்தலைக் காண்க. ஆகவே, இத்தலைப்பு அடிகளின் படைப்பா, அல்லது, நாட்டுவிளையாடற் பெயரா என்பது ஆராயத்தக்கது.

கோத்தும்பி, அரசவண்டு என்பர்; கோல்தும்பி என்று கொண்டு தேனைக் கோலும் தும்பி என்றும் சிலர் பொருள் காண்பர்.

இதனை நாலடித்தரவுக் கொச்சகக கலிப்பா என்பர் பிறர்.

215. பூ ஏறுகோன் - தாமரைப்பூவில் அமர்ந்த பிரமன். புரந்தான் - இந்திரன். பொற்பு - அழகு நாவேறு செல்வி - கலைமகன். மாவேறு - பெருமை மிகுந்த. மாவேறு சோதி என்பதற்குச் சூரியன், சந்திரன், அக்னி என்ற மும்மண்டலச் சோதி என்றனர்; மா - இடபம் என்று கொண்டு, உருத்திரன் என்று பொருள் கூறுவாருமுளர்; அடுத்த அடியில் சே ஏறு சேவடி என்று வருவதால் இப்பொருள் பொருந்தாமை காண்க. சே. இடபம்.

216. இனி, 'யான் எனது' என்னும், செருக்காற் குஞ்சித பாதம் அறியலாகாது என்ற (தி. - ன.) :—

நானுரென் னுள்ளமார் ஞானங்களா ரென்னையாரறிவார்
வானோர் பிரானென்னை யாண்டிலனேன் மதிமயங்கி
ஊனுருடை தலைபி னுண்பலிதே ரம்பலவன்
றேனுர் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! பரமசிவன் அநாதியே மலபந்தமான உயிர்க்குப் பெருங்கருணை வழக்கால் இரங்கி, அறிவு விளங்கக் கருவிகரணம் அருளி, அடிமை செய்யாவிட்டால் எவ்வகை அறிவுண்டாவது? அவ்வறிவால், 'நான்; எனது' என்ற உயிரேது? அவ்வுயிர்க்கு அந்தக்கரணம்\ஏது? அவற்றுல் அறியும் ஞானமேது? எவர்கட்கு எனதுநாமரூபந் தெரிவதுள? ஆனதால், சகல தேவர்கட்கும் மேலான மகாதேவரென்று விளங்க, மதிமயக்கத் தாற் படைப்புத்தொழில் தனது சுதந்தரமென்று நினைத்த அயன் தலையைக் கிள்ளி, அது நாறறம் எனத் திருவுளங் கொள்ளாது, திருக்கர பாத்திரமாகப் பரிபாக உயிர்ப்பலி கொள்ளுவதான சிவானந் தத்தேன், அடியாருள்ளத்திற் சொரியு மிருதய கமல மகரந்த குஞ்சித பாதத்தை நிட்டை கூடி, தும்பி பறந்து விளையாடுவீர்கள்; ஞானப் பெண்களே! என வருளியதைக் காண்க. (2)

217. இனி, திரிவித கரணமும் திருவடி ஞான வின்பமான (தி. - ன.) :—

தினைத்தனை யுள்ளதோர் பூவினிற்றே னுண்ணுதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறு மெப்போதும்
அனைத்தெலும் புண்ணெக வானந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! வண்டுபோற் சுழலுவதான தும்பி பறக்கும்போது, தினையளவாகிய சிற்றின்பப்

---

216. ஊன் ஆர் உடை தலையில் உண் பலிதேர் அம்பலவன்; உடை தலை என்பதற்கு உடைந்த தலை என்றேனும், ஊன் உடை தலை என்றேனும் பொருள் கொள்க. பலி - பிச்சை.

இறைவன் ஆண்டிலனெனின் நான் ஆர் முதலிய பிரச்சினைகளே இல்லை என்றபடி.

பிரபஞ்ச விஷயத்தைப் பொருளெனக் கொள்ளாது உண்மையான குஞ்சிதபாதப் பேரின்பப் பொருளாத் திருவருளால் நினையுந் தோறுங் காணுந் தோறும் பேசுந் தோறும் எக்காலமும் உண்ணெகிழ்ந்து எலும்புங் கரைய அன்பால் ஆனந்தத் தேன் பெருகுவதான நடராசற்கே சென்றுரவாமாய், தும்பி பறப்பீர்கள்; என அருளியதைக் காண்க. (3)

218. இனி, சற்றுமன்பில்லாத என்னை அன்புளனு யாண்ட (தி. - ன.) :—

கண்ணப்ப னெப்பதோ ரன்பின்மை கண்டபின்
என்னப்ப னென்னெப்பி லென்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! 'அவனுடைய அறிவெல்லாம் நமதுடையவறிவு' என்றருளிய அன்பே பிழம்பான கண்ணப்ப நாயனரன்பைக் காளத்தியார் அறிவதொழிய வேறு யாராலும் அறிவதில்லை, எனத் திருவுளத்திலே கருதி, எனது அப்பனை நாதன் எனக்கு உள்ள அன்புக்கு வேறொருவர் ஈடுமில்லை; இன்புறு வேதகத்து இரும்பு பொன்னைது போல, என் சுதந்தரமும் வினையும் மூன்று மலமும் அற, அருளன்பு உருவமாக அடிமை செய்த திருவருள் அழகான நாதன் வலியக் கூவி யாண்ட பெருங் கருணையுடைய, பொன்போற் சுண்ண விபூதி தரியாது தரித்த, சுவாமியைக் கருதித் தும்பி விளையாடுவீர்கள்; ஞானப்பெண்களே! என அருளியதை யன்பால் இன்புறக் காண்க. (4)

---

217. பூ என்பதற்குச் சிற்றின்பப் பிரபஞ்ச விஷயம் என்பது அநுபூதியுரை. செய்யுளின் பொருள், பூவின்தேன் தினைத்தனையுள்ளது; ஆனந்தத்தேனின் தன்மைவேறு ஆகவே முன்னதை விடு; பின்னதை நாடு என்பதாகும். குளிப்பு - திருநடனம்.

218. என் ஒப்பில் என்னை - இழிவினுல் எனக்குச் சமானமில்லாத என்னை என்க. 'எனக்கு இருவினை ஒப்பு வந்த காலத்து, என்னும் பொருள் கூறுவர். வண்ணம் பணித்து - குணமுடையவனுக என்னைச் செய்து; இதனை, உரை வினைக்கும் நயத்தைக்காண்க. வான் - பெரிய.

219. இனி, மகாதேவனே ஒழிய, வேறுள தேவர்கள் ஏவற் பணியாளரென்ற (தி. - ன.) :—

அத்தேவர் தேவ ரவர்தேவ ரென்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேது மில்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! வேதனைப் பட்டுச் சாவதான தேவர்களுடன் ஈறில்லாத பரமசிவனைச் சேர்த்து, "பரப்ரம்மம் இதுவோ? அதுவோ?" எனச் சந்தேகமுற்று, பொய் வழியே பேசிப் புலம்புவதான (இப்பூதலம் அறிவில்லாதது) ; யாதொரு பற்றுக் கோடும் இன்றி அலைவதான என்னை எப்பற்றும் விட்டுத் திருவடி ஞானமே பொருளாகப் பற்றுவித்த சத்திய ஞான வடிவான பரமசிவத்தை நினைத்து விளையாடற் செய்வீர்கள் ; ஞானப் பெண்களே ! என வருளியதைக் காண்க. (5)

220. இனி, சித்தக் கலக்கந் தெளிவித்தருளிய (தி. - ன.) :—

வைத்த நிதிபெண்டீர் மக்கள்குலங் கல்வியெனும்
பித்த வுலகிற் பிறப்போ டிறப்பென்னுஞ்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! அநாதியே என்னை வைத்த பரிசு திரவியம், களத்திரம், புத்திரர், கோத்திரம், கல்வி என்று சொல்லப்பட்ட அநேக பிரபஞ்ச பயித்தியத் தன்மையிற் பிறப்பிறப் பென்கின்ற துன்பமேலீடான கலக்கத்தைக் குருமணியாக எழுந்தருளி இவையெல்லாம் உன்னுடையவல்ல என, திருவடியே யுண்மையென, அருளும் ஞான வித்தக மகாதேவரைக் கண்டு தும்பி பறப்பீர்கள் ; ஞானப்பெண்களே ! என வருளியதைக் காண்க. (6)

---

219. **'அவர் தேவர் ; இவர் தேவர்' என்று பொய்த் தெய்வங்களைப் பற்றிப் பேசும் இப்புவியில், என்றபடி. பத்து - பற்று. பற்று (பிற) ஏதும் இல்லாது நான் பற்றறப்பற்றி நின்ற மெய்த் தேவர் தேவர்க்கே என்க.**

220, **நிதிமுதல் இறப்பு வரையிலுள்ளன யாவும் சித்தவிகாரக் கலக்கம். வித்தகம் - ஞானம்.**

221. இனி, பசுபோதத்துக்கு எட்டாத திருவடி யென்ற (தி. - ன.) :—

சட்டோ நினைக்க மனத்தமுதாஞ் சங்கரனைக்
கெட்டேன் மறப்பேனே கேடுபடாத் திருவடியை
ஒட்டாத பாவித் தொழும்பரைநாம் உருவறியோம்
சிட்டாய சிட்டற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! நம்து நாதனை விரைவான அற்ப காலம் அவனருளால் நினைக்கில் அமிர்தம் போல எக்காலமுஞ் சிவானந்தம் அருள்வதான சங்கரனை, துன்பத்தாலழுந்து வேனலுந் திருவடி ஞானமறதியுறுவனே? என்னை விட்டுப் போவதான செல்வத் திருவடியோ இந்தச் சிவஞானவழி? செல்லா மகாபாதகத் தொழும்பாலவர் வடிவை நாம் காண்போமோ? அவர்களைக் காணுதே போவதே சீலம் எனத் தும்பி பறக்கும் போது, உண்மை அடிகளாகிய பெரியோர்க்கும் பெரியோனுகிய மகாதேவரே பொருளென விளையாடுவீர்கள் என அருளியதைக் காண்க. (7)

222. இனி, ஒருவனுயிருந்தாலுஞ் சருவ வியாபகப் பொருளென்ற (தி. - ன.) :—

ஒன்றாய் முளைத்தெழுந் தெத்தனையோ கவடுவிட்டு
நன்றாக வைத்தென்னை நாய்சிவிகை யேற்றுவித்த
என்றாதை தாதைக்கு மெம்மனைக்கு மெம்பெருமான்
குன்றாத செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! நமது நாதன் அகண்டாகார சச்சிதானந்த சொரூபனை நிட்கள ஏக பரப்பிரம வியாபகன்; நம்மைப் பரமமுத்தியில் விடத் தனது சத்தியான வல்லமையால் அனேக கவடு ஓர் விருட்சத்திலுண்டானமை போலச் சத்தி சிவான்மிகமாகி, இன்பப் பிறவியாகத் திருவடி ஞானம் வைத்தருளிய கருணையை வினவில், நாயானதைச் சிவிகை மேலேற்றுவித்ததன்றியும், எனது தகப்பனவன் அவனுடைய தகப்பனெனது மனைவி

---

221. சட்டோ - விரைவாக; சற்றும் என்றும் பொருள் கொள்வர். பாவித்தொழும்பர் உருவை அறியோம்; இங்குப் போலித் தொண்டரைக் குறித்தார். சிட்டாய சிட்டன் - பெரியோர்க்கும் பெரியோன். சிட்டாய - அறிவுடைப்பொருளாய எனவும் உரைப்பர்.

இவை முதலியோரான எனது கோத்திர சூத்திர பந்துக்கள் எல்லா வுயிர்கட்கும் இரட்சிப்பதான சுவாமி ; வற்றுத ஞானச் செல்வனை சிவனைச் சென்று பயந்து, தும்பி விளையாடுவீர்கள் ; ஞானப்பெண் களே ! என வருளியதைக் காண்க.

ஒன்றுக முனைத்த விருட்ச உவமானம் முதலகவலில் காட்டி யதைக் காண்க. (பக், 257-58). (8)

223. இனி, பிறப்பிறப்பென்கின்ற ஐயம் அடியார்கட்கில்லை யென்ற (தி. - ன.) :—

கரணங்க ளெல்லாங் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்க ளேசென்று சார்தலுமே தானெனக்கு
மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றாதாய் கோத்தும்பீ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! நீங்கள் தும்பி சுழன்று விளை யாடும்போது, நமது நாதன் துணைக்கருவி கரணம் இன்றிச் சுய விச்சையாக வடிவு கொண்ட நஞ்சணி கண்டன், அவனது திருவடியை உண்மை யடிமைப் பணி செய்வோர்கள் இனிப் பிறவா வண்ணங் கருணை யளிப்பதான ஞான சமுத்திரன் ; எனத் திருக்கை ஆரவாரத் துடன் சுழன்று விளையாடுவீர்கள்—என அருளியதைக் காண்க. (9)

224. இனி, தாய்போற் கருணை செய்த (தி. - ன.) :—

நோயுற்று மூத்துநான் நுந்துகன்று யிங்கிருந்து
நாயுற்ற செல்வ நயந்தறியா வண்ணமெல்லாம்
தாயுற்று வந்தென்னை யாண்டுகொண்ட தன்கருணைத்
தேயுற்ற செல்வர்க்கே சென்றாதாய் கோத்தும்பீ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! நாம் அநாதியே அனேகம் நோய்களால் அலைந்து துன்பம், இளங்கன்று ரட்சித்துக் கொள்ளாதிருபருவகாலக் கன்றுபோல, அறிவிலாதிம்மையிற் சுழன்று, நாய்க்குப் பெருஞ் செல்வந் தெரியாத வண்ண மெனப் போல், கருணை யின்பம் அடியேற்குத் தாய்போல வெழுந்தருளி அடிமை கொண்ட

---

223. **கரணங்களுக் கெட்டாதவன் என்பது பொருள். உரை நயத்தை ஓர்க.**

ஞானமே திருவுருவான சிவஞான வின்பச் செல்வர்க்கே யடிமை யெனத் தும்பி பறந்து விளையாடுவீர்கள் ; என வருளியதைக் காண்க.

225. இனி, திணியான மனஞ்சிலையனைவனைக் கருணையால் ஆண்ட செய்தியைக் கூறும் (தி. - ன.) :—

வன்னெஞ்சக் கள்வன் மனவலிய னென்னுதே
கன்னெஞ் சுருக்கிக் கருணையினு லாண்டுகொண்ட
வன்னந் திளைக்கு மணிதில்லை யம்பலவன்
பொன்னங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

(இ - ள்). திருவருட்டும்பி பறந்து விளையாடும் ஞானப்பெண்களே ! கேண்மோ ! நமது சிவன் என்னைக் குருவடிவைக் கண்டு உருகாத வன்மையனென்றும், கருணையால் அளித்த தேகத்தைத் தன்னதென்றும் யானெனதென்ற வலிமையுமுடைய மலபோதனென்றும், திருவுளங் கொள்ளாது கருணையாற் பரிபாகப்படுத்தி அடிமை கொண்ட தன்றியும், அன்னம் ஓடையில் விளையாடும் அழகுடைய திருத்தில்லை ஞானமன்றுள் அநவரத வின்ப நடம் நடிக்கும் பொற் பாத குஞ்சித சேவடியைப் பரமென விளையாடுங்கள்—என வருளியதை ஞானத்தாற் காண்க. (11)

226. இனி, சத்திசிவமாயென்னுளம் புகுந்தாண்ட (தி. - ன.) :

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேது மில்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்
தாயான வீசற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

(இ - ள்). தும்பி விளையாடும் ஞானப்பெண்களே ! கேண்மோ ! நமது பரமசிவன் திருவுளமிரங்கி நாயான அடியேனை ஞானத் திருவடிகளைப் பொருளெனப் பாடும்படி யருளிய தேவநாயகனை, பேய் போல

---

224. நந்து கன்று - தள்ளப்பட்ட கன்று என்பர். கர்ய் தானுற்ற செல்வத்தின் அருமையை அறியாததுபோல ; 'காய் பெற்ற தெங்கம் பழம்' என்ற பழமொழியையும் காண்க. தேய் - தேஜஸ் என்பதன் சிதைவு ; ஒளி என்பது பொருள்.

225. மன வலியன் - மிகவலியன் என்றும் கூறலாம். வன்னம் திளைக்கும் என்று கொண்டு, அழகு நிரம்பின, என்றும் பொருள் கூறுவர்.

மலபோதனுயுள்ளவனைக் குற்றம் பொறுத்த பெருமை யுடையவனை, சிவஞான அன்பு ஐசுவரிய மொன்று மில்லாது அடியேன் செய்வதான பணியை யிகழ்ச்சி யில்லாது திருவுளப் பணியாகக் கொண்டருளும் அன்னையான சருவசெக தீசனை, கொண்டாடி ஞானத்தும்பி பறந்து விளையாடுவீர்கள்; இன்பப்பெண்களே!—என அருளியதைக் காண்க. (12)

227. இனி, உள்ளக் கருத்து வள்ளலறிவா ரென்ற அடிமைத் திறம் பேசிய (தி. - ன.) :—

நான்றனக் கன்பின்மை நானுந்தா னுமறிவோம்
தானென்னை யாட்கொண்ட தெல்லாருந் தாமறிவார்
ஆன கருணையும் அங்குற்றே [1]தானவனெங்
கோனென்னைக் கூடக் குளிர்ந்தாதாய் கோத்தும்பீ.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! அடியேன் பரம சிவனிடத்து அன்பில்லாத செய்தி, 'தன்னெஞ்சறியாத பொய்யில் லேயே' யென உண்மை கொண்டு, எனக்கே தெரியும்; எனதுளம் விட்டுப் பிரியாத சிவனுக்கே திருவுளமறியும்; எனப் பிரமாணமாகச் சொல்வேன்; என்னைத் திருவடிக் கன்புளதாக, அடிமையிவனெனச் செய்தது எல்லா உலகத் தாரும் வெளியுற வறிவார்கள்; நாதன் தன் திருமுடியில் மண் சுமந்து அடிபட்டதை இவ்வகையான சோம சுந்தரமே என் பொருட்டுப் பெருங் கருணையால் திருவுருக் கொண்டு என்னைத் திருவடிக் கன்புளன் போல வென்னுளம் பிரியாத நாதன் அத்து விதமாக வாழ்வதான இன்பளிக்க, சிவானந்தத்தும்பி பறப் பீர்கள்; ஞானப்பெண்களே! என வருளியதைக் காண்க. (13)

---

226. சி - இகழ்ச்சி.

227. பி - ம். 1. தானவனே; தானும் - இறைவனும். தான் என் பதை அசையாகக் கொள்வாரும்; இன்னும் அன்பின்மையை நாங்கள் இருவருமே அறிய உலகமறியாது என்று கொள்வாரும் உளர். ஆன கருணையும் அங்குற்றேதான்; ஏ; தான் அசைகள். அமைந்த கருணை அவன் ஒருவனிடத்தேதான் என்பது வெளிப்படைப் பொருள். இக் கருணையை மண் சுமந்து அடிபட்ட வரலாற்றால் விளக்குகின்றார், என் னைக்கூட - அத்துவித இன்பம் அளிக்க.

தன் தகுதியின்மையையும் இறைவன் கருணையையும் வியந்தது.

228. இனி, பரம்சிவனும் பராசத்தியு முயிர் நடுவுளெழுந் தருளிய கருணை யின்பத் (தி. - ன.) :—

கருவா யுலகினுக் கப்புறமா யிப்புறத்தே
மருவார் மலர்க்குழன் மாதினெடும் வந்தருளி
அருவாய் மறைபயில் அந்தணனு யாண்டுகொண்ட
திருவான தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

(இ - ள்). தேகமே இன்புருவான ஞானப்பெண்களே! கேண்மோ! நரத விந்துவான செகத் சொருப ஆதாரப் பொருளாகி, அவை கடந்து, மேலான பரம்சிவன், இப்பிருதிவியிலே சத்தி சிவ வடிவா யெழுந்தருளி, நவந்தர பேதவருவத் திருமேனி கொண்டு, திருவாய் மலர்ந்தருளிய வேதநாயகன், தானே உருக்கொண்டு பரம குருவாய் எழுந்தருளி என்னை அடிமை செயத் திருவருட் செல்வமாய் எனதுயிரில் வாழ்ந்த அற்புதத்தை நினைத்துப் பறந்து சுழன்று விளையாடுவீர்கள்.

இவைக்கு வேதத்தில் :—

" கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளைக்
கருநரம்பும் வெள்ளெலும்பும் செர்ந்தென் றுகி
யுருவாகிப் புறப்பட்டிங் கொருத்தி தன்னுல்
வளர்க்கப்பட் டுயிராருங் கடைபோ காரால்
மருவாகி நின்னடியேன் மறவே னெம்மான்
மறித்தொருகாற் பிறப்புண்டேல் மறவா வண்ணந்
திருவாரூர் மணவாளா திருத்தெங் கூரா
செம்பொனே கம்பனே திகைத்திட் டேனே "

(திருவாவுக்: திருவாரூர்: திருத்தாண்ட. 6 : 6).

யென்ற வநுபூதி காண்க. (14)

229. இனி, " என்பூசையு நேசமு மியானு முனக்கேங்கே " என்ற அடிமை யின்பத் (தி. - ன.) :—

நானுமென் சிந்தையு நாயகனுக் கெவ்விடத்தோம்
தானுந்தன் தையலுந் தாழ்சடையோ ணெண்டிலனேல்
வானுந் திசைகளு மாகடலு மாயபிரான்
தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

228. உலகினுக் கருவாய் என்க. அப்புறமாய் - அந்நிலையையும் கடந்து. இப்புறமாய் - இவ்விடத்தே; இப்பிருதிவியிலே. அருவாய் - உருவமின்மையாய்.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! குணகுணி பாவ மான சத்திசிவ சொரூபமா யெழுந்தருளித் திருவடி காட்டறிவாற் காட்டா தொழுகுல மாவனே? எனது தற்சுட்டான போதத்தாற் கண்டு கிட்டை கூடுவதெங்கே? எனவே ஓரிடமும் கருவியுங் காணேனே! நமது நாதன், 'வானுகி, கடலானுய் நிலனுனுய்' யென்ற வேதச் சுருதிப்படி ஆறத்துவாவே திருமேனியான, அவன் அவள் அது திருவடி பேரின்பத் தேனிரக்கத்தால் அருளுங் கருணை யைக் கருதிச் சுழன்று தும்பி விளையாடுவீர்கள் என வருளியதைக் காண்க. (15)

230. இனி, பசுபோதக் கருவியால் உள்ளி அள்ளப்படாத (தி. - ன.) :—

உள்ளப் படாத திருவுருவை யுள்ளுதலுங்
கள்ளப் படாத களிவந்த வான்கருணை
வெள்ளப் பிரானெம்பி ரானென்னை வேறையாட்
கொள்ளப் பிரானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! நம்மை ஆண்ட நாதன் திருவுருவை யொருவரும் அவர்கள் அறிவாற் காண்பரோ? அவனருளால் அடியேன் வணங்குவதாக! என் உள்ளங்கவர் கள்வ னென பேரின்பமான பெருங்கருணை வெள்ளமாய், அதன்கரையுமான அவனென்னைத் தனியே வந்தெழுந்தருளி அடிமை செய்து கொண்ட ஆன்ம ரட்சகனுக்கே சமாதி கூடிப் பாசஞ் சுழல விளையாடுவீர் கள் என அருளியதைக் காண்க. (16)

231. இனி, பொய்யான அழி செல்வங்களை நித்தியமாகக் கொள்ளும் எனக்கு மெய்ப் போதங் காட்டிய (தி. - ன.) :—

பொய்யான செல்வத்தே புக்கழுந்தி நாடோறு
மெய்யாய்க் கருதிக் கிடப்பேனை யாண்டுகொண்ட
ஐயாவென் னுருயிரே யம்பலவா வென்றவன்றன்
செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

---

229. ஆண்டிலனேல் ஏவ்விடத்தோம் என்க. உந்து - வெளிப் படுத்துகின்ற.

230. உள்ளப்படாத - கருதமுடியாத. கள்ளப்படாத - ஒளிக்காத. களி - களிப்பு. நான் உள்ளியதும், கருணை வெள்ளம் கனி கொண்டது என்பது தெளிபொருள். இவ்வடிக்கு உரையாசிரியர் அமைக்கும் உரை நுட்பத்தைக் காண்க.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! அநித்தியமான புத்திர மித்திர களத்திர பால திரவிய முதலிய ஆசையேனுமெக்காலமும் உழப்புறுவதென்னை? திருவருட் போத சத்திய சிவ ஞானங் காட்டி யாட்செய்த அப்பனே! என்னுயிர்க்குயிரான பரம சிவனே! ஞான மன்றுளாடும் பதியே! இவ்வகையென் சிவந்த பாதத் திருவடிக் கன்பாக விளையாடுவீர்களென வருளியதைக் காண்க. (17)

232. இனி, அர்த்தநாரீசுவரத் திருமேனி காட்டி யருள்வதான (தி. - ன.) :—

தோலுந் துகிலுங் குழையுஞ் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமுந் தொக்க வளையு முடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! அருதியே குண குணி பாவமாகிய சத்தி சிவ வடிவானது என் பொருட்டு, 'சத்தியே வடிவொழிய வேறுருவில்லை' யென, ஒரு புறந்தோலும், ஒரு புறந் துகிலும், ஒரு புறங்குழையும், ஒரு புறந்தோடும், ஒரு புறம் நீறும், ஒரு புறம் சாந்தும், ஒரு புறம் பைங்கிளியும் ஒரு புறஞ்சூலமும், ஒரு புறம் வளையும், ஆதலால் ஆணுக்குப் பெண் வடிவமில்லை, பெண்ணுக்கு ஆண் வடிவமுமில்லையாதலாற் சிவத்துக்கு வடிவில்லை என வின்புருவே பொருளென, விளையாடுவீர்களென அருளியதை அநுபூதியிற் காண்க. (18)

233. இனி, பிறவித்துயர் முழுவது மொழிவதான (தி. - ன.):

கள்ளன் கடியன் கலதியிவ னென்னுதே
வள்ளல் வரவர வந்தொழிந்தா னென்மனத்தே
உள்ளத் துயரொன் றுழியா வண்ணமெல்லாந்
தெள்ளுங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

---

231. அச்சுப்பிரதிகளிற் காணும் வேறுபாடங்கள்: 1. பொய்யாய 2. மெய்யாக் 3. யாட்கொண்ட.

அழுந்தி - முழுதி. செய்யர்மலர் - சிவத்தமலர்.

232. இடப்பாகத்துப் பட்டாடையும், தோடும், சாந்தும், கிளியும், வளையலுமாக, வலப்பக்கத்துத்தோலும், குண்டலமும், நீறும், சூலமும் ஆக அர்த்தநாரீசுவரம் கூறப்பட்டது. தொன்மைக்கோலம் என்றதற்கு உரைகூறும் பொருள் நயத்தை ஓர்க.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! நமது பரம்சிவன் திருவுளத்திலே அடியேனை எற்களித்த போதத்தை எனதென்று கொண்ட கள்ளன் இவன் என்றும், எற்களித்த அறிவை யான் அறிவதாகக் கொண்ட பேயன் என்றும், திருவருட் செயலே மறந்த பொய்யன் என்றுங் கொள்ளாது, யான் வரையாது வந்தருளுவ தானவன், திரும்ப வென்னுளம் விட்டுப் போம் வழியில்லாது, இருந்து உள்ளத்துயரான பிறவியை யோர் வார்த்தையா லொழித்த திருவருளழகைச் சருவஞானந் திருவடி யெனத் தெளிந்து தேறி விளையாடுவீர்கள் ; அன்புருவான பெண்களே ! என வருளியதைக் காண்க. (19)

234. இனி, தம்மை யாவர்க்கு மேலாக்கிய கருணையை வியந்த (தி. - ன.) :—

பூமே லயனோடு மாலும் புகலரிதென்
றேமாறி நிற்க வடியே னிறுமாக்க
நாய்மேற் றவிசிட்டு நன்றாய்ப் பொருட்படுத்த
தீமேனி யானுக்கே சென்றாதாய் கோத்தும்பீ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! தேவர்கட்கு மேலான தேவரான திருமாலும் அயனும் திருவருண் ஞான அநுபூதி யில்லாமையால் தம்மறிவாற் கிட்டுதற்கரிதான திருவடியைக் காண முயன்று ஏமாற்றமுற்று நிற்க, ஒருசார் சன்னிதானத்தில் நான் நிற்ப அடியேன் இரத்தின சிம்மாசனத்தில் நாயை வைத்தது போல, வைத்து இறுமாக்க இறும்பூதி செய்து, அதிதீவரபக்குவ போதனுக்கிய தழற் பிழம்புருவானை, அத்துவித சமாதிகூடி சூழன்று ஆரவாரிக்க விளையாடுங்கள் ; தும்பி பறந்து, ஞானப்பெண்களே ! என வருளியதை யின்பாற் காண்க. (20)

திருச்சிற்றம்பலம்.

---

233. கடியன் - கொடியன். கலதி - மூதேவி ; கீழ்மகன். வரவர என்ற மூலமும் வரையாது என்ற பொருளும் பொருந்தக் காணவில்லை. உள்ளத்துறுதுயர் என்பது அச்சுப் புத்தகங்களிற் காணும்பாடம். தென் ஞம் கழல் - தெளிந்த திருவடி.

234. புகல் - திருவடிபுகல். ஏமாறி - ஏமாற்றமடைந்து. இறு மாக்க - இறுமாப்படைய. தவிசுமேல் நாயை இட்டு என்று மாறுக. தவிசு - ஆசனம். பொருட்படுத்தி - பொருளாக்கி ; அதிதீவரபக்குவ போதனுக்கிய.

திருச்சிற்றம்பலம்

11. திருத்தெள்ளேணம்

இனித் திருத்தெள்ளேணம்.

அகத்தியச் சூத்திரம்.

சிவனேட்டையச் செலவு

பொழிப்புரை யனுபவம் :—

முற்பதிக்கத்தில் தும்பி பறந்து விளையாடின எய்ப்பிலாத எய்ப்புடையோர் இருந்து விளையாடும் முச்சில் புடைத்தல், அதுவே தெள்ளத் தெறுதல். இத்திருப்பாவில் திருஞானத்தால் அறியத் தக்க (1) ஊரும் பேரும் உருவும் இல்லாதவன் அநேக ஊரும் பேருமான முறைமையும், (2) நாமருள் பெற்றபின் பெருதவர்களொரு வருமில்லை யென்றுணர்தலும், (3) யான் பெற்றதற்கு உலகம் நகைக்கு மென்றலும், (4) யானென்ப தொழிந்து சிவமாதலும், (5) அரிய பொருளெளிதாய்த் தோன்றியுள்ளடங்கலும், (6) தன்னை யறியாமல் ஆனந்தம் விளைதலும், (7) திருவடி தரித்தவுடன் சிவமாதலும், (8) மறந்து மறவா தொழிதலும், (9) கல்லிலே நாருரித்தல் போல ஆண்டு கொண்ட முறைமையும், (10) கனவிலுமறியாப் பொருள் நனவில் வெளிப்படுதலும், (11) சிவத்திற் கலந்தவுடன் தனக்குச் சுதந்தர மெய்தலும், (12) தவத்துக்கு வெளிப்படாப் பொருளெளி தாய்ச் சிவானந்தம் விளைத்தலும், (13) ஆன்ம போதத்துக்கு வெளிப்படாப் பொருள் எளிதிற் பதிபோதத்துக்கு வெளிப்படுதலும், (14) நூலுக்கு வெளிப்படாப் பொருள் அனுபவத்துக் கெளிதாய் வெளிப்படலும், (15) புசிக்கப்படாத ஆனந்தக் கடலைத் திருவடி ஞானத்தைப் பெற்றுற் புசித்துத் தொலைதலும், (16) புறச்சமயத் துக்கு வெளிப்படாத பொருள்அடி ஞானத்தைப் பெற்றுல் வெளிப் படு முறைமையும், (17) சாத்திர சமயங்களில் மயங்காது சிவதத் தைப் பெற்றவுடன் அடையு முறைமையும், (18) பெற்ற விடத்துச் சுத்தாவத்தை நீங்கு முறைமையும், (19) எங்கு மிருந்தபடி தன் னிடத்திருக்கு முறைமையும், (20) எடுத்த திருமேனி யெல்லாம் பரம்பொருளென்னு முறைமையும் ஆக எவ்வகைப் பேதமும் பரம் பொருளுண்மை யெனக் காண்க.

இப்பதிகத் திருப்பாக் கலிவிருத்தம்.

திருத்தில்லையி லோதியதெனக் காண்க.

235. இனி, ஊரும் பேருமுருவு மில்லாத நின்மலப் பொருணம ரூபமான (தி. - ன.) :—

திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநா மறியவோ ரந்தணனு யாண்டு கொண்டான்
ஒருகாம மோருருவ மொன்றுமிலார்க் காயிரந்
திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! நமது பரம்சிவனைத் தற்போதத்தாற் காணவேண்டுமென விட்டுணுவும் வராகமுருவமாகப் பாதல மகழ்ந்தும் அறியப்படாத திருவடியை அந்தத் திருவருண் ஞானமே அருளுருவாகி, நம்மை அடிமை செய்த நாதனுடைய திருவுளத்துக் கியைந்த திருவுரு பரோபகாரமாக அடியாரை அருட்கரை காணக் கொண்டது ; அன்றி, தனக்கொருவர் அளிப்பதான நாமரூப மில்லாதவ ஞயினும், அந்தக் கடவுட்கு ஏற்பதான பேராயிரம் பரவி, வானேரேற்றும் பெம்மானே, பிரிவில்லா அடியார்களே ! வாராத செல்வம் வர, முச்சில் புடைத்தலான ஞானத்தைத் தெள்ளி விளையாடுவீர்கள்—என அருளியதைக் காண்க. (1)

திருத்தெள்ளேணத்துக்குத் திருவாசக உள்ளக்கிடை :-சிவனேடைவு எ - து சிவனுடன் இயைறுது நிற்றல்.

இப்பதிகத்திற்குத் திருவாசகச் சிறப்பு :

பொன்னர் மெய்யண் ணலரும் போத வின்பமே மிகுந்து
தென்னு தென்னு வெனவே தெள்ளே ணங்கொட் டியதாம்
(பழைய திருப்பெருந்துறைப்புராணம்)

திருத்தெள்ளேணம் தில்லையிற்பாடியதென்றே திருவாதவூர்ப்புராணம் கூறும்.

தெள்ளேணம் கொட்டல் என்பதற்கு முச்சில் கொட்டல் என்கிறார் ; முச்சில் என்பது சிறுமுறம். அதனைக்கொண்டு இடித்த சுண்ணத்தைத் தெள்ளித் தெறுதல் என்பது தெள்ளேணங்கொட்டல் என்பது இவ்வுரையாசிரியருடைய கருத்து. பிற அச்சு நூல்களிற் பல தெள்ளேணம் என்பது சிறுபறை என்று கூறும்.

235. திருவடியை நாம் அறிய ஆண்டுகொண்டான் ; ஆயிரம் திருநாமம்பாடிக் கொட்டாம் என்று முடிக்க. கொட்டாம் - கொட்டுவோம்.

236. இனி, திருவடி ஞானம் பெற்றபின் எப்படிதம் எவ்வுலகு எவ்வுயிரும் அப்படியே கண்டபடி யாவருங் கண்ட (தி. - ன.) :—

திருவார் பெருந்துறை மேயபிரா னென்பிறவிக்
கருவே றறுத்தபி னியாவரையுங் கண்டதில்லை
அருவா யுருவமு மாயபிரா னவன்மருவும்
திருவாரூர் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ.

(இ - ள்). முச்சில் புடைக்கும் ஞானப்பெண்களே ! கேண்மோ ! திருப்பெருகும் பெருந்துறையில் எழுந்தருளிய பரமகுருநாதன் திருநோக்கத்தால் எனது பிறவித் துன்ப வேரைக்களைந்து சிவமாக்கிய பின் எங்குஞ் சிவமாய்க் கண்டதே அன்றி வேறு காணுமே. கண்டது சகள நிட்கள சகளாகள நவந்தர பேத உருவாய் அசப ஆனந்த நிருத்தஞ் செய்யும் மூலாதாரப் பொருளாகிய தியாராசர் எழுந்தருளிய திருவாரூரை இடைவிடாது துதித்து ஞான மணியைக் காணத் தெள்ளித் தெறுவதாக விளையாடுவீர்கள் !—என அருளியதைக் காண்க. (2)

237. இனி, யான் பெற்ற பேறுக்கு இவ்வுயிர் பரிபாகமோ வென உலகம் நகைப்பதான (தி. - ன.) :—

அரிக்கும் பிரமற்கு மல்லாத தேவர்கட்குந்
தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்துநம்மை
உருக்கும் பணிகொள்ளு மென்பதுகேட் டுலகமெல்லாஞ்
சிரிக்குந் திறம்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! திருமால் அயன் இவர்களன்றி மற்றுள்ள தேவச்சாதிக் குழுக்கள் தங்கட்கும் அறிவரிதாய்ப் பூரணமாய் நின்ற பரமசிவம் எழுந்தருளித் திருவுருவைக் காட்டி உருகுதலைச்சென்ற உள்ளமாக்கிய பெருங்கருணையை எல்லா உலகத்தாரும் கேட்டவுடன் அபக்குவம் பக்குவமானதோ வென நகைக்குந் திறத்தைத் துதித்து ஞானமுச்சில் புடைப்பீர்கள் என அருளியதைக் காண்க. (3)

---

236. யாவரையும் அவனையன்றி வேறு எவரையும், எல்லாம் சிவமாகவே காணும் நிலையைக் கூறியது.

237. தெரிக்கும் படித்து அன்றி - அரிவரிதாய். உருகு தலைச் சென்ற. உள்ளம் - உருகும் உள்ளம்.

238. இனி, யான் எனது, என்னும் செருக்கற்று வானேர்க் குயர்ந்த பரமசிவன் திருவடி பெறும் (தி. - ன.) : —

அவமாய தேவ [1]ரவர்கதியி லழுந்தாமே
பவமாயங் காத்தென்னை யாண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாமொழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! அரிதியமான பசுத்துவ தெய்வப்பத மோட்சப் பிராந்தியில் என்னைச் செல்ல விடாமல், எனது பிறவிப் பிணி தீர மேலான திருவடி ஞானம் அருளுவதான அடிமை யின்பங் காட்டிய பரமான சோதியே, நமதறிவிற் சிற்சத்தி சொரூபமே திருவருளென அனுக்கிரகம் செய்த, சிவமான அருளோப்பாடி முச்சில் புடையுங்கோளென அருளியதைக்காண்க. (4)

239. இனி, ஓங்குணர்வின் உள்ளடங்கி உள்ளத்தில் இன்பொடுங்குவதான (தி. - ன.) : —

அருமந்த தேவ ரயன்திருமாற் கரியசிவம்
உருவந்து பூதலத்தோ ருகப்பெய்திக் கொண்டருளிக்
கருவெந்து வீழக் கடைக்கணித்தெ னுளம்புகுந்த
திருவந்த வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! திருவருட் போத பக்குவ பரிபாகம் அரிதான மந்த கதியுடைய அயன் திருமாற்கு அரிய நமது பரமசிவன் திருவுருக்கொண்டு இவ்வுலக முவப்ப, சித்தாந்தத்தே சிவன் திருக்கடைக்கண் சேர்த்தி என்னைச் சிவன் முத்தனக்கி, மலங்கழுவி, உள்ளே இன்புருக் கொண்டடிமை

---

238. பி - ம். 1. அவகதியில். அவம் ஆய - வீணுகிய. தேவரவர் கதியிலழுந்தாமே என்றது, ' இந்திர லோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன் ' என்னும் சிரிய நோக்கத்தைக் காட்டியது. பவ மாயம் - பிறவிப்பிணி என்றுர். நவமாய - நூதனமாகிய. நல்குதல் - கிருபை செய்தல். நாம் ஒழிந்து - நாம் என்னும் சீவத்துவம் ஒழிந்து ; அச்ச மொழிந்து என்றும் கூறலாம்.

கொண்ட திருவருள் புகுந்த இன்பந் துதித்து முச்சில் புடைத்தல் செய்து விளையாடுவீர்கள்—என அருளியதைக் காண்க. (5)

240. இனி; ஆன்ம போதாதீதத் திருவருளின்ப விநியோக மாவன :—

அரையாடு நாக மசைத்தபிரான் அவனியின்மேல்
வரையாடு மங்கைதன் பங்கொடும்வந் தாண்டதிறம்
உரையாட வுள்ளொளியாட வொண்மாமலர்க் கண்களினீர்த்
திரையாடு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! அருளே திரு மேனியான திருவரையிலே, 'அற்றம் மறைப்பது முன் பணியே' போல், அவை யசையாமல் அசைவிக்கும் நமது பரமசிவன், இமய பருவதத்திலே திருவவதாரஞ் செய்து விளையாடற் செய்யும் அம்மை யுடன் அர்த்தநாரீசுவரமாக நம்மை யடிமை செய்ய இப்பூமியி லெழுந்தருளிய நாதன், திருவடி யருமை யுரிமை யானவர்க்கு விளங்க, அவ்வவர்க்குக்குள விளைவாகிய அணுசித்துரூப சதாசிவ அட்டமூர்த் தங்களும் அதிட்டித்து விளங்க, அப்பிரேரகத்தால் திருவடி கண்ட வுடன் அடைக்குந் தாளில்லாத அன்பானது இவ்வருட் பிரிந்த ஆராமையால் ஒள்ளிய தாமரை மலர் போன்ற கண்களிலே ஆனந்த பாட்பம் பெருகித் திரை போலலையும் அருளைப் பாடித் தெள்ளிச் சிவஞான முச்சில் புடையுங்கள்—என அருளியதைக் காண்க. (6)

241. இனி, திருவடி தரிசித்தவுடன் சீவன் சிவனை (தி. - ன.) :—

ஆவா வரியயனிந் திரன்வானோர்க் கரியசிவன்
வாவாவென் றென்னையும்பூ தலத்தேவலிந்
[தாண்டுகொண்டான்
பூவா ரடிச்சுவ டென்றலைமேற் [1]பொறித்தலுமே
தேவான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

---

239. அருமந்த - அருமருந்தன்ன. கருவெந்து வீழ - என் பிறவி மூலம் மீட்டும் முளையாதவாறு வெந்து அழிய. திரு வந்த ஆ - திருவரு ளான செல்லம் வந்ததன்மையை.

240. நாகம் - பாம்பு, அசைத்த - கட்டிய. அவனி - பூமி. வரை - மலை, திறம் - விதம். ஆட, ஆட, ஆடுமா பாடி எனக்கூட்டுக.

(இ -ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! ஓர் அதிசயமான திருவிளையாடல் ; அரி, அயன், இந்திரன் முதலிய தேவர்களால் கட்புலப்படாத பரமசிவன் நம்போல்வார்கட்குக் கருணை யளிப்பதாக, 'வாவா' வென என்னை விரைவாக ஓர் வார்த்தையால் அழைத்து, இவ்வுலகத்திலே வலிமை செய்து அடிமையாகச் செய்தான் ; தாமரை மலரின் வாசனையும் அழகு முற்ற ஞானத் திருவடி என்னுயிரில் சருவ வியாபகமாக, என்னுயிரை வியாப்பியமாக, அடிமை யின்பங் காட்டியவுடன் அடியேன் தேவான அற்புதத்தை ஞானத்தாற் தேறித் தெள்ளுங்கள் முச்சிலால்—என வருளியதைக் காண்க. (7)

242. இனி, ஐவர் கொண்டியிற் பட்டு மறக்கினும் என்னைக் குறிக் கொண்மின் என்ற மறவா வண்ணத் (தி. - ன.) :—

கறங்கோலை போல்வதோர் காயப்பிறப்போ டிறப்பென்னு
மறம்பாவ மென்றிரண்டச் சந்தவிர்த்தென்னை
[யாண்டுகொண்டான்
மறக்தேயுந் தன்கழல்நான் மறவாவண்ண நல்கியவத்
திறம்பாடல் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ.

(இ - ள்). சிவஞான முச்சிலா லின்பந் தெள்ளித் தெறும் ஞானப்பெண்களே ! கேண்மோ ! காற்றில் ஓயாது மாறி யலையுஞ் சுழலோலை போல்வதோர், அச்சுமாறிப் பிறக்கும் பிறப்பிறப்பாகிய காரண வேதுக்களான புண்ணிய பாவ இருள் சேராவண்ணம் செய்து, அடிமை செய்து, "மறந்து கின்னடியேன் மறவேன் ; எம் மான் ! மறித்தொருக்கால் பிறப்புண்டேல் மறவாவண்ணம்" பாடி, விளையாடுவீர்கள் ! என அருளியதைக் காண்க. (8)

---

241. பி - ம். 1. போர்த்தலுமே. ஆ ஆ - வியப்பு இடைச்சொல். பூ ஆர் அடி. பொறித்தலும் - நாட்டுதலும். தேவான - தெய்வத்தன்மை யான.

242. கறங்கோலை - ஓலைக்காற்சுழி. அறம் பாவம் என்ற இரண்டு அச்சம் - புண்ணியம் பாவம் என்ற இரண்டு அச்சங்கள். நல்கிய - அருளிய.

243. இனி, திணியான மனஞ்சிலையில் அன்பு நாருரித்த (தி. - ன.) :—

கன்னு ருரித்தென்ன வென்னையுந்தன் கருணையினற்
பொன்னுர் கழல்பணித் தாண்டபிரான் புகழ்பாடி
மின்னேர் நுடங்கிடைச் செந்துவர்வாய் வெண்ணகையீர்
தென்னு தென்னுவென்று தெள்ளேணங் கொட்டாமோ.

(இ - ள்). திருவருளழகு போன்ற மின்னல் கொடிபோல் வகீர்ந்து பிரகாசிக்கும் இடையும் சிவந்த நற்பவள வாயும் நின்மல வெள்ளையான தந்தபந்தியுமுடைய ஞானப்பெண்களே ! கேண்மோ ! பரமசிவன் பெருங் கருணையினால் என்னை அறிவு விளங்கச் செய்தது, கல்லிலே நாருரித்தலாதலால், பொன்போல் விளங்குங் குஞ்சித பாதத்தை என்னுயிரின்பமெனக் காருணியத்தைக் கண்டு களிப்புற்று ஆனந்த முச்சில் புடைத்தல் செய்வீர்கள்—என வருளிய திருவிளையாடலை அன்பாற் காண்க. (9)

244. இனி, சாக்கிராதீத நின்மல சாக்கிரத் (தி. - ன.) :—

கனவேயுந் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
புனவே யனையவளைத் தோளியொடு புகுந்தருளி
நனவே யெனைப்பிடித்தாட் கொண்டவா நயந்துநெஞ்சஞ்
சினவேற்க ணீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ.

(இ - ள்). விடத்தையும் எப்போதும் கோபத்தையு முடைத்தான வேல்போன்ற உங்களுடைய திருக்கண்களால் ஆனந்த நீர் பெருக்குஞ் சிவஞானப் பெண்களே ! கேண்மோ ! நமது நாதன் சொப்பனத்திலுந் தேவர்கட்குத் தெரிய அரிதான திருச்சிலம் போசையுள்ள குஞ்சித பாதமுடையவன் ; வேயுறு தோளி பங்கனுக என்னுளமே புகுந்தின்பளிக்கும் சாக்கிரத்தில் என்னைப் பிடித்தாட் செய்வான்,—சிறியேனை நன்னயமாக ; எனவே, சுத்தாவத்தை யனுபூதி பெற வென அருளியதைச் சொல்லி, முச்சில் புடையுங்கள்—என அருளியதைக் காண்க. (10)

---

243. கல் நார்உரித்தல் ஒரு பழமொழி. மின்னேர், என்னும், மின்னேர் என்றும் பிரிக்கலாம்.

244. கனவேயும் - கனவிலும். கனை - ஒலிக்கின்ற. புனவேயன என்பது அச்சுப் பிரதிகளிற் காணும் பாடம். புனம் வேய் - காட்டு மூங்கில். வளை - தொடி. தோளி - உமை. நனவு - சாக்கிரம். நஞ்சு அம் சினவேல் கண் நீர் மல்க.

245. இனி, திருவடி ஞானம் தரித்தவுடன் சருவ சுதந்தரம் பெற்றமையைக் கூறும் (தி. - ன.) :—

கயன்மாண்ட கண்ணிதன் பங்கனெனைக் கலந்தாண்ட வுமே
அயன்மாண் டருவினைச் சுற்றமுமாண் டவனியின்மேல்
மயன்மாண்டு மற்றுள்ள வாசகமாண் டென்னுடைய
செயன்மாண்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

(இ - ,ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! அங்கயற்கண்ணி தன்னோடும் அமர்ந்த நாதன் என்னைப் பொருளாகக் கலந்து அடிமை செய்து அபேதவத்துவிதமாக்குஞ் சிதம்பரத்தில் வைத்தவுடனே, மகாகேவலத்துக்கிடமான மூலமலம் அற்றது. அவைக்குக் காரிய மாக வந்த மாயையான இருவினையும் அவையாலுளதாகிய தத்துவக் கருவியும் அற்றன ; பிரக்ருதி முதலான ஆறத்துவாவும், அத்தேவர் களும், பிரேரக வாக்குக்கள் விஷவதான அட்டவித்தீசுவர அதிகார மும் அற்றன ; இவைகட்கு முதலான ஆன்ம சிற்சத்தியான எனது தற்செயலும் அற்றது ; அவ்விடத்து, உண்டான திருவருளான சருவ சுதந்தரந் திருவருட் கலப்பரல் பெற்ற பேற்றைத் துதித்து, முச்சில் புடையுங்கள்—என அருளியதைக் காண்க.

இவைக்குச் சுருதி பொன் வண்ணத் தந்தாதியிற்

" கூடிய தன்னிடத் தாலுமை யாளிடத்தானை யையா
நீடிய பல்சடை மேற்றெரி வண்ணமெனப் பணிமின்
பாடிய நான்மறை பாய்ந்தது கூற்றைப் பரிபுரஞ்செற்
றுடிய நீறுஞ் செஞ்சாந் திவையோ மெம்மையனைனவே "

(பொன்வண்ணத் : 60)

என்ற வன்பின்பைக் காண்க. (11)

246. இனி, பசு ஞானத்தவத்துக் கெட்டாத நிலையைக் கூறும் (தி. - ன.) :—

முத்திக் குழன்று முனிவர்குழா மனிவாட
அத்திக் கருளி யடியேனை யாண்டுகொண்டு
பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி
தித்திக்கு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

---

245. கயல் மாண்ட கண்ணி - கயல்மீனைப்போன்ற மாட்சிமை யுற்ற கண்ணையுடையவள். அயல்மாண்டு = அயன்மை அற்று ; மூலமலம் அற்று என்றார். மபல் - தத்துவக் கருவி என்றார். வாசகம் - பிரேரக வாக்குக்கள் விஷவதான அட்டவித்தீசுவர அதிகாரம்.

(இ - ள்). மகத்தான இருடிகள் " என்பே விறகாய், இறைச்சி அறுத்திட்டு, பொன் போல் அனலிற் பொரிய வறுத்திட்டு," பரமுத்தி வேண்டிடப் பேரின்பக் குஞ்சிதபாதங் கிட்டாது துன்ப முற்று நிற்ப, காட்டானைக்கு அன்பருளிய திருவானைக்காவலுறை சிவனே ஞானமாகி யெழுந்தருளி, என்னை அடிமை செய்து அன்பான திருவடி ஞானக்கடலில் அத்துவிதமாகச் செய்த மேலான பரம சிவத்தை, ஞானப்பெண்களே ! புதிது புதிதாக இன்பம் உள்ளத்தில் விளைய முச்சில் புடையுங்கள்—என அருளியதைக் காண்க. (12)

247. இனி, தற்சுட்டாலறியாத திருவடி சிவஞானத்துக் கருபூதி பெறுந் (தி. - ன.) :—

பார்பாடும் பாதாளர் பாடும்விண் ணோர் தம்பாடும்
ஆர்பாடுஞ் சாரா வகையருளி யாண்டுகொண்ட
நேர்பாடல் பாடி நினைப்பரிய தனிப்பெரியோன்
சீர்பாடல் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! பூமியிலுள்ள மனு முதலியராலுள்ள இன்பமும், பாதாள லோகத்தாரின்பமும், விண்ணிலுள்ள இந்திரன் முதலிய பதவின்பமும், மற்றுள்ள எவ்வகையோர் பேறும், அவை என்னைச் சாராவகை கருணை செய்த அடிமைப்பேறே பரமுத்தியின்பமென உணர்வு நேர, வருஞ் சிவபோகத்தைத் துதித்து மனவாசக யோக பாவனையான தற்போதத்துக் கெட்டான், யாவர்க்கும் பெரிய பெருமான், ஆன நாதன் திருவடிப் புகழைப்பாடி முச்சில் புடையுங்கள்—என வருளியதைக் காண்க. (13)

---

246. உழன்றி - வருத்தி. இவ்வருத்தத்தை விளக்குவது 'என்பே விறகாக' என்று தொடங்கும் மேற்கோள். அத்தி - யானை. ஆனைக்கா என்னும் பெயர்க்காரணமும் காண்க. தித்திக்கும் - புதிது புதிதாக இன்பு உள்ளத்தில் விளையும்.

247. பாடு - பதவியின்பம். ஆர் - வேறெவர். நேர்பால் - நேர வரும் சிவபோகம் என்றுரை. நேர்பு ஆடல் என்று பிரித்து நேர்ச்சியாகிய திருவிளையாடலை என்றும், நேர்பாடல் எதிர்ப்படுதல் என்றும், பிறவாறும் பிறர் கூறுவர்.

248. இனி, கலைஞானத்துக் கெட்டாத பரஞானத் (தி. - ன.) :

மாலே பிரமனே மற்றெழிந்த தேவர்களே
நூலே நுழைவரியான் நுண்ணியனுய் வந்தடியேன்
பாலே புகுந்து பரிந்துருக்கும் பாவகத்தால்
சேலேர்கண் ணீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ.

(இ - ள்). பேரின்பமான அங்கையர்க் கண்களையுடைய ஞானப் பெண்களே ! கேண்மோ ! உங்களுடைய திருக்கண்ணீர் ஆநந்த பாட்பம் பெருக, நமது நாதன் திருவடி திருமால் பிரமன் மற்றுள்ள தேவர்கட்கு, 'நுண்ணுணர் வோர்கட்கே நூலும் வேண்டுமோ' என்ற திருவடி ஞானமாவது அதிநுட்பமாக அமைய, அஃது என் னிடத்தில் எழுந்தருளி அன்பால் இன்புற அன்பான உயிரைக் கரையச் செய்யும் சிவயோகபாவகப் பொருளையே பொருளென முச் சில் புடையுங்கள்—என அருளியதைக் காண்க. (14)

249. இனி, பாமசிவன் திருவடி ஞானத்தாற் சிவத்தைப் பெறுவதொழிய வேருன ஞானத்தாலின்பம் பிறவாது என்ற (தி. - ன.) :—

உருகிப் பெருகி யுளங்குளிர முகந்துகொண்டு
பெருகற் கினிய பரங்கருணைத் தடங்கடலை
மருவித் திகழ்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
திருவைப் பரவி நாந் தெள்ளேணங் கொட்டாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! நமது சிவன் திரு வடியை அன்பு முருகி யழுவன் ; அரற்றுவன் ; என்பு முருகி யிராப் பகலேற்றுவன், என பொன்மணியை யெய்துவனேற்றுவன், தின் பன், கடிப்பன், திருத்துவனுன் நானே" என்றபடி அடிமை யில்லா தார் புசிக்க மாட்டாத பெரிய கருணை யின்பக்கடலை அடிஞான முற்றூர் அபேதவத்து விதமாகப் பொருந்தி தட்சிண திக்கு விளங் குந் திருவடி ஞானச் செல்வத்தைப் பரவி, முச்சில் புடைப்ப வாருங் கள்—என அருளியதைக் காண்க. (15)

---

248. நூலே நுழைவரியான் - நூல்களால் அறியமுடியாதவன். அடியேன் பால் - என்னிடம். பரிந்து - அன்புற்று. பாவகம் - இயல்பு. சேல் - ஒருவகை மீன். எர் - அழகிய.

249. பரங்கருணை தடங்கடலாக உருவகிக்கப் பெற்றது. மருவி - அடைந்து. திரு - திருவடி ஞானச் செல்வம்.

250. இனி, திருவருண் ஞான சைவ சமயப் பழம் பொருட்கே பரமுத்தியின்றி, அல்லாத சமயிகட் கெட்டாதவன் என்ற (தி. - ன.):

புத்தன் புரந்தராதிய ரயன்மால் போற்றிசெய்யும்
பித்தன் பெருந்துறை மேயபிரான் பிறப்பறுத்த
அத்த னணிதில்லை யம்பலவ னருங்கழல்கள்
சித்தம் புகுந்தவா தெள்ளேணங் கொட்டாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! நமது நாதன் திருவடி புறச்சமயத்து இருளான பௌத்தன் முதலானவர்களும் இந்திரன், அயன், மால், ஆகிய பசுவர்க்கத்தரர்களும் துதிப்பதான பித்தன் என்ற தன்வச, தற்சொரூப, தற்பாவமுடைய திருப்பெருந் துறையில் எழுந்தருளிய குருமணி, எனது துன்பப் பிறவியைத் திருவருள் நோக்கால், தீட்சித்து உண்மையான ஞான நடனம் திருவம் பலத்திலே நடிப்பதானவன், எனதுள்ளங்கவர்தலான கனகவின்ப சொரூபத் திருவடியைப் பொருளென முச்சில் புடையுங்கள்—என வருளியதைக் காண்க. (16)

251. இனி, சாத்திர சமயங்கட்குப் பிறவாத வின்பந் திருவடி ஞானத்தாற் சிவானுபவம் பெற்ற (தி. - ன.) :—

உவலைச் சமயங்க ளொவ்வாத சாத்திரமாம்
சவலைக் கடலுளைக் கிடந்து தடுமாறுங்
கவலை கெடுத்துக் கழலிணைகள் தந்தருளும்
செயலைப் பரவிநாந் தெள்ளேணங் கொட்டாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! ஒன்றோடொன்றொவ்வாத சாத்திரங்களும், அவைக்கேற்ற அளவிலாத சமயங்கட்கும் உண்டாகிய சஞ்சல சமுத்திரத்தில் அழுந்தித் தடுமாற்றமுறுந் துன்பத்தைக் கெடுத்து நித்தியானந்த சுகத் திருவடி ஞானம் அருளுந் திருவருட் செயலைத் துதித்து, முச்சில் புடைத்தல் செய்வோம் வாருங்கள்—என வருளியதைக் காண்க. (17)

---

250. பிறர் புத்தன் என்றது சிவபெருமானையே குறிக்கும் என்று கொண்டு, என்றும் புதியவன் எனப் பொருள் கூறுவர். போற்றி செய்தல் தோத்தரித்தல். பித்தன் என்ற சொல்லுக்கு முன் (பக். 84) கூறிய பொருளையும் காண்க. அத்தன் - தந்தை ; குருமணி என்றார்.

251. உவலை - பொய். ஒவ்வாத - ஒன்றற்கொன்று ஒவ்வாத. பரவி - துதித்து. சவலை - திட்பமில்லாத ; இங்கு, சஞ்சலம் என்றார்.

252. இனி, சுத்தாவத்தை நீங்கித் திருவடியே பொருளான தென்ற (தி. - ன.) :—

வான்கெட்டு மாருத மாய்ந்தழனீர் மண்கெடினும்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்
கூன்கெட் டுணர்வுகெட் டென்னுள்ளமும் போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! நமது நாதன் தாளானது பஞ்சபூத பௌதிக தத்துவம் அடங்கலும் கெட்டாலும் கேடு படாததாய், சலனமின்றி யிருப்பதாகியது; அத்திருவடியைக் கூடும் பெருமை வினவில், தத்துவாதீதத் தரிசன, சுத்த சாக்கிரத் தானமும், ஆன்ம போதாதீத திருவருட் தரிசன சொப்பனத்தான மும், அருளாதிக்க சுத்த சுழுத்தித்தானமும், அருளுருவ அபேத துரியத்தானமும், நான் கெட்ட இன்பாதீத துரியாதீதமும், கடந்த சிவானுபவ சுவானுபூதிக, இன்படிமை உல்லாச வாழ்தலைக் கண்டு, பாடி, முச்சில் புடையுங்கள்; ஞானப்பெண்களே! என அருளி யதைக் காண்க. (18)

253. இனி, அநாதியே தன்னிடத்திருந்தபடி முத்தியினுந் திருவருணின்ற (தி. - ன.) :—

விண்ணோர் முழுமுதல் பாதாளத் தார்வித்து
மண்ணோர் மருந்தயன் மாலுடைய வைப்படியோம்
கண்ணார வந்துநின் றூன் கருணைக் கழல்பாடித்
தென்னதென் னவென்று தெள்ளேணங் கொட்டாமோ.

(இ - ள்). இந்திரன் முதலிய தேவர்கட்குச் சருவ வியாபக முதல்வனான மகாதேவன்; பாதல புவனீசுவரர்களுக்குள் விளைவான ஞானவித்து; பிருதிவியிலுள்ள சிவர்கட்கு மந்திரமு - மருந்தும்; இவ்வாருன வயித்தியநாதன் விட்டுணு பிரமாக்களுக்கு அறிவான ஆதாரப் பொருளானவன், அடியேன் கட்புலப்படத்தோன்றி என்

---

252. வான், மாருதம், அழல், நீர், மண் பஞ்சபூத பௌதிகதத்துவம். தான் கெட்டல் - தானழிதல். சலிப்பு - அசைதல். தன்மையன் - சிவபெருமான். இங்குக் கூறிய சுத்தாவத்தை முன் 52 முதலிய பக்கங்களிற் கூறப்பட்டது.

னுள் புகுந்து இன்பம் பெத்தமே போல் முத்தியிலும் நின்ற திரு வருளைக் கண்டு அநுபூதிபெற ஞானப்பெண்களே! சிவானந்தக் களிப்புற்று, முச்சில் புடையுங்கள்—என வருளியதைக் காண்க. (19)

254. இனி, பரமசிவ மெடுத்த வடிவெல்லாந் திருவருளென் னும் (தி. - ன.):—

குலம்பாடிக் கொக்கிற கும்பாடிக் கோல்வளையாள்
நலம்பாடி நஞ்சுண்ட வாபாடி நாடோறும்
அலம்பார் புனற்றில்லை யம்பலத்தே யாடுகின்ற
சிலம்பாடல் பாடிநாந் தெள்ளேணம் கொட்டாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! நம்து சிவன் வாழும் வெள்ளியங்கிரி முதலான திருத்தலங்களை, அவை நித்திய மெனத் துதியுங்கள்; திருமுடியிலே வேடத்திருவுருவில் இன்ப சத்தியை அணிவதான கொக்கிறகைத் துதியுங்கள்; சத்தி சொரூ பமே சிவமெனக் கண்ட நயத்தைத் துதியுங்கள்; தேவர்கள் பிழைக்க நஞ்சைப் போனகமாகச் செய்த அன்பைத் துதியுங்கள்; அநாதியால் எக்காலமும் ஆரவாரிக்கும் புனலோடை சூழ்ந்த திருத்தில்லை மன் றுள் அனவரத நிருத்தஞ் செய்யுந் திருநடனத் திருவடித் திருச்சிலம் போசை வழியே சென்று நம் பொருட்டே திருமேனி கொண்ட திரு வருளைப் பாடி முச்சில் புடையுங்கள்—என வருளியதைக் காண்க.

திருச்சிற்றம்பலம்

---

253. முதல், வித்து, மருந்து, வைப்பு என்க.

254. குலம் என்பதற்கு திருத்தலங்களின் கூட்டம் என்கின்றூர். குலம் என்பதற்கு மேன்மை என்றும் பொருள் கொள்ளலாம். நலம் - நயம்; நன்மை. அலம்பு - ஆரவாரிக்கும். சிலம்பு ஆடல்பாடி என்க. சிலம்பின் வழியே சென்று பாடி என்று பொருள் அமைக்கின்றூர்.

திருச்சிற்றம்பலம்

12. திருச்சாழல்

இனித் திருச்சாழலாவன :—

அகத்தியச் சூத்திரம் :—

அவமறு திருச்சாழல்
சிவனுடைய காருணியம்.

இவைக்குப் பொழிப்பநுபூதியுரை திருவருள் வினியோகமருளிச் செய்யப் புகுகின்றதாவன :—

தெளிந்து தேறின சுத்தான்மாக்களுக்குத் திருவருளனுபவ நிட்டை கூடின காலத்து அடியார்கள், சிவஞானப்பெண்கள் கூடி விளையாடற்போல, அளவளாவி அடிமைத் திறப்பெருக்கையும், பரம சிவனது அநாதி காருணிய நிறைவையும், அச்சிவானந்தமே திருவுருக்கொண்டு நிக்கிரகவனுக்கிரகம் செய்த பெருமையையும், நிட்களமே சகளமானதையும், சைவசமய சமயப் பொருளையும் கூறி, இன்னும், அவையே, 'அத்துவிதியன்பிற்றெழு' என்ற திருவருட் பேருன பரமுத்தியும், மற்றச் சமயப்பேறு சாவிபோன்றது என்றதும், சதாநடன குஞ்சிதபாதத் தெரிசனமே ஆன்மலாப மென்றதும், நாதன் தனது கருணையால் எடுத்த வடிவெல்லாம் அடியார் பொருட்டன்றிச் சிவனுக்கு வடிவில்லை என்றதும், கொண்ட திருவுளக்கோலம் இன்ன பொருட்டென்றதுமான இவற்றை ஒருவர் கதை வினவியருள, விடை மற்றொருவரருள்வதைக் கதையழித்து, அநுபூதிக் காதலாக்குதலால், அவை பரஞான வனுபூதி வெளிப்படுதலால், அவையும் விளையாடலான திருச்சாழலென்னக் காண்க.

இது கலிவிருத்தமாகத் திருத்தில்லையில் ஓதியது.

திருச்சாழலின் திருவாசக திருவுள்ளக்கிடை :—சிவனுடைய காருணியம் எ-து, சிவனுடைய அருட்சத்தி விளையாட்டு.

திருவாசகச் சிறப்பு :—'மூன்றற்கலையு முணரா மூலகயாமேடி, தன்னற்பதி முதன்மை சாற்றியதாந் திருச்சாழல்' (பழைய புராணம்)

திருத்தில்லையிலே அடிகள் ஈழத்திலிருந்து வந்த புத்தர்களை வென்று, அரசனுடைய ஊமைப்பெண்ணைப் பேசவைத்து அவள் வாக்காகவே அவர்களின் குதர்க்க வாதங்களுக்கு விடைபேசச் செய்து,

255. இத்திருப்பாவில் பரமசிவன் திருமேனியில் பூசிய நீறும், திருவாபரணமான அரவும், திருவாயால் அருளிய மறையும், சிவகாருணிமானவை என்று கூறும் (தி. - ன.) :—

வினு—

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ.

(இ - ள்). தோழியான ஞானப்பெண்ணே! கேள்! கிட்களபரசிவத்துக்குத் திருவெண்ணீறணிவதேன்? பாம்பை ஆபரணமாக அணிவதேன்? தந்த, தாலு, ஓட்டத்துடன் திருவாயால் மறையருளிற்றே?

விடை—உயிர்த்தோழியான ஞானப்பெண்ணே! கேள்?

பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவ னெவ்வுயிர்க்கு மியல்பானுன் சாழலோ.

(இ - ள்). அடியோங்களை யிரட்சிப்பதாகப் பெருங்கருணையால் திருவுளங் கொண்டு வெந்த சாம்பல் விரையென்பதாகத் தழற்பொடி சுபாவம்போல, திருமேனியில் தரித்த கருணை, அநாதி முத்த அறிவுடையான் அறை வசனமான சத்தி சாகித்திய சந்நிதி மாத்திரமாக ஆதி முத்தர் கருத்தில் விளைவித்ததொழிய, தத்துவ கரண பசுவர்க்கமல்லவே! சர்ப்பாபரணம், பரித்திருப்பித்த சத்தியை உயிர்க்குத் திரோதானம் நிங்கத் தரித்ததே! இவை திருவங்கமுடைய ஈசன் சருவ வுயிர்க்குயிரான பெருங்கருணைச் சுபாவனே யொழிய வேறு விகாரபந்தப்பட்ட பொருளல்லன்! அடியின்ப உயிர்த்தோழியே!—என வருளியதைக் காண்க. (1)

அவற்றையே திருச்சாழலாக அருளினர் என்பது திருவாதவூரர் புராணம் முதலியவற்றின் கூற்று.

சாழல், ஒருவகை மகளிர் விளையாட்டு. சிலப்பதிகாரம் அரங்கேற்று காதை உரையில் 'நல்லார்தம் தோள்வீச்சு நற்சாழல்' என்று கூறப் பெற்றிருப்பதையும் காண்க.

இங்கு, உரையாசிரியர் ஒவ்வொரு பாடலையும் இருபகுதிகளாக்கி அவற்றை வினுவிடைகளாக அமைத்துப் பொருள் கூறுகின்றார்.

255. பொங்கு அரவம் - சீறும் பாம்பு. தந்த, தாலு, ஓட்டம் - பல், நா, உதடு. என்னை - பயன்யாது? காணேடீ - இது புத்தர் வினுவாகவும், சாழலோ என்பது ஊமைப்பெண்ணின் விடையாகவும் அமைந்தது என்பர்.

256. இனி, கோவணக் கள்வனவன் என்ற (தி. - ன.) :—

வினா—ஞானப்பெண்ணே ! கேட்பாயாக !

என்னப்ப னெம்பிரா னெல்லார்க்குந் தானீசன்
துன்னம்பெய் கோவணமாய்க் கொள்ளுமது வென்னேடீ ?

(இ - ள்). என்னை முதலான உயிர்களைச் சிருட்டிக்கும் தகப்பனும், சிருட்டிக்கப்பட்ட உயிரான என்னை இரட்சிப்பதாயும், மற்று முள்ள எல்லா மூவகை ஆன்மாக்களுக்கும் உயிரான நாதன் திரு மேனி யுளதாக, அதனில் தைத்த கோவணந் தரித்தது என்ன, அடி ! தோழிப்பெண்ணே !

விடை—கேட்பாயாக ; ஞானப்பெண்ணே !

துன்னுபொருள் மறைநான்கே மன்னுகலை வான்சரடாத்
தன்னையே கோவணமாய்ச் சாத்தினன்காண் சாழலோ.

(இ - ள்). என்னுயிர்ப்பாங்கியே ! அநுபூதி கேட்பாயாக ! கோவணக் கள்வனை பரமசிவன் தன் திருவுளத்துக் கேற்பதான திருவுருக் கொள்ளத் திருவுளம் என் பொருட்டுக் கொண்ட போதன் ; ஆதியே தன்னுலருளிய பர அபர ஞானம் படங்குடிலானற்போல, கலையே கலையாக, அத்துவிதமே தையலாக, மறையே சரடாக, இன் பக் கருணை வடிவானதே திருக்கோவணமாக, அநுபூதி அடியார் பெறத் தரித்ததே யொழிய, விகாரப் பிரதிபந்த மல்லவடி ; ஞானப் பெண்ணே !—என வருளியதைக் காண்க. (2)

257. இனி, நிட்கள சிவத்துக்குத் திருக்கோவில் திருவாடை யுளவோ வென்ற (தி. - ன.) :—

வினா—

கோயில் சுடுகாடு கொல்புலித்தோ னல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்றனியன் காணேடீ.

(இ - ள்). உயிரான ஞானப்பாங்கி ! கேள் ! உமது பரப்பிரம வஸ்துவுக்கு யாவரையுந் தகனஞ் செய்யுஞ் சுடலையே திருக்கோவி

---

256. **துன்னம் - தைத்தல். மன்னு - நிலைபெற்ற. கலை - பர அபர ஞானக்கலைகள். படங்குடில் - துணியால் செய்த குடிசை. வான் சரடு - பெரிய கயிறு. வேதமாகிய கயிறும் கலைகளாகிய துணியும் அத்துவிதமே தையலாகக் கொண்டது கோவணம் என்க.**

லாகவும், கொலைத்தொழிலை உடைய புலித்தோல் அரைக்குப் பட்டாடையாகவும், தந்தை தாயின்றியே உருவுடையானென்பதும், அந்த உரு தனிப்பரம் பொருளாமோ?

விடை—ஞானப்பெண்ணே!

காயுமிலி தந்தையிலி தான்றனிய னுயிடினும்
காயிலு லகனேத்துங் கற்பொடிகாண் சாழலோ.

(இ - ள்). கருவிகரண மோகத்தால் உளதாகியதானால், வேறொருவர் பாதுகாக்க வேண்டும்; ஆதலால், சுயவிச்சையே வடிவுளது. அவ்வகைத் தனிப்பரம் பொருளானது உயிரை இரட்சிக்கும் பொருட்டுச் சங்கார கர்த்தாவே முதலாளி யெனத் தோன்ற, திருவருட் சினமுண்டானால் எல்லா உலகுந் தூளாகவே போமடி! ஞானப்பெண்ணே! அவை சொல்லி விளையாடுவாய்—எல அருளியதைக் காண்க.

258. இனி, கருணையின்றி நிக்கிரகஞ் செய்தமையைப் பற்றிய (தி. - ன.) :—

வினா—

அயனை யனங்கனை யந்தகனைச் சந்திரனை
வயனங்கண் மாயா வடுச்செய்தான் காணேடீ.

(இ - ள்). ஞானப்பெண்ணே! கேள்! பரப்பிரமமே யானாற், கருணையின்றிப் பிரமனையும் மன்மதனையும் இயமனையுஞ் சந்திரனையும் எப்போதும் அவர்கள் இழிவு சிறப்பித்திருக்கும்படி வதை செய்யுமோ?

விடை—

நயனங்கண் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயமன்றே வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ.

(இ - ள்). நீண்ட அளகபாரமுடைய ஞானப்பெண்ணே! கேட்பாயாக! இச்சா ஞானக் கிரியா சத்திகளே மூன்று நேத்திரமாகத் திருவுருக் கொண்ட தேவர்கள் நாயகனே, திருவடி ஞானமிழந்த தேவர்கட்குப் பரமசிவனே உயிர்க்கு உயிரான சருவ வியாபக மேலான தேவனென்ற தேவர்கள் அறிவிற்றேன்றச் செய்த ஆக்

---

257. தான் தனியன் - தனிப்பரம்பொருள் என்று பொருள் கூறுகின்றார். காயில் - கோபிக்கில். கற்பொடி - தூள்.

கினைக்குத் தடுக்க வேறொரு கடவுளுளரோ? வலிசெய்ப; எனவே நிக்கிரக வனுக்கிரக நாதனே;—என வருளியதைக் காண்க. (4)

259. இனி, நாதன்தாளை யிழந்தவர்களை நிக்கிரகஞ் செய்த (தி. - ன.) :—

வினா—

தக்கனையு மெச்சனையுந் தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கெனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதா னென்னேடீ

(இ - ள்). ஞானப்பாங்கி! கேள்! ஏகப்பரப்பிரம சிவமானது தேவர் கூட்டச் சாதியில் ஏகதேச வுருக் கொண்டெழுந்தருளித் தன்னை யிகழ்ந்தா னொருவனெனத் திருவுளத் தெண்ணி, தக்கனையும் அவனுக்குச் சாதகனுயிருந்த எச்சனையும் மற்றத் தேவர்கள் அவைக்குச் சம்மதி கொண்டவர்களையுங் கொல்லலாமோ? தோழீ!

விடை—

தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளியருள்கொடுத்தங்
கெச்சனுக்கு மிகைத்தலை யன்றருளினன் காண்சாழலோ.

(இ - ள்). ஞானப்பெண்ணே! கேட்டுத் திருவினையாடல் செய்யடி! நமது பரப்பிரம சிவன்தானே திருவுருவான வீரபத்திரராகி யெழுந்தருளி, திருவடி மறந்த தக்கனைத் தலையறுத்து எச்சனை மகாநரக வேதனைக்குள்ளாக்கினது, ஆக்கினையான நிக்கிரகம்; பாலனுக்கு மாதா கண்டித்துக் கசப்புடன் மருந்து பிணிக்குக் கொடுப்பது போலும், வைத்தியன் பிணிக்கு அறுத்துச் சுடுவது போலும், உபாத்தியாயர் வித்தை வரக் கண்டிப்புச் செய்வதே போலும், கருணையே யல்லாது கொடுமையன்று; எனச்சொல்லி விளையாடுவாய் ஞானப்பெண்களே!—என அருளியதைக் காண்க. (5)

---

258. அயன் - பிரமன். அகங்கன் - மன்மதன். அந்தகன் - இயமன். வயணங்கள் மாயா - வகைகள் கெடாத. வயனம், அடையாளமும் ஆம். நயனம் - கண். வடு - தழும்பு.

259. எச்சன் - யாககருத்தா என்பர்; தக்கனையும் எச்சனையும் என்று தனித்தனியே கூறினமையால் அவர் வெவ்வேறே என்பதாயிற்று. எச்சனுக்கு மிகைத்தலை அருளினன் என்பதற்குப் பொருள் காணவில்லை; நரகவேதனைக்குள்ளாக்கினது' என்று கூறப்பட்டுள்ளது.

260. இனி, சேணுறுந் தழற்பிழம்பாய் நின்ற (தி. - ன.) :—

வினா—

அலரவனு மாலவனு மறியாமே யழலுருவாய்,
நிலமுதற்கீ ழுண்டமுற நின்றதுதா னென்னேடீ ?

(இ - ள்.) எனதுயிர்ப் பாங்கியானவளே ! கேள் ! நான்முகனும் நெடியமாலும் திருவடி ஞானத்தால் தங்கள் அறிவிற் காணுது, சேணுறுந் தழற்பிழம்பாகிப் பிருதிவி முதற் கீழ், வான்வரை, அடிமுடி தோன்றுமல் நின்றது பரப்பிரமமோ ? அடி, ஞானப்பெண்ணே !

விடை—கேட்பாயாக ! ஞானத்தோழியே !

நிலமுதற் கீழுண்டமுற நின்றிலனே லிருவருந்தம்
சலமுகத்தா லாங்காரந் தவிராரர்காண் சாழலோ.

(இ - ள்). ஞானத்தோழியே, கேள் ! நமது நாதன் காணுத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய், நீணுக மணிந்தார்க்கு நிகழ் குறியாக, லிங்கோற்பவத் திருவுருவாகாதே போனால், விட்டுணு பிரமா இருவருடைய அகம்பிரமம், தீராக்கோபம் பாடாய் நிலத் தறைந்தான் கை பிழையாவாறே போல, முடியுமே ; அடி ஞானப் பெண்ணே ! அவை சொல்லி விளையாடுவாய்—என அருளியதைக் காண்க. (6)

261. இனி, வாமபாகத் திருக்கல்யாணத்தைக் கூறும் (தி. - ன.) : —

வினா—

மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தா லவன்சடையிற் பாயுமது வென்னேடீ ?

(இ - ள்). என் உயிர்ப்பாங்கியான ஞானத்தோழி ! கேள் ! பரப்பிரமமேயானால் மலையரையன் பெற்ற பெண்ணைத் திருக்கலியாணஞ் செய்து தேகத்திலே தானே ஒருபுறந் தெரியவைக்குமோ ? வைப்ப தொப்பானாலும், இதல்லாமல், மற்றொரு கங்கை யம்மன் திருவேணிச் திருச்சடைமேல் சலரூபமாய்ப் பாய்ந்திருப்பதென்ன வதிசயமடி ? ஞானப்பெண்ணே !

விடை—

சலமுகத்தா லவன்சடையிற் பாய்ந்திலனேற்றரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ.

(இ - ள்). கேளடி, ஞானப்பெண்ணே! இமய பருவதராச புத்திரியைக் கலியாணஞ் செய்து வாம பாகம் வைத்தாலும், அச்சிவத்துக்கு வடிவில்லையென்பது ஒப்புவோமடி; இந்தச் சருவ ஞானசத்தி கங்கையைத் திருமுடிச் சடாபார நுனியிற் பனித்துளி போல் அடக்கி அணியாவிட்டால் எல்லா உலகமுஞ் சலத்தாலழிந்து, மற்றொருவராலுந் தடுக்கப்படாத பெருங்கேடாய் முடியுமடி;—என வருளியதைக் காண்க. (7)

262. இனி, விடத்தைப் போனகமாகத் தேவன் செய்த (தி. - ன.) :—

வினா—

கோலால மாகிக் குரைகடல்வா யன்றெழுந்த
ஆலால முண்டா னவன்சதுர்தா னென்னேடீ?

(இ - ள்). ஞானத்தேதாழியே! கேள்! நமது சிவன் பரப்பிரம வஸ்துவானால், அதேக ஆரம்ப ஓசையுடன் அழகிய பாம்பின் வாயிற் பிறந்த நஞ்சு,—ஒலிக்குஞ் சமுத்திரத்திலுதித்த கொடிய விடத்தை —உண்டது, சதுரான பெருமையோ? அடி ஞானமே!

விடை—

ஆலால முண்டிலனே லன்றயன்மா லுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ.

(இ - ள்). ஞானப்பாக்கியளான பெண்ணே, கேளடி; நமது பரம சிவன் தேவரெல்லாரையுங் கொல்லப் பிறந்த விடத்தை அத்திருமால் அயன் முதலோர் பிழைக்க, மாயையாலுண்டான திருமேனியனல்ல னென்றும் பெருங்கருணை யாளனென்றும் அறிவதாக நஞ்சைத் திருப்போனகமாகச் செய்தனன்; அவை சொல்லி விளையாடுக; ஞானப்பெண்ணே!—என அருளியதைக் காண்க. (8)

---

261. மற்றொருத்தி - கங்கை சலமுகத்தால் - நீருருவத்தோடு. தாணி - பூமி. பிலமுகம் - பாதாளத்தில்.

262. கோலாலம் - கோலாகலம். குரை - ஒலிக்கின்ற. சதுர் - சாமர்த்தியம். வீடுவர் - அழிவர்.

263. இனி, சத்தி சிவமொன்றே யென்ற (தி. - ன.) :—

வினா—

தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ.

(இ - ள்). என்னுயிர்ப் பாங்கியே, கேள்! தட்சிணபிமுகமாக, சிவானந்த நிருத்தம் தில்லை மன்றுள் ஆடும் ஞானாகாச நாதன் பெண்பால் இச்சை கொண்டு உன்மத்தனைவாறு உன்னடி ; ஞானப் பெண்ணே !

விடை—

பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ.

(இ - ள்). கேளடி! பாங்கி! நமது மகாதேவன் அநாதியே பராபரபரையான பார்ப்பதியுடன் குணகுணியாகிய அபேதவத்து விதமாகக் கூடிச் சிவபோகம் விளக்காமற் போனால், அறிவிலாதோய்! மண், விண், இரண்டிலுள்ளார்கள் ஆகாச மார்க்க யோகியராகி இறப்பதொழியப் பிறவார்களடி! ஞானப்பெண்ணே! இவை சொல்லி விளையாடுவீர்கள் என அருளியதைக் காண்க. (9)

264. இனி, திருவடியை நண்ணினர்க்கு நல்லனென்ற (தி. - ன.) :—

வினா—

தானந்த மில்லான் றனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத் தழுத்திவைத்தான் காணேடீ.

(இ - ள்). ஞானத்தோழி! கேள்! நமது பரமசிவன் ஆதி நடு அந்தமில்லாத நாதன் ; அவன் திருவடியை அன்பு செய்யும் நாயடி யேன் போல்வாரை, அபேதவத்துவிதமாகச் சிவானந்த வெள்ளத் தில் வியாபிய வடிமை செய்வோனடி! ஞானப்பெண்ணே!

---

263. தென்பால் உகந்து என்பதற்குத் தட்சிணபிமுகமாக நின்று என்று பொருள் கூறுகிறார். பால், என்பதைத் திசையாகக் கொண்டும் பொருள் கூறுவர்.

பெண்பால் உகந்தமையின் பெரும்பித்தன் என்றார் என்க. இருநிலம் என்பதைப் பெரிய பூமியிலுள்ளோர் என்று மானிடரைமட்டும் கூறுவ தாகக் கொள்வர் பிறர். வீடுதல் - ஒழிதல்.

விடை—

ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள் காண்சாழலோ.

(இ - ள்). ஞானத்தோழி ! கேளடி ! ஏகபோக நின்மல சாக்கிராதீத, அபேதவத்துவித, இன்படிமை செய்த பரமுத்தியான குஞ்சித பாதங்கள் மகத்தான நாராயணன் முதலான தேவர்கட் கெட்டாத அருமை பெருமையான பொருள் ; அவை சொல்லி விளையாடுக ; ஞானப்பெண்ணே. (10)

265. இனி, திருமேனியிலென்பருத வின்பத் (தி. - ன.) :—

வினா—

நங்காயி தென்னதவம் நரம்பொ டெலும்பணிந்து
கங்காளந் தோள்மேலே காதலித்தான் காணேடீ.!

(இ - ள்). ஞானப்பெண்ணே ! கேள் ! நமது சிவன் தவவேடம் பூண்பது இவையோ ? திருமேனியில் நரம்புடன் என்பும் ஆபரணமாதத் தரித்ததன்றி, முழுவெலும்பைத் திருத்தோள்மேல் தரிக்க இச்சித்த தென்னடி ? ஞானத்தோழி !

விடை—

கங்காள மாமாகேள் காலாந்த ரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ.!

(இ - ள்). ஞானப்பெண்ணே ! கேட்பாயாக ! முத்துச்சட்டை ஆபத்தாரண, வடுகேச, வயிரவனுகி, தனது காலாதீதமும் விட்டுணு பிரமாக்கள் அநித்திய காலவரையும் தோன்ற, மாலே அவரது மாண்டவரங்கமே யெனத் தரித்தனனடி ; ஞானப்பெண்ணே ! இவை சொல்லி விளையாடுவிர்களென அருளியதைக் காண்க. (11)

---

264. அந்தம் - முடிவு ; என்றமையால் ஆதி, நடுவையும் கொள்க. உந்து - வாழ்கின்ற. வான் - பெருமை. ஒரு செய்யுளில் ஒருமையும், பிறிதொரு செய்யுளில் பன்மையுமாக உரை செல்கின்றது.

265. கங்காளம் - தசையொழிந்த உடலின் முழு எலும்பு. கங்காளம் ஆம் ஆறு கேள். கால அந்தரத்து - கால இடையில் ; கால பேதத்தால். இருவர் - பிரம விட்டுணுக்கள். காலம் செய்ய - மாள.

266. இனி, இடுகாடே கோயிலாகக் கொண்ட நாதனுக்கடிமை செய்வாருளரோ வென்ற (தி. - ன.) :—

வினா—

காணுர் புலித்தோ லுடைதலையூண் காடுபதி
ஆனு லவனுக்கிங் காட்படுவா ராரேடீ. ?

(இ - ள்). ஞானத்தோழியே! கேட்பாயாக. நமது பரமசிவனுக்குக் காட்டுப் புலித்தோலுடையாகவும், பிரமகபாலங் கர பாத்திரமாகவும், மயானம் கோவிலாகவும் இவ்வண்ணமுடைய நாதனுக்கு அடிமைப்பணி செய்வாருளரோடி, ஞானப்பெண்ணே!

விடை—

ஆனுலுங் கேளா யயனுந் திருமாலும்
வானுடர் கோவும் வழியடியார் சாழலோ!

(இ - ள்). ஆனுலுஞ் சிறிது கேளடி, ஞானப்பெண்ணே! நமது சிவனுக்குப் பிரமாவும் விட்டுணுவும் இந்திரன் முதலியோரும் பரம்பரையாக வழித்தொண்டடிமைப் பணி செய்வோர்கள்; அடி, ஞானப்பெண்ணே! (12)

267. இனி, நாதன் திருக்கலியாணஞ் செய்யாவிடில் உயிர்கட்கின்பமில்லை யென்ற (தி. - ன.) :—

வினா—

மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்டிருவை
உலகறியத் தீவேட்டா னென்னுமது வென்னேடீ. ?

(இ - ள்). ஞானப்பாங்கியே! கேள்; நமது பரமசிவன் பருவதராசன் தவத்தாற் பெற்ற ஞானசொர்னப் பாவையான ஞானப் பிரகாச திரு நுதலிய திருவருட் சத்தியை உலகத்தார் காண அக்கினி வளர்த்து அது முன்னர் திருக்கலியாணஞ் செய்யுமோ, பரப்பிரமம்? அடி, ஞானப்பெண்ணே?

---

266. கான் ஆர் புலி - காட்டில் வாழும் புலி. ஊண் - உண்ணுங் கலம். பதி - உறை விடம். ஆட்படுவார் - ஆளாவார். வழி யடியார் - வழிவழியாகத் தொண்டு புரிபவர்.

விடை—

உலகறியத் தீவேளா தொழிந்தனனே லுலகினைத்துங்
கலிஞவின்ற பொருள்களெல்லாம் கலங்கிடுங்காண் சாழலோ

(இ - ள்). ஞானப்பெண்ணே! கேள்! நமது நிட்கள பரமசிவன் எல்லா உலகும் அவற்றிலுள்ள உயிர்களும் ஞானம் விளங்க, புணர் வின்பம் பிறக்க, சத்தியுடன் பொருந்துவே, அவையே சிவாநந்தம்; அவை கூடாவிடில் அவனுலருளிய கலிஞான முழுதுங் கலங்கி விடும்; அடி ஞானப்பெண்ணே! ஆதலால், நடிப்பே யெனச் சொல்லி, விளையாடுவிர்களென அருளியதைக் காண்க. (13)

268. இனி, பரமுத்த பஞ்சகிர்த்திய நடனத்தைக் கூறும் (தி. - ன.):—

வினு—

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது வென்னேடீ.?

(இ - ள்). ஞானப்பெண்ணே! கேண்மோ! பேரின்பக் குஞ்சித பாதத் தேன் சொரியுமின்ப ஞான வயல்சூழ்ந்த திருத்தில்லை வாழும் ஞானகாச சொரூபன் திருமேனி கொண்டு கூத்தாடுவதென்னடி? ஞானப்பாங்கி!

விடை—

தான்புக்கு நட்டம் பயின்றிலனேற் றரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக் கூட்டங்காண் சாழலோ.

(இ - ள்). ஞானப்பெண்ணே! நமது பரமசிவன் தான்றனே திருவுருக்கொண்டு திருவம்பலத்திலே திருநடனஞ் செய்யா தொழியில், ஊனகிர்த்திய காளிக்கூட்டமாய் விடும்; அடி ஞானப் பெண்ணே! (14)

---

267. தீ வேட்டல் - அக்னிசாக்ஷியாக வளர்த்தல். கலை - கலை ஞான நூல்கள்.

268. பணை - வயல். நட்டம் - நடனம். தரணியெலாம் காளிக்கு ஊட்டம் ஆம் என்க.

269. இனி, திருமாலே விடையாகி திருவடி தாங்கிய (தி. - ன.) :—

வினா—

கடகரியும் பரிமாவுந் தேருமுகந் தேரூதே
இடபகந் தேறியவா றெனைக்கறிய வியம்பேடீ.

(இ - ள்). ஞானத்தாழிப்பெண்ணே, கேட்பாயாக. நமது பரம சிவம் பரப்பிரமமேயானல், ரதகஜதுரகமிருக்க, அவைகளைப் பிரத்தியங்கமாகக் கொள்ளாது இடபத்தைக் கொண்ட திருவங்கமெனக் கேற்பச் சொல்வாயடி.

விடை—

தடமதில்க ளவைபுன்றுந் தழலெரித்த வந்நாளில்
இடபமதாய்த் தாங்கினன் றிருமால்காண் சாழலோ.

(இ - ள்). கேட்பாயாக, ஞானப்பெண்ணே! அநாதியே திரிபுர தகனத்துக்காகப் பரமசிவன் எழுந்தருளியபோது எல்லாத் தேவர்களும் திருத்தேரங்கமானதில், சிவனே ஆண்டவனென்று நினையாது, சமமாகக் கருதியது திருவுளங்கண்டு, அகம்பிரமமான தேரச்சு முறியச் செய்து, திருப்புன்முறுவலரல் திரிபுர தகனஞ் செய்யுங்கால், மகாவிட்டுணுவானவர் திருவடி பூமியில் தோயா வண்ணமாக, புண்ணிய வடிவான இடபமாய்த் திருவடி சுமந்து கருணை பெற்ற தொழிய வேறில்லையடி; இவை சொல்லி விளையாடற் செய்வோமடி; ஞானத்தோழியே!—என அருளியதைக் காண்க. (15)

370. இனி, தக்ஷிணாமூர்த்த உபதேசங் கூறும் (தி. - ன.) :—

வினா—

நன்றாக நால்வர்க்கு நான்மறையி னுட்பொருளை,
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ.

(இ - ள்). என்னுயிர்ப்பாங்கியே! கேட்பாயாக! நமது பரம சிவனே பரப்பிரம வஸ்துவானல், ஸ்ரீகயிலாசத் தென்பாரிசச் சோலையிற் கல்லால நிழற்கீழ், உமையம்மையைப் பிரிந்து, பத்மாசனமாகச் சிவயோகி வடிவாகி யெழுந்தருளி, நான்கு வேதத்தினுண்மைப் பொருளை நாலு பேரறியத் தர்மோபதேசஞ் செய்வது உளதோடி! சொல்லடி!

---

269. கடகரி - மதயானை. பரிமா - குதிரை. தேரும், உகந்து ஏறுமே. இயம்பு - சொல். தடம் - பெரிய.

விடை—

அன்ருலின் கீழிருந்தங் கறமுரைத்தா னுயிடினும்
கொன்ருன்காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ.

(இ - ள்). ஞானத்தாயே! கேளடி! நிட்களமே சகளமாகி, சைதனிய ஆலின் கீழெழுந்தருளி, சத்தினிபாத நால்வராக சத்தியோர்க்கும், வேதாந்தப் பொருளான ஆண்டவன் அடிமையியல்பை இரக்கத்தால் பரமுத்திபெற, அபேதவத்துவித சுத்த சைவ சித்தாந்த அன்பை அருளிற்ருயினும், தன்னே மறந்த முக்கோட்டையையும் அவையிலுள்ளாரையும் நிக்கிரகஞ் செய்ததன்றி, திருவடி மறவாத மூவர்க்கும் அவர்கள் மலத்தைத் திருநோக்கால் நீட்சித்து, சிவன் முத்தியே பரமுத்தியாகத் தேகத்துடனே திருக்கயிலாச வரையில் சாலோகமே சாயுச்சியமென அநுபூதிபெற, முப்பணி கட்டளே யிட்டருளிய பெருமையைச் சொல்லி விளையாடுவீர்கள் ஞானப்பெண்களே!—என அருளியதைக் காண்க. (16)

271. இனி, பரமசிவனே உயிர்க்குயிரன்றி வேருெரு தெய்வமில்லே யென்ற (தி. - ன.) :—

வினு—

அம்பலத்தே கூத்தாடி யமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையுந் தேவனென்று நண்ணுமது வென்னேடீ.

(இ - ள்). என்னுயிர்ப்பாங்கி! கேள்! திருவம்பலத்திலே நிருத்தஞ் செய்து திருப்போனகத்துக்குப் பிச்சாடன வடிவு கொண்டு திரியும் நாதனேப் பரப்பிரம சொரூபமென்று நிட்டை கூடலாமோ? அடி, ஞானப்பெண்ணே!

விடை—

நம்பனையு மாமாகேள் நான்மறைக டாமறியா
எம்பெருமா னீசாவென் றேத்தினகாண் சாழலோ.

(இ - ள்). ஞானப்பெண்ணே! கேள்! ஓரற்புதம்; நமது பரமசிவன் நான்கு வேதத்தாலும் அவனது நடிப்பை அறிய மாட்டாத

---

270. நால்வர் - சனகர், சனுதனர், சனற்குமாரர். சனந்தனர் ஆகியோர். ஆல் - கல்லால். அருளிற்ருயினும் - கூறினுரேயாஞலும். புரமூன்றும் கொன்றமை காருணியத்தால் என்பதும், முப்புர அசுரர் பெற்றது சாலோகபதவி என்பதும் உரையிற் காட்டப்பெற்றன.

வன் ; அவனது பஞ்சகிருத்யமே திருநடனம் ; அந்நடனத்தாற் சிவத் தன்மையைக் கெடுத்துச் சிவமாக்குவதே பலி ஏற்பது. அப்பலிப் பொருளேயே யாவர்க்குஞ் சிறந்தானென்றும் எப்பொருட்கும இறைவனென்றுஞ் சகல தேவர்களும் நமக்கரித்துத் துதிப்பதே யெழிய வேறில்லையென்றும் சொல்லி விளையாடுவாய் ; ஞானப் பெண்ணே ! என அருளியதைக் காண்க. (17)

271. இனி, நாராயணன் பூசைக்கிரங்கி சக்கரமருள்வதான (தி. - ன.) :—

வினா—

சலமுடைய சலந்தரன்ற னுடறடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ.

(இ - ள்). ஞானப்பெண்ணே ! கேட்பாயாக ! நம்து சிவன் தீராக் கோபமுடைய சலந்தராசுரனைப் பாடா முடித்தருளுங் காலம் உண்டாகிய நன்மையான திருச்சக்கரத்தைத் தேவச் சிரேட்டனை மகா விட்டுணுவுக்கருளிய வரலாற்றைச் சொல்வாயாக. உயிர்ப் பாங்கியே !

விடை—

நலமுடைய நாரணன்ற னயனமிடந் தரடினடிக்கீழ்
அலராக விடவாழி யளித்தனன்காண் சாழலோ.

(இ - ள்). ஞானச்செவிலி ! கேளடி ! தேவர்கள் சிரேட்டனை மகாவிட்டுணு நமது பரமசிவனே பரப்பிரமமென, ஆண்ட குருவாகக் குறிக்கொண்டு திருவீழிமிழலையிலே நித்திய நியம சிவார்ச்சனை தாமரை மலரால் அர்ச்சித்து வழிபட, நியம மலரிலோர் பூக் குறைந்த தென்று தனது திருக்கண்ணைப் பிடுங்கிச் சுவாமி திருமேனியிற் சாத்தியதால் அவன் வேண்டிய சக்கரம் அநுக்கிரகம் செய்தானடி ! அவை சொல்லி விளையாடுக; ஞானப்பெண்ணே ! என வருளியதைக் காண்க. (18)

---

271. அழுது செய்ய - உண்ண. பலி திரியும் - பிச்சை யெடுத் துத் திரியும். ஆம் (ஆறு) கேள். நம்பன் - சிவபெருமான்.

272. சலம் - கோபம். தடிந்த - சேதித்த. ஆழி - சக்கரம். நயனம் இடந்து - கண்ணைத் தோண்டி. அலர் - மலர்.

273. இனி, நஞ்சைத் திருப்போனகமாகக் கருணை செய்த (தி. - ன.) :—

வினா—

அம்பரமாம் புள்ளித்தோல் ஆலாலம் ஆரமுதம்
எம்பெருமா னுண்டசது ரெனக்கறிய வியம்பேடீ.

(இ - ள்). ஞானப்பெண்ணே! கேள்! நமது பரப்பிரம சிவத்துக்கு உடுக்கை புலித்தோல், மகாகொடிய விடம் அமிர்தம் இவ்வாறு கொண்ட எமது பெருமான் சதுரை யெனக்குத் தெரியச் சொல்லடி தோழி.

விடை—

எம்பெருமா னேதுடுத்தங் கேதமுது செய்திடினும்
தம்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ.

(இ - ள்). ஞானப்பெண்ணே! கேட்பாயாக! நமது பரமசிவனடியார் பொருட்டு ஏது உடுத்தும், எவ்றைத் திருப்போனகமாகக் கொண்டருளினாலும், தன்னுடைய பெருங்கருணை யின்பத்துக்கு அவை போலச் சமம், பரம் இல்லாததாதலால், அவைக்கு அவையே ஒப்பு; அடி! ஞானப்பெண்ணே! இவை சொல்லி விளையாடுவாய்! என அருளியதைக் காண்க. (19)

274. இனி, தக்ஷிணபிமுகமாக எழுந்தருளினமையைக் கூறும் (தி. - ன.) :—

வினா—

அருந்தவருக் காலின்கீழ் அறமுதலா நான்கினையும்
இருந்தவருக் கருளுமது வெனக்கறிய வியம்பேடீ.

(இ - ள்). ஞானப்பெண்ணே! நம்து சிவன் பரப்பிரமமேயானால், கல்லாலின் கீழிருந்து அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய இவற்றைச் சனகாதிகளுக்கு அநுக்கிரகம் செய்ததை யெனக்குத் தெரியச் சொல்லடி ஞானப்பெண்ணே!

---

273. அம்பரம் - ஆடை. ஆலம் - ஆலகால விடம். சதுர் - சாமர்த்தியம். தன் பெருமை என்பது எதுகை நோக்கி, தம் பெருமை என ஆயிற்று.

விடை—

அருந்தவருக் கறமுதலன் கன்றருளிச் செய்திலனேற்
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ.

(இ - ள்). ஞானப்பாங்கியான தாயே! கேள்! தக்ஷிணுபி முகமாக எழுந்தருளிச் சத்திநிபாத சனகாதியர்க்கு, உள்ளபொரு ளான, திருவடி ஞான அடிமை யியல்பை இருந்தபடி இருந்து, அத னைக் காட்டி, அநுக்கிரகஞ் செய்யாவிடில் இவ்வுலகிலே சிவஞானம் அரிதாகி விடுமடி! ஞானப்பெண்ணே! அவை அளவளாவி விளை யாடற் பெறுக!—என அருளிய திருச்சாழலைக் காண்க. (20)

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

13. திருப்பூவல்லி

இனித் திருப்பூவல்லியாவன :—

அகத்தியச் சூத்திரம் :—

செடமாயா விசையம்

பொழிப்புரை விளக்க மநுபூதி விளக்கமாவன :—

முற்பதிகத்திற் கதையை யழித்துப் பொருள் சொன்ன சத்துக் கள் மேற்செய்யுமுறைமை வினவில், சிவார்ச்சனையன்றி வேறில்லை நிட்டை, எனக்கருதி பூக் கொய்தலைக் காரண காரியமாக வுபசரித்த லான அநுபூதி.

(1) திருவடி வைத்தலுமே வேறுள்ளப் பற்று அற்றமையால் அதையே துதித்தல் வழக்கென்றதும், (2) விஷய வின்பத்தை விரும்பினது போலப் பேரானந்த வின்பம் பெற்றதும், (3) ஆண்ட முறைமையும், பிறப்பிறப்பு மாயைக்கன்றி, இன்பத்துக்கில்லை யென்னு முறைமையும், (4) பெற்று மறந்தவர்களுக்கு நிக்கிரகம்

274. அருந்தவர் - சனகாதி நால்வர். இருந்து அவருக்கு அருளும் அது எனக்கு அறிய இயம்பு என்க, அவருக்கு உலகு இயற்கை திருந் தத் தெரியா என்க.

வரும் முறைமையும், (5) சிவதரிசனம் உள்ளன்றி வெளியிலன்று என்னு முறைமையும், (6) திரிபுரம் அழித்தல் மும்மலந்தீர்த்த லென்னு முறைமையும், (7) தேகாதி பிரபஞ்சங் கொடுத்தது பேரின் பத்துக் கென்னும் முறைமையும், (7) சிவானந்தம் பெற அடியார் இனத்தாரெனு முறைமையும், (9) விளக்கம் தோன்றுதலெல்லாந் திருவடியே யென்னும் முறைமையும், (10) திருவடி வைத்தவுடன் நீங்கினது ஆசையாகிய உடலென்னு முறைமையும், (11) பேரின்பமே திருமேனியென்னு முறைமையும், (12) துன்பம் போலத் தோன்றி இன்பமே வடிவாம் முறைமையும், (13) விதிப்படி அர்ச்சித்தலே முறையென்னு முறைமையும், (14) சிவபோதத்தில் நடனஞ் செய்யும் முறைமையும், (15) நிக்கிரகங்களெல்லாமனுக்கிரக மென்னலும், அடியார்க்களிவரு முறைமையும், (17) உபாங்கமெல்லாம் அருளென்னும் முறைமையும், (18) சிவானந்தமே நடனமென்னு முறைமையும், (19) சுத்தான்மாக்களுக்குமகவாய் வருமுறையுந், திருப்பா முறைமை யெனக் காண்க.

இப்பா **கலிவிருத்தமாகத் திருத்தில்லையில்** ஓதியதெனக் காண்க.

275. இனி, திருவடி வைத்த வின்பத் (தி. - ன.) :—

இணையார் திருவடி யென்றலேமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்க ளெத்தனையுந் துறந்தொழிந்தேன்
அணையார் புனற்றில்லை யம்பலத்தே யாடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ.

(இ - ள்). சத்திசிவ சொரூப பாவ, பராபரஞான, இரண்டு பொற்பாத கமலங்களையும் எனது அறிவான உச்சியின்மேல் சூடிய வுடன் எனக்குத் துணை போலிருந்து உசாவிக்கெடுத்த மாயா தத்துவ

திருப்பூவல்லிக்குத் திருவாசக திருவுள்ளக்கிடை :—மாயா விசய நீக்குதல் எ - து சிவனுடன் இடையருது நிற்றல். இவ்வுரையில் அகத்தியச் சூத்திரமாகக் கொடுக்கப்பெற்று 'செடமாயாவிசையம்' என்று உள்ளது ஜடமாயா விக்ஷயம்' என்றதன் திரிபோ என்று தோன்றுகிறது.

இதற்கமைந்த திருவாசகச் சிறப்பு : தேவரறியாதசிவன் றேடியே யாண்ட நல, மாவலொடுஞ் சொல்லி யடியாரொடுங்கூடிப், பூவியந்துகொய் தறிருப்பூ வல்லியாம்" (பழைய புராணம்)

இது தாவுக் கொச்சகக் கலிப்பா என்பர் பிறர். இது தில்லையில் அருளப்பெற்றது. 8, 16 ; இவற்றின் பயன்கள் விடப்பட்டன.

பிரதிபந்த மெல்லாம் சருவ சங்க நிவிர்த்தியாகுமடி! ஞானப் பெண்களே! கேட்பீராக! சிறை சூழ்ந்த நீரால் விளங்கிய திருவம் பலத்திலே நடனஞ் செய்யுங் குஞ்சிதபாதத் தெப்பமான புகழைப் பாடி, மலர் கொய்வோம் ஞானப்பெண்களே! — என அருளியதைக் காண்க. (1)

276. இனி, சிவயோக ஆநந்தம் அருளிச்செய்வதான (தி. - ன.) :—

எந்தையெந் தாய்சுற்ற [1]மற்றுமெல்லாமு மென்னுடைய
பந்த மறுத்தென்னை யாண்டுகொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதி லானந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! தந்தையார் தாயார் உடன்பிறந்தார், சுற்றத்தார், (என்ற) பிரதிபந்தங்கள் முற்றும் திரு நோக்கத்தால் நீக்கி அடிமை செய்த திருப்பாண்டி ராசனை நாதன்; அவனது திருவருட் பிரேரக, சைதனிய, சுழிமுனை மத்திய, மருதப் பிரான் கழலான சிவயோக ஆனந்த இன்பப் பொந்தைப் பணிந்து, துதித்து, மலர் கொய்வோம்; வாருங்கள்; ஞானப்பெண்களே! — என அருளியதைக் காண்க. (2)

277. 'இனி, பிறப்பென்னும் பேதைமை நீங்கிச் சிறப்பென்னுஞ் செம்பொருளின்பமே' பொருளென்ற (தி. - ன.) :—

நாயிற் கடைப்பட்ட நம்மையுமோர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத் தாண்டானென் வல்வினையின்
வாயிற் பொடியட்டிப் பூவல்லி கொய்யாமோ.

---

275. இணை ஆர் திருவடி - ஒன்றுக்கொன்று இணையாயுள்ளதென்றும், இரண்டடிகள் என்றும், தனக்குத்தானே நிகராயுள்ள திருவடிக ளென்றும் பிறவாறும் பொருள் கூறுவர். இவ்வுரையில் திருவடியின் உண்மை கூறப்பட்டுள்ளது.

அணை ஆர் புனல் - அணைபொருந்திய நீர் சூழ்ந்த. அணை, சிறை என்றூர், புணையாளன் - தெப்பம் போன்றவன்.

1. பிரதிபேதம்; மற்றுமெல்லா. இடைமருது - திருவிடை மருதூர். தேன் பொந்திலுள்ளமையால் பொந்து என்றூர்.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! நாயினுங் கடையாய நம்மையுமோர் பொருளெனத் திருவுளத்தெண்ணி, ' தாயினு நல்ல தயாவுடைய ' எம்பெருமான் அநித்திய மாயப்பிறவியான துன்பத்தைக் கருணையால் இரட்சித்து ஆண்டதுமன்றி, எனது கொடிய வல்வினைத் துவார்த்திலே புழுதியைப் போட்டு அவைகெட, மலர் கொய்வோம் வாருங்கள் ஞானப்பெண்களே ! என அருளியதைக் காண்க. (3)

278. இனி, ஆண்டவனை பரமசிவனுக் கடிமையல்ல வென்றவர்களைப் பிரஞ்ஞைவர நிக்கிரகஞ் செய்த (தி. - ன.) :—

பண்பட்ட தில்லைப் பதிக்கரசைப் பரவாதே
எண்பட்ட தக்க னருக்கனெச்ச னிந்துவனல்
விண்பட்ட பூதப் படைவீர பத்திரராற்
புண்பட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! சகல இசையும் பொருந்திய திருத்தில்லை நகர்ப் பதிக்கு இறையாகிய நடராசனைத் துதித்து வணங்கி ஆண்டவனெனைக் கொள்ளாது, சமமாக நினைத்த தக்கன், அருக்கன், இந்து, அக்கினி, எச்சன், இவர் முதலியோர், ஆகாசம் நிறைவதான பூதப் படைக்கதிபதியாய வீரபத்திர சுவாமியாலே நிக்கிரக ஆக்கினை பெற்ற திருப்புகழைப்பாடி, விதிப்படி அர்ச்சிக்க மலர் கொய்வோம்—என அருளியதைக் காண்க. (4)

279. இனி, சிவதரிசனம் இருதயத்திலன்றி வேறில்லை யென்ற (தி. - ன.) :—

தேனுடு கொன்றை சடைக்கணிந்த சிவபெருமான்
ஊனுடி நாடிவந் துள்புகுந்தா னுலகர்முன்னே
நானுடி யாடிநின் றேலமிட நடம்பயி லும்
வானுடர் கோவுக்கே பூவல்லி கொய்யாமோ.

---

277. பொடி - புழுதி.

278. பண்பட்ட - சீர்மை பொருந்திய என்றும் கொள்ளலாம். எண்பட்ட - தம் எண்ணத்திலே நின்ற என்ற பொருளாம் ; சமமாக நினைத்த என்றார். தக்கன், அருக்கன், எச்சன், இந்து, புண்பட்டமை தக்ஷயாகத்தில்.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! தேன் நாறும் கொன்றை மலர்த் திருச்சடையிற் சூடிய சிவபெருமான் எனது உடலே இடமாகக் குறிக்கொண்டு உலகத்தார் காண என்னுளத்தில் 'ஊனுகி யுயிராகி யதனுணின்ற வுணர்வாகி நின்ற' நாதனை, அடியேன் 'நாடிக்கண்டேன்; உள்குவார் உள்ளப்பொருளே' யென்று சப்தித்து ஆராமையாற் காண நிருத்தஞ் செய்யும் வானுடர் கோவை, அர்ச்சிக்க மலர் கொய்வாமென அருளியதைக் காண்க. (5)

280. இனி, தேவர்கட்காகக் கருணையால் திரிபுர தகனஞ் செய்த (தி. - ன.) :—

எரிமூன்று தேவர்க் கிரங்கியருள் செய்தருளிச்
சிரமூன் றறத்தன் றிருப்புருவ நெரித்தருளி
உருமூன்று மாகி உணர்வரிதா மொருவனுமே
புரமூன் றெரித்தவா பூவல்லி கொய்யாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! நமது சிவன் மூவகை அக்கினி காரியங் கொள்ளுந் தேவர்கள் மேல் காருணியம் வைத்து, மும்மலந் தீர்வதான திருநோக்கம், திரிபுரர்கள் சிரமற, நெரிய வருளா நிற்கும்; குருலிங்க சங்கம மூவுருவமோர் உருவமானு லும், பசுவர்க்கங்களுக்கு எட்டாது; ஏக பரப்பிரம வறிவே சொரூப மான சிவனே மும்மல திரிபுர மெரிசெய்த, புன்முறுவலே நினைத்து மலர் கொய்வாம்—என வருளியதைக் காண்க. (6)

---

279. ஆடு - ததும்புகிற. நாறுதல் தோன்றுதல், மணம்வீசுதல். நாடி நாடி, அடுக்கு. மானிடவடிவம் எடுத்தமை அவர் உயர்வுக்கு இழுக் கானது என்பதைத் தெரிவித்து. நடம் பயிலுதற்குக் காரணம் அடியார் கள் பொருட்டு என்பது குறிக்கப்பட்டது.

280. எரி மூன்று தேவர் - மூச்சுடர்கள் என்று கொள்வாரும் உளர். இன்னும், எரி உள்பட மூன்று தேவர் என்றும், சகுணம், நிர்க்குணம் பிராம்மி என்னும் மூர்த்தங்களாக நிற்கும் சிவபெருமான் அந்தணர் வேள்வித்தீயாகிய மூன்றினையும் தேவர் பொருட்டு அவர்மேல் இரக்கங்கொண் டருளி முனிவர்பால் அருளிச் செய்தும் என்றும் பலவாறு பொருள் எழுது வர். இங்கு உரையாசிரியர் பொருளின் சிறப்பைக் காண்க. சிரம் மூன்று - திரிபுரர்களாகிய மூவரின் சிரங்கள்.

281. இனி, உடம்புடைய யோகியர்பாலுற்ற சிற்றின்ப மடங்கலும் பேரின்பமாகிய (தி. - ன.) :—

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்
திணங்கத்தன் சீரடியார் கூட்டம்வைத் தெம்பெருமான்
அணங்கோ டணிதில்லை அம்பலத்தே யாடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! நமது திருவருளழகு பொருந்தித் திருவருட்பணி செய்யும்படி, ஞானவம்பல நிருத்த குஞ்சிதபாத பரசிவத்தைத் தலையால் வணங்கி, அத்திருவடியை வாயாற் பன்னி, இவை யிடைவிடாது பணிசெய்யுஞ் சீரடியார் திருக்கூட்டஞ் சேர்வதாக அருளிய சாட்குணியம் நமது அறிவிலே விளங்கி அடிமைப்பணி மலர் கொய்து செய்வோம் வாருங்கள்; ஞானப்பெண்களே! என அருளியதைக் காண்க. (7)

282. இனி, சீரடியார் திருக்கூட்டஞ் சேர்வதே பேரின்பகிட்டை யென்ற (தி. - ன.) :—

நெறிசெய் தருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை யாண்டபிரான் குணம்பரவி
முறிசெய்து நம்மை முழுதுடற்றும் பழவினையைச்
கிறிசெய்த வாபாடிப் பூவல்லி கொய்யாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! நமது பரமசிவன் நம்மை யிரங்கி, ஞானநீதியுடையனாகக் கிருபைசெய்து, தனது உண்மை யடியார் (பொன்னடிக்கே) நம்மைக் குறிக்கொண்டு அடிமைப் பணிசெய்ய, ஆண்டவனது அருட்குணங்களே வணங்கி, நம்மைப் பேரலவே, முழுமையுங் கபளீகரித்து, அடிமையோலை வாங்கினதுபோல, மறைத்திருந்த வலிதான விருள்சேரிரு வினையையும், அவைக்குக் காரணமான ஆணவமலத்தையுந் திருநோக்கால் பொய்

---

281. பி - ம்.—1. கூட்டமும். வார் கழல் - நீண்ட கழலையுடைய திருவடி. அணங்கோடு - உமையாளோடு; உமை சான்றாக. அணங்கு - தெய்வத்தன்மையும் ஆம். கூர - மிகவும். தலை முதலிய அங்கங்கள் பேரின்பம் நாடவே உள்ளன என்பது உட்பொருள்.

யாக்கி, அடியேற் கருள்வழி காட்டிய இன்பத்தைத் துதித்து மலர் கொய்வோம் வாருங்கள்! சிவார்ச்சனை செய்ய, ஞானப்பெண்களே! என அருளியதைக் காண்க. (8)

283. இனி, சடசித்திரண்டினும் தோன்றும் விளக்கம் திருவருளின்ப விளக்கமே யல்லால் வேறில்லை யென்ற (தி. - ன.) :—

பன்னுட் பரவிப் பணிசெய்யப் பாதமலர்
என்னுகந் துன்னவைத்த பெரியோ னெழிற்சுடராய்க்
கன்னு ருரித்தென்னை யாண்டுகொண்டான் கழலிணைகள்
பொன்னன வாபாடிப் பூவல்லி கொய்யாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! நமது பரம்சிவன் தனது திருவடியை என்னுடலிடமாக அபேதவத்துவிதமாக வாழவும், பலநாளும் பணியவும், திருவருட் பணி செய்யவும் அருளிய மகாதேவன் தனது கருணையொளியாற் கல்லிலே நாருரித்தாற் போல, எனது உயிரை அன்பாக்கி அடிமை செய்தருளிய திருவடிகளான குஞ்சிதபாதத்தின் திருவருளழகைப் பாடிச் சிவார்ச்சனை செய்ய, மலர் கொய்வோம் ஞானப்பெண்களே!—என அருளியதைக் காண்க. (9)

284. இனி, திருவடி சூடியவுடன் மாயாவிச்சை நீங்கும் என்ற (தி. - ன.) :—

பேராசை யாமிந்தப் பிண்டமறப் பெருந்துறையான்
சீரார் திருவடியென் றலைமேல் வைத்தபிரான்
காரார் கடல்நஞ்சை யுண்டுகந்த காபாலி
போரார் புரம்பாடிப் பூலல்லி கொய்யாமோ.

---

282. நெறி - ஞான நீதி; நன்னெறி; சிவநெறி. நாம் அடியார் திருவடிக்கே உரிமையாகும் குறியைக் கொண்டு என்க. முறி - முறியோலை; முறிசெய்து - முறித்து அடிமையாக்கி என்றும் கூறுவர். முழுது என்பதைச் செய்து என்பதனோடும், செய்த என்பதனோடும் கூட்டலாம். கிறிசெய்த - பொய்யாக்கின; இல்லையாக்கின.

283. ஜடம் - அறிவற்றது. சித்து - அறிவுள்ளது. துன்ன - பொருந்த. எழில் - கருணையழகு. கல்நார் உரித்தல் ஒரு பழமொழி.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! நமது ஆராவியற்கை அவாவான மலபோதப் பிற்வி நீங்கும்படியாகத் திருவருட் சிறப்பான திருப்பெருந்துறை நாதனை குருமணி; சிவஞானத் திருவடியான குஞ்சிதபாதத்தை எனதறிவில் அபேதவத்துவித மாக வாழவைத்த பிரான்; தேவர்கட்கிரங்கி திருப்பாற்கடலில் பிறந்த விடத்தை திருவமுதாகக் கொண்டருளி, திரிபுர மலத்தைப் பொடியாகச் செய்ததைத் துதித்துச் சிவார்ச்சனைக்கு நால்வகை மலருங் கொய்வோம்டி ஞானப்பெண்ணே யென வருளியதைக் காண்க. (10)

285. இனி, பேரின்பமே திருமேனியென வெடுத்தருள்வதான (தி. - ன.) :—

பாலு மமுதமுந் தேனுடனும் பராபரமாய்க்
கோலங் குளிர்ந்துள்ளங் கொண்டபிரான் குரைகழல்கள்
ஞாலம் பரவுவார் நன்னெறியாம் அன்கெறியே
போலும் புகழ்பாடிப் பூவல்லி கொய்யாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே: கேண்மோ! நமது பரமசிவன் நம்து கண்ணுங் கருத்துங் களி கூர்வதாகத் தேவவமிர்தும் ஆவின் பாலுங் கொம்புத்தேனுங் கலந்த அதிரச வின்பம்போல, அநாதியே பாரபர வடிவே திருமேனி கொண்டெழுந்தருளினன்; அங்நாதனு டைய குஞ்சிதபாதத்தை இப்பிருதிவியினுள்ளார் அடிபணிந்து வணங்குவதான இன்பவழியே நமது சிவஞான அன்புள இன்ப அநுபவ மார்க்கமென, ஞானவடிமைப் புகழ்பாடிச் சிவார்ச்சனை செய்ய மலர் கொய்வோம் ஞானப்பெண்களே!—என அருளியதைக் காண்க. (11)

286. இனி, திருவருட் செயலானது துன்பம் போலத் தோன்றுவதெல்லா மின்பமேயான (தி. - ன.) :—

வானவன் மாலயன் மற்றுமுள்ள தேவர்கட்கும்
கோனவனுய் நின்று கூடலிலாக் குணக்குறியோன்
ஆன நெடுங்கட லாலால மமுதுசெய்யப்
போனக மானவா பூவல்லி கொய்யாமோ.

---

284. பேராசை...பிண்டம் - அவாவே பிறப்புக்குக் காரணம் என்றது. அற - நீங்க. கார் ஆர்கடல் - கருமை மிகுந்த கடல். காபாலி - கபாலத்தையுடையவன். போர் ஆர் புரம் - போருக்கு இலக்காயிருந்த மூப்புரம்.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! நம்து பரம்சிவன் தேவேந்திரன், திருமால், அயன் மற்றுமுள்ள தேவச்சாதியர் அனைவர்கட்கும் இராசாக்கினை நடாத்தும் நாதன் ; அவர்கள் உள்ளத்தில் இன்புற வாழாத குணத்தையுடைய மூலக்குறி யுடையோன் ; அத் தேவர்கட்கு இரங்கி, துன்பம்போல் வராநின்ற கொடிய விடத்தை அழுது செய்ய இன்பத் திருபோனகமான திருவருளே நியமமாக அர்ச்சிக்க மலர் கொய்வோம் ! ஞானப்பெண்களே ! என அருளியதைக் காண்க. (12)

287. இனி, வேதாகம விதிப்படி பூசிப்பதே யின்பமென்ற (தி. - ன.) :—

அன்ரூல நீழற்கீ ழருமறைகள் தானருளி
நன்ரூக வானவர் மாமுனிவர் நாடோறும்
நின்ரூர வேத்தும் நிறைகழலோன் பூனைகொன்றைப்
பொன்ரூது பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

(இ - ள்). கேளுங்கள் ; ஞானப்பெண்களே ! நம்து நாதன் சைதனிய வடிவான கல்லாலின்புடை அமர்ந்து சத்திய சொரூப நால்வர்க்கும் அருமை யுரிமையான மகாரகசிய ஞான வியல்பை அநுக்கிரகஞ் செய்தருளிய பேரின்ப நிட்டை கேட்கும் மாமுனிகளும் மற்றுள்ள தேவர்களும் மகாதேவன் திருவடியை நாடோறு நியமந் தவறிலாது பூசிப்பதே பொருளாகிய பரமுத்தியென நின்று துதிப்ப தான சருவ வியாபக உயிர்க்குணமான குஞ்சிதபாதத்தில் அணிவ தான கொன்றை மலரை நித்தியமெனத் துதித்து மலர் கொய்வோம்; ஞானப்பெண்களே ! என அருளியதைக் காண்க. (13)

288. இனி, சிவபோதத்திலே நடனஞ் செய்யுந் (தி. - ன.) :—

படமாக என்னுள்ளே தன்னினைப்போ தவையளித்திங்
கிடமாகக் கொண்டிருந் தேகம்ப மேயபிரான்
தடமார் மதிற்றில்லை யம்பலமே தானிடமா
நடமாடு மாபாடிப் பூவல்லி கொய்யாமோ.

---

286. கூடலிலா என்றமையால் பசுபோதம் நிறைந்த தேவர்கள் உள்ளத்தில் நில்லாதவன் என்பதாயிற்று. போனகம் - உணவு.

287. கழலோன் பூனைகொன்றை என்றதனால் திருவடியில் அருச்சிப்பதான தொன்றை என்று பொருள் கொண்டனர்.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! 'உயிராவண மிருந் துற்று நோக்கியுள்ளக் கிழியினுருவென்னெஞ் சத்தெழுதி' அனு பவம் பெறச்செய்த, எழுதிக் காட்டொண்ணாக் கச்சிமயான ஏகம்ப நாதபிரானை, ஞானப்பொலிவான திருமதில் சூழ்ந்த திருத்தில்லை ஞானகாச நடராசப்பதியுளான் எனது உளத்திலே சிவானந்த நட னஞ் செய்வதைத் துதித்துச் சிவார்ச்சனை மலர் கொய்வோம் என வருளியதைக் காண்க. (14)

289. இனி, நிக்கிரக மென்பதெல்லா மருளென்னும் (தி. - ஸ.):

அங்கி யருக்க னிராவணனக் தகன்கூற்றன்
செங்க ணரியயன் இந்திரனுஞ் சந்திரனும்
பங்கமில் தக்கனும் எச்சனுந்தம் பரிசழியப்
பொங்யசீர் பாடிப் பூவல்லி கொய்யாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! நமது பரமசிவன் திருவருள் இரக்கங் கொண்டு சந்திரன், சூரியன், அக்கினி, இரா வணன், அந்தகாசுரன், இயமன், தக்கன், எச்சன், அரி, அயன், இந்திரன், இவர் முதலோர்களுடைய தற்போதங் கெட்டுச் சிவ போதமே பொருளென விளங்க, அங்கங்குறையச் சிவாக்கினை செலுத்துவதான பெருங்கருணைப் புகழைத் துதித்துத் திருவடி யர்ச்சனை மலர் கொய்வோம்—என அருளியதைக் காண்க. (15)

290. இனி, திருவாலவாய் சோமசுந்தரநாதன் தனது அடிமை யான வந்தியம்மைக்காளான (தி. - ன.) :—

திண்போர் விடையான் சிவபுரத்தார் போரேறு
பெண்பால் மதுரையிற் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் றன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிப் பூவல்லி கொய்யாமோ.

---

288. (1) படம் - கிழி ; சித்திரம் என்றும் கூறுவர். இணைப்போது இரண்டு திருவடி மலர்கள். ஏகம்பமேயபிரான் அம்பலமே இடமா கிட மாடும் என்க.

289. அந்தகனை இயமனென்றும், கூற்றனை அவன் தூதனென்றும் பிறர் கூறுவர். பரிசு - தன்மை. நிக்கிரகமெல்லாம் அருளே என்பது பொருள்.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! நமது உண்மை மலத்தை உயுத்தஞ் செய்து அருளாக்கும் புண்ணிய விடை மேலெழுந்தருளிய சிவபுர ஞானப்போர் விளாவிக்கும் திருவருட் சிங்க மான திருமதுரைப் பதிவாழுஞ் சோமசுந்தரநாதன் வந்தியம்மைக் காளாக அன்பால் இன்புற்று அமுதப்பிட்டுத் திருப்போனகமாகக் கொண்டருளி, பாண்டியன் கைப்பிரம்பாற் றிருமேனியிற் றழும்புபட அடிபட்ட புண்பாடலே நம் பொருட்டன்றி வேறல்லவெனத் துதித்து ஞான பூசா மலர் கொய்வீர் ! இன்ப சத்திப்பெண்களே ! என அருளி யதைக் காண்க. (16)

291. இனி, அங்கப்பிரத்தியாங்க உபாங்கங்களெல்லாம் அருட் பணி யென்னுங் (தி. - ன.) :—

முன்னிய மாலயனும் வானவருந் தானவரும்
பொன்னுர் திருவடி தாமறியார் போற்றுவதே
என்னுக முள்புகுந் தாண்டுகொண்டா னிலங்கணியாம்
பன்னகம் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! அநாதியே தொன்று தொட்டு வராநின்ற வேறடிமையாயுள்ளாரான விட்டுணு, பிரமா முதலிய சுராசுரர் முதலியோர் நாதன் திருவடியை தமதுள் ளிருக்குஞ் சிவஞான போத மெனவறியார்கள் ; அவர்கள் புகழ்ந்து பணிவது எது நிமித்தமோவென வினவிற் சிவாக்கினைக்குப் பயந்தே யொழிய பத்தியாலன்று ; அந்தத் திருவடி என்னுடல் இடமாக, உள்ளே அறிவாகிக் கலந்து என்னே அடிமை செய, தான் திருமேனி யிலழகாகப் பல பாம்புகளேயும் என் மலந்தொலைய ஆபரணமாகக் கொண்ட புகழைப்பாடி, நாமெல்லோரும் அர்ச்சனை மலர் கொய் வோம் ! ஞானத்தாயரே ! என அருளியதைக் காண்க. (17)

292. இனி, சிவானந்தமே திருநடனமென்னுங் (தி. - ன.) :—

சீரார் திருவடித் திண்சிலம்பு சிலம்பொலிக்கே
ஆராத ஆசையதா யடியே னகமகிழத்
தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் திருநடஞ்செய்
பேரானந் தம்பாடிப் பூவல்லி கொய்யாமோ.

---

290. விடை - இடபம். போர்விடை என்றதற்குக் கூறிய பொருள்நயம் கவனிக்க. ஏறு - சிங்கம். பெண் - வந்தி. தண்டு - இங்குப் பிரம்பு. தன்னை - சிவபெருமானை.

291. பி - ம் -- 1. முன்புகுந்.

தானவர் - அசுரர். தேவர் முதலியோர் போற்றுதற்குக் காரணங் காட்டியதைக் காண்க. இலங்கு - விளங்குகின்ற. பன்னகம் - பாம்பு.

(இ - ள்). ஞானத்தாயரே! கேண்மோ! நமது நாதன் தாளாளது மெய்ந்நெறியாகிய இன்பச்சீர்ச் சிறப்புள வல்லமையான திருச்சிலம்பணிந் திருப்பது, அந்தச் சத்திய ஞானத்திருச்சிலம்போசை வழியே குஞ்சிதபாத பரமுத்தி யடைவதற்குப் பேராசையுற; அடியேன் அறிவுள் ஆநந்த போதமாகப் பாராரோவெனை யொருகால், தேரார்ந்த நெடுவீதி யுளத்திருப் பெருந்துறையான்; அதில் எழுந்தருளும் குருமணி சிவானுபூதி பெற அடியேன் இருதயபுரத்தில் ஆனந்த நிருத்தப் பேரானந்தம் புகழ்ந்து, மலரடியர்ச்சனைக்கு மலர் கொய்வோம் இன்பத்தாயர்களே! என அருளியதைக் காண்க. (18)

293. இனி, சிவனடியாரான வண்டோதரிக்குப் புத்திரனுக வெழுந்தருளிய (தி. - ன.) :—

அத்தி யுரித்தது போர்த்தருளும் பெருந்துறையான்
பித்த வடிவுகொண் டிவ்வுலகிற் பிள்ளையுமாம்
முத்தி முழுமுதலுத் தரகோச மங்கைவள்ளல்
புத்தி புகுந்தவா பூவல்லி கொய்யாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! வழுவையுரிபோர்த்தருள்வதான திருப்பெருந்துறைப்பதியான குருமணிப் பொருள் பயித்தியத் தன்மையான இவ்வுலகான விலங்கையிலே அன்புள்ள வண்டோதரி யம்மைக்கு அநுக்கிரகஞ் செய்ய வெழுந்தருளி, உபதேசஞ் செய்யும்போது, அன்புடைய இராவணன் வர, சுவாமி பாலகனைத் திருமேனி கொள்ள, பார்ப்பதி தாய்போலக் குழந்தையையெடுத்துக் கொண்டு இடுப்பில் வைத்து, அன்பால் இன்புற்றெழுந்தருளி, திருவுத்தர கோசைமங்கைக் கெழுந்தருளிய, பரமுத்தி வரையாது அடியார்க்கருளுஞ் சிவன், என்னறிவில் வீற்றிருப்பதான இன்பப் புகழைச் சொல்லி, சிவார்ச்சனை செய்ய மலர் கொய்வோம் வாருங்கள் ஞானத்தாயரே!—என அருளியதைக் காண்க. (19)

மாவார வேறி மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலந் திகழப் பெருந்துறையான்
கோவாகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்டருளும்
பூவார் கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ.

இஃது இவ்வேட்டிலில்லை.

திருச்சிற்றம்பலம்

---

293. இவ்வுலகிற் பிள்ளையுமாம் என்பதற்கு 'விருத்தகுமாரபால சரித்திரத்தைப் பிறர் காட்டுவர்.

அத்தி - யானை. புத்தி - என் அறிவு.

இதன்பின் பின்வரும்பாடல் சில அச்சுப் புத்தகங்களிற் காணப்படுகிறது.

14. திருவுந்தியார்

இனி, திருவுந்தியாராவீன :—

இவைக்கு அகத்தியச் சூத்திரம்.

ஊன மொழிக்கு முயர் திருவுந்தியார்
ஞான வெற்றி யெனந வின்றனரே.

பொழிப்புரை:—முற்பதிகத்தில் அருளிய சிவார்ச்சனையான் வந்த சிவானந்தம் மேலீட்டால் அங்கங்களிற் பாவ, சின்னம் வெளிப்பட, அதன் முறைமையை விளங்கச் சொல்லுமிடத்துப் பரமசிவன் சுத்த பஞ்சகிர்த்தியப் பெருக்கால் வெற்றி பெற்ற சிவானந்த யோக விளை வைத் திருவருண் மொழியாகத் திரும்பத் திரும்பப் புதிது புதி தாகவே சொல்லிச் சொல்லிப் பெருங்கருணையை இன்பாதீதமாக விளையாடின விளையாட்டைத் திருவருளநுபவமாகக் காண்க.

இப்பதிகப்பாக் **கலித்தாழிசையாகத் திருந்நில்லையிலோதிய** தெனக் காண்க.

294. இனி, திரிபுர மும்மல தகலஞ் செய்த (தி. - ன.) :—

வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீபற
ஒருங்குடன் வெந்தவா றுந்தீபற.

வளைந்தது.....உந்தீபற :—

(இ - ள்). ஞானப்பெண்ணே! கேள்! நமது பரமசிவன் எல்லாத் தேவர்களும் திருவருட் பணியாக அடிமையேயென நிற்ப,

---

திருவுந்தியார்க்குத் திருவாசக உள்ளக்கிடை :—ஞானவெற்றி : எ - து. அருட்சத்தியினுடைய சாமர்த்தியம்.

"அரன்சீர், பாவமுறு தீமையறப் பாடறிருவுந்தியதே" என்பது திருவாசகச் சிறப்பு. (பழைய புராணம்).

அடிகள் தில்லையில் மகளிர் உந்திபறத்தலாகிய ஆடலைச் செய்து கொண்டிருப்பதைக்கண்டு, அவ்வாடலுக்குரிய பாடலாக இத்திருவுந்தி யாரை இயற்றி அவர்களுக்குதவினர் என்பது திருவாதவூரர் புராணம்.

சுவாமி திருக்கை வில் வளைந்ததே ; விளைந்ததே பேரொலி ; உடனே முக்கோட்டையிலுள்ளோரின் பேரொலியும்கூடிப் பெரிய சத்தமாயிற்றே ! அவை கண்டு உந்தி பற ! அடி ! ஞானப்பெண்ணே !

ஒருங்குடன்.....உந்தீபற :—

(இ . ள்). கேளடி ! ஞானத்தாயே ! நமது பரமசிவன் திருநேரக்கமானவுடன், திருமுறுவல் திருவருளால் அடங்கலு மெரியக் கண்டோமடி ! எவ்வாறெனின், இடை பிங்கலை வளைய, சுழிமுனை மார்க்க சிவயோக வீதியிற் சமாதி கூடி, மும்மலம் எரிய, சிவயோக ஆனந்த வமிர்தம் பெருகிற்று, எனக் காண்க. (1)

295. இனி, உலகத்தார்போல ஓர் ஆயுதமின்றித் திரிபுரம் எரித்த (தி. - ன.) :—

ஈரம்பு கண்டிலோ மேகம்பர் தங்கையில்
ஓரம்பே மூப்புரம் உந்தீபற !
ஒன்றும் பெருமை யுந்தீபற !

ஈரம்பு.....உந்தீபற :—

(இ - ள்). ஞானப்பெண்ணே ! கேளடி ! நமது உயிர் வியாபக ஏகாம்பரநாதர் திருக்கையில் அழகு பொருந்திய அம்பைக் கண்டிலோமே ! ஓர் கணையால் மூப்புரம் எரிந்த அதிசயத்தைக் கண்டு, உந்தி பறப்பாயடி ! ஞானப்பெண்ணே !

ஒன்றும்.....யுந்தீபற :—

(இ - ள்). கேளடி ஞானத்தாயே ! பெரிய துன்பமுற்றார்கள், அடி ! திரிபுரத்தார் ; ஆனதால், அவை சொல்லி உந்தி பறப்போமடி, தாயே ! (2)

---

294. வில் - மேருவாகிய வில். பூசல் - பேரொலி. உளைந்தன - வருத்தின ; ஒலி செய்தன என்று பொருள் கூறுகிறார். திரிபுரம் வேதல் என்பதற்குத் தத்துவப் பொருள் கூறுகின்றார்.

295. ஈரம்பு என்றதற்கு, அழகு பொருந்திய அம்பு என்று பொருள் கூறுகின்றார் ; உள்ளது ஓர் அம்பே ! இரண்டு அம்புகள் இல்லை என்பது வெளிப்படையான உரை. ஓரம்பே, மூப்புரம் என்பதற்கு, புரங்கள் மூன்றுக, கொண்டது ஓரம்பே என்று பொருள் கொள்க. பெருமை ஒன்றும் என்றும் மாற்றுக. 'பெருமை என்பது அச்சுப்புத்தகங்களில் பெருமிகை என்று காணப்படுகிறது. அவ்வொன்றுமே வேண்டப்படாதது எஞ்பது அதன் பொருள்.

296. இனி, சருவசங்க நிவிர்த்தியிற் றிருவடி ஞானம் உதித்தது என்ற (தி. - ன.) :—

தச்சு விடுத்தலுந் தாமடி யிட்டலும்
அச்சு முறிந்ததென் றுந்தீபற
அழிந்தன முப்புரம் உந்தீபற.

தச்சு.....றுந்தீபற :—

(இ - ள்). ஞானப்பெண்ணே ! கேண்மோ ! நமது பரமசிவனெழுந்தருள, எல்லாத் தத்துவங்களும், அவற்றின் கர்த்தாக்களும் விதிப்படி பணிமுற்றி நிற்ப, அவ்வோய்விலே நாதன் திருவடிசூட, உடனே ஆணவ மல அச்சு முறிந்ததைக் கண்டு, உந்தி பறந்து விளையாடுவோமே ஞானத்தாயே !

அழிந்தன.....உந்தீபற :—

(இ - ள்). தாயான ஞானச்செவிலியே ! திரிபுரர்கள் கோட்டை யழிந்ததே அதிசயம் என உந்தி விளையாடுவீர்கள் என வருளியதை காண்க. (3)

297. இனி, திருவடி மறவாத் திரிபுரர்களுக்கு அருட்பணி யருள்வதான (தி. - ன.) : —

உய்யவல் லாரொரு மூவரைக் காவல்கொண்
டெய்யவல் லானுக்கே உந்தீபற
இளமுலை பொங்கிநின் றுந்தீபற.

உய்யவல்.....உந்தீபற :—

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! நமது பரம் சிவன் வல்லமையை வினவில், முக்கோட்டையும் அவற்றிலுள் ளாரையும் நிக்கிரகஞ் செய்யும்போது, அக்கோட்டைக் கதிபரான மூவரையும் அனுக்கிரகித்த சத்தியைக் கண்டு உந்தி பறமின்கள் !

---

296. உந்தி விளையாடுபவர்களே ஓரிடத்தில் ஒருமையிலும் பிறி தோரிடத்தில் பன்மையிலும் உரையாசிரியர் அமைக்கின்றார். நூலின் பல் வேறிடங்களிலும் இவ்வாறே ஒருமை பன்மை மயக்கங்கள் திதறிக் கிடக்கின்றன.

தச்சு - தச்சுத்தொழிலமைந்த தேரின் பகுதிகள். அடியிட்டல் - அடிவைத்தல். தேரின்மீது சிவபிரான் ஏற அது கலகலத்தது என்க.

இள.....பற :—

(இ - ள்). ஞானவந்தி பறந்து விளையாடும்போது, உங்க ளுடைய தருண வின்ப கொங்கை யசையாமலசைந்து ஆனந்த விளை யாடற் செய்வீர்கள், ஞானப்பெண்களே ! என அருளியதைக் காண்க. (4)

298. இனி, சங்கார கர்த்தாவே முதலாளி யென்ற (தி - ன.) :

சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடிய வாபாடி உந்தீபற
உருத்திர நாதனுக் குந்தீபற.

சாடிய.....பற :—

(இ - ள்). ஞானப்பெண்ணே ! கேள் ! நம்து பரமசிவனே முதல்வன் ; எவ்வகை யென்னில், அகோர வீரபத்திர சுவாமியாக எழுந்தருளி தக்கன் யாகத்தைத் தகர்த்து அவ்விடத்திலிருந்த எல்லாத் தேவர்களும் ஆக்கினைப்பட்டு ஓடுந்தேவர்கள் முதல்வ ராவார்களோ ? ஞானப்பெண்ணே !

உருத்.....பற :—

(இ - ள்). ஞானத்தாயே ! கேள் ; சகல தேவரும் நமக்கரிக் கைக்குத் தேவனுயுள்ள ருத்திரனே முதல்வனென, உந்தி யெழுந்து பறந்து விளையாடுவீர்கள் ! என அருளியதைக் காண்க. (5)

299. இனி, வீரபத்திரமூர்த்தன் சந்நிதியில் திருமால் சாவப் பயந்தோடின (தி. - ன.) :—

ஆவா திருமா லவிப்பாகங் கொண்டன்று
சாவா திருந்தானென் றுந்தீபற
சதுமுகன் தாதையென் றுந்தீபற.

---

297. 1. 'இளமூலை பங்கனென்றுந்தீபற' என்பது பிற அச்சுப் புத்தகங்களிற் காணும் பாடம்.

உய்ய வல்லார் - பிழைக்க வல்லவர். காவல்கொண்டு - இரகசித்து. எய்ய - அம்பெய்ய.

298. சாடிய - முறித்த. வேள்வி - தக்கன் இயற்றிய வேள்வி. சரிந்திட - அழிய.

ஆவா.....பற :—

(இ - ள்). ஞானப்பெண்ணே! ஓரற்புதம்; மிகுந்த அதிசயங் கேள்! தக்கன், தலைவனை நமது பரமசிவனே இகழ்ந்து, யாகஞ் செய, அதில் அவியுண்ணப்போன திருமால் வீரபத்திரசுவாமி எழுந்தருளியவுடன், எவ்வகையோ சங்கியில் அகப்படாமற் பிழைத்தோடிப் போனார்; அடி! தாயே!

சது.....பற :—

(இ - ள்). அவ்வகையாக ஓடிப்போன திருமால் வலிமை விஞ்சில், நாலுமுகமுடைய பிரமதேவனுக்குத் தகப்பனடி; இருவர் இவ்வகையானால், மற்றவர்கள் எவ்வகையோ? அவை சொல்லி உந்தி விளையாடுவோம்! ஞானப்பெண்களே! என அருளியதைக் காண்க. (6)

300. இனி, அக்கினி பகவனை ஆக்கினை செய்த (தி. - ன.) :—

வெய்யவ னங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் [1]தடிந்தானென் றுந்தீபற.
கலங்கிற்று வேள்வியென் றுந்தீபற.

வெய்யவ.....பற :—

(இ - ள்). ஞானப்பெண்ணே! கேள்! நமது பரமசிவனை யிகழ்ந்து சிவத்துரோகத் தக்கன் செய்யும் வேள்வியிலே அக்கினி பகவான், தான் புசிக்க, கையால் அவியைத் திரட்டினதால், அக் கையை வீரபத்திரக்கடவுள் வெட்டியதால், அந்த அக்கினிக்குச் செயலில்லாமற் போயிற்று.

கலங்.....பற :—

(இ - ள்). சிவத்துரோகி செய்த வேள்வியும் அவற்றிலுள் ளாரும் துன்பமுற்றழிந்த ஆனந்தத்தைச் சொல்லி உந்தி பறந்து விளையாடுவோம் அடி! என அருளியதைக் காண்க. (7)

---

299. ஆவா - வியப்பு. அவிர்ப்பாகம், அவிப்பாகமாயிற்று. அன்று - தக்கயாகத்தில் வீரபத்திரர் தோன்றிய அன்று. சதுர்முகன் - பிரமன்.

பி - ம். 1. தறித்தான்.

300. வெய்யவன் - அங்கி; தீக்கடவுள். கொடியவன் எனினும் ஆம். விழுங்க - அவியை உண்ண. தடிந்தான் - வெட்டினான். வேள்வி, அங்கு உள்ளாரையும் குறித்தது.

301. இனி, சத்தியுஞ் சிவமும் ஒன்று என்ற (தி. - னை.) :—

பார்ப்பதி யைப்பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பதென் னேயடி உந்தீபற
பணைமுலை பாகனுக் குந்தீபற !

பார்ப்பதி.....பற :—

(இ - ள்). ஞானப்பெண்ணே ! கேள் ! நமது பரமசிவத்தைப பிரியாத குணகுணி பாவமாகிய பராபர பராசத்தி சொரூப பார்ப் பதியைக் கருணையென உட்கொள்ளாத சிவத்துரோகியான தக்கனைத் திரும்பப் பார்ப்பது கண் கொண்டு நீதியோவடி ! என்று உந்தி பற !

பணை.....பற :—

(இ - ள்). கேளடி ! ஞானத்தாயே ! பேரின்பமே தனங்க ளாகக் கொண்ட அம்மையை வாமபாகம் வைத்தருளிய சுவாமியைத் தரிசித்து உந்தி பறந்து திருலீலை செய்வோமடி ! என வருளியதைக் காண்க. (8)

302. இனி, யிந்திரன் குயிலாசி யொளித்த (தி. - னை.) :—

புரந்தர னொரு பூங்குயி லாகி
மரந்தனி லேறினர் உந்தீபற
வானவர் கோனென்ற உந்தீபற.

புரந்த.....பற :—

(இ - ள்). ஞானப்பெண்ணே ! கேள் ! சிவத்துரோகி செய் யும் யாகசாலையிலே நமது ஐய வீரபத்திரநாதன் எழுந்தருளிய திருக்கோலங் கண்ட இந்திரன் தன்னுயிர் பிழைப்பதரிதெனப் பட்சியான குயில் வடிவு கொண்டு விருட்சத்திலேறி ஒளித்தனடி.

வானவர்.....பற :—

(இ - ள்). அவ்விந்திரன் யார் என்னில், தேவர்கள் இராச னடி ; ஆனதால், மற்றத் தேவர்கள் எவ்வகையானர்கள் ? ஆனதால் ஐய வீரபத்திரநாதனே மகாதேவன் என உந்தி பறந்து விளை யாடற் செய்யுங்கள் என அருளியதைக் காண்க. (9)

---

301. பகைசாற்றிய - பகைத்துப்பேசிய. பணை - பருத்த.

302. புரந்தரனர் - இந்திரன். ஆர், இகழ்ச்சிக்குறிப்பு.

303. இனி, வேள்வி யழித்ததுபோல என்பிறவி யறுத்தலான (தி. - ன.) :—

வெஞ்சின வேள்வி வியாத்திர னர்தலை
துஞ்சின வாபாடி உந்தீபற
தொடர்ந்த பிறப்பற உந்தீபற.

வெஞ்.....பற :—

(இ - ள்). ஞானப்பெண்ணே! கேட்பாயாக! நமது பரம சிவனைப் பரப்பிரமமல்லவென, வேறே வஸ்து உண்டென, உட் கொண்டு கொடிய கோபத்தாற் செய்த வேள்வி நாயகன் தலையிழந்த வெற்றியைப்பாடி விளையாடற் செய்யுங்கள்.

தொடர்ந்த.....பற :—

(இ - ள்), ஞானத்தாயே! வேள்வித்தலைவன் அழிந்தது போலவே நம்மைத் தொடர்ந்த பிறவியும் அறவே சொல்லி, உந்தி பறந்து விளையாடற் செய்வோம்; அடி ஞானப்பெண்ணே! என அருளியதைக் காண்க. (10)

304. இனி, சிவத்துரோகியான தக பிரமாவிலொருவனை தக்கனுக்கு ஆட்டுத்தலை யளித்தமையைக் கூறும் (தி. - ன.) :—

ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி உந்தீபற!
கொங்கை குலுங்கநின் றுந்தீபற.!

ஆட்டின்.....பற :—

(இ - ள்). நமது பரமசிவன் திருவடியை உயிர்ப்பிரேரகப் பொருளன்று என்று நினைத்த சிவத்துரோகத் தக்கனை வீரபத்திர நாதனாக வெழுந்தருளி, அவன் தலையை வெட்டி மிருகமான ஆட்டின் தலையைச் சிரசாக அருளிய நிக்கிரக இன்பத்தைக் கண்டு, உந்தி விளையாடற் செய்வாய் அடி! ஞானப்பெண்ணே!

---

303. வேள்வி வியாத்திரன் - யாக நாயகன் என்றது உரை; யாக குரு என்றும் கூறுவர். துஞ்சுதல் - இறத்தல். வியாப்தர் என்பதற்கு வியாபித்தவர் என்பது பொருள்; வேள்வி வியாப்தர் என்பது வேள்வி வியாத்திரனர் என்றதனது போலும்.

கொங்கை.....பற :—

(இ - ள்). சிவானந்தத்தால் இன்பத்தனங் குலுங்கி அசையாமல் அசைந்து, உந்தி பறப்பாய், இவ்வதிசயங்கண்டு—என அருளியதைக் காண்க. (11)

305. இனி, பிறவாவண்ணமான (தி. - ன.) :—

உண்ணப் புகுந்த பகலொளித் தோடாமே
கண்ணைப் பறித்தவா றுந்தீபற
கருக்கெட நாமெல்லாம் உந்தீபற.

உண்ணப்.....பற :—

(இ - ள்). ஞானப்பெண்ணே! கேள்! நமது பரமசிவனைப் பரப்பிரமமல்ல னென்று, ஞானகாண்டந் தெரியாது, கருமகாண்டம் பொருளெனத் தக்கன் செய்த யாகசாலையில் அவியுண்ணவிருந்த பகலனை பன்னிரண்டிலொரு சூரியன் ஐய வீரபத்திர நாதனைக் கண்டவுடன் ஒளித்தோடாதே சந்நிதானப்பட்டபடியால், அவனது கண்ணைப் பிடுங்கிய அதிசயத்தைச் சொல்லி உந்தி விளையாடுக!

கருக்.....பற :—

(இ - ள்). திருவுந்தி விளையாடுதல் நிமித்தமெனில், ஞானப் பெண்ணே! நாமினி கருவிலுதியா வண்ணம்! என அருளியதைக் காண்க. (12)

306. இனி, கலைசத்தியள் முதலிய தேவர்களாக்கினப்பட்ட (தி. - ன.) :—

நாமகள் நாசி சிரம்பிர மன்படச்
சோமன் முகனெரித் துந்தீபற
தொல்லை வினைகெட உந்தீபற.

நாமகள்.....பற :—

(இ - ள்). கேளடி! ஞானப்பெண்ணே! ஞானத்துக்கு முதல் நமது பரமசிவனெனத் தெரியாமல், அபக்குவ தக்கன் யாக சாலையிற் சிவனை மறந்திருந்த காலம், வீரபத்திரசுவாமி எழுந்தருளி,

---

304. விதி, பிரமர்களுள் ஒருவனுதலால் விதி என்றார்.

305. பகன் - பன்னிரு சூரியருள் ஒருவன். ஒளித்து ஓடாமே. நின்றமையால் என்று ஒரு சொல் வருவிக்க. கரு - பிறவி.

சரசுவதி மூக்கையறுத்தும், பிரமன் தலையை வெட்டியும், சந்திரன் முகத்தைத் தேய்த்தும், நிக்கிரகஞ் செய்ததைச் சொல்லி, திருவிளை யாடலான உந்தி பற ! ஞானத்தாயே. அவை எதற்காக எனின்,

தொல்லை.....பற :—

(இ - ள்). ஞானப்பெண்ணே ! நமது பழவினை முழுதும் நாதன் அருளால் நீங்கி, அநுபூதிபெற, உந்தி பறந்து விளையாடு வோமடி ! என அருளியதைக் காண்க. (13)

307. இனி, இருடிகள நிக்கிரகஞ் செய்த (தி. - ன.) :—

நான்மறை யோனு மகத்திய மான்படப்
போம்வழி தேடுமா றுந்தீபற
புரந்தரன் வேள்வியில் உந்தீபற.

நான்.....பற :—

(இ - ள்). ஞானப்பெண்ணே ! கேள் ! நமது பரமசிவனைத் தேவரிலொருவனென நினைத்த மகாபாதகனன தக்கன் வேள்வி விச்சாலியிலிருந்த பிரமாவும் விட்டுணுவும் அகத்தியர் முதலிய சில விருடிகளும், வீரபத்திரசுவாமியைக் கண்டவுடன் ' இனிப் பிழைப்ப தில்லை ' யென்று தங்கள் பெருமைகுன்றி, எந்த வழியாக ஓடிப் போவோம் என துன்பமுற்றோடினதைக் கண்டு, உந்தி பறந்து விளை யாடுக ! ஞானப்பெண்ணே ! அவ்வேள்வியார் யாரெனின்,

புரந்..... பற :—

(இ - ள்). தானுங்கெட்டுத், தனையோரையுங் கெடுத்து, சிவத்துரோகியான, மயக்க தக்க, புரந்தரன் செய்த யாகமடி ! ஞானத்தாயே ! என் அருளியதைக் காண்க. (14)

---

306. நாமகள் - கலைமகள். பட - தலைவெட்டுப்பட. சோமன் - சந்திரன். கொரித்து - தேய்த்து. தொல்லை - பழமை.

307. இச்செய்யுளின் உரை ஆராயத்தக்கது. மகத்து இயமான் என்று பிரித்து ' யாகத்தில் எஜமானனாயிருந்த தக்கனென்றும், அகத்து இயமான் என்று பிரித்து ' உள்ளிருக்கும் உயிர் அழியவே ' என்றும், பிற வாறும் பிறர் பொருள் கூறுவர். இவ்வுரை அகத்திய மால்பட என்று கொண்டது போலும். புரந்தரன் வேள்வி என்றதற்கு புரந்தரன் செய்த வேள்வி என்று உரை கூறப்பட்டிருக்கிறது. சிவபிரானை அவமதித்துப் புரந்தரனைக் குறித்தும் செய்யப்பெற்ற வேள்வி என்று கொள்ளலாமோ என்று தோன்றுகிறது.

308. இனி, சூரியனே நிக்கிரகஞ் செய்தமையைக் கூறும் (தி. - ன.) :—

சூரியனுர் தொண்டை வாயினிற் பற்களே
வாரி நெரித்தவா றுந்தீபற
மயங்கிற்று வேள்வியென் றுந்தீபற.

சூரிய.....பற :—

(இ - ள்). ஞானப்பெண்ணே ! கேள் ! நமது பரமசிவனுண் டவனென்றும், மற்ற எல்லா வுயிர்களும் அடிமையென்றும், இப்படியே வேதாகம புராணச் சுருதி யென்றும், தெளிவில்லாத் தக்கன் யாகசாலையில் அவியுண்ணவிருந்த சூரியன தொண்டையை நெரித்து, அவன் வாயிலுள்ள பல்லே முழுதும் பிடுங்கிய வீரபத்திர நாதன் அடியைப் புகழ்ந்து உந்தி விளையாடுங்கள் ஏனென்னில்,

மயங்கிற்று.....பற :—

(இ - ள்). சிவத்துரோகி செய்த வேள்வி மயங்கிக் கெட்டுப் போனபடியரல், அடி ஞானப்பெண்ணே ! அவை சொல்லி விளையாடு வாய் ! என வருளியதைக் காண்க. (15)

309. இனி, சிவத்துரோகத் தக்கன் புத்திர மித்திர களத் திரத்துடனே அவனுமவ் வேள்வுயுமழிந்ததைக் கூறும் (தி. - ன.) :—

தக்கனு ரன்றே தலையிழந் தார்தக்கன்
மக்களேச் சூழகின் றுந்தீபற
மடிந்தது வேள்வியென் றுந்தீபற.

தக்கனு.....பற :—

(இ - ள்). ஞானப்பெண்ணே ! கேள் ! நமது பரமசிவனைச் சருவஞான வான்ம நாதனென்றும், பரப்பிரமமென்றும், தெரியாத சிவத்துரோகத்தால் நினைத்த பொழுதே வீரபத்திர மூர்த்தத்தால் சிரசு வெட்டப்பட்டதுமின்றி அவன் புத்திர குல கோத்திரர்களுடன் அழிந்து போனதைச் சொல்லி உந்தி விளையாடுவீர்கள் ; ஏனென் னில் ;

மடிந்தது.....பற :—

(இ - ள்). ஞானத்தாயே ! தக்கன் செய்த யாகஞ் சூனிய மானதால், அவை சொல்லி விளையாடுவீர்கள் என அருளியதைக் காண்க. (16)

310. இனி, புவன தேசிகனை உபமன்னியு பகவானை விருடிக்குத் திருப்பாலளித்ததைக் கூறும் (தி. - ன.) :—

பாலக னூர்க்கன் றுபாற்கட லீந்திட்ட
கோலச் சடையற்கே உந்தீபற
குமரன்றன் தாதைக்கே உந்தீபற.

பாலகனூர்.....உந்தீபற :—

(இ - ள்). ஞானப்பெண்ணே! கேண்மோ! நமது பரமசிவன் அனுக்கிரகம் வினவில் 'பாலுக்குப் பாலகன் அழுதிடப் பாற்கடலீந்த பிரானை' திருவருளழகு போன்ற சடையையுடைய நாதன், அடி! அவனது திருநாமம் வினவில்,

குமரன்றன்றூதைக்கேஉந்தீபற :—

(இ - ள்). சண்முக சரவண குமாரதேவனுடைய தகப்ப னென்றும் கடம்ப மாகாளா தாதை எனவும் சொல்லி விளையாடற் செய்வீர்களடி! உந்தி பறக்கும் பெண்களே! யென வருளியதைக் காண்க. (17)

311. இனி, படைப்புத்தொழில் பரமசிவனருளென அநுபூதி பெற அயன்றலை கொய்த (தி. - ன.) :—

நல்ல மலரின்மேல் நான்முக னூர்தலை
ஒல்லை யரிந்ததென் றுந்தீபற
உகிரா லரிந்ததென் றுந்தீபற.

நல்ல.....பற :—

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! நமது பரம சிவன் அகம்பிரமங் கொண்ட அழகிய மலராசனமுடைய பிரமனை, அன்று திருவடி மறந்த விரைவில், ஒரு சிரசை நிக்கிரகஞ் செய்த தைச் சொல்லி விளையாடுங்கள்—எனவே, எவ்வகை ஆயுதத்தா லென்னில்,

உகிரா.....பற :—

(இ - ள்). கேளடி! ஞானத்தாயே! ஓர்வகை ஆயுதமும் வலிமையுமின்றி, வடுகேச வபிரவ வடிவாகி நுனிநகத்தாற் கிள்ளிய அருளைச் சொல்லி, 'படைப்புடை யாயுன்றலையைப் படையாதொழிந்

---

310. பாலகன் - உபமன்யு. கோலம் - அழகு. குமரன் - முருகன்.

தாயே' யெனப்பாடி உந்தி விளையாடுவீர்கள்! பறப்பாகவே! என அருளியதைக் காண்க. (18)

312. இனி, இராவணனை நிக்கிரகஞ் செய்த (தி. - ன.) :—

தேரை நிறுத்தி மலையெடுத் தான்சிரம்
ஈரைந்து மிற்றவா றுந்தீபற
இருபது மிற்றதென் றுந்தீபற.

தேரை.....பற :—

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! இராவணன் தனது அகத்தாலே, தானேறிய தேரின் மேலே, நமது பரமசிவன் உபாங்கவெள்ளியங்கிரியை, வேருடன் பிடுங்கித் தேரில் வைத்துத் தான் நினைத்த விடத்துக்குப் போவதாக எண்ணிப் பிடுங்க, கை வைத்தவுடன் நாதன் திருவடி விரலால் அவன் தலை பத்தும் அழுந்திய விடமெவ்விடமோ, அவன் சிவத்துரோகியானதைச் சொல்லி, விளையாடுக ஞானத்தாயே, அவன் சிரசு மாத்திரமல்ல, அடி!

இருபது.....பற :—

(இ - ள்). திருமலையைத் தொட்ட விருபது கையும் அதமாய்ப் போயினவடி! அவை சொல்லி விளையாடுக! என அருளியதைக் காண்க. (19)

பின்வரும் செய்யுள் சில அச்சுப்பிரதிகளில் காணப்படுகின்றது.

ஏகாச மிட்ட விருடிகள் போகாமல்
ஆகாசங் காவலென் றுந்தீபற.
அதற்கப்பா லுங் காவலென் றுந்தீபற.

இஃது உரையிலில்லை.

திருச்சிற்றம்பலம்

---

311. ஒல்லை - விரைவில். உகிர் - நகம்.

312. மலையெடுத்தான் - இராவணன். ஈரைந்து - இருபது கைகள்.

15. திருத்தோணேக்கம்

இனி திருத்தோணேக்கமாவன :—

அகத்தியச் சூத்திரம்.

பிரபஞ்ச சுத்தி

இப்பதிகப் பொழிப்பநுபூதி யுரையாவன :—

முற்பதிக ஞான வெற்றி பாடின அநுபவ நிட்டாபரராள் இவ் வகையான சிவானந்தப் பேறு பெறத் தேகப்பேறு கிடைத்ததே என்று மகிழ்ந்து, தேகத்தை நோக்கிக் கொண்டாடி, எளிதாய்ப் பசுகரணமெல்லாஞ் சிவகரணமாக்கி, வேறறத் தோன்றி, பேரின்பமே தானுய் நின்ற முறைமை யெல்லாம் பெருங்கருணையினுலேயே என்று கண்டு அதனைச் சொல்லுகின்ற தெனக் காண்க.

இத்திருப்பாக் **கலி விருத்தம்.**

திருத்தில்லையி லோதினது.

திருத்தோணேக்கத்தின் திருவாசக உள்ளக்கிடை : பிரபஞ்ச சுத்தி எ - து ஆன்மாக்களைச் சுத்திகரித்தல்.

இப்பகுதிக்குரிய திருவாசகச் சிறப்பு :—

சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே புண்ணியமா
அத்தன் செயுங்கருணைக் காராமை யுண்மிகுந்து
பொத்தியகை கொட்டிப்புகழ்தோணேக்கம்.

(பழையபுராணம்).

தோணேக்கம் என்பதற்குத் 'தோள்கொட்டி யாடுவோம்' என்று இவ்வுரை பொருள் கூறுகிறது. இச்சொல் தோள்நோக்கு என்றதனுடன் 'அம்' சாரியை பெற்று வந்தாகும் என்றும், நோக்கு என்ற விநோதக் கூத்தே தோள் நோக்காகு மென்றும், தோள்நோக்கு, தோள்வீச்சு என்னும் இரண்டும் ஒன்றையே குறிக்குமென்றும், தோள் என்பது கையையும் குறிக்குமாதலால், பெண்கள் கைகளை வீசி ஆடும் ஒரு வகையாடலே தோள்நோக்கமாகு மென்றும் சிலர் கூறுவர். இது தமிழகத்துப் பெண் டிர் ஆடல் வகையுளொன்று என்பது திருவாதவூரர் புராணத்தால் அறியப்படுகிறது. வெற்றியையோ, ஆநந்தத்தையோ பொருளாகக் கொண்டு இஃது ஆடப்படுவதாகத் தோன்றுகிறது.

இது தரவுக்கொச்சக்கலிப்பா என்னும் அச்சுநூல்கள்,

313. இனி, திருவம்பலத்திலே நிருத்தஞ் செய்த குஞ்சித பாதத்திற்கூட வேண்டுமெனக் கூறும் (தி. - ன.) :—

பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுண மாகாமே
தீர்த்தாய் திகழ்தில்லை யம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தாவுன் சேவடி கூடும்வண்ணம் தோணேக்கம்.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! கானலைத் தாமரைப் பொய்கையென நாடி, அலையும் அறிவிலாதவனைப் போல, இத் தேகாதிப் பிரபஞ்சம் மெய்யெனக்கருதி அலைறுது, தேச முதலாகிய தீர்த்தம் விளங்குந் தில்லை மன்றுள்திரு நடனஞ்செய், நடராசா ! உனது குஞ்சிதபாதத்தில் அன்பு அபேதவத்து விதமாக வைப்பதே பரமுத்தியெனத் திருத்தோள் கொட்டி யாடுவோம் ! வாருங்கள் ! ஞானப்பெண்களே ! என வருளியதைக் காண்க. (1)

314. இனி, சாட்குணியப் பெருங்கருணையின் (தி. - ன.) :—

என்றும் பிறந்திறந் தாழாமே யாண்டுகொண்டான்
கன்றூல் விளவெறிந் தான்பிரமன் காண்பரிய
குன்றூத சீர்த்தில்லை அம்பலவன் குணம்பரவித்
துன்றூர் குழலினீர் தோணேக்கம் ஆடாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! திருமால் கிஷ்ணவதாரத்தில் விளாவிருட்சமாய் நின்ற இராக்கதனைக் கன்றுலெறிந்து சங்கரித்த நாராயணனும், பிரமதேவனும் காணுதற்கரிய பரமசிவன் இனிப் பிறவாவண்ணம் நம்மை அடிமைப் பணிகொண்ட, ஓர் காலமுங் குறைவில்லாத சருவ பரிபூரண சாட்குணிய சிவஞானச் சிறப்புளதாகிய திருச்சிற்றம்பலசுவாமி, நாதன், திருவடியை வணங்கித் திருத்தோள் கொட்டி விளையாடுவோம் ; ஞானப்பெண்களே ! என அருளியதைக் காண்க. (2)

---

313. பூத்து ஆரும் - பலமலர்களைப் பூத்து நிரம்பியிருக்கிற. பேய்த் தேர் - கானல். முகக்குறும் - முகத்தலுறும். தீர்த்தாய், என்பதை வினையாகக் கொள்வர் பிறர். தீர்த்தம் விளங்கும் என்று இவர் பொருள் உரைப்பர். பூத்தாரும் பொய்கை திருவடியும், பேய்த்தேர் பிரபஞ்சமும் எனக்கொள்க.

314. ஆழாமே - அழுந்தாமல். விளவெறிந்தான் - கண்ணன். துன்று ஆர் குழல் - நெருக்கம் பொருந்திய கூந்தல்.

315. இனி, கண்ணப்பர் அன்பைக் காளத்தியார் கொண்டதைக் கூறும் (தி. - ன.) :—

பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலச மூனமுதம்
விருப்புற்று வேடனர் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! வேதாகம விதிப்படி மந்திர கிரியா பாவனை வழுவாது மெய்யன்புடன் பூசை செய்யுஞ் சிவகோசரியார் அடிகள்பால் விளங்கிய ஞானபூசைக்குச்சமம் வினவில், திருக்காளத்தி நாயனர் திருமுடியிலே கண்ணப்பநாயனர் செருப்புத் தரித்த திருவருட் சீரடி பட பழைய நின்மாலிய மாற்றி, திருவாயே அபிஷேக கலசமாக அபிஷேகஞ் செய்து, மாமிசமே அமுதாகத் திருப்போனகஞ் செய்வதாக, நாதன் திருமேனியில் அபேதவத்து வித சித்தாந்த வடிமை யின்பே யின்பமான கண்ணப்பநாயனர் தம தெச்சிலூட்டத் திருமேனி குளிர்ந்து திருவருள் காட்டி நின்ற கருணையைப்பாடி திருத்தோள் கொட்டி விளையாடுவீர் ஞானப்பெண்களே ! என அருளியதைக் காண்க. (3)

316. இனி, திருக்காளத்தி நாதனர் சந்நிதியினின்ற கண்ணப்ப நாயனரைப் போலத் தன்னையும் அடிமை கொள்ளத் தகாத கல் நெஞ்சை யுருக வாண்டமையைக் கூறும் (தி. - ன.) :—

கற்போலு நெஞ்சங் கசிந்துருகக் கருணையினல்
நிற்பானைப் போலவென் னெஞ்சினுள்ளே புகுந்தருளி
நற்பாற் படுத்தென்னை நாடறியத் தானிங்ஙன்
சொற்பால தானவா தோணோக்கம் ஆடாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! திருவேடர் குலத்திண்ணனர் கருத்து அன்பே இன்பாய் உருக, அன்பே பிழம்புருவாய்த் திருக்காளத்தி சுவாமி சந்நிதியில் இரண்டற நிற்பதாக அருளின பெருங்கருணையாளன், ஒன்றுக்கும் பற்றுத என்னையும்

---

315. சமம் வினவில் என்று கூறி, முடிவு காட்டவில்லை.

பொருள் பற்றச் செய்கின்ற பூசனை என்பதற்குக் காட்டிய உரையின் நயம் போற்றத் தக்கது. பொருள்பற்றிச் செய்தலும் விருப்புற்றுச் செய்தலும் ஒன்றுயினமை கூறப்பட்டது. சேடு - பெருமை; சேடு, எச்சில் என்று பொருள் கூறப்பட்டது.

அடிமையென உலகத்தார் காண, திருவருண் ஞான வடிவமாக என்னுயிரில் இன்பாய் நின்று, இம்மையிலே நான் பரமுத்திபெற்றவ னென்ற ஓர் மொழி அருள்வதான சிவானந்தப் பெருக்கைச் சொல்லித் திருத்தோள் கொட்டி ஆடுவோம்! ஞானப்பெண்களே! என அருளியதைக் காண்க. (4)

317. இனி, அட்டமூர்த்தமானமையைக் கூறும் (தி. - ன.) : —

நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனுய மைந்தனே டெண்வகையாய்ப் புணர்ந்துநின்ரூன்
உலகே ழெனத்திசைபத் தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணேக்கம் ஆடாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! பிருதிவிமுதற் பஞ்சபூதப் பிரேரகப் பொருளாயும், புறச்சோதியான சூரிய சந்திரர்க்கு உட்சோதிப் பிரேரக வொளியாயும், இவையாற் கிருத்தியப் படும் ஆன்மாவினிடத்துச் சிற்சத்திப் பிரேரகனையும், இவ்வகை அட்டமூர்த்த சச்சிதானந்த அத்துவிதமாக நின்றதுமன்றி, எழு வகை யுலகங்களையும், பூமி அந்தர, அட்டதிக்குப் பத்தாகிய வெல்லா ஆறத்துவாவும் திருமேனியாகக் கொண்டெழுந்தருளிய அபேத வத்துவித, ஏகபாவ, சொரூப, சிவனே முன்னருளிய அநேக வடிவு கொண்டெழுந்தருளிய நாதன்; எனச் சொல்லித் திருப்புசங் கொட்டி விளையாடுவீர்கள்; என அருளியதைக் காண்க. (5)

318. இனி, சைவ சமயமன்றி மற்றுள்ள சமயம் புல்லறி வென்று கூறும் (தி. - ன.) : —

புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்
தத்த மதங்களிற் றட்டுளுப்புப் பட்டுகிற்கச்
சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணையினல் தோணேக்கம் ஆடாமோ.

---

316. நிற்பான் - கண்ணப்பன் என்பது இவ்வுரை. நற்பால் - நல்ல பகுதி சொற்பாலது ஆன ஆ - சொல்லின்பால் பட்டதான விதம்.

317. உயிர் - காற்று. புலன் ஆய மைந்தன் - ஆன்மா. திசை பத்து - பூமி அந்தரம், எட்டுத்திசைகள் இவை கூடிய எண்.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! சில சிவ கோடி கள் நில்லாதவற்றை நிலையெனவும், தேக இந்திரிய அந்தக்கரணங் களே பொருளெனவும் கொண்ட புல்லறிவினர்கள் ; தத்தம் மதங் களே அநுபூதியெனக் கொண்ட காலம், சித்தந் தெளிவில்லாது துன்பமான தீராத சம்சயமுற்று, தெய்வ நிச்சயமின்றி, அனேக சமயங்களிற் புலப்படுவோர் நிற்க ; அவ்வகையுந் தெரியாத என்னைச் 'சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை ; சிந்தையின் கீழே எந்தை திருவடி ; திருவடிக்கீழதுவென் சிந்தை, சிந்தை தெளியச் சிவனவனுமே' யென என்னை யருளாக்கி, யான் செய்யுமிராகத்து வேஷ புண்ணிய பாவக் கிரியா வாசனைத் தொழிலெலாந் திருவடித் தவமாகச் செய்யும் எனதான்ம நாதனுடைய பெருங்கருணையைச் சொல்லித் திருத்தோள் கொட்டி விளையாடுவீர்கள் ; ஞானப்பெண் களே ! என வருளியதைக் காண்க. (6)

319. இனி, சண்டேசுபர நாயனுக்கருள்வதான (தி. - ன.) :—

தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் மூதைதனைத் தாளிரண்டும்
சேதிப்ப ஈசன் திருவருளாற் றேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! நமது பரமசிவன் குற்றமற்ற சிவஞான வன்புடையனுய்ச் செய்த பணியை, பிரமகுல எச் சதத்தனுர் தமது ஞான புத்திரனுகிய விசார சருமனுர் செய்த திரு வருள் நாடக அலங்கார அன்புடனை இன்ப பூசையெனத் தெரி யாது, விளையாடலெனக் கருதித் திருமேனியில் அபிஷேகங் கொண் டருள்வதான திருப்பாற் குடத்தைக் காலால் கவிழ வுதைத்ததைத் திருக்கண்ணுற் கண்டவுடன், 'பிரமகுலகுரு, தந்தை,' எனக் கரு தாது, 'சிவபூசையே மேலான தவம் ; அத்தவத்துக்கு உபகரணப் படுவதே யாதொரு பழியுமற்றது ; அப்பூசைக்கு விலகின உயிர் முத லாகிய பதார்த்தம் அவமே'; எனச் சிவத்துரோகக் காலைத் துணித்த பாவத்தைச் சிவ புண்ணியமாக்கி, எத்தேவரும் பூசிக்கத் திருவரு ணேக்கிய கருணையைச் சொல்லி, பாலன் செய்த பாவமும் அறமதாகி,

---

318. தட்டுளுப்புப்பட்டு - தடுமாறி. சித்தம் என்றதை புத்தன் முதலாயினவரின் சித்தம் எனக் கொண்டு பொருள் உரைப்பாரும் உளர்.

தக்கன் செய்த மாவேள்வி பாவமான அநுபவங் கொண்டு, திருத்தோள் கொட்டி விளையாடுவீர்! ஞானப்பெண்களே! என வருளியதைக் காண்க. (7)

320. இனி, திருவடியிற் றலைப்படுதலான (தி. - ன.) :—

மான மழிந்தோம் மதிமறந்தோம் மங்கைகல்லீர்
வானந் தொழுந்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
ஆனந்தக் கூத்த னருள்பெறில்நா மவ்வணமே
ஆனந்த மாகின்ன் றூடாமோ தோணேக்கம்.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! 'முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள் அவனுக்கே பிச்சியாஞள்' என்றபடி ஆனேமே! மானமும் மதியும் இழந்தோமே! விண்ணோர் வணங்குந் தென்பாண்டிய இராசன் திருவடியே நினைத்து, அடியோங்கள் பேரானந்தக் கூத்துடைய நாதன், குஞ்சிதபாத இன்பவண்ணம் நாம் பெறும்படி சிவானந்த நிட்டைகூடி, திருத்தோள் கொட்டி விளையாடுவோம் ஞானப்பெண்களே! என வருளியதைக் காண்க. (8)

321. இனி, ஈறிலாத கடவுள் சிவனே யென்ற (தி. - ன.) :—

எண்ணுடைய மூவ ரிராக்கதர்க ளெரிபிழைத்துக்
கண்ணுத லெங்தை கடைத்தலைமு னின்றதற்பின்
எண்ணிலி யிந்திர ரெத்தனையோ பிரமர்களும்
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் தோணேக்கம்.

(இ - ள்). ஞானப்பெண்களே! நமது பரமசிவன் திருவுளக் கருணைக்குப் பாத்திரரான திரிபுரர்கள் அக்கினி வேதைக்கு மற்றவர் களைப் போல அகப்படாது, திருநெற்றியிலே ஞானக்கண் அணிபவரான திருக்கயிலையாளியின் திருக்கோபுர வாயிலில் திருவுளப்பணி நியமம் அருளிய காலத்துக்குப்பின் [1] நூறு கோடி பிரமர்கள் நுங்கி

---

319. மாணி - பிரமசாரி. தீதில்லை என்றதை மாணி யோரடு கூட்டுக. தீதுஇல் ஐ எனப் பிரித்துத் தீதில்லாத தலைவன் என்றும் பொருள் கூறுவர். எச்சதத்தன் விசாரசருமனுரின் தந்தை. எத்தேவரும் பூசிக்கத் திருவருள் நோக்கிய கருணை, தந்தைக்குப் பாதகம் செய்த விசாரசருமனுரைச் சண்டேசராக்கியது.

320. மானம் - பெருமையும் ஆம்.

1. திருநாவுக் ; தேவா ; 5 : 214 : 3.

னர் ; ஆறு கோடி நாராயணரங்குனே ! ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர், ஈறிலாத நம்மீசனெருவனே !" யென்ற அநுபூதியால், மண்மிசை யிறந்த தேவர்களின் அநித்தியத்தையும் நாதனுடைய நித்திய சுகத்தையும் சொல்லி, விளையாடுவோம் ; ஞானப்பெண் களே ! என அருளியதைக் காண்க. (9)

322. இனி, திருமால் சிவபூசை செய்ததைக் கூறும் (தி. - ன.) :—

பங்கய மாயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்கண் இடந்தரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கர னெம்பிரான் சக்கரமாற் கருளியவா
றெங்கும் பரவிநாம் தோணோக்கம் ஆடாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! திருமாலானவர் நமது பரமசிவனே வேதாகம விதிப்படி சிவபூசை நியமமாக, நித்தியம் ஆயிரந்தாமரை மலரால் அர்ச்சிக்க, ஒருநாள் ஒரு பூக்குறைந்தது கண்டு, தமது கண்ணைப் பிடுங்கி மலராகத் திருவீழிமிழலை நாதன் திருவடியிற் பூசித்தது திருவுளமறிந்து, அவர் வேண்டிய சக்கரம் அருளிய கருணையைத் துதித்துத் திருப்புசங் கொட்டி விளையாடு வோம் ; ஞானப்பெண்களே ! என வருளியதைக் காண்க. (10)

323. இனி, சிவத்துரோகமாகத் திருவடி மறந்த மகா பாதகந் தீர்வதாக நிக்கிரகஞ் செய்ததைக் கூறும் (தி. - ன.) :—

காம னுடலுயிர் காலன்பற் காய்கதிரோன்
நாமகள் நாசிசிரம் பிரமன் கரமெரியைச்
சோமன் கலைதலை தக்கனையும் எச்சனையும்
தூய்மைகள் செய்தவா தோணோக்கம் ஆடாமோ.

---

321. எண்ணுடை - கருதத்தக்க ; எண்ணிக்கையுடைய எனலும் ஆம். கருணைக்குரிய என்று உரை கூறுகிறது. மூவர் இராக்கதர், தார காக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி என்பார். இவர்கள் சிவபெருமான் திருக்கருணையால் சிவபெருமான் திருக்கோயில் துவாரபாலகர் ஆயினர் என்பது வரலாறு. கடைத்தலை - வாயில். மால் - திருமால்.

322. பங்கயம் - தாமரை. இடந்து - பெயர்த்து. எங்கும் பரவி நாம் தோணோக்கம் ஆடாமோ என்றதால் இவ்வாடலின் தன்மை கூறப் பெற்றது.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! நமது பரமசிவன் திருவடி மறந்து சிவத்துரோக தக்கன் செய்யும் அவியுண்ணப்போன தேவர்களே மாரகங்கொண்டும், காமதகனம் திருநோக்கால் செய்தும், எமனைத் திருவடி யாலுயிர்போக உதைத்தும், சூரியனைப் பல் பிடுங்கியும், கலிவாணி மூக்கையும், அயன் றலையையும், அக்கினிதேவன் கையையுஞ், சந்திரன் கலையையுங், தக்கனைச்சன் சிரசையும் ஆக்கினை செய்தும், பின்பு அவர்கள் திருவடி ஞானபக்குவம் வந்து மகாதேவனே ஆன்மநாயகனென பிரஞ்ஞை கொள்ள அனுக்கிரகஞ் செய்த திருவருளைப் பரவி, திருப்புசங்கொட்டி விளையாடுவீர்கள் ; ஞானப்பெண்களே ! என வருளியதைக் காண்க. (11)

324. இனி, லிங்கோற்பவ மூர்த்தமானதைக் கூறும் (தி. - ன.) :—

பிரம னரியென் றிருவருந்தம் பேதைமையாற்
பரம மியாம்பரம் மென்றவர்கள் பதைப்பொடுங்க
அரண ரழலுருவ யங்கே யளவிறந்து
பரமாகி நின்றவா தோணேக்கம் ஆடாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! மகாவிட்டுணுவும் பிரமதேவனும் இருவரும் சிவஞான உண்மையாகிய திருவடியே எல்லாத் தேவர்கட்கும் உயிர்ப் பிரேரக மகாதேவனெனத் தெரியாது, அறிவிலாதவர்களைப் போல, ஒருவர்க்கொருவர் தாமே பரப்பிரமமென வாதங்கூறி உயுத்தஞ் செய்யுங்காலம், அவர்கள் அகம்பிரமங்கெட, பரமசிவன் அழற்பிழம்புருவாகி, ஆதியந்தமிலாத சோதியாகி, இருவர் மத்தியில் எழுந்தருளி 'நாமே பரப்பிரமம் ; நீங்கள் முதலாய், எல்லா உயிரும் அடிமை' யெனப் புலப்பட அநுக்கிரகம் செய்த கருணையைப் பரவி, திருப்புசங் கொட்டி விளையாடுவோம் ஞானப் பெண்களே ! என வருளியதைக் காண்க. (12)

325. இனி, வீணட்கழித்ததற்கிரங்குவதான (தி. - ன.) :—

ஏழைத் தொழும்பனே னெத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
ஊழிமுதற் சிந்தாத நன்மணிவந் தென்பிறவித்
தாழைப் பறித்தவா தோணேக்கம் ஆடாமோ.

---

323. காலன் உயிர், கதிரோன் பல், பிரமன் சிரம், எரிகரம், தக்கன் தலை என்க. தூய்மைகள் - பரிசுத்தம்.

324. பரமம் - மேலான பொருள் ; பதைப்பு - துடிப்பு,

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! நம்து பரமசிவனைப் பொருளென அன்பு, அறிவு, தேற்றம் இலாது உண்மையிலாத ஏவற்றொழிற் பூண்டு, அனேக கோடிகாலம் வீண் முயற்சியாக, பயன் பெறுத பூமியிலே நீரிறைப்பானெனப்பதானேன் ; அவை திருவுளங் கண்டு, காலாதீதநாதன் குருமணியேயென என் பொருட்டு எழுந் தருளி எனது பிறவிப்பயிரை அடியோடறுத்து, திருவடி தந்த அருளைக் கருதித் திருப்புசங் கொட்டி விளையாடுவீர் ; ஞானப்பெண் களே ! என அருளியதைக் காண்க. (13)

326. இனி, சருவசுந்தரந் திருவருளானமையைக் கூறின (தி. - ன.) :—

உரைமாண்ட உள்ளொளி யுத்தமன்வந் துளம்புகலும்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
இரைமாண்ட இந்திரியப் பறவை யிரிந்தோடத்
துரைமாண்ட வாபாடித் தோணெக்கம் ஆடாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! வாக்கு முதலான கருவிகட்கு மெட்டாத, எச்சோதிக்குஞ் சோதி அருள்வதான பரஞ் சோதி யுருவமான, தேவசிரேட்டர், நமதுளத்தில் அபேதவத்து விதமாக வாழ்வானவுடன், அளவிலாத பேராசை யற்றோம் ; அவை யற்றவுடன் மாயாபோகப் புசிப்பு மாண்டு அவைக்குக் காரணமா யிருந்த விந்திரியப் பறவைகளும் கெட்டோடவே, நமது சுதந்தர மற, சிவனே சருவ சுதந்தரமாகி, நம்மை யாண்ட கருணையைப் பரவி திருத்தோள் கொட்டி விளையாடுவோம் ஞானப்பெண்களே ! என வருளியதைக் காண்க. (14)

திருச்சிற்றம்பலம்.

---

325. தொழும்பன் - தொண்டன். பாழுக்கு - பரல் நிலத்துக்கு. பரன்பரன் - மேலோரில் மேலோன். ஊழிமுதல் சிந்தாத நன்மணி - காலாதீத நாதன் குருமணி.

326. உரைமாண்ட - சொல் இறந்த. உள்ஒளி - பிரேரகப் பொருள் ; சோதிக்குள் சோதி என்று உரை கூறுகிறார். கரைமாண்ட - கரையற்ற. இரை - புசிப்பு. இரிந்து ஓட - கெட்டோட. துரை மாண்டவா பாடி. துரை - துறை ; இடம்.

திருச்சிற்றம்பலம்

16. திருப்பொன்னூசல்

இனித் திருப்பொன்னூசல் ஆவன :—

அவைக்கு அகத்தியச் சூத்திரம்.

திருப்பொன் னூசல்
திருவருட் சுத்தி.

இனி, பொழிப்புரை :—நன்வசமின்றி அருள்வசமாகும் காலம் சகலத்தின் செய்தியும், சுத்தத்தின் செய்தியும், சமானமாய் ஒன்றுகும் தன்மையாகிய அருளின்றிறமை யென அருளிய வநுபூதி காண்க.

இத்திருப்பா ஒப்புமை பற்றி வந்த **ஆறடித்தரவு கொச்சகக்கலிப்பா ; திருத்தில்லையிலோதியது** எனக் காண்க.

327. இனி, நாராயணனறியாத நற்கமலப் பொற்பாத மிருதியாகிய வருளின் (தி. - ன.) :—

சீரார் பவளங்கால் முத்தங் கபிரூக
ஏராரும் பொற்பலகை யேறி இனிதமர்ந்து
நாரா யணனறியா நாண்மலர்த்தாள் நாபடியேற்
கூராகத் தந்தருளு மூத்தர கோசமங்கை
ஆரா வமுதி னருட்டா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூச லாடாமோ.

(இ - ள்). ஆணவ மலத்தைப் போர் செய்யுஞ் சத்திய ஞான வேல் போன்ற திருநோக்கமுடைய ஞானப்பெண்களே ! கேண்மோ ! தகர வித்தியாபுர இரண்டாம் கோச மன்றுள்ளே சம்புபட்ச பரநாதாதியே யழகு பொருந்திய பவளக் காலாக, பரவிந்துவே முத்துச்சங்கிலியாக, திருவருள் அழகான சுத்த மாயா புவனமே திருப்பலகையான குண்டலி ரத்தின சிவசிம்மாசனத்தின் மேல், பிரேரக சத்தி

திருப்பொன்னூசலுக்குத் திருவாசக உள்ளக்கிடக்கை : அருட்சுத்தி; எ - து அருளோடு கூடுதல் திருவாசகச் சிறப்பு, 'சத்திநிருத்தாடத் தாலாட்டல் பொன்னூசல்' (பழைய புராணம்). சகலாவத்தை, சுத்தாவத்தை இவற்றின் விளக்கங்களை இந்நூல் 53-56 பக்கங்களிற் காண்க.

சிவமே எழுந்தருளி, பசுவர்க்கத் திருமால் அறிவொண்ணாத் திருவடி, நாயான நமக்கு மிகுந்த பேரானந்தமாக அநுக்கிரகஞ் செய்யும் திருவுத்தரகோச மங்கை அமிர்த வின்பத் திருவருட் பொற்பாத கமலங் களையே துதித்து, அசையாமலசையும் அசபை நிருத்தத் திருப் பொன்னூசலாடுவோம்; ஞானப்பெண்களே! என வருளியதைக் காண்க. (1)

32ஸ. இனி, சிவஞான வின்பளிப்பைக் கூறும் (தி. - ன.):—

மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்றங்கு தேவர்களுங் காணு மலரடிகள்
தேன்றங்கித் தித்தித் தமுதூறித் தான்தெளிந்தங்
கூன்றங்கி நின்றுருக்கு முத்தர கோசமங்கைக்
கோன்றங் கிடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் கனநடையீர் பொன்னூச லாடாமோ.

(இ - ள்). சத்திய ஞானகுல மயிற்போற் சாயலும், அசபை யொத்த அன்ன நடையும் கொண்ட ஞானப்பெண்களே! கேண்மோ! நமது பரமசிவன், திரியம்பகன்; இறவாத் திருவுடையவன்; ஆகா சவாச தேவர்கள் காணுத பொற்பாத குஞ்சிதப் பேரின்பத் தேன்; உயிரிலே நிறைந்து, மன வாக்குக் காயம் இன்புதோன்ற, அமிர்த மூறித் திருவடி ஞானமே ஞானமெனத் தெளிந்து ஊன் பெருகும் உடல் அருளுருகச் செய்யும் திருவுத்தரகோச மங்கைப்பதி; (இவ் வாருகியும்) திருவிடை மருதப்பிரானுகவும் விளங்கிய திருவடியை யும் துதித்து, அசையாமல் அசைந்து திருவருட் பொன்னூசல் ஆடுவோம்; ஞானப்பெண்களே! என வருளியதைக் காண்க. (2)

---

327. நாதம், கால்; விந்து, சங்கிலி; மாயை, பலகை என்பன கூறப்பட்டன. ஊராகத் தந்தருளும் - அடியேனுக்குரிய இடமாக அரு ளும். ஆரா அமுதின் அருள் தான் என்க. அசபை நிருத்தப். பொன் னூசல் என்றார்.

328. மூவாத என்னும் சொல்லை முற்றாகக்கொண்டு இறவாத் திரு வுடையவன் என்று பொருள் கூறுகின்றார். மூவாத வான் என்று கூட்டிப் பொருள் கூறுவர் பிறர். ஊன் தங்கி நின்று உருக்கும் உத்தரகோச மங்கைக் கோன் என்க. அவனுடைய இடைமருதுபாடி ஆடாமோ என்க. இவ்வுரை இடைமருதில் விளங்கும் திருவடியை என்று கொள்கிறது.

329. இனி, அநேகம் தேவர் இருடிகள் சங்கிதியிலிருந்து நிற்ப, அடியேற் கெளிவந்தருளினன் என்று கூறும் (தி. - ன.) ;—

முன்னீ றுமாதியு மில்லான் முனிவர்குழாம்
பன்னூ றுகோடி இமையோர்கள் தாம்நிற்பத்
தன்னீ றெனக்கருளித் தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி யுத்தர கோசமங்கை
மின்னேறு மாட வியன்மா ளிகைபாடிப்
பொன்னேறு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ.

(இ - ள்). ஞானச்சொர்ணபரணந் தரிப்பதான வின்பத் தனமுடைய சிவானந்தப்பெண்களே! கேண்மோ! ஆதியந்தமில்லாதவன்; ஆதியேயாவர்க்கும் முன் திருவுருவுடையசோதி; அவன் சங்கிதியிலே அனேகங்கோடி இருடிகளுந் தேவர்களுந் திருநாமந் துதித்திரந்து நிற்ப, நாதன் தன்னுருவான விபூதி அடியோங்கட்கு அநுக்கிரகித்து, தனது திருவடி ஞானக்கருணை வெள்ளத்து அபேதவத்துவித நிலைமை யருளி, அநாதியே சோதிமயத் திருவுத்தரகோச மங்கை நகரில் மின்போல விளங்கும் மாடமாளிகையை யின்புறப்பாடி, அசபவாசத்திருப் பொன்னூசலாடுவீர்கள்; ஞானப்பெண்களே! என வருளியதைக் காண்க. (3)

330. இனி, திருவடி ஞானத்தாற் பிறப்பறுமே யொழிய வேறெவ்வகையினுங் கூடாது என்ற (தி. - ன.) :—

நஞ்சமர் கண்டத்தன் அண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி உத்தர கோசமங்கை
அஞ்சொலாள் தன்னெடுங் கூடி யடியவர்கள்
நெஞ்சுளே நின்றமுத மூறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் தூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூச லாடாமோ.

---

329. ஈறும் ஆதியும் இல்லான் - முடிவும் முதலும் இல்லாதவன். முன் என்பதற்கு யாவர்க்கும் முன் திருவுடையவன் என்று பொருள் கூறப்பட்டது. முன் - நினைக்கப்படுகின்ற என்று பிறர் பொருள் கூறுவர். தன்னீறு - தன் உருவான விபூதி. மன் ஊற மன்னும். நிலைபெற அருளும் அபேத அத்துவித நிலைமை அருளி என்றார். மணி - சோதிமய. மின்ஏறு - மின்போல் விளங்கும்; மின்னல் கொடி ஏறும் உயர்ச்சியையுடைய என்றும் கூறலாம். பொன் - பொன்னாபரணம்; தேமல் என்றும் கூறுவர்.

(இ - ள்). திரட்சியான ஞானவாணி வடிவுடைய திருவீணையல் அணியும் ஞானப்பெண்களே ! கேண்மோ ! நமது பரமசிவன் தேவர்கள் பிழைக்கும் வண்ணம் திருநீலகண்டமுடையவன்; தேவர்கள்தேவநாதன் ; மேகஞ்சூழு நவமணிமாட திருவுத்தரகோச மங்கை ஞானசுக வார்த்தையான் ; தன்னெடுங்கூடி அடியார்கள் நெஞ்சுள் ஏழுந்தருளி, திருவருளின்பமூறிக் கிருபைசெய்து எப்போதும் அநித்தியப் பொருளான பிறவியைத் திருநோக்காற் கெடுப்பதானவன் ; அவனுடைய பரிசுத்த துதியைச் செய்து, திருப்பொன்னூசல் ஆநந்தமாக விளையாடுவோம் ! ஞானப்பெண்களே ! என அருளியதைக் காண்க. (4)

331. இனி, ஆலால விடத்தை திருப்போனகஞ் செய்த திருவிளையாடலைக் கூறும் (தி. - ன.) :—

ஆணே அலியோ அரிவையோ என்றிருவர்
காணக் கடவுள் கருணையினல் தேவர்குழாம்
நாணமே உய்யவாட் கொண்டருளி நஞ்சதனை
ஊணுக வுண்டருளு முத்தர கோசமங்கைக்
கோணர் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணர் வனமுலையீர் பொன்னூச லாடாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே ! கேண்மோ ! நமது பரமசிவன் அழலுருவாய் இருவர் மத்தியிற் கண்டபோது, 'ஆண், பெண், அலியோ ? எவ்வகைப் பொருளோ ?' எனத்தெளிவிலாதபடி திருமால், அயன் சம்சயமுற்று நிற்பதான கடவுள் ; அவன் தன் பெருங் கருணையினல் தேவர் கூட்டங்கள் வெட்கியுட்கிப் போகாவண்ணம், நஞ்சைத்திருப்போனகமாகச் செய்தருளுந் திருவுத்தரகோச மங்கை சந்திரசேகர குஞ்சிதபாதன் ; அவன் உயிர்க்குணமான வருணப் பரவி, சருவாபரணந் தரிப்பதான வின்பத் தனமுடைய ஞானப்

---

330 புஞ்சம் - திரட்சி. வெள்வளை என்றதற்குக் கலைவாணி வடிவுடைய வளை என்றார். தூஞ்சல் - இறத்தல். இச்சொல்லைப் பிறத்தலுக்கு அடையாகக்கொண்டு அநித்தியப் பொருளான பிறவி என்று பொருள் கூறுகின்றார்.

பெண்களே! திருப்பொன்னூசலாடாமே யாடுவீர்கள்! என அருளியதைக் காண்க. (5)

332. இனி, எனது மலபோதக்குற்றந் தீர்ப்பதான தன்மையைக் கூறும் (தி. - ன.) :—

மாதாடு பாகத்த னுத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையா னடியாருட்
கோதாட்டி நாயேனை யாட்கொண்டென் தொல்பிறவித்
தீதோடா வண்ணந் திகழப் பிறப்பறுப்பான்
காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பால்
போதாடு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! நமது பரமசிவன் அர்த்தநாரீசுவர பாகத்தன்; திருவுத்தரகோச மங்கைப்பதியோன்; அவன் இதழியணியுஞ் சடையான்; அவன் அசையாமலசைந்து அடியாருள்ளத்தில் ஆநந்த ஊசலாடி, அவர் உணமலக் குற்றந்தீர, (அருளுபவன்); அவன் நாயேனை அடிமை செய்து என் பழைய தான பிறவியால் கிலேசமுறுவண்ணம், பிரகாசமுற, மாயைப்பிறவி தீர்ப்பதானவன்; அவன் திருக்காது சிவஞானக்குண்டலங்கள் அசையாமல் அசைவதைத் துதித்து, உருகுதலைச் சென்ற அன்புளராய், மலரணியுந் தனவாபரணம் அசையாமலசைய, திருப்பொன்னூசலாடாம லாடுவோம்! ஞானப்பெண்களே! என அருளியதைக் காண்க. (6)

---

331. பூண் - ஆபரணங்கள். வனம் - அழகிய. அரிவை - பெண். இருவர் - மால், அயன். நாணுதல் - வெட்கியுட்கிப்போதல். கோணர் பிறை - வளைந்த பிறை. குணம் - உயிர்க்குணமான அருள். பரவி - புகழ்ந்து.

332. மாது ஆடு - மாது தங்கும். தாது - மகரந்தங்கள். அடியார் உன் கோது ஆட்டி - அடியவரின் உள்ளேயுள்ள மலக்குற்றத்தைத் தீர்த்து. அடியார், பொது; நாயேன், சிறப்பு, பிறவித்தீது - பிறவிக் கிலேசம். ஓடாவண்ணம் - உருதபடி. கசிந்து - உருகி.

333. இனி, ஸ்ரீ வித்தியாபீட அசபா நிருத்தப் பெருமையைக் கூறும் (தி. - ன.) :—

உன்னற் கரியதிரு வுத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் தன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பான்
அன்னத்தின் மேலேறி யாடு மணிமயில்போல்
என்னத்த னென்னையுமாட் கொண்டா னெழில்பாடிப்
பொன்னெத்த பூண்முலையீர் பொன்னூச லாடாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! மனோபாவனைக் கெட்டாத் திருவுத்தரகோச மங்கைத் திருப்பதியில் அநாதியே பிராமண குருவடிவாய் எழுந்தருளிய நாதன் திருவடிப் புகழைத் துதித்துப் பணிந்து வணங்கவே, நமது தீவினைப்பற்று முழுதும் நீங்க அருள்வோனை சுவாமி; அன்னமான அசபைச்சத்தி பீடத் தின்மேல் அணியான மயிலான திரோதான சத்தியிருந்த அசபை யான மூலாதாரப் பொருளில் எனதப்பனை வீதிவிடங்கப் பெருமாள் எனதுயிரில் அறிவு விளங்க அடியேனை யடிமையாகச் செய்த திரு வருளழகைப் பாடிப் பொன்போற் பிரகாசிக்கும் ஆபரணமுடைய இன்பத்தனமுடையீர்! திருப்பொன்னூசலாடாமலாடுவீர்கள்; ஞானப்பெண்களே! என் அருளியதைக் காண்க. (7)

334. இனி, அடிமையையாளத் திருவுருக் கொண்டமையைக் கூறும் (தி. - ன.) :—

கோல வரைக்குடுமி வந்து குவலயத்துச்
சால அழுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து
ஞால மிகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்
சீலந் திகழுந் திருவுத்தர கோசமங்கை
மாலுக் கரியானை வாயார நாம்பாடிப்
பூலித் தகங்குழைந்து பொன்னூச லாடாமோ.

---

333. உன்னல் - நினைத்தல். மன்னி - பொருந்தி. மாமறையோன், என்றது தன் பொருட்டுக் குருவடிவாய் எழுந்தருளிய கோலத்தை. பாவங் களையும் பற்றுக்களையும் அறுப்பான் என்க. அன்னத்தின் மேலேறி ஆடும் அணிமயில் என்றதற்குக் காட்டிய தத்துவப்பொருளைக் காண்க. சத்தி பீடமும், அஜபா நடனமும், வீதிவிடங்கமும் திருவாரூருக்கு உரியன.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! நம்து கிட்கள சொரூப சிவன் நம் பொருட்டுச் சகளமாகி, பிரகிருதியின் பிருதிவியிலே, திருவருளழகான மகாமேரு ரசதமா மலைமேல் எழுந்தருளியது மன்றி, தட்சிண பூமியிலே திருப்பிட்டு முதலான திருப்போனகஞ் செய்து, பரதவேடராய்க் கடலின் மேலெழுந்தருளியும், மண்ணினுள்ளார் காணப் பரிமேலழகராகி நம்மை யடிமையாகச் செய்து, சைவ சார வொழுக்கம் பிரகாசிக்குந் திருவுத்தரகோச மங்கைப்பதியாகி, திருமாலுக்கும் எட்டாத நாதனே, இடைவிடாது வாயாரத் துதிக்கும் போது நமதுடலுமுயிரும் பேரானந்தமாக அகங்குழைந்து திருப்பொன்னூசலாடாமே யாடுவோம்; ஞானப்பெண்களே! என அருளியதைக் காண்க. (8)

335. இனி, அநாதியே திருவுருவானமையைக் கூறும் (தி. - ன.) :—

தெங்குலவு சோலைத் திருவுத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறித்திட் டெந்தரமு மாட்கொள்வான்
பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ.

(இ - ள்). ஞானப்பெண்களே! கேண்மோ! நாளீகரம் நிறைந்த இன்பச்சோலை சூழும் திருவுத்தரசோச மங்கையில் எழுந்தருளிய, ஒப்புவமையற்ற ஏக பரப்பிரமசோதி, தானே அதிட்டேய அதிட்டானமாக எழுந்தருளும் பரமகுருநாதனே, எமது பிறவி யறுத்தெம்முடைய மந்ததரத்தையும் அதிதீவர சத்திநிபாத அடிமைப் பணியாகச் செய்வோன்; ஞானப்பூங்கோதையுந் தானும் அபேதமாக வெழுந்தருளி, திருவருட்பணி கொண்டு வாசனை பொருந்திய இதழியணியுந் திருச்சடாதாரியான சருவஞான குணத்தை யுடையவனது திருவருளைத் துதித்துத் திருப்பொன்னூசல் ஆடாமேயாடுவீர்கள்; ஞானப்பெண்களே! என அருளியதைக் காண்க. (9)

திருச்சிற்றம்பலம்

---

334. கோல வரைக் குடுமி - அழகிய மலையின் உச்சி. இதனைக் கைலாயமலை என்பாரும் உளர். பிட்டு அமுதுண்டதும், பாதவேடராய்த் தோன்றினதும் பரிமேற்கொண்டதும் மதுரைச் சொக்கநாதரின் திருவிளையாடல்கள். பூலித்தல் - பூரித்தல்; உடல் புளகித்தல்.

335. தெங்கு - நாளீகரம் - தென்னை. தங்கு - எழுந்தருளிய. உலவு - விளங்குகின்ற. தனி - ஒப்புவமையற்ற. தனியுருவம் - ஏகபரப்பிரமம். தரம் - நிலை. மந்ததரத்தை அதிதீவிரதரமாக்கி என்றார். பங்கு - பாகம். பணி - தொண்டு. கொங்கு - வாசனை. பொங்கு உலவு - விளக்கம் பொருந்திய.

17. அன்னைப் பத்து

அன்னைப் பத்தாவன :—

அகத்தியச் சூத்திரம்.

அருட்டிரு வன்னைப்பத்
தான்ம சம்பூரணம்.

பொழிப்பநுபூதியாவன :—

முற்பதிக அநுபூதிப்படித் திருவருளாய் நின்று ஆடாமல் ஆடிநின்ற முறைமையில் உண்டாகிய சிவானந்தத்தைச் சொல்லப் புலப்படாதாதலால், அருளுக்கருளாய் அபேத உருவாய் அத்துவித சித்தாந்த அடிமைத்திற வுண்மைப் பொருளாய் உள்ளதான ஒருவர்க் கொருவர் அளவளாவி விஞ விடையான சிவானந்தப்பெருக்கைத் தாயும் பெண்ணுமாகிய இருவரவர்க்கும் ஒரு மொழியான அநுபவ மெனக் காண்க.

திருப்பாக் கலி விருத்தமாகத் திருத்தில்லையிலோதியதெனக் காண்க

அன்னைப்பத்துக்குத் திருவாசக உள்ளக்கிடை : ஆத்தும பரிபூரணம் எ - து. ஆன்மா சிவனுடனே நிறைதல்.

இதற்குத் திருவாசகச் சிறப்பு :

நேயமிகுந்த நிலைகுலையக் கூடுதலே
யாய வருட்டாய்க் கங்கைதலன்னைப் பத்தாகும்
(பழைய புராணம்)

இதனைப் பற்றித் திருவாதவூரர் புராணங் கூறுவது :—

ஆங்கொரு சிறுமி தன்சி ரன்னையை நோக்கிக் கூறும்
தாங்கிசை மொழியே யாகத் தகுமவை யீரைந் தோதி

இம்மேற்கோள்களால் அன்னைப் பத்து, மகள் தன் தாயை நோக்கிக் கூறிய பாடல்களைக் கொண்டதாகும். தோழி செவிலியிடம் அறத்தொடு நிற்றலாகவும், தலைவி செவிலியிடம் அறத்தொடு நிற்றலாகவும் இதனைக் கொள்ளலாம்.

மேலே உரையில் 'விஞவிடையாக' என்றும், 'இருவர்க்கும் ஒரு மொழியான அநுபவம்' என்றும் கூறிய தன்மை நுணுகி ஆராயத்தக்கது.

336. இனி, பரநாதமே குடமுழ வாத்தியப் பறையென்ற (தி. - ன.) :—

வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையினர் அன்னே யென்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கு
நாதரிந் நாதனர் அன்னே என்னும்.

(இ - ள்). வேத.....யென்னும் :—

எமதுயிரான ஞானத்தாயே ! கேள் ! நமது பரமசிவன் திரு வாக்கே வேதம் ; வெண்ணீறணிந்திருப்பதான சிவந்ததே திரு மேனி ; குடிலையினின்ற நாதமே முழக்கொலியடி ; தாயே.

நாதப்.....என்னும் :—

இன்னமுங் கேளடி ! என்னுயிரன்னையே ! முன் அருளிய நாதமே பிரத்தியாங்க உபாங்க மாலையும், திருமாலுக்கும் அயனுக்கும் எப்பொருட்கும் இராசன் நின் நாதனடி ! தாயே ! என வருளியதைக் காண்க. (1)

337. இனி, பக்குவ பரிபவதாகமே சைவ சித்தாந்தமென்ற (தி. - ன.) :—

கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலினர்
உண்ணின் றுருக்குவர் அன்னே என்னும்
உண்ணின் றுருக்கி யுலப்பிலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் அன்னே என்னும்.

(இ - ள்). கண்ணஞ்.....என்னும் :—

என்னுயிர் ஞானத்தாயே ! கேள் ! ஆன்மாக்கள் பெத்த தசையை முத்தமாக்குந் திரோதான சத்தி வடிவான மைப்படிந்த கண்ணர் கருணைத் திருநோக்கமுடையவர் ; அறிவு விளங்கும் பொருட்டு ஞரன சமுத்திரர் ; ஆனலும் உண்ணின்று உயிருருக அன்பருள்வதானவர் ; அடி, தாயே !

---

336. செம்மேனியர் - சிவந்த திருமேனியை யுடையவர். நாத மாகிய பறை என்க ; நாத தத்துவத்தில விளங்கும் ஓங்காரத்தைப் பறை யாகக்கொண்டவர் என்று பொருள் கூறுவர்.

உண்ணின்.....என்னும் :—

இன்னமுங் கேட்பாயாக! ஞானத்தாயே! எனது உயிரை அன்பின் வழித்தாய் அருளாக உருகச் செய்து அளவிலாத சிவானந்த பாட்பமுண்டாகத் திருவடி ஞானம் அருள்வாரடி; தாயே! என அருளியதைக் காண்க. (2)

338. இனி, திருமணக்கோல தரிசனத்தைக் கூறும் (தி.-ன.):

நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத் திருப்பரால் அன்னே என்னும்
சித்தத் திருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தரா னந்தரால் அன்னே என்னும்.

(இ-ள்). நித்த .....என்னும் :—

ஞானத்தாயே! கேள்! அநாதி நித்திய சத்தி சிவபோக திருக்கலியாண மணவாள நாதர்; திருவருளே பேரழகின்ப சொருபர்; அடியாருள்ளத்தி லெழுந்தருளினுற் போம் வழி தெரியாது அமர்ந்தருளும் நாதர்; அடி, தாயே!

சித்தத்.....என்னும் :—

இன்னமுங் கேட்பாயாக; என் கண்மணித்தாயே! முன்னருளிய வண்ணஞ் சித்தத்துறைபவர் யாரோ? என எண்ணுதேயடி; நான் அநுபூதி சொல்வேன்; தக்ஷிணத் திருப்பெருந்துறையில் எழுந்தருளிய பேரின்பமே ஞான வுருக்கொண்ட சற்குரு நாதனடி; என்னுயிரன்னே! என அருளியதைக் காண்க. (3)

339. இனி, பிரத்தியாங்கக் குறியெல்லா மருளின்பமே யென்ற (தி.-ன.) :—

ஆடரவப் பூணுடைத் தொல்பொடிப் பூசிற்றூர்
வேட மிருந்தவா றன்னே என்னும்
வேட மிருந்தவா கண்டுகண் டென்னுள்ளம்
வாடு மிதுவென்னே அன்னே என்னும்.

---

337. அஞ்சனத்தர்; அஞ்சனம் - மை. உள்நின்று உருக்குவர். உலப்பு - அழிவு.

338. மணாளர் - மணவாளர். அத்தர் - கடவுள்; சற்குருநாதன் என்றூர்.

(இ - ள்). ஆடரவப்.....என்னும் :—

ஞானத்தாயே! கேள்! நமது சச்சிதானந்த சொரூப சிவத் துக்கு எப்போதுந் திருமேனியில் ஆடல் செப்வதான சர்ப்பம் ஆப ரணமாகவும், உடை புலித்தோலாகவும், வெண்பொடி பூசிற்றிருப்ப தாகவும், இவ்வகை திருவேடந் திருமேனியில் தரிப்பதான செய்கை யென்னவோ? தாயே!

வேட.....என்னும் :—

ஞானத்தாயான கண்மணியே! கேள். முன் அருளியபடி திருவேடங் கண்டேன்; இவை நம்பொருட்டன்றி நாதனுக்கில்லை என, எனதுள்ளம் வாடிமெலிகிறதடி; ஞானத்தாயே! என அருளி யதைக் காண்க. (4)

340. இனி, திருவருளன்பு தரிசனமானதைக் கூறும் (தி. - ன.) :—

நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டிநன் னாடரால் அன்னே என்னும்
பாண்டிநன் னாடர் பரந்தெழு சிந்தையை
ஆண்டன்பு செய்வரால் அன்னே என்னும்.

(இ - ள்). நீண்ட.....என்னும்;—

ஞானத்தாயே! கேள்! நமது பரமசிவன் திருக்கை சருவ வியாபக முடையது; திருவேணியோ நன்மார்க்க விதியன்பு அருளு வது; பாண்டியதேச நாட்டுக்கதிபதி; அடி, என் தாயே!

பாண்டி.....என்னும் :—

இன்னமும் கேளடி; அன்னையான கண்மணியே! முன்னரு ளிய பாண்டிய நாட்டுக் கதிபதியாலுலும், இடைவிடாது கன்மமல வியாபகத்தால், அழுந்தி யெழுவதான எனது சிந்தையை அடிமைப் பணிக்குரித்தாக ஆண்டு என் சிந்தையைத் திருவடி ஞான வன்புள தாய்ச் செய்யும் நாதனடி, தாயே! என அருளியதைக் காண்க. (5)

---

339. ஆடரப் பூணுடைத் தோல்பொடிப் பூசிற்றேர்' என்பது பிற அச்சுப் பிரதிகளிற் காணப்படும் பாடம். பூசிற்று பொடி என்று மாற்றி, பூசியது வெண்ணீறு' என்றும் பொருள் கொள்வர்.

340. நீளம், சருவ வியாபகமுடையைச் சுட்டிற்று. நெறிதரு குஞ்சியர் - நெறிந்த சடையையுடையவர் என்பது சாமானியப் பொருள். பரந்தெழு சிந்தை என்பதற்குக் கன்மமலத்தில் அழுந்தி எழு சிந்தை என்று பொருள் கூறினர். பரந்து - பரவலாகி என்பது பொருள்.

341. இனி, மாலயற்கு இருளாயும் எனதுயிரிலருள்ளாயும் நின்றமையைக் கூறும் (தி. - ன.) :—

உன்னற் கரியசீ ருத்தர மங்கையர்
மன்னுவ தென்னெஞ்சில் அன்னே என்னும்
மன்னுவ தென்னெஞ்சில் மாலயன் காண்கிலார்
என்ன அதிசயம் அன்னே என்னும்.

(இ - ள்). உன்னற் .....என்னும் :—

ஞானத்தாயே! கேள்! நமது பரமசிவன் திருவடியைத் தற் சுட்டால் தியான பாவனையுடையோர்க் கெட்டாத திருவுத்தரகோச ஞானப்பதியுடையோர் ஒன்றுக்கும் பற்றுத எனதுளத்தில் பிரியா திருந்த தென்னடி? கண்மணியே!

மன்னுவ.....என்னும் :—

என்னுயிரன்னே! கேட்பாயாக! முன்னருளிய வண்ணம் திருமாலயன் காண்கிலாத நாதன்; என்னவற்புதம்! என் பாழான சிந்தையைப் பள்ளியறையாகக் கொண்டது! அடி, தாயே! என வருளியதைக் காண்க. (6)

342. இனி, என்னுள்ளங் கவர்தலான செய்தியைக் கூறும் (தி. - ன.) :—

வெள்ளைக் கலிங்கத்தர் வெண்டிரு முண்டத்தர்
பள்ளிக்குப் பாயத்தர் அன்னே என்னும்
பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரி மேல்கொண்டென்
உள்ளங் கவர்வரால் அன்னே என்னும்.

(இ - ள்). வெள்ளைக்.....என்னும் :—

ஞானத்தாயே! கேள்! நமது பரமசிவனுக்கு எல்லாச் சுட் டறிவு ஞானமும் தமது பிரேரக சிவஞான மென்பதாக அடியார்கள் அநுபூதிபெற, எல்லாம் அறிதலான கலைஞானமே கலையாக, திரு வுடையிலணிவதானேர்; அடியேன் சைவனுக, திருநெற்றியில் திரிபுண்டரம் முச்சத்தி, முக்கர்த்தாக்களுந் தமதுருவென, திருநீறு தரித்த நாதன்; என் பிறவிக்கிலேசக் குளிரால் நடுங்காவண்ணமாக,

---

341. உன்னுதல் - கருதல். உத்தரமங்கை - உத்தரகோசமங்கை. என் நெஞ்சில் மன்னுவது என்று மாற்றுக. மன்னுதல் - பொருந்துதல்; நிலைத்திருத்தல்.

திருப்பாற்கடலிற் பள்ளி கொள்பவரான நரசிம்ம நாராயணன் இரணியனைப் பிரகலாதன் நிமித்தம் வதை செய்த கம்பீரமமான காலம், ஆபத்தாரண வயிரவ வடிவாகி நிக்கிரகஞ் செய, நரசிம்மம் சருமத்தைச் சட்டையாகத் திருமேனியில் தரித்த நாதன், அடி, தாயே!

பள்ளிக்குப்.....என்னும் :—

கேட்பாயாக! ஞானத்தாயே! முன்னருளியபடி நரசிம்மம் தவிர, வாமனவதாரத்தையும் நிக்கிரகஞ் செய்து, சட்டையாகத் தரித்துக் கொண்டு என் போதப்புரவிமே லெழுந்தருளி, யானிருந்த படியிருப்ப, என்னைச் சுத்தாவத்தைப்படுத்தி, அடிமை யின்பு செய்த சிவனடி! தாயே! என வருளியதைக் காண்க. (7)

343. இனி, திருவடியைப் பாடத் திருத்தாள முருள்வதான (தி. - ன.) :—

தாளி யறுகினர் சந்தனச் சாந்தினர்
ஆளெம்மை யாள்வரால் அன்னே என்னும்
ஆளெம்மை யாஞ மடிகளார் தங்கையில்
தாள மிருந்தவா றன்னே என்னும்.

(இ - ள்). தாளி..... ..என்னும் :—

ஞானத்தாயே! கேள்! நமது பரமசிவத்துக்கு நம்மைப் புணர்ந்து இன்பளிக்கும் நிமித்தம் தாளி மலரையும் பசும் புல்லையுந் திருமாலையாக அணிந்து ஞானச்சாந்தாகச் சந்தனமும், அணிந்து அவ்வகைத் திருமேனி கொண்டு நம்மை அடிமைப்பணி கொண்டவாண்டவனடி; தாயே!

ஆளெப்மை.....என்னும் :—

ஞானத்தாயே! கேட்பாயாக! முன்னருளியபடி நாதன் அடிமை கொண்டாலும், திருவருட்பணி செய்யுஞ் சீரடியார் திருக்

---

342. இச்செய்யுளுக்கு அமைக்கப் பெற்ற உரை மிக அருமையானது.

கலிங்கம் - ஆடை. கலைஞானமே ஆடையாகக் கூறப்பட்டது. முண்டத்தர் - நெற்றியர். பள்ளி - பள்ளிகொள்பவரான திருமாலின். குப்பாயம் - சட்டை. சட்டைநாதர்.

கையில் திருத்தாளம் இருந்த வண்ணமென்ன தாயே! என வருளியதைக் காண்க. (8)

344. இனி, பிச்சாடன மூர்த்தமானதைக் கூறும் (தி. - ன.) :—

தையலோர் பங்கினர் தாபத வேடத்தர்
ஐயம் புகுந்தவர் அன்னே என்னும்
ஐயம் புகுந்தவர் போதலு மென்னுள்ளம்
நையுமிது என்னே அன்னே என்னும்.

(இ - ள்). தையலோர்.....என்னும் :—

ஞானத்தாயே! கேள்! நமது பரமசிவன் தையல் மெய்யில் பிரியாவண்ணம் அருள்பவன்; திருச்சடையே திருவேடமாகத் தரித்துள்ளான்; எனதுயிர்ப்பிச்சை கொள்ளப் பக்குவ வில்லங்கள் தோறும் எழுந்தருளிய நாதனடி.; அடி., தாயே!

ஐயும்..... என்னும் :—

முன்னருளிய வண்ணம் என்னுயிர்ப்பலி கொண்டு எனது உயிரை இரட்சித்த போதும் எனது உள்ளம் இவ்வகை நம் பொருட்டன்றேவென வாடுதடி! தாயே! என வருளியதைக் காண்க. (9)

345. இனி, என்னைச் சிவோன்மத்தனுக்கிய தன்மையைக் கூறும் (தி. - ன.) :—

கொன்றை மதியமும் கூவிள மத்தமும்
துன்றிய சென்னியர் அன்னே என்னும்
துன்றிய சென்னியின் மத்தமுன் மத்தமே
இன்றெனக் கானவா றன்னே என்னும்

(இ - ள்). ஞானத்தாயே! கேள்! நமது பரமசிவன் நம் பொருட்டாகக் கொண்ட திருமேனியிற் சோதியிதழியும் இன்பச் சந்திரனும், சத்தி சொரூப வில்வமும், திரோதான வடிவமான

---

343. ஆள் எம்மையாளும் அடிகளார், என்பது அடியார்களைக் குறிக்கும் என்று இவ்வுரை கூறுகிறது. பிறர், இத்தொடர் இறைவனைக் குறிக்கும் என்று கூறுவர்.

344. தையல் - பெண்; உமை. தாபதவேடம் - தவவேடம். ஐயம் - பிச்சை. புகுந்து அவர் போதலும் என்க. நையும் - மெலியும்; வாடும். நைவதற்குக் காரணம் உரையிற் காட்டப் பெற்றது.

ஊமத்தம்மலரும், திருமுடியில் அபேதமாகத் தரித்திருப்பதான நாத னடி! தாயே!

துன்றிய.....என்னும் :—

இன்னமுங் கேட்பாயாக, ஞானத்தாயே! முன்னருளிய வண் ணம் திருமுடியில் தரித்த மலரினுல் அடியோங்கட்கு இம்மையிலே பரமுத்தி யின்ப உன்மத்தமானதடி; என்னுயிர்த்தாயே! என அருளியதைக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

18. குயிற்பத்து

குயிற் பத்தாவன :

அகத்தியச் சூத்திரமாவன.

இயற்றரு குயிற்பத்

தான்ம விரக்கம்

பொழிப்புரை அநுபூதி :—முற்பதிகப்பாவில் இவ்வகையாகப் பேசாமற் பேசின அநுபவத்தை இருவருமொருவர் என்றறிவித்தற் குத் தன்னுள்ளத்தைக் குயிலாகவும், கூவின கூவுதல் இன்பப் பரம்பொருளாகவும் வைத்துச் சொன்னபடியால், அவ்வார்த்தை ஓரின்பமென அருளிய அநுபூதிகம்.

திருப்பா ஆசிரிய விருத்தமாகத் திருத்தில்லையிலோதியது.

---

345. கூவிளம் - வில்வம். மத்தம் - ஊமத்தம். உன்மத்தம் - மயக்கம்.

இப்பதிகத்திற்குத் திருவாசகத் திருவுள்ளக்கிடக்கை, ஆந்துமவிரக்கம் எ - து சிவனேக் கண்டிரங்குதல்.

இதற்குத் திருவாசகச் சிறப்பு :—

தூயவருட் குயிலே சோதியெனைக் கூடுதற்குன்
வாயினுற் கூவென முன்வாழ்த்தல் குயிற்பத்தாமே.

(பழையபுராணம்)

346. இனி, திருவடிப் பெருமையின் அருமை யின்பத்தைக் கூறும் (தி. - ன.) :—

கீத மினிய குயிலே கேட்டியே லெங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவிற் பாதாள மேழினுக் கப்பாற்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந் நின்ற தொன்மை
ஆதி குணமொன்று மில்லா[1] வந்த மிலான்வரக் கூவாய்.

(இ - ள்). சிவஞானம் பெறுவதான பரிபாக சைதனிய உள்ளமே கேள்! நீ இன்ப சொரூப சத்தமே பொருளான திருவருட் குயிலானதால் கேட்கவில்லையோ? நமது உயிரான சிவன் திருவடி இரண்டும் ஆராயுமிடத்து, உண்மை அநுபூதிகமாவன :—திருவடியாவது பரஅபர ஞானப்பொருள்; அவைக்கெட்டாத, ஆறத்துவ, புவன பாதலமுங் கடந்து அவை நின்றன; ஞானப்பிரகாச நவந்தர நவமணி திருமுடி வினவில், சொல்லுக்கெட்டாத வாச்சியப் பொருளானதால், அடியே முடி, முடியே அடி; அவயவமின்றி எங்கும் நிறைவானதால் உற்பத்தியும் அவைக்குக் காரணமான சார்புடைய குணமும், நாசமுமில்லாத நாதன், அடி! என் உள்ளத்திற் பிரியாதிருக்க வருவதான அருளைக்கூவாய்! ஞானக்குயிலே! என அருளியதைக் காண்க. (1)

இப்பதிகம் பாடப்பெற்றதைப் பற்றித் திருவாதவூரர் புராணம் (திருவம்பலச் : 67) 'பொங்கரி னிடையே வாழும் பொற்பிளங் குயிலே கூவி, இங்கழை யெம்பிரானை யென்பதும்'' என்று கூறும்.

இவ்வுரை தன் உள்ளத்தைக் குயிலாகவும், இன்பப் பரம்பொருள் கூவுதலாகவும்' கொண்டு வகுக்கின்றது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

346. 1. பி - ம். னந்தமிலான். கேட்டியேல் - கேட்பாயாஞல் என்பது வெளிப்படைப் பொருள். 'கேட்கவில்லையோ?' என்று உரை கூறுகின்றது. ஆதிகுணம், ஆதியும் குணமும் என்றும் பிரித்துக் கூறுவர். தொன்மையாதி குணம் ஏன்றும் பிரிக்கலாம்.

347. இனி, சிவனடியாரான வண்டோதரியம்மைக் கநுக்கிரகஞ் செய்தமையைக் கூறும் (தி. - ன.) :—

ஏர்தரு மேழுல கேத்த வெவ்வரு வந்தன் னுருவாய்
ஆர்கலி சூழ்தென் னிலங்கை யழகமர் வண்டோ தரிக்குப்
பேரரு ளின்ப மளித்த பெருந்துறை மேயபி ராஞைச்
சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடஞைக் கூவாய்.

(இ - ள்). ஞானக்குயிலே! கேள்! நமது பரமசிவன் திருவடியைத் திருவருளால் அழகு பொருந்தும் ஏழுலகிலுள்ள பக்குவவான்மாக்கள், துதிப்பதாக; சடசித்தெங்கணும் பூரணமான அகண்டாகார சச்சிதானந்த அட்டமூர்த்தவர்க்கத் திருவருட் காட்சிப் பொருளான நாதன்; சமுத்திரஞ் சூழ்ந்த தக்ஷிண திக்கிலுள்ளதாகிய (இலங்கையில்) திருவருள் வடிவான வண்டோதரியம்மை பொருட்டுத் திருப்பெருந்துறைக் குருமணித் திருமேனி (பால உருக்) கொண்டெழுந்தருளிப் பேரின்பம் அநுக்கிரகஞ் செய்து அடிமைப்பணி கொண்ட எம்பிராஞைச் சிறப்புப் பொருந்திய திருவாயால், தென் பாண்டி நாடுடைய சுவாமியை, என்னுளத்தில் அபேத அத்துவிதமாக வாழ்வதாக அழைப்பாயானால், அழைப்பொழியான்; என் எதிர்ப்படும்; நாதஞைத் திருநாமஞ் சொல்லி யழைப்பதே நியமமாகக் கொள்வாய்; பரிபக்குவமுள்ள ஞானக்குயிலே!—என அருளியதைக் காண்க. (2)

348. இனி, 'என்னை விட்டுப் பிரியாத திருவருளின்பம்' என்று சுட்டிய (தி. - ன.) :—

நீல வருவிற் குயிலே நீண்மணி மாட நிலாவும்
கோல வழகிற் றிகழுங் கொடிமங்கை யுள்ளுறை கோயில்
சீலம் பெரிது மினிய திருவுத் தரகோச மங்கை
ஞாலம் விளங்க விருந்த நாயக னெவரக் கூவாய்.

(இ - ள்). திரோதானை வடிவுடைய ஞானக்குயிலே! கேள்! நமது பராசத்தி நாதன் எழுந்தருளிய சீவ நவரத்தினப் பிரகாசத் திருவருள் ஆனந்தம் விளங்குந் திருவருட்டுறைக் கோவிலுடைத்தான, வைதீக, சைவ, ஆசார சற்குணப் பெருக்கானப் பேரின்பத்

---

347. ஏர் - அழகு. ஆர்கலி - கடல். வண்டோதரி - மண்டோதரி; இராவணன் மனைவி. தமக்குப் பெருந்துறையுள் அருள்செய்த பிரானே, வண்டோதரிக்கு இலங்கையில் அருளினன் என்பது குறிப்பு.

திருவுத்தரகோச மங்கைப்பதியில் எல்லா உலகமும், அவ்வுலகி லுள்ள வுயிரும், அடி ஞானம் விளங்க, எனது உயிரில் எழுந்தருளிய ஆன்மநாதனே, எழுந்தருளி யிரட்சிப்பதாகக் கூவுதலான திருநாம கிட்டை கூடாய்! ஞானக்குயிலே! என அருளியதைக் காண்க. (3)

349. இனி, மேலான தேவர்கள் இரந்து நிற்ப, மானிட வுயிர் கட்கு அருளின்பம் அளிப்பதைக் கூறும் (தி. - ன.):—

தேன்பழச் சோலை பயிலுஞ் சிறுகுயி லேயிது கேணீ
வான்பழித் திம்மண் புகுந்து மனிதரை யாட்கொண்ட
[வள்ளல்,
ஊன்பழித் துள்ளம் புகுந்தென் உணர்வது வாயவொ
[ருத்தன்
மான்பழித் தாண்டமென் னேக்கி மணாளனீவரக் கூவாய்.

(இ - ள்). அநாதியே திருவடியிற் பிரியாது பேரின்பந் திளைக் கும் ஞானச்சோலைக் குயிலான இன்பக்குஞ்சே! இற்றையே கேள்! வானிடத்தவரும் மண்மேல் வந்து தன்னையர்ச்சிப்பர் என்ற அநுபூதிப் படி, திருமால் முதலான தேவர்களுக்கு இரங்காது, பிரகிருதி மாயா வாச மானிடப்பிறவியே அருளுக்கருகதை யென்று திருவுளங் கொண்டு, மானிடச்சட்டை சாத்தியெழுந்தருளி, வரம்பில் இன்பம் அருளுநாதன், ஊன்மிகு துன்ப தோலுமான என்னுடல் இடமாக, என் அறிவே சொரூபமாக, உடைய ஏகப் பரப்பிரம சிவன்; மான் விழியைப் பழிப்புள திருவருணேக்கப் பராசத்திக்குக் கலியாண புருடோத்தமக் கடவுள்; ஆகியவன் என் உளத்தில் இன்பவடிவாய் வரத் திருநாமஞ் சொல்லிக் கூவாய்! ஞானக்குயிலே! என அருளி யதைக் காண்க. (4)

---

348. நீல நிறம், திரோதானத்தைக் குறித்தது என்க. கொடி மங்கை உள் உறை கோயில் - பூங்கொடிபோலும் மங்கையர் உள்ளே வாழ்கின்ற கோயில் என்றும் சிலர் பொருள் கூறுவர். மங்கை - உமா தேவி; பராசக்தி என்பது இவ்வுரை. ஞானம் - அடிஞானம். உத்தர கோச மங்கையில் இருந்த நாயகன் என்பது வெளிப்படையான பொருள். 'என் உயிரில் எழுந்தருளிய நாயகன்' என்பது இவ்வுரை.

349. ஊன் பழித்து - ஊன் நிறைந்த உடலைப் பொருட்படுத்தாது என்பது பொருள். என் உணர்வு அது ஆய - என் அறிவுருவாகிய என்ற படி; என் அறிவே சொரூபமாகவுடைய என்றுமாம். ஒருத்தன் - ஏகபரப் பிரும்ம சிவன்.

350. இனி, உலகம் விளக்குப் பரிதியைப்போல, உள்ளத்தை விளக்கும் அருளான வின்பம் என்ற (தி. - ன.) :—

சுந்தரத் தின்பக் குயிலே சூழ்சுடர் ஞாயிறு போல
அந்தரத் தேநின் றிழிந்திங் கடியவ ராசைய றுப்பான்
முந்து நடுவு முடிவு மாகிய மூவ ரறியாச்
சிந்துரச் சேவடி யானைச் சேவக னேவரக் கூவாய்.

(இ - ள்). திருவருளழகு போன்ற சிவானந்தக்குயிலே! கேள்! நமது பரமசிவன் சூரியப் பிரகாசம்போல ஞானகாசத்திலிருந்து (இறங்கி) பிருதிவியினிடமாக எழுந்தருளி, சீரடியார் அவாவை நீக்கி, அத்துவிதக் காட்சி—வெய்யோன் அணைந்த விழிபோல்,—அனுக்கிரகிப்பன்; அவன் பெருமை வினவில், அயன், இந்திரன் அறியாத சிவந்த பாதன்; அடியார் பொருட்டு அடிமைப் பணியாளனுவோன்;—இவ்வாருன சிவனே யென்னிடைக்கே வர, ஒருகாற் கூவாயே!

சூரியனே ஒப்புக் காட்டியது திருச்சதகத்தில் "சிந்தனை நின்றனக் காக்கி" (30) என்ற திருப்பாவநுபூதியிற் காண்க. (5)

351. இனி, நமது பாசம் அகலத் திருக்கோகழியில் எழுந் தருளினமையைக் கூறும் (தி. - ன.) : —

இன்பந் தருவன் குயிலே யெழுல குய்முழு தாளி
அன்ப னமுதளித் தூறும் ஆனந்தன் வான்வந்த தேவன்
நன்பொன் மணிச்சுவ டொத்த நற்பரி மேல்வரு வானைக்
கொம்பின் மிழற்றுங் குயிலே கோகழி நாதனைக் கூவாய்.

(இ - ள்). ஞானக்குயிலே கேள்! நமது பரமசிவன் நமக்குத் திருவடி ஞானப் பேரின்பம் அருள்வன்; எல்லா வுலகங்களிலு முள்ள உயிர்களையுந் தனது ஆக்கினை சத்தியால் ஆளும் ஆண்டவன்; அன்பே திருமேனியாக வுடையவன்; எனதுயிரில் இன்பளிக்கும் அமிர்தன்; பேரின்பமே வடிவாயுள்ள மகாதேவன்; நன்னலம் பெறுவதான சிவரத்தினப் பிரகாசம் அவன் இரண்டு திருவடிகளும்;

---

350. சுடர் - கிரணம். அந்தரம் - ஆகாயம்; இழிந்து - இறங்கி; முந்தும் நடுவும் முடிவும் - ஆதி, மத்யம், அந்தம் என்ற மூன்று லீலைகளும். ஆகிய மூவர் என்பதற்கு வேறு பொருளும் உரைப்பர்.

ஞானத்தழும்பேற்றச் சிவஞானப் புரவிமேல் எழுந்தருளுவான்; மாமரக் கொம்பின் மேலிருந்து உண்மை மொழியும் உள்ளக் குயிலே! நமது பாசந்தீர்வதாகத் திருக்கோகழியிலெழுந்தருளும் நாதனே, என்னிலைமை பரிந்து, ஒருகாற் கூவாயே! என அருளியதைக் காண்க. (6)

352. இனி, திரிகர்த்தராய் எழுந்தருளினமையைக் கூறும் (தி. - ன.): —

உன்னை யுகப்பன் குயிலே யுன்துணைத் தோழியு மாவன்
பொன்னை யழித்தநன் மேனிப் புகழிற் றிகழு மழகன்
மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன்சேரலன் சோழன் சீர்ப்புயங் கன்வரக் கூவாய்.

(இ - ள்). சிவஞான வுள்ளக்குயிலே கேள்! நமதாண்டவன் உன்னுடைய பரிபாகதாகங் திருவுளம அறிந்தால், சிவானந்த சிவானுபவமே சுவானுபூதிகமாக வருள்வன்; உன்னுடனுகித் திரு வடியிலே கூட்டுவிக்கும் அருளோயாவன்; அவன் பொன்னிலு மேலாகப் பிரகாசிக்குந் திருமேனியழகன்; இடைவிடாது துதிப்போர் அகத்தில் வசிப்போனன இறையோன்; என் பொருட்டுப் பரிமே லழகராய் எழுந்தருளிய வரம்பிலின்பமுடையோன்; திருப்பெருந் துறைக் குருமணி; தென்பாண்டி நாட்டரசன்; சேரதேசப் பெரு மான்; சுவ சிவ சக்கரவர்த்தியான சோழராசன்; இவ்வகைத் திரு மேனியுடையன்; இவ்வாறு, திருவருட் குஞ்சிதபாத நிருத்தனைத்

---

351. தருவன், என்பதைத் தன்மையொருமையாகக் கொண்டும் பொருள் கூறுவர். ஊறும் ஆனந்தன், என்றதால் ஆனந்தமே அவன் என்பதாயிற்று. வான் வந்தேவன், என்பதற்குப் பேரின்பமே வடிவா யுள்ள மகாதேவன் என்று பொருள் கூறினர். வான் - பேரின்பம். விண்ணின்று பூமியில் எழுந்தருளினவன் என்பது எளிமையான பொருள். சுவடு ஒத்த பரி என்பதற்குத் திருவடிகளின் தழும்பினைக் கொண்ட குதிரை என்று பொருள் கூறுகிறார். பரி - சிவஞானப் புரவி. மிழற்று தல் - குழறிப்பேசுதல். கோகழி - பக். 224 அடிக்குறிப்பைக் காண்க.

திருநாமம் எனக்கு ஒருகாற் பேசக் கூவாய்! என அருளியதைக் காண்க. (7)

353. இனி, இருவர்தேட ஓரழல் உருவான செய்தியைக் கூறும் (தி. - ன.) :—

வாவிங்கே நீகுயிற் பிள்ளாய் மாலொடு நான்முகன் தேடி
ஓவி யவருன்னி நிற்ப வொண்டழல் விண்பிளந் தோங்கி
மேவியன் றண்டங் கடந்து விரிசுட ராய்நின்ற மெய்யன்
தாவி வரும்பரிப் பாகன் தாழ்சடை யோன்வரக் கூவாய்.

(இ - ள்). ஞானக்குயிலே! கேள்! நான் தேடும் இடமே பொருளாக வா! திருமால், அயன், இருவரும் அடிமுடி தேடிக் காணுது ஓய்வுற்று, உன்னி நிற்ப, நமது சிவன் ஒள்ளிய அக்கினி வடிவாகி, ஆகாசத்தைப் பிளந்து பேரண்டத்துக்கப்பால் சருவ வியாபக ஞான சொரூப சத்திய பூரண சொரூபமாக நின்றவன்; நம் பொருட்டு ஆவேச வீரர் ஆண்மையுடன் பரிமேற் கொள்ளும் பரியாளன்; நீண்ட சடையையுடையவன்; அவனைக் கூடுமாறு கூறுயே! ஞானக் குயிலே! என அருளியதைக் காண்க. (8)

354. இனி, பொன்னடி பூவிலெழுந்தருளிய அருமையைக் கூறும் (தி. - ன.) :—

காருடைப் பொன்திகழ் மேனிக் கடிபொழில் வாழுங்குயிலே
சீருடைச் செங்கம லத்தில் திகழுரு வாகிய செல்வன்
பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசம றுத்தெனை யாண்ட
ஆருடை யம்பொனின் மேனி யழகினை நீவரக் கூவாய்.

---

352. உன் தோழியும் ஆவன் என்றமையால் இது தலைவியின் பேச்சாக அமைந்துள்ளமை புலனுயிற்று. உகப்பன், ஆவன் என்பனவற்றைத் தலைவியின் திருவாக்காகவும் கொள்க. அவற்றைப் படர்க்கை வினை முற்றுக்களாகக் கொண்டு உரைகூறப் பெற்றுள்ளது. மன்னன் - இறையோன்; இறை, தங்கு என்னும் பொருளுடைமையை ஒட்டிப் பொருள் கூறப்பெற்றது. உரையாசிரியன் தம் நாட்டன்பைக் காட்டிச் சோழன் என்பதற்குப் பொருளுரைத்தார். புயங்கன் - புயங்க நடனத்தையுடையோன்.

353. பிள்ளை - குஞ்சு. ஓவி - ஓய்வுற்று, உன்னி நிற்ப - தியானித்து நிற்க. மேவி - பொருந்தி. அன்று - அக்காளில். மெய்யன், சுடர் ஒடிவே தன் திருமேனியாகக் கொண்டு நின்றவன்,

(இ - ள்). திரோதானக் கருநிறமும், பொன்போல் விளங்கும் உருவஞ் கொண்டு சிவமணம் வீசும் ஞானச்சோலையில் வாழும் இன்பக் குயிலே! கேள்! சிவானந்தச் செங்கமலப் பொற்பாத செல்வத்துட் செல்வ ஞான சொரூபன்; பூமியின்கண் எழுந்தருளி இரண்டு திருவடிகளையும், பொருளெனக் காட்டி என்னைத் திருவடிக்கீழ் வைத்தருளும் ஆண்டவன்; நெருங்கிய வின்பத் தனக்கச்சு விளங்கும் அழகிய திருமேனியுடைய ஞானமூர்த்தீனை; பாச விமோசனனை, அடியறிய வுணர்த்திக் கூவாய்! ஞானக்குயிலே! என வருளியதைக் காண்க. (9)

355. இனி, என்னை உறவுபோல் உசாவியாண்டனன் என்னும் (தி. - ன.) :—

கொந்தண வும்பொழிற் சோலைக் கூங்குயி லேயிது கேணீ
அந்தண னிவன் திங்கே அழகிய சேவடி காட்டி
எந்தம ராமிவ னென்றிங் கென்னையு மாட்கொண் டருளும்
செந்தழல் போற்றிரு மேனித் தேவர் பிரான்வரக் கூவாய்.

(இ - ள்). ஞானப்பூங்கொத்து நெருங்கும் பேரின்பச் சோலையில் இடைவிடாது திருநாமம் நவிலும் உள்ளக்குயிலே! கேள்! நமது பரமசிவன் அறவோனை செந்தண்மையுடைய அந்தண வடிவாய் எழுந்தருளி, திருவருண் ஞானத் திருவடியைத் தமது சுய சாதியென எற்களித்துத் திருவருட்பணிக்கு உரித்தாக்கிய அக்கினி வடிவுடைய தேவர்பிரானை மகாதேவனைக் கூவி எனது கூர்பசலை கூவாய்! ஞானக்குயிலே! என அருளியதைக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்

---

354. காருடைப்பொன் என்றும் கூட்டிப் பொருள் கூறுவர். செங்கமலத்தில் திகழ் உருவாகிய செல்வன்' என்பதற்கு 'மலர்மிசை ஏகினான்' என்றபடி ஹிருதய கமலத்தில் விளங்குகின்ற திருவடிச்செல்வன் என்று பொருள் கொள்ளலாம். ஆருடை அம்பொனின் மேனியமுது என்பதற்குக் காட்டிய உரை நயம் காண்க. ஆர் - ஆத்திமாலை என்று பொருள் கொள்வர் பிறர்.

355. கொந்து - கொத்து. அணுவும் - நெருங்கும். அம் + தண் + அன் = அத்தணன் என்ற சொற்பொருள் கூறியவாறு. 'எம் தமர் ஆம் இவன்'; இஃது சிவபிரான் கூற்றாக அமைந்துள்ளது. 'தமது சுய சாதி' என எற்களித்து என்பது உரை.

திருச்சிற்றம்பலம்

19. திருத்தசாங்கம்

திருத்தசாங்கமாவன :—

இவைக்கு, **அகத்தியச் சூத்திரம் :—**

செடியுடலறுக்குந் திருத்தசாங்கம்,
அடிமைகொண்ட முறைமையதாகும்.

இப்பதிகப் பொழிப்புரையாவன :—

முற்பதிக அநுபவப்படி ஓரின்பமாய், அருளுருவாய், ஆனந்தமே யறிவாய், அபேதமாய், அதுவாய், நிற்கும்போது அக்காலத்து ஒன்றையும் முன்னிலைப் படுத்தாமல், விரும்பும் உயிர்களெல்லாவற்றையும் நோக்கித் திருவருட் பயனை அடிமைப் பெருக்கமாகச் சொல்லலாமே! எல்லா வகை அங்கங்களும் முடிந்த தச காரிய உண்மைத் தெளிவே ; என வருளியதைக் காண்க.

இத்திருப்பா நேரிசை வெண்பாக, திருத்தில்லையிலோதியதெனக் காண்க.

திருத்தசாங்கத்திற்குக் கூறப்பெற்ற திருவாசக உண்மை : அடிமை கொண்ட முறைமை (எ - து.) பத்தடையாளம்,

திருவாசகச் சிறப்பு

பேர்நாடோறுமலே பேணூர்தி படைமுரசு
தார்கொடி யெலாமாற்குச்சாற்றற சாங்கமதாம்.

(பழையபுராணம்)

தசாங்கமென்பது தசகாரிய வுண்மைத் தெளிவு என்று இவ்வுரை கூறுகிறது. தசகாரியத்தின் விளக்கத்தை இந்நூல் 228 ஆம் பக்கம் அடிக்குறிப்பிற் காண்க.

இது, கிளியைப் பார்த்துக் கூறியதாகவும் கூறுவர்.

356. திருப்பா திருநாமத் (தி. - ன.) :—

ஏரா ரிளங்கிளியே யெங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமந் தேர்ந்துரையாய்—ஆரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான்
[செப்புவபோல்
எம்பெருமான் தேவர்பிரா னென்று.

விஞ—

(இ - ள்). திருவருளழகு போன்ற ஞானச் சுகமே! கேள்; நமது திருப்பெருந்துறைப் பதியான குருமணியினுடைய அழகுபோன்ற **திருநாமம்** இவையெனத் தெளிவு பிறக்கச் சொல்லாய்; சுகப் பெண்ணே!

விடை—

கேட்பாயாக! சிவானந்தப்பெண்ணே! சகலதத்துவத் தோற்ற மூலாதார ஞானப்புற்றிடங்கொண்ட ஒளிவளர் செல்வத் தியாக ராசன்; செம்பொருளாகிய பதி வர்க்க ருத்திரன்; இவனே முத லாளி; அன்றியும், வேதாகமப்படி பிரமதேவனும் மகா விட்டுணுவும் நமக்கரித்து உள்ளபடி துதிப்பதான அதிர்கசிய பஞ்சாக்கர சொரூ பன்; இனி வகையான சதா நடன **தத்துவரூபத்** திருநாமப் பொருளே எனது ஆன்ம நாயக னெனவும், நாராயணன் முதலியோரான தேவர் களடிமைப்பணி செய்யும் மகாதேவ னெனவும், சொல்லுவார்களடி; ஞானச்சுகத்தாயே! என அருளியதைக் காண்க. (1)

357. இனி திருநாடுடைய விண்பத் (தி. - ன.) :—

ஏதமிலா இன்சொல் மரகதமே ஏழ்பொழிற்கும்
நாதனமை யாளுடையா னுரையாய்—காதலவர்க்
கன்பாண்டு மீளா அருள்புரிவா னுடென்றும்
தென்பாண்டி நாடே தெளி.

விஞ—

(இ - ள்). குற்றமற்ற ஓர் மொழியருள்வதான சிவானந்த பச் சைக் கிளியே! கேள்; சகல அத்துவாப் பொருளான தத்துவ நாதன்

---

356. ஏர் - அழகு. தேர்ந்து உரையாய் - ஆராய்ந்து சொல்லு வாயாக. ஆரூரன், செம்பெருமான், தேவர்பிரான் என்பன நாமங்கள். வெண்மலரான் - பிரமன்; பாற்கடலான் - திருமால்.

இங்குத் தத்துவரூபம் கூறப்பட்டது.

நம்மைத் தத்துவ தரிசனந் திருவடியே யெனக் காட்டிய நாடு எந்நாடடி தாயே !

விடை—

கேட்பாயாக ; திருவருட் சுகமே ! மீளா வடிமையாக ஆள்வதர்ன நாதன் திருவடியே தத்துவ தரிசனம் என அநுக்கிரகஞ் செய்வதான, ஞான, தக்ஷண திருப்பாண்டி நாடெனத் தெளிந்து நிட்டை கூடுவாய் ; சிவானந்த சுகமே ! என வருளியதைக் காண்க. (2)

358. இனி, திருப்பதி யருள்வதான (தி. - ன.) :—

தாதாடு பூஞ்சோலைத் தத்தாய் நமையாளும்
மாதாடும் பாகத்தன் வாழ்பதியென்—கோதாட்டிப்
பத்தரெல்லாம் பார்மேற் சிவபுரம்போற் கொண்டாடும்
உத்தர கோசமங்கை யூர்.

விஞ—

(இ - ள்). ஞானப் பூங்கொத்துக்கள் மலர்தலைச் செய்யும் அருட் சோலை வாச ஞானனந்தச் சுகத்தாயே ! கேள் ; நம்மைப் பொருளெனத் திருவுளங் கொண்டு அடிமைப் பணிகொள்ளும் ஏழை பங்காளன் வாழ்ரா நின்ற ஊர் எவ்வூரடித்தாயே !

விடை—

கேளடி ! சிவானுபவச்சுகமே ! தத்துவ சுத்தி செய்து சிரடியார் அனைவரும் இம்மையிலே அம்மையான சாயுச்சியப் பதவியான சிவபுரமானது திருவுத்தர கோச மங்கை ஊரடி இவையேயென, நிட்டை கூடுவாய் ; சுகமே ! என அருளியதைக் காண்க. (3)

---

357. ஏதம் - குற்றம். மரகதம் - பச்சைக்கிளி. ஏழ்பொழில் - ஏழுலகம் என்பர்.

இங்குத் தத்துவ தரிசனம் கூறப்பெற்றது.

358. தாது - மகரந்தம். தத்தை - கிளி. கோதாட்டி - சீராட்டி. இது தத்துவ சுத்தி.

359. இனி, திருநீத்தருள்வதான (தி. - ன.) :—

செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வீநஞ் சிந்தைசேர்
ஐயன் பெருந்துறையா ளுறுரையாய்—தையலாய்
வான்வந்த சிந்தை மலங்கழுவ வந்திழியும்
ஆனந்தங் காணுடையான் ஆறு.

வினை—

(இ - ள்). சிவந்த வாயும் பஞ்சவன்னச் சிறகும் கொண்ட ஞானச் செல்வ வானந்த சுகத்தாயே! கேள்! நம்து சிந்தையே இட மாகக்கொண்ட குருமணி நாதத் திருப்பெருந்துறையாள்வான் ஆறு சொல்வாய்; சுகமே!

விடை—

சிவானந்தச் சுகப்பெண்ணே! தத்துவ சுத்தியே சைதன்னிய ஞானகாச சித்துரூப சிவான்மீக சிந்தையி லுளதாகிய பஞ்ச மலரகித மாக எழுந்தருளுஞ் சிவானந்த உயிரே ஆருக வுடைய நாதனடி; ஞானத் தாயான சுக வாழ்வே! என அருளியதைக் காண்க. (4)

360. இனி திருமலை யங்கமான (தி. - ன.) :—

கிஞ்சுகவா யஞ்சுகமே கேடில் பெருந்துறைக்கோன்
மஞ்சன் மருவு மலைபகராய்—நெஞ்சத்
திருளகல வாள்வீசி யின்பமரு முத்தி
அருளுமலை யென்பதுகாண் ஆய்ந்து.

வினை—

(இ - ள்). சிவந்த வாயையுடைய அழகான சிவானந்த சுகத் தாயே! கேள்; ஓர் காலமுங் கேடில்லாத திருபெருந்துறையுள் எழுந்தருளியுள்ள திருவருளாழகனை குருநாதன் வாழுந் திருமலை எம் மலையடி? தாயே!

விடை—

கேட்பாயாக, என் சொல்லை, ஞானப்பெண்ணே! எனது ஆன்ம தரிசனம் அடி ஞானமே யன்றி வேறில்லை யென்னும்படி எனதுண்மை

359. வான் வந்த சிந்தை - ஞான ஆகாச சித்ரூபச் சிவான்மீக சிந்தைவான் என்பதற்குப் பெருமை என்று பிறர் பொருள் கூறுவர். ஆனந்தமே ஆருகக் கூறப்பட்டது.

இஃது ஆன்மரூபம்.

மலம் அகல ஞானத்தால் அறவிடித்து, இன்பமே உருவாக அடிமைப் பணிகொண்டு பரமுத்தி யருளும் மலையே மலை, என அறிவான அருளால் ஆராய்ந்து பாரடி, ஞானத்தாபான சுகவாரியே! என அருளியதைக் காண்க. (5)

361. இனி திருப்பரி யருள்வதான (தி. - ன.) :—

இப்பாடே வந்தியம்பு கூடுபுக லென்கிளியே
ஒப்பாடாச் சீருடையா னூர்வதென்னே —எப்போதும்
தேன்புரையுஞ் சிந்தையராய்த் [1]தெய்வப்பண் ணேத்திசைப்ப
வான்புரவி யூரும் மகிழ்ந்து.

வினா—

(இ - ள்). என்புலாலுடம்பே புகுந்தருளுஞ் சிவானந்த சுகப் பெண்ணே! என் பக்கலானதில் வந்து உண்மை மொழிவாய், ஞான வல்லியே! ஒப்புவமையற்ற கீர்த்தியுடைய நாதனெழுந்தருளும் ஊர்தி யாதடி?

விடை—

கேட்பாயாக, சிவானுபவச் சுகமே! எல்லாச் சுட்டறிவுங் கெட்டு, திருவருட் செயலே செயலாக, ஆன்ம சுத்தியான அநாதியான பேரின்ப உருவாகித் தெய்வப் பண்ணால் தேவர்கள் தொழு தேற்றும் ஞானப் புரவி மேலெழுந்தருள்வதான நாதனடி; தாயே! என அருளியதைக் காண்க. (6)

---

360. கிஞ்சுகம் - முருக்கம்பூ; சிவந்த நிறமுடையது. அம் சுகமே - அழகிய கிளியே! மஞ்சன் - அழகன்: மஞ்சு - அழகு; மைந்தன் என்பதன் மரூஉவாகவும் கொள்ளலாம். இருள் - மலவிருள். வாள் - அறிவான அருள் வாள்.

இஃது ஆன்தரிசனம்.

பி - ம். 1. தெய்வப்பெண்.

361. கூட்டிற் புகாதே; இந்தப் பக்கம் வந்துபேசு என்பது வெளிப் படையான பொருள். கூடு என்பதை உடம்பாகக் கொண்டும் புகல்கிளியே என்பதை வினைத்தொகையாகக்கொண்டும் இங்கு உரை கூறப்பட்டுள்ளது. ஒப்பு ஆடா - உவமையில்லாத. பிரத்திய வுபாங்கம் என்று ஏட்டில் எழுதப்பெற்றுள்ளது. வான் புரவி என்பதற்கு ஆகாயமாகிய குதிரை என்று பிறர் பொருள் கூறுவர்.

இது ஆன்மசுத்தி.

362. இனி, திருப்படை திருக்கையிலணிவதான (தி. - ன.) :—

கோற்றேன் மொழிக்கிள்ளாய் கோதில்
[பெருந்துறைக்கோன்
மாற்ரூரை வெல்லும் படைபகராய் ஏற்ரூர்
அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயும்
கழுக்கடைகாண் கைக்கொள் படை.

வினா—

(இ - ள்). இன்பத்தேன் போன்ற மொழிச் சுக ஞானப் பெண்ணே ! நமது குற்றமற்ற திருப்பெருந்துறை நாதனுக்கு மாற்ரு ரான அஞ்ஞானத்தை வெற்றி செய்யும் ஞான **ஆயுதம்** எவ்வகை ஆயுதம் ? சொல்லடி.

விடை—

ஞானனந்தக் கண்மணியே ! கேள் ! நாதனுடைய சன்னிதானப் பட்ட சுத்தான்மாக்களே **சிவரூபம்** ; அவர்களிடம் மலம் அணுகா வண்ணம், அவர்கள் நெஞ்சுருக, மும்மலங்களையும் அறுப்பதான ஞானவாளே, திருக்கையிலணிந்திருப்பதடித்தாயே ! என அருளிய தைக் காண்க. (7)

363. இனி, நாதமே திருவாத்தியமான (தி. - ன.) :—

இன்பான் மொழிக்கிள்ளா யெங்கள் பெருந்துறைக்கோன்
முன்பான் முழங்கு முரசியம்பாய்—அன்பால்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் பறை.

வினா—

(இ - ள்). பேரின்பச் சுகமொழியும் பெண்ணே ! நமது திருப் பெருந்துறைக் குருநாதன் சந்நிதியில் முழங்கு முரசு எவ்வகை வாத்தி யம் ? சொல்லடி.

---

362. கோல்தேன் - கொம்புத்தேன். ஏற்ரூர் - ஆட்கொள்ளப் பெற்றவர் ; நாதனுடைய சந்நிதானப்பட்டவர் என்று உரை கூறும். பாயும் - மீது பாய்ந்து அறுக்கும். கழுக்கடை - சூலம் ; அதனையே உரை ஞானவாள் என்றது போலும்.

இது சிவரூபம்.

விடை—

அன்பாய்க் கேட்பாயாக, சிவானந்த சுகமே! எனது உண்மைப் பிறவிப் பகை கலங்கியோடச் சிவமே தானென வின்பப் பிறவியாகப் பேரின்ப தரிசனமே யோங்கி முழங்கும் பர நாதமே பறையான வாத் தியமடி, தாயே! என வருளியதைக் காண்க. (8)

364. இனி, திருமாலியணிவதான (தி. - ன.) :—

ஆய மொழிக்கிள்ளா யள்ளுறு மன்பர்பால்
மேய பெருந்துறையான் மெய்த்தாரென்—தீயவினை
காளுமணு காவண்ணம் நாயேனை யாளுடையான்
தாளியறு காமுவந்த தார்.

விளை—

(இ - ள்). வேதாகமப்பொருள் சிவனேயென ஆராயும் வார்த் தையையுடைய ஆனந்த சுகப்பெண்ணே! கேள்; சிரடியாருள்ளக் குழைவிலே கனிந்தூறும் அன்புடையார் பக்கம் இடைவிடாது அபேதமாய் வாழ்ந்திருப்பதான திருப்பெருந்துறைக் குருநாதன் அணிவதான திரு மாலை எம்மாலையடி? தாயே!

விடை—

கேட்பாயாக ஞானச்சுகாதீதமே! சுத்திய யோக நிட்டை கூடிய போது எற்றைக்கும் முழுவினையும் எக்காலமும் பொருந்தாவண்ணம் நாயேனைச் சிவயோகமே பொருளெனக் காட்டியன்படிமை செய்வதான சிவனுக்குகந்த, தாளி மலரும் அறுகுமே அறுபோக மாலையடி; தாயே! என வருளியதைக் காண்க. (9)

---

363. பால் மொழி - பால்போன்ற மொழி. முன்பு - சங்கிதி. இயம்பு - சொல். பருமிக்க - பெரிய.

இது சிவதரிசனம்.

364. ஆய மொழி - ஆராய்ந்த மொழி; உரையைக் காண்க. அள்ளுறும் - கனிந்தூறும்; என்புருக ஊறும் என்றபடி. தார் - மாலை. தாளியும் அறுகுமே தார் என்றபடி. தாளியறுகு என்று கூட்டிக் கொடி அறுகு என்பாரும் உளர்.

இது சிவயோகம்.

365. இனி திருக்கொடிபணிவதான (தி. - ன.) :—

சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியுங் கொடிகூறாய்—சாலவும்
ஏதிலார் தூண்ணென்ன மேல்விளங்கி யேர்காட்டும்
கோதிலா வேறுங் கொடி.

விஞ—

(இ - ள்) ஞானச்சோலையில் வாழும் பச்சைக்கிளியே! கேள்! பரிசுத்த சாட்குணிய திருப்பெருந்துறைக் குருமணி நாதற்குத் திருவருளழகான கொடி. எக்கொடி? அடிதாயே!

விடை—

சிவானந்த சுகமே! கேள்; மிகுதியுந் திருவடி ஞானப்பகையோர் அச்சப்படுவதாகச் சருவ வியாபகம் சிவனே யென, திருவருளைக் காட்டுங் குற்றமற்ற வேறென்றிருந்த என்னை, யான் பெற, வேறின்மை காட்டும் மெய்கண்ட சிவபோகக் கொடியே! 'பத்துவகை ஐந்திலு முத்திறங் காட்டும், பரையே ஆன்ம லாப'மெனத் தசாங்கத் தச காரியச் சிவானுபவ சுபானுபூதிகக் கொடியென வருளியதைக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்

---

365. கோலம் பொலியும் - அழகு மிகுந்த. ஏதிலார் - பகைவர். எர் - அழகு. ஏறு - இடபம்; இப்பொருள் உரையிற் காட்டப்பெறவில்லை.

இது சிவபோகம்

20. திருப்பள்ளியெழுச்சி

இனி, திருப்பள்ளியெழுச்சி :—

அவைக்கு அகத்தியச் சூத்திரம் :—

திரோதான சுத்தி

இப்பதிகப் பொழிப்புரை யநுபூதி :—

முற்பதிக வரை, நாலாமிடமான கருணையின் பெருமையருளி, இப்பதிகமுதல் ஐந்தா மிடமானது வினவில், கேவல சகல சுத்த நீங்கி, உயிரானது திருவருள் உதயமாகுங் காலம் அப்பரையே யிருள் நீங்கிக் கதிர் உதயமாகும்போது, திருவருட்செயலே பரைப் பேருக அருளிய தெனக் காண்க.

இத்திருப்பா, ஆரிரிய விருத்தமாகத் திருப்பெருந்துறையிலோதி யதெனக் காண்க.

366. இனி, திருவருளுதயமானமையைக் கூறும் (தி. - ன.) :—

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணை துணை மலர்கொண்
டேற்றினின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழினகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெமை யுடையாய்
எம்பெரு மான் பள்ளி யெழுந்தரு ளாயே.

இப்பதிகத்தின் திருவாசகத் திருவுள்ளக்கிடை :—திரோதானசுத்தி எ - து. எகமாகிய திரோதாயி மறைப்பான மலம் நீங்குதல்.

திருவாசகச் சிறப்பு :—

வர்மருவு திருப்பள்ளி யெழுச்சிபணி விடைகேட்
டார்வமுட னண்டவரற் கன்புசெயு மியல்பே.

(பழைய புராணம்)

(இ - ள்.) மலபரிபாகவான்ம சிற்சத்திப் பெண்கள் அனைவரும் கூடி, சிந்தைப் பாழறையைப் பள்ளியறையாகக்கொண்ட திருவோலக்கத் தரிசனத்தைத் துதிப்பது.

என்னுயிர்க்கு 'அகர முதலெழுத்தே' போல் விளங்கும் பரம சிவனே! தேவரீர் அடிமையை இரட்சிக்க! ஏது நிமித்த மெனின், கேவல சகலம் நீங்கிச் சுத்தமான திருவடி ஞானம் அறிவில் உதய மாயிற்று; ஆனதுகொண்டு, இரண்டு பொற்பாத கமலங்களையும் ஞான மலரால் அர்ச்சனை செய்து, துதித்து வணங்கவே, நாதனுடைய திருவருண் முகமண்டலக் கருணையின்பம் நமக்கெல்லாம் அருளும். அவ்வருளால் புன்சிரிப்புக்கொண்டு திருவடியைப் பூசிப்போம்; ஆனால், அவ்வருளுடைக் கடவுள் யாரெனில், தாமரை மலர் பொலியுங் குளிர்ந்த வயலுடைய திருப்பெருந்துறைப்பதியுடைய சிவகுருநாதன்; அவன் அங்கம் வினவில், இடபக்கொடியுடையான்; எம்மனோர்களை அநாதியே யடிமை கொண்டவன்; எமதுயிர்ப் பொருள்; இவ்வகையுடைய சுவாமி, எமதுளத்தில் திருப்பள்ளியோலக்கங் கொள்ள எழுந்தருளுக எனவருளியதைக் காண்க.

367. இனி, பாசம்து அகலப் பரஞானம் வெளியுற்றமையைக் கூறும் (தி. - ன.) :—

அருணனிந் திரன்றிசை யணுகின னிருள்போய்
அகன்றது வுதயனின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரிய னெழவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலெங் கண்ணுந்
திரணிரை யறுபதம் முரல்வன, இவையோ
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருணிதி தரவரு மானந்த மலையே
அலகட லேபள்ளி யெழுந்தரு ளாயே.

---

366. பள்ளி யெழுந்தருளாய் - என்றதற்கு இறைவனைத்தூயி லெழுப்புவதாகப் பிறர் கொள்வர். இவ்வுரையோ இறைவனை அடியார் தம் மனத்தில் திருப்பள்ளி ஓலக்கங்கொள்ளவேண்டுவதாகக் கூறும். முதல் - மூலம். புலர்ந்தது - திருவடிஞானம் உதயமாயிற்று; விடிந்தது. ஏறு - உயர்கொடி.

வினை—

(இ - ள்.) கீழ் நாடலான பசுபோத இருவினை யொப்பாகி, மல பரிபாகம் பிறந்தது; அவற்றில் அதிதிவர சத்திநிபாதமான அருணன் முன் அவர் பாசம் அகன்றது; விளக்கவினைய மாயையான‌து விடிந்தது; திருவருள் உதயமாகவே, அவ்வருளுக்கு முதலாகிய பேரின்பச் சூரியன் விளங்கி, உயிர்க்குப் பெருங்கருணை யருள, அந் நோக்கமே மேன்மேலும் பொங்கி, சீவனுக்குள்ளே சிவமணம் அபேதவத்துவிதக் காட்சியாக வியாபிக்க, நமது நாதன் திரு நோக்கமே அவ்வருள் இன்ப காரணம் சுகத்துக்கு; அடியரான வண்டுகள் நிரை நிரையாகத் துதித்து நிற்க, இவ்வகையோ திருவடி பெறுவது! திருப் பெருந்துறைப் பரமசிவனே! சிவானுபவ சுவானுபூதிகத் திருவருட் கடாட்ச ஆனந்த ரத்தினம் அருள்வதான பேரின்ப மலையே! ஞானக் கடலே! திருப்பள்ளித் திருவிழா அடியேன் சிந்தையிற் கொண்டருள வேண்டும்" என அருளியதைக் காண்க. (2)

368. இனி, யாவர்க்கும் அரிய திருவடி அடியேற் கெளிவந் தருளிய தெனக்கூறிய (தி. - ன.) :—

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுக ளியம்பின வியம்பின சங்கம்
ஓவின தாரகை யொளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரு மறிவரி யாயெமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

(இ - ள்) எனது உயிரான்ம நாதனே! விண்ணப்பம்: திருவருள் பிரகாசிக்கும் பக்குவ காலத்தில், தத்துவ உற்பத்தியாகும் பர நாதக் குயில் கூவுகிறதே! பிரணவக் கோழியுங் கூவுகிறதே! நவசத்தியான பட்சி சாலங்களுஞ் சத்திக்கின்றனவே! கலை ஞானவெண் சங்கம் ஓசைப்படுகிறதே! இப்பிரேரகத்தால் ஆன்ம நட்சத்திர சிற்சத்தி

---

367. இச்செய்யுள் முழுமைக்குமே அநுபூதிப்பொருள் அமைத்தினள்ளது காண்க.

தற்செயலற்று ஒளிக்கின்றதே! சிவஞானப்பிரகாச சூரியன் உதய மாகிறதே! நாங்கள் அடிமையாகி எங்களிடம் பேரின்பப் பரமுத்தி யிச்சை பெருகுதலால் மகாதேவனே! தேவரீர், குஞ்சித பாதத் திருவடிகளைக் காட்டீரோ! திருப்பெருந்துறையில் எழுந்தருளிய குரு மணிப் பொருளே! மூவகை ஆன்மாக்களுக்கும் அறிவொண்ணாத நாதா! அடியேற் கெளிவந்தருளுஞ் சிவனே! திருப்பள்ளித் திருவோலக்கமாக என்னுள்ளத்தில் எழுந்தருளாய்" என அருளியதைக் காண்க. (3)

369. இனி,. சிரடியாருடன் பணிக்கருள வேண்டும் என்ற (தி.-ன.):—

இன்னிசை வீணைய ரியாழின ரொருபால்
இருக்கொடு தோத்திர மியம்பின ரொருபால்
துன்னிய பிணைமலர்க் கையின ரொருபால்
தொழுகைய ரழுகையர் துவள்கைய ரொருபால்
சென்னியி லஞ்சலி கூப்பின ரொருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுக்தரு ளாயே.

(இ-ள்.) ஆண்டவனே! தேவரீர் திருப்பள்ளியெழுச்சியான பரை சொரூப திருவோலக்கத் திருச்சபையிலே தானழியப் பெற்ற சுகாதீத சிவனடியார்கள் ஞான இசை பொருந்திய வீணாகானப்பட்ட வோசையால் திருநாமப் பொருளைத் திருச்செவிக்கேற்பத் துதித்தும், பண்ணுடன் கூடிய யாழினற் புகழைத் துதித்தும் நிற்க, வால கில்லியர் முதலோர் சந்நிதியில் நிற்க, வேதங்களின் உண்டாகிய உட்பொருளாள் திருநாமத்தை இருக்குமுதல் அநேக சுருதிகளைச் சொல்லித் துதித்தும் சிலர் நிற்க, நால்வகை மலரால் இண்டை கொண்டையுடன் அநேக புட்பங்களைத் திருவடியிற் பூசிக்கச் சிலர் ஒரு சார்பு நிற்க, திருவடியை மனவாக்குக் காயத்தால் அங்கப் பிரதட்சண தியானத்தைத்திரமே பொருளெனக்கொண்டு சிலர் ஒரு சார்பு நிற்க, திருமேனி யருமைகண்டு, 'என் பொருட்டோ இவ்வருட்

---

368. குருகு - பறவைப்பொது. ஒவின - நீங்கின; ஒளிக்கின்றது என்றார். விருப்பொடு என்பதை நமக்கு என்பதனுடன் புணர்த்திப் பொருளுரைக்கின்றார்.

கோலம்!' என நிட்டை கூடி ஆனந்தக் கண்ணீர் சோரச் சிலர் ஒரு சார்பு நிற்க, 'குஞ்சிதத் சேவடியைக் கும்பிடவே யன்பு' என விருமை யுஞ் சென்னியின்மேற் கூப்பி நிட்டை கூடிச் சிலர் ஒரு சார்பு நிற்க, இவ்வகை, சங்கிதியில் நிற்போர்க் கருள்வதான திருப்பெருந்துறைச் சிவகுரு நாதனே! ஓர் வகையும் தெரியாத அடியேன் பேரிற் கிருபை யருளி அடிமையாக இரட்சித்த கருணைப்பிரானே!! அடியேன் உளத் தில் திருப்பள்ளி ஞான விழாக் கொண்டருள வெழுந்தருள வேண் டும்" என அருளியதைக் காண்க. (4)

370. இனி, குஞ்சிதபாதமே சருவ பரிபூரணமென்ற (தி.-னை.):-

பூதங்கள் தொறுநின் றுயெனி னல்லாற்
போக்கிலன் வரவில னெனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுத லாடுத லல்லாற்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்ன
சிந்தனைக் கும்மரி யாயெங்கள் முன்வந்
தேதங்க ளறுத்தெமை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

(இ-ள்.) ஆண்டவனே! தேவரீர் திருவடி பிருதிவி முதல் நாத முடிவாகச் சகல தத்துவங்கட்கும் பிரேரகப் பொருளாயிருந்தும், போக்குவரவில்லாது அசைவற்ற சுவாமியாலுலும், தேவரீர் திரு வடியைத் தியான பாவனை பண்ணி வேதகீதச் சுருதியால் துதிப்ப தன்றி, திருவடி ஞானத்தைப் பிரத்தியட்சமாகக் கண்ட சீரடியாரை உபதேசத்தாற் கேட்டதில்லையே! திருவருட் குளிர்ச்சியான ஞான வயல் சூழ்ந்த திருப்பெருந்துறை மன்னவனே! தற்போதச் சிந்தனைக் கும் எட்டாத சிவனே! அறிவிலாத எங்கட்குக் கட்புலப்பட எழுந் தருளி எம்மனோர் பாச விமோசனம் செய்து அடிமை செய்து அனுக் கிரகஞ் செய்யுமென் ஆன்ம நாதனே! திருப்பள்ளி யெழுச்சியான திருவோலக்க விழா என்னுளத்திற் கொண்டருள்வாய்" என அரு ளியதைக் காண்க.

---

370. பூதங்கள், பிருதிவிமுதல் நாதம் உள்ளிட்ட தத்துவங்கள் என்று உரை கூறுகிறது. உனைக் கண்டறிவாரைக் கேட்டறியோம் என்க. சீதம் - குளிர்ச்சி. ஏதம் - குற்றம்.

371. இனி, பரப்பமைந்த சிந்தையுள் வாழ்வன் என்ற (தி. - ன.) :—

[1]பப்பற விட்டிருந் துணருகின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானிடத் தியல்பின்
வணங்குகின் றுரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

(இ - ள்). சுவாமி! தேவரீர்; திருவடியைப் பாற்கலன் மேற் பூஞை அருந்த நாடுங் கடமைபோல் அல்லாது, விஷயரூப வியாபகப் பரப்பமைந்து உண்மை நிட்டை கூடுஞ் சீரடியார் பாசத்தை அகல்விக்கும்போது, அவ்வன்புடையர் அனேக சத்தி களும் மானிடமாய் வந்த திருமேனியே குறியாகக் கொண்டு பூசிப் பார்களே! திருமணக்கோல வடிவை உவமியப் பொருளான, தாமரை மலர்வதான திருவயல் சூழுந் திருப்பெருந்துறைப் பரமசிவனே! இனிப்பிறவாவண்ணம் எம்மனோர்களே யடிமைப் பணி கொள்ளும் ஆண்மைநாதா! திருப்பள்ளி யெழுச்சியான திருவோலக்க விழா என்னுளத்திற் கொண்டருள வெழுந்தருள்வாய் என அருளியதைக் காண்க. (6)

---

370 பி - ம். 1. பப்பற வீட்டிருந்து.

371. இச்செய்யுளுக்குப் பிறர் பலவாறு வேறு பொருள் கூறுகின்றனர். பப்பற வீட்டிருந்துணரும் கின் அடியார் என்பதற்கு, 'விஷயரூப வியாபகப் பரப்பமைந்து உண்மை நிட்டை கூடும் சீரடியார்' என்பது இவ்வுரை. மைப்புறு கண்ணியர் மானிடத்தியல்பின் என்பதற்கு, 'மக்கள் இயல்பினரான மாதரும், என்றும், 'மானிடப்பெண்களின் இயல்பினைக் கொண்டு அகப்பொருள் படும்படி தாம் கின்று, என்றும் பிறவாறும் பிறர் பொருள் கூறுவர். செப்புறு கமலங்கள் என்பதற்கு உவமையாகச் சொல்லப்படுகின்ற தாமரை என்பது இவ்வுரை. செப்புப்போன்ற கமலங்கள் என்பர் பிறர்.

372. இனி, அறிவிலாது உயிரை ஆட்கொளுந் திறமருள வேண்டுமென்ற (தி. - ன.) :—

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென வமரரு மறியார்
இதுவவன் றிருவுரு இவனவ னெனவே
எங்களீ யாண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழிற்றிரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னு
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

(இ - ள்). சுவாமி! தேவரீர்! திருவடி ஞானத் திருவருள் பழுத்தளிந்த கருணை, வானவர் ஆராவின்பத் தீராக்காதல், எனச் சீரடியார் சிவானுபவமே யொழிய எத்தேவர் முதலானவர்களிற் பரிபாகமில்லாத வுயிர்கட்குப் புலப்படாதது; அவையோ, தேவர்காள்! எங்கள் திருவுருவிருந்தவா பாரீரோ! அவன் இவனுகுவது அவனருள் அல்லாது, எம்மனோரை அடிமைப்பணி கொள்வதாக இப் பூவில் எழுந்தருளும் இன்பச்சோலை சூழ்ந்திருவுத்தரகோச மங்கைப்பதியான திருப்பெருந்துறைக்கோவே! தேவரீரல்லாது எத் தேவர்கள் உங்களீ அருட்பணிக்காட்படுத்துவர்? அத்தகையோர் உளரோ? உண்டென வுபதேசம் பெறுவோமோ? எமதான்ம நாதனே! திருப்பள்ளி யெழுச்சியான திருவிழா வருள வேண்டும் என அருளியதைக் காண்க. (7)

373. இனி, சீரடியாருள்ளமே திருக்கோவிலாகக் கொண்ட தென்ற (தி. - ன.) :—

[1]மூந்தியு முதல்நடு விறுதியு மாலுய்
மூவரு மறிகில ரியாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயுநின் னடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே

---

372. அது - திருவடி; ஞானத் திருவருள். அமுது - வானவரமுது; ஆராக்காதல் தீராக் காதல் என்றார். இது - தம்மைச் சுட்டித் தேவர்களை விளித்துக் கூறியது. இவன் - தான். அவன் - சிவபெருமான்.

பி - ம். 1. மூந்திய

செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னுவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே.

(இ - ள்). ஆன்மநாதா! ஒரு விண்ணப்பம். எத்தத்துவ எக்கர்த்தாக்களும் அநாதியே அந்தத் திருவுருவுடையவன்; ஆதலால், ஆதி நடு வந்தமுந் தேவரீரே! உமது திருவடியைப் பிரமன், அரி, இந்திரன் மூவரும் அறியாதே போலுல், மற்றறியுந் தேவருளரோ? பராசத்தியும் பரமசிவனுமாகத் திருவடி ஞானமே பொருளாகக் கொண்ட சீரடியாருடல் இடமாகப் புலப்படுவதான சுவாமி! எங்கட்குத் தழலுருவான திருவுருவையுங் காட்டி, அவ்வுருக் கொண்டெழுந்தருளிய திருப்பெருந்துறைக்கோயிலுங் காட்டி, அக்கோயிலில் ஓர் அந்தண வடிவான குருமேனியுங் காட்டி, அடிமைப்பணிக்கு ஆளாக்கிய ஆராவமுதான நாதா! என்னுள்ளத்திலே திருப்பள்ளியெழுச்சியான திருவிழாக் கொண்டருள அருள்வாய் என அருளியதைக் காண்க. (8)

374. இனி, சருவான்மாக்களுக்கும் ஆதார வறிவான வனென்ற (தி. - ஞ.) :—

விண்ணகத் தேவரும் நண்ணவு மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும்பு மடியார்
எண்ணகத் தாயுல குக்குயி ராஞய்
எம்பெருமான் பள்ளி யெழுந்தரு ளாயே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவடியை விண்டு முதலிய தேவர்கள் தங்களறிவால் பொருந்திப் பேரின்பம் பெற மாட்டாதவர்களாயினர்; அத்தகைய பெரிய பொருளே! தேவரீர் திருவடியில் தொன்றுதொட்டு அடிமைப்பணி செய்யுஞ் சீரடியார்கள் பொருட்டுப் பூவிலெழுந்தருளி, அவர்களுள்ளத்தில் திருவடி ஞானம் அத்துவிதமாக இன்பருள்வோய்! எல்லா வுலகமும் பொருந்திய திருப்பெருந்துறையோய்! பரம்பரையாய்த் திருத்தொண்டடிமை செய்யும்

373. முந்தியும் - பின்பு தோன்றிய தத்துவங்களும் கர்த்தாக்களும் முன்பு அவனிடம் ஒடுங்கியிருந்தனவே என்பது கருத்து. பந்து அணை விரலி - பராசத்தி. குடில் - உள்ளம்.

அடியார் கண்ணின்புற, அறிவின் கண்களே கண்கள்; உள்ளப் பேரின்பத்தேனே! போத பரமானந்த சிவக்கடலே! ஞானக்கரும்பே! பேணுவார் இச்சை செய்து வேண்டுவதே வேண்ட அருள்வோய்! அவர்கட்கு அருளாயிருந்தும், எல்லா வுயிர்க்கும் உயிராய கருணையே! என்னை இரட்சிக்கும் பெருமானே! திருப்பள்ளி யெழுச்சியுலா என் னுளத்தில் வெளியுற அருள்வாய் என வருளியதைக் காண்க. (9)

375. இனி, திருவடி ஞானம் பெறுவது, திருநடனந் தென் றிசை நோக்கியதால், இவையே சுத்த பூமியென்ற (தி. - ன.) :—

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவு மலரவ னுசைப்
படவுநின் னலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே.

(இ - ள்). பரிபாகவுள்ளமே கேள்! உத்தம அண்ட, உத்தம கண்ட, உத்தமதீர்த்த, இத்தேச, நடனம் தென்பால் சிவபூமியிற் பிறக்க, பரிபாகமில்லாது வீணாட் கழித்தோமே. முன்னருளிய பூதேசம் முத்தித் துவாரம் எனக்கண்டு, திருப்பெருந்துறைச் சிவ குருவே! அயன் திருமால் ஆசைப்பட்டுப் பரிபாகமில்லாது நிற்ப, தேவரீரைப் பிரியாத பார்ப்பதியுந் தேவரீரும் திருவுருக் கொண்டு எங்களை அடிமை கொள்ள, பூவிலெழுந்தருளிய இன்பக் கட்டியே! என்னுளத்திலே திருப்பள்ளி எழுச்சியான திருவுலா விழாக்கொண் டருள எழுந்தருள வேண்டும் என அருளியதைக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்

---

374. கண்ணுதல் - நெருங்குதல். விழுப்பொருள் - மேன்மையான பொருள். தொழுப்பு - தொண்டு. கண்ணகத்தே நின்று களிதருதேனே, இதற்கு உரிய உரை சிதைந்துள்ளது - கண்ணினிடத்தே நிலைத்து மகிழ்ச்சியைத்தரும் இனியோனே என்பது பொருள். கடலமுதே என்ற தில் கடல் என்பதற்கு மட்டும் பொருள் கூறப்பட்டுள்ளது. விரும்புமடி யார் என்பது பாடம். அடியார் எண் அகத்தாய் என்பதற்கு அடியார்களின் எண்ணத்திலுள்ளாய் என்பது தெளிபொருள்.

375. புவனி; தென்பால் சிவபூமி என்றார். அவம் - வீண். நோக்கி, போய் பிறவாமையால் போக்குகின்றோம் என்று கூட்டுக. கருணை - பார்வதி. அவனி - பூமி.

21. கோயில் முத்த திருப்பதிகம்

இனி, கோயின் மூத்த திருப்பதிகம்.

அவைக்கு அகத்தியச் சூத்திரம்.

கோயில் மூத்த திருப்பதி கந்தா
லுயில னுதி யான சற்காரியம்.

பொழிப்பனுபூதி :

சத்தியும் சிவமும் ஒத்து இருபாலுற முத்தியாகு முறைமை யருளிய உண்மை :

ஆசிரிய விருத்தம்.

376. இனி, அநாதி சதா நடன முத்தி பஞ்சாக்கரத் (தி. - ன.) :—

உடையா ளுன்ற னடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானு லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்குமரு ளேப்புரி யாய்பொன்
[னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம்
[முன்னின்றே.

(இ - ள்). பரமசிவனே ! ஓர் விண்ணப்பம். அநாதியே தேவ நீர் திருமேனியான பராசத்தியும் பரமசிவனுன பாமான்மாவும் அபே

கோயின் மூத்த திருப்பதிகத்துக்குத் திருவாசக உள்ளக்கிடை :— அநாதிப்பாகிய சற்காரியம்.

திருவாசகச்சிறப்பு :—'கோயின் மூத்ததிருப்பதிகம் சிதம்பரத்தி லருளுடையுங் குறிப்பதாகும்' (பழைய புராணம்).

இத்தலைப்பினை மூத்தகோயில் என்றும், மூத்த பதிகம் என்றும் இரு வகையாகவும் பிரித்துப் பொருள் காண்பர் பிறர்.

இது திருத்தில்லையில் அருளியது.

இஃது அந்தாதியாக அமைந்துள்ளது.

தப் பொருளான குணகுணி பாவமாயிருந்தபடி எனது உயிரிலும் இருவரும், இருவருள் யானும், அபேதவத்து விதமாகக் குஞ்சித பாதக் கீழிருப்பதானலும், உனது சிரடியார் திருவுளப் பணி செய்ய அருள வேண்டும்; ஈறிலாத சருவான்ம முதலே! எனது உண்மை மலமகல மன்னுபோத வாழ்வளிக்க முன்னின்றருள்வாய். (எ - று).

எனவே, அநாதிமுதலிற் புக்குறுவதான சம்பிரதாய வநுபூதி:—

இச்சகத்துக்கு ஆண்டவன் சிவானந்த சுகேந்திரன்; அவன் இராசா; அந்த விராசனுக்குத் திரிவித கரணம்; அவை பதி, பசு, பாசம்; அவை வழித்தான முச்சத்திகள்; அவர்களுள், வல்லமை யானந்தவல்லி என்ற இராசனுக்குச் சொந்த ஸ்ரீ; அவித்தியாகாரி யென்றொரு போக ஸ்ரீ; மாயாவல்லி யென்றொரு அதிகார ஸ்ரீ; இன்னும் அஞ்சன பூரணி யென்றொரு சகோதரி; முன்னருளிய வல்லமையான, லயபரானந்த ஸ்ரீக்குக் குடிலே யென்றொரு பெண் பிறந்தது; அவித்தியாகாரி யென்ற போக ஸ்ரீக்குச் சிவான்மன் என்றொரு பிள்ளே பிறந்தது; சகோதரியான அஞ்சன பூரணி சுந்தரிக்குப் பதிபோதை யென்றொரு பெண்; அந்தப் பெண்ணே முன் சிவான்மனுக்குக் கலியாணம் பண்ணினர்கள்; மாயாவல்லிக்குப் பசுபோதை யென்றொரு பெண்; அந்தப் பெண்ணே அவித்தியா காரிக்குச் சகோதரனை மாயாவல்லவனுக்குக் கலியாணம் பண்ணினர் கள்; அவனுக்குப் போக ஸ்ரீ ஞானத்திரு; அவன் பெண் அமிர்த வல்லி சுந்தரி; முன்னருளிய இந்திரை யென்றொரு அதிகார ஸ்ரீ; அவளுக்குச் சம்பராரி யென்றொரு புத்திரன்; அவன் ஸ்ரீ பசுபோதை; அவளுக்குச் சம்பராரி புருஷன்; வல்லமையானந்தவல்லிக்கு கஜா னன் என்றுஞ் சத்திதரனென்றும் இரண்டு பிள்ளைகள்; இளைய வனுக்கு அமிர்தவல்லி சுந்தரி ஸ்ரீ; முன்னருளிய இராசாவுக்கும் இராச ஸ்ரீக்கும் மாதா பிதா வளரோ? எனின், உளர்; அவர்கள், உலகத்திலே பெண்டாட்டியைப் பெற்றுன் பிள்ளையையும் பெற் றுன் என்ற வாக்கிய அர்த்தம் போல, அநுபூதி காண்க. முன் னருளிய விராசன் சகல புவனத்திலும் மூன்று வீடுகள் கட்டி, மூன்று ஸ்ரீக்குங் கொடுத்தார்; தனக்கும் தன் சகோதரிக்கும் வீடில்லையே! ஏனெனில் வேறே இல்லே; இவர்கட்குச் சீவன மில்லையானதால் இவர்களுடைய வீடும் இவர்கள் பிள்ளே பெண் கள் சம்பந்தா சம்பந்தங்களுக்கும் தாங்கள் உடனுயிருந்து ஆக்கினை செலுத்துகிறதே உடையானும் உடையாளுமானதால், எவ்விடத்தும் இறையடியை யன்றி இயன்றிடா, உயிர்கள்; ஈசன் தாளேயுளம்

புகுந்து, அவ்வுயிர் போல, சேட்டிப்பன்; அரனடியை அகன்று நிற்ப தெங்கே ஆன்மா?

இவ்வநுபூதியால முத்தி பஞ்சாக்கர அநாதி சம்பந்த வழக்கு முதலகவல் முதல் வாக்கியத்தும், (பக். 69 முதலியன) **வேந்தனடி** யென்ற வாக்கிய அநுபூதியாலும் (பக். 236-240) காண்க. **ஸ்ரீ** வித்தை தகர வித்தையின் அநுபவமெனக் கொள்க. (1)

377. இனி, அநாதியே முன்னின்றுண்டமையைக் கூறும் (தி. - ன.) :—

முன்னின் றுண்டா யெனைமுன்ன
மியானு மதுவே முயல்வுற்றுப்
பின்னின் றேவல் செய்கின்றேன்
பிற்பட் டொழிந்தேன் பெம்மானே
என்னின் றருளி வரகின்று
போந்தி டென்ன விடிலடியார்
உன்னின் றிவனு ரென்னுரோ
பொன்னம் பலக்கூத் துகந்தானே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் மகாகேவலத்தில் திருவடியில் இருப்பதறியாதிருந்த என்னை, பெருங்கருணையினால் அறிவு விளங்கச் செய்தது திருவருளறியும்; அவை அருளெனத் தோன்றுது மலபந்தத்தால் யானெனது என, அவை கொண்டு, தாமே தருபவரை தம் வலியினாற் கருதினேன்; அவையும் திருவருளே கூடாதுகின்ற முறையறியாது மயல்வற்றபடியால் அடியார்கட்குப் புறமானேன். பெரிய பெருமானே! திருவடி எற்கேற்பக் காட்டி, என்னை அடிமை செய்ய அநுக்கிரகம் பொருந்துக; வழி மறித்து அருளாக்கி அழைப்பது, தேவரீர் கருணையலது வேறுளவோ? பராமுகமேயானால், சிரடியார் இவ்வகையுடையவன் இப்பரிபாகக் கூட்டத்தில் அடியார் திருச்சபையில் எண்ணிக்கையில் அடியேனை வேறுக்கிவிடக் கருதுவது திருவுளந்தானே? திருமன்றுளாடும் அம்பலவனே! திருச்சபை கண்டவர்கட்குத் தீங்கில்லை; என்ற

---

376. **உடையாள் - உமை; எல்லாவற்றையும் உடையவள். உடையாள் உன்தன் நடுவிருத்தல் உண்மைநிலையிலென்றும், உடையாள் நடுவுண்நீ இருத்தல் தடத்தநிலையில் என்றும் கூறுவர்.**

ஸ்ரீ ; மனவி. இப்பகுதி சம்பிரதாய அநுபூதி உரை. எட்டிலுள்ள படி அச்சிடப்பெற்றுள்ளது.

பழமொழியும் அடியேற்கிலையோ? சுவாமி! என வருளியதைக் காண்க. (2)

378. இனி, ஆண்டவன் அடிமையை யிரட்சிப்பதே கடனென வற்புறுத்திய (தி. - ஸ.) :—

உகந்தா னேயன் புடையடிமைக் குருகா வுள்ளத்
[துணர்விலியேன்
சகந்தா னறிய முறையிட்டாற் [1]றக்க வா றென்னரோ
மகந்தான் செய்து வழிவந்தார் வாழ வாழ்ந்தா யடியேற்குன்
முகந்தான் ரூரா விடின்முடிவேன் பொன்னம் பலத்தெம்
[முழுமுதலே.

(இ - ள்). என்னை அநாதியே பிரிவில்லாத பேரின்பச் செரூபனே! தேவரீர் திருவடிக் கன்புளனுய் அடிமைப்பணி செய்து, உள்ள முருகா வண்ணம் உணர்வின்றி யிருப்பதான அடியேன்; தேவரீர் அன்புளனுய்ச் செய்யப் பராமுகமானுல், தேவரீர் அடிமைப்பே றுடையனுதலால், இச்சகத்தார் முன்பாகப்போய், சுவாமியினுடைய பராமுகக் கருணையை அலறி, உலறி யெனதாவி சோர்ந்தால், தேவ ரீரே! கருணை செய்ய வேண்டுமென வெண்ணுர்களோ? வேத கரும காண்டப்படி, வேள்வி செய்தடிமை வழிக் கொண்டவர்கள் வேண்டிய படி வாழ அருளவில்லையோ அடியேற்கு? நாதனே! திருவம்பலத்துக்கு அநாதி முதலான குஞ்சிதபாத சுவாமி! தேவரீர் திருமுகமண்டலத் திருநோக்க மருளாவிடில், அடியேன் கதியடைவது எவ்வகை? கருணை வைத்தாண்டவனே அடிமையை இரட்சிக்க! என அருளி யதைக் காண்க. (3)

---

377. முன்னம் என்னை முன்னின்று ஆண்டாய் என்க. உரையில், 'தாமே தருபவர்' என்பதைச் சிவபிராஞகவும், தம் வலியினுல் என்பதில் தம் என்பதை அடியாராகவும் கொள்க. பிற்பட்டொழிந்தமைக்குக் காரணம் உரையிற் காட்டப்பெற்றது. உன் நின்று - உன்னை நோக்கி நின்று என்று பொருள் கூறுவர்.

378. 1. பி - ம். தக்காவறன்றென்னரோ. அடிமைக்கு உகந் தானை என்றும் கொள்ளலாம். அடிமை கொண்ட கருணைக்கு உருகா உள்ளம் என்று உரைபுணர்த்துகின்றது. மகம் - யாகம். வாழ வாழ்ந்தாய் - வாழ அருளினுய். வேள்வி செய்தவர்க்கு அருளின மையை எடுத்துக்காட்டியது. முகம்-திருநோக்கம். முடிவேன்-அழிவேன்.

379. இனி, திருவடி ஞானம் அன்பாற் பெறுவதின்றி, வேறொரு வகையாலும் பெறமுடியாது என்ற (தி. - ன.) :—

முழுமுத லேயெம் புலனுக்கு மூவர்க் குமென் றனக்கும்
வழிமுத லேநின் பழவடியார் திரள்வான் குழுமிக்
கெழுமுத லேபருள் தந்திருக்க விரங்குங் கொல்லோ வென்
றழுமது வேயன் றிமற்றென் செய்கேன் பொன்னம்
[பலத்தரசே.

(இ - ள்). அகண்டாகார சச்சிதானந்த சொரூபனே! ஓர் விண்ணப்பம். ஐம்புலாதி முதலான தத்துவங்கட்கும், அவைக்குப் பிரேரகப் பிரேரிய மால் அயன் இந்திரன் முதலிய வென்போல்வார்கட்கும், உற்பத்திக்கு ஆதிமுதலே! தேவரீர் அடி ஞான அன்புடைய சீரடியார் திருக்கூட்டச் சபைக்கு, திருவருள் முதலே! அடியேற்குத் திருவருள்புத் தாயே! எப்போது கிருபை செய்யுமோ? என, அன்பால் புனித வாய் மலர்ந்து அழுவதே உண்மை யொழிய, வேறான எத்தவம் உறுதியெனச் செய்வேன்? அதனால் முத்தி பெறுவனே? திருமன்றுளாடும் ஆன்மநாதனே!—என வருளியதைக் காண்க. (4)

380. இனி, பேசாத நாளெல்லாம் பிறவாத நாளென்ற (தி. - ன.) :—

அரைசே பொன்னம் பலத்தாடு
மமுதே யென்றுன் னருணோக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபக
லேசற் றிருந்தே வேசற்றேன்
கரைசே ரடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துன் னடியேன்பாற்
பிரைசேர் பாலி னெய்போலப்
பேசா திருந்தா லேசாரோ.

---

379. மூவர்க்கும் என்றனக்கும் என்பதை உரை பிரித்துக் கூறவில்லை. வழிமுதல் - உற்பத்திக்கு மூலம். அடியார்திரள் - அடியார் திருக்கூட்டச்சபை. வான்குழுமிக் கெழுமுதல் என்பதற்குப் பிறர் பிறவாறு பொருள் கூறுவர். அருள் தந்திருக்க இரங்கும் கொல்லோ - அருள் கிடைத்திருக்க வருந்துவனே என்பது வெளிப்படையான பொருள்.

(இ - ள்). 'ஆன்மநாதனே! இரணிய மன்றுளாடும் அமிர்தமே!' என இவ்வகையாகப் புலம்பி, திருவருளையே நாடி, உணவு தேடுங் கொக்கேபோல் அடங்கி யொடுங்கித் துன்பமுற்றிருந்தேன்; சீரடியார் சிவானந்தம் பெறக் கட்புலனுக எழுந்தருளியதும் கண்டேன்; அடியேனிடத்தில், "பாலிற்படு நெய்போல வெளிப்படாது உள்ளே யிருந்து அடிமையை யாண்டவன் இரட்சியாது விடுவது நீதியோ?" எனச் சீரடியார் பழியார்களோ? அதற்காகவே அடியேனை இரட்சிக்க வேண்டும்—என்றருளியதைக் காண்க. (5)

381. இனி, திருவோலக்கத் தரிசனம் கூறிய (தி. - ன.):—

ஏசா நிற்ப ரென்னையுனக் கடியா ரென்று பிறரெல்லாம்
பேசா நிற்ப ரியான்தானும் பேணு நிற்ப னின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்குந் திருவோ லக்கஞ் சேவிக்க
ஈசா பொன்னம் பலத்தாடு மெந்தா யினித்தா னிரங்காயே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் அடிமையன் என என்னைச் சீரடியார் பழிப்புற்றார்கள்; மற்றவர்களோ என்னுடன் பேசுதலொழிந்தார்கள்; அடியேனே திருவருளைக் கண்டு வணங்காது நின்றேனே! நாதனே! தேசோமயானந்தனே! உண்மையடியார் சூழ்வதான திருவோலக்கத் திருவிழாப் பொலிவு கண்டு ஆறுதல் செய்ய, செகதீசனே! இரணியகோச மன்றுள் நடிக்கும் என்னுயிர்த்தாயே! இனியாகிலுங் கருணை செய்ய வேண்டும்—என அருளியதைக் காண்க (6)

382. இனி, சீரடியார் திருச்சபை சேர்வதைக் கூறும் (தி. - ன.):—

இரங்கு நமக்கம் பலக்கூத்த னென்றென் றேமாந்
[திருப்பேனை
அருங்கற் பனைகற் பித்தாண்டா யாள்வா ரிலிமா டாவேனு
நெருங்கு மடியார் களுநீயு நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வரவெங்கள் வாழ்வே வாவென் றருளாயே

---

380 ஏசற்ற - வருந்தி. வேசற்றேன் - வாடினேன். கரைசேர் அடியார் முத்திக்கரையைச் சேரும் அடியவர்கள். களி - சிவானந்தம்.

381. பேணு நிற்பேன் - பேணி நிற்பேன் என்றும் பொருள் உரைப்பர். தேசா - ஒளியுடையோனே! திருவோலக்கம் - சபையில் எழுந்தருளியுள்ள காட்சி.

(இ - ள்). கருணையே வடிவான திருவம்பல ஞான நடன நாதன் அடியேற்குத் திருவடி ஞான வின்பக் கருணை எக்காலமளிப்பதோ வென ஏமாறியிருப்பதான பொல்லாத பாவியேனை, அருமையான தத்துவக்கருவி கொடுத்து அறிவு விளங்க அடிமை செய்தும், தற் போத மிருதியால் மேய்ப்பானில்லாத மாடாக, என திச்சையால் திரிவது திருவுள நீதியோ? நாதனே! தேவரீர் சீரடியாரும் நாதனும் அபேத அத்துவிதமாகத் திருவிளையாடற் செய்யுந் திருச்சபைச் சந்நிதானத்திலே அடியேனுந் திருவுளப்பணி செய்ய, எனதுயிரின் பமே! என்னைத் திருவுளமிரங்கி யழைத்தருளாய்—என அருளி யதைக் காண்க.. (7)

383. இனி, திருவருளாற் கருணை செய்யாவிடிலுய்யே னென்ற (தி. - ன.) :—

அருளா தொழிந்தா லடியேனை
யஞ்சே லென்பா ராரிங்குப்
பொருளா யென்னைப் புகுந்தாண்ட
பொன்னே பொன்னம் பலக்கூத்தா
மருளா மனத்தோ டுனைப்பிரிந்து
வருந்து வேனை வாவென்றுன்
தெருளார் கூட்டங் காட்டாயேற்
செத்தே போனேற் சிரியாரோ.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் கருணை கடாட்சம் வைத்து அடிமை செய்யாவிட்டால் அடியேனைப் பிறவித் துன்பம் தீர்ப்ப அஞ்சலி செய்வதற்கு வேறுளரோ? இப்பூமியிலே அடியேனைத் திருவுள மிரங்கி, என்னுளமே இடமாகத் திருவருட் பணிகொண்ட வின்பப் பொன்னொளியே! இரணிய மன்றுள் நடனராசனே! மயக்கமுற்றுச் சமுசய வுணர்வால் அநாதியே திருவடியிற் பிரிவில்லாதவன். வேருகப் பிரிப்புளனுய்த் தியான பாவனை செய்து, ஆன்மலாபம் பெறத் துன்பப்படுவேனை, திருவருளாற் கருணை செய்து அலம் வந்தபோது அஞ்சலென்றருள் செய்ய, அருள்சேர, கூவி யாண்டு சிவஞானத் திறலறிவுடைய திருக்கூட்டச் சபையிற் சேர்க்காவிட் டால் அடியேனுடல் அவமே சவமாகும்; நாதனடிமை யெனப்போர் பெற்றவன் ஆதலால் உடையானுனவன் கை விட்டால் அடியேன்

382. இரங்கும் என்றும் ஏமாந்திருப்பேனை என்றும் கூட்டிப் பொருளுரைக்கலாம். ஆள்வார் இலி மாடு என்க.

பேரிற் சுதந்தரம் நில்லாது; தேவரீர் திருவருளைக் கண்டு இவ் வகையோ வென நகைப்பார்களே! அடியேன் நவையுறுவது திரு வுளமோ? என அருளியதைக் காண்க. (8)

384. இனி, திருக்கூட்டச் சபையார் சந்நிதியிற் சுட்டற்றிருப்ப தான நிலையைக் கூறும் (தி. - ன.) :—

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுன் றிருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வே றிருந்துன் திருநாமம்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந்
தலைவா வென்பா ரவர்முன்னே
நரிப்பாய் நாயே னிருப்பேனே
நம்பி யினித்தா னல்காயே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்! தேவரீர் திரு வருளடிமை யின்பப் பரமுத்தித் திருச்சபையிலே, சிரடியார்கள் சிலர், 'உள்குவாருள்கிற் றெல்லாமுடனிருந்தறிதி'யென, வெள்கி விலா வறச் சிரிப்பார்கள் சிலர்; சிவானந்த போதத்தால் இறுமாந்து பலகணத் தெண்ணப்பட்டுக் களிப்புறுவார்கள்; சிலர் திருவடி ஞானத் திரிவித கரணமு மின்பமுற்றுக் கன்னலும் சுவையும் போல் அத்து விதக் காட்சியுறுவர்கள்; சிலர் திரட்சியாகக்கூடி நாதனெர் மொழியை யளவளாவி சுருதியாற் பேசுநாட் பிறந்த நாளெனத் தீவண் ணர் திறமே பேசப் பெருநீளம் பெறும் கண்களே யென வன்புறு வார்கள்; சிலர் அவ்வன்படிமை யுள்ளாச வாழ்வை யுபதேசம் பெறு வார்கள்; சிலர் இவ்வகையோ பரமுத்தி யடிமையென வியப்புறுவார் கள்; சிலர், தனித்தனி சதா நடனத் திருமேனியால் திருநாமப் பொருள் நாதன் நாமமே யென, காதலாகிக் கசிந்துள்ளுருகுவார்கள்; சகல தேவர்க்கு முதலாய்க் குஞ்சிதபாதங் காணப்பெற்றுல் மனிதப் பிறவி வேண்டுவதிப்பூவிலெனத் தலைப்படுஞ்சால்பே எனச் சுவானு பூதி பெறுவார்கள் சிலர். இவ்வடியார் பெறுமடிமை இன்பத்துக்கு என் பூசையு நேசமும் யானுமுனக்கெங்கே? என் உள்ளத்தினின் பொடுங்கித் தற்போதம் விழ விருப்பதான திருவருளை யனுக்கிரகஞ்

---

383. மருளாமனம் - மருண்ட மனம். தெருள் - தெளிவு.

செய்வாய்; என்னுள்ள விசுவாசப்பொருளே! என அருளியதைக் காண்க. (9)

385. இனி, திருவருளாலடிமை யின்பம் பெற வேண்டுமென்ற (தி. - ன.) :—

நல்கா தொழியான் நமக்கென்றுன்
நாமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறு
வணங்கா மனத்தா னினைந்துருகிப்
பல்கா லுன்னைப் பாவித்துப்
பரவிப் பொன்னம் பலமென்றே
ஒல்கா நிற்கு முயிர்க்கிரங்கி
யருளா யென்னை யுடையானே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவடி ஞானமே பொருளென, அன்பால் திருவருள் அநுக்கிரகம் செய்வதொழியாதென, நம்போல்வார்க்கு உனது திருநாம மிடைவிடாது அதுவே பித்தாகப் பிதற்றி, இருகண்ணுலும் அன்பானந்த பாட்பம் பெருகத் துதித்து, அத்துதி யின்பமேலீட்டால் வாய்குளறி வணங்கி, அடிமைத் திறம் புரியாத வன்மை நெஞ்சுடையேன் தேவரீரைத் திருவருளால் நினைந்து அடி ஞான அன்பாலுருகி, எக்காலமுஞ் சதா நடனச் சிவோக பாவனை செய்து அடி வணங்கிப் பொன்னம்பலவாணனே என வடியாரைக் காண வெட்கி, நிற்குமடியேற்கு இரக்கமுற்றுக் கருணை செய்வாய்; என்னை அநாதியே சிவனுடைமையாகக் கொண்ட உடையவனே! என அருளியதைக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்

---

384. தேனிப்பார் - தியானிப்பார்; அத்துவிதக்காட்சியுறுவார்கள். கரிப்பாய் - இகழ்தற்குரியவனுய்.

385. நயனம் - கண். பாவித்து - நினைந்து; சிவோகம்பாவனை செய்து.

22. கோயில் திருப்பதிகம்

இனி, கோயிற்றிருப்பதிகம் :

இவைக்கு அகத்தியச் சூத்திரம்.

கோயிற் றிருப்பதிகந் தானச தறுக்கு
மனுபோக லக்கணம்.

பொழிப்புரையனுபூதி :—

முற்பதிகத்தில் அடியார் கொத்துடன் கூட்டுவதே முத்தியென அருளி, அகமகிழ்ந்து, இப்பதிகத்தில் ஐந்து மலமும் அருளாய் நின்ற முறைமையால், உடலும் உன் கோயிலான அநாதியின்பமுமே காரணமென, எல்லாச் செயலுஞ் சிவன் செயலென, குறைவிலா நிறைவென்றும், குணக்கடலென்றும், அன்பான வின்பப் பெருக்கத்தை அளவளாவி அருளிய சிவஞான ஊதியம் என அருளியதை அருளாற் காண்க.

திருப்பா ஆசிரிய விருத்தம்.

386. இனி, திருவடியன்பே வீடன்றி, மற்றுள பதம் பாவமென்ற (தி. - ன.) :—

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்

இப்பதிகத்திற்கு உள்ளக்கிடக்கை :—அநுபோக இலக்கணம். எ-து. சிவாநுபூதிக் கடையாளம்.

திருவாசகச் சிறப்பு. ' எயும் கோயிற்பதிகம் பெருந்துறைத் தேசிகர் மோகமியல்பாகும் (பழைய புராணம்).

இது தில்லையில் அருளியது.

இதுவும் அந்தாதித் தொடையால் அமைந்தது.

தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்க [1]ளாயவை கடந்த
இன்பமே யென்னுடை அன்பே.

(இ - ள்). ஆண்டவனே ! தேவரீர், திருவடிக்கண் அன்பின்றி மடித்தாட்டி வஞ்சப் பேரின்பக் கருவியான இந்திரியாதி புலன்கள் ஐம்புல வேடராக என்னை அடிமை...சிவ.....னஞ்செய்து என் போத மென்னை மிகச் செய்து.....நீ வாழ் நாளெல்லாந் தடுத் தாட்டி, இன்ப வமிர்தமாக அள்ளூறி நின்றெழா நிற்கும் பரமசிவனே! அநாதியேயுள்ள நாதா ! அடியேன் கட்புலப்பட அருளாயோ ! சிவாகமக் காட்சியால் தெளிவுடையார் தேனின்ப ஞானத் தெளிவே ! பரமசிவனே ! திருப்பெருந்துறைக் குருவே ! முடிவில்லாத உலகாய தன் முதல் சிவாத்துவித பத வீடு முழுதுமாய் வைக்கப்பாலாய் நின்ற பேரின்ப சொரூபமே ! அடியேனுள்ளத்தன்பே ! ஞானமான வனே ! என வருளியதைக் காண்க. (1)

387. இனி, திருவருளின் உதவிக்குக் கைம்மாறு அடிமை யின்றி வேறில்லை யென்ற (தி. - ன.) :—

அன்பினு லடியே னுவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பர மல்லா வின்னருள் தந்தாய்
யானிதற் கிலனெர்கைம் மாறு
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரைசே.

பி - ம். 1. ளியாவையும்.

386. மாறி நின்றென்னை .....அடைத்து. மாறுபட்டு நின்று என்னை மயக்குகின்ற வஞ்சத்தையுடைய ஐம்புலன்களின் வழியைத் தடுத்து ; இப்பகுதிக்கு உரிய பொருள் ஏட்டில் சிதைந்துள்ளது. ஈறி லாப் பதங்களாயவை கடந்த இன்பமே - முடிவில்லாத பதவிகள் யாவற் றையும் கடந்த ஆனந்தரூபனே என்பது வெளிப்படை பொருள். ஈறி லாப் பதங்களாய், அவை கடந்த இன்பம் என்றும் பிரித்துப் பொருள் கொள்ளலாம்.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர், திருவடிக் கன்புளுய் ஊனுயிர் இன்பாக்கி அகநெக்குக் கசிந்துருக அருளிய அறிவும் எனது அறிவோ? எனவே, திருவருட் செயலாயிற்றே! அச்செய லுக்கு என்ன கைம்மாறுளதோ? எனவே, அடிமைப் பணியே யல்து வேறு காணேனே! சுவாமி! யாவர்க்கும் முன் அமர்தியான பதிமுது நிலையே! யாவர்க்குங் கீழ் என்னை ஆள்வோனே! சருவ வியாபக பரமுத்த சிவனே! காலாதிதக் கடவுளே! திருப்பெருந்துறைக் குருவே! பரமசிவனே! சிறப்புல்லாச வாழ்வான சிவபுரத்தரசான நாதா! என அருளியதைக் காண்க. (2)

388. இனி, வாக்கு மனுதீத சிவானந்தமென்ற (இ. - ன.) :—

அரைசனே யன்பர்க் கடியனே னுடைய
அப்பனே யாவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோ ருணர்வே
யானுன்னை யுரைக்குமா றுணர்த்தே.

(இ - ள்). சகல லோகமும் ஆளும் ஆன்மநாதனே! அன் புடைய அடியார்கட்கும், அன்றியும், அடியேனுக்கும் உடைய தகப் பனே! எனது உயிரும் உடலும் இன்பாய்க் கரைந்து உள்புகுந்து உருக்கிப் பொய்யிருள் அகற்றி, அருளிய சுத்திய ஞானப்பிரகாசமே! திரையற்ற நிலையாயுள்ள தெளிந்த அன்புக்கடலே! திருப்பெருந் துறைக் குருவே! பிரேர காண்டவர்க்கும் அவையாலுளவாகிய அறிவு கரணமுங் கடந்த சிவஞானவறிவே! அடியேன் திருவருள் அன்றித் துதிப்பதெவ்வகை? அருளாய் சிவனே! என வருளியதைக் காண்க. (3)

---

387. என் பரம் அல்லா - என் பொறுப்பல்லாத; தான்முயன்று பெறவியலாத. முன்புமாய், பின்புமாய், முழுதுமாய் என்றும் பிரிக்க. பரந்த முத்தன் - சர்வவியாபகமான பரமுத்த சிவன்.

388. அன்பர்க்கு அடியேன் என்று தொடராக்கிப் பொருள் கூற லாம். புரைபுரை கனிய - உள்துளை தோறும் கனியும்படி. பொய் இருள் - மாயை. மன்னும் - நிலைபெற்ற. சஞ்சலமற்று நின்ற கடல் என்பதா யிற்று. இறந்து - கடந்து. சொல்லும் உணர்வும் எட்டாத நிலை. என்பது கூறப்பட்டது. உரைக்கும் ஆறு - பேசும் வழி.

389. இனி, குணரகித திருவருட்குணம் என்ற (தி. - ன.) :—

உணர்ந்தமா முனிவ ரும்பரோ டொழிந்தார்
உணர்வுக்குந் தெரிவரும் பொருளே
இணங்கிலி யெல்லா வுயிர்கட்கு முயிரே
எனைப்பிறப் பறுக்குமெம் மருந்தே
திணிந்ததோ ரிருளிற் றெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள் தா மில்லா இன்பமே யுன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவடி ஞானம் ஆன்ம சுதந்திர சத்திக் கெட்டாத அருமையான பொருளாதலால், அந்த சிற்சத்தி சுதந்தர அளவையாய் உணர்ந்த மகா விருடிகளும், திருமால் முதலான தேவர்களும், திருவடி காணு தினைத்து நின்றார்கள்; அபேதவத்துவித அடிமையெனப் பொருந்தாத சருவான்மாக்களுக்கும் உயிர்ப்பிரோகமே! எனது பிறவியை யறுப்பதான மருந்தே! மந்திரமே! (மாருமலமகலவகலாத மன்னுபோதத் திருவருளான வொளிக்கும் இருட்குமொன்றே யிடம்; அவை மகா கேவலமே; இருள் அதுவே இடம்; சிவனே மன்னவன்; இவை அநாதி; முதலாகவலில் "வேந்தனடி" யென்ற வாக்கிய வரையாற் காண்க.) திருப்பெருந்துறைப்பதியில் எழுந்தருளிய சருவ வியாபக குணரகித சாட்குணியப் பொருளே! தேவரீர் குஞ்சிதபாத சேர்வையுற்ற சுத்தான்மாக்களுக்கு இனிக்குறையுளவோ? எனவே, பேரின்பப் பரமுத்தி வாழ்வு கிடைத்ததென அருளியதைக் காண்க. (4)

390. இனி, சிரடியார் உடலே கோயிலாகக் கொண்ட (தி. - ன.) :—

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே

---

389. ஒழிந்தார் - மற்றையோர் என்றேனும், உலகத்தைத் துறந்தவர் என்றேனும் பொருள் கொள்ளலாம். இணங்கு இலி - ஒப்பிலி. வேந்தனடி வாக்கிய உரை, பக்கம் 240. குறுகினேற்கு - நெருங்கின எனக்கு.

[1]சிறைபொரு நீர்போற் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் னுடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே.

(இ - ள்) ஆண்டவனே! தேவரீர், திருவருளானது வற்றுதல் முற்றுத அணிகல மானப் பேரின்ப வியாபகமே! குற்றமற்ற அமிர்தமே! முடிவிலாத ஞானப் பிரகாச அருள் மலையே! வேதமே! வேதாந்த நூட்பப் பொருளே! என்னெஞ்சில் எழுந்தருளிய அநாதி நிலைமையுள்ள சிவானந்தமே! அடியேன் சிந்தையினும் அவைக்குக் காரணமான வாக்கினும் தடையற்ற நீர் போலின்பே அன்பாய்ப் பாயுந் திருப்பெருந்துறைக் குருமணியான பரமசிவனே! ஆன்ம நாதனே! தேவரீரே, எனது காயமே கோயிலாக வெழுந்தருளி அபேதவத்துவிதமாய் வாழ்வையாகில், இனி அடியேன் இரப்பது வேறுளதோ? வேண்டிய பயன் அவையே! எனக் காண்க. (5)

391. இனி, திருவடி கட்புலப்படுவதானமையைக் கூறும் (தி. - ன.) :—

இரந்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே யிமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தவா காயம் நீர்நிலந் தீகால்
ஆயவை யல்லையா யாங்கே
கரந்ததோ ருருவே களித்தன னுன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே.

(இ - ள்.) ஆண்டவனே! தேவரீர் திருவடியை அடியேன் பெற எளிமையாலிரக்கவும், அவ்வண்ணமும் உள்ளம் உருகவே, அவ்வுள் ளத்தின்கண் நெகிழ்ந்தெழுந்த சிவச்சோதியே! திருமால் முதலிய தேவர்கள் சிரசிற் பொலிவதான செங்கமலப் பொற்பாதனே! திருப் பெருந்துறைப்பதி வாழுங் குருவே! பஞ்ச பூதத்தின் அதிட்டான வியாபகனுயும், அவையின்றி, அவையிற்றொன்றுது நின்ற திரு

பி - ம். 1. சிறைபெரு.

390. கோது - குற்றம். மன்னிய - நிலைபெற்ற. மன்னே - அரசே. சிறை பொரு - சிறைப்பட்டிருக்கச் சகியாத.

வருவே ! அவ்வடிவே சிவானந்த போதமாக அடியேன் கண் இன்புற இப்பூவிலே கண்டேன் அவர் திருப்பாதம் ; என அருளியதைக் காண்க. (6)

392. இனி, பரிதியினுதவியைப் பாராதுபோல், அருளின் சகாயம் உயிர் அறியாது என்ற (தி. - ன.) :—

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
மீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுமீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே.

(இ - ள்.) தேவீர், இன்று சிவன் முத்த தசையே பரமுத்தி யின்ப வடிமை என வருளியது ; உலக இருள் அறச் சூரியனால் விளங் கியது போல, உள்ளத்திருளைத் திருவருளால் அகற்றி அபேத அத்து விதமாக நிறைந்த திருவடி ஞானப்பெருமையை, தற்போதங் கெட்டுச் சிவபோதமாக அநுபூதி பெறுங்காலம், உள்ளும் புறம்பும் ஒருதன் மைக் காட்சியான, எவ்விடத்துந் திருவடியன்றி வேறு காணேனே ! தேவீர் திருவருளானது அடியேன் தியானபாவனைக் காலம் அணு விலும் அணுவாய் அடங்கி என் குறையே, நின் பெருக்காயில்லையே? ஏகபர சிவவடிவாகி, திருப்பெருந்துறைக் குருவாகிய சிவனே ! எல்லாப் பற்றும் அகல நின்மலவடிவே ! இவனவனை விடாதே, அவனிவனை விடாதே, உடன்தையாய்ச் சிவத்தோற்றமாக நிற்கும் அருள் வடிவான நாதனே ! திருவடி ஞானமின்றி யாராகிலும் அள விடப் படுவாருளரோ ? எனவே, வேறுரால் அறியப்படா என்பது ; என வருளியதெனக் காண்க. (7)

---

391. கிரந்த - எங்கும் பரவிய. ஆகாயம் முதலிய பஞ்சபூதங்கள் சொல்லப்பட்டன. இறைவன் பஞ்சபூதங்களின் வேறானவன் ; ஆனால் அவற்றினுள்ளே இருப்பவன்.

392. இருள் - உள்ளத்திருள். ஞாயிறு - ஞான சூரியன். நினைப் பற - வேறொரு நினைப்பும் இல்லாமல். சென்று.....ஒன்றும், என்பதற்கு உரை கூறுவதை நினைவு அறிக. தத்துவங்களெல்லாம் குறுகிக்குறுகி இறையிடம் முடியும் என்பது தெளிபொருள். ஒன்று மீயல்லை.....இல்லை,

393. இனி, பரமசிவனின் வடிவு நின்மலவடி வென்ற (தி. - ன.) :—

பார்பத மண்ட மனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதே லரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை யெழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாருற வெனக்கிங் காரய லுள்ளார்
ஆனந்த மாக்குமென் சோதி.

(இ - ள்.) நாதனே! பிருதிவி முதலான தத்துவங்களும் அவற்றில் உளவாகிய பதங்களும், அவற்றுல் உளவாகிய ஆதார வாகாசமும், முதலிய சகல வத்துவும் திருமேனியாக உற்பத்தியாயும், அவற்றில் எரியுறு நீர் போலெங்கும் எவையுஞ் சருவ வியர்பகமாயும், வேறற அத்துவிதமாயும், மன வாக்குக்குள்ளாகிய தியானபாவனை களுக்கு எட்டாமலும் உள்ள நின்மலனே! தேவரீர் திருவடி ஞான மடைந்த பேரின்ப வெள்ளச் சீரடியார் கருத்தில், அத்துவிதமாய் எழுந்தருளிய இன்பத்தேனே! திருப்பெருந்துறைப்பதியான பரம சிவனே! தேவரீரலது அடியேற்கு இவ்வுலகத்திலே உறவு பகை முன்னிலை யுளவோ? அடிமை யின்பமாகச் செய்ய வருளு மென்னறிவே! எனவருளியதைக் காண்க. (8)

394. இனி, சிந்தை புகுந்த திருவடி போல வழியில்லாது வேறு வாழ்வதான வழியின் றெனக்கூறிய (தி. - ன.) :—

சோதியாய்த் தோன்று முருவமே யருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே யந்தமே பந்தம்
அறுக்குமா னந்தமா கடலே

இதற்கும் உரைநுட்பம் காணத்தக்கது. காணப்படும், கருதப்படும் பொருள் களெல்லாம் இறைவனுகா; அவனல்லாப் பொருளும் வேறில்லை என்று அத்துவித உண்மை கூறப்பட்டது.

393. பார் - பூமி. பதம் - பதவி. முளைத்து - தோன்றி; உற்பத்தி யாய். நீர் உறுதீ, எரியுறு நீர் என்று மாற்றிப் பொருள் கொண்டார். அயல், பகை யெனப் பொருள் கொண்டார்.

தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் னிணையடி தந்தே.

(இ - ள்.) சுவாமி! அநாதியே! இன்பாதீத நிட்களப் பொருளே! அவற்றில் அடியேன் பொருட்டு உருவ அருவ நவந்தர பேத அணுபட்ச சம்புபட்ச லய போக அதிகார மாகி அறிவே சொரூபமாய்ப் பரப்பிரமமாகி, பிரபஞ்ச உற்பத்தி திதி நாசத்துக்கு அதிட்டானமாகி, எனது பஞ்சபாச விமோசன ஆனந்தமா கடலான பந்த ரகித, நன்னலம் முயிர்பெற வருளும் திருவருட் குன்றமே! திருப்பெருந்துறைப் பதியாளுஞ் சிவகுருவே! அடியேன் அறிவில் திருவடி ஞானம் அநுக்கிரகஞ் செய்தபின்பு அகலிடம் வேறு முளவோ? எனவே அடியை யகன்று நிற்பதெங்கே யான்மா? என அருளியதைக் காண்க. (9)

395. இனி, தன்னை ஆண்டருளிய கருணைக்குக் கைம்மாறு அடிமையலது வேறில்லை யென்ற (தி. - ன.):—

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா வார்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பாற்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா வுடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனெர்கைம் மாறே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீரோ, நின்மலன்; நானே, துன்மலன்; ஆனாலும், அடியேன் மிகவும் நன்மையுடையேன்; இதனை

---

394. உருவநிலையில் சோதியைக் கூறினர். ஆனந்தம் பந்தமறுக்கும் கருவியாயிற்று. ஆனந்த சகாயம் என்பது இறைவனுக்கொருபெயர். தீதிலாநன்மை என்றதால், பிற உலகநன்மைகள் தீதுகலந்தவை என்றலாயிற்று. நீ போவதோர் வகையை நானும் செல்வதற்கு அருளாய் என்றபடி.

நாடிக்கேள்; உன் கேடு பாசவிருளாகும்; ஒன்றுமிலா என்கேடு ஆனந்தமாமே! ஆனதால், இவையிற் சதுரன் நானென்பது திருவுள மறியாதோ? என்பாற் பெற்றதென்? சிந்தையான என புலா லுடம்பே புகுந்து நின்ற கற்பகமே! யான் உன்னை விடுவேனல்லேன்; திருப்பெருந்துறைப் பதியான எனது உயிர் அப்பனே! என் ஊனு டலே இடமாகித் திருவுளங் கொண்டால் யான் வேறு கைம்மாறளிப் பக் கருவியுளவோ? அடிமையே, என வற்புறுத்தி அருளியதெனக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

23. செத்திலாப்பத்து

இனி, செத்திலாப்பத்தாவன :—

அவைக்கு அகத்தியச் சூத்திரம் :—

பளகரு செத்திலாப் பத்துச் சிவானந்த
மளவறுக்க வொண்ணு மையதாகும்.

பொழிப்புரையநுபூதி :—

முற்பதிக வுண்மை அநுபூதியில் அருளியதில் உடல் உயிர் இரண்டும் அநாதியே; உடல் கோவிலாகில், மலம் அமைந்து அகலா மரபுண்டோ? என, காரணங் கெடாதாதலால் அவ்வாசனை நீங்க, அருளாம் வகையை அன்பாலின்புறப் பண்பாய்ச் சிவத்தால் நண் பாய்த் திருவடி யானதைக் கண்பாலின்புறக் கண்டதருளிய தெனக் காண்க.

திருப்பா ஆசிரிய விருத்தமாகத் திருப்பெருந்துறையிலோதிய தெனக் காண்க.

---

395. இப்பத்துக்குத் திருவுள்ளக்கிடக்கை: சிவனுனந்தமளவறுக் கொணுமை எ-து. சிவானந்தம் அணுகிச் செயிக்கப்படாமை.

திருவாசகச் சிறப்பு: 'மாயபசுபோதம் முற்றுங்கெட வேண்டலே செத்திலாப்பத்தாகும்' (பழையபுராணம்).

396. இனி, பொய்யனேன் அகநெக வெழுந்தருளிய திருவடி ஞான வின்பமென்ற (தி. - ன.) :—

பொய்யனே னகநெகப் புகுந்தமு தூறும்
புதும லர்க்கழ லிணையடி பிரிந்தும்
கையனே னின்னுஞ் செத்திலே னந்தோ
விழித்திருந் துள்ளக் கருத்தினை யிழந்தேன்
ஐயனே யரசே யருட்பெருங் கடலே
அத்த னேயயன் மாற்கறி யொண்ணைச்
செய்யமே னியனே செய்வகை யறியேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர், திருவுளமிரங்கிப் புதிய தாமரை மலர் போன்ற இரண்டு திருவடிகளையுந் திருவருளாற் காட்டியதால், அக் கருணை வாசனை ஒய்வில்லாத பொய்யன் மன நெகிழ, இன்பமிர்த மூறிய அருமை யன்பு தெரியாது, விழித்திருந் தவன் கைப்பொருளிழந்தவண்ணம், எனதுள்ளம் அதுவாய்ப் போன வண்ணங் காணேனே! ஆன்ம நாதனே! இறையே! திருவருட் கடலே! எனதப்பனே! திருமால் பிரமன் அறியாத சிவந்த தீ வண்ணனே! சுவாமி! தேவரீர் பஞ்சகிர்த்திய வுண்மை யறிவதற் கறிவுளவோ? என்று, தம் வலியினுற் கருத இவனுரென வருளிய தைக் காண்க. வஞ்ச மனத்தனை பாவி இவ்வுலக மறியத் துஞ்சி னேனே என்ற ஆராமையை யருளாற் காண்க. (1)

397. இனி, ஓர் மொழியான ஞான உபதேச இன்பத்தினைக் கூறும் (தி. - ன.) :—

புற்று மாய்மர மாய்ப்புனல் காலே
உண்டி யாயண்ட வாணரும் பிறரும்
வற்றி யாருயின் மலரடி காணு
மன்ன வென்னையோர் வார்த்தையிற் படுத்துப்

---

396. பொய்யன் - வாசனை ஒய்வில்லாத பொய்யன். நெக - நெகிழ. கையன் - கீழோன். செய்வகை, என்பதனை இறைவன்மீது சார்த்திப் பொருள் கூறுகின்றார். நான் செய்வகை அறியேன் என்றும் பொருள் கொள்வர்.

பற்றினுய் பதையேன் மனமிக வுருகேன்
பரிகி லேன்பரி யாவுடல் தன்னைச்
செற்றி லேனின்னுந் திரிதரு கின்றேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

(இ - ள்). ஆண்டவனே ! தேவரீர் திருவடியை அறியவேண்டு மெனக் கற்பாந்திர காலம் தேகத்திலே வன்மீகம் வள, விருட்சம் வள, சல வாயுவைப் புசித்து, அநேக தேவர்களும் மற்றுள்ள இருடிகளும் மனயோக பாவனைக் கெட்டாது வாடி நிற்ப, எனதான்ம நாதனுன தேவரீர், அனாதிப் பெருங்கருணை வழக்கால் இரங்கி, என்னறிவில் அருளொளியான அன்பு வைத்துத் தொடர்ச்சி தோன்ற ஆப்தமொழி யொன்றையும் கண்ணுலே சொன்ன கருணைப் பிரானே ! 'அறியாமை அறிவுகற்றி அறிவினுள்ளே அறிவதுனை அருளினுல் அறியாதே அறிந்து குறியாதே குறித்து அந்தக் கரணங்களோடும் கூடாதே வாடாதே குழைந்திருப்பையாகில் ' என்றவோர் விருத்தப் பாதி போதுமென்ற உண்மை கண்டவுடன், " இத்தனைகாலும் திருவடி ஞானவன்பை இழந்திருந்தோமே " யென என் மனம் பதைக்கவில்லையே ! உருகவில்லையே ! " அன்பே ! என்னன்பே " யென அழவில்லையே ! அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க் கென்புதோல் போர்த்த உடம்பானேனே ! இவ்வகை அறிவிலாத உடலைச் சவமாக ஒழிவில்லாது இன்னமும் சம்சார வீணனுனேனே ! திருப்பெருந்துறைப்பதிச் சிவனே! என் செய்வேனென அருளியதைச் சம்பிரதாயச் சிருட்டியாற் காண்க. (2)

398. இனி, தற்போதம் அவிழ்வதைக் கூறும் (தி. - ஸ.) :—

புலைய னேனையும் பொருளென நினைந்துன்
அருள்பு ரிந்தனை புரிதலுங் களித்துத்
தலையி னைடந் தேன்விடைப் பாகா
சங்க ராவெண்ணில் வானவர்க் கெல்லாம்
நிலைய னேயலை நீர்விடம் உண்ட
நித்த னேயடை யார்புர மெரித்த
சிலைய னேயெனைச் செத்திடப் பணியாய்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

---

397. பி - ம். புற்றுமாய் முதலியன, தவநிலையைக் குறிப்பன. அண்ட வாணவர் - தேவர், இருடியர் முதலியோர். ஓர் வார்த்தை - பிரணவ பஞ்சாக்கரம் என்பர். பரிகிலேன் - வருந்துகிலேன். செற்றிலேன் - அழித்திலேன். திரிதருதல் - திரிதல்.

(இ - ள்). ஆண்டவனே ! தேவரீர் திருவுள மிரங்கி அறிவிலாத புலைத்தொழிலான அபக்குவமுடைய பாவியைத் திருநோக்கஞ் செயத் திருவடி ஞானவன்பை யருளிற்று. அவை பெற்றவுடன், ஒருவன் வைத்த நிதி வஞ்சமுடன் கவர, துஞ்சினனே போயினனே என அறிவிலாது, தலையானடப்பதுபோல எண்ணி இறுமாந்தேனே ! இடபவாகன முடையோய் ! சங்கரா ! அளவற்ற தேவர்கட்கு நிலைமை அருளும் அநாதியே ! அத்தேவர்கள் பிழைக்க நஞ்சைத் திருப்போனகஞ் செய்த நித்திய சுத்தனே ! திருவடி யடையாத திரிபுரர்களை நகையால் எரிசெய்த மேருச் சிலையனே ! என் போதமறத் திருவடிக் கடிமைப் பணிசெய்ய அநுக்கிரகம் செய்ய வேண்டும் ; திருப்பெருந்துறைப்பதி சிவகுருவே ! என அருளியதைக் காண்க. (3)

399. இனி, அன்பினை அடிமை கொண்டமையைக் கூறும் (தி - ன.) :—

அன்ப ராகிமற் றருந்தவம் முயல்வார்
அயனு மாலுமற் றழலுறு மெழுகாம்
என்ப ராய்நினை வாரெ னைப்பலர்
நிற்க விங்கெனை யெற்றினுக் காண்டாய்
வன்ப ராய்முரு டொக்குமென் சிந்தை
மரக்க ணென்செவி யிரும்பினும் வலிது
தென்ப ராய்த்துறை யாய்சிவ லோகா
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

(இ - ள்). ஆண்டவனே ! தேவரீர் திருச்சந்நிதியிலே அருமையான மேலாகிய தவங்களைச் செய்து உடலுயிர் கரைய அக்கினியைச் சேர்ந்த மெழுகே போலுருகி, மகத்தான திருமாலயன் முதலியோர் திருவருளைக் கருதி நிற்ப, இப்பூவிலெழுந்தருளி வன்மையான பார் முழுதுமுருளெய்துதல் போலச் சிந்தையும், எனது கண் மரமும், செவி இரும்பும், இவையினும் வன்மை யுடையேனை, எவ்வகையோ என்னை அடிமையாகச் செய்த கருணை ? அடியேன் அறிவில் அகப்படவில்லையே ! தட்சிணத் திருப்பராய்த்துறை மேவிய சிவலோக

---

398. தலையினால் நடந்தேன் என்பதற்குச் செருக்கினால் தலை கீழாக நடந்தேன் என்பது நேர் பொருள். நிலையனே - நிலையாயுள்ளவனே என்றும் பொருள் கொள்ளலாம். செத்திட - போதமற.

நாயகா! திருப்பெருந்துறைப்பதியாளும் பரமசிவனே! எனை ஆண்டநலம் அருளவேண்டுமெனத் திருவருளிரக்கத்தை அன்பால் இன்புற அருளியதெனக் காண்க. (4)

400. இனி, திருவடியே பரமென அனுபவம் பெற்ற (தி - ன.) :-

ஆட்டுத் தேவர்தம் விதியொழித் [1]தன்பாய்
ஐய னேயென்றுன் னருள்வழி யிருப்பேன்
நாட்டுத் தேவரும் நாடரும் பொருளே
நாத னேயுனைப் பிரிவுரு [2]தருளைக்
காட்டித் தேவனின் கழலிணை காட்டிக்
காய மாயத்தைக் கழித்தருள் செய்யாய்
சேட்டைத் தேவர்தந் தேவர்பி ரானே
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் ஆட்டுவித்தால் ஆடாநின்ற தேவர்கள் திருவருளைக் கைவிட்டு, கருமகாண்டப் பொருளான கற்பனை நூல்வழிச் செல்லாதொழிந்து, அன்பே சிவவழி யென எனதுயிரை, ஐயனே! பெத்த முத்தம் இரண்டு தசையினும், திருவடியே பரமெனப் பணியற நிறுத்துவேன்; அற்ற போத ஞான முடைய தேவர்கள் காணுதற் கெட்டாத பரமநாதனே! அநாதியே திருவடியில் இருந்தபடி பிரிவில்லாத திருவருளை என்னுயிரில் காட்டி, மகாதேவ! தேவரீர் பொற்பாதப் பேரின்பச் சுவையுங் காட்டி, மாயையான காயத்தைக் கோயிலாகக் காட்டி, கன்மத் தொகையும் காட்டி, அருளே பொருளெனக் காட்டி, அணுபட்ச சமபட்ச தேவர்களை அதிட்டிக்கும் தேவதேவனே! திருப்பெருந்துறைப் பதிவாழும் சிவனே! அருளினுய்; என அருளியதைக் காண்க. (5)

---

399. வன்பரசய் - வலிமையான பார் என்ற மரம்; பராய் மரம் என்றும் கூறுவர். முருள் - கட்டை, மரக்கண்; கண் - கணு.

1. பி - ம். தன்பால். 2. வருளை.

400. ஆட்டுத்தேவர், என்பதற்குப் பிறர் பலவாறு வேறு பொருள்கள் கூறுவர். விதி யொழித்து, என்பதற்கு அத்தேவர்களின் வழிநிற் பேனல்லேன் என்பது பொருள். அற்றபோத ஞானம், போத மற்ற ஞானம். காயமாகிய மாயம் என்க. காயம் - உடல். சேட்டைத் தேவர், குறும்பு செய்யும் தேவர் என்றும், சேடு ஐ தேவர் எனப் பிரித்துப் பெருமையும் அழகுமுள்ள தேவர் என்றும், பிறவாறும் பிறர் பொருளுரைப்பர்.

401. இனி, திருவடி விட்டு வேறு புகலில்லை யென்ற (தி. - ன.) :—

அறுக்கி லேனுடல் துணிபடத் தீப்புக்
கார்கி லேன்றிரு வருள்வகை யறியேன்
பொறுக்கி லேனுடல் போக்கிடங் காணேன்
போற்றி போற்றியென் போர்விடைப் பாகா
இறக்கி லேனுனைப் பிரிந்தினி திருக்க
என்செய் கேனிது செய்கவென் றருளாய்
சிறைக்க ணேபுனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவடியைப் பிரிவுற்ற, அறிவில்லாத உடலை இரண்டு கூறுபட வெட்டவில்லை; அக்கினியிலே வீழ்கிலேன்; திருவருள் என்னை ஆண்ட வகையை அறிவால் அறிகின்றிலேன்; ஆனதால் இனி இவ்வுடல் பொறுக்கிலேன்; இவ்வுடல் திருவடியல்லது புகலிடம் காணேன்; அடிமையை இரட்சிக்க வேண்டும்; புண்ணிய சொரூப விடை உடையாய்! அடியேன் இறவாமல் பிரிந்திருந்தேன்! என்செய்வேன்! நாதனே! இவ்வகைப் பிழைப்பு வாய்ப்பருளவேண்டும்; சுவாமி! நிரம்பிய நீர் சூழும வயலையுடைய திருப்பெருந்துறைப்பதி வாழும் சிவனே! என அருளியதைக் காண்க. (6)

402. இனி, பஞ்சாட்சரமே பொருளென்ற (தி. - ன.) :—

மாய னேமறி கடல்விட முண்ட
வான வாமணி கண்டத்தெம் அமுதே
நாயி னேனுனை நினையவும் மாட்டேன்
நமச்சி வாயவென் றுன்னடி பணியாப்
பேய னேயினும் பெருநெறி காட்டாய்
பிறைசு லாஞ்சடைப் பிஞ்ஞக னேயோ
சேய னேகின்ற லறுவ தழகோ
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

---

401. 'உனைப் பிரிந்தினிதிருக்க இறக்கிலேன்; என் செய்கேன்' என்க. இது செய்க - இன்னது செய்க. சிறை - கரைகோலின இடம்.

(இ - ள்). மாயையை ஒச்சும் மகாதேவனே! திருமிடற்றில் ஒளிராகின்ற நீலகண்ட! என்னுயிரின்பே! நாயானவன் தேவரீர் திருவடியை என்போதத்தால் தியானிக்க வல்லேன் அல்லேன்; சைவ சம்பந்தமாகித் திருநாமம் துதித்துத் திருவடிப்பணியும் செய்கிலேன்! இவ்வகை அறியாத் தற்போத பேயனே ஆனாலும் பெருமையான திருவடி காட்டாயோ? சந்திர சூடா! சடையுடையாய்! பிஞ்ஞகா! தேவரீரடிமைப் புத்திரனானவன் திருவடி விட்டுப் பிரிந்து அலறுவது திருவுளமோ? திருப்பெருந்துறைப்பதி வாழும் சிவனே திருவடி காட்டி அருளவேண்டுமென அருளியதைக் காண்க. (7)

403. இனி, சீரடியார் திருச்சபை சேர்விக்க வேண்டும் என்ற (தி. - ன.) :—

போது சேரயன் பொருகடற் கிடந்தோன்
புரந்த ராதிகள் நிற்கமற் றென்னைக்
கோது மாட்டிநின் குரைகழல் காட்டிக்
[1]குறிக்கொ ளென்றுநின் தொண்டரிற் கூட்டாகி
யாது செய்வதென் றிருந்தனன் மருந்தே
அடிய னேனிடர்ப் படுவது மினிதோ
சீத வார்புனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் சந்நிதானத்திலே திருமால் அயன் இந்திரன் தியானபாவனை செய்து நிற்ப, அடியேனின் பஞ்ச பாசக் கொத்தை அறுத்துத் திருவடியை எனதறிவில் காட்டி, என்னைக் குறியாகக் கொண்டு, தேவரீர் சீரடியார் சபையில் சேர்த்து அருளவேண்டும்; என் செய்வான் தோன்றினேன்! ஏழையேனே! என் பிணி தீர்ப்பதான அருமருந்தே! அடியேனிடர்கீர்யாய்!

---

402. மாயன், என்றதற்கு மாயையை ஒச்சும் மகாதேவனே என்றார். மறிகடல் - அலைகள் மடங்கி விழுகின்ற கடல். பெருநெறி - வீட்டுலகமும் ஆம். பிஞ்ஞகம் - ஒருவகைத் தலையணி. சேயன் - புத்திரன்; சேயன் - சேய்மையிலுள்ளவன் என்பது பிறிதொரு பொருள்.

பி - ம். 1. குறிக்கொள்கென்று நின்தொண்டரிற் கூட்டாய்.

நாதனே! துன்பமுறுவது நீதியோ? குளிர்ந்த புனல் சூழ்ந்த திருப் பெருந்துறை வாழும் பரமசிவனே! என அருளியதைக் காண்க. (8)

404. இனி, மார்க்கண்டர்க் கருளியதைக் கூறும் (தி. - ன.) :—

ஞால மிந்திர னொன்முகன் வானவர்
நிற்க மற்றெனை நயந்தினி தாண்டாய்
கால னுருயிர் கொண்டபூங் கழலாய்
கங்கை யாயங்கி தங்கிய கையாய்
மாலு மோலமிட் டலறுமம் மலர்க்கே
மரக்க ணேனையும் வந்திடப் பணியாய்
சேலும் நீலமும் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

(இ - ள்). ஆண்டவனே! திருவருட் சந்நிதானத்துப் பரிவி லுள்ள தவவுயிர்களும், விண்ணிலுள்ள தேவ விந்திரன் அயன் ஆகியோரும் இரந்து நிற்ப, அடியேனை என்போத வழித் திருவருள் நலங் காட்டி அடிமை இன்புறச் செய்தோய்! மார்க்கண்ட விருடிக் காக எம்னுயிரைத் திருவடியில் அணிந்தாய்! கங்காதரா! ம்முவைத் திருக்கரந் தரித்தோய்! திருமால் திருவடி காணுது முறையிட்டு நிற்கும் அழகிய செங்கமலத் திருவடியில், மரம்போன்ற ஊனக் கண்ணையுடைய பாவியேனையும் திருவருட்பணிக்கடிமையாகச் செய் யாயோ? நீலோற்பலமும் கெண்டை மீன்களும் சூழும் நீர் நிறைந்த வயலையுடைய திருப்பெருந்துறைப்பதி வாழ்வதான சிவனே! என அருளியதைக் காண்க. (9)

---

403. போது - மலர். பொருகடல் - அலைமோதும் கடல். புரந் தராதிகள், தேவர்கள். கோதுமாட்டி - குற்றங்களை நீக்கி; பாசக் கொத்துக்களை அறுத்து. குரை - ஒலிக்கிற. குறிக்கொள்கென்று நின் தொண்டரிற் கூட்டாய்' என்ற பாடத்திற்கு, 'கடைப்பிடியாய் என்று நின் தொண்டரோடு சேர்ப்பாயாக' என்று பொருள் கூறுவர்.

404. ஞாலம் - ஞாலத்துள்ளார்; தவவுயிர்கள் என்றுரை. நயந்து - விரும்பி. மலர் - திருவடிமலர். மரக்கண் 399. சேல் - ஒருவகைமீன்.

405, இனி, திருவருள் இரங்கி யாண்டமையைக் கூறும் (தி. - ன.) :—

அளித்து வந்தெனக் காவவென் றருளி
அச்சந் தீர்த்தகின் னருட்பெருங் கடலுள்
திளைத்துந் தேக்கியும் பருகியு முருகேன்
திருப்பெ ருத்துறை மேவிய சிவனே
வளைக்கை யொணுடு மலரவ னறியா
வான வாமலை மாதொரு பாகா
களிப்பெ லாமிகக் கலங்கிடு கின்றேன்
கபிலை மாமலை மேவிய கடலே.

(இ - ள்). ஆண்டவனே! அடியேன் பிறவா வண்ணம் வழி மறித்துப் பெருங்கருணை யளித்து அச்சமில்லாது அடிமைகொண்ட திருவருட் பெருங்கடலுளே என்னே எரிபுகு நீர்க்குடம்போல் அழுந்து வித்தும், விளையாடற் செய்தும், உயிர் நிறைவாகப் பூரண வின்பம் செய்தும், சிவானந்தமே புசிப்பாகப் பெற்றும், உருகியும், இவ்வகை இயல் அறியாத பாவி; தேவரீரோ, என் பொருட்டுத் திருப்பெரும் துறைப்பதியாண்ட பரமசிவனே! சக்கரபாணியும் அயனும் அறி வொண்ணு மகாதேவா! பார்ப்பதி வாமபாகா! எனது தற்போத இன்பமுழுதும் பாவமெனத் துன்ப முற்றேனே! வெள்ளியங்கிரி வாழும் பரமசிவனே! அடியேற்குச் சிவபோதவின்பம் அநுக்கிரகம் செய்யவேண்டும் என அருளியதைக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்

---

405. அளித்து - கருணை அளித்து. ஆவ என்று அருளி - ஐயோ என்றிரங்கி அருளி. எரிபுகு நீர்க்குடம் போல் என்றார் தன் ஒவ்வாமை யைச்சுட்ட. உருகேன், என்றதால் தன் கொடிய நிலையைக் கூறினர். வளை - சங்கு. இங்குச் சக்கரம் என்று உரைகூறியது அதன் வளைந்த உருவை நோக்கிப் போலும்.

24. அடைக்கலப்பத்து

இனி, அடைக்கலப் பத்தாவன :

இவைக்கு அகத்தியச் சூத்திரமாவன !

அத்து விதந்திக முடைக்கலப் பத்து
வத்து நிர்ணயம் வகுத்துரைத் ததுவே

பொழிப்புரை யநுபூதி – முற்பதிகத்தில் அருளிய போத வாசனை நீங்கி அருளாம் வகையை அன்பால் இன்புறத் திருவடிக்கீழ் அடைக்கலமாக வைத்திருப்பதான திருவருளின் பெருங்கருணையைத் துதித்தது. திருப்பா, கலிவிருத்தமாகத் திருப்பெருந்துறையில் ஓதியதெனக் காண்க.

406. திருவடி சேர்ந்தமையைக் கூறும் (தி. - ன.) :—

செழுக்க மலத் திரளனநின் சேவடி சேர்ந்தமைந்த
பழுத்த மனத் தடியருடன் போயினர்யான் பாவியேன்
புழுக்க ணுடைப்புன் குரம்பைப்பொல் லாக்கல்வி ஞானமிலா
அழுக்கு மனத்தடி யேனுடை யாயுன் அடைக்கலமே.

(இ - ள்). ஆண்டவனே ! செந்தாமரைக் காடனைய தேவரீர் திருவடியை அநாதியே பரமுத்தி பெறுவதான திருவருள் பழுத்தளிந்த கருணைச் சீரடியார் அபேத வத்துவித வாழ்வான அடிமை இன்பம் இம்மையே பெற்றேர்களே ! யான் மறதியுற்ற பாவியான் ; நானே வெனில், மயிர்க்கால் தோறும் புழுச்சொரிவதான துச்சிலுடையனும், ஞானமுள கல்வியும் சிவஞான போதமும் பொருந்தாத மலபோத வாசனையுமுடைய மனதையுடைய அடியேனை, அநாதியே அடிமையாக வுடைய நாதா ! தேவரீர் குஞ்சிதபாத சருவ வியாபகத்தில் வியாப்பியமாக அடியேனைக் கருணை வைத்து இரட்சிக்க வேண்டுமென அருளியதைக் காண்க. (1)

இப்பத்துக்குத் திருவாசக உள்ளக்கிடை : பக்குவ நிர்ணயம் எ - து வித்தும் அங்குரமும்போல என்றல்.

திருவாசகச் சிறப்பு : ஓதுவல் வாதனைகள் வந்தணுகாம லகடக்கலப் பத்துரைத்த தாமே. (பழைய புராணம்)

இதனைக் கலவைப் பாட்டு என்பர் பிறர்.

406. உடன்போயினர் - உன்னோடு சென்றனர் என்றும் கூறுவர். குரம்பை - கூடு ; உடம்பு. பொல்லாக்கல்வி - வீண் கல்வி. ஞானமிலா என்பதற்கு முன் 'மெய்ஞ்' என்று எட்டில் கூட்டப்பெற்றுள்ளது.

407. இனி, பெருங்கருணை விலாசத்தைக் கூறும் (தி. - ன.):-

வெறுப்பன வேசெய்யு மென்சிறு மையைநின் பெருமை
[யிஞற்
பொறுப்பவ னேயராப் பூண்பவ னேபொங்கு கங்கைசடைச்
செறுப்பவ னேநின் றிருவரு ளாலென் பிறவியைவேர்
அறுப்பவ னேயுடை யாயடி யேனுன் அடைக்கலமே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் அடைக்கலமாகத் திருவடியில் அத்துவித வடிமையாக என்னை அநாதியே வைத்திருந்தும், எனது சிற்றறிவால் வெறுப்புடையவனைனே நித்திக்கும் பால் தானுங் கைத்தது நாவின் பித்தமே அக்குற்றம்; நாதனே! கிருபை வைத்து, குற்றமே செயினும் குணமெனக் கருதும் கொள்கை கண்டு நின் திருவடி யடைந்தேன்! சாட்குணியமே சர்ப்பாபரணமுடைய வனே! கங்கா சடாதாரியான பரமசிவனே! தேவரீர் திருவருள் நோக்கால் எனது பிறவியை அடியோடு களையும் அநாதி அடிமை யுடையவனே! திருவடிக்கீழ் குமபிட்டிருப்பதாக அடைக்கலம் அருள வேண்டும்; என அருளியதைக் காண்க. (2)

408. இனி, அடியேன் அறிவில் அறிவாக வாழ்வதான பொருளே என்ற (தி. - ன.):—

பெரும்பெரு மானென் பிறவியை வேரறுத்துப்
[பெரும்பிச்சுத்
தரும்பெரு மான்சது ரப்பெரு மானென் மனத்தினுள்ளே
வரும்பெரு மான்மல ரோனெடு [1]மாலறி யாமைநின்ற
அரும்பெரு மானுடை யாயடி யேனுன் அடைக்கலமே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் எல்லாப்பெருமையுடைய தேவர்கட்கு மேலான பெருமையையுடைய நாதனே! அடியேன் இனிப் பிறவா வண்ணம் பாதுகாத்துத் திருவடியே நின் அகலாப் பெரிய பித்துடையவனாக வருளும் சுவாமி! நால்வகை இன்பம் உயிர்க்கருள்வதான சதுரப்பதியோனே! என் மனதினுள்ளே தானே எழுந்தருளும் நாதனே! திருமால் அயன் அறியாமை நின்ற அறிவே

---

407. செறுப்பவன் - அடக்கினவனே.

பி - ம். 1. மாலறியாமனின்ற.

சொரூபமாயுள்ளாய்! அநாதியே அடியேனை அடிமையாகச் செய்யும் சிவனே! தேவரீர் அடைக்கலமாக இரட்சிப்பதென அருளியதைக் காண்க. (3)

409. இனி, திருவடியே புணையாகக் கொண்டமையைக் கூறும் (தி. - ன.) :—

பொழிகின்ற துன்பப் புயல்வெள் ளத்தினின் கழற்
[புணைகொண்
டிழிகின்ற அன்பர்க ளேறினர் வான்யா னிடர்க்கடல்வாய்ச்
சுழிசென்று மாதர் திரைபொரக் காமச் சுறவெறிய
அழிகின்ற னனுடை யாயடி யேனுன் அடைக்கலமே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் கிருபா கடாட்சத்தால் மேகத் தினிடமாகப் பொழியா நின்ற பிரளய நீர் போன்ற பிறவித் துன்பத் தில் அழுந்திய சிரடியார் திருவடி ஞான வன்பே புணையான நிட்டை யால் அடிமையாகிப் பரமுத்தி பெறுவதானார்கள். அடியேன் அன் புத் திருநாமப் புணையுதவியின்றி துன்பமான பிறவி சாகரத்தில் சுழியில் அகப்பட்டு, பெண்ணுசைத் திரைமேலும் மேலும் அலைப்ப, மண் பொன்னுசையான சுறுமீன் வாயில் அடிபட்டு மயக்கத்தால் அழியும் பாவியை அநாதியடிமையுடைய அபேத குஞ்சிதபாதத்தின் கீழ் அபயங் காத்து இரட்சிக்க வேண்டும் என அருளியதைக் காண்க. (4)

410. இனி, பெண் வலையிற்படாது அருளவேண்டு மென்ற (தி. - ன.) :—

சுருள்புரி கூழையர் சூழலிற் பட்டுன் திறமறந்திங்
கிருள்புரி யாக்கையி லேகிடந் தெய்த்தனன் மைத்தடங்கண்
வெருள்புரி மானன்ன நோக்கிதன் பங்கவிண்
[ணோர்பெருமான்
அருள்புரி யாயுடை யாயடி யேனுன் அடைக்கலமே.

---

408. பிச்சு - பித்து. சதுரன் - சாதுரியமுடையவன்.

409. புயல் - மேகம். வெள்ளம் - நீர்ப்பெருக்கு. வான் - முத்தி. சுழிசென்று - சுழலில் அகப்பட்டு. திரைபொர - அலைவீச. சுறவு - சுறுமீன்.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவருளான நிக்கிரக அநுக்கிரக வலிமையை எனதறியாமையால் மறதியுற்று, சுருள்வ தாக என்னுயிரை மடக்கியாளும் பெண்ணிச்சையில் ஆழ்ந்து, நரக வேதனைக் கிடமான, துச்சிலைக் 'காயமே பொருளென' வாடி இளைத் தேனே! தேவரீரோ மைப்படிந்த கண்ணுள் பெத்தமே முத்தமாக் கும் வெருட்சி போன்ற மான் பார்வையு முடைய பார்ப்பதிபாகர்! தேவ தேவனே! கிருபை வைத்திரங்கி அநாதியே அடிமையுடைய அடியேனை அடைக்கலமாக இரட்சிக்கவேண்டும், என அருளியதைக் காண்க. (5)

411. இனி, அடிமையைப் புறம்போக விடாமலிருக்க வேண்டு மென்ற (தி. - ன.) : —

மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போற் றளர்ந்தேன் தடமலர்த்தாள்
வாழியெப் போதுவந் தெந்தாள் வணங்குவன் வல்வினையேன்
ஆழியப் பாவுடை யாயடி யேனுன் அடைக்கலமே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவடியை அகன்று அழகுபோன்ற மைப்பொலியும் கண்களுடைய வலிமை மனத்தில் என்னுயிர் அகப்பட்டு உருகி, தாழியில் அகப்பட்டுக் கடையும் தயிரலைவுற்றது போல, வாடியலைந் தெய்த்தேன்! செங்கமல வியாப கத் திருவடி சுகமே வாழ்க! எக்காலமும் வேறு புகலிடங் காணேன்; கொடிய பாதகன், நான் உனது அடியே கதியென அடிமை யுறுவேன். சக்கரபாணி! அநாதியே அடிமையுடையவனுனதால், அடைக்கல மானவனைத் திருவடி காட்டி இரட்சிக்க வேண்டுமென அருளியதைக் காண்க. (6)

---

410. கூழையர் - இளம் பருவத்தினர். கூழை - சிறியமயிர். சூழல் - கூட்டம். இருள் - அறியாமையாகிய இருள். எய்த்தனன் - இளைத்தேன். வெருள் - அச்சம்.

411. மாழை - மாவடுவகிர்போன்ற. மை பாவிய - மையோடு கூடிப் பரந்த. மத்து - தயிர்கடையும் மத்து. பாவுதயிர் - பரவிச் சுழல் கின்ற தயிர். ஆழியப்பன் என்றதற்குச் சக்ரபாணி என்று பொருள் கூறு கின்றார். சலந்தராசுரவதத்தில் சக்கரத்தைக் கையாண்டமையின் சிவ பிரான் ஆழியப்பனுயினர். 'ஆழியப்பா' என்பதற்குக் கருணைக்கடலான அப்பனே என்று பிறர் பொருள் கூறுவர்.

412. இனி, என் கண்ணின்புற மெய்க்காட்சி யருளினர் என்ற (தி - ன.) :—

மின்கணினூர் நுடங்கு மிடையார் வெகுளிவலையி லகப்பட்டுப்
புன்கண ஞய்ப்புரள் வேனைப் புரளாமற் புகுந்தருளி
என்கணி லேயமு தூறித்தித் தித்தென் பிழைக்கிரங்கும்
அங்கண னேயுடை யாயடி யேனுன் அடைக்கலமே.

(இ - ள்). ஆணடவனே ! அடியேன் மின்னைப்போல விளங்கிய கண்களையும், வளைந்த மருங்குலையுமுடைய பெண்ணின் மீது கொண்ட ஆசை வலையான கோபாக்கினிக் குள்ளாகிப் புண்ணை யுடைய கண்ணைக்கொண்டு வருத்த முற்றவனைப் போல வாடிய என்னை, வருத்த முறுமல் என்னுள் ளெழுந்தருளி, அன்பால் என் கண்ணில் இன்ப வானந்த அமிர்தம் பெருக்கி, இந்திரியத் துவார மெங்கும் தித்திக்க, என் வினைக்கிரங்கி, என் பிழை பொறுத் தருளும் திருவருளே ! ஞானக்கண்ணு ! உடைய நாதனே ! அடிமை உடையாய் ! அடியேனைத் திருவடியில் வைத்து இரட்சிக்க வென வருளியதைக் காண்க. (7)

413. இனி, அடியேன் துன்பத்துக் கிரங்கி கருணை செய்ய வேண்டும் என்ற (தி - ன.) :—

மாவடு வகிரன்ன கண்ணிபங் காநின் மலரடிக்கே
கூவிடு வாய்கும்பிக் கேயிடு வாய்நின் குறிப்பறியேன்
பாவிடை யாடு குழல்போற் கரந்து பரந்தஉள்ளம்
ஆகெடு வேனுடை யாயடி யேனுன் அடைக்கலமே.

(இ - ள்.) மாவடுவை இரண்டு கூருகப் பிளந்தது போன்ற திருக்கண்ணை யுடைய பார்ப்பதிபாகனை பரம்சிவனே ! தேவரீர் திரு வுளம் அடியேனைத் திருவடிசேர அழைப்பதுளவோ ? நரகவேதனைப் பட செய்வதுளவோ ? எவ்வகையோ ? திருவுளக் குறிப்பறிவதற்குச் சுதந்தரவறிவுளதோ ? படவினை செய்வோன், தார்க் குழல் எவ்வகை விரைவாயோடுமோ, ஒளியுமோ, அதிலும் விரைவாய் இந்திரிய

---

412. வெகுளிவலை - வலையான கோபாக்கினி என்றூர். பிறர் பெண்களின் வெகுளியாகிய வலை என்பர். புன்கண் - துன்பம். புண்கண் என்று கொண்டு பொருள் கூறப்பட்டுள்ளது. என்கணிலே, என்பதற்கு என்னிடத்திலே என்றும் பொருள் கொள்ளலாம். அங்கணன் - அழகிய கண்ணன் ; ஞானக்கண்ணு என்றூர்.

விஷயத்தில் என் மனம் பாய்கிறதே! மறிகிறதே! இதென்ன அதிசயம்! கேடு உடைய அடியேனைக் கைவிடாது, உடையவனே! திருவடிக் கீழ் வைத்து இரட்சிக்க வேண்டும் என அருளியதைக் காண்க. (8)

414. இனி, திருவடி வணங்கத் தற்போதத்தால் முடியாதென்ற (தி - ன.) :—

பிறிவறி யாவன்பர் நின்னருட் பெய்கழற் ரூளிணைக்கீழ்
மறிவறி யாச்செல்வம் வந்துபெற் ரூருன்னை வந்திப்பதோர்
நெறியறி யேனின்னை யேயறி யேனின்னை யேயறியும்
அறிவறி யேனுடை யாயடி யேனுன் அடைக்கலமே.

(இ - ள்.) ஆண்டவனே! தேவரீர் திருவடியில் அகாதியே பிரிவில்லாத திருவருண் ஞான நிட்டையுடைய அன்பர்கள் குஞ்சித பாதத்தின் கீழ்க் கும்பிட்டே நிட்டையன்பால் ஓர் காலும் அறிபடாத சிவஞானச் செல்வ முடையராய்ப் பரமுத்தியதுவே எனப் பேறுளர் ஆனர்கள்; அடியேனு வெனில், தேவரீர் திருவடி ஞான அநுபூதி பெற அருளிய வேதாகம, மார்க்க உபதேச கலை முதலாக அறியேன்; பரமசிவமே தெய்வமென நிச்சயமும் அறிகின்றிலன்; எல்லாவறிவு சுதந்தரமுடைய நாதனே! அடியேன் அறிவுபெறத் திருவடி காட்டி அடைக்கலங் காக்க வேண்டுமென அருளியதைக் காண்க. (9)

415. இனி, திருவருளைப் பெற்றும் பெருத குணமுடையேன் என்ற (தி - ன.) :—

வழங்குகின் ரூய்க்குன் னருளா ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னேன்வினை யேனென் [விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந்துய்யக் [கொள்ளாய்
அழுங்குகின் றேனுடை யாயடி யேனுன் அடைக்கலமே.

---

413. வகிர் - பிளப்பு. கூவிடுவாய் - அழைத்திடுவாய். கும்பி - நரகம். பா - நற்பா. படவினை செய்வோன் தார்க்குழல் என்ரூர். படம் - வஸ்திரம். உள்ளம் குழலுக்கு ஒப்பு.

414. மறிவறியா - பெயர்வு அறியா. நெறி - வேதாகம மார்க்க, உபதேச கலைமுதலானவை. நின்னையறிதல் - நின் உண்மை நிலையை யறிதல்;

(இ - ள்.) ஆண்டவனே ! தேவரீர் திருவருள் ஏகவுருவாய்க் கிடக்கின்றதையோ ? சேரவாரும் செகத்தீரே என வழங்கிய பேரின்ப ஞான அன்பமிர்தத்தைக் கண்டு இன்புற்றுப் புசிப்பதானேன் ; அப்போது, தான் வேறு, நான் வேருகக் கண்டமைகொண்டு, உள்ளே போகாது மேலிடக்கண்டேன் அறிவை விணேயேன் ; ஊழ் அலதுளவோ ? அவை வினவில், வண்டு மது வுண்ணப் போனது, அக்கினியில் அகப்பட்டது ; ஆதலால், அக்கால வெப்பம் தீர, சலம் புசிப்பதாகத் திருவருளின்பத்தை அருளி, எனே அடிமை செய்யா விடில், துன்பமே உறுவேன் ; அவை திருவுளமோ ? உடையவனே ! அடியேனைக் குஞ்சித பாதத்தின் கீழ் அடைக்கலமாக வைத்துப் பாதுகாப்பது கருணேயே ! என அருளியதைக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

25. ஆசைப் பத்து

இனி, ஆசைப் பத்தாவன :—

அகத்தியச் சூத்திரமாவன :—

தீர்க்கருமாசைப் பத்தான்ம விலக்கணம்

பொழிப்பனுபூதி உரையாவன—

முற்பதிகத்தில் அருளிய சிவானந்தச் செருக்கில் பற்றற்றலே பரமென்று கூறப்பெற்றது ; அவை பெறுமாறு திருவருளாசைப் பெருக்கம் இங்குக் கூறப்பெறுகிறது. அதனுண்மை, உடலுயிர் அருளாய் ஒழிந்து, மலமும் அடைவே அருளாய தன்மை பெற்று அதற்கிடையூறிலாமை பூசனேயும் நேசமும் போற்றுதல். அன்பும் திடமாய்ப் புலப்பட வேண்டும். அடியார் அநுபவம் அதுவாய்ப்

---

415. **வழங்குகின்றுய்க்கு என்பதில் பொருளற்று நின்றது. விக்கினேன் - தொண்டையில் அடைபட்டு விக்கலெடுத்தேன், ஊழ்வினேயின்மையால். தழங்கு - ஒலிக்கின்ற. விக்கினேன், தண்ணீர் பருகத்தா என்பது விண்ணப்பம். தேன் என்பது வண்டு. அதனே உவமையாக்கினர். தேன் அன்ன தண்ணீர் என்று பிறர் இயைத்துப் பொருள் கொள்வர்.**

போவதே முடிவு; ஆதலால் அக்கருணை வியப்பைக் கலந்தருளிய தெனக் காண்க.

திருப்பா, ஆசிரிய விருத்தமாகத் திருப்பெருந்துறையில் ஓதியதெனக் காண்க.

416. இனி, திருவடிக்காசை யுற்றமையைக் கூறும் (தி. - ன.):

கருடக் கொடியோன் காண மாட்டாக் கழற்சே
[வடியென்னும்
பொருளைத் தந்திங் கென்னை யாண்ட பொல்லா மணியேயோ
இருளைத் துரந்திட் டிங்கே வாவென் றங்கே கூவும்
அருளைப் பெறுவான் ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே.

(இ - ள்). ஆண்டவனே! கருடக்கொடியுடைய திருமாலும் அறிவொண்ணாத பொற்பாத அன்பைப் பொருளெனக் காட்டி இவ்வையகம் பொலிவுற அடிமை செய்த காரிய காரணங் கடந்த கருணைத் திருவுருவே! பொள்ளாத முழுமணி யொளியே! எனது மலவிருட் கேவலத்தைத் திருநோக்கால் நீக்கி, திருவடி சேரக் காட்டி, சகலத்திலே சுத்தப்படுத்தி, வழி மறித்தழைத்தாலும் திருவருளைப் பூசிப்ப நேச முற்றேனே; அவ்வன்பு அடியேற்குத் தகுமோ? எனதப்பனே! என அருளியதைக் காண்க

417. இனி, திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்ற (தி. - ன.):

மொய்ப்பா னரம்பு கயிறாக வூளை யென்பு தோல்போர்த்த
குப்பா யம்புக் கிருக்க கில்லேன் கூவிக் கொள்ளாய்
[கோவேயோ
எப்பா லவர்க்கு மப்பா லாமென் னரமே தேயோ
அப்பா காண ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே.

இப்பத்துக்குத் திருவாசகத் திருவுள்ளக்கிடை: ஆத்துமவிலக்கணம் எ - து. ஆன்மரூபத்தை அறிதல்,

இதன் திருவாசகச் சிறப்பு:

கருவியுறு மூனுடற்கண் வாராமற் றிருவருளிற் கலப்பதற்கே
அரனடியைப் புகழ்ந்துபெரு கார்வமொடு பாடுதலே யாசைப் பத்தாம்.
(பழைய புராணம்)

416. பொல்லா - பொள்ளா; தூலக்கப்படாத முழுமணி என்னும். இருள் - மலவிருள். அங்கே - சகலத்திலே. பெறுவான் - பெற்றுப் பூசிப்ப.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீரருளிய கருவாகிக் குழம் பிருந்தும் கலித்தும் மூளைக்கரு நரம்பும் வெள்ளெலும்பும் சேர்ந்து, ஒன்றுய் ஈனமிகு துளேதோலுமுடைய புழுப்பொதிந்த துச்சில் இனி யாற்றுகில்லேன்; இன்றே திருவருள் சேரத் திருவாய் மலர்ந்தரு ளாயே! ஆன்மநாதனே! எந்தப் பதமுத்தர்களுக்கும் சுட்டிறந்த அதீத நாதனே! என்னில் ஊறும் அமிர்தமே! திருவடிப்பணிக் கிச்சையானேன்; எனதப்பனே! இரட்சிக்க வேண்டும்—என அருளி யதைக் காண்க. (2)

418. இனி, திருக்கருணையை வியந்த (தி. - ன.):—

சீவார்ந் தீமொய்த் தழுக்கொடு திரியுஞ் சிறுகுடி
[லிதுசிதையக்
கூவாய் கோவே கூத்தா காத்தாட் கொள்ளுங் குருமணியே
தேவா தேவர்க் கரியானே சிவனே சிறிதென் முகநோக்கி
ஆவா வென்ன ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் அடியேற்கு உபகரணமாகக் கூட்டிய சீயும் அழுக்கும் பொதிந்த துச்சிலாகிய தேகம் பிரிவுறத் திருவாய் மலர்ந்தருளாயோ? நாதனே! நடராசனே! அடியேனேப் பாதுகாக்கும் குருநாதா! மகத்தான தேவர்கட்கறி வொண்ணுத பரமசிவனே! கிஞ்சிக்ஞனை அடியேன் முகத்தைத் திருவருள் நோக்கஞ் செய்து இரங்க இச்சையானேன்; எனதப்பனே! என அருளியதைக் காண்க. (3)

419. இனி, உள்ளே கண்டு திருவடி பூசிப்பதான (தி. - ன.):

மிடைந்தெலும் பூத்தை மிக்கழுக்
கூறல் வீறிலி நடைக்கூடம்
தொடர்ந்தெனை நலியத் துயருறு
கின்றென் சோத்தமெம் பெருமானே
உடைந்துனைந் துருகி [1]யுள்ளொளி
நோக்கி யுன்றிரு மலர்ப்பாதம்
அடைந்து நின்றிடுவான் ஆசைப்
பட்டேன் கண்டா யம்மானே.

---

417. மொய்ப்பு - நெருக்கு. குப்பாயம் - சட்டை; துச்சில் என் னூர். உடலின் இழிவைக் கூறினர்.

418. வார்ந்து - ஒழுகி. உடலின் இழிவு கூறப்பட்டது. சிதைய - பிரிவுற; அழிய. ஆவா, இரக்கக்குறிப்பு. அம்மான் - எனதப்பனே.

பி - ம். 1. புன்னொளி.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; அடியேன் மல போதம் தீர எற்களித்த துச்சில் எலும்பால் நெருக்கமுற்று, ஊத்தை யும் அழுக்கும் ஊற, இவை ஓர் காலமும் வெறுப்பில்லாத சஞ்சாரத் தால், அடிபடும் ஓயாச் சம்மட்டி அடியேனைப் பற்றினமையால், வருந்துன்பத்தை இன்பமெனக் கொண்டு துயரமுற்றேன்; இவ் வுடலைப் பரிசுத்தமாக வருளும் எம்முயிர்ச் சிவனே! அடியேன் திரு வடி அகம்புறமென்னுது உள்ளபடியுள்ளே அருளே அறிவிற் கண்டு திருப்பாதம் அன்பு பூசை நேசமுற இச்சையானேன். என் கருத்துப் படி பேணுவார் இச்சை செய்யும் நாதனே! அருள வேண்டும்—என அருளியதைக் காண்க. (4)

420. இனி, தேகப்பற்று புளியங்காயோடு போலவே இருக்க, நான் கனியும் ஓடும் போலாவேனே என்ற (தி. - ன.) :—

அளிபுண் ணகத்துப் புறந்தோல்மூடி யடியே னுடையாக்கை
புளியம் பழமொத் திருந்தே [1]னறிந்தும் விடையாய்
[பொடியாடீ
எளிவந் தென்னை யாண்டு கொண்ட என்னு ரமுதேயோ
அளியே னென்ன ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே.

(இ - ள்). ஆண்டவனே! அடியேனுடைய தேகமானது எக் காலமுங் கேடே விளைவிக்கும்; புண் உள்ளே இருக்கப் புறம்பே தோல் மூடியதால், புளியங்காய் ஒன்றியதுபோல் இருந்தேன். அக் கனிக்கும் ஓட்டுக்கும் பற்றுதலில்லாதுபோல, இருப்பதறியாது, உண்மை கொண்டவிடத்தும் அடியேன் பேரில் இரங்கி, விடையுடை யாய்! நிறணியம்பலவா! என் பொருட்டுத் திருமேனி கொண்டு எழுந்தருளி, அடிமை கொண்ட என்னுயிர் இன்ப அமிர்தே! அடி யேன் திருவடி பொருந்தக் கருணை செய்வாய் என்ன இச்சையானேன்; அவ்விச்சைப்படியே அருள வேண்டும்; எனது உயிரப்பனே!—என வருளியதைக் காண்க. (5)

---

419. எனை நலியத்துயருறுகின்றேன் என்றதைச் சம்மட்டி அடித் தலால் வரும் துன்பமுறுவேனே என்றார்.

420. பி - ம். 1. னிருந்தும்.

இச்செய்யுளின் முதலடிக்கு, பழமும் ஓடும்போல் பற்றற்றிருந்தேன் என்பதே நேர்பொருள். உரை நயம் ஆராயற்பாலது. அளியேன் - கருணைசெய்யத் தக்கவன்.

421. இனி, திருவருண் முகமண்டலத் திருப்புன்முறுவலன் பருள்வதான (தி. - ன.) :—

எய்த்தே னுயே னினியிங் கிருக்க கில்லே னிவ்வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வாவே றறியா மலர்ச்சே வடியானே
முத்தா வுன்றன் முகவொளி நோக்கி முறுவல் நகைகாண
அத்தா சால ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே.

(இ - ள்). ஆண்டவனே! அடியேன் இறப்புப் பிறப்பான துன்ப வாழ்வில் இளைத்துக் கவலையுற்றேன்; நாயான நான் இப் பிருதிவியில் இனி யிருக்கமாட்டேன்; இத்தேகபோகம் அடியேற்கு வைத்த நாதனே (அதனை நீர்) வாங்க வேண்டுமே யொழிய வேறு (பிறர் எனக்கு) உளரோ? அநாதி முத்த அறிவுடையோய்! தேவரீர் திருவுருக் கொண்ட திருமுக வருட் பிரகாசத் திருப்புன் முறுவல் அடியேன் காண மிகுந்த இச்சையானேன்; அடியேற் கநுக்கிரக நோக்கம் செய்ய வேண்டும்— என அருளியதைக் காண்க. (6)

422. இனி, பேராயிரம் பரவி வணங்குவதான (தி. - ன.) :—

பாரோர் விண்ணோர் பரவி யேத்தும் பரனே பரஞ்சோதி
வாராய் [1]வாரா வுலகந் தந்து வந்தாட் கொள்வானே
பேரா யிரமும் பரவித் [2]திருந்தெம் பெருமா னெனவேத்த
ஆரா வமுதே யாசைப் பட்டேன் கண்டா யம்மானே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவடியைப் பூவிலும் விண்ணிலும் உள்ள பரிபக்குவ சுத்தான்மாக்கள் வந்தனை செய்து துதிப்பதான பரமசிவனே! எச்சோதிக்கும் சோதி யருளும் சிவபரம் சோதி! அடியேன் பொருட்டு எழுந்தருள்க! எழுந்தருள்க! இப்பிர பஞ்ச மருளி அடிமை கொள்வோய்! அடியோங்கள் பேராயிரமாகத் திருநாமம் துதித்துத்திருந்தும் எம்பெருமானை நாதா, என்னுயிரின் பமே! என ஏத்த இச்சையானேன்;—என அருளியதைக் காண்க.(7)

---

421. எய்த்தேன் - இளைத்தேன். வாங்குதல் - திரும்ப எடுத்துக் கொள்ளல். சால - மிகவும்.

422. பி - ம். 1. வாராவுலகம். 2. திரிந்தெம். பரவியேத்தும்- புகழ்ந்து துதிக்கும். வாராய், வாராய் - அடுக்குத்தொடர்.

423. இனி, திருவையாறகலாத செம்பொற் சோதியை மும்மை வணக்கம் செய்வதான (தி. - ன.) :—

கையாற் றொழுதுன் கழற்சே வடிகள் கழுமத்
[தழுவிக் கொண்
டெய்யா தென்றன் றலைமேல் வைத்தெம் பெருமான்
[பெருமானென்
றையா வென்றன் வாயா லரற்றி யழல்சேர் மெழுகொப்ப
ஐயாற் றரசே ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவடியை இருகைகளாலும் பணிந்து நெருங்க, திருவடியைப் பிரியாது தழுவி, அறிவிலாத அடியேன், சிரசில் சூடிக்கொண்டேன்; குருவே, குருவே, என்றும், எனதப்பன் என்றும், ஓயாது வாய் விட்டலறி அழல்சேர் மெழுகே போல் உள்ளம் உருகி, திருவையாறகலாத பொற்சோதி! என இறையைப் பூசிக்க இச்சையானேன்;—என அருளியதைக் காண்க.

424. இனி, சிரடியார் சேர்வையைக் கூறும் (தி. - ன.) :—

செடியா ராக்கைத் திறமற வீசிச் சிவபுர நகர்புக்குக்
கடியார் சோதி கண்டு கொண்டென் கண்ணிணை களிகூரப்
படிதா னில்லாப் பரம்பர னேயுன் பழவடி யார்கூட்டம்
அடியேன் காண ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே.

(இ - ள்). ஆண்டவனே! அடியேன் அழுக்குப் பொருந்திய யாக்கையைத் தேவரீர் திருவருளால் நீக்கிச் சிவபுரநகரிலே புகுந்து, ஞானமணம் பொலிவதான சிவஞானச் சோதியைத் திருவுருவாகவே கண்ணின் இன்புறக் கண்டேன்; கண் களி கூர்வதானேன்; யாதொரு குணமும் இல்லாத பரம்பரா! பரமசிவனே! தேவரீர் திருவடி தொன்றுதொட் டடிமைப்பணி செய்யும் சிரடியார் திருச்சபை காண ஆசைப்பட்டேன்;

என அருளியதால் சிவலோகமும் சிவனையும் கண்ட இன்பத்துக்கு மேலான இன்பம் திருவடி யாகும், அவர்கள் வாழும் சபையும் (அத்தகையதே) என அருளியதை நால்வர் நான்மணி மாலை அநுபூதியால்காண்க, (9)

---

423. கழும - நெருங்கி, நிறைய. எய்யாது - ஓயாது; இடைவிடாது.

424. செடி - குற்றம்; அழுக்கென்றுரை. படி - ஒப்பு; குணம் என்றுரை.

425. இனி, திருவாய் மலராவிடில் உய்யேன் என்ற (தி. - ன.):

வெஞ்சே லனைய கண்ணார்தம் வெகுளி வலையி லகப்பட்டு
நஞ்சே னுயேன் ஞானச் சுடரே நானோர் துணைகாணேன்
பஞ்சே ரடியாள் பாகத் தொருவா பவளத் திருவாயால்
அஞ்சே லென்ன ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே.

(இ - ள்). ஆண்டவனே! அடியேன் எப்போதும் போர் செய்யும் சேல் போலும் கண்களையுடைய பெண்கள் கோபவலையில் அகப்பட்டுக் கெடுதலான துன்பமுற்றேன், நாயானவன்; சிவஞானப் பிரகாச சிவனே! தேவரீர் திருவடியன்றி வேறு உயிர்த்துணை காணேனே! செம்பஞ்சூட்டிய திருப்பாதமுடைய பார்ப்பதி பாக முடையோய்! நின் பவளவாய்ச் சோதி யுருவான அருள் திருவாயால் 'அச்சமுறுதே' என அருள வேண்டுமென இச்சையானேன்;— என அருளியதைக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்

26. அதிசயப் பத்து

இனி, அதிசயப் பத்து.

அகத்தியச் சூத்திரம்.

அடியரிற் கூட்டு மதிசயப் பத்து
முடிவிலாத முத்தி யிலக்கணம்.

பொழிப்புரை—

மூற்பதிகத்தில் அருளிய அன்பு நேசமுடன் கழிந்ததற் கிரங்கி, நன்றி யறிந்து, நயந்து, அதிசயித்த வன்பால் இரங்கிய சிவானந்த சிவானுபவ சுவானுபூதிகம்.

---

425. வெஞ்சேல் - எப்போதும் போர் செய்யும் சேல்; ஒருவகை மீன். வெகுளிவலை 412. நஞ்சேன் - கைக்தேன். பஞ்சு ஏர் அடியாள்; ஏர் - அழகு. ஒருவா - ஒருவனே; என்ன - என்று நீ கூற.

அதிசயத் திருப்பா ஆசிரிய விருத்தமாகத் திருப்பெருந்துறையில் ஓதியதெனக் காண்க.

426. இனி, திருவடி ஞானம் அடியாரிற் கூட்டிய (தி. - ன.):

வைப்புமா டென்று மாணிக்கத் தொளியென்று மனத்திடை [யுருகாதே
செப்பு நேர்முலை மடவர லியர்தங்கள் திறத்திடை நைவேனை
ஒப்பி லாதன வுவமனி லிறந்தன வொண்மலர்த் திருபாதத்
தப்ப னுண்டுதன் னடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

(இ - ள்). சீரடியார்களே! கேண்மோ! அடியேன் ஆண்டவனை நாதனை எனதுயிர் வைப்பான திருவருட் செல்வமென்றும், என்னறிவு விளங்கும் இரத்தினப் பிரகாசமென்றும், என் மனம் உருகாதபடி, செப்புப்போலும் தனமுடைய பெண்கள் நலத்திலே உருகி இன்பப்படும் பாவியை, ஒப்புவமைக்கு அளவிடப்படாத ஒள்ளிய செங்கமலப் பொற்பாத னெதப்பன், என்னை அறிவளகத் தன் திருக்கூட்டத்தில் பணிசெய அருளிய அதிசயம் கண்டீர்களே! அவ்வன்பை எவ்வகை சொல்லுவேன் என அருளியதைக் காண்க. (1)

அதிசயப்பத்து - இதன் திருவாசக உள்ளக்கிடை: முந்தியிலக்கணம் எ - து மோட்சத்தின் அடையாளம்.

திருவாசகக் கருத்து:—

வெருவி மலத்தினைச் சீலத்தொன்றுகு மடியர்குழாத்துடனேகூட்டும்
பாமருட் பெருமை மிகுதியைப் புகழ்ந்து பாடலதி சயப்பத்தாமே.
(பழைய புராணம்)

426. இவ்வுரை எழுதுதற்கு உரையாசிரியர்க்குத் திருவருள் ஊக்கமளித்த திருப்பாடல் இதுவாகும். (பத். 30). வைப்பு-சேமிப்பு. மாடு-செல்வம். மாணிக்கத்து ஒளி என்க. என் இறைவனே என் வைப்புமா டென்றும், மாணிக்கத்தொளியென்றும் கருதி உருகாமல் என்பது கருத்து. திறம்-தலம். நைதல்-உருகுதல். உவமனில்-உவமையில்; இறந்தன-அப்பாற்பட்டன. கண்டாம், தன்மைப்பன்மை; முன்னிலைப் பொருள் கூறப்பட்டுள்ளது.

427. இனி, அறிவிலாதவனே அடியார் சேர்வைக் கடிமையாக்கிய (தி. - ன.) :—

நீதி யாவன யாவையு நினைக்கிலே னினைப்பவ[1]ருடன்கூடேன்
ஏத மேபிறந் திறந்துழல் வேன்றனை யென்னடி யானென்று
பாதி மாதொடுங் கூடிய பரம்பர னிரந்தர மாய்நின்ற
ஆதி யாண்டுதன் னடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

(இ - ள்). சிவநேச நாயன்மார்களே ! கேண்மோ ! ஓர் அதிசயம் ; சிவன் திருக்கடைக்கண் சேர்த்திய சித்தாந்த அன்புள இன்ப நிட்டைச் சிவாகமநீதி முழுதிலும் ஓர்வகையும் நினையாதவன். அவ்வகையுடைய அன்புடையோர் திருக்கூட்டமும் சாராத பாவியேன் ; முழுமையும் பிறந்திறப்பதான, துன்பமுறுவதான, என்னைத் தனதடியானென்று திருநோக்கம் அருள்வதான அம்மை வாமபாகன், மேலான பரம்சிவன், சருவ வியாபக அனுதி முத்தன், என்னை அடிமைப் பணிக்குரித்தாக்கி, திருக்கூட்டச் சற்சங்கதி செய்வதான இவ்வதிசயத்தென்னென்று காண்பேன் ! என அருளியதைக் காண்க. (2)

428. இனி, சீரடியார்க்கெளி வந்தருளினமையைக் கூறும் (தி. - ன.) :—

முன்னை யென்னுடை வல்வினை போயிட
முக்கண தூடையெந்தை
தன்னை யாவரு மறிவதற் கரியவ
னெளியவ னடியார்க்குப்
பொன்னை வென்றதோர் புரிசடை முடிதனி
லிளமதி யதுவைத்த
அன்னை யாண்டுதன் னடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே.

(இ - ள்). சீரடிச் செல்வர்களே ! கேண்மோ ! அடியேனுடைய மலபோத இருள் அகல்வதாக, திரிநேத்திர, எனதுயிர் தகப்பனவன், அனுக்கிரகஞ் செய்தான். அவன் திருவடி யாவரும் அறிவொண்ணாதவன் ; ஆனாலும் அடியார்கள் கட்புலப்பட வருவோன். பொன்னைப் பழித்த திருச்சடை முடியில் உலக விரட்சைக்காக

---

427. பி - ம். 1. சொடும். ஏதம் - குற்றம். உழல்தல் - துன்புறுதல். நிரந்தரம்-எப்பொழுதும் உள்ள தன்மை. ஆதி-ஆதிப்பொருள்.

இளமதி சூடிய என் தாய் ; என்னை ஆட்படுத்தித் திருக்கூட்டத்தில் அருகணுக்கிய அதிசயவன்பை எவ்வண்ணமெனக் காண்பேனென அருளியதைக் காண்க. (3)

429. இனி, தான் ஞானப்பித்தனுனமையைக் கூறும் (தி. - ன.) :—

பித்த னென்றனை யுலகவர் பகர்வதோர் காரண மிதுகேளீர்
ஒத்துச் சென்றுதன் றிருவருட் கூடிடு முபாயம தறியாமே
செத்துப் போயரு நரகிடை வீழ்வதற் கொருப்படு கின்றேனை
அத்த னுண்டுதன் னடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

(இ - ள்). சீரடியார்களே ! அடியேனை நன்மை தீமை தெரியாத வனென உலகத்தார் சொல்வதான காரணங் கேண்மோ. அடியேன் உண்மை வினவில், " ஆரண உருவாம் தில்லையம்பலம் எய்தப் பெற்றோர் ஒருணர்வராவ"ரென்றும், "ஒன்றல்லாரொன்றுரல்லர் காரணராகார் ஓத்த கருத்தினர், நிருத்த வின்பப் பூரணராகியவர்கள், வாழும் புவனமும் போதுவாமெ "ன்றும் உள்ள பரமுத்தியான திருவருளின்பம் உபாயமான உடந்தையாய சிவன் தோற்றம் ஒன்றுமே கண்டு, நிட்டை யன்பாற் கூடாது வேறெனக் கருதிச் சவமாகி அவமே நரக வேதனைக்காளான பாவியை, திருவருள் இரங்கி, வேறின்மை காட்டி, அடிமையானந்தச் சிவானுபோகமாகச் செய்து, திருக்கூட்டத் தருகில் அருள்வதையும், ஞானமே பித்தாகக் கொண்ட உண்மையையும் கண்ட உலகத்தாரெனக்குத் தகாதென அருளிய அதிசய இன்பம் அநுக்கிரகம் செய்ததென அருளியதைக் காண்க. (4)

---

428. வல்வினை - அசைத்தற்கரியவினை. இச்செய்யுளில் இறைவனை எந்தை, என்றும், அன்னை என்றும் அருளியதைக் காண்க.

429. தன்னை உலகம் பித்தன் என்றதற்குக் காரணம், இறைவன் தனக்கு ஒவ்வாத பேறை அளித்து, அதனால் தான் மாறுபட்டு நின்ற நிலையேயாகும் என்று கூறுகின்றார். ஒத்துச்சென்று-நன்னெறியில் ஒத்துச் சென்றும் ; இதனையே உபாயமான உடந்தை என்றார். செத்துப் போய் - இயல்பான உடலழிவு பெற்று. ஒருப்படுகின்றேன் - இணங்குகின்றேன். அத்தன் - அப்பன்.

430. இனி, சிவபூசையே நிட்டை யென்ற (தி. - ன.) :—

பரவு வாரவர் பாடுசென் றணைகிலேன் பன்மலர்
[பறித்தேத்தேன்
குரவு வார்குழ லார்திறத் தேநின்று குடிகெடு கின்றேனை
இரவு நின்றெரி யாடிய எம்மிறை யெரிசடை மிளிர்கின்ற
அரவ லுண்டுதன் னடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

(இ - ள்). சிரடியாகளே ! கேண்மோ ! எப்போதும் திரு வடியை வழிபடும் திருச்சபையார்பாற்சென்று ஏவல் புரிகின்றி லேன் ; நால்வகை மலர் கொண்டு அன்பால் அர்ச்சனை செய்து திருவடியைத் துதிக்கின்றிலேன் ; அடியேன் உண்மை வினவில், குரவ மலரை அளகபாரத்தில் அணியும் பெண்ணலத்திலே இச்சை கொண்டு இன்ப துன்பத்தால் என் குடி முழுதும் கெட நின்ற பாவி; என் மகாகேவல விருட்டைத் துரத்த, திருக்கை மழுவேந்தி நடனம் செய்யும் எங்கோன், அக்கினிப் பிரகாச திருச்சடை விளங்கிய சர்ப்பா பரண நாதன், சகலத்திலே சுத்தஞ் செய்தடிமையாக்கி, அடியார்பால் சேர்த்து முத்தி அருளிய அதிசயமே அதிசயமென அருளியதைக் காண்க. (5)

431. இனி, சதாநடனத் திருநாம மெய்ஞ்ஞான நிட்டையென அருளிய (தி. - ன.) :—

எண்ணி லேன்றிரு நாமவஞ் செழுத்துமென்
னேழைமை யதனாலே
நண்ணி லேன்கலை ஞானிகள் தம்மொடு
நல்விணை நயவாதே
மண்ணி லேபிறந் திறந்துமண் ணுவதற்
கொருப்படு கின்றேனை
அண்ண லாண்டுதன் னடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே.

(இ - ள்). சிவனடியார்களே ! கேண்மோ ! அடியேன், உண்மை வினவில், திருநாமமான பஞ்சாக்கர மந்திரத்தை இடைவிடா

---

430. சென்றே வலம்புரிகின்றிலேன் என்றும் படிக்கும்படி எழுத் துக்கள் அமைந்துள்ளன. எரியாடிய - நெருப்பைக் கையிலேகொண்டு ஆடிய ; மழுவேந்தி என்று பொருள் கூறுகின்றனர். அரவன் - சர்ப்பா பரண நாதன்.

தெண்ணீர் நாவால் செபிக்கின்றிலேன் ; அவை அறிவிற் கூடாதாயினும் சிவனடியார்பால் சென்று பணிகிலேன் ; ஏழையான என் ஊழ்நற்பயன் படாமையால், பிருதிவி முதலான தத்துவத்தோற்றம் ஒடுக்கமேயாகி, மண்ணுவதே என்னுண்மைப் பயன் ; எனத் திருவுளமிரங்கிக் குருநாதனடிமையாகச் செய்து, அடியார் சேர்வை அணுகச் செய்த அதிசயங் கண்டேன் ; சொல்வேன் சிரடியார்களே ! எனை அருளியதைக் காண்க. (6)

432. இனி, மாயையால் உளதாகிய தேகம் பொய்யென்ற (தி. - ன.) :—

பொத்தை யூன்சுவர் புழுப்பொதிந் துளுத்தசும் பொழுகிய [பொய்க்கூரை
இத்தை மெய்யெனக் கருதிநின் றிடர்க்கடற் சுழித்தலைப் [படுவேனை
முத்து மாமணி மாணிக்க வயிரத்த பவளத்தின் முழுச்சோதி
அத்த னுண்டுதன் னடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

(இ - ள்). சிவஞானச் செயலுடைய அடிகளே ! கேண்மோ ! அடியேன் பொருளெனக் கொண்ட துச்சிலான தேகம் புண்ணெழுகும் துவாரம்; அதில் இரத்தமான சுவர் புழுப்பொதிந்த உள் ; நசையின்றிப் புலால் கமழும் பொய்யால், வேய்ந்த குச்சான கூரைவீடு ; இதனைச் சத்தியப் பொருளாய் உண்மை கொண்டு, துன்பக்கடலான அவலச் சுழியில் அகப்பட்டலேவேனை, அநாதி பரமுத்தனுமான, முத்தையுடைய வாலறிவன், சம்புபட்ச மாமணிச்சோதி, அணுபட்ச மாணிக்கச்சோதி, லயபோக வதிகார வயிரச்சோதி, இவ்வகைச் சத்தியான பவளச்செஞ்சோதி, சத்திசிவ இவ்வகைச் சோதிகளுக் கெல்லாம் மேலான ஏக பரப்பிரமசிவச் சோதியான, உயிர்ப்பொருளான அப்பன், என்னை அடிமை செய்து ஆண்ட அதிசயம் கண்ட இன்பம் என் சொல்வேன் அடியார்களே! என அருளியதைக் காண்க.(7)

---

431. **ஏழமை - அறிவின்மை. நயவாது - விரும்பாமல். ஒருப்படுகின்றேன் - இணங்குகின்றேனெனிய என்னை. அண்ணல் - பெரியோன்.**

432. **பொத்தை - பொத்தல் ; துவாரம். ஊன்சுவர் - மாமிசச் சுவர் ; இரத்தமாகிய சுவர் என்றுரை. அசும்பு - நீணீர். பொய்க்கூரை - பொய்யால் வேய்ந்த கூரை. சுழி - நீர்ச்சுழி. முத்து, மணி, வயிரம் பவளம் இவற்றின் முழுச்சோதி.**

433. இனி, திருவருட் சோதியாக்கியமையைக் கூறும் (தி. - ன.) :—

நீக்கி முன்னெனைத் தன்னெடு நிலாவகை
குரம்பையிற் புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து
நுகமின்றி விளாக்கைத்துத்
தூக்கி முன்செய்த பொய்யறத் துகளறுத்
தெழுதரு சுடர்ச்சோதி
ஆக்கி யாண்டுதன் னடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே.

(இ - ள்). சிவஞான போதமே பெற்ற அடியார்களே! கேண்மோ! அநாதியே திருவடியில் அறியாமையுற்றிருந்த என்னைத் திருவடி சேர்வதாகத் திருவுளங் கொண்டு திருவடியை விட்டுப் பிரித்து, அருமை காட்டிக் கூட்டுவதாக.

நீக்கி, முன்னெனைத் தன்னெடு நிலாவகை—சகலப்படுவதான தேகம் அருளுவதே.

குரம்பையில் புகப்பெய்து நோக்கி நுண்ணிய நொடியன சொற் செய்து—சகலத்தில் யான், எனதென்ற உண்மை கொண்டது கண்டு, குருவாகி எழுந்தருளி, திருநோக்கம் செய்து, பரிபாககால நுட்பச் சத்திநிபாதம் விரைவிலே அருளியும்,

நுகமின்றி விளாக்கைத்து—நுகத்தடி இன்றி வய்லுழும்படி முயல்வான்போல, இவ்வகை அருளிய பரமசிவனே மறந்து இலாப மின்றி யலைவோனை.

நூக்கி...கண்டாமே—பெருங்கருணை வழக்கால் எடுத்த பொற் பாதங் காட்டி, யானெனதென்ற சுட்டற, மலபோத நீக்கி, சிவஞான அன்புருவடிமைச் சோதியாக்கி, திருவடியில் அடக்கி, திருக்கூட்டத்து அருகனுகச் செய்த அதிசயங் கண்டும் வேறின்ப முளவோ? அடியார்களே!—என வருளியதைக் காண்க. (8)

---

433. எனைத் தன்னெடு நிலா வகை நீக்கி என்க. குரம்பையிற் புகப்பெய்து - உடம்பிற் புகவிட்டு. 'நுண்ணிய நொடியன சொற்செய்து என்பதற்குப் பரிபாகால நுட்ப சத்திநிபாதம் விரைவிலே அருளி, என்றார். இதற்கு நுண்மையுடைய ஓசையனவாகிய பிரணவமாகிய சொல்லை அறிவித்து' என்றும், பிறவாறும் பிறர் பொருள் கூறுவர். நுகம் - நுகத்தடி. விளாக்கைத்து - உழுது. விளாக்கைத்து என்றதற்கேற்பத் துகளறுத்து என்றார். துகள், இங்குக் குற்றம்.

434. இனி, ஆன்ம சிற்சத்தியால் உளதாகிய இன்பம் வேறெனக் கருதுவர்பால் இறைவன் செல்லாதமையைக் கூறும் (இ. - ன.) :—

உற்ற ஆக்கையி னுறுபொருள் நறுமல
ரெழுதரு நாற்றம்போற்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொரு
ளப்பொருள் பாராதே
பெற்ற வாபெற்ற பயனது நுகர்ந்திடும்
பித்தர்சொற் றெளியாமே
அத்த னுண்டுதன் னடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே.

(இ - ள்). சீர் சிறப்பின்ப வல்லாச அடியார்களே ! கேண்மோ ! அடியேன் தேகத்தில் அபேதவத்துவிதமாக ஊன் உயிரால் வாழும் உரிமைத்தேதான் ; உணர்வோடொன்றும் தாமெனவும், பூவினில் கந்தம் பொருந்தியவாறுபோல், சீவனுக்குள்ளே சிவமணம் பூத்த வாறு போலும் ; 'பற்றற்றான் பற்றினை', 'பற்றுக பற்றெனக் கின்றி கின் திருப்பாதமே' என நிலை பொருந்தாது, 'ஓராதே, ஒன்றையுமுற்றுன்னுதே, நீ முந்திப்பாராதே, பார்த்ததனைப் பாராய்' என்றமை கொள்ளாது, தனக்களித்த தத்துவ சிற்சட ரிஞ்சிக்ஞ அறிவால் உளதாகிய, இம்மை யம்மை யின்பத்தைச் சுதந்தர லாப முற்ற பித்தமான பயித்தியத் தன்மையுடையார் உபதேசங் கேளாத படி, என் ஆன்மநாதனை அப்பன் என்னை எப்போதும் அடிமையே என அருளி யாண்ட அதிசயமே அதிசயம் ; அடியார்களே ! என வருளியதைக் காண்க. (9)

---

434. நறுமலரில் எழும் நாற்றம்போல், ஆக்கையின் உறுபொருள் பரம்பொருள் என்று கூட்டுக. அப்பரம்பொருளைப் பாராதே, நுகர்ந்திடும் பித்தர் என்க. அத்தகைய பித்தர் செயலை நான் கேளாமே, என்னைக் கூட்டினன் என்று இயைக்க.

பற்றல் ஆவது ஓர் நிலை இல்லாப் பரம்பொருள். நாற்றத்தை உணரலாமேயன்றிப் பற்றமுடியாது ; அதுபோன்றது பரம்பொருள். பெற்றவா பெற்றபயன் - பரப்பொருளான உலக வாழ்க்கையின் பயன்.

435. இனி, மெய்ஞ்ஞான மருள்வதைக் கூறும் (தி. - ன.):—

இருள்தி ணிந்தெழுந் திட்டதோர் வல்வினைச்
சிறுகுடி லிதுவித்தைப்
பொருளெ னக்களித் தருநர கத்திடை
விழப்புகு கின்றேனைத்
தெருளு மும்மதில் கொடிவரை யிடிதரச்
சினப்பதத் தொடுசெந்தீ
அருளு மெய்ந்நெறி பொய்ந்நெறி நீக்கிய
அதிசயங் கண்டாமே.

(இ - ள்). 'செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வமா'கக் கொண்ட சீரடியார்களே! கேண்மோ! உங்களுடைய ஆண்டவன் மகாகேவல விருட்டான மலபோத வன்மையில் உளதாகிய கொடிய வினையுடைத்தான ஒதுக்குக் குடியான மாயா இயந்திர தனுவை உண்மையாகக் கொடுத்தருளியது மலவாசனை தீர என வெண்ணுது, யானெனதென ஒப்புக்கொண்டமையால், துன்ப நரகக் குழியில் அழுந்திய என்னை மும்மலம் தீர்வதற்கு ஒருப்படுத்தும் திருவுளமாக; ஓர் கொடியான அதிகால நுட்பத்தில் மூன்று கோட்டையும் புன் சிரிபபான கோபாக்கினியால் பொடிசெய்து, தத்துவசுத்த அறிவின்பம் பொய்யெனவும், திருவடி ஞானமே அன்படிமை இன்பமென்றும் அருளிய அதிசயமே அதிசயமாக அறிவுடைய அடியார்களே! காண்மின்கள்! கேண்மின்களே!—என அருளியதைக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்

---

435. வித்தைப்பொருள் - மாயா இயந்திரப்பொருள். மெய்ந்நெறி என்றதற்குச் சிவபெருமான் என்று கொண்டு பொருள் முடிவு செய்வர் பிறர்.

27. புணர்ச்சிப் பத்து

இனி, புணர்ச்சிப் பத்தாவன :—

அகத்தியச் சூத்திரம் :—

உணர்ச்சி தருமெய்ப் புணர்ச்சிப் பத்து
முத்தி யருளு மத்துவித இலக்கணம்.

பொழிப்புரை யநுபவம் :—

முற்பதிகத்தில் அருளிய இன்பப் பேரூனதே பெரிதென நிட்டைகூடி இருத்தற்கடையாளம் வினவில், ஆருயிர் முன்போல் பரிபாக சின்னம் பலவுடன் தொழுது அபேத அத்துவிதக் காட்சி யால் அதுவாய்ப் போவதே பரமுத்தியடிமை யென அருளியது.

திருப்பா, ஆசிரிய விருத்தமாகத் திருப்பெருந்துறையில் ஓதிய தெனக் காண்க.

436. இனி, திருவடி ஞானம் பெறுவது எக்காலமென்ற (தி. - ன.) :—

சுடர்பொற் குன்றைத் தோளா
முத்தை வாளா தொழும்புகந்து
கடைபட் டேனை யாண்டுகொண்ட
கருணை லயனைக் கருமால்பிரமன்
தடைபட் டின்னுஞ் சாரமாட்டாத்
தன்னைத் தந்த வென்னரமுதைப்
புடைபட் டிருப்ப தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

புணர்ச்சிப்பத்துக்குத் திருவாசக உள்ளக்கிடை :—அத்துவித இலக்கணம் எ - து ஒன்றுமல்ல, இரண்டுமல்ல என்றல்.

திருவாசகச் சிறப்பு :—

ஆண்ட குருவைப் பிரியா தணைந்து பணிபுரிந்து மிதமன் போடின்பம்
பூண்டு கிடக்கப் பெறுவ தென்றுகொலோ வெனும்விருப்பம்

[புணர்ச்சிப் பத்தரம்.

(பழைய புராணம்)

(இ - ள்). குஞ்சித்த சேவ்டியைக் கும்பிட்டே இருப்பவர்களாள சிரடியார்களே! கேண்மோ! நமது பரமசிவனே, 'நலஞ் சுடரே' யெனவும், 'ஞானத் திருவருட் சொன்னமலையே' எனவும், 'கற்பனை வழிக்ககப்படாத திருவருள் முத்தே', எனவும், தேவண்ணர் திற மொருக் காலாகிலும் பேசாது தேகாதி பிரபஞ்சப் பணியாளனுய் யாவரினும் கடையனை என்னைத் திருவருட் பணிக்கடிமையாக அருளும் கருணைநிதித் தெய்வமே' எனவும், மெய்ஞ்ஞானத் திரு வடியைக் காணவேண்டுமென்று தற்சுட்டால் முயல்வதான அரி பிரமன் இன்னமும் காணது சம்சயமுற்று நிற்பதான திருவடியை அடியேற் கருள்வதான எனதுயிரமிர்த வின்ப வன்பே யுருவான வனே (எனவும் கூவி), அச்சிவசந்நிதானத்திலே அடிமைப் பணிக் காளாவதெக்காலமோ? கற்பனை கடந்த சோதிமணியை அபேத வத்துவிதமாகப் புணர்ந்து,—என வருளியதைக் காண்க.

437. இனி, உள்ளமுருகி யுடனுவரானமையைக் கூறும் (தி. - ன.) :—

ஆற்ற கில்லே னடியே னரசே
அவனி தலத்தைதம் புலனுய
சேற்றி லழுந்தாச் சிந்தை செய்து
சிவனெம் பெருமா னென்றேத்தி
ஊற்று மணற்போ னெக்குநெக் குள்ளே
யுருகி யோல மிட்டுப்
போற்றி நிற்ப தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

(இ - ள்). ஆண்டவனே! அடியேன் இனி இவ்வாழ்க்கை, கோவே! பொறுக்க முடிவதில்லை, இப்பூவாசம்; ஐம்புல வேடர் அளறில் அழுந்தாவண்ணம் அருளி, 'சிவன்! எம்பெருமான்!' எனத் துதித்து, ஊற்று மணற்கேணியில் சலமூறுவதுபோல் அடி யேனுடல் நெக்கு நெக்காக உருகி, உள்ளே அன்பு பெருக அலறி, அடிவணங்கி நிற்பதெக்காலம்! கற்பனைத் துவாரம் செய்யாத சருவ வியாபகச் சிவப்பிரகாசமே! தேவரீர் திருவடியில் அழுந்தாமல், நில்

---

436. தொழும்பு உகந்து - தொண்டினை விரும்பி. கருணையம் - கருணையின் இருப்பிடம்; சாரமாட்டாத தன்னை என்க. புடைபட்டிருப் பது - அயலில் இருப்பது.

லாமல், ஆராவானந்தக் கொழுந்தாவேனே?—என அருளியதைக் காண்க. (2)

438. இனி, திருவடியார் அடியில் அபேதமுறப் பூசிப்பதான சிறப்பைக் கூறும் (தி. - ன.) :—

நீண்ட மாலு மயனும் வெருவ
நீண்ட நெருப்பை விருப்பிலேனை
ஆண்டு கொண்ட வென்ன ரமுதை
அள்ளு றுள்ளத் தடியார்முன்
வேண்டுந் தனையும் வாய்விட் டலறி
விரையார் மலர்தூவிப்
பூண்டு கிடப்ப தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

(இ - ள்). தற்செயலற்ற பூரா நேச வடியார்களே! கேண்மோ! நமது பரமசிவனே ஆன்ம சிற்சத்தி ஞானத்தால் வேரும் நின்றறிய வேண்டுமென்ற அவாவுற்ற நெடியமாலும் அயனும் அச்சமுற நீண்ட அழலுருவை அடியேன்—திருவடியில் அன்பிலாதவனே—திருவருட் பணிக்கடிமையுறச் செய்த என்னுயிரின்பவமிர்தே! உள்ளுமாய்ப் புறம்புமான திருவருளே உள்ளுவார் உள்ளுற அன்பூறும் அடியார் சந்நிதியிலே கருத்து முடியும் வண்ணம் திருநாமம் சொல்லி வாய் விட்டலறி, தூயமலர் தூவி அடிமை பூண்டு, அசைவிற்றிருப்பதெக் காலம்? நாதனே! கற்பனை கடந்த சோதியே! என்னுயிரில் வந்திலையேல் எங்கே மலம் ஒழியும்—என அருளியதைக் காண்க. (3)

439. இனி, கரும்பைத் தேனைப் பாலைக் கனியமுதை ஒத்திருப்பதான முத்தி யின்பத்தைக் கூறும் (தி. - ன.) :—

அல்லிக் கமலத் தயனும் மாலும்
அல்லா தவரு மமரர்கோனும்
சொல்லிப் பரவு நாமத் தானைச்
சொல்லும் பொருளு மிறந்தசுடரை

---

437. ஆற்றுதல் - பொறுத்தல். அவனிதலத்து ஆற்றலில்லேன் என்க. புலனுகிய சேறு. மணல் ஊற்றில் எளிதில் நீர் ஊறுதல் இயல்பு.

438. வெருவ - அஞ்ச. நெருப்பு, இங்குச் சிவபிரான். அள் ஊறு உள்ளம் - மிகுதியாக ஊறும் உள்ளம். பூண்டு - அடிமைகொண்டு.

நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் னமுதை யமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவடியை அகவிதழுடன் கூடிய தாமரை மலரிருக்கையாலும் திருமாலும் மற்றுள்ள தேவ விருடிகளும் இந்திரனும் அநேக சுருதி முடிவான திருநாமம் சொல்லி வணங்கும் பஞ்சாக்கர உருவானை, சொற்பொருளுக் கெட்டாத துரிய மிறந்த அநுபோகச் சோதியை, எல்லாந் தன்னுள்ளே காணுவதான உள்ளங்கை நெல்லிக்கனியை, அபேதப் பொருளுருவான பேரின்பத் தேனை, உயிர்க்குணத்தை அருட்குணமாகக் கலந்தருளும் ஞானப் பாலை, அதுவேயாய் என்னுயிரில் வாழும் அமிர்தவடிவை, அவ்வடிவில் ஆனந்தமான சுவையை, இவ்வகையான அபேத அத்துவித சித்தாந்த அநனிய விபுவைக் கூடாமற் கூடுவதெக்காலம்? அருள வேண்டும்; என், மனமணியாக எழுந்தருளிய நாதனே!—என அருளியதைக் காண்க. (4)

440. இனி, பரம்சிவன் தன்னை அருளாக்கி அடிமை கொண்டமையை வியக்கும் (தி. - ன.) :—

திகழத் திகழு மடியு முடியும்
காண்பான் கீழ்மே லயனுமா லும்
அகழப் பறந்துங் காண மாட்டா
அம்மா னிம்மா நிலமுழுதும்
நிகழப் பணிகொண் டென்னை யாட்கொண்
டாவா வென்ற நீர்மையெல்லாம்
புகழப் பெறுவ தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவடி சிவபோத அன்பால் பூசிக்க, தியானிக்க, அடிகளுள்ளத்தில் மேன்மேலும் விளங்கும்; அப்படி விளங்கா நின்ற திருவடியை அன்பால் அடிமுடி அளவு காண வேண்டுமென்று தேடிய திருமால் அயன் அளவிட மாட்டாது நின்ற என்னப்பன் இப்பிருதிவி மாயாபுவன முழுதும் விளங்க, அடியேனை அடிமைப்பணி கொள்ள அருளால் ஏவுதல் அருளிய

---

439. அல்லி - அகவிதழ். இறந்த - கடந்த. புல்லி - தழுவி.

சாட்குணிய குணங்களைப் புகழ்வது எக்காலம்? காரண காரியம் கடந்த கருணை மணியை கூடாமற் கூடி;—என அருளியதைக் காண்க. (5)

441. இலி, திருவடி ஞானவன்பு பெறுவதான (தி. - மா.) :—

பரிந்து வந்து பரமா னந்தம்
பண்டே யடியேற் கருள்செய்யப்
பிரிந்து போந்து பெருமா நிலத்தில்
அருமா லுற்றே னென்றென் று
சொரிந்த கண்ணீர் சொரிய வுண்ணீர்
உரோமஞ் சிலிர்ப்ப வுகந்தன்பாய்ப்
புரிந்து நிற்ப தென்றுகோல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் அடியேன் பேரில் கருணை வைத்திரங்கி மகாகேவலத்தினின்றென்னைத் திருநோக்கமருளி அன்பு வைத்துத் திருவருண் ஞானமே அடியேற்கறிவானந்தமென அநாதியே அருளி, இன்பத்தேக வரப்பிரசாத மளிப்பதைச் சிற்றறிவால் அந்தத் திருவருளைத் துணையெனக் கருதாது, வேறுன்னி, இப்பூவில் திருமாலைப்போல் திருவடி யறியாது நின்றேனென்று அன்பால் இரு கண்ணீர் வாரிபோல் பெருக, உள்ளே உள்ளம் ததும்பி, மயிர்க் கூச்சிட, திருவருளன்பு இன்ப வடிமையாக இரட்சிப்பதெக்காலமோ? என் கருணைப்பிரகாச சுவயமனமணியை அத்து விதமாகப் புணர்க்கிருப்பது?—என அருளியதைக் காண்க, (6)

---

440. திகழத்திசழும் – மிகவும் விளங்குகின்ற. மால்கீழே அகழ்ந்தும், அயன்மேலே பறந்தும் என இயைக்க. திகழ - விளங்க. ஆவா என்ற நீர்மை - ஐயோ என்றிரங்கின குணங்களெல்லாம்.

441. பரிந்து - இரங்கி. அருமால் உற்றேன் - அரிய மயக்கம் அடைந்தேன். மால் உற்றேன் - திருமாலைப்போல் திருவடியறியாது நின்றேன் என்று பொருளமைக்கின்றார். உள்நீர் - மனத்தன்பு.

442. இனி, கூடுமன்பினிற் கும்பிடலேயன்றி வேறு வீடு வேண்டாமையைக் கூறும் (தி. - ன.) :—

நினையப் பிறருக் கரிய நெருப்பை
நீரைக் காலை நிலனேவிசும்பைத்
தனையொப் பாரை யில்லாத் தனியை
நோக்கித் தழைத்துத் தழுத்தகண்டம்
கனையக் கண்ணீ ரருவி பாயக்
கையுங் கூப்பிக் கடிமலராற்
புனையப் பெறுவ தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவடியைப் பசுபோதத் திருமால் அயன் முதலியோர் வேறுபடக் கருதிய காலம் லிங்கோற்பவ அழலுருவே, நீரே, காலே, வானே, நிலனே, இவையாயும் தனக்கு ஒப்புவமையில்லாத ஏகசிவமே! தேவரீர் திருவடியைத் திருவருளே துணையாக நோக்கி, வியாபகமாக நிறைவுற்ற அருளைக் கண்டு உள்ளம் ததும்பித் தொண்டை நெரிய இரு கண்ணீர் அருவியோடக் கை கூப்பித் தொழ வாசனை நிறைந்த விதி மலரால் அர்ச்சனை அன்பால் செயப் பெறுவதெக்காலம்? எனது உயிர்ப் பிரகாச சிவச்சோதியை அபேதமாக வென்னைக் கூட்டுவித்தவருட்கோலமே!—என அருளியதைக் காண்க. (7)

443. இனி, நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சினுள் புக்கிருப்பதைக் கூறும் (தி. - ன.) :—

நெக்கு நெக்குள் ளுருகி யுருகி
நின்று மிருந்துங் கிடந்து மெழுந்தும்
நக்கு மழுதுந் தொழுதும் வாழ்த்தி
நானா விதத்தாற் கூத்து நவிற்றிச்
செக்கர் போலுந் திருமேனி
திகழ நோக்கிச் சிலிர்சி லிர்த்துப்
புக்கு நிற்ப தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

---

442. பிறருக்கு நினைய அரிய என்ற மாற்றுக. கால் - காற்று. பஞ்சபூத உருவினன் என்பது கூறப்பட்டது. கண்டம் - தொண்டை. கனைய - கனைத்தலுண்டாக. சடி - வாசனை. புனைதல் - சூட்டுதல்.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவடி ஞானப்பிரகாச ஞானமணியை அடைதற்காகக் கூட்டிய பக்குவகால முடிவில், நெக்கு நெக்காக எனதுள்ள முருக, தலைகீழாக நின்றும் சின்மய நிட்டை கூடியும், சமாதி பொருந்தியும், ஆவேசத்தால் எழுந்தும், அன்பால் சிரித்தும், ஆனந்த போகத்தால் கண்ணீரோடியும், அவையால் வாய் விட்டலறி அழுதும், அநேக வந்தனை செய்தும், பிரியாது வாழ வாழ்த்தியும், நானுவித நடிப்பு வாராமையால் காட்டியும், வாயாரத் துதித்தும், செவ்வான் மேனியைக் கண்ணில் அமுதூறக் கண்டு களித்து மயிர்க்கூச்சின்பத்தாற் பெருகியும், இன்பவன்பு நிட்டை கூடுவதெக்காலம்?—என அருளியதைக் காண்க. (8)

444. இனி, திருவடி யணைவதே பூசாநேச மென்ற (தி. - ன.):

தாதாய் மூவே ழுலகுக்கும்
தாயே நாயேன் றனையாண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கோர் மருந்தே
பெருந்தேன் பில்க எப்போதும்
ஏதா மணியே யென்றென் றேத்தி
இரவும் பகலும் எழிலார்பாதப்
போதாய்த் தணைவ தென்றுகொ லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர், "மூன்று மாயா புவனத்திலுள்ளவாகிய இருபத்தொரு பாரம்பரியச் சுற்றக் கூட்டத்தார்க்கும் அநாதியாய் உள்ள அம்மையப்பரே! அடி நாயேற்குத் தாயான செல்வமே! அறிவிலாத என் பிறவி நோய்க்கு அருள்மருந்தே! அடியேனுளத்தில் திருவருள் தேன் விழுவது எக்காலம், இன்பமெய்தி? தீவிர சத்தியுடைய சீவரத்தினமே!" என்று இவ்வகை ஏத்தி இரவென்றும் பகலென்றும் அருளிய கால நியமம் தவறாது திருவருட் பொற்பாதத் திருவடிக்கு, விதியுடை நன்மலர் ஆராய்ந்து அர்ச்சிப்பதெக்காலம், எனது போதம் திருவருண் மணியை அத்துவிதமாகப் பொருந்தி? என அருளியதைக் காண்க. (9)

---

443. நெக்கு - நெகிழ்ந்து. நக்கும் - சிரித்தும்; நவிற்றி - செய்து; செக்கர் - செவ்வான்.

மூவேழுலகுக்கு :—அண்டகோசத்தில் நிலமேழு, சூழ்லகு நீரேழு, கீழ்ப்பாதலமேழு ; வானேழு ; கம்பக்குலகிரிகளெட்டு ; ஏம கடகம் சூழ்படப்பட்டுள்ளதோரண்டப் பரிசென்று, அமுதசாரத்தில் இருப்பதால், அவையும் உலோகத்தின் மேலேற்றிச் சொல்வாருளர்.

445. இனி, சிவன், மூவர் முதலானமையைக். கூறும் (தி. - ன.) :—

காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதும்
கண்ணுர் விசும்பின் விண்ணோர்க் கெல்லாம்
மூப்பாய் மூவா முதலாய் நின்ற
முதல்வா முன்னே யெனையாண்ட
பார்ப்பா னேயெம் பரமா வென்று
பாடிப் பாடிப் பணிந்து பாதப்
பூப்போ தணைவ தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

(இ - ள்). ஆண்டவனே ! எல்லா உயிர்களையும் பரமுத்தியாகச் சுத்த பஞ்சகிர்த்தியம் செய்யும் பொருட்டு சிவசத்தியால் தத்துவ உற்பத்தி, இரட்சை, சங்கரித்தல் செய்து உயிரிளைப்பாறச் செய்வோய் ! எல்லா வுலகத் தேவர்கட்கும் அநாதித் திருவுருவுடையோய் ! அகரமுதலெழுத்தே போன்ற முதல்வா ! இறவாத நாதா ! அநாதியே எனையடிமை கொண்ட பிராமண வடிவான குருமணியே ! எனது பரமசிவனே ! எனத்துதி துதித்து, வணங்கி, திருவடியில் நன் மலரால் அர்ச்சனை செய்வதெப்பொழுது, என் சிவரத்தின மணியைப் புணராமல் புணர்ந்து ?—என அருளியதைக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்

---

444. தாதாய் - தந்தையே. பேது - அறிவின்மை. பேதையேன் பிறவி என்க. மேதா மணி என்றும், ஏதா மணி என்றும் பிறர் பிரித்துப் பொருள்கொள்வர்.

445. கண்ணுர் இடமகன்ற. மூவா - மூத்தலில்லாத ; பாதமாகிய பூப்போது என்றும் கொள்க.

28. வாழாப் பத்து

இனி, வாழாப் பத்தாவன.

அகத்தியச் சூத்திரம்.

வாழாவாழ வருள் வாழாப் பத்து
தத்துவ ஞான முத்தி யுபாயம்.

பொழிப்புரை—

முற்பதிகத்தில் அருளிய திருவருளில், அபேதக் காட்சியால் பொருளும் பேச்சும் வேறின்மையான கருணையை வியந்து இன்பு அன்பு நீங்காமல், ஒன்றிரண்டென்ற கொள்கைக்குளதாகிய அந்துவித அன்பு முத்தியே திருவடி ஞானத் திருவருள் வாழ்வென அருளியதைக் காண்க.

ஆசிரிய விருத்தமாகத் திருப்பெருந்துறையி லோதிய தெனக் காண்க.

446. இனி, மற்றுப் பற்றெனக்கின்றி கின் திருப்பாதமே பரமென்ற (தி. - ன.) :—

பாரொடு விண்ணைப்பப் பரந்தவெம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகே னுர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டடீ யருளிலே யானுல்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

திருவாசக உள்ளக்கிடை :—முத்தியுபாயம் : எ - து. பிரபஞ்சத்தை விட்டுப் பரபோகத்தைக் கூடுதற்கு உபாயம்.

திருவாசகச் சிறப்பு :

நீண்ட வுலகத்தி னிற் பற்றொன்றிலே னிவ்வுடற் கணின்று வாழேன்
மாண்டகு நின்பத நிழற்கீழ் வருக வருள் புரி யெனுஞ்சொல் வாழாப் பத்தே
(பழைய புராணம்).

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர், பாராயும் வானமாயும், அவைக்குப் பிரேரகராயும், அவற்றில் சருவ வியாபகராயும், இருப்ப தான பரமசிவனே! நின் திருவடியே கதி; மற்றுப் பற்றெனக்கில்லை; என் திருவுள மறியாயோ? சிவஞானச் சிறப்புள்ளோய்! சிவபுரத் தரசே! திருப்பெருந்துறை வாழும் சிவகுருவே! அநாதியே அறி விலாத எனக்கு அறிவு கொடுத்து அடிமையாக்கி, திரும்பத் தற் சுட்டறியாமையால் உளதானதைத் திருவருளால் திருவருட் பணிக் கடிமையாக, சிவஞானமே பொருளென, எற்கேற்ப அருளாவிடில் அடியேன் குறையைச் சொல்வதற்கு வேறொரு கடவுளருளோ? இப்பூமியில் எவ்வகை இன்பமுறுவேன்? அடியேனை ஏவல் புரிந் தருள வேண்டும்—என அருளியதைக் காண்க. (1)

447. இனி, கருணையாலழைப்பதான (தி. - ன.) :—

வம்பனேன் றன்னை யாண்டமா மணியே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
உம்பரு மறியா வொருவனே யிருவர்க்
குணர்விறந் [1]துலகமூ வுருவும்
செம்பெரு மானே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எம்பெரு மானே யென்னையாள் வானே
என்னைநீ கூவிக்கொண் டருளே.

(இ - ள்). தேவரீர்! அடியேன் உடல் உயிர் முழுதும் நில்லாத வற்றை நிலையென உண்மை கொள்ளுங் கிஞ்சிக்ஞன்; என்னைக்கருணை யால் அறிவு விளங்க ஆண்ட சிவரத்தின வொளியே! திருவடியன்றி வேறு பற்றுக் கோடில்லாதது திருவுளமறியாதோ? தேவர்கட் கறி வொண்ணு ஏகபரப்பிரமமே! திருமால் அயன் அறிவுக்குள்ளடங்காத மூன்று மாயா புவன அணுக்களுக்கும் முறைமையால் விந்து ஞானம் அருள்வோனே! சிவபுரிக்கோவே! திருப்பெருந்துறைச் சிவகுரு நாதனே! எனதுயிர்ச் சிறப்பின்பனே! என்னுண்டவனே! அடி யேனைக் கருணையால் ஏவற்கூவி இரங்கி அழையாவிடில், விடிவ துண்டோ? திருபை செய்ய வேண்டும்; என அருளியது. (2)

---

446. பார் - பூமி. பரந்த - பரவியிருக்கும். சீர் - சிறப்பு. வார் கடல் - நீண்ட கடல் சூழ்ந்த.

447. பி - ம். 1. உலக மூவிருவும். வம்பன் - வீணன்; இன் மையை உண்மையாகக் கொள்ளும் சிற்றறிவினன் எனலுர். உலகமூவு ருவும் என்று பாடங்கொண்டு மூன்று மாயாபுவனம் என்று உரைக்கின்றார்.

448. இனி, திருவருள் மோக விரக வின்பத்தைக் கூறும் (தி. - ன.) :—

பாடிமால் புகழும் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேடிநீ யாண்டாய்சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஊடுவ துன்னோ டுவப்பது முன்னை
உணர்த்துவ துனக்கெனக் குறுதி
வாடினே னிங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

(இ - ள்). ஆயர்பாடியில் சிற்றின்பம் வேண்டிப் பிறந்த திருமால் ஞானம்பெறப் பூசித்துத் துதிப்பதான திருவடியே கதியன்றி, நாதனே! வேறு பற்றுளவோ? திருவுளமறியாவோ? இவ்வுலக வுயிரில் அபக்குவ வம்பனேன், பிழைப்பு வாய்ப்பறியாதவனே; திருவருணோக்கி அடிமை கொண்டாய், சிவபுரக்கோவே! திருப்பெருந் துறைச் சிவகுருவே! அடியேனைப் பிரிந்த அருளைக் கண்டு கூடுவதே காரணமென ஊடலாயிருப்பேன்! கருணை இன்பத்தால் இன்புறுவேன்; அடியேன் பணி வினவில், திருவுளமறிவதே கடனெனத் துணிவுற்றிருப்பேன்! திருவருள் அருள்வதெப்போ, என வாடியிருப்பேனே ஒழிய, வேறு பணி யறியேன். அத்துன்ப நீக்கம் கருணையால் அருளாவிடில் இவ்வுலகில் வாழ்வதறியேன்; திருவுளமிரங்கி ஏவற்கழைக்க வேண்டும்; என அருளியதைக் காண்க. (3)

449. இனி, இருவர் காணா வொருவனே பரமென்ற (தி. - ன.) :

வல்லைவா ளரக்கர் புரமெரித் தானே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
தில்லைவாழ் கூத்தா சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எல்லைமூ வுலகு முருவியன் றிருவர்
காணுநா ளாதியீ றின்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

---

448. மால்பாடிப் புகழும் என்று மாற்றிப் பிறர் பொருள் கொள்வர்; ஊடுவது - பிணங்குவது.

(இ - ள்). ஆண்டவனே! வன்மையான நெஞ்சுடைய திரிபுரர் களை நிக்கிரகம் செய்தோய்! அடியேற்குத் திருவடி யன்றி அகன்று நிற்ப தெவ்விடம்? திருவுள மறியாயோ? திருத்தில்லை வாழும் நடராசனே! சிவபுரம் வாழுங் கோவே! திருப்பெருந்துறைப்பதிக் குருமணியே! திருமால் அயன் காணுதபடி மூன்று மாயா புவனமும் கடந்து, அடிமுடி தெரியாது வளர்ந்தோய்! அடியேன் ஞானமின்றி வாழ்வதிவ் வுலகநீதியோ? ஏவற்பணிக்கழையாயோ?—என இரக்க முற அருளியதெனக் காண்க. (4)

450. இனி, பஞ்ச விந்திரியமும் ஏவற்பணிக்குரித்தாவன என்ற (தி. - ன.) :—

பண்ணினேர் மொழியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே யாண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எண்ணமே யுடல்வாய் மூக்கொடு கண்செவி
என்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர்! யாழைப்பழித்த அம்மை பாகா! உமது திருவடியே அடியேற்குப் பற்றுக் கோடின்றி வேறு ளவோ? திருவுளமிரங்கி, நிச்சய சித்தாந்தமே, அடிமையை ஏவ லாளாகக் கொண்டது! சிவபுரக்கோவே! திருப்பெருந்துறைக் குருமணியே! என் சிந்தையாய் நின்றோய்! அடியேன் உடலும் அதனிலுளதாகிய கண் செவி மூக்கும் நினது திருவடியிலே வைப் பாக, அதுவாய்ச் செய்து, பாரிலே அடியேன் வாழ்ந்தின்பம் பெரு தது, திருவுள மறியாயோ? அறிவிலாதவனே ஏவல் புரிய அழைக்க என, கருணையை வியந்தருளிய தெனக் காண்க. (5)

---

449. வல்லை - வீரைவில். வளரக்கர் - கொடிய அரக்கர். உருவி - ஊடுருவிச்சென்று. ஆதி ஈறு - அடி, முடி. வல்லையாய் - வலிமை யுடையாய்.

450. பண் - இசை. பங்க - பாகா. எண்ணமே - நினைப்பும்; ஆவன அந்தக் கரணங்களும்.

451. இனி, திருவருளே மறந்தமையைக் கூறும் (தி. - ன.) :—

பஞ்சின்மெல் லடியாள் பங்கரீ யல்லால்
பற்றுகான் மற்றிலேன் கண்டாய்
செஞ்செவெ யாண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அஞ்சினேன் நாயேன் ஆண்டுநீ யளித்த
அருளினை மருளினுல் மறந்த
வஞ்சனே னிங்கு வாழ்திலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

(இ - ள்). பஞ்சிலும் மெல்லிதாய திருவடியுடைய பார்ப்பதி பாகனே ! பற்றுமற்றிலன் ; அருளே ! எல்லாருங் காணவே அடிமை செய்தாய் ; திருப்பெருந்துறைவாழ் சிவனே ! அநாதியே அடிமைப் பணி கொண்ட நாதனே ! ஆண்டவன் என்ற உண்மையைத் தற் சுதந்தரமுற்றும் மறந்த மயக்கறிவுடைய வஞ்சகன் நான் ; திருவடி பூசிக்க அச்சமுற்றேன்; ஆனதனுல் எவ்வகை இப்பூவில் வாழ்வேனே? திருவுளமிரங்கி அழையாயோ ?— என அருளியதைக் காண்க. (6)

452. இனி, திருவருளறியாத மருளனமையைக் கூறும் (தி. - ன.) :—

பருதிவா ளொளியாய் பாதமே யல்லால்
பற்றுகான் மற்றிலேன் கண்டாய்
திருவுயர் கோலச் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
கருணையே நோக்கிக் கசிந்துள முருகிக்
கலந்துகான் வாழுமா றறியா
[1]மருளனே னிங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

(இ - ள்). ஆண்டவனே ! தேவரீர் கிருபை பருதியின் உதவியைப் பாரறியார்போல, திருவடி யருமை அறியாத பாவிக்கு வேறு பற்றுளவோ ? திருவுளமே, அறிவின்பமே வடிவான சிவபுரத்தரசே!

---

451. செஞ்செவே - செம்மையாக ; எல்லாருங்காண என்றுர் மருளினுல் - மயக்கத்தால்.

452. பி - ம். 1. மருளனே னுலகில்.

திருப்பெருந்துறைப்பதிச் சிவனே! தேவரீர் திருவுளப் பெருங்கருணையே அறிவெனக் கண்டு உருகிக் கசிந்து அபேத அத்துவித அன்பர்ப்பேரின்ப நிட்டை அதுவாக, வாழ்வுடையன் அல்லாத மயக்கறிவுடையேன்; இவ்விடம் பதியென வாழ்வதுளவோ? திருவுளமே கருணை செய்து அன்பால் 'வா' என அழையாயோ?—என அருளியதைக் காண்க. (7)

453. இனி, ஆள்வதான (தி. - ன.):—

பங்கணை விரலாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செந்தழல் போல்வாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அந்தமி லமுதே யரும்பெரும் பொருளே
ஆரமு தே[1]யடி யோமை
வந்துய வாண்டாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

(இ - ள்). தனிச்சுடரான இன்பம் ஆண்டவனே! திருக்கையில் பந்து சூடிய அம்மைபாகா! திருவடியலது தனித்த பொருளாவேனே? அவையானல், அருளின்பம் காணேனே! வேறிருப்ப இடமுளவோ? சூரியன் அன்றியில் இருளும் கண்ணும் தனித்துக் கண்ட சதசத்தர் உளரோ? நன்றறியுங்கால் பொருள் வேருயுறுவ தொழிய சிவாநுபூதியினின்றது திருவடியொன்றுமே; சிவபுரத்தரசே! திருபெருந்துறையுறை சிவனே! முடிவிலாத பேரின்பமே! சுதந்தர அறிவுடையார் காணமாட்டாத அருமை உரிமைப்பொருளே! ஆராத சுவையே! அடியோங்களைத் தான்வேறு நான்வேருய் வந்து புணரா வழக்காக்கும் திருவுளமே! இனித் திருவடி நீங்கி எனதுயிர் இவ்விடம் வாழ்வதுளவோ? சித்தாந்தத்தே சிவன், திருக்கண் சேர அழையாயோ (?)—என அருளியதைக் காண்க. (8)

---

452. பருதிவாழ் ஒளி; சூரியன் போன்ற ஒளியாய் என்பர் பிறர். மருளன் - மயக்கறிவுடையேன்.

453. பி - ம். 1. அடியேனை. அந்தம் - முடிவு. உய - பிழைக்கும் பொருட்டு.

454. இனி, வழுவை உரித்தமையைக் கூறும் (தி. - ன.) :—

பாவ நாசா வுன் பாதமே யல்லால்
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
மூவுல குருவ இருவர்கீழ் மேலாய்
முழங்கழ லாய்நிமிர்ந் தானே
மாவுரி யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

(இ - ள்). ஆண்டவனே! அடியேன் செய் தீவினை முழுதையும் திருநோக்கால் கெடுத்தோய்! உனது திருவடி ஞானமே ஞானம்; மற்றுள ஞானம் ஞானமான ஞானமே; பற்றுள தானே மற்றுள தறி வனே? மகாதேவனே! சிவபுரத்தரசே! திருப்பெருந்துறையுறை சிவனே! மூன்றுலகும் உருவி அக்கினி வடிவான பிரகாசத்தைப் பசுஞானமுடைய திருமால், அயன் அறியாத ஞானப்பிரகாசமே! யானையை உரித்துப் போர்த்தும் நாதா! திருவடி அன்றியில் வாழ்வு காணேன்; இன்ப வாழ்வு வாழ்வதாக, அழைப்பொழியா னென் றெதிர்ப்படாயோ?—என அருளியதைக் காண்க. (9)

455. இனி, சிவனலது வேறு தெய்வம் தொழேனென்ற (தி. - ன.) :—

பழுதில்தொல் புகழாள் பங்கநீ யல்லால்
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
செழுமதி யணிந்தாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
தொழுவனே பிறரைத் துதிப்பனே னெனக்கோர்
துணையென நினைவனே சொல்லாய்
மழவிடை யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

(இ - ள்). ஒப்பிலாத மகிமைப் பிரதாபமுடையாள் பாகம் அநா தியேயுடைய ஆண்டவனே! தேவரீர் திருவடியலது வேறு பற்றுக் கோடுளவோ? திருவுளமறியாயோ? சந்திரசூடா! சிவபுரக்கோவே!

---

454. பாவ நாசா - தீவினைகளைக் கெடுத்தோய். இருவர் - மாலும் அயனும். மா - யானை உரி - தோல்.

திருப்பெருந்துறைப்பதியே! சிவகுருநாதா! விண்ணப்பம்; தேவரீர் திருவுருவன்றி வேறொரு தேவ உருவைப் பணிவனே? தேவரீர் திருநாமமன்றி வேறுள தேவ நாமம் துதிப்பனே? திருவடிதாரகமே ஒழிய வேறுள தெய்வத்தை உயிரெனக் கொள்வனே? திருவுள மறிய அருள்வாய்; இளவிடையுடையாய்! இனிப்பூவில் வாழ்வனே? அடியேனைத் திருவடி காண அழைப்பதே கடன்; என அருளியதைக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

29. அருட் பத்து

இனி, அருட் பத்து :

அகத்தியச் சூத்திரம்.

பெருகருட் பத்துப்
பெருமாயா சுத்தி.

பொழிப்புரை.

முற்பதிகத்தில் திருவடி ஞானமான அன்பு நிட்டை பெற்ற பின், அற்ற போத விறுதியே அடிமை வழிபாடு வணக்கமான இன்ப மாயாதீத சுக வல்லாச அன்பெனக் காண்க.

திருப்பா, ஆசிரிய விருத்தமாகத் திருப்பெருந்துறையிலோதிய தெனக் காண்க:

---

455. மழவிடை - இளமையான இடபம்.

திருவாசக உள்ளக்கிடை : மகா மாயாசுத்தி : எ - து. மாயையைச் சுத்திபண்ணுதல்.

திருவாசகச் சிறப்பு :

சோதியருட்சுடர் விளக்கே துயர்ப்பிறவிக்கடல் விடுத்துன்னுள் சேர்த்தற் காதரித்திங்குனே யழைத்தால தெந்துவெனக் கேளெனுஞ்

[சொலருட்பத்தாகும்

(பழைய புராணம்.)

456. இனி, எச்சோதிக்கு மேலான சிவஞானச் சோதியின் திறத்தைக் கூறும் (தி. - ன.) :—

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
[1]பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியே னுதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

(இ - ள்). சுவாமி! என் அறிவில் விளங்கும் ஞானமே! ஞானனந்தப் பிரகாசமே! சருவ வியாபக உயிர்க்குயிராய், அறிவுக்கறிவான விளக்கமே! ஞானக்கோதையும் பேரின்ப தனமுழுடைய அம்மை பாகனே! பரப்பிரமமே! நீறணி கடவுளே! திருமாலயன் காணாத் திருவருள் நீயே! ஞானச்செல்வோய்! திருப்பெருந்துறையாகிய உள்ளக் கோவிலில், சைதனியக் குருந்த விருட்ச வியாபக அடியிலெழுந்தருளிய அநாதி சிவமே! அடியேன் அன்பாற் பூசித்துத் துதித்தழைத்தால், திருநோக்கருளாமல் என்ன பராமுகமோ? கருணை செய்ய வேண்டுமென வருளியது. (1)

457. இனி, திருவடி யென்னுள்ளிருக்க வெங்குந் தேடிக் காணுதென்ற (தி. - ன.) :—

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே யுன்னை யோலமிட் டலறி
உலகெலாந் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே அடியே னுதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

பி - ம். 1. பாதியனே.

456. அதெந்து - அதென்ன : இது மலையாள வழக்கென்பர். அஞ்சாதே என்று இதற்குக் கன்னடத்தில் பொருளுள்ளது என்பர். அதென்ன பராமுகமோ என்று இங்குப் பொருள் கூறுகின்றார்.

(இ - ள்). ஞான நடராசனே! நிட்களப் பொருளே! பரை யாகிய நீற்றை யணிவோய்! திருநெற்றியிற் சருவ ஞானக் கண் ணுடையோய்! தேவரட்சகா! முடிவில் ஏகபரப்பிரம அறிவே! தேவரீர் திருவடியை எனதறிவால் அலறி, எல்லா வுலகுந் தேடியுங் காணேனே! திருவருட் குணப் பொய்கை சூழுந் திருப்பெருந்துறை யுள்ளக் கோவில் உயிரான குருந்தடியிற் கண்டு அடியேன் அன்பாற் பூசிப்ப, பராமுகமான திருவுள மென்னவோ? நாதனே!—என வருளியதைக் காண்க. (2)

458. இனி, ஆன்ம நாயகன் சிவனே யென்ற (தி. - ன.) :—

எங்கண் யகனே என்னுயிர்த் தலைவா
ஏலவார் குழலிமா திருவர்
தங்கள்நா யகனே [1]தக்கனற் காமன்
தமதுடல் அழலெழ விழித்த
செங்கண் யகனே திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அங்கண் அடியே னுதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

(இ - ள்). மூவகை அணுக்கட்கும் நாயகனனவனே! என் உயிர்த் தலைவனனவனே! ஞான மணம் வீசும் ஞானப் பூங்கோதையான சருவஞான சத்தியான கங்கைக்கும் ஆனந்த வடிவான பராசத்திக் குங் கணவனே! தக்கனையுங் காமனையுந் தற்சிவ வியாபகத்தை மறந்தவர்களின் உடல்களை அக்கினி வடிவாகச் செய்த திருநோக்க முடையோய்! திருப்பெருந்துறையான சைவத்திற் சிவமான குருந் தடியில் எழுந்தருளிய அங்கண்! அடியேன் அன்பாற் பூசித்துத் துதித்தால், அஃதென்ன பராமுகமோ, கருணை செய்யாது இருப்பது? இனி அருள வேண்டும்; என அருளியதைக் காண்க. (3)

---

457. அருத்தன் - மெய்ப்பொருளாவன்.

பி - ம். 1. தக்கநற் காமன் தனதுடல்.

458. எங்கள் என்றது தம்மைச் சேர்ந்த அடியார்களை; மூவகை அணுக்கள் என்பர். ஏலம் - மயிர்ச்சாந்து; அதன் மணமாயிற்று. தக்க நற்காமன் தனதுடன் என்று பாடங்கொண்டு, தகுதியையுடைய நல்ல காமன் என்று பிறர் பொருள் கொள்வர்; இதுவே ஏற்புடையதாகும்; தக்கன் எரிவாய் அழிக்கப்படாமையின். அம்கண்ணே - அங்கண்,

459. இனி, அக்கினி வடிவு காட்டியருளிய (தி. - ன.) :—

கமலநான் முகனுங் கார்முகில் நிறத்துக்
கண்ணனும் நண்ணுதற் கரிய
விமலனே எமக்கு வெளிப்படா யென்ன
வியன்றழல் வெளிப்பட்ட எந்தாய்
திமிலநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அமலனே அடியே னுதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

(இ - ள்). விட்டுணு பிரமா இருவரும் பொருந்தி அடிமைப் பணிக் கெட்டாத கடவுளே ! அடியேற்கு வெளிப்பட்டருள வேண்டு மென இரந்தவுடன், அக்கினி வடிவாயெழுந்தருளிய எனதப்பனே ! இடைவிடாது பேரொலி ஒலிக்கும் நான்கு வேதம் பணியுந் திருப் பெருந்துறைப்பதியின் மலர் மணம் பொருந்திய சிவக் குருந்தடியி லெழுந்தருளிய சிவனே ! அடியேன் அன்பாற் பூசிப்பதே நியமமென வழைப்ப, அழைப்பொழியான் என்றெதிர்ப்படாதிருந்த பராமுக மென்ன ! சுவாமி ! என அருளியதைக் காண்க. (4)

460. இனி, திருமேனியில் அம்மை முலைச்சுவடழுந்தினமை யைக் கூறும் (தி. - ன.) :—

துடிகொள்நே ரிடையாள் சுரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள்தோய் சுவடு
பொடிகொள்வான் தழலிற் புள்ளிபோ லிரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே
செடிகொள்வான் பொழில்சூழ் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அடிகளே அடியே னுதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

(இ - ள்). ஆண்டவனே ! தேவரீர் திருமேனியிலே உடுக்கை போன்ற, யாலெனதென்ற மருங்குலும், ஆன்ம ஞான அளகபாரமும்

---

459. கமல நான்முகன் - தாமரையில் தோன்றிய பிரமன் ; கார் முகில் நிறத்துத் கண்ணன் - கரிய மேக நிறங்கொண்ட திருமால். நண் ணுதற்கு - நெருங்குவதற்கு. வியன் - பெருமை, திமிலம் - பேரொலி,

உடைய பார்ப்பதி யம்மையினுடைய பரஞான மூலக்கண் அபேத மாகக் குணகுணி பாவ அநுபூதிபெற விபூதி யணிவதான அக்கினி வடிவில் இரண்டு பேரானந்தப் புள்ளி ஞானம் விளங்கும் திருமார் புடையோய்! நெருங்கிய ஞானச்சோலை சூழ்ந்திருப்பெருந்துறையில் சைதனியக் குருந்தடியில் எழுந்தருளிய அடிகளே! அடியேன் அன் பால் பூசித்தழைத்தால், அதென்ன பராமுகம்? திருவுளமோ? அரு ளாய்; என அருளியதைக் காண்க. (5)

461. இனி, உள்குவாருள்ளத் தின்பமானதென்ற (தி. - ன.):

துப்பனே தூயாய் தூயவெண் ணீறு
துதைந்தெழு துளங்கொளி வயிரத்
தொப்பனே உன்னை யுள்குவார் மனத்தின்
உறுசுவை யளிக்குமா ரமுதே
செப்பமா மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அப்பனே அடியே னுதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

(இ - ள்). அறிவானந்த அநுபோகமே! உயிர்களை விளக்கும் ஞானமே! பரிசுத்த வெண்ணீற்றொளி வயிரப் பிரகாச ஞானானந் தமே! யாவர்க்கும் ஒப்புடையவனே! தேவரீர் திருவடி ஞானத்தால் தியானிப்போர் உள்ளத்து இன்பளிக்கும் அபேத வத்துவித ஆரா வமுதே! ஞானவழி முறையோதும் வேதம் சேர்வை செய்யும் திருப் பெருந்துறை ஞானக்குருந்தடியில் எழுந்தருளிய குருவான அப்பனே! அடியேன் அன்பால் பூசித்தழைத்தால் அழைப்பொழியான் என் றெதிர்ப்படாது பராமுகமான திருவுளமோ? என்னவோ?—என அருளியதைக் காண்க. (6)

---

460. துடி - உடுக்கை. துணை - இரண்டு. சுவடு - அடையாளம். பொடி - நீறு. வான் - பெரிய. சுவடு இரண்டு போல் மார்பில் தங்கும் என்க. செடிகொள்தல் - நெருங்குதல். பொழில் - சோலை.

461. துப்பு - பவளம். துப்பனே - பவளம் போன்ற சிவந்த மேனியனே. தெய்ப்பன் என்பதன் மருவாகக் கொண்டு இங்குப் பொருள் உரைத்தனர் போலும். நீறு துதைந்து எழு துளங்கு ஒளி வயிரத்துக்கு ஒப்பானவனே என்று கொண்டுரைப்பது நேர்பொருளாகும். உள்குதல் - தியானித்தல். உறுசுவை - மிக்கசுவை. செப்பம்ஆம் மறை என்றும் பிரித்துப்பொருள் கொள்ளலாம். செப்ப - சொல்ல.

462. இனி, மகாமேருவை வில்லாய் வளைத்தமையைக் கூறும் (தி. - ன.) :—

மெய்யனே விகிர்தா மேருவே வில்லா
மேவலர் புரங்கள்மூன் றெரித்த
கையனே காலாற் காலனைக் காய்ந்த
கடுந்தழற் பிழம்பன்ன மேனிச்
செய்யனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
ஐயனே அடியே னுதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் மெய்யர்க்கு மெய்யாய், வினைக்கு வினையாயினீர்! பொய்யர்க்குப் பொய்யாய்ப் பொய்பயனினீர்! திருக்கையால் மகாமேருவை வில்லாக வளைத்துத் திரிபுரதகனம் செய்தோய்! திருவடியால் எமனைச் சங்கரித்தோய்! அக்கினி உருவான அழகனே! திருவருட் செல்வனே! திருப்பெருந்துறை யுள்ளப் பதியிலே ஞானக்குருந்தடி வாழும் குருவே! அடியேன் அன்பாற் பூசித்தால், பராமுகமான தென்னே? திருவுளம் அருள்வாய்—என அருளியதைக் காண்க. (7)

463. இனி, எத்தவத்துக்கும், பதமுத்தி சிவபூசைக்கும் மேலான பரமுத்தி யருள்வல் என்ற (தி. - ன.) :—

முத்தனே முதல்வா முக்கண முனிவா
மொட்டரு மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அத்தனே அடியே னுதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

---

462. விகிர்தன் என்றதற்கு வினைக்கு வினையாயினன் என்றுரை; வேறுபட்ட வடிவம் கொள்பவன் என்று பிறர் கொள்வர். காலன் - இயமன். பிழம்பு - திரட்சி. செய்யன் - சிவந்தவன்.

(இ - ள்). ஆண்டவனே ! தேவரீர், அநாதி பரமுத்தனை முதலோய் ! முக்கண்ணை ! உமது சிர்பாதத்தில் அநேக விருடிகள் அரும்போடு மலர்கள் கொண்டு, ஆர்வத்தை உள்ளே வைத்து, பெரும் புலர்காலை முழ்கிப் பூசிக்க, பித்தர்க்குப் பத்தரான அச்சுதர்தான்மாக்களுக்குத் திருவடி யருளும் திருவுளமே ! ஞானச்செல்வா ! திருப்பெருந்துறையில் செழுமலர்க் குருந்தடியில் எழுந்தருளும் எனதப்பனே ! அடியேன் ஆசையொடு பூசித்தால் அடி சேர்வதாக அருளாது, பராமுகமாவ தென்னுவதேயோ ?—என அருளியதைக் காண்க.

464. இனி, தற்போதம் நீக்குவதான (தி. - ன.) :—

மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி
மறுமையோ டிம்மையுங் கெடுத்த
பொருளனே புனிதா பொங்குவா ளரவம்
கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்
தெருளுநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருளனே அடியே னுதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

(இ - ள்). ஆண்டவனே ! திருவடி நிங்கியே மயக்கறிவுடைய என் மனதைப் பொய் மயக்குத் தீரத் திருவருணோக்கி இம்மையில் உளதாகிய கிஞ்சிக்ஞ அறிவையும், அம்மையிலுளதாகிய சருவஞான அறிவையும், கெடுத்து, இரண்டு தசையினும் தற்பரம்பொருள் தானே என அருளும் பரிசுத்த நாதா ! நாகத்தையும் கங்காசலத்தையும் திருச்சடையில் தரித்தோய் ! தெருண்ட நான்கு வேதமும் சேர்வதான திருப்பெருந்துறையில் செழுமலர்க்குருந்த நிழற்கீழ் வீற்றிருப்பதான திருவருளுடைய சோதி ! அடியேன் அன்பால் பூசை செய்ய, அதென்ன திருவுளமோ, அருள்வாய்,—என அருளியதைக் காண்க.

(9)

---

463. மொட்டருமலர் - மொட்டு நிலையினின்றும் முழுவதும நீங்காத மலர். அத்தன் - தலைவன்.

464. மருளன் - மயங்கியவன். இருமையும் கெடுத்த என்றமையால் முக்தியளித்த என்றுமாம். வாள் - ஒளிபொருந்திய ; கொடிய எனலும் ஆம்.

465. இனி, திருக்கயிலை மாமலையே பரம வீடென் றருள்வ தான (தி. - ன.) :—

திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
இருந்தவா றெண்ணி யேசரு கினைத்திட்
டென்னுடை யெம்பிரா னென்றென்
றருந்தவா கினைந்தே யாதரித் தழைத்தால்
அலைகட லதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி யிதுகாண்
போதராய் என்றரு ளாயே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர், சிறப்பாயுள்ள பொழில் சூழ்ந்த ஞானச் சைவத் திருப்பெருந்துறையில் சித்தாந்தக் குருந் தடியில் எழுந்தருளிய திருவுருவை இன்பவன்பு உருவாக அனுபவ நிட்டையாக, பொருந்திப் பிறவித் துன்பம் அகல, சிவயோக பாவனை ரூபா! என்னுடைய பிரானே! எனை இரட்சிப்பாய், நான் பிறவி சாக ரத்தில் அழுந்தி இருப்பனே! அடியேற்கருள வேண்டுமென்றிரந்து அர்ச்சனை செய்வோனே, பிறவியலையிலே யலைவோனே, 'சாயுச்சியப் பதவி பெற வேண்டுவது திருக்கயிலை மாமலை; இவ்வுபதேசம் இடம் இவையே; வா'வென அருள்வாய்; என அருளியதைக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்

---

465. வார் - நீண்ட. ஏசரு - ஏசுதலற்று; வருந்தி எனலும் ஆம். அருந்து அவா நினைந்து என்க. அநுபவிக்கும் ஆசையால் நினைத்து என்பது பொருள். அலைகடல் - பிறவிக்கடல். பொருந்த வா - என்னைப் பொருந்த வருக; போதராய் - வருக.

30. திருக்கழுக்குன்றம்

இனி, திருக்கழுக்குன்றம் :

அகத்தியச் சூத்திரம்.

காட்சிப் பத்தாகுந் திருக்கழுக் குன்றம்
மாட்சிமை தருசற் குருதரி சனமாம்.

பொழிப்புரை—

முற்பதிக வநுபூதியில் கண்ட இன்பம் திருவடி யன்றி வேறுண்டோ? வென, அதுவே தானும் தன்மை; எப்பதம், எவ் வுலகு, எவ்வுயிர், யாவையும் அப்படியே கண்ட திருவடி ஞான அன்பு உல்லாச அநுபூதி;

ஆசிரிய விருத்தமாகத் திருக்கழுக்குன்றத்தில் ஓதியதெனக் காண்க.

466. இனி, சத்திநிபாத உத்தமருள்ளத்தில் திருவடி உதய மானதைக் கூறும் (தி. - ன.) :—

பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு
மானுன் னுமங்கள் பேசுவார்க்
கிணக்கி லாததோ ரின்ப மேவருந்
துன்ப மேதுடைத் தெம்பிரான்

மேலே காட்டிய அகத்தியச் சூத்திரத்தால் இப்பதிகத்துக்குக் காட்சிப் பத்து என்ற வேறொரு பெயருண்டென்பதும், இதனில் பத்துச் செய்யுள் கள் இருந்தனவென்பதும் தெரியவருகின்றன. திருக்கழுக்குன்றம் என்பதே இதன் பெயர் போலும்.

இதற்குத் திருவாசக திருவுள்ளக்கிடை குருதரிசனம் : எ - து. பசுத் துவம் கெட்டவிடம்.

திருவாசகச் சிறப்பு :

நீதிமறைபரவு திருப்பெருந்துறையிற் குருவடிவாய் நிகழ்ந்தகோலம்
காதலொடுங்காட்டினையே யெனுங்களிப்புப் பகர்தருக்கழுக்
குன்றமே.

உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாம லென்வினை யொத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம் நீவத்து
காட்டி னுய்கழுக் குன்றிலே.

(இ - ள்). யாதொரு ஊறுபாடில்லாத திருப்பெருந்துறைப் பெருமானை தேவரீர் திருநாமங்களைச் சீரடியார்கள் துதித்து அள வளாவுவார்கள்; இச்சைக்கப்படாத அறிவின்பமாய் எழுந்தருளி, பிறவித் துன்ப வேரறுத்து, "அவாவென்ப, வெல்லா வுயிர்க்கும் தவர்ப்பிறப்பினும்வித்து," இனி திருவடி கண்டபின் விளையாமல், அடியேன் மலபரிபாக சத்திநிபாத இருவினைச் சமமான காலம், அளவிலாத ஞானமே வடிவான திருவருளுருவை என்னறிவின் கண்களே கொள்ளை கொள்ள, காட்டறிவாய், என்னுள்ளே நின்றருளினதால் கண்டேன்; திருக்கழுக்குன்றத்திலே, என அருளியதைக் காண்க.

எனது போததேதகம், திருக்கழுக்குன்றம் என்றது. (1)

467. இனி, பித்தனுய் எழுந்தருளித் திருமுடியில் மண் சுமந்த எளிமையைக் கூறும் (தி. - ன.) :—

பிட்டு நேர்பட மண்சு மந்த பெருந்து றைப்பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்திலாத சழக்க னேனுனைச் சார்ந்திலேன்
சிட்ட னேசிவ லோக னேசிறு நாயினுங்கடை யாயவெங்
கட்ட னேனையு மாட்கொள் வான்வந்து காட்டி னுய்கழுக்
[குன்றிலே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர், வந்தியம்மை அடிகட்காக இன்பப்பிட்டைத் திருப்போனகஞ்செய்து, திருமுடியிலே மண்சுமந்து, திருப்பெருந்துறையில் எழுந்தருளிய, தன்வசமே உடைய பித்தனே! அடியேன் அநாதியே அருளிய சிவாகமப்படி உணர்வு நேர்பெற, திருஞானம் கிடைக்க மாட்டாத குற்றமே பெரிதுடையேன்; திருவடி

---

466. பிணக்கு - ஊறுபாடு; மாறுபாடு. பெருமான் என்றதுவிளி. இணக்கிலாத. ஒப்பற்ற; இணங்காத எனக்கொண்டு, இச்சைக்கப்படாத என்றுரை. உணக்கு இலாததோர் வித்து - காய்தலில்லாத, என்றும் பாசையுள்ள பிறவி வித்தை. வினையொத்தல் - சத்திநிபாத நிலையடைதல். கணக்கிலாத - அளவற்ற.

சாரும் அருள் அறியேன் ; யாவர்க்கும் பெரியோனே ! சிவலோகனே ! நாய்க்குட்டியினுங் கடையனனை, துன்பமேயுடைய, என்னையும் அடிமையாகக் கொள்வான் எழுந்தருளி, திருவடியைத் திருக்கழுக்குன்றிலே காட்டறிவாய் எனதுள்ளம் பேரின்பமென வளர என அருளியதைக் காண்க. (2)

468. இனி, மேல் விளைவதான திருவருளாற்றியாமையைக் கூறும் (தி. - ன.) :—

மலங்கி னேன்கண்ணி னீரை மாற்றி
மலங்கெ டுத்தபெ ருந்துறை
விலங்கி னேன்வினைக் கேட னேனினி
மேல்வி ளைவத றிந்திலேன்
இலங்கு கின்றகின் சேவ டிகளி
ரண்டும் வைப்பிட மின்றியே
கலங்கி னேன்கலங் [1]காமல் நீவந்து
காட்டி னுய்கழுக் குன்றிலே.

(இ - ள்). சுவாமி ! அடியேன் பிறவித் துன்பத்து நின்று அழுத கண்ணீரைத் திருவருளாற்றுடைத்து, என் மல காரியத்தையும் அருளால் நீக்கிய திருப்பெருந்துறைக்குருவே! மல வண்மையன், இருவினைப் பாசமுடையன் ; இப்பாசமென்னை விடாது மேன்மேலும் உற்பத்தியாவதென அறியேன் ; சிவஞான பராபரமான இரண்டு திருவடிகளும் அடியேன் உள்ளமல்லது வேறிடங் காணேனே ! அவையாற் கலக்கமுற்றழியுங் காலம் குருமேனி கொண்டெழுந்தருளி உனது உள்ளமே, திருக்கழுகான விருடிகள் பூசிப்ப, குன்றமெனக் காட்டி யருளிய சிவனே ! என அருளியதைக் காண்க. (3)

---

467. சட்டம் - சிவாகமச்சட்டவிகள். சழக்கன் - குற்றமுடையேன் ; அறியாமையையுடையேன். சிட்டன் - ஆசாரசீலன் ; பெரியோன். கட்டனேன். கஷ்டமுடையேன் ; துன்பமுடையேன்.

பி - ம். 1. காமலே வந்து.

468. மலங்கினேன் - கலங்கினேனை என். மாற்றி - துடைத்து. விலங்கினேன் - விட்டு விலகினேன். வைப்பிடமின்றியே கலங்கினேன் என்றதற்கு வேறு பொருள் கூறுவர் பிறர்.

469. இனி, திருப்பெருந்துறையே திருத்தோணியானதென்ற (தி. - ன.) :—

பூணை ணைதொ ரன்பு பூண்டு
பொருந்தி நாடொறும் போற்றவும்
நாணை ணைதொர் நாண மெய்தி
நடுக்க டலுள ழுந்திநான்
பேணை ணைதபெ ருந்து றைப்பெருந்
தோணி பற்றி யுகைத்தலும்
காணை ணைத்திருக் கோலம்நீ வந்து
காட்டி னையகழுக் குன்றிலே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவடி யன்பு எத்தேவர் கட்கும் கிடைக்கமாட்டாது; அதைச் சிரடியார் பூண்டு அபேத அத்துவிதமாக நிட்டை கூடித் துதித்து அன்புருவான அடிமையாய் நிற்ப, அவை கண்டு நீங்காத வெட்கமுடையனாய், திருவடி மறந்து, பிறவி சாகரமத்தியில் அழுந்திய காலம், சிவஞான மில்லாதார் வழி பட மாட்டாத திருப்பெருந்துறை வெள்ளத்தே தோன்றிய, என் னுள்ளத் தொளியே திருத்தோணியாக வெழுந்தருளியதை அன்பாற் பற்றி அறிவுருவாக வெளிப்படுங் காலம், ஒருவராலும் அன்பன்றிக் காணைணைத திருமேனி கொண்டெழுந்தருளி, திருக்கழுகான அடி யார் பூசிக்கும் குன்றமே அறிவெனக் காட்டி, அடிமை செய்ததை அருளியதெனக் காண்க. (4)

470. இனி, அழைப்பொழியா னென்றெதிர்பட வெழுந்தரு ளியமையைக் கூறும் (தி. - ன) : —

கோல மேனிவ ராக மேகுண மாம்பெ ருந்துறைக்
[கொண்டலே
சீல மேது மறிந்தி லாதவென் சிந்தை வைத்தசி காமணி
ஞால மேகரி யாக நானுனை நச்சி நச்சிட வந்திடும்
கால மேயுனை யோத நீவந்து காட்டி னையகழுக் குன்றிலே.

---

469. பூணைணைத தோரன்பு என்பதற்குக் காட்டிய உரைநயம் காண்க. பிறவிக்கடலில் அழுந்தும்போது பெருந்துறையாகிய தோணி கொண்டுவந்து செலுத்த என்னைக் காத்தாய் என்பது பொருள். உகைத் தல் - செலுத்தல்.

(இ - ள்). ஆண்டவனே ! தேவரீர் பன்றிப் பறழ்க்காக கருணையாகத் திருமுலைப்பாலளிக்க வராகத் திருமேனி கொண்ட அழகரே ! மலபோதக் குணத்தை திருவருட் குணமாகச் செய்யும் ஞானத் திருப்பெருந்துறைப் பேரின்ப மேகமே ! சைவாசார அன்பொழுக்கந் தெரியாத என் சிந்தையில் எழுந்தருளிய போத ஞானமணியே ! இப்பிரபஞ்சத்தார் திருவேடம் சுமக்கும் சுமையாளி என்பதாக அவர்கள் சொல்வது நற்சாட்சியான பற்றுக்கோடாக வெண்ணி, திருநாமம் ஓயாது துதித்து, அழைப்பதான காலத்தில், எழுந்தருளி அருளியது கழுக்குன்றிலே !— என வருளியதைக் காண்க. (5)

471. இனி, ரிஷிபத்திக்குக் கற்பளித்த அன்பே கற்பெனக் காட்டிய (தி. - ன.) :—

பேத மில்லதொர் கற்ப ளித்தபெ ருந்து றைப்பெரு
[வெள்ளமே
ஏத மேபல பேச நீயெனை ஏதி லார்முனை மென்செய்தாய்
சாதல் சாதல்பொல் லாமை யற்ற தனிச்ச ரண்சர ணெனைக்
காத லாலுனை யோத நீவந்து காட்டி னுய்கழுக் குன்றிலே.

(இ - ள்). ஆண்டவனே ! பேதமில்லாத வண்ணம் ரிஷிபத்திக்களைப் பரமசிவனிடத்து வைத்த அன்பே கற்பென்னும்படி, அவர்களாற் கொண்ட புருடன் ஏவல் கற்பைப் பொய்யெனக் காட்டி, ஆண்ட திருப்பெருந்துறை ஞானவாரியே ! அடியேன் திருவடி மறந்த குற்றமே பொருளாகக் கொண்டு, மல போதர்கள் முன் இவ்வகை அடிமை செய்யாதே போனால், அவர்கள் பழியார்களோ ? அந்த நிந்தை ஐயையோ ! தேவரீரை யடையுமே ! அவை நான் கேட்பனே ? அவர்கள் பழிப்புக்கஞ்சி நான் சுவமாவதே திருவுளமோ ? நின்மல வடிவாகிய ஒப்பற்ற ஏகபரஞ்சோதி ! அடைக்கலம் ! எனக்

---

470. கோலம் - அழகு. பன்றிக்குட்டிக்குப் பாலளித்த வரலாற்றைத் திருவிளையாடற் புராணத்திற் காண்க. கொண்டல், உப்புநீரை நல்லநீராகச் செய்வது அதன்குணம் ; அதைப்போல் இறைவன் மலபோத குணத்தை அருட்குணமாக மாற்றுவன் என்பது கருத்து. சீலம் - சைவாசாரம். சிகாமணி - சிரோரத்னம். ஞாலமே கரியாக - உலகமே சாட்சியாக என்பது நேர்பொருள் ; இங்குள்ள உரைநயம் கவனிக்கத்தக்கது. நச்சி - விரும்பி. உனை ஓத - உன்ஸ்வரூபத்தை உபதேசிக்க.

'காதலாகிக் கசிந்து கண்ணீர் பெருக ஓதுவதாக'த் திருவடியைக் காட்டினைய் கழுக்குன்றத்திலே! என அருளியதைக் காண்க. (6)

472. இனி, கூடலில் வலையலிட்ட திருவிளையாடலைக் கூறும் (தி. - ன.) :—

இயக்கி மாரறு பத்து நால்வரை
எண்கு ணஞ்செய்த ஈசனே
மயக்க மாயதொர் மும்ம லப்பழ
வல்வி னைக்குள மூழ்ந்தவும்
துயக்க றுத்தெனை யாண்டு கொண்டுநின்
தூம லர்க்கழல் தந்தெனைக்
கயக்க வைத்தடி யார்மு னேவந்து
காட்டி னுய்கழுக் குன்றிலே.

(இ - ள்). ஆண்டவனே! இயக்கிமாரான செட்டிப் பெண்களை திருநோக்கம் செய்து சிவசாட்சுணிய பாகம் செய்வோய்; அடியேன் மூலமல மயக்க மும்மலக்கனியே இன்பமாயழுந்திய எனது பிறவித் துன்பம் அகல அருளாகச் செய்து, திருவடி காட்டி, தற்போதமறச் சீரடியார் சந்நிதியில் அருளே பொருளெனச் சரலோகம் வேண்டித் தவஞ்செய்ய அனுக்கிரக காலம், சாயுச்சியம் வேண்டிய இருடிகள் மோட்சபதங் கண்டமையால், கழுகாக இக்காலவரை பூசிப்பதான குன்றத்திலே காட்சி செய்வித்தாய்—என அருளியதைக் காண்க. (7)

திருச்சிற்றம்பலம்

---

471. இவ்வுரையின்பத்தைக் கூர்ந்து நோக்கிக் கொள்க.

பேதமில்லதோர் கற்பனித்த - பிறதெய்வங்களை ஏற்காத தனிப்பு நிலையை எனக்குக் காட்டிய. என்றும் கூறலாம். எதிலார் பல ஏதம் பேச என்னைமுன் என் செய்தாய்? என்க. ஏதம் - குற்றம். சாதல் சாதல் - இறப்பின் அழிவு; பொல்லாமை - தீமை. சரண் - திருவடி. சரண் ஆம் - அடைக்கலம் ஆம்.

பிரிவால் வருந்திய தலைவி கூற்றாக அமைந்தது இச்செய்யுள்.

472. 64 இயக்கிமார்க்கு எண்குணம் செய்த வரலாறு திருவுத்தரகோசமங்கைப் புராணத்தில் காணப்படும் என்பர். இங்கு ஆலவாய்க் கடவுள் பெண்களுக்கு வளையலிட்ட திருவிளையாடலைச் சுட்டுகிறது உரை. துயக்கு அறுத்து - பிறவித்துன்பமகல அருளி, ஆண்டுகொண்டு கயக்க வைத்து என்பதற்குச் சாலோக பதவிக்கு என்னை முயற்சிக்கச்செய்து நான் வருந்திய காலம் என்று பொருள் கூறுகின்றார். அடியார் என்றதற்குச் சாயுச்சியம் வேண்டிய ரிஷிகள் என்று உரை கூறுகின்றார்.

உ

திருச்சிற்றம்பலம்

31. கண்ட பத்து

இனி, கண்ட பத்தாவன :

அகத்தியச் சூத்திரம்.

சுட்டறு சுட்டாற் கண்ட பத்து
மட்டறு நிருத்த தரிசன மாகும்.

பொழிப்புரை—

முற்பதிக வநுபூதிப்படி, திருவருளே தானாந்தன்மை பெற்றும், சதா நடன தரிசன அடிமைத் திறத்தின் அளவு அருள் அளவிலை யென வற்புறுத்தி, தரிசனமே வீடென அருளியதை அன்பாற் காண்க.

திருப்பா [1]கலி விருத்தமாக திருத்தில்லையி லோதியது.

473. இனி, சித்தந் தெளிந்து திருவடி பெற்ற (தி. - ன.) :—

இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோ யருநரகில் வீழ்வேற்குச்
[2]சிந்தனையைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே.

(இ - ள்). சுவாமி ! அடியேன் அநித்திய விஷயரூப இந்திரிய வேடரால் அலைவுற்று இறப்பதே காரணமாக அநேக புவன வாசி யாகித் திரிந்து, முடிவில் நரகமே இடமாக அழுந்திய அடியேனை, குருமணியாகி எழுந்தருளிச் சித்த விகற்பத்தைத் தெளிய உபதேசம செய்து, சிவமாகச் செய்து, திருவடிக்கடிமையாக வியாப்பியப்படுத்தி, அளவைக் கெட்டாத சிவானந்த குஞ்சித பாதத்தைக் காண்பதே பர

திருவாசகத் திருவுள்ளக்கிடை :—நிருத்த தரிசனம் :

திருவாசகச் சிறப்பு :—

இந்தி ரியவய மயங்காதே யெடுத்துத் தானாக்கு மெழிலா னந்தம்
கந்த மலிதில் லையினுட் கண்டே னென் றுவந் துரைத்தல் கண்ட
[பத்தாம்
(பழைய புராணம்)

1. கொச்சகக் கலிப்பா என்பர் பிறர்.

473. பி - ம். 2. சிந்தைதனைத்.

முத்தி என நிட்டை கூட்டி, என்னறிவான திருவருளமுது போன்ற தில்லை நேர் போய் 'மூலக்குறி யுளது அதற்குத் தென்னர், மாடுறு மறைகள் காணு மன்னுமம்பரத்திலே பரமகுரு சேர்வை' என்று கட்டளை யிட்டபடி செய்து அவ்வாறு ஆனேன்—என அருளியதைக் காண்க. (1)

474. இனி, மண்ணிலே வந்த பிறவியே இன்பமென்ற (தி. - ன.) :—

விணப்பிறவி யென்கின்ற வேதனையி லகப்பட்டுத்
தனைச்சிறிது நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிது மாட்கொண்டென் பிறப்பறுத்த
[இணைபிலியை
அனைத்துலகுந் தொழுந்தில்லை அம்பலத்தே கண்டேனே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் குஞ்சிதபாத தரிசனம் செய்யாது, பிறவித் துன்பமுற்று வாடிய பாவியை, பெருங்கருணை வழக்கால் இரங்கி, ஊன நடன மொருபா லொருபால் ஞான நடனங் காட்டித் தளராத பேரன்பு வளர, இனிப் பிறவாவண்ணஞ் செய்த ஒப்பிலியானவா! எல்லா உலகும் தொழுவதான படரொளி யம்பலத் திலே 'கண்டேன் அவர் திருப்பாதம்' என வருளியதைக் காண்க.

475. இனி, மகாகேவல நடன தரிசன (தி. - ன.) :—

உருத்தெரியாக் காலத்தே யுள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக் கருணையினு லாண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினுல் நாயடியேன் அணிகொள்தில்லை கண்டேனே.

(இ - ள்). ஆண்டவனே! தத்துவ துணைக்கருவியின்றி, கேவலாதீத வுண்மையுடைய காலத்தில், உள்ளே இருந்து சூட்சும பஞ்சகிர்த்தியம் செய்து, சகலப்படுத்தி, தூல பஞ்சகிர்த்தியஞ்

---

473. அந்தரமே திரிந்து, என்றதற்கு அதேக புவனவாசியாகத் திரிந்து. என்றும், வானத்திலே திரிந்து என்றும், வேறுபட்டே திரிந்து என்றும் பிறர் பொருள் கொள்வர். தில்லையில் காணச் செய்ததும் அவனே யாதலால் இவ்வாறு பொருள் உரைக்கப்பெற்றது.

474. தனை - இறைவனுகிய தன்னை.

செய்து, சுத்த பஞ்சகிர்த்திய நடமே பரமுத்தி தரிசனமென அருளுவதான திருத்துருத்தியில் எழுந்தருளிய சிவனே! அன்பால் அறிவில் இனிக்கும் குஞ்சித பாதத்தை என் ஆசையால் அடியேன் மன்றுள் நின்று, இமையோர் துதி செய்யும் பூங்கமலம் அறிவினுள்ளே கண்களே அதுவாகக் கண்டேனே!—என வருளியதைக் காண்க. (3)

476. இனி, பசுபாச மகல்வதான (தி.-ன.) :—

கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாள னுய்வந்து வனப்பெய்தி யிருக்கும்வண்ணம்
பல்லோருங் காணவென்றன் பசுபாச மறுத்தானை
எல்லோரு மிறைஞ்சுதில்லை அம்பலத்தே கண்டேனே.

(இ-ள்). ஆண்டவனே! அடியேன் இல்லாதவற்றை நிலை யென்றறியுங் கல்லாத புல்லறிவுடையதே மறவாமையாகக் கொண்ட நாயேனை, எல்லாம்வல்ல சித்து வித்தையையுடைய தேவரீரே எழுந்தருளி, திருவருளழகாக அவ்வண்ணமாக விருப்பதாக, உலகெல்லாங் காணுவதாக, எனது பசு பாச மறுத்த, எல்லோரான பெத்தர் முத்தர் இருவரும் பரமென வணங்கும் பேரொளித் தில்லையம்பலத்திலே ஞானத்தாற் கண் களி கூர்வதாகக் கண்டேன் என வருளியதைக் காண்க. (4)

477. இனி, யானெனதென்ற பாவமற்றமையைக் கூறும் (தி.-ன.) :—

சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை யல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் [1]பிறருருவா யானெனதென் னுரைமாய்த்துக்
கோதிலமு தானனைக் குலாவுதில்லை கண்டேனே.

---

475. உரு - ஆன்மரூபம் எனலும் ஆம். மன்னி - பொருந்திய, கரு + இருத்தி என்றும் பிரிக்கலாம். ஆட்கொண்ட விதம் மிக அழகாகச் சொல்லப்பெற்றது; அதற்கேற்ற தத்துவ உரையும் அமைந்துள்ளமை காண்க. அருத்தி - அன்பு.

476. வல்லாளன் - வல்லசித்து வித்தையுடையவனும்; வலியனும் என்றும் கொள்ளலாம். வனப்பு - திருவருளழகு. எல்லோரும் - பெத்தர் முத்தராகிய எல்லோரும்.

477. பி-ம்: 1. பிறருருவம்.

(இ - ள்). ஆண்டவனே! அடியேன் கோத்திரமும் குலமும் பிறவியும் என்ற அபிமானச் சுழலில் சிக்கித் தடுமாறிய அறிவில் லாத நாயானவனே அடிமையாகச் செய்து, யானெனதென்ற வாசகத் தைக் கெடுத்து, வாச்சியவின்பமாய் என்னுயிரில் விளைந்தவமிர்த கொழுபனே, சீரடியார் பாராட்டல் செய்வதான ஒளிவளரழகிய மணி மன்றுள் கண்டேன்,—என வருளியதைக் காண்க. (5)

478. இனி, தில்லைவாழந்தணர்களும் வானத்துள்ளாரும் பணிவதைக் கூறும் (தி. - ன.) :—

பிறவிதனை யறமாற்றிப் பிணிமூப்பென் றிவையிரண்டும்
உறவினெடு மொழியச்சென் றுலகுடைய வொருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர் திருச்சிற்றம் பலமன்னி
மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே.

(இ - ள்). ஆண்டவனே! அடியேன் உண்மைப் பிணியான மூப்புச் சாக்காட்டை இல்லாவண்ணம் செய்த, ஏகபரப் பிரம சொரூப சிவனே, அருட்சோலை நெருங்கிச் சூழ்வதான தில்லை நகர்புக்குச் சிற்றம்பலத்தைப் பூசுரமுனிவோர்களும், சந்நிதியில் வரங்கிடப்ப தான, மாயன் முதலிய சுரர்களும், பணி செய்வதைக் கண்ணில் ஆனந்தம் பெறக் கண்டேன்—என வருளியதைக் காண்க. (6)

479. இனி, சிந்தை திருவடி யகலாமையைக் கூறும் (தி. - ன.):

பத்திமையும் பரிசுமிலாப் பசுபாச மறுத்தருளிப்
பித்தனிவ னெனவென்னை யாக்குவித்துப் பேராமே
சித்தமெனுந் திண்கயிற்றூல் திருப்பாதங் கட்டுவித்த
வித்தகனூர் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் அடியேன் பேரில் கருணை செய்து திருவிளையாடற் செய்ததை வினவில், தேவரீர் திருவடிக் கன்பும் குணமுமில்லாப் பசு பாச உண்மையனை, அவை இரண்டு பற்றும் அகலவருளி, ஞானமே பித்தாக என் அறிவைச் செய்து,

---

477. சுழி - சுழல். ஆதம்இலி - ஆதரவு இல்லாதவன். 'பேதை குணம்', 'பிறர் உருவம்' 'யான் எனது' என்னும் உரைகளை மாய்த்து என்க. பேதைகுணப் பிறருருவம் என்பதற்கு உரை கொடுக்கப்படவில்லை. குலாவு - விளங்குகின்ற.

478. உறவு - பிணிமூப்பின் உறவான நோய் முதலியவற்றை.

திருவடியை விட்டுப் பிரியாவண்ணம் என் சிந்தையை அன்பால் ஆர்த்து வைத்த ஞான போதகாரண சுவாமியை, என்னறிவே சொரூப விளக்கமான திருத்தில்லையிலே, ஞானந்தானுகக் கண்டேன் —என அருளியதைக் காண்க. (7)

480. இனி, உயிரில் விளைவதான திருவடி ஞானம் கூறிய (தி. - ன.) :—

அள்விலாப் பாவகத்தா லமுக்குண்டிங் கறிவின்றி
விளைவொன்று மறியாதே வெறுவியனுய்க் கிடப்பேனுக்
களவிலா ஆனந்த மளித்தென்னை யாண்டானைக்
களவிலா வானவருந் தொழுந்தில்லை கண்டேனே.

(இ - ள்). ஆண்டவனே! அடியேன் அளவைக் ககப்படாத கொடிதான திருவடி மறந்த தீவினையால் அழுந்தி, அறிவிலாதபடி இன்பவிளைவைக் காணுதே, பாவகமுடையவனுகிய அடியேற்குப் பேரானந்த வின்பமருளி அடிமையாகச் செய்த உள்ளமுடைய தேவர் கள் பணி செய்யும் தில்லைத் திருவருளை அன்பாகக் கண்டேன்— என வருளியதைக் காண்க. (8)

481. இனி, உள்ளத்தொளி வளர்வதைக் கூறும் (தி. - ன.) :

பாங்கினெடு பரிசொன்று மறியாத நாயேனை
ஓங்கியுளத் தொளிவளர உலப்பிலா அன்பருளி
வாங்கிவினை மலமறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை அம்பலத்தே கண்டேனே.

(இ - ள்). அடியேன் திருவடிக் குரிமையும், அவையால் உள தாகிய குணமும் யாதொன்றும் அறியாத நாயனை, மேன்மேலும் என்னுள்ளத்திலே சிவானந்தப் பேரொளி வளர, வற்றுது முற்றுத அன்பை அருளி, என் மல போதத்தை அருளால் வாங்கித் தொடக்

---

479. பத்திமை - திருவடிக்கன்பு ; பக்தி. பரிசு - குணம். பேராமே - பிரியாவண்ணம். சித்தமாகிய கயிறு. வித்தகனுர் - ஞானபோதகர்.

480. பாவகம் - எண்ணம். வெறிவியன் - வீணனுய். களவிலா - வஞ்சகமற்ற.

கறச் செய்து, சிவஞானமளித்த ஆரண உருவாந் தில்லையம்பல வாணனைக் கண்களால் பருகி யுண்ணக் கண்டேன்—என வருளி யதைக் காண்க. (9)

482. இனி, மாணிக்கத்துள்ளே மரகதச் சோதியானமையைக் கூறும் (தி. - ன) :—

பூதங்கள் ஐந்தாகிப் புலனுகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவுருவை வினவில், பெரும் பூதங்களான ஐவகைப் பொருள்களுக்கும் அவைக்குக் காரணமான புலனுகியவைக்கும் பிரேரகனுகிப் பிரபஞ்ச பேதமெல்லாம் தானுய்த் தோன்றிப் பின்னுமுடனுமாய் அபேத வத்துவிதமாய் அமைந்த பெருமையனை, யானெனதென்ற பொய்யை நீக்கி அருளுருவான பேரொளியை, மரகதச்சோதியை, மறைகள் அனைத்தும் தொழுது வணங்கும் 'அலகில் சோதியன் அம்பலத்தாடு நாதனை', திருத் தில்லையே யென திடமாகக் கண்டு கொண்டேனென வருளியதைக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்

---

481. பாங்கினெடு பரிசு - முறையொடு அமைந்த குணம். பரங்கும் பரிசும் அறியாதவன் என்று கூறுவது ஒரு வழக்கு. உலப்பு - கெடுதல். ஒளிவளர அன்பருளி. வினைவாங்கி - இருவினைகளையும் நீக்கி.

482. கேதங்கள் - துன்பங்கள்; இங்கு, பொய் என்றார்.

திருச்சிற்றம்பலம்

32. பிரார்த்தனைப் பத்து

இனி, பிரார்த்தனைப் பத்தாவன—

அகத்தியச் சூத்திரம்—

பிரார்த்தனைப் பத்துச்சதா
முத்திப் பேறே.

மொழிப்புரை—

முற்பதிக அடிமை யன்பு பெற்று, திருவருட் காட்சி கண்டும் எதிர்தோன்றுது சிவானுபவமே சுவானுபூதிகமாக நிட்டை பெறுங் காலம், திருத்தொண்டை அளவளாவி அடியார் உறவே நீங்காப் பெருமை நெறியிது வென அருளிய பேரானந்தமென அநுபவம் காண்க.

483. இனி, சிரடியார் திருச்சபை சந்நிதியில் மவுனானந்த அருட்பணி பெற்றமையைக் கூறும் (தி - ன.) :—

கலந்து நின்னடி யாரோ டன்று வாளா களித்திருந்தேன்
புலர்ந்து போன காலங்கள் புகுந்து நின்ற திடர்பின்னுள்
உலர்ந்து போனேன் உடையானே உலவா வின்பச் சுடர்
[காண்பான்
அலந்து போனேன் அருள்செய்யாய் ஆர்வங்
[கூர அடியேற்கே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் சிரடியார் நடுவுளுகியே, அன்படிமையாகப் பேச்சிறந்த இன்பமுற விருந்தேன்; அவை திரு வருள் எனத் தெரியாது வீணுட் கழிவதாகத் துன்ப வேரான இடரி

திருவாசக உள்ளக்கிடை : சதாமுந்தி. எ - து. ஆன்மாக்களுக்கு முத்தி நிச்சயம் பண்ணுதல்.

திருவாசகச் சிறப்பு :—

அந்தமிலா வானந்த சத்தகலாமலனே யழுத்தியாள் வாயென்று
சிந்தை கலந்துரைத் ததுவே பிரார்த்தனைப் பத்தாய்ப் புகலும்
[செய்கையாமே.

இற்று வாடி யெய்த்தேன் ; என்னையுடைப் பொருளாக அடிமை கொண்டோய் ! ஓர் காலமும் வற்றுத ஞானப் பிரகாசத் திருவருளைக் காண வாடினேன்! திருவருளிரங்கிக் கிருபை செய்ய வேண்டும், திரு வடியில் மிகுந்த அன்புடையனாக அடியேனை ;—என அருளியதைக் காண்க. (1)

484. இனி, சிவஞான அன்பு வேண்டுவதாக (தி. - ன.) :—

அடியார் சிலருன் அருள்பெற்ற ராரார்வங் கூர யானவமே
முடையார் பிணத்தின் முடிவின்றி முனிவா லடியேன்
[1முகக்கின் றேன்
கடியே னுடைய கடுவினையைக் களைந்துன் கருணைக்
[கடல்பொங்க
உடையாய் அடியே [2]னுள்ளத்தை ஓவா துருக அருளாயே.

(இ - ள்). ஆண்டவனே ! தேவரீர் சிரடியரான சில நாயன்மார் கள் தலைப்படுதலான அன்பே இன்பாகத் திருஞானம் பெற்றார்களே ; அடியேன் வீணே புலாலுடம்பான சவமே கதியாய் முடிவின்றி, திரு ஞான வெறுப்பால் அவமேயழுந்திய கொடிய தீவினையை, திருநோக் கத்தால் நீக்கி, அடியேனுளத்தில் அன்புப் பிரவாக வின்பக் கருணை வளர உடையவனே, அடியேனுள்ளத்தை ஒழியாதன்பா லுருக அநுக்கிரகம் செய்ய வேண்டுமென அருளியதைக் காண்க. (2)

---

483. பின்னுள் இடர்புகுந்து காலங்கள் புலர்ந்து போன என இயைக்க. புலர்ந்து - கழிந்து. முன்பு அடியாரோடு களித்திருந்தேன் ; பின்பு உலர்ந்துபோனேன் என்க. உலவா - கெடா. அலந்துபோதல் - பாடுதல். ஆர்வங் கூர அருள் செய்வாய் என்பது பிரார்த்தனை. ஆர்வம் - அன்பு ; பக்தி. கூர - மிக.

பி - ம். 1. மூக்கின்றேன். 2. உள்ளத்தே.

484. அடியார் அருள்பெற்றார் ; யான் முகக்கின்றேன் என்க. அவமே - வீணாக. முடை - புலால் நாற்றம். பிணத்தின் - சவமாகும் முடிவு. முனிவால் - வெறுப்பால். முகக்கின்றேன் - அத்தகைய வாழ்வையே மொள்கின்றேன் ; அழுந்துகின்றேன் என்கின்றார். கடியேன் - கடு வினையேன்.

485. இனி, சிரடியார் அருளுடையனல்லன் என அச்சமுறுத் அன்பருள வேண்டுமென்ற (தி. - ன.) :—

அருளா ரமுதப் பெருங்கடல்வாய்
அடியா ரெல்லாம் புக்கழுந்த
இருளா ராக்கை இதுபொறுத்தே
எய்த்தேன் கண்டா யெம்மானே
மருளார் மனத்தோ ருன்மத்தன்
வருமா லென்றிங் கெனைக்கண்டார்
வெருளா வண்ணம் மெய்யன்பை
உடையாய் பெறநான் வேண்டுமே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவருள் ஞானவின்பச் சமுத்திரத்திலே உண்மை யடியார்கள் அபேத அத்துவிதமாக அழுந்தாமல் அழுந்தினர்கள். அடியேனே இருள்மலத் தொடர்ச்சி யான இவ்வுடலைச் சுமந்திளைத்தது திருவுளமறியாவோ, எனதப்பனே! இனது சிரடியார்கள் மயக்கறிவான மோக உன்மத்தனென, எனைக் கண்டு அச்சமுறு வண்ணம், சத்தியபோத அன்பை அடியேன் பெற வேண்டினேன்; அருள வேண்டும், இரங்கி; என அருளியதைக் காண்க. (3)

486. இனி, சிரடியாரைத் திருவுள மிரங்கி ரட்சிப்பதான திருவருளைக் கூறும் (தி. - ன.) :—

வேண்டும் வேண்டும் மெய்யடியா
ருள்ளே விரும்பி எனையருளால்
ஆண்டா யடியே னிடர்களைந்த
அமுதே யருமா மணிமுத்தே
தூண்டா விளக்கின் சுடரனையாய்
தொண்ட னேற்கு முண்டாங்கொல்
வேண்டா தொன்றும் வேண்டாது
மிக்க அன்பே [1]வேண்டுதலே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் சிரடியார் திருவுளத்திலே வேண்டுங்கால் வேண்டுவதே கருத்தறிந்தீவதான இச்சையே (கொண்டு) அடியேனை இரட்சித்து, இடர்களையாய்; ஆனந்த வின்

485. இருள் - அஞ்ஞானமலம். ஆக்கை - உடல். மருள் - மயக்கம். வெருள்தல் - அச்சமுறுதல்.

பி - ம். 1. மேவுதலே.

பமே! சீவரத்தின வொளியே! முத்தனே! முயற்சியின்றித் தானே பிரகாசிக்கும் இன்பச்சுடரே! அடியேன் பிரார்த்தித்து வேண்டுவ தென்னெனில், வேறொன்றுமில்லை; திருவடியில் அன்பே வேண்டி நினதடியின் கீழிருப்ப வேண்டினேன்; அநுக்கிரகம் செய்ய வேண் டும்; என அருளியதைக் காண்க. (4)

487. இனி, யானெனதென்ற சுட்டறிவு நீக்கிச் சிவஞான போதவின்பக் கடல் பெறுவதாக அருள வேண்டுமென்ற (தி. - ன.):

மேவு முன்ற னடியாருள் விரும்பி யானு மெய்ம்மையே
காவி சேருங் கயற்கண்ணுள் பங்கா உன்றன் கருணையினுற்
பாவி யேற்கு முண்டாமே பரமா னந்தப் பழங்கடல்சேர்ந்
தாவி யாக்கை யானெனதென் றியாது மின்றி யறுதலே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் சங்கிதியிலே சத்தியமாகவே சொல்கின்றனன்; சீரடியார் திருவுளக் கிருபையே! நீலம் போன்ற அங்கயற் கண்ணம்மை பங்கனே! தேவரீரருளால் பாவியான அடி யேற்கும் அச்சீரடியாரன்பு முளவாமோ? அடியேன் அநாதியே உள தாகிய சிவானந்த சமுத்திரத்தில் அதுவாய்ப் போவதுமன்றி, என் போதங் கெடுவனே? அருள வேண்டும் என இரக்கின்றேன்; என அருளியதைக் காண்க. (5)

488. இனி, சத்திய போதத் திருவருளன்பே ஆன்ம லாப மென வேண்டுமென்ற (தி. - ன.):—

அறவே பெற்றூர் நின்னன்ப ரந்த மின்றி யகநெகவும்
புறமே கிடந்து புலைகாயேன் புலம்பு கின்றே னுடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு பெயரா வொழியாப்
[பிரிவில்லா
மறவா நினையா வளவிலா மாளா இன்ப மாகடலே.

---

486. மெய்யடியார் உள்ளே விரும்பும் விருப்பத்தை அறிந்து ஈபவன் என்பது கருத்து. நான் வேறொன்றையும் வேண்டவில்லை; நின் அன் பையே வேண்டுவேன் என்கின்றார். அல்லது தேவரீர் விரும்பாத ஒன்றை வேண்டேன் என்றும் கொள்ளலாம்.

487. மேவும் - விரும்பிய அடியார் உள் விரும்பி - அடியார் களுள் ஒருவனாக விருக்க விரும்பி. ஆவியாக்கை யான் எனது என்று அறியாது - உயிரும் உடலும் யான் எனது என்று அறியாது.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவடி ஞானம் பெற்ற சீரடியார்கள் பிறவித் துன்பமறவே அன்புருப் பெற்றார்கள். அடியேனெவெனில், ஆதியந்தமின்றி, எனதுள்ள நெகிழ்ச்சி கொண்டும், வேறெனக் கருதி உனை உண்மையெனப் புசிக்கு நாயான நான், ஆன்ம லாபங் கருதி அதுவே பித்தாகப் புலம்பினேன். பேறு காணேன். உடையவனே! ஆன்ம லாபம் பெறுவதே சித்தாம்; அவை யாவெனின் வேறின்மையான சத்திய ஞானம்; ஈசன்பாலன்பே; அவ்வின்பின் சொரூபம் வினவில், அடியேனை விட்டு வேருனதல்ல; ஒழிந்ததுமல்ல; பிரிந்ததுமல்ல; மறந்ததுமல்ல; மறதியில்லாத போதே நினைந்ததுமல்லவே; அளவைக்ககப்பட்டதுமல்ல; திருவடி ஞானமில்லார் புசிப்புக்கப்பட்டதுமல்ல; பேரானந்த சுகவாரியே! அன்புருவமே பரமுத்தி என அருளியதைக் காண்க. (6)

489. இனி, திருவருட்டுணிவாக அடியேனை இரட்சிக்க வேண்டுமென்ற (தி. - ன.) :—

கடலே யனைய ஆனந்தங் கண்டா ரெல்லாங் கவர்ந்துண்ண
இடரே பெருக்கி யேசற்றிங் கிருத்த லழகோ அடிநாயேன்
உடையாய் நீயே அருளுதியென் றுணர்த்தா தொழிந்தே
[கழிந்தொழிந்தேன்
சுடரா ரருளா லிருள்நீங்கச் சோதீ இனித்தான் துணியாயே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவடி ஞானானந்தத்துக்குக் கடலே ஒப்பு; [ஏனெனில், அளவில்லை என்பதற்கேகதேச வுருவகமென அருளியது] சுகவாரி இருந்தபடி இருக்க, சுத்தாவத்தையான ஆன்மலாப வடிமை முத்தி, நானெழிய வெல்லோரும் தரிசனமே பொருளென முத்தி பெற்றார்கள். அடியேன் பிரபஞ்ச விச்சையே வடிவாய்த் தூர்த்தனாகி, அவையாலிளைத்து நிற்ப, திருவருட் கருணை யழகோ? நாயானவன் அநாதியே என்னையுடைய பொருளாக ஆண்டவனே! தேவரீர் கருணையால் இரட்சிக்க வேண்டுமென அடிமைத் திறத்தால் திருவுளப்பணி செய்யாது வீணே கழிந்தொழிந்தேன்; மீண்டுறுவேனே பரமசிவனே! தேவரீர் திருவருட் பிரகாசத்தால் அடியேன் மலபோத நீங்க, சிவனே! இனியாகிலும்

---

488. இச்செய்யுள் மிக நுட்பமான கருத்தை உட்கொண்டுள்ளது. நின் அன்பர் அறவே பெற்றார்; நானே அந்தமின்றிப் புலம்புகின்றேன். என்க. பெயரா.....மாளா என்பன இன்பத்துக்கு அடைமொழிகள்.

பாவியெனப் பாராது, துணிவாகக் கருணை செய்ய வேண்டுமென வருளியதைக் காண்க. (7)

490. இனி, திருத்தொண்டர் சந்நிதியில் அன்பால் நிற் பதைக் கூறும் (தி. - ன.) :—

துணியா வுருகா அருள்பெருகத்
தோன்றுந் தொண்ட ரிடைப்புகுந்து
திணியார் மூங்கிற் சிந்தையேன்
சிவனே நின்று தேய்கின்றேன்
அணியா ரடியா ருனக்குள்ள
அன்புந் தாரா யருளளியத்
தணியா தொல்லை வந்தருளித்
தளிர்ப்பொற் பாதந் தாராயே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவடி யன்பே பொரு ளாக வீடு வேண்டாத விறலினராய் உருகுதலேச் சென்று, அருள் பெருகுந் தொன்று தொட்டு வரும் திருத்தொண்டர் திருச்சபை நடுவுள், கல் மூங்கிற் போல நின்று அடிமைப் பணி தெரியாது அறி யாமையே பொருளாகத் தேய்கின்றேன்; நாதனே! உண்மை யடியார் திருவடி யடிமைப்பணி செய்வது முழுதும் அவ்வன்பும் அடியனை வனுக்கருளி, விரைவிலெழுந்தருளி, பிரகாச செம்பொற்பாதம் அநுக்கிரகம் செய்ய வேண்டும் — என அருளியதைக் காண்க. (8)

491. இனி, சீரடியார் சந்நிதியில் புதியர் போல நிற்ப தருளோ வென்ற (தி. - ன.) :—

தாரா அருளொன் றின்றியே தந்தா யென்றுன் தமரெல்லாம்
ஆரா நின்ரு ரடியேனு மயலார் போல அயர்வேனே
சீரா ரருளாற் சிந்தனையைத் திருத்தி யாண்ட சிவலோகா
பேரா னந்தம் பேராமை வைக்க வேண்டும் பெருமானே.

---

489. ஆனந்தத்தைக் கவர்ந்து உண்ண என்க. எசற்றிருத்தல் - துயருற்றிருத்தல். நீயே அருளுதி என்று உணர்த்தாமை பிழை ஆயிற்று. அருட்சுடரால் எனமாற்றுக.

490. துணிதல் - வீடும் வேண்டாத விறலியராம் துணிவு. அடி யார் உனக்குள்ள அன்பும் தாராய் - அடியார் உன்பால் வைத்துள்ள அன் பினை நானும் கொள்ளும்படி செய்வாயாக. அளியை - கனிய. ஒல்லை - விரைவில்.

(இ - ள்). ஆண்டவனே ! தேவரீர் திருவடி யணியாளர்க்கன்றி அநுக்கிரகம் செய்யாத திருவருளே, அன்புடையார்பாற் சென்றணுகிப் பேரின்பருளத் திருவடி ஞானவுறவோர் அனைவரும் சிவஞான அன்பு பெற்று, சிவாநுபோகராய் நிட்டை கூட, அடியேன் வேறுபட்டு, அன்புடைய புதியர் போல மீளாத் துன்புறுவேனே ? தேவரீர் திருவருளாற் சிந்திக்கத்தக்க அந்தக்கரண கிரியா கருவிகளைச் சிவஞான அன்புருவாக்கி அடியேனை அடிமையாகச் செய்து, சிவாநுபூதிகமாக அதுவாய்ப் போங்காலம் வேறுபடாப் பேரின்பம் அருள வேண்டும் சிவலோக நாயகா ! என அருளியதைக் காண்க. (9)

492. இனி, திருவடியில் அபேதமாய் அழுந்துவதான ஞான நிலை யின்பத்தைக் கூறும் (தி. - ன.) :—

மானேர் பங்கா வந்திப்பார்
மதுரக் கனியே மனநெகா
நானேர் தோளாச் சுரையொத்தால்
நம்பி [1]இனித்தான் வாழ்ந்தாயே
ஊனே புகுந்த உனையுணர்ந்தே
யுருகிப் பெருகும் உள்ளத்தைக்
கோனே யருளுங் காலந்தான்
கொடியேற் கென்றே கூடுவதே.

(இ - ள்). அம்மை வாமபாக ஆண்டவனே ! இடைவிடாது வணங்கும் அன்புடையார் உள்ளக்கனியினும் நல்ல கட்டிக்கரும்பே ! அடியேன் மன முருகாத, அன்பிலாத, துளையிடாத சுரைபோல மிதப்புடையவனுனல், சிவனே ! வாழ்ந்து போதீரே ! என் புலா லுடம்பே புகுந்து நின்ற கற்பகமே ! நினது சீர்பாதத்தை திருவரு ளால் அறிந்துருகிப் பேரானந்தமாவதாக அருளுவது எந்தக் காலமோ ? தீவினையினேற்குக் கூடுவதருள்வா யென அருளியதைக் காண்க. (10)

---

491. தாரா அருள் ஒன்று இன்றியே தந்தாய் - கெடாத அருள் ஒன்றும் இல்லை யென்னும்படி முழுமையும் அருளினாய். ஆராகின்றார் - நிரம்பி நின்றார். பேராமை - நீங்காவண்ணம்.

பி - ம். 1. இத்தால்.

492. வந்திப்பார் - வணங்குகின்றவர்களுக்கு. நெகா - நெகிழ்ச்சி பெறுத. தோளா - துளையிடப்படாத.

493. இனி, திருக்கூட்டச் சபையிலே மரம்போல நிற்பதான வன்பனே அன்பனாக வருள வேண்டுமென்ற (தி - ன.) :—

கூடிக்கூடி யுன்னடியார் குனிப்பார் சிரிப்பார் களிப்பாராய்
வாடிவாடி வழியற்றேன் வற்றல் மரம்போல் நிற்பேனே
ஊடி யூடி யுடையாயொடு கலந்துள் ளுருகிப் பெருகிநெக்
காடி யாடி யானந்த மதுவேயாக வருள்கலந்தே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் சிரடியார் ஆனந்தக் களிப்பால் கூடிக் கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடி நகைத்துச் சிவானுபவச் செருக்கானர்கள். அடியேன் மல விகாரத்தால் துன்புற்று, அன்பு வழி தெரியாது, கெட்டு, தழையில்லாத மரம்போலே நின்றேனே! தேவரீர் கருணையால் அதிக விச்சை திருவடியிலுடையனாகி, அவையால் பிரிவால் ஊடி, உடையோயுனைக் கலந்தாடிப் பேரானந்த சுக மெய்துவாய்; அன்பாக அருள வேண்டும் நாதனே!—என அருளியதைக் காண்க. (11)

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

33. குழைத்த பத்து

இனி, குழைந்த பத்து.

அகத்தியச் சூத்திரம்.

நிராமய குழைத்தபத்
தான்ம நிவேதனம்.

பொழிப்புரை—

முற்பதிக அநுபூதியில் அடியாருறவே முடியாப் பேரின்பமென முற்றினராகிப் பெற்றுமென்றும் பெருமை பெறுதே, ஒன்றும் பெறுச் சகலரைப் போல் பணியுமில்லான் போல, எளிமை எய்தி முன்

---

493. குனிப்பார் - கூத்தாடுவார். வற்றல்மரம் - இலை காய்ந்து போனமரம். நெக்கு - நெகிழ்ந்து.

போல், பல வழக்கின்பாய்க் குழைந்திருப்பதே பரமுத்திப் பேரின்ப சித்தாந்த வநுபூதி யென அருளியது.

ஆசிரிய விருத்தமாகத் திருப்பெருந்துறையில் ஓதியதெனக் காண்க.

494. இனி, அழைப்பொழியானுக் கெதிர்ப்படாத திருவருளென்னே வென்ற (தி. - ன.) :—

குழைத்தாற் பண்டைக் கொடுவினைநோய்
காவாய் உடையாய் கொடுவினையேன்
உழைத்தா லுறுதி யுண்டோதான்
உமையாள் கணவா எனையாள்வாய்
பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ
பிறைசேர் சடையாய் முறையோவென்
றழைத்தால் அருளா தொழிவதே
அம்மா னேயுன் னடியேற்கே.

(இ - ள்). ஆண்டவனே! அடியேனை அநாதியாயுள்ள மல போதம் என்னைத் தொடர்ந்து வாடுதற் செய்தால் அடியேனை அத் துன்பம் தீர இரட்சியாயோ? பாவியான நான் திருவருளை விட்டுத் தற் சுட்டாய் எவ்வளவுகாலம் முயற்சி செய்தால் ஆன்ம லாபமுறு வேனை? உமைபாகா! என்னை அடிமையாக உடையோய்! அடியேன் அறியாமையால் செய்த பிழைகளத்தனையும் பொறுத்தருள வேண்டாவோ? ஞான சந்திரகலையைத் திருச்சடையில் தரித்தவனே! ஓலம்! ஓலம்! என்றழைத்தால் திருவருள் பராமுகமாமோ, திருவுளம்? எனதப்பனே! வேறடிமை யாவரையுங் கொள்வோய்! என அருளியதைக் காண்க. (1)

திருவாசகத் திருவுள்ளக்கிடை : ஆந்தும நிவேதனம் - எ - து. நேயத்தோடே ஒன்றினது.

திருவாசகச் சிறப்பு :

இழைத்தே னிவ்வாக்கை பொறுத்தினிக் கணமும் பொறுக்கலே [னேழை யேனைக்
குழைப்பதேன் பிழைபொறுத் தாளென விரங்கிக் கூறுதலே [குழைத்த பத்தாம்
(பழைய புராணம்)

494. குழைத்தால் - வாடச்செய்தால். காவாய் - காப்பாய். உண்டோதான் - இல்லை என்றபடி. ஒழிவதே - ஒழிவதோ?

495. இனி, நிக்கிரகமே அநுக்கிரகமாகப் பெற்ற (தி. - ன.):—

அடியே னல்ல லெல்லாமுன்
னகல வாண்டாயென் றிருந்தேன்
கொடியே ரிடையாள் கூறுவெங்
கோவே யாவா வென்றருளிச்
செடிசே ருடலைச் சிதையாத
தெத்துக் கெங்கள் சிவலோகா
உடையாய் கூவிப் பணிகொள்ளா
தொறுத்தா லொன்றும் போதுமே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவுளமிரங்கிப் பழைய தீவினை முழுதும் அநாதியே நீக்கி அடிமை செய்தாயென எண்ண முடையனுகின்றேன். மின்னற்கொடிபோன்ற அழகே இடையா யுடைய அம்மை வாம பாகனை ஆன்ம நாதனே! அடியேனுடைய சிவபோதத்தைச் சிவபோதமாகவருளி மல உடலை நீக்காதிருந்த பரா முகத் திருவுளமென்னவோ? சிவலோக நாயகனே! அநாதியே பிரி வில்லாது உடைய வடிமையை, மகாகேவலத்திலிருந்த என்னைப், பரிபாக கேவலத்துக் கழைத்து, அடிமையாக்கிய வண்ணமே, சக லத்திலிருந்த வென்னை சுதந்தர வீனமான சுத்தஞ் செய்யத் திருவுள மில்லாதே போலும் கோபப்பிரசாத மருளினல் கிருபை பெறுவனே! என அருளியதைக் காண்க. (2)

496. இனி, ஒன்றுக்கும் பற்றுத அடியேனைப் பொருளாக ஆட்செய்தமையைக் கூறும் (தி. - ன.):—

ஒன்றும் போதா நாயேனை
உய்யக் கொண்ட நின்கருணை
இன்றே யின்றிப் போய்த்தோதான்
ஏழை பங்கா எங்கோவே
குன்றே யனைய குற்றங்கள்
குணமா மென்றே நீ கொண்டால்
என்றூன் கெட்ட திரங்கிடாய்
யென்டோள் முக்க ணெம்மானே.

---

495. அல்லல் - துன்பம். முன் அகல ஆண்டாய் என்க. கூறு - பாகம். செடி - துன்பம். எத்துக்கு - ஏன். ஒறுத்தால் - தண்டித்தால்; கோபப் பிரசாதம் செய்தால் என்றார்.

(இ - ள்). ஆண்டவனே ! தேவரீர் அநாதியே திருவுளமிரங்கி ஓர் வகையினும் பற்றுக்கோடில்லாத நாயான வென்னே அறிவுளாக அருளிய கருணை, இப்போதவ்வருள் பராமுகமாகி, என்னை அபாவ வண்ணமான வகைசெய்த தறியேன் ; அம்மை பாகனை ஆன்ம நாதனே ! மலையனைய அளவிலாத குற்றம் செயினும், குணமாகக் கருணை செய்யாவிடில், அடியேன் கெட்டுப் போவேனே ! அவை திருவுளமோ ? எட்டுத்தோளும் மூன்று கண்ணுமாகவுடைய திருவுரு அடியேன் பொருட்டன்றே ? என அருளியதைக் காண்க. (3)

497. இனி, அறியாமை உடைய தன்னை அறிவுளாகச் செய்தமையைக் கூறும் (தி. - ன.) :—

மானேர் நோக்கி மணவாளா
மன்னே யுன்சீர் மறைப்பித்திவ்
வூனே புகவென் றுணர்நூக்கி
[1]உழலப் பண்ணி வைத்திட்டாய்
ஆனு லடியே னறியாமை
அறிந்து நீயே யருள்செய்து
கோனே கூவிக் கொள்ளுநாள்
என்றென் றுன்னைக் கூறுவதே.

(இ - ள்). ஆண்டவனே ! அர்த்த நாரீசுவர அநாதியே ! தேவரீர் திருவடியில் அநாதியேவைத்திருந்த கருணையை மறதியாகச் செய்து, தேகபோகமே பொருளெனப் புல்லறிவை நிச்சயங்கொண்டு, துன்ப வேதனைப் பட வைத்த கருணையை வினவில், அடியேன் யானேதும் அறியாமே, என்னுள் வந்து நல்லனவும் தீயனவும் காட்டாய் நிற்கும் சிவனே ! கோவே ! திருவடி ஞானம்பெற அருளால் அழைப்பது எக்காலம் எனச் சொல்வேன் ! என அருளியதைக் காண்க. (4)

---

496. போதா பற்றுத. போய்த்தோ - போயிற்றே ? என்தான் கெட்டது - யாது கெட்டுப் போயிற்று ?

பி - ம். 1. உழலப்பண்ணுவித்திட்டாய்.

497. மான்நேர்நோக்கி - மானையொத்த பார்வையையுடைய உமை. சீர் - பெருமை ; இங்குக் கருணையாகக் கொண்டார். நூக்கி - செலுத்தி ; நிச்சயம் கொண்டு என்றுமாம்.

498. இனி, தம் வலியாற் கருதாது தாமே தருபவர் என்ற (தி. - ன.) :—

கூறும் நாவே முதலாகக் கூறுங் கரண மெல்லாநீ
தேறும் வகைநீ திகைப்புநீ தீமை நன்மை முழுதுநீ
வேறோர் பரிசிங் கொன்றில்லை மெய்ம்மை யுன்னை
[விரித்துரைக்கில்
தேறும் வகையென் சிவலோகா திகைத்தால் தேற்ற
[வேண்டாவோ.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் கருணை வினவில், பிரேர காண்ட வாக்குக்குளதாகிய சுத்த தத்துவமும், அவையால் பிரேரகப் படும் போக்கிய காண்டமும், அவைக்கிடமாகிய போக காண்டமும், இவைகளுளவாகிய கரண காரியத்தோற்ற வொடுக்கத் தத்துவந் தொண்ணூற்றுறும் அருட் பிரேரக மாதலால் அருளே ; இக்கருவியா லுளதாகிய ஆன்ம சிற்சத்திக்குப் பரைப்பிரோகமாதலால் அவையும் அருளே ; அவை அருளெனத் தோன்றுமை முத்தமே பெத்தமாகக் காட்டியதும், திரோதானமும் அருளே ; பெத்த முத்தமாகக் காட்டுதற் கேதுவான இருள் சேரிரு வினையு மருளே ; ஆனதால் சடசித்தெங் கணும் பூரணமருளாதலால், அடியேற்குச் சுதந்தர ஞானம் காணேனே! சத்தியபோத சருவ சுதந்தர, சிவனே! வேதாகமப்படி அறிந்தால் இவை தெளியாதிடுமோ? சிவலோக நாயகா! வாரும் ; பெருத அறிவு கொடுத்து அடியேன் கேவல உண்மை மயக்கத்தைத் தெளியவருள வேண்டும் நாதனே! என அருளியதைக் காண்க. (5)

499. இனி, தற்போத விறுதியில் சிவன் எழுந்தருளிக் கருணை செய்வன் என்ற (தி. - ன.) :—

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டு மயன்மாற் கரியோய் நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்

---

498. நா முதலானவற்றைத் தத்துவங்களாகக் கூட்டி அவையாவும் அவனே என்றமையால் தமது என்பது ஒன்றுமில்லை என்று கூறுகின்றார். கரணம் - புறக்கருவிகள். திகைப்பு - மறதி. தேறும் வகையும் திகைப்பும் நீயேயாதலால் என்னிடம் உண்டாகியிருக்கும் திகைப்பைத் தேற்ற வேண்டுபவனும் நீயே என்றார்.

வேண்டி நீயா தருள்செய்தாய்
யானு மதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவு முன்றன் விருப்பன்றே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் அருளால் காட்டுவிக்கக் காணுவதான அடியேன், வேண்டத்தக்க அன்படிமை யநுபூதியும் திருவுளமறியாது வேறுளவோ? பேணுவாரிச்சைப்படி கருணை செய்வதும் அருளே! தற்போதத்தால் முயற்சிக்கும் திருமால் அயனுக் கெட்டாத நாதனே! அடியேன் உயிரில் கருணை வைத்திரட்சிப்ப தானும்! அவ்வருளே எனது ஞானமன்றி வேறில்லை! அநாதியே சிற்றறி வுண்டே என்னில் அவையும் உனதருளால் பெறுவதொழி யத் தனித்துக்காணேன் என அருளியதைக் காண்க. (6)

500. இனி, அநாதியே உடலுயிரடிமை கொண்டமையைக் கூறும் (தி. - ன.) :—

அன்றே யென்ற னுவியும்
உடலு முடைமை யெல்லாமும்
குன்றே யனைய யென்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றே நிடையூ ரெனக்குண்டோ
எண்டோள் முக்க ணெம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நாலே இதற்கு நாயகமே.

(இ - ள்). ஆண்டவனே! அடியேனை அநாதியிலே அடிமை கொள்ளத் திருவுளம் கொண்டபோதே, பொன்னைசலஞ்சேர் பொருள் போல, உடல் பொருளாவி மூன்றையுமுடைப்பொருளாக அடிமைப் பணிக்கருட் செய்யவில்லையோ? இப்போது துன்பமென்னை அடர்வது வழக்கோ? எட்டுப் புயமும் முக்கண்ணுமுடையது யார் நிமித் தமோ? நன்மை தீமை வருவது வினைவழியானாலும் திருவுள

---

499. இது மிக அருமையான செய்யுள். பொருள் எளிது. அதுவும் உன்றன் விருப்பு என்பதற்கு நான் இன்னது வேண்டுவது என்று அறிவிப்பது உன் பாரம் என்றும்; உன்தன் அநுக்ரகத்தையே வேண்டு வேன் என்றும் வேறு இருவழிகளாகவும் பொருள் காணலாம். இவ்வுரை நயத்தையும் ஓர்க.

மறியாதுளவோ? அவைக்கு நான் செய்வ தெவ்வகை? ஆன்ம நாஞ போகங்களேயும் தானகச் செய்யும் ஆன்ம நாதனே! திருவடியே பரம்; எனவருளியதைக் காண்க. (7)

501. இனி, என் வழி நின்று தன்வழி கொண்டருளிய நல மானதைக் கூறும் (தி - ன.)!—

நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே யாட்கொண்டாய்
மாயப் பிறவி [1]யுன்வசத்தே வைத்திட் டிருக்கு மதுவன்றி
ஆயக் கடவே னலனெதான் என்ன தோவிங் கதிகாரம்
காயத் திடுவாய் [2]நின்னுடைய கழற்கீழ் வைப்பாய்
[கண்ணுதலே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் கருணையால் நாயினும் கடையாய நன்றி மறப்பதான நாபாவனேன், நலங்காட்டி என்போதவழி நின்று என்னை அடிமைப்பணி கொள்ளும் சுவாமி! மாயையிலுள தாகிய பிறவி வருவது, போவது திருவுளமறியாதோ? அறிந்து மென்னைச் சுதந்திரமாக்குவது கருணையோ? பஞ்சகிர்த்திய சத்தி அதிட்டானம் அடியேன் செய்வதோ? ஆனலும் பக்குவதேகம் அருளியதால் திருவடி சேர்ப்பதுளவென அநுபூதி கொண்டேன்; கண்ணுதலோய்! என வருளியதைக் காண்க. (8)

502. இனி, கண் இன்புறக் கண்ட திருவடி அருமையைக் கூறும் (தி. - ன.): —

கண்ணார் நுதலோய் கழலிணைகள்
கண்டேன் கண்கள் களிகூர
எண்ணு திரவும் பகலுநா
னவையே யெண்ணு [3]மிதுவல்லால்

---

500. உடைமை - செல்வம். நன்று, பிழை - ஆன்ம நாஞபோகங்கள். நாயகம் - தலைமை; உரிமை.

பி - ம். 1. யுன்வசமே. 2. யுன்னுடைய.

501. நயந்து - விரும்பி. ஆய - ஆராய. இக்கு அதிகாரம் என்னதோ? காயத்திடுதல், கழற்கீழ்வைத்தல் ஏதேனும் ஒன்றைச் செய்தல் நின் விருப்பம் என்று தாம் தம்மை முற்றிலும் தியாகம் செய்து யாதொரு விருப்புமற்று நிற்கும் நிலையை அருள்கின்றார். உரை, 'திருவடி சேர்ப்பது' உண்டு என்று பொருள் கூறுகிறது.

502. பி. - ம். 3. மதுவல்லால்.

மண்மேல் யாக்கை விடுமாறும்
வந்துன் கழற்கே புகுமாறும்
அண்ணு எண்ணக் கடவேனே
அடிமை சால அழகுடைத்தே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் அருளன்றியில், காண் பாரார் கண்ணுதலாய் காட்டாக்கால், என்று திருவடியைத் திருவரு ளாற் கண்டேன் கண்ணினுல்; ஆனந்தம் பெற்றேன்; அந்த அநு பவமே இரவும் பகலும் என்ற கேவல சகலத்தினும்; அவையே சுத்தமான பரமுத்தியினும்; இவையநுபூதி யல்லால் தத்துவ உட லொடுக்குவிக்கையும், திருவடி புகவைக்கையும், யார்க்குமேலோய்! எனதெண்ணமென் செய்யும்? என்னவே, செய்வது அடிமைப் பணியே! அவையும் அடியேன் சொல்வதழகோ? எனவருளியதைக் காண்க. (9)

503. இனி, என் மனங் குழைவதாக வருளிய (தி. - ன.) :—

அழகே புரிந்திட் டடிநாயேன்
அரற்று கின்றே னுடையானே
திகழா நின்ற திருமேனி
காட்டி என்னைப் பணிகொண்டாய்
புகழே பெரிய பதமெனக்குப்
புராண நீதந் தருளாதே
குழகா கோல மறையோனே
கோனே என்னைக் குழைத்தாயே.

(இ - ள்). திருவருளழகான ஆண்டவனே! தேவரீர் திருவடி யை இச்சித்து நாயான நான் இடைவிடா தழுதேன்; உடைப்பொரு ளானதால், ஞானப்பிரகாச குரு திருமேனி காட்டி அடியேனை அடிமை யாகச் செய்தாய். திருப்புகழுடையாய்! யாவர்க்கு மரிதான திருவடி; தேவரீர், பழையோய்! அனுக்கிரகம் செய்யாது, ஞான மகரகுண்டலம்

---

502. அடிமை நிலையின் பெருமை இங்குக் காட்டப்பெற்றது. அவையே எண்ணும் அதுவல்லால் - அத்திருவடிகளைத் தியானிக்கும் செயலன்றி. அப்படி எண்ணினுல் அடிமைத் திறம் அழகு குறையும் என்றும் கூறுகிறார்.

தரிப்பதான பிரமண வடிவே ! ஆன்ம நாதனே ! எவ்வகையோ அறிவில்லாதவனை அவ்வகைத் துன்ப மருள்வது இவ்வகையென அறியேன் என வருளியது. (10)

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்.

34. உயிருண்ணிப் பத்து

இனி உயிருண்ணிப் பத்து

அகத்தியச் சூத்திரம்.

"செயலறு செயலா முயிருண்ணிப் பத்துச்
செயிரறு சிவானந்த மேலீடாகும்"

பொழிப்புரை—முற்பதிக அநுபூதியில், கூடாதே வாடாதே குழைந்திருப்பதான அடிமை யுள்ளாச இன்ப அன்பைப் பேசி, இல்லான் போல எளிமை எய்தி, இங்கு, சொல்லும் புகழெலாம் தோத்திரமேயாகி, கரணமாய்ச் சிவமாய்க் கலந்து, என்னுயிர்ப்பலி கொள்வது அவ்வருளன்றி வேறில்லை யென உண்மை சாதித்துள்ளே யழுந்தியதென அருளியது. கலிவிருத்தமாகத் [1]தில்லையில் ஓதியது.

---

503. இப்பதிகம் 'குழைத்தால்' என்று தொடங்கி 'குழைத்தாயே' என்று முடிகின்றது.

அழகே என்பதை விளியாகக் கொண்டார். அரற்றுதல் - புலம்புதல். புகழே என்பதும் விளியாகக் கொள்ளப் பெற்றது. புராண - பழையோனே ! பெரியபதம் - திருவடி. குழகன் - அழகன்.

திருவாசக உள்ளக்கிடை : சிவானந்த மேலிடுதல், எ - து. நேயத்தோடே ஒன்றினது.

திருவாசகச் சிறப்பு :

தழைத்தவளர் பேரின்பத் தாழ்கி யுயிர்தோன்றத் தன்மையாய்த்துன்
பொழித்து நிறைவைப் பெறுதலு யிருண்ணிப் பத்தாயிற்
[குரைத்ததாமே.
(பழைய புராணம்)

1. இது, திருப்பெருந்துறையில் அருளியது என்பர் பிறர்.

504. இனி, உயிரை விட்டுச் சிவம் பிரியாதென்ற (தி. - ன.):—

பைந்நாப்பட அரவேரல்குல் உமைபாகம தாயென்
மெய்ந்நாள்தொறும் பிரியாவினைக் கேடாவிடைப் பாகா
செந்நாவலர் பரசும்புகழ்த் திருப்பெருந்துறை யுறைவாய்
எந்நாட்களித் தெந்நாளிறு மாக்கேனி நானே.

(இ - ள்). பாம்பின் படமான குண்டலினியை அழகிய அல்குல்ாக வுடைய, அம்மை பாகமான ஆண்டவனே! என்னை விட்டிமைப் போதும் பிரியாது என தூழை வேரறக் கெடுத்தோய்! விடையுடையாய்! திருவருண் ஞானம் பெற்றோர் புகழும திருப்பெருந்துறைப் பதியே! என்காலம் இனி வீணாட்படக் களித்து இறுமாப்பனோ? நாதனே! என அருளியதைக் காண்க. (1)

505. இனி, என்னுளம் பிரியாதவன் என்ற (தி. - ன.):—

நானாரடி யணைவானொரு நாய்க்குத்தவி [1]சிட்டிவ்
ஊனாருடல் புகுந்தானுயிர் கலந்தானுளம் பிரியான்
தேனார்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை யுறைவான்
வானோர்களு மறியாததோர் வளமீந்தனன் எனக்கே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவடி ஞானம் பெறயானார்? அவ்வறிவில்லாதவனை நாய்க்குச் சிம்மாசன மிட்டதுபோல, அடியேன் ஊனிலும் உயிரிலும் எழுந்தருளிய அபேத அன்புருவாய் என்னை விட்டுப் போம் வழியறியான்; தேனின்பம் பொருந்து சடாதாரி; நிலைமையாயுள்ள திருப்பெருந்துறைப் பதியுறைவான்; அடியேன்மேல் இரங்கித் திருமால் முதலான தேவர்களும் பயன்படாத வடிமை அன்பு வளமான சிவானந்த போதத்தை ஊட்டினன் என வருளியதைக் காண்க. (2)

---

504. பை நா - பசிய நாவையும், படம் - படத்தையுமுடைய. ஏர் - அழகிய. என்மெய் - என் உடலை; வினைகேடா - என் வினைகளின் கேட்டைக் கெடுப்போனே! எந்நாட்களித்து எந்நாள் இறுமாக்கேன் - எந்தக் காலத்தையும் களிப்பாலும் இறுமாப்பாலும் வீணாக்கேன்.

505. பி - ம். 1. சிட்டிங் கூனாருடல். இப்பாடல் சிவபிரானின் அன்பைப் படர்க்கையில் வைத்துக் கூறியது. அடி அணைவான் நான் ஆர் என்றியைக்க. தவிசு - ஆசனம். ஊன் நிறைந்த உடல் புகுந்தான் என்க. வளம் - செல்வம்; இங்கே, சிவானந்த போதவளம்.

506. இனி, தம்மை அடிமை கொள்ளப் பிராமணக் கோலங் கொண்டருளினமையைக் கூறும் (தி. - ன.) :—

எனைநானென்ப தறியேன்பகல் இரவாவது மறியேன்
மனவாசகங் கடந்தானெனை மத்தோன்மத்த னுக்கிச்
சினமால்விடை யுடையான்மன்னு திருப்பெருந்துறை
யுறையும்
பனவன்னெனைச் செய்தபடி றியேன்பரஞ் சுடரே.

(இ - ள்). ஆதிநடு அந்த மிலா அளவிலாத சிவப்பிரகாசனே ! ஓர் விண்ணப்பம் ; அடியேன் அநாதியிலே திருவடியில் பிரிப்பின்றி இருந்தபோது என்னை யானென்னும் பாவ சுதந்தரமறிவேனே ? கேவல சகலப்படுவதான பரிபாகமறிவேனே ? வாக்குமனேதீதா ! அடியேனைச் சிவோன்மத்த மயக்கறிவனுகச் செய்த, விடையுடை யாய் ! திருப்பெருந்துறையில் எழுந்தருளிய விப்பிர குரு மணியே ! வானினுள வானவர்க்கெல்லாம் அறியவியலாத வஞ்சனே ! அடியேனை விட்டுப் பிரிந்தது வஞ்சகம் ; அறிவிலாமையால் கண்ட பொருளைக் கைவிட்டேன் ; என்னுயிர்ச் சோதி நாதனே ! என் செய்வேன் ? எனப் பிரிவாராமையுற்று அன்பால் அருளியதெனக் காண்க. (3)

507. இனி, தம் மனதும் கண்ணும் விட்டகலாத திருவருக் காட்சியைக் கூறும் (தி. - ன.) :—

வினைக்கேடரு மூளாரோபிறர் சொல்லீர்வைய னுலகில்
எனைத்தான்புகுந் தாண்டானென தென்பின்புரை யுருக்கிப்
பினைத்தான்புகுந் தெல்லேபெருந் துறையி னுறை பெம்மான்
மனத்தான்கண்ணி னகத்தான்மறு மாற்றத்திடை யானே.

(இ - ள்). சிரடியாரே ! கேண்மோ ! இவ்வுலகினுள்ள உயிர் களில் என்னை விட அரும்பாவியைக் கண்டதுண்டோ ? சொல்லீர் கள். அவ்வகையுடைய என்னுள் எழுந்தருளி, யான் அன்பால் என்புருகக் கருணையால் திருப்பெருந்துறையில் எழுந்தருளி, உள் ளும் புறமும் ஒரு தன்மையாக அடிமை செய்த பெருமானே ! அடி-

---

506. பகல் இரவு என்பதற்குக் கேவல சகலப்படுதல் என்று பொருள் கூறுகின்றார். மனம் வாசகம் - மனம் வாக்கு என்பனவற்றை. மத்தோன்மத்தன் - மிகு களிப்புடையோன். விடை - இடபம். பனவன் - வேதியன். படிறு - வஞ்சம்.

யேன் மனமகலாத, கண்ணில் ஆனந்தம் பெருகுவதான, குற்றமில் லாத, ஒரு மொழி நடுவுள் அருளின்பச் சொரூப வடிவான நாதனே! எனக்காண்க. (4)

508. இனி, சீரடியாரை அன்படிமை முத்தி அளவளாவ அழைப்பதான ஆராமையுற்றமையைக் கூறும் (தி. - ன.):—

பற்றுங்கை யற்றீர்பற்றும் பற்றுங்கது பற்றி
நற்றுங்கதி யடைவோமெனிற் கெடுவீரோடி வம்மின்
தெற்றுர்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை [1]யுறைசீர்
கற்றுங்கவன் கழல்பேணின ரொடுங்கூடுமின் கலந்தே.

(இ - ள்). சீரடியார்களே கேண்மோ! அநாதியே நம்மைத் தொடர்வதான திருவருளிருக்க, அதை விட்டுப் பாசமே பற்றுகப் பற்றினதால், பரம விடறியாமல் (பலர்) கெட்டார்கள். திருவடி யடைய வேண்டுவீரேல் ஓடி வாருங்கள்! எவ்விடம் என்பீராகில், ஒருவரால் கற்பிக்கப்படாத சடை முடியை யுடையான் நிலைமையா யுள்ள திருப்பெருந்துறை யுறைப்பதியான்; திருவடிப்புகழைக் கலை ஞான்த்தால் அறிவு விளங்கி, அவனது சிர்பாதஞ் சேர்வதான அன் பர்களோடும் கூடி அன்பாவீர்கள்; என வருளியதைக் காண்க. (5)

---

507. வியன் - அசன்ற. எனது என்பின் புரை உருக்கி என் உட லெலும்புகளில் உள் தூளைகளை உருக்கி. பினை - பின்பு. எல்லே - வியப் பிடைச்சொல்; இரக்கச் சொல்லாகவும் கொள்ளலாம். மறு மாற்றத் திடையான் - குற்றமில்லாத ஒருமொழி நடுவுள் உள்ளவன் என்று பொரு ளுரைக்கின்றார். மறுமாற்றம், என்பதை மறுவறு மாற்றம் எனக் கொண்டனர். மறுமாற்றம் - விடை என்றும் கொள்ளலாம்; மறு என்பதனை மற்றும் என்றதன் குறைபாகவும் கொள்வர்.

பி - ம். 1. யிறைசீர்.

508. பற்று அவை அற்றீர் - பற்றவேண்டிய திருவடிப்பற்றை விட்டீர். பற்றும் பற்று - பாசம். பாசத்தை நம்பி நற்கதியடைவோம் என்னிற் கெடுவீர் என்றபடி. உரையில், கெட்டார்கள் என்று படர்க்கைப் பொருள் கூறப்பட்டது. வம்மின் - வாருங்கள். தெற்று - அழகையுடை யது. தென் - அழகு. தெற்று - பின்னலும் ஆம். இறை சீர்கற்று, என்ற பாடத்துக்கு, அவன் கழல் பேணினரொடும் கலந்து கூடுமின் என்க.

509. இனி, அடியில் ஊனுயிர் கலந்த தம் நிலையைக் கூறும் (தி. - ன.) :—

கடலின் திரை யதுபோல்வரு கலக்கமல மறுத்தென்
உடலும்மென துயிரும்புகுந் தொழியாவண்ண நிறைந்தான்
சுடருஞ்சுடர் மதிசூடிய திருப்பெருந்துறை யுறையும்
படருஞ்சடை மகுடத்தெங்கள் [1]பரனுர்செய்த படிறே.

(இ - ள்). ஞான சந்திர கலையைச் சருவ வியாபகத் திருச்சுடர் மகுடத்தில் தரித்துத் திருப்பெருந்துறையிற் குருவாயெழுந்தருளிய பரம்சிவன் அருளிய களவை வினவில், கடற்றிரைபோல் ஓயாது மேன்மேல் வருத்தும் பிறவி வேதனைக் கிடமாகிய பஞ்சபாசக் கட்டைக் கருணையால் நீக்கி, அவை யுண்மையாய்க் குடிகொண்ட உடலையும் உயிரையும் அருளாக்கி, அவற்றினிடமாக எழுந்தருளி என்னை விட்டு நீங்காவண்ணம் நிறைவானென அருளியதைக் காண்க. (6)

510. இனி, சிவனடியாரல்லாதாரை நீங்கவேண்டுமென்ற (தி. - ன.) :—

வேண்டேன்புகழ் வேண்டேன்செல்வம் வேண்டேன்
[மண்ணும் விண்ணும்
வேண்டேன்பிறப் பிறப்புக்சிவம் வேண்டார்தமை நாளும்
தீண்டேன்சென்று சேர்ந்தேன்மன்னு திருப்பெருந்துறை
[யிறைதாள்
பூண்டேன்புறம் [2]போகேனினிப் புறம்போகலொட் டேனே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவடி யல்லாத புகழை விரும்பேன்; திருவருட் செல்வமல்லாத செல்வத்தையும் விரும்பேன்; அன்றியும் மண்ணிலுள்ள பதமும் விண்ணிலுள்ள பதமும் விரும்புவதில்லை; இன்பப் பிறவியையும் துன்ப விறப்பையும் விரும்புவதில்லை; பரமசிவனைத் தொடர்ந்து அன்பு செய்யாத பாவியை நான் தொடர்வதில்லை; திருப்பெருந்துறைப்பதியை வீடெனச்சேர்ந்தேன்; அவ்விறை திருவடியைப் பொருளாக வுண்மையானேன்; பாச சாலங்களுக்குப் புறமானேன்; அடியேன் உளத்தில் எழுந்தருளிய நாதனை,

---

பி - ம். 1. பரன்ரூன்,

509. கலக்கம் மலம் அறுத்து. கலக்கமாகிய பஞ்சபாசக்கட்டு என்னும் மலத்தைத் நீக்கி. ஒழியா - விட்டு நீங்கா. படிறு - களவு; வஞ்சம்.

510. பி - ம். 2. போந்தேன்.

என்னை விட்டுப் புறம்போகா வண்ணம் அன்படிமையாவேன்; என வருளியதைக் காண்க. (7)

511. இனி, எவ்வின்பத்துக்கு மேலான இன்பம் திருவடி யென்ற (தி. - ன.) :—

கோற்றேனெனைக் கென்கோகுரை கடல்வாயமு தென்கோ
ஆற்றேனெங்க ளரனேயரு மருந்தேயென தரசே
சேற்றூர்வயல் புடைசூழ்தரு திருப்பெருந்துறை யுறையும்
நீற்றூர்தரு திருமேனிகின் மலனேயுனை யானே.

(இ - ள்). ஆண்டவனே! திருப்பெருந்துறையோய்! அடியா ருள்ளத் தன்புருவா! நின்மலவா! நினது திருவடி யின்பமே யென் னுயிர்க் கின்பமலது, வேறில்லை; ஆன்ம நாதனே! சீவ சஞ்சீவியே! யான் நானை மதிப்புமில்லை; பொறுப்பதுஞ் சுவைப்பதுமில்லை, அடைத்தேனையும் தேவாமிர்தத்தையும்; என வருளியதைக் காண்க. (8)

512. இனி, அவனருளே நானமையைக் கூறும் (தி. - ன.) :-

[1]எச்சமறு வேனனெனைக் கிருக்கின்றதை யறியேன்
அச்சோவெங்க ளரனேயரு மருந்தேயென தமுதே
செச்சைமலர் புரைமேனியன் திருப்பெருந்துறை யுறைவான்
நிச்சம்மென நெஞ்சின்மன்னி யாளுகின் [2]றனனே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; அடியேன் அடி யேன் அறியாமையாற் குறை பாடிலனுக வெண்ணி யிருந்தேனே யொழிய, என்னுள்ளிருந்த பிரிவுடைய வேறு பாட்டை யறியாதே போனேனே! அவையே குற்றம்; கருணையாலிரங்க வேண்டும்; அரனே! தீராநோய் தீர்க்கு மருந்தே! என்னுயிரின்பே! வெட்சி மலர் போன்ற

---

511. கோல்தேன் - கொம்புத்தேன். குரைகடல் வாய் - ஒலிக் கின்ற கடலினிடத்துள்ள. ஆற்றேன் - சகியேன். மருந்து - சஞ்சீவி. நீறு ஆர்தரு திருமேனி. உன்னை எவ்வாறு அழைப்பேன்; மனம் பொறுப்பதில்லையே என்பது கருத்து.

ஆற்றேன் என்பதைத் தேன் முதலியவற்றுடன் கூட்டி உரை கூறி யிருக்கிறார்.

512. பி - ம். 1. எச்சம்மற். 2. நின்றனே.

சிவந்த திருமேனியுடைய திருப்பெருந்துறைக் குருவே! நிச்சயமாக என் மனதிற் பொருந்தி யான் செய்யுந் துரிசுகளுக்குடனாகி நின்றவா! என வருளியதைக் காண்க.

513. இனி, பாவியான வெனக்கிரங்க வேண்டுமென வருளிய (தி. - ன.) :—

வான்பாவிய வுலகத்தவர் தவமேசெய அவமே
ஊன்பாவிய வுடலேச்சுமந் தடவி[1]மர மானேன்
தேன்பாய்மலர்க் கொன்றைமன்னு திருப்பெருந்துறை
[யுறைவாய்
நான்பாவிய ஞானமே நல்காயென லாமே.

(இ - ள்). ஆணடவனே! தேவரீர் சந்நிதான அன்பர்கள் ஞானத்தவ யோகிகளாக நிட்டை கூடியிருப்ப, வீணே குற்றமே யுடைய சவவுடலே நீ நினைந்த நாள்தொடங்கி சுமந்து பயன்படாத காட்டு விருட்ச மானேன். தேனொழுகுங் கொன்றை சூடி, அநாதியே திருப்பெருந்துறையிலெழுந்தருளினோய்! நான் கொடிய பாவி; நான் திருவருள் மறந்தவனாலும், திருவடி ஞானம் அருளவேண்டியது தம் கடன் என அருளியதைக் காண்க.

திருச்சிற்றம்பலம்

---

512. நான் எச்சம் அறுவேன் என - நான் குறைபாடிலனாக எண்ணி. எச்சம் - குறை; குற்றம். எனக்கு இருக்கின்றது - என் குறையை; பிரிவாலுண்டான வேறுபாட்டை. அச்சோ - ஆச்சரியம். செச்சை மலர் - வெட்சிப் பூ. நிச்சம் - நிச்சயம்; நித்தியம் என்பதன் திரிபாகவும் கொள்ளலாம்.

பி - ம். மாமரனேன்.

513. வான் பாவிய - விண்ணில் உயர்ந்த. அவம் - வீண். அடவி மா மரனேன் - காட்டிலுள்ள பெரிய மரம்போல்பவனானேன். நல்காய் - (திருவடி ஞானம்) நல்கவேண்டும்.

திருச்சிற்றம்பலம்

35. அச்சப் பத்து

இனி, அச்சப் பத்தாவன.

அகத்தியச் சூத்திரம்.

அருளுரு நச்சார்க் கச்சப் பத்துத்
தெருடரு சிவானந் தந்தின் முறுகுதல்.

பொழிப்புரை :—

முற்பதிகத் திருவருளான சிவானந்தம் முற்றுப் பெற்று, முன் பிழைத்ததற் கிரங்கி, அன்பும் திரிவித வேடமும் இன்பென் றறிந்ததை யநுபூதியாற் காண்க.

ஆசிரிய விருத்தமாகத் திருத்தில்லையி லோதிய தெனக் காண்க.

திரிவித வேடம்; சடை, விபூதி உருத்திராக்கமெனக் கொள்க. இம்மூன்றும் தரித்தவர்களே அடியார்களோவென்றல், ஒன்றும் போதும்; கண்டின்புறுமடியார்க்கே பரசிவவின்ப.....?

514. இனி, கற்றல் கேட்டலுடையரான அன்பரன்றி, வேறுடையரைக் கண்டாலச்ச முறுவதைக் கூறும் (தி. - ன.) :—

புற்றில்வா ளரவு மஞ்சேன் பொய்யர்தம் மெய்யு மஞ்சேன்
கற்றைவார் சடையெம் மண்ணல் கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை யுண்டென நினைந்தெம்
[பெம்மாற்
[1]கற்றிரா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

---

35. திருவாசக உள்ளக்கிடை. ஆனந்த முறுதல். எ - து. நேயத்திலே ஒன்று பட்டுச் சிக்கென அழுந்தினது.

திருவாசகச் செறிப்பு :

தரையில் வளர்வினை முழுதும் வரினுமஞ்சேன் சிவசமயத்
[தவஞ்சாராதா
ருருகின்வரக்காண்கின் மனமஞ்சுமென லிகழந்துரைத்தலச்
[சப்பத்தாம்.

பி - ம். 1. கற்றிலா.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; அடியேன், யாவரும் பயப்படுவதான பாம்புக்கும், ஆணவ மலபந்தத்துக்கும் பயமுறேன். அஞ்சுவதானது எவற்றுக்கெனில், கற்றைச் செஞ்சடையானின், ஞானநுதற் கண்விழியுடைய ஞானப்பிரகாசனின் திருவடி பொருந்தி, வேறு தெய்வமுளவென நினைந்து, நின்மல சிவனருளிய சிவாகம மூலப் பொருளான திருவேடமே பொருளெனக் கொண்டருட் பணி செய்யாத பாவிகளைக் கண்ணுற்றால் அச்சப்படுவேன்;

என, அருளியதால் அவை சிவனுண்டென காண்பதற்கடையாளம்:

[1]எமது குரவரருளியதில், திரிவிதவேட மென்றமையானும், அவைக்குத் தமிழால் அருளிய சிவாகமமான பெரிய புராணத்தில்,

> ‘நுதலின்கண் விழித்த வாய்மை நுணங்கு நூலின்
> பதமெங்கு நிறைந்து விளங்கப் பவங்கள் மாற்ற
> உதவும் திருநீற்றுயர் கண்டிகை கொண்ட வேணி
> முதன் மும்மையினால் உலகாண்டனர் மூர்த்தியார் தாம்’
>
> [பெரிய. மூர்த்தி. 46]

என்றருளிய அநுபூதிப்படி, மூவேடமே என வருளியதை மூலாகம வடமொழியிலும், ‘திருநீறும் சாதனமும் கண்டு கவராதே தொழுமடியார் நெஞ்சிற் காணலாம், என்ற வேதவநுபூதியும் கண்டு பயன் பெறத் தக்கது. திரிவித வேடம் நீறு கண்டிகை திருச்சடை மூன்றுமே எனக் கொள்க. (1)

515. இனி, வேதனைப் பட்டிறப்பதான, தெய்வத்தை யுண்மை கொள்ளாத தன்மையைக் கூறும் (தி. - ன.):—

> வெருவரேன் வேட்கை வந்தால்
> வினைக்கடல் கொளினு மஞ்சேன்
> இருவரான் மாறு காணு
> எம்பிரான் தம்பி ரானும்

---

514. பொய்யர் தம் மெய் இதற்கு ஆணவமலபந்தம் என்று உரை கூறபபட்டுள்ளது. கற்றை - தொகுதி. பெய்மான் - பெரியோன்.

1. எமது குரவரருளியதில் என்றதால், அகத்தியச் சூத்திரப் பொழிப் புரை உரையாசிரியரின் ஆசிரியர் அருளியது என்பதாயிற்று.

திருவுரு வன்றி மற்றோர்
[1]தேவரைத் தேவ ரென்ன
அருவரா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே.

(இ - ள்). ஆண்டவனே! அடியேன் பழைய மயக்கறிவால் விஷய விச்சை மேற்பட்டுத் தீவினைக் கடலழுந்தினாலும், அஞ்சுவ தில்லை; மாறுபட்டுத் தேடிய திருமாலயன் காணுத ஆன்மநாதனையும் எப்பொருட்கும் இறையோனுயுமுள்ள சிவன் தனதிச்சையால் கொண்ட பஞ்சவிம்சதி திருவுருவன்றி, மற்றுள்ள தேவவுருவை அசுத்த உருவெனக் காணுத பாவியைக் கண்ணுற்றால் நான் அஞ்சு வேன். அம்மா, (அசை)—என அருளியதைக் காண்க. (2)

516. இனி, ஆனந்த நடனம் காணுதாரைக் காணவொண்ணுத தன்மையைக் கூறும் (தி. - ன.):—

வன்புலால் வேலுமஞ்சேன் வலிக்கையார் கடைக்க
[ணஞ்சேன்
என்பெலா முருக நோக்கி யம்பலத் தாடு கின்ற
என்பொலா மணியை யேத்தி யினிதருள் பருக மாட்டா
அன்பிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; கொடிய வேல் உயிர்கொள்ள வரினும் அஞ்சுவதில்லை; சங்கணிவதான நாரிகள் சலனத்துக்கும் அஞ்சுவதில்லை; அடியேன் அஞ்சப்படுவதெதவற் றுக்கோ எனில், நின் திருவடியைக் கண்டு நெக்கு நெக்காகப் பரிவா லுருகி ஓடத் திருவருளுயிர்மேல் கடாட்சித்து ஞானவம்பலத்திலே நடிப்பதான சிவரத்தின மணிச் சோதியைத் துதித்து அவ்வருளான சிவாநுபோகத்தைச் சுவாநுபூதியாகப் பெறமாட்டாத அன்பிலாத பாவியைக் கண்ணுற்றால், அஞ்சுவதொழிய வேறச்சமில்லை; என் றருளியதைக் காண்க. (3)

பி - ம். 1. தேவரெத்.

515. வெருவரேன் - அஞ்சேன். வேட்கை - விஷய இச்சை. இருவர் - திருமால், அயன். மாறு - பகை. தேவரை - தேவ உருவை. அருவராதவர் - அருவருக்காதவர்; வெறுப்புக்கொள்ளாதவர்.

516. வன் புலால்வேல் - கொடிய, புலால் நாற்றம் வீசும் வேலா யுதம். பருகுதல் - அநுபூதியாகப் பெறுதல்.

517. இனி, திருவடி ஞான வன்பால் உருகாதவரைக் காணெண்ணு தென்ற (தி. - ன.) :—

கிளியனார் கிளவி யஞ்சே னவர்கிறி முறுவ லஞ்சேன்
வெளியநீ ரூடு மேனி வேதியன் பாத நண்ணித்
துளியுலாங் கண்ண ராகித் தொழுதழு துள்ளம் நெக்கிங்
களியிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; அடியேன் சுக மொழியரான நாரியர்களின் சொற்கும், அவர்கள் வசப்படுத்துவதான பொய்யான புன்னகைப்புக்கும் அஞ்சுவதில்லை. வேறஞ்சுவதாவன, வெளி வளர் தெய்வ நீருடி, வேதியர் திருவடிக் கன்பு வைத்து, உளம் கசிந்துருகி, வணங்கும் இரக்கவன்பு செய்யாத பாவியைக் கண்ணுற்றால் பயமுறுவேன்;—என அருளியதைக் காண்க. (4)

518. இனி, திருவெண்ணீறணியாதவரைக் காணெண்ணுது என்ற (தி. - ன.) :—

பிணியெலாம் வரினு மஞ்சேன் பிறப்பிலே டிறப்பு [மஞ்சேன்
துணிநிலா அணியி னன்றன் தொழும்பரோ டழுத்தி யம்மால்
திணிநிலம் பிளந்துங் காணச் சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம், அடியேற்குள தாகிய எல்லாப் பிணியும் ஓர் காலத்துறினும், பிறப்பிறப்புண்டா யினும், அவைக் கஞ்சுவதில்லை. மற்றெவற்றுக் கஞ்சுவதெனில், துண்டப்பிறை அணிவதான நாதனடியரோடு கூடி, திருமால் பார் கீண்டு போயும் காணுத திருவடி வணங்கி, விபூதி யன்பால் அணி

---

517. கிளவி - பேச்சு. கிளியைக் கிளவியோடும் கூட்டுக. கிறி - பொய், வஞ்சனை. வெளி நீறு - வெண்ணீறு. உலாம் - சொரிகின்ற. நெக்கு - நெகிழ்ந்து. அளியிலாதவர் - இரக்க அன்பு செய்யாதவர். அளி - கிருபை.

யாத பாவிகளைக் கண்ணுற்றல், அம்மா! அஞ்சுவேன், -என இரங்கியருளியதெனக் காண்க. (5)

519. இனி, திருவடிக்கர்ச்சனை அன்பு செய்யாத கொடுமையைக் கூறும் (தி. - ன.) :—

வாளுலா மெரியு மஞ்சேன் வரைபுரண் டிடினு மஞ்சேன்
தோளுலாம் நீற்ற னேற்றன் சொற்பதங் கடந்த அப்பன்
தாளதா மரைக ளேத்தித் தடமலர் புனைந்து கையும்
ஆளலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; அடியேன் இறுதியாக ஒளி மிகுந்த அக்கினி மேல்வரினும், மலை விழினும் அஞ்சுவதில்லை. திருத்தோளிலே நீறணிவதான, விடையேறிய கருணையாளன், வாசகங் கடந்த வாச்சியப் பயன், திருவடிக் கமலங்களை விதித்த மலர்களால் அன்பால் சூடி உள்ளங் கரைந்து உருகி அடிமைப்பணி செய்யாத பாவிகளைக் கண்ணுற்றல் அஞ்சுவேன்— என வருளியதைக் காண்க. (6)

520. இனி, முகமெலாம் கண்ணீர் சோர அகநெகாத தன்மையை அஞ்சுவதைக் கூறும் (தி. - ன.) :—

தகைவிலாப் பழியு மஞ்சேன் சாதலை முன்ன மஞ்சேன்
புகைமுகந் தெரிகை வீசிப் பொலிந்தவம் பலத்து ளாடும்
முகைநகைக் கொன்றை மாலை முன்னவன் பாதமேத்தி
அகநெகா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; இரக்கமில்லாத பெரியகுற்றம் வரினும், சாவேமுன் வரினும் அஞ்சுவதில்லை. அஞ்சுவதென்ன வென்றால், அடியேன் வினை புகைந்தெழும்ப அக்கினியைத் திருக்கையிலேந்தி வியாபகப்பட எங்கும் திருவருளழகு பொலிவதான மணிமன்றுளாடுவதான, கொன்றை சூடிய, யாவர்க்கும்

---

518. துணி கிலா - துண்டப்பிறை. தொழும்பர் - அடியவர். அழுந்தி - கூடி.

519. வாள் - ஒளி. ஏற்றன் - இடபவாகனன். தாள - தாள்களாகிய. கையும் - கரைந்தருகும். ஆள் அலாதவர் - அடிமைப்பணி செய்யாதவர்.

முன்னவன் திருவடி துதித்து உருகாத மனமுடைய பாவிகளாக் கண்ணுற்றுல் பயமுறுவேன்—என அருளியதைக் காண்க. (7)

521. இனி, திருவடி ஞானமில்லாதவரை அஞ்சுவதாகக் கூறும் (தி. - ன.):—

தறிசெறி களிறு மஞ்சேன் தழல்விழி யுழுவை யஞ்சேன்
வெறிகமழ் சடைய னப்பன் விண்ணவர் நண்ண மாட்டாச்
செறிதரு கழல்க ளேத்திச் சிறந்தினி திருக்க மாட்டா
அறிவிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; நெருங்கிய கம்பம் விட்டு வராகின்ற யானைக்கும் அழற்கண்ணையுடைய புலிக்கும் நான் அஞ்சுவதில்லை. தேன்வீசும் மலரணிவதான செஞ்சடையப்பன், தேவர்கட் கரியவன், அடியேனை விட்டுப் பிரியாத அவனுடைய திருவடியைப் பரவி உள்ளம் சிறப்பெய்த சிவானந்த நிட்டைகூடியிராத அறிவில்லாத பாவிகளைக் கண்டால் பயமுறுவேன்—என வருளியதைக் காண்க. (8)

522. இனி, நெற்றியில் நீறணியாததே பாவமென்ற (தி. - ன.):

மஞ்சுலா முருமு மஞ்சேன் மன்னரோ டுறவு மஞ்சேன்
நஞ்சமே யமுத மாக்கும் நம்பிரா னெம்பி ரானுய்ச்
செஞ்செவே யாண்டு கொண்டான் திருமுண்டந் தீட்ட
[மாட்டா
தஞ்சுவாரவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; மேகத்தில் பொருந்தாகின்ற இடி விழுவதானலும், இராசனுற விருந்தாலும் அஞ்சுவதில்லை. நஞ்சைத் திருப்போனகமாகக் கொண்டருளும்

---

520. தகைவு இலா - தடுக்க முடியாத; இரக்கமில்லாத என்றுர். புகை முகம் தெரிகை வீசி என்பதற்கு, புகையைக்கொண்ட நெருப்பைக் கைக்கொண்டு வீசி என்று பிறர் பொருளுரைப்பர். முகை நகை கொன்றை மாலை - மொட்டு விரியப்பெற்ற கொன்றை மலர்களாகிய மாலை. அகம் - மனம்.

521. தறி - யானை கட்டும் கம்பம். உழுவை - புலி. வெறி - மணம்.

நமது பரமசிவன், அன்றியும் எப்பொருட்கும் இறைவன், நம்மையோ யாவர்க்கும் மேலாக அடிமை செய்தான், அவனது திருநாமம் உச்சரித்துத் திருநீற்றை நெற்றியில் திரிபுண்டரமாகத் தரிக்கப் பயமுறும் பாவியைக் கண்டால் அஞ்சுவேன்—என அருளியதைக் காண்க. (9)

523. இனி, சிவனடிக் கன்பால் துதியாமையை அஞ்சும் (தி. - ன.) :—

கோணிலா வாளி யஞ்சேன் கூற்றுவன் சீற்ற மஞ்சேன்
நீணிலா அணிபி ஞான நினைந்துநைந் துருகி நெக்கு
வாணிலாங் கண்கள் சோர வாழ்த்திநின் றேத்த மாட்டா
ஆணலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம். அடியேன் கூர்மையுடைய அம்பு மேல்வரினும், யமன் சீறிவரினும் அஞ்சுவதில்லை. மற்றெவைக்கு அஞ்சுவது என்னில், சந்திரசேகரநாதனே அன்பால் கசிந்துருகி கண் இரண்டும் கண்ணீர் பெருகத் துதித்து, அவனது திருவடி வாழ்த்தி, நிட்டை கூடாத பாவிகளைக் கண்டால் பயமுறுவேன்—என அருளியதைக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்

---

522. மஞ்சு - மேகம். உரும் - இடி. மன்னரோடிறவு அஞ்சத் தக்கது என்பது குறிப்பு. செஞ்செவே - செம்மையாக; யாவர்க்கும் மேலாக. முண்டம் - நெற்றி.

523. கோள் நிலா என்றும், கோண் இலா என்றும் பிரிப்பர். கோள் - கொள்ளை கொள்ளும். கோண் - வளைவு. வாள் நிலாவும் கண்கள் என்க. வாள் - ஒளி. சோர - கண்ணீர் பெருக. ஆண்மை - கடவுள் வணக்கம் வீரம் எனப்பட்டது.

திருச்சிற்றம்பலம்

36. திருப்பாண்டி விருத்தம்

இனி, திருப்பாண்டி விருத்தம்.

அகத்தியச் சூத்திரம்.

சிவானந்த விளைவு.

பொழிப்புரை.

முற்பதிகத்தில் அருளிய அருட்டிருவேடம் தாங்கிய அடியார்க் காடல் செய்யும் சிவானந்த வடிவெனக் கண்டு இன்புற்று தற்பணி யற, அதுவே பொருளென நிற்பதான நிட்டை யநுபூதி.

இப்பதிகம், கட்டளைக் கலித்துறையாகத் திருப்பெருந்துறையில் ஓதியது.

524. இனி, பரமசிவனது உருவன்றி மற்றேருருவும் என்னறி வறியாதென்ற (தி. - ன.) :—

பருவரை மங்கைதன் பங்கரைப் பாண்டியற் காரமுதாம்
ஒருவரை யொன்றுமி லாதவ ரைக்கழற் போதிறைஞ்சித்
தெரிவர நின்றுருக் கிப்பரி மேற்கொண்ட சேவகனூர்
ஒருவரை யன்றி யுருவறி யாதென்றன் உள்ளமதே.

(இ - ள்). சீரடியார்களே! கேண்மோ! இமயபருவதராச தவ புத்திரியான அம்மை வாமபாகரை, பாண்டியவிராசர் அன்புக்குயி ரான தெவிட்டாத வமிர்தச் சுவையை, ஏக பரப்பிரம சொரூபரை, பற்றற்றவரை, அவரது திருவடிக்கன்புப் பணி செய்வதாக, உலகறிய அடியேன் நெஞ்சுருக்குவதாகவே பரிமேலழகியார் எழுந்தருளிய சேவ கனரான சோமசுந்தரக் கடவுள் ஒருவரையுமே அடியேன் கண்ணும்

---

1. இது திருப்பாண்டிப் பதிகம் என்று அச்சுப்புத்தகங்களிற் காணப்படுகிறது.

திருவாசக திருவுள்ளக்கிடை : சிவானந்த விளைவு எ-து. சுகமேலிடு.

திருவாசகச் சிறப்பு :

புரவியின்மேற் பாண்டியன் முன்வரும் பதத்தையாம் பெறுமற்புதம்
[போலியாகும்
விரவுமின்களென்றடியார்க் குரைதி சொலற்றிருப்பாண்டி
[விருத்தமாமே.

கருத்தும் அறிவதொழிய, வேறுருவுடையவர்களே அடியேன் கருத்தறிவதில்லை ; என அருளியதைக் காண்க. (1)

525. இனி, சதுரறியாமை நீங்குவதைக் கூறும் (தி. - ன.) :—

சதுரை மறந்தறி மால்கொள்வர் சார்ந்தவர் சாற்றிச்
சொன்னேம்
கதிரை மறைத்தன்ன சோதி கழுக்கடை கைப்பிடித்துக்
குதிரையின் [1]மேல்கொண்டு கூடிடு மேற்குடி கேடுகண்டீர்
மதுரையர் மன்னன் மறுபிறப் போட மறித்திடுமே.

(இ - ள்). சீரடியார்களே ! கேண்மோ ! திருவடியே புகலென அன்புடையோர் எல்லா நெறியும் பெற்ற சதுர் அறியாமை நீங்கி, ஞானப்பித்தாகவே அதுவாய்ப் போவார்கள் ; சொல்லியே, சொன்னேம் ; கேட்பீர்களாக. நமது சுவாமி சூரியப்பிரபை இருட்டாகத் தக்க ஞானச்சோதி ஈட்டியை என் விஸ மாளத் திருக்கையிலேந்தி, போதப்பரிமேலெழுந்தருளி நமதுள்ளம் வாழவெழுந்தருளினால் நமது குடி கேடுவரும். அவையன்றி மதுரைராசன் இனிப் பிறவாவண்ணம் வழியடைக்கும் — என அருளியதைக் காண்க. (2)

526. இனி, பேரின்பமான பிரமக்கிழத்தியோ டோரின்பமான மையைக் கூறும் (தி. - ன.) : —

நீரின்ப வெள்ளத்துள் நீந்திக் குளிக்கின்ற நெஞ்சங்
[கொண்டீர்
பாரின்ப வெள்ளங் கொளப்பரி மேற்கொண்ட பாண்டியனூர்
ஓரின்ப வெள்ளத் துருக்கொண்டு தொண்டரை யுள்ளங்
[கொண்டார்
பேரின்ப வெள்ளத்துட் பெய்கழ லேசென்று பேணுமினே.

---

524. பரு - பருத்த. வரை - இமயமலை. அமுதாமவரை என்றும் ஒருவரை என்றும் பிரித்துப் பொருள் கூறுகிறார். ஒன்றுமிலாதவர் - பற்றற்றவர். கழல்போது - திருவடியாகிய மலர். சேவகனார் - வீரர்.

பி - ம். 1. மேல்வந்து.

525. சார்ந்தவர் (தம்) சதுரை மறந்து அறிமால் கொள்வர் - பிரானைச் சார்ந்தவர் தம் சாமர்த்தியங்களே மறந்து ஞானப்பித்துக் கொள்வர் என்பது தெளிந்த பொருள். கதிர் - சூரியன். குடிகேடு - பிறப்பின் அழிவு என்ற பொருள் கொள்வது சிறக்கும். மறித்திடும் - வழியடைக்கும். சோதி - சிவபிரானைக் குறிக்கும் ; கழுக்கடை - சூலம் : இங்கே ஈட்டி என்றார்.

(இ - ள்). சிரடியார்களே ! கேண்மோ ! சிவசாட்குணிய வாரியி லழுந்தி இன்பாநுபூதிபெறக் கருத்தானீர்கள் ; பாருங்கள் ; இப்பூமி முழுதும் ஞானவானந்தவாரியில் கொள்ளே கொள்ள, பரிமேலழகராய் எழுந்தருளிய பாண்டியராச னறிவே ஆனந்தவாரியாகச் சுகவுருக் கொண்டு, அன்பருள்ளமே தனதிடமாகக் கொண்ட பேரானந்த சுக வாரியான திருவடியில் அன்பாய் அழுந்திப்பணி செய்வீர்கள் ; என அருளியதைக் காண்க. (3)

527. இனி, ஞானவாளாலெண் பிறவி வேரற வீசினமையைக் கூறும் (தி. - ன.) :—

செறியும்பிறவிக்கு நல்லவர் செல்லன்மின் தென்னனன்னாட்
டிறைவன் கிளர்கின்ற காலமிக் காலமெக் காலத்துள்ளும்
அறிவொண் கதிர்வா ளுறைகழித் தானந்த மாக்கடவி
எறியும் பிறப்பை எதிர்ந்தார் புரள இருநிலத்தே.

(இ - ள்). சிரடியார்களே ! கேண்மோ ; உங்களுக்குத் தொன்று தொட்டு வராநின்ற பிறவி வராவண்ணம் விரைவிலே போவீர்கள். எவ்விடத்துக்கோ வெனின், சென்ற காலத்திற்கும் இனி வருங் காலத்துக்கும், எற்றைக்கும், திருவருளுடைய காலம் நிகழ்காலமாகத் தென்னவிராசனுக, பேரானந்தப் பரிமேல் எழுந்தருளி, அறிவானந் தச் சேரதி வாழும் கூட்டைக் கழித்து, ஞானவாளருட்கை தரித்து, எப்போதும் துன்பமாகப் புரளும் பிறப்பை இனிப்பிறவா வண்ணம் புரண்டோட எதிருற்றதே இப்பூவினிடமாக ;—என அருளியதைக் காண்க. (4)

---

526. நீர் நெஞ்சங் கொண்டீர் என இயைக்க. பார் - பூமி ; பூமியிலுள்ளோர் : தொண்டரை உள்ளம் கொண்டார் என்பதற்கு அன்பருள்ளமே தமது இடமாகக் கொண்டார் என்று உரை கூறுகின்றார்.

527. கல்லவர் - நல்லவர்களே ; சிரடியார்களே ! இறைவன் இருநிலத்தே கிளர்கின்ற காலம் இக்காலம் என இயைக்க. எக்காலத்துள்ளும் என்பதை மூன்றாகப் பகுத்துக் காட்டினர். இறைவன் கிளர்கின்ற காலம் இக்காலம் என்றதற்கு இறைவன் திருவருளுடைய காலம் நிகழ் காலம் என்றார். இதன் நுட்பம் நோக்கத் தக்கது. வாள் உறை கழித்து ஆனந்தமா கடலில் எறியும் பிறப்பைப் புரள இறைவன் எதிர்ந்தார் என்று கூட்டுக.

528. இனி, சிரடியார்கட்குச் சிவஞான மூல பண்டார மருளு கின்றமையைக் கூறும் (தி. - ன.) :—

காலமுண் டாகவே காதல்செய் துய்மின் கருதரிய
ஞாலமுண் டானெடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப் பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றுன்வந்து முந்துமினே.

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ! எற்றைக்கும் திருவரு ளுடைய காலம் பெறக் காதலாகிப் பிழையுங்கள். எவ்வகை என்னின், திருமால் அயன் கினவுக் கெட்டாதவன்; தேவர்கள் பொருந்த மாட்டாத விடத்தைத் திருப்போனகமாகச் செய்தருளிய பாண்டிய தேசத்தம்பிரானுன நாதன்; தனதடியவர்க்குச் சிவாகம மூலச் சிவஞான அன்புப் பொக்கிசத்தைப் பக்குவம்பெற அருளுகிற படியால், இச்சமயத்திலே சேர விரைவில் எழுந்து வருவீர்கள்—என அருளியதைக் காண்க. (5)

529. இனி, பரமுத்தி யருள்வதைக் கூறும் (தி. - ன.) :—

ஈண்டிய மாயா இருள்கெட எப்பொரு ளும்விளங்கத்
தூண்டிய சோதியை மீனவ னுஞ்சொல்ல வல்லனல்லன்
வேண்டிய போதே விலக்கிலை வாய்தல் விரும்புமின்ருள்
பாண்டிய ரருள் செய்கின்ற முத்திப் பரிசுதுவே.

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ! தூலவுடலிலே யானென தான ஆணவமாயை முதலிய பாசத்தார் விட, சடசித்திரண்டும் திருவருட் பிரேரகமாக எனதறிவில் விளங்க, பிரேரிக்கும் திருவருளன்புச் சோதியை, 'ஆட்பாலவர்க்கருளும் வண்ணமு மாதி மாண்பும் கேட்பான் புகிலளவில்லை கினக்க வேண்டா' (திருஞான. பதி. 312 : 4) என்ற அநுபூதியை நிட்டை கூடிய பாண்டிய இராசவடியருஞ் சொல்வதல்ல; மலபரிபாக சத்திநிபாதமொத்த பக்குவவான்மாக்கள் வேண்டிய அன்பிலே விலகாவண்ணம் அருள்வழி அநுக்கிரகம் செய்வதான சோமசுந்தர பாண்டியநாதன் இம்மையிலே அம்மை

---

528. காலம் உண்டாகவே - காலம் கிடைத்தபோதே என்றும் கொள்ளலாம்; உரையில் காட்டப்பெற்ற பொருளின் நயத்தை ஓர்க. கருதரிய என்பதனைக் காதல் என்பதனுடன் கூட்டிப் பொருள் கொள்க. ஞாலம் உண்டான் - திருமால். பண்டாரம் - பொக்கிஷம்.

முத்திக்குணம் இவையே உபதேசமென அருளியதைச் சம்பிரதாய வநுபூதி எனக் காண்க. (6)

530. இனி, வரையாதருள்வதாலே வரம்பிலின்பமுடைமையைக் கூறும் (தி. - ன.) :—

[1]மாயவ னேப்பரி மேல்கொண்டு மற்றவர் கைக்கொள வும்
போயறு மிப்பிறப் பென்னும் பகைகள் புகுந்தவருக்
காய அரும்பெருஞ் சீருடைத் தன்னரு ளேயருளும்
சேய நெடுங்கொடைத் தென்னவன் சேவடி சேர்மின்களே.

(இ - ள்). சிரடியார்களே ! கேண்மோ ; மாமாயா மாயப் பிரேரக நாதன் பரிமேல் எழுந்தருளி, எல்லா உயிரையும் அடிமைப்பணி கொள்வதாகையால் உங்களுடைய பிறவித் துன்பம் ஓடிக் கெடுமுண்மையாக ! அவனைத் திருவடி புகலாத அன்பு செய்தால் அவன் தனது திருவடிச் சீர்ச்சிறப்பின்ப வெல்லாச வாழ்வையும், அருட்கொடையையும் (கொடுப்பான் ;) விருப்பம் கிடைப்பதென பாண்டியநாதன் திருவடி சேர்மின்கள் ; என வருளியதைக் காண்க. (7)

531. இனி, எல்லா லோகு மருள்வதைக் கூறும் (தி. - ன.) : —

அழிவின்றி நின்றதொ ரானந்த வெள்ளத் திடையழுத்திக்
கழிவில் கருணையைக் காட்டிக் [1]கலக்கும் வினையகற்றிப்
பழமலம் பற்றறுத் தாண்டவன் பாண்டிப் பெரும்பதமே
முழுதுல குந்தரு வான்கொடை யேசென்று மூந்துமினே.

---

529. மீனவன் - பாண்டிய மன்னன் ; சுவாமிகள் காலத்திருந்த மன்னனைச் சுட்டியது ; 'அரசர்க்கும் அரியது' என்று அருமையைப் புலப்படுத்தச் சொல்வது வழக்கம். தாள் வாய்தல் விரும்புமின் ; வேண்டியபோதே விலக்கிலை ; பாண்டியனுர் அருள் செய்கின்ற முத்திப் பரிசு இதுவே என்று கூட்டிப் பொருள் கொள்க. தாள் வாய்தல் - திருவடி பெறுதல். வேண்டியபோது என்றதற்கு வேண்டுபவர் நிலையையும் குறித்துப் பொருளுரைத்தார். பாண்டியனுர் - கடவுள். பரிசு - குணம்.

பி - ம். 1. மாயவனப்பரி. மாயவண்ணப்பரி.

530. மாய வனப்பரி எனக்கொண்டு, காட்டிலுள்ள நரிகளே மாயத்தால் பரிகளாக்கி என்று பிறர் பொருள் கூறுவர். மாயவன் - மாயப் பிரேரகன். கைக்கொளல் - அடிமைப் பணி கொள்ளல். பகைகள் அறும் என்க. சேய நெடுங்கொடை - மிகப் பெரிய கொடை.

531. பி - ம். 1. கடிய.

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ! வற்றுத முற்றுத ஆனந்த வெள்ளத்து அறைகழலில் அத்துவிதமாகச் செய்து, பிரிவில்லாத திருவருளே உயிரறிவில் காட்டி, மாறுமலம் அகலச் செய்து, பற்றற நோக்கி, திருவருண் ஞானமே முழுதுலகுமாள்வ தான அன்பு அருள்வதானன்; அவ்வநுபூதிபெற விரைவிலே முந்தி நிட்டை கூடுங்கள்; பாண்டிய நாதனர் அநுக்கிரகம் செய்வர்; என அருளியதைக் காண்க. (8)

532. இனி, தன்னை மறந்து தன்னுமங் கெட்டு முன்னமவ னுடைய திருவடி புகலான (தி. - ன.) :—

விரவிய தீவினை மேலைப் பிறப்புமுங் கீர்கடக்கப்
பரவிய அன்பரை என்புருக் கும்பரம் பாண்டியனூர்
புரவிபின் மேல்வரப் புந்திகொ ளப்பட்ட பூங்கொடியார்
மரவியன் மேல்கொண்டு தம்மையுந் தாமறி யார்மறந்தே.

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ! சோமசுந்தரமாகிய பாரம்பரிய பாண்டியவிராசநாதன் திருவடியை அன்பால் அடி வணங்கிய அடியார் வினையும் அவற்றுலுளவாகிய எழுவகைப் பிறவி களும் தொலைவதாக உள்ளத்தின்கண் எழுந்தருளி உருக்கி அடிமை கொளப் போதப்பரிமேல் கொண்டெழுந்தருளிய திருவோலக்கத் திரு முன்பு வரும் பரிபக்குவ பேதை முதல் பேரிளம் பெண் ஈருகத் தரிசனமுற்றவர்கள் தம்மை 'மறந்தாள் தன்னுமங் கெட்டாள் தலைப் பட்டாள் நங்கை தலைவன் தாளே' என வருளியதைக் காண்க. (9)

---

531. ஆனந்தவெள்ளம் - திருவடிப்பேறு; அறைகழலில் அத்து விதமாகச் செய்தல் என்னூர். கழிவு இல் - பிரிவில்லாத. பழ மலம் - பழமையாகப் பிறப்புத்தோறும் வரும் மலம். பாண்டிப் பெரும்பதமே என்பதற்குப் பாண்டிய நாட்டை யாளும் பெரும்பதவியை மட்டுமேயன்றி என்றும் பொருள் கூறுவர். இங்கு உரையாசிரியர், 'திருவருண் ஞானமே முழுதுலகு மாள்வதான அன்பு' என்று கூறும் நுட்பம் நோக்கத்தக்கது.

532. விரவிய - கலந்த; பரந்த எனினும் ஆம். தீவினை, பிறப்பு ஆகிய கடல் என்க. பரவிய - தோத்தரித்த. புந்தி - புத்தி. மரவியல் மேல்கொண்டு - மரங்களாகி; உணர்விழந்து என்றபடி. அன்பரை என் புருக்கும் பாண்டியனூர் வர, பூங்கொடியார் தம்மை மறந்து தாம் அறியார் என்று கூட்டுக.

533. இனி, பரமசிவ சுந்தரரும் பராசத்தியும் அன்புடைய பாண்டிய விராசனுக்கு அநுக்கிரகம் செய்தமையைக் கூறும் (தி. - ன.) : —

கூற்றைவென் ரூங்கைவர் கோக்களை யும்வென் றிருந்
[தழகால்
வீற்றிருந் தான்பெரும் தேவியுந் தானுமோர் மீனவன்பால்
ஏற்றுவந் தாருயிர் உண்ட திறலொற்றைச் [1]சேவகனர்
தேற்றமி லாதவர் சேவடி சிக்கெனச் சேர்மின்களே.

(இ - ள்). சிரடியார்களே ! கேண்மோ ! சோமசுந்தர பாண்டியச் சொக்கேசர் நம்மை நிக்கிரகம் செய்ததுமன்றி, பஞ்சான்மாக்களுடைய பசுக்குணத்தையும் பஞ்சப்பிரம மந்திர சொரூபமாகவே அருளி, அம்மையப்பராகவே உயிரில் எழுந்தருளி, திருவோலக்கம் கொண்டதுமன்றி, தன் திருவடிக்கன்பு செய்யும் பாண்டியவிராசன் பேரிலே பகைத்து வரும் எதிராளியைத் தாமே எழுந்தருளிப் படைச்சேவகம் செய்து வெற்றி கொடுத்தருளிய நாதன்; அவன் திருவடியைத் தெளிவில்லாதவர்களே ! விரைவிலே தரிசனம் செய்வீர்கள் என வருளியதைக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்.

பி - ம். 1. சேவகனே.

533. ஐவர் கோக்கள் - பஞ்சேந்திரியர்களாகிய அரசர் என்றும், கூற்றுவனுக்குரிய சித்திரகுப்தன், மிருத்யு, அந்தகன், காலன், மாலி என்னும் தலைவர்கள் என்றும் பிறவாறும் பிறர் பொருள் கூறுவர். இங்குக் கூறப்பெற்ற உரையின் அருமையைத் தேர்க. மீனவன்பால் ஏற்றுவந்தார் உயிருண்ட திறலின் வரலாறு ஆராயத் தக்கது. ஒற்றை - ஒப்பற்ற. சேவகன் - பகைப்புலம் எதிர்த்தமையைச் சுட்டியது. தேற்றம் - தெளிவு. சிக்கென - விரைவாக.

37. பிடித்த பத்து

இனி, பிடித்த பத்தாவன.

அகத்தியச் சூத்திரம்.

நடித்த பாதம் பிடித்த பத்து
சித்த மலமறு முத்திக்கலப் புரைத்தல்.

பொழிப்புரை—

முற்பதிகத்தில் அருளிய அநுபூதியில் பேரானந்தப் பெருங் கடல் அமுதமாராதருந்தி அதன் மேற்கொண்டு பெற்ற இன்பவன் பாகி, மற்றொன்றறியா வியாபக வகையால் அதனுளடங்கிச் சிவானந்த சுவாநுபூதி அதுவாய்ப் பெறுதலால், பரத்தைத் தேடும் பண்பிலை என்ற அத்துவிதக் கலப்பநுபூதிகம் அன்பாற் காண்க.

இப்பதிகம், ஆசிரிய விருத்தமாகப் பன்னிரு திருநாமம் பெற்ற திருத்தோணிபுரத்தில் ஓதியது.

534. இனி, திருவடியே பற்றுக்கோடானதென்ற (தி. - ன.) :—

உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் றனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

திருவாசக திருவுள்ளக்கிடை : முத்திக்கலப்புரைத்தல் எ - து. மற்றுள்ள ஆன்மாக்களுக்கு முத்தியின் சுகத்தைச் சொல்லியது.

திருவாசகச் சிறப்பு :—

மிக்கபிறவித் துயரெலா மொழித்து விபுத்துவ மிங்களித்தலாலே
பிக்கறச்சிக் கெனப்பிடித்தே னுன்னையென்று துணிவுசெப்பல்

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; மகாதேவனே! தேவரீர் வானவரிறைவன், நீக்கமின்றிச் சருவ வியாபக சச்சிதானந்த சிவயோகன்; என்புலாலுடம்பே உண்மை கொண்ட பாவிக்கு அருள்பழுத்தளிந்த கருணைவான் கனியாக அன்புருவாகி என் குல கோத்திரமான முழுமையும் அடிமை செய்து வாழ்வில்லாத பேரின்ந்த சுகமருளிய பிறவிப் பிணிக்கோர் மருந்தே! சிறப்பென்னும் செம்பொருளான அறிவே! தெளிவான பொருளே! திருவடியே திருவருட் செல்வமே! எல்லாத் தேவரிலும் சிறந்த பரம சிவனே! அடியேன் பொருட்டுத் தேவரீர் திருவுருவான திருவடியே பரமெனக் கருணை வழக்கால் திருவருளே துணையாகப் பற்றுக் கோடுற்றேனே. என்னுயிரை விட்டு எங்கே எழுந்தருளுவது இனி?— என வருளியதைக் காண்க. (1)

535. இனி, எங்கேயிருப்பினும் யாதாகின்றேனுனுலும் இங்கே வந்தருள் புரிய வேண்டுமென்ற (தி. - ன.):—

விடைவிடா துகந்த விண்ணவர் கோவே
விஞையனே னுடையமெய்ப் பொருளே
முடைவிடா தடியேன் மூத்தற மண்ணுய்
முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து
கடைபடா வண்ணங் காத்தெனை ஆண்ட
கடவுளே கருணைமா கடலே
இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

(இ - ள்). ஆண்டவனே! விடையுடையாய்! மகாதேவா! என்னிடர்களைவாய்! சத்தியபோத ஞானவன்பே! ஓர் விண்ணப்பம்; அடியேன் நாற்றமேயுற்ற அறக்கிழவனுக, மண்ணுய்ப் புழு நிரம்பிய உடலில் கிடக்கும் கடையேனை, அக்கடை வண்ணமாகாமல் மறவாது காக்கும் அடிமைப்பணி கொண்ட கடவுளே! பெருங்கருணைக்கடலே! இடைவிடாதுன் திருவடியே பற்றுக்கோடானேன்; இனி என்னுயிர்க்ககன்று நிற்பதெங்கே? என அருளியதைக் காண்க. (2)

---

534. ஒழிவற - நீக்கமின்றி. ஊற்றை - ஊஞலான உடம்பைக் கொண்டவன்; ஊத்தை எனினும் ஆம். வம்பு - புதுமை. வாழ்வு அற - இவ்வுலக வாழ்வு நீங்க. என்பொருட்டு, எதுகை நோக்கி எம்பொருட்டு என்று மாறிற்று.

535. விடை - இடபம். முடை - புலால் நாற்றம், அறமூத்து - நன்முகப் பிராயம் முதிர்ந்து. மூத்து அற - முதிர்ந்து அற்றுப்போக என்றும் கூறலாம். மண்ணுய் - மண்ணுகி. குரம்பை - உடல்.

536. இனி, திருவடி அன்பே யின்பான தென்ற (தி. - ன.):—

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தவா ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; சடசித்தெங் கணும் பிரேரகமாகிய சத்திசிவ சொரூப அம்மையப்பரே! உலகுக்கு அம்மையப்பராகிக் கருணை செய்வோய்? ஒப்புவமையற்ற தனித்த இரத்தின சிவச்சோதியே? ஆனாலும், அன்பினில் விளையும் பேரின்ப வமிர்தக்கட்டியே! அடியேன் உண்மை வினவில், அநித்திய தேக வாழ்வைப் பெரிதாகக் கொண்டு, நற்பொழுதைச் சுருங்கத் துர்விஷய காலமே பெருக்கி, அவற்றால் தேகம் புழுத்தலையும் புலைய னான பாவி; எனக்குத் திருவுளமிரங்கிப் 'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பதாக' அறிவை அருளிய சிவபதமே! ஞானச்செல்வோய்! சிவபெருமானே! இவ்வுட லிலே பரமுத்தி யருள்வதாகத் திருவடிப் பற்றுக் கோடானேன். இனி எங்கே எழுந்தருளுவது? எனவே யான் அடிமையகன்று நிற்ப தெங்கே? அவன் அருளென்னுயிரிற் பிரியாவண்ணம் என் வண் ணம் அவ்வண்ணம் என அருளியதைக் காண்க. (3)

537. இனி, பேதைப் பருவத்திலே தானே தன்னை யாண்ட மையைக் கூறும் (தி. - ன.) :—

அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே
பெருந்திற லருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே

---

536. புழுத்த அலை புலையன் என்க. பிறப்பென்னும்.....காண் பது (திருக்குறள்).

தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெரு மானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; நாதனே! தேவ ரீரோ, பெருங்கருணை யின்பவொளியே! அறிவிலானந்தக் கனியே! எல்லாத்தேவ பலத்துக்கும் மேலான வல்லமையனே! வேதாகம நீதி தவறுத அன்புத் தவமுடையார்க்கிறையே! கலைஞானக் காதலனே! பசு போதத்துக்கெட்டாத சிவானுபோகமே! சிவயோகக் காட்சியே! தெளிவுடைய சிரடியாருள்ளமே இடமான ஞானச்செல்வமே! சிவ பெருமானே! அடியேன் அறியாமையான பேதைப்பருவத்திலே விரைவிலே, இனிப்பெறும் பொருளாகப் பற்றுக் கோடானேனே! அறிவாயாலல் வேறுபட்டெழுந் தருளுவதுளவோ இனி?—என அருளியதைக் காண்க. (4)

538. இனி, ஓர் திருவடியே ஒப்பில்லாத உண்மையென்ற (தி. - ன.) :—

ஒப்புனக் கில்லா ஒருவனே அடியேன்
உள்ளத்து ளொளிர்கின்ற ஒளியே
மெய்ப்பத மறியா வீறிலி யேற்கு
விழுமிய தளித்ததோர் அன்பே
செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெரு மானே
எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவடி ஞானக் கருணையை வினவில், ஓர் விண்ணப்பம்; தெண்ணிலாவணிந்த வேணியர்க்கொப் பெனச் சிலரை யெண்ணினுல் நரகம் விட்டேறுவருளரோ? அறிவே சொரூபமான ஏகபரப்பிரமமே! அடியேன் கருத்தில் என் அறிவாய் விளங்கும் ஞானப்பிரகாசமே! சத்திய போதம் திருவருளே யென

---

537. சுடர் - இன்ப ஒளி. அளித்தது - பழுத்தது. தவர்க்கு - தவஞ் களுக்கு. தெருள் - தெளிவு. இருளிடத்து - அறியாமைப் பருவத்து; பேதைப்பருவத்து.

அறிவிலாத எற்கு மெய்ப்போத இன்பம் அருள்வதான அன்புரு வமே! வாக்கிறந்த பரஞ்சுடருருவே! அருட்செல்வமே! சிவபெரு மானே! அடியேன் சுதந்தர வீனலுகி அடிமையுற்றேனே! இனிச் சருவ சுதந்தர சுவாமி, வேறெழுந்தருள்வது எவ்விடம்? என அருளி யதைக் காண்க. (5)

539. இனி, சருவ சங்க நிவிர்த்தியான தபோதனர்க்குச் சாக் கிரத்தில் அதிதம் விளைவதான (தி. - ன.) :—

அறவையேன் மனமே கோயிலாக் கொண்டாண்
டளவிலா ஆனந்த மருளிப்
பிறவிவே ரறுத்தென் குடிமுழு தாண்ட
பிஞ்ஞகா பெரியவெம் பொருளே
திறவிலே கண்ட காட்சியே அடியேன்
செல்வமே சிவபெரு மானே
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; அடியேன் சிந் தைப் பாழறையைப் பள்ளியறையாகக் கொண்டு, என்னுயிரை அடி மையாகச் செய்து, பேரானந்தமருளி, மலபோதச் சனனத்தை ஒழியச் செய்து, என் குலமுழுதும் அருட்பணிக்காக்கிய பிஞ்ஞகனே! யாவர்க்கும் பெரிதான என்னுடைய உயிரே! சாக்கிராதீதத்தில் விளைந்துறு வின்பமே! அடியேன் கண்காட்சியான செல்வமே! சிவனே! நாலே, அநாதியே திருவடி பற்றுக்கோடானவன்; ஆன தால் அடிமையுற்றேன்; இனி, அடிமையுடைப் பேரருளாளர் ஆள் வதற்கோர் பொருளுளவோ, எவ்விடத்தேனும்? என வருளியதைக் காண்க. (6)

---

538. ஒப்புனக்கில்லா ஒருவனே என்பதற்கு உரையாசிரியர் எழுதிய உரைவிளக்கம் காண்க. வீறி இலி - பெருமையில்லாதவன். விழுமியது - சிறந்தது; மெய்ப்போத இன்பம். எய்ப்பு - இளைப்பு.

539. அறவையேன் - ஆதரவற்றவன்; அன்பற்றவனுமாம். திற வீலே வெளிப்படையாக. இறவு - இறுதி.

540. இனி, அன்பூடுருகப் பணியாத என்பூசையையும் கருணையாக் கொண்டமையைக் கூறும் (தி. - ன.) :—

பாசவே ரறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை உகந்தென் [1]சிந்தையு ணின்று
பூங்கழல் காடடிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெரு மானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர், விண்ணப்பம்; அடியேனுடைய மூலமலவேரை அறுத்து, அதற்கு மூலமாகிய திருவடி ஞானப்பொருளை அன்பால் பிரிவில்லாத் தொடர்ச்சி காட்டி, அவ் வருளாற் பூசிப்பதே நியமமெனவருளி, என் சிந்தை நின்றனக்காக்கி, அபேதவத்துவிதக் காட்சியான அடிஞானங் காட்டிய நாதனே! ஞானப்பிரகாசமான அறிவே! சோதிக்குட் சோதியான இன்பமே! சிவபெருமானே! ஈசனே! தேவரீர் திருவடியே பற்றுக்கோடானேன். இனிப் பிரிவதுளதோ? எவ்விடம் எழுந்தருள்வது? என அருளியதைக் காண்க. (7)

541. இனி, அடியாருள்ளத் தன்புருவானமையைக் கூறும் (தி. - ன.) :—

அத்தனே யண்ட ரண்டமாய் நின்ற
ஆதியே யாதுமீ றில்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெரு மானே
பித்தனே எல்லா வுயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை யல்லையாய் நிற்கும்
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

பி - ம். 1. சிந்தையுட் புகுந்து.

540. அறுக்கும் பழம்பொருள் என்பதற்கு அறுத்து, காட்டி என்று விரித்துப் பொருள் கூறுகின்றார்.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; எல்லா ஆன்மாக்களுக்கும் நாதனுகிய குருவே! அண்டமனைத்தையுமேவிய கொண்டல் போல நின்ற குறைவிலா ஞானமே! ஆதியே! பற்றற்ற சித்தனே! அடியாரன்பால் விரைவே பணி செய்யும் அருட்செல்வமே! சிவனே! ஞானமே பொருளாகவுடைய பித்தவுருவே; எல்லா வுயிரும் வடிவாக நிறைந்தோய்! குணரகிதமாக நிற்கும் கருணையனே! தேவரீர் திருவடியே என்னுயிர்க் குணமெனப் பற்றுக் கோடென்றேன் விரைவாகவே; இறைவரல்லாத குணங்களுண்டோ? எவ்விடமெழுந் தருளுவது? அருளாய்! என அருளியதைக் காணக. (8)

542. இனி, தாயினு நல்ல தயாவுடையன் என்ற (தி - ன.) :—

பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர், அடியேற்கு, அழுவதான பாலகன் கருத்தும் காலமும் அறிந்து முலைப்பாலூட்டும் தாயைவிட மிகவும் கருணை யிரக்கத்தால் பாவியினுடைய உடலையும் உயிரையும் உருகச்செய்து, அவ்வறிவில் ஆனந்தமான சிவானுபோகத் தேனை விடாதளித்து, வேருகாமல் அபேதமான ஞானச்செல்வமே! சிவபெருமானே! அடியேன் திருவடியே உயிர்ப்பொருளென அதிமேதையாய் வியாப்பியமானேன். இனி வேறு வியாபகமாக எழுந்தருளுவதோ திருவுளம்? என அருளியதைக் காண்க. (9)

---

541. அண்டர் அண்டமாய் நின்ற - அண்டருமாய் அண்டமுமாய் நின்ற என்னும் பொருள் கொள்ளலாம். உரை வேறு பொருள் கூறுகின்றது. எல்லா உயிருமாய்த் தழைத்து, பிழைத்து, அவை அல்லையாய் நிற்கும் எத்தனே என்க. தழைத்து - வளரச்செய்து. பிழைத்து - தண்டித்து. பிழைத்தவை அல்லையாய் என்றும் கூட்டிப் பொருள் உரைக்கலாம். எத்தன் - உபாயமுடையன்.

542. பரிந்து - இரக்கங்காட்டி. உலப்பிலா - அழிவில்லாத. புறம் புறம் திரிந்த செல்வமே - வேருகக் காட்டி வேருகாமல் அபேதமாய் நின்ற செல்வமே.

543. இனி, உள்ளமே சொர்னக் கோயிலாகக் கொண்டமை யைக் கூறும் (தி. - ன.) :—

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியையா யாண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம்
தொடக்கெலாம் அறுத்தருட் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; தேவரீர் கரு ணையை அநுபூதி பெறுவதில் புதிது புதிதாக ஈற்றமுடைய தேகத் தைத் தொளையிட்டுள்ளே உருகிக் கரைய அன்பால் பொன்போன்ற அம்பலத்தும் உள்ளத்தும் பெருகுதலான கோயிலாகக் கொண்டு என்னுயிரில் எழுந்தருளி நெக்கு நெக்காக உருகச்செய்து, அறி விலாத உயிரை அறிவு விளங்கி அடிமைப்பணி கொண்ட ஈசனே! மாசிலா இரத்தினவொளியே! துன்பமாகிய மயக்காலுளதான பிறவி பந்தறுக்கிய அறிவில் ஒளியே! சிவானந்த போகமே! தேவரீர் திரு வடிக் கடிமையானேன். இனிப் பிரிந்தெழுந்தருளுவது எவ்விடம்? என அருளியதைக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்

---

543. புரை புரை கனிய - துவாரந்தோறும் நெகிழ. யாக்கையைக் கோயிலாகக் கொண்டு என்பது குறிப்பு. தொடக்கு - பந்தம்.

38. திருவேசறவு

இனி, திருவேசறவுப் பத்தாவன :—

அகத்தியச் சூத்திரம்.

பாசமதறு திருவேசறவு பத்தெட்
டனைநீங்காச் சுட்டறிவொழிதல்.

பொழிப்புரை—

முற்பதிகத் திருவுளச் சிவாநுபூதி அருளி, சுவாநுபூதிகமாக மலமே உண்மையாய் மருவுமென்னைப் பலவிதம் அருளாற் பாதுகாத்து, தானே நானென்னுந் தன்மை தருதற் கடாதிருந்தும், எனை ஆட்கொண்டு அன்பே இன்பாக்குதலின் எளிதாவென்று, தன்னிழற்பதனை அருளால் சாதித்த துரைத்தலெனக் காண்க.

திருப்பதிகம் [1]கலி விருத்தமாகத் திருப்பெருந்துறையில் ஓதியது.

544. இனி, நிலையைக் குதிரையாகத் திருவுளம் செய்த (தி. - ன.) :—

இரும்புதரு மனத்தேனை ஈர்த்தீர்த்தெ னென்புருக்கிக்
கரும்புதரு சுவையெனக்குக் காட்டினையுன் கழலிணைகள்
ஒருங்குதிரை யுலவுசடை உடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரை யாக்கியவா றன்றேயுன் [1]பொன்னருளே.

---

1. கொச்சகக் கலிப்பா என்று அச்சு நூல்கள் கூறும்.

திருவாசகத் திருவுள்ளக்கிடை :—சுட்டறிவொழிதல் எ - து. தன் செயலற நிற்றல்.

திருவாசகச் சிறப்பு :—

தக்கபரி யாய்நரியை யாக்குதல்போ லெனைப்பெரிதாய்த்
[தாக்கித்தாட்கீ
ழக்கணம் வைத்தனையே யென்றிரங்கு நிருவே சறவென்
[றியம்பலாமே.
(பழையபுராணம்)

544. பி - ம். 1. பேரருளே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; தேவரீர் பெருங் கருணையான இரக்கத்தால் அடியேன் மனம் இரும்பு போல்வதை, என் மனம்போன வழிவிட்டுத் திரும்பத் திரும்ப இழுத்து, அன்புரு வாக்கி, கன்னலின் சுவைபோலத் திருவடியை என்னுயிரில் காட்டறி வாக நின்று காட்டிய, கங்கைத் திரையனைய உலவும் திருச்சடை யானே! அடியேன் பக்குவம் பெறுவதாக, நரியான விஷயங்கள் பெரும்போதப் புரவியாக அருளிய திருவருட்கு என் செய்வேன்! என வருளியதைக் காண்க. (1)

545. இனி, சிரடியார்க்குப் பேரின்ப மளித்தமையைக் கூறும் (தி. - ன.) :—

பண்ணூர்ந்த மொழிமங்கை பங்கா [1]நின் னருளாளூர்க்
குண்ணூர்ந்த ஆரமுதே உடையாளே யடியேனை
மண்ணூர்ந்த பிறப்பறுத்திட் டாள்வாய்நீ வாவென்னக்
கண்ணூர [2]வுயர்ந்தவா றன்றேயுன் கழல்கண்டே.

(இ - ள்). ஆண்டவனே! பண்ணினேர் மொழியாள் பாக! நினது திருவடி சேர்ந்தார் உள்ளிருக்கும் பேரின்பமிர்தே! அநா தியே என்னை யுடையவனே! அடியேன் பிறவியை அறுத்து அடிமை செய்யாயோ? தேவரீர் திருவடி கண்டேனே! வாவென அழையாயோ? யாவர்க்கும் மேலோய்! என அருளியதைக் காண்க. (2)

---

544. இரும்பு - வன்மை, ஒளியின்மை, எளிதில் உருகாமை யாகிய பண்புகள் பெற்றது. ஈர்த்து - இழுத்து. திரை ஒருங்கு உலவும் சடை என்க.

பி - ம். 1. நின்னருளாளூர்க் 2. வுய்ந்தவா.

545. உண் ஆர்ந்த ஆர் அமுதே - உண்ணுதலமைந்த அமுதே, உள் ஆர்ந்த என்பதன் திரிபாகக் கொண்டு பொருளுரைத்தார். மண் ஆர்ந்த பிறப்பு - பூமியிற் பொருந்திய பிறப்பு. கண்ணூர உயர்ந்தவாறு - பிரத்யக்ஷமாக நான் உயர்ந்த தன்மை (வியப்பானது) என்பது நேர் பொருள். யாவர்க்கும் மேலோய் என்று பொருள் கூறினர்.

546. இனி, பரமசிவன் திருவடி காட்டிய பெருமையைக் கூறும் (தி. - ன.) :—

ஆதமிலி யான்பிறப் பிறப்பென்னும் அருநரகில்
ஆர்தமரும் இன்றியே அழுந்துவேற் காவாவென்
றேதமலி நஞ்சுண்ட வுடையானே அடியேற்குன்
பாதமலர் காட்டியவா றன்றேயெம் பரம்பரனே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; அடியேன் அறிவிலாமையால் பிறப்பிறப்பென்னும கொடிய நரகத் துன்பப்படுவேற்கு-கேளிரைக்காணேற்கு—அக்காலத்தில் இரங்கித் திருவுளத்தால் அழைத்த நாதா! நஞ்சைத் திருப்போனகமாகச் செய்தோய்! அடியேற்குத் தேவரீர் திருவடித் தாமரை காட்டிய குல கோத்திர பரம சிவனே! என அருளியதைக் காண்க. (3)

547. இனி, சிறு தெய்வம் பணியாத (தி. - ன.) :—

[1]பச்சைத்தா ளரவாட்டீ படர்சடையாய் பாதமலர்
உச்சத்தார் பெருமானே அடியேனே உய்யக்கொண்
டெச்சத்தார் சிறுதெய்வம் ஏத்தாதே அச்சோவென்
சித்தத்தா ருய்ந்தவா றன்றேயுன் திறமினைந்தே.

(இ - ள்). சத்தியபோத ஆடரவக் கிண்கிணிப் பாதனே! சருவ வியாபகத் திருச்சடையோய்! தேவரீர், திருப்பாதம் உயர்ந்தோர் திருமுடிமேல் தரிக்கும் பெருமானே! அடியேனே இரட்சிப்பதே கருணையெனத் திருவுளங் கொண்டு, குறைபாடுடைய செத்துப்பிறக்கும் சிறு தெய்வத்தை வணங்காதே என்னுயிர் பிழைப்பதாக திருவடித் தியானம் செய்வதே பொருளென அருளிய பெருங்கருணை இரக்க மொழிய வேறு காணேன்—என அருளியதைக் காண்க. (4)

---

546. ஆதம் - ஆதரவு; ஆஆ, என்றது இரக்கக் குறிப்பு.

1. பி - ம். பச்சைத் தாலரவு.

547. பச்சை தாள் அரவு ஆட்டி - பசுமையான புற்றிலுள்ள பாம்பை அசைப்பவனே என்றும் பொருள் கூறுவர். அரவத்தாலாகிய கிண்கிணியை அசைத்தவன் என்று உரை கூறுகின்றார். உச்சத்தார் - உயர்ந்தோர். எச்சத்தார் - குறைபாடுடையார். சித்தத்தார்; ஆர், உபசார வழக்கு.

548. இனி, பிற தெய்வ முண்டெனக் கொள்ளாத (தி. - ன.):

கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் [1]பிறதெய்வம் வாக்கியலால் வார்கழல்வந்
துற்றிறுமாந் திருந்தேனெம் பெருமானே யடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமா [2]றன்றேயுன் பொன்னருளே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் அருளிய பரஞானமான சிவாகமக் கலைஞானங்களைக் கற்றறியாது, அவற்றுளுள்ளதாகிய பரஞான சிவாநுபோகத்தால் கசிந்துருகாதவனுமும், திருவடியன்றி வேறு தெய்வமுண்டெனக் கொள்வதறியேன்; வாசகத் தொடர்ச்சியால் யாவர்க்கு மேலாயுள்ள திருவடியைக் கண்டிறுமாப்புடையனானேன்; பெருமானே! அடியேற்கு அருளிய வண்ணம் வினவில், நாய்க்கு இரத்தினவிரணிய சிம்மாசனமளித்தால் அவ்விடம் அதற்குத் தெரியுமோ? அவையொப்பேன்; உனது இரணியகோசத் திருவடி காட்டியருளியது; என வருளியதைக் காண்க. (5)

549. இனி, பெண் வலையிலகப்படாது உண்மை ஞானம் காட்டிய (தி. - ன.):—

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணில் இடர்ப்பட்டு
நஞ்சாய துயர்கூர நடுங்குவேன் நின்னருளால்
உய்ஞ்சேனெம் பெருமானே யுடையானே யடியேனை
அஞ்சேலென் றாண்டவா றன்றேயம் பலத்தமுதே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; பஞ்சுபோல மெல்லிய பாதமுடைய வஞ்சப்பெண்ணில் துன்பமுற்று விடம் புசித்த வனைப்போல நடுங்குவேன்; தேவரீர் கருணையால் பிழைப்புறுவதானேன்; என்னை யுடையவனே! அடியேனை முற்போந்த பயம் நலியாதபடி அடிமை கொண்ட மணி மன்றுளாடும் பெரிதான அமிர்தமே! என அருளியதைக் காண்க. (6)

பி - ம். 1. பிறர் தெய்வம் என்று எட்டில் காணப்படுகிறது.
2. அன்றேநின்.

548. வாக்கு இயலால் - நின் அருள் வாக்கின் தன்மையால் என்க.

549. பஞ்சாய அடி, செம்பஞ்சூட்டிய அடி என்றும் பொருள் கொள்ளலாம். உய்ஞ்சேன் - உய்ந்தேன்; பிழைத்தேன்.

550. இனி, தட்சிணத் திக்கிலே திருவருணேக்கினமையைக் கூறும் (தி. - ன.) :—

என்பாலைப் பிறப்பறுத்திங் கிமையவர்க்கு மறியவொண்ணைத்
தென்பாலைத் திருப்பெருந் துறையுறையுஞ் சிவபெருமான்
அன்பானீ யகலெகவே புகுந்தருளி யாட்கொண்ட
தென்பாலே நோக்கியவா றன்றேயெம் பெருமானே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; அடியேன் இனிப் பிறவாவண்ணம் செய்து வானேரும் அறியாத உண்மையை என் பொருட்டு (அநுக்ரகித்த) திருப்பெருந்துறைப்பதி மேவும் சிவனே! அடியேற்கன்புருகச் செய்ய, அருள்வதே நியமமாகத் தென்றிசைத் திருநோக்கஞ் செய்த திருவருளுக்கு என் செய்வேன்! என அருளியதைக் காண்க. (7)

551. இனி, வேத முதல்வனனவன் என்னும் (தி. - ன.) :—

மூத்தானே மூவாத முதலானே முடிவில்லா
வோத்தானே பொருளானே உண்மையுமா யின்மையுமாய்ப்
பூத்தானே புகுந்திங்குப் புரள்வேனைக் கருணையினாற்
பேர்த்தேநீ யாண்டவா றன்றேயெம் பெருமானே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; யாவர்க்கும் முன்னவனே! முத்தொழிலுடையோர்க்கு மூன்றிலொன்றான ருத்திர முதல்வனே! பஞ்சகிர்த்தியத்துக்கு மேலான அளவிலாத வேதப் பொருளானே! இப்பிரபஞ்ச வடிவாயும் அவ்வடிவில பற்றின்றியும் நிற்கும் உற்பத்தி வியாபகனே! இப்பிரபஞ்ச வயமாயிருப்பேனை பெருங்கருணையால் ஆண்ட கற்பகத்தின் பூங்கொம்பே! என அருளியது.

அன்றே அசை எனக் கொள்க. (8)

---

550. என்பால் ஐ; ஐ சாரியை. இமையவர்க்கும் அறிய ஒண்ணை என்பதைத் தென்பாலைத் திருப்பெருந்துறை என்பதனோடும் கூட்டிப் பொருளுரைத்தலும் ஆம்; அல்லது சிவபெருமான் என்பதோடும் கூட்டலாம். ஆட்கொண்டது என்பாலே நோக்கியவாறு என்றும் பிரித்துக் கொள்வர்.

551. மூவாத முதலானே - மூத்தலில்லாத மூலப்பொருளே. மூன்றிலொன்றான ருத்திர முதல்வனே என்று பொருள் உரைக்கின்றார். ஓத்து - வேதம். பேர்த்து - மாற்றி. கற்பகத்தின் பூங்கொம்பே என்ற உரைப்பகுதிக்கு மூலத்தில் சொல் இல்லை.

552. இனி, திருவிடை மருதே இடமானதென்ற (தி. - ன.):

மருவினிய மலர்ப்பாதம் மனத்தில்வளர்ந் துள்ளுருகத்
தெருவுதொறு மிகவலறிச் சிவபெருமான் என்றேத்திப்
பருகியகின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமா
றருளெனக்கிங் கிடைமருதே இடங்கொண்ட அம்மானே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; தேவரீர் திருவடி வியாபக வாசனையும் அருளின்பமுமுடையது, அடியேன் மனமுருக உள்புகவே அடியேன், 'சிவனே! சிவனே!' யெனத் தெருக்கள் தோறும் ஓலமிட்டலறித் துதித்தும், சிவானுபூதியாகியும், நினது திருக்கருணைக் கடலிற்படியத் திருவுளங் கண்டு திருவிடை மருதப் பிரான் கழல்மேவுதல் செய்தவப்பயனே! என அருளியதைக் காண்க.

553. இனி, பஞ்சாக்கர நிட்டை யநுபூதி கூறிய (தி. - ன.):—

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்
தேனுயின் னமுதமூமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனுரு முயிர்வாழ்க்கை யொறுத்தன்றே வெறுத்திடவே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; நாதனே தேவரீர் திருநாம வுபதேச நிட்டைபெற என்ன புண்ணியஞ் செய்தனனே? அறியேன், மலத்திரோதம் நீங்கித் திருவருட் கருணை இன்பம் என்னுயிரில் அமிர்தாய்க் கருப்பூர ரசக்கட்டியாத் தித்திப்பதானன்; அடியேன் முயற்சி செய்யாது உளம் புகுந்தான்; அடியேற் கருளினன்; திருவடியைப் பெற்றும் ஊனுயிரின்பம் வெறுக்காது துன்புற்றேன்; என் செய்வேன்? என்று அருளியதெனக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்

---

552. மரு - வாசனை. படிவாமாறு - படியும்படி; அருள் - அருள்க என்பது. இடைமருதே இடங்கொண்ட அம்மான் என்பது சிவபிரானைக் குறிக்கும்.

553. சிவாயநம என - திருநாம உபதேச நிட்டைபெற. உயிர் வாழ்க்கையை வெறுத்திட அருள் செய்தான் என்று கூட்டுக. உரை வேறுவிதமாகப் பொருள் கூறுகின்றது.

39. திருப்புலம்பல்

இனி, திருப்புலம்பல்

அகத்தியச் சூத்திரம்.

சாக்கிராதீதத் தனித்திருப் புலம்பல்
நீக்கமிலாத சிவானந்தநிலை.

பொழிப்புரை யநுபவம்—

முற்பதிகத்திற் சுட்டறி வொழிந்து அதுவாய்ப்பெற்ற பேரின்பப் பொருளாகி மற்றென் றறியேன் என்னுமாநந்தம் பெற்றதற்கு உருக்கம் பெற்றிலே னென்ற சிவானந்தாநுபூதிகம். [1]கலிவிருத்தமாக, செல்வத் திருவாசூரிலோதியது.

554. இனி, மற்றுப்பற்றன்றித் திருவடியே பற்றுணதென்ற (தி. - னை.) :—

பூங்கமலத் தயனெடுமால் அறியாத தெறியானே
கோங்கலர்சேர் குவிமுலையாள் கூறுவெண் ணீறுடி
ஓங்கெயில்சூழ் திருவாசூ ருடையானே [1]அடியேனுன்
பூங்கழல்க ளவையல்லா தெவையாதும் புகழேனே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; தேவரீர் பொற்பாத சேர்வை திருமாலயனுங் காணெண்ணுது; கோங்கமலர் குவிதற் போல வற்றது முற்றது ஞானத் தனமுடைய அம்மை பாகனே! நீறணி கடவுளே! உயர்ந்த மதில் சூழுஞ் செல்வத் திருவாசூரொளி

---

1. கொச்சக் கலிப்பா என்று அச்சுப்பிரதிகள் கூறும்.

திருவாசகத் திருவுள்ளக்கிடை: சிவானந்த முதிர்வு. எ - து. சிவானந்தம் பெரு விச்சை.

திருவாசகச் சிறப்பு:

கரைந்துருகும் பேரன்புன் கழலிணைக்கே கற்றுவின்
[மனம்போலென்றுங்
திருத்தும்வகை யெனக்கருள்க வெனக்கேட்ட திருப்புலம்பலாகும.

(பழைய புராணம்)

554. பி - ம். 1. அடியேனின்

வளர் புற்றிடங்கொண்ட வீதி விடங்கா ! நினது ஆடரவக் கிண்கிணி பாதமே கதியெனப் புகழ்வேன் ; அல்லது வேறு யாதோருருவையுங் காணேன் ; துதியேன் ; என அருளியதைக் காண்க. (1)

555. இனி, விடையுடைய சடையுடைய நாதனே உயிர்ப் பொருளென்ற (தி. - ன.) :—

சடையானே தழலாடீ தயங்குமூ விலைச்சூலப்
படையானே பரஞ்சோதீ பசுபதி மழவெள்ளே
விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையா யடியேனுன்
உடையானே உனையல்லா [1]லுறுதுணைமற் றறியேனே.

(இ - ள்). ஆண்டவனே ! ஓர் விண்ணப்பம் ; சருவ வியாபகத் திருச்சடையுடையோய் ; என் வினை எரியும்படி தழலுடையோய் ! முச்சத்தி மூன்று கவராகப் பிரகாசிக்குஞ் சூலப்படையோய் ! பரம சிவனே ! பசுவுக்குப் பதியோய் ! புண்ணிய விடையோய் ! தேனமர் சோலை சூழ்ந் திருப்பெருந்துறைக் குருமணியோய் ! என்னை அநாதியே அடிமையாக வுடையோய் ! அடியேற்கு உனது பாதமன்றி வேறு துணை காணேன் ; என அருளியதைக் காண்க. (2)

556. இனி, சாக்கிராதீதத்திலே விளைவான அன்பே பரமுத்தி பெறுவது என்ற (தி. - ன.) :—

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் [பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவு மினியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

(இ - ள்). ஆண்டவனே ! ஓர் விண்ணப்பம் ; அடியேற்குத் தந்தையர், தாயார், சுற்றத்தார், வந்தவர் போமா றெங்கே ? இவை

---

554. நெறி - தத்துவம். கூறு - பாகனே. யாதும் - ஒரு சிறிதும் என்றும் கொள்ளலாம்.

பி - ம். 1. துறுதுணை.

555. மழ - இளமையான. உறு - பொருந்திய.

இன்பமாகக் கொள்ளேன். பேர் ஊர் விரும்பேன்; கற்ரூரை விரும் பேன்; கற்ற மட்டுங் கல்வி நிற்க; இவைகளல்லாது அடியேன் வேண்டுவதென் னெனில், திருக்குறுமுலப்பதியான சித்திர சபையிலே நடனஞ் செய்யுஞ் சுவாமி! தேவரீர் திரு நாம வொலி பெருகுந் திரு வடிக்கே, கன்றைத்தேடும் பசுப்போல, அன்பையும் அவைக்குக் காரணமான அருட் கசிவான உருக்கத்தையும் வேண்டி, தாயினேரி ரங்கும் தலைவரோ! தமியனேன் துணைவரோ! நாயினேன் இருந்து புலம்புவனே யொழிய, வேறு காண வேண்டுவ பயனில்லை; என வருளியதைக் காண்க. (3)

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

40. குலாப் பத்து

இனி, திருக்குலாப் பத்தாவன.

அகத்தியச் சூத்திரம்.

பாரம்பரை மயமாந் திருக்குலாப் பத்து
அநுபவ மிடையீடு படாமை.

பொழிப்புரை—

முற்பதிகத் திருவருளன்பை யுகந்தே, யான் ஆனந்தம் பெறல் இன்ரே? அன்ரே? நடனங் கண்டு நல்விழி பெற்றமை யின்ரே? என்று முண்டு; என்றுருகியருளுவதான. சிவாநுபூதி. [1]கலிவிருத்த மாகத் திருத்தில்லையிலோதியது.

---

556. இனி கற்பனவும் அமையும்; அமையும் - போதும். குரை கழல் - நாம ஒலி பெருகும் திருவடி. கற்ரூ - கன்றையுடைய பசு.

1. அச்சுப் பிரதிகள் கொச்சகக் கலிப்பா என்று கூறும்.

திருவாசகத் திருவுள்ளக்கிடை: அநுபவமிடை யீடுபடாமை எ - து. தன் செயலற நிற்றல்.

திருவாசகச் சிறப்பு:

விரும்பு சிவானந்த வெள்ளம் விழைந்து தில்லை நாயகனே மிகக்
[கொண்டாடி
நிரம்பு மனக்களி மிகுத்த விறமாப்பே குலாப்பத்தாய்
[நிகழ்த்த லாமே.

557. இனி, தேடும் பொருளும் நம் பெருந்துணையுந் திருவடியே யென்ற (தி. - ன.) :—

ஓடுங் கவந்தியுமே உறவென்றிட் டுள்கசிந்து
தேடும் பொருளும் சிவன்கழலே யெனத்தெளிந்து
கூடு முயிருங் குமண்டையிடைக் குனித்தடியேன்
ஆடுங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

(இ - ள்.) ஆண்டவனே! தேவரீர் திருத்தில்லை நேர் போய் மன்னும் அம்பரத்தில் ஆடுவதான குஞ்சிதபாத சேவை தரிசனமான இப்போதே பற்றுக் கோடின்றி யாவர்க்கும் விலக்கான ஓடும் பொருதலுக்கிசையாத கவுபீனக் கந்தையுமே யுறவற்ற வுறவு கொண்டு எனதுள்ளங் கசிந்துருகுதலானேன்; நிகழும் பயனும் நிறை தவமுந் தேடும் பொருளும் பெருந்துணையுந் தில்லைத் திருச் சிற்றம்பலத்துளாடுங் கழலே யெனத் தெளிந்தேன்; ஊனுயிர் வேறு செய்தான் நொடித்தான் மலையுத்தமன், எனக் கும்பிட்டுத் தட்ட மிட்டுக் கூத்தாடிக் குஞ்சிதபாதக் கீழானேன்; என அருளியதைக் காண்க. (1)

558. இனி, திருவடிப் பற்றன்றி வேறு பற்றிலனென்ற (தி. - ன.) :—

துடியே ரிடுகிடைத் தூய்மொழியார் தோள்நசையால்
செடியேறு தீமைகள் எத்தனையுஞ் செய்திடினும்
முடியேன் பிறவே னெனைத்தனதாள் முயங்குவித்த
அடியேன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருமன்றுளாடிய பொற் பாத தரிசனமான சுவாநுபூதி பெற்ற காலமே, பெண் வலையிற் சிக்கி முலைத்தலைக்கே யிடைக்கே அவாவுடைய னுனலும் பிறப் பிறப்புறுவதில்லை; எனதப்பனே! என வருளியதைக் காண்க. (2)

பி - ம். குமண்டையிடை.

557. ஓடு - திருவோடு; கவந்தி - கௌபீனம்; கோவணம். குமண்டை - ஒருவகைக் கூத்து. குனித்து - கும்பிட்டு. குலா விளங்குகின்ற.

558. துடி ஏர் இடுகு இடை - உடுக்கையை யொத்த அழகிய ஒடுங்கிய இடை. நசை - ஆசை. செடி - பாவம். முடியேன் - இறவேன்; அழியேன். தனதாள் - தன் தாள்களில்.

559. இனி, தத்துவ முழுதுந் தூய்மை செய்தமையைக் கூறும் (தி. - ன.) :—

என்புள் ளுருக்கி இருவினையை ஈடழித்துத்
துன்பங் களைந்து துவந்துவங்கள் தூய்மைசெய்து
முன்புள்ள வற்றை முழுதழிய உள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; அடியேற்குள தாகிய அகாதி சம்பந்த மூல மலத்தையும், அவைக்குத் துணையான இருள் சேரிரு வினையையும், அவைக்குக் காரணமான தத்துவாத்து வித்தக் கொத்துக்களையும், அவையாற் கட்டுப்படும் அவத்தைகளையும் திருநோக் காலழித்து, இருந்நடபடியே யிருப்பச் சுத்தப்படுத்தி, அன்பால் உயிரை யுருகச் செய்தது குஞ்சித பாத சேர்வையுற்ற அப்போதே யென வருளியதைக் காண்க. தத்துவ காரியம் பஞ்சமல காரியந் தீட்சை சுத்தாவத்தை யிவை விரிவு முதலகவலான முதல் மொழியிலெழுதியதைக் காண்க. (3)

560. இனி, இமையளவுந் திருவடியென்னை விட்டுப் பிரியாது என்ற (தி - ன.) :—

குறியும் நெறியும் குணமுமிலார் குழாங்கடமைப்
பிறியு மனத்தார் பிறிவரிய பெற்றியனைச்
செறியுங் கருத்தி லுருத்தமுதாஞ் சிவபதத்தை
அறியுங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவருட் குணம் வினவில், விண்ணப்பம்; குறிகளும் அடையாளமும் நெறிகளும் அவர் கின்ற தோர் நேர்மையும், அறிய வொண்ணுமோ? சீரடியாருள்ளம் பிரிவில்லாப் பெருமையனே! உண்மை யடியார் தியானிப்ப, அருளேயாகுஞ் சிவ பதத்தை அருளறிவாய் உலவுந் திருத்தில்லையாளும் நடராசனைக் கண்டு உள்ளங்கொண்ட இன்றே இன்புருவானேன். என அருளியதைக் காண்க. (4)

---

559. ஈடு - பெருமை. துவந்துவங்கள் - தொடர்புகள்.

560. குறி, நெறி, குணம் ஆகியவை இல்லாதாரோடு இணங்காமையையுடைய அன்பர்களைத் தன்னைவிட்டுப் பிரியாமற் செய்பவன் என்பது நேர்பொருள். குழாம் - பாசக் கூட்டங்கள் என்றும் உரைப்பர். செறியும் - குறியும் நெறியும் குணமும் செறியும் என்க. உருத்தமுது

561. இனி, யானெனச் செய்யுந் துரிசை, அன்பர்க்கி, இல்லா வகை யருள்வதான (தி. - ன.) :—

பேருங் குணமும் பிணிப்புறுமிப் பிறவிதனைத்
தூரும் பரிசு துரிசறுத்துத் தொண்டரெல்லாம்
சேரும் வகையாற் சிவன்கருணைத் தேன்பருகி
ஆருங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் சிரடியார்களெடுத்த உடலே பரமுத்தி பெறும் வண்ணம், அவர்களுடைய மலபோதமறச் செய்தது, அவ்விடத்தே திருவடி காட்டி, சிவ கருணைச் சிவானுபூதி காட்டி அருள்வதான திருத்தில்லை மூலக்குறியை உண்மையாக அன்பு கொண்ட அன்றே யடியேன் நாம ரூபமுங் குணமும் பிணிப் புறும் பிறவியும் தூர்ந்து உடன் நீங்கும் என அருளியதைக் காண்க. (5)

562. இனி, அடியேன் உடலின்பானபைபையைக் கூறும் (தி. - ன.) :—

கொம்பில் அரும்பாய்க் குவிமலராய்க் காயாகி
வம்பு பழுத்துடலம் மாண்டிங்ஙனே போகாமே
நம்புமென் சிந்தை நணுகும்வண்ணம் நானணுகும்
அம்பொன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

(இ - ள்). ஆண்டவனே! நிட்கள சகள சகளாகள நிருத்தஞ் செய்யும் மணிமன்றத் தில்லைச் சிவனே அருளால் தரிசித்து அவ்விட லிலே தானே நாமன்பு செய்து பொருந்தும்படி நமக்கநுக்கிரகஞ் செய்வதன்றி, மாதா உதரத்தில் அரும்பு போல் உளதாகி, வெளி யிலே யுருவான பூவாகி, யௌவன காலக் காயாகி, அறிவு விவேகம் வீண் வம்பான வினை பழுத்து, வீழ்வதான மரணமாகி விருதாவாக உடல் போகா வண்ணம் அன்பே இன்பாய் அருள்வான் என வருளிய தைக் காண்க. (6)

சுரக்கும்; அமுது உருத்து, உருவங்கொண்டு என்றும் கூறுவர். பிறியும் மனத்தார், கருத்தில் உருத்து, சிவபதத்தை அறியும் தில்லை ஆண்டான் என்றும் கூட்டிப் பொருளுரைக்கலாம்.

561. பேர் - நாமம். பிணிப்பும் இறும் என இயைக்க. தூர் - நிரவு. பரிசு - தன்மை. துரிசு - குற்றம்; பற்று. ஆரும் - வீளங்கும்.

562. கொம்பு என்பதனை ஆகுபெயராக்கி மாதா உதரம் என்று பொருள் அமைத்துக் கூறுவது நோக்கி இன்புறத்தக்கது.

563. இனி, அடியேன் சிரசில் திருவடி எழுந்தருளி அபேத முற்ற தன்மையைக் கூறும் (தி. - ன.) :—

மதிக்குந் திறலுடைய வல்லரக்கன் தோள்நெரிய
மிதிக்குந் திருவடி என்தலைமேல் வீற்றிருப்பக்
கதிக்கும் [1]பாரமொன் றுமில்லோ மெனக்களித்திங்
கதிர்க்குங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் திருவருள் இன்பு செய்யாத இராவணன் தற்போத வளவால் திருமலை யெடுக்க நினைத்த சிவத் துரோகி, வல்லமை கெட்டுத் திருவடிக்கீழ் மருளாகி நின்றான்; அவ் வகை யருளிய திருவடி பரமகதி வியன் பொன்றுந் தெரியாத என் போத சிரசிற் சூடிய தென்னே? எப்போதும் பஞ்ச கிர்த்திய நடனஞ் செய்யு நடராசர் வாழுந் தில்லைப் பதியை ஆண்டவனுகக் கொண்ட வன்றே, இன்றே இப்பேறு பெறுவதானேன் என அருளியதைக் காண்க. (7)

564. இனி, பன்றிக்காகக் கானகத்தில் அன்பாம் நிமித்தம் நடக்குந் திருவடியென் சிரசில் வீற்றிருப்பதான (தி. - ன.) :—

இடக்குங் கருமுருட் டேனப்பின் கானகத்தே
நடக்குந் திருவடி என்றலைமேல் நட்டமையாற்
கடக்குந் திறலவர் கண்டகர்தம் வல்லாட்டை
அடக்குங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; திருவேட்களப் பதியிலே பார்த்தற்குப் பாசுபதமருளவேண்டி, கானகத்தில் ஏனத் தின் பின் சென்றருளிய திருவடி, என்போத சிரசில் வீற்றிருப்பதான நிமித்தம் வினவில், திருவருளை நீங்கி நின்ற பஞ்ச இந்திரிய வேட விஷயப் புலாதி ஐவர்களைத் திருவடியிலடக்கிய நடனராசர் வாழுந் தில்லை அம்பல வாணரை உள்ளத்தில் தரிசித்தமை என அருளிய தைக் காண்க. (8)

பி - ம். 1. பசுபாசமொன் றுமிலோ.

563. திறல் - வலிமை. கதிக்கும் - பெருகுகின்ற. அதிர்க்கும் - ஆரவாரம் செய்கிற.

564. இடக்கும் - தோண்டுகிற; இடக்குச் செய்கிற எனினும் ஆம். முருட்டு எனம் - வலியபன்றி. நட்டமை - ஊன்றினமை. இது அருச் சுனன் பொருட்டுச் செய்தது. ஐவர் கண்டகர் - புலாதி ஐவர்; கண்டகர் - கொடியவர். வல் ஆட்டை - கொடிய ஆட்டத்தை.

565. இனி, நல்குரவுடையோனுக்கு உலவாக்கிழி நேர்படுதல் போலத் திருவரு ணேர்ப்பட்ட (தி. - ன.) :—

பாழ்ச்செய் விளாவிப் பயனிலியாய்க் கிடப்பேற்குக்
கீழ்ச்செய் தவத்தாற் கிழியீடு நேர்பட்டுத்
தாட்செய்ய தாமரைச் சைவனுக்கென் புன்றலையால்
ஆட்செய் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

(இ - ள்). ஆண்டவனே ! ஓர் விண்ணப்பம் ; பாழான வயலிலே உழுதாற்கு ஊதிய மில்லாது துன்ப முறுவோனுக்குக் கீழ்மை யுடையவன் செய்த தவத்தால் நிதிப் பொதி அவ்வயலிலே நேர்ப்பட் டதுபோல, திருஞான சம்பந்த சைவ சிவத்துக்கு அடிமையான தது திருத்தில்லை நடராச குஞ்சித பாத தரிசனம் கண்ட காட்சியால் என அருளியதைக் காண்க. (9)

566. இனி, திருவருட்பணி செய்வதைக் கூறும் (தி. - ன.) :—

கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்
கிம்மை தரும்பய னித்தனையு மீங்கொழிக்கும்
அம்மை குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

(இ - ள்). ஆண்டவனே ; ஓர் விண்ணம்பம் ; பராசத்தி வாம பாகரே ! தேவரீர் திருவுளப்பணி அன்புடன் அடியேன் செய்வதற் காகப் பிரபஞ்ச விஷய இன்பம் அடங்கலையும் ஒழிப்பித்த, பரமுத்தப் பதியாகிய தில்லை மன்றுளே யாடிய பொற்பாதம் காணப் பெற்றமை யால் அடிமையானேன் என அருளியதைக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்

---

565. பாழி - பாழான. செய் - வயலிலே. விளாவி - உழுது. பயன் இலியாய் - ஊதியம் பெறாது. கிடப்பேற்கு ; தம்மைக் குறித்தது. பயனற்ற உலகுக்கு உழைத்து வருவதை இங்குச் சுட்டினர். கீழ் செய் தவம் - முன்பு செய்த தவம் என்பது நேர்பொருள். கிழி - பொற்கிழி. தாட்செய்ய - அடியேவல் புரிய. தாமரைச் சைவன். திருஞான சம்பந்த சைவ சிவம் என்றார். தலையால் ஆள் செய்தல் - தண்டனிட்டு அடிமை புரிதல்.

566. கொம்மை - திரட்சியாகிய. வரி - தேமல்படர்ந்த. கூறன் - பாகன். இம்மை தரும் பயன் - பிரபஞ்ச விஷய இன்பம்.

திருச்சிற்றம்பலம்

41. அற்புதப் பத்து

இனி, அற்புதப் பத்தாவன.

அகத்தியச் சூத்திரம்.

கற்பனை கழறும் அற்புதப் பத்துந்
தனிய தீதமாய் அநுபவ மாற்றுமை.

பொழிப்புரை.

முற்பதிகக் குஞ்சிதபாத தரிசனமே பரமுத்தி யடிமை இன்ப மென அருளி, மேல் எல்லாம் வல்ல சித்தென்பதும் எளிமையேன் பொல்லாங்கெல்லாம் அருளாற் பொறுத்தாண்டு கொண்டருளு மானந்த சுவாநுபூதி யென்பதும் அருளியது.

ஆசிரிய விருத்தமாகத் திருப்பெருந்துறையி லோதியது.

567. இனி, திருவடி முன்னின்றருளிய சிவானந்தமான (தி. - ன.) :—

மைய [1]லாமிந்த மண்ணிடை வாழ்வெனும் ஆழியுளகப்
[படுத்
தைய லாரெனுஞ் சுழித்தலைப் பட்டுகான் தலைதடு மாறுமே
பொய்யெ [2]லாங்கெடத் திருவருள் தந்துதன் [3]பொன்மலரடி
[காட்டி.
மெய்ய ருய்வெளி காட்டிமுன் நின்றதோர் அற்புதம்
[விளம்பேனே.

திருவாசகத் திருவுள்ளத்திடை : அநுபவமாற்றுமை எ - து. அது பவம் முற்றுதலில் பொறுமை விம்முதல்.

திருவாசகச் சிறப்பு :

மாயவுருக்கொண்டுளத்தை மயக்குமின்னார்கண் வலையுண்
[மயங்குவேற்கிங்
காயுமறிவளித் தாளலதிசயமென்றுரைத் தலற்புதப்பத்தாகும்.

(பழைய புராணம்)

567. பி - ம். 1. லாயிந்த. 2. லாம்விடத். 3. பொன்னடியினை காட்டி.

(இ - ள்). ஆண்டவனே! ஓரானந்த விண்ணப்பம்; வஞ்சப் பெண் வாழ்க்கையாலே, தலைதடுமாறுகப் போகாவண்ணம், யானென தென்னும் பொய் கெடுவதாகத் திருவருளிரங்கிப் பாதுகாக்கத் திரு வடி மலரை அருளாற் காட்டி, சத்திய போத நாதனுய் அடியேன் காண எழுந்தருளிய அற்புதம் எவ்வகை வாயால் வழுத்துவேன்! எனவே, மவுனானந்தம் பெறுவதே சுவானுபூதி என அருளியதைக் காண்க.

568. இனி, திருவடியிலர்ச்சனை செய்வதே நிட்டை யென்ற (தி. - ன.) :—

ஏய்ந்த மாமல ரிட்டுமுட் டாததோ ரியல்பொடும் வணங்காதே
சாந்த [1]மார்முலைத் தையல்கல் லாரொடுந் தலைதடு மாறுகிப்
போந்தி யான்றுயர் புகாவண மருள்செய்து [2]பொற்கழலவை
[காட்டி
வேந்த னுய்வெளியே என்முன் நின்றதோர் அற்புதம்
[விளம்பேனே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; தேவரீர் அன்று அவசலமாக வருளிய சிவாகமப்படி நால்வகை மலரால் நியமந்தவருது அன்பு விதியோடும் அருட்பணி செய்யாமல், சாந்தணியும் முலை யுடைய நாரிபாற் சன்னியில் நடுமாறி, அதுவாய்க் கெடாவண்ணம், அருள் செய்து அருளடி காட்டி, இராசனைப் போல வடிவு கொண் டெழுந்தருளிய ஆனந்தத்தை வையகத்தோரிடத்து வாய் திறப்ப தில்லை; என அருளியதைக் காண்க. (2)

---

567. மையல் - மயக்கம். ஆழி - கடல். முதல் அடிக்கு உரை எழுதப்படவில்லை. ஆழி என்றதற்கேற்பச் சுழி என்றார். மெய்யனைக் காட்டி என்றும் வெளிகாட்டி என்றும் இயைக்க. விளம்பேன் - சொல்லேன்.

பி - ம். 1. மாமுலைத். 2. பொற்கழலினை.

568. ஏய்ந்த - இயைந்த; ஆகமவிதிகளுக்கியைந்த என்றார். மூட் டாததோர் இயல்பு - தடைப்படாத தன்மையால். வணங்காதே, போந்து யான் துயர் புகாவண்ணம் என்றியைக்க,

569. இனி, ஒறுத்துப் பேரின்பச் சர்க்கரை யருளினமையைக் கூறும் (தி. - ன.) :—

நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து
நானென தெனுமாயக்
கடித்த வாயிலே நின்றுமுன் வினைபிகக்
கழறியே திரிவேனைப்
பிடித்து முன்னின்றப் பெருமறை தேடிய
அரும்பொருள் அடியேனை
அடித்த [1]டித்துவக் காரமுன் தீற்றிய
அற்புதம் அறியேனே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; அடியேன் மண் மிசை வந்து, தேகமே பொருளென அநுபூதி கொண்டு யானென தென்னுஞ் செருக்கால் மாயை வாயிலாக நின்று, வினைவினைவ தாகவே வம்பு கூறித் திரியுமென்னை, இரங்கி வலியப்பிடித்து, வேதந் தேடிக் காணுணுத பாசிவம் குடிலையாந்தங் குருவாகித் திருவரு ளாகிய இன்பந் துன்பம் போலக் காட்டி., பேரின்பக் கட்டிதானே யென அறிவுபெற, கண் காட்சியாய் நின்ற ஆனந்த மென்னென்று சொல்வேன்? என அருளியதைக் காண்க. (3)

570. இனி, இப்பிறவியே பேரின்பமென்ற (தி. - ன.) :—

பொருந்து மிப்பிறப் பிறப்பிவை நினையாது
பொய்களே புகன்றுபோய்க்
கருங்கு ழலினர் கண்களா லேறுண்டு
கலங்கியே கிடப்பேனைத்
திருந்து சேவடிச் சிலம்பவை சிலம்பிடத்
திருவொடு மகலாதே
அருந்து ணைவனாய் ஆண்டுகொண் டருளிய
அற்புதம் அறியேனே.

பி - ம். 1. டித்தக்காரமுன்.

569. மண்ணிடை பொய்யினை நடித்து எனக் கூட்டுக. மாய வாயில், கடித்த வாயில் எனக் கூட்டுக. கடித்த - வடுப்பட்ட. வினை என்றதற்கு வம்பு என்று பொருள் கூறுகிறார். மறைதேடிய அரும் பொருள் - குடிலையாந்தம். குடிலை - ஓங்காரம். அக்காரம் - சர்க்கரை. தீற்றிய - உண்பித்த.

(இ - ள்). ஆண்டவனே ! ஓர் விண்ணப்பம் ; அடியேற்கு மலபரிபாக நிமித்தம் அருளிய தேகத்தைத் தானடைந்த வுறுதி யெனக் கொள்ளாது, அத்தேகத்தை அநித்திய மெனப் பேசி, அப் பிறவி ஓயாது உற்பத்தியாகப் பெண் வலையில் அகப்படுவேனைப் பெருங்கருணையால் திருச்சிலம்போசை சத்திக்கப் பராசத்தியுடன் பிரிவில்லாத உயிர்த்துணைவராக என்னுயிரில் எழுந்தருளிய சிவா னந்த போகத்தை என்னறிவாற் காணவுளதோ ? என அருளியதைக் காண்க. (4)

571. இனி, உடம்புடைய யோகியர்பாலுற்ற சிற்றின்பம் அடங்கத் தன் பேரின்பமாக்கிய (தி. - ன.) :—

மாடும் சுற்றமும் மற்றுள போகமும்
மங்கையர் தம்மோடும்
கூடி யங்குள குணங்களா லேறுண்டு
குலாவியே திரிவேனை
வீடு தந்தென்றன் வெந்தொழில் வீட்டிட
மென்மலர்க் கழல்காட்டி
ஆடு வித்தென தகம்புகுந் தாண்டதோர்
அற்புதம் அறியேனே.

(இ - ள்). ஆண்டவனே! தேவரீர் அருளிய அற்புதம் அந்தோ! அந்தோ ! என் சொல்வேன் ! அடியேன் நித்தியசெல்வங்களாலும் தமர்களாலும் மற்றுள்ள சிற்றின்பக் குணங்களாலும் அழுந்திய பாவியைத் திருவடி ஞான பரமுத்தி யருளி, சிற்றின்ப மெல்லாம் பேரின்ப வீடேயாகத் திருவருட் பாதம் என்னறிவிற் காட்டி, ஆட்டு வித்து, உள்ளே புகுந்து, அடிமை செய்ததை என்னறிவாற் காண்ப துளவோ ? என அருளியதைக் காண்க. (5)

---

570. இப்பிறப்பு பொருந்தும் (என) நினையாது என்க. எறுண்டு - தாக்குண்டு. திரு - பராசத்தி.

571. மாடு - செல்வம். கூடி, எறுண்டு, குலாவி, திரிவேனை என்க. ஆடுவித்து - ஆட்டுவித்து. சிற்றின்பத்தில் அழுந்திக்கிடந்த தனக்குப் பேரின்பம் காட்டிய திருவருளை வியக்கின்றார்.

572. இனி, சத்தி சிவமாக அடியேனுள்ளத்தில் எழுந்தருளினமையைப் பாராட்டும் (தி. - ன.) :—

வணங்கு மிப்பிறப் பிறப்பிவை நீனையாது
மங்கையர் தம்மோடும்
பிணைந்து வாயிதழ்ப் பெருவெள்ளத் தழுந்திநான்
பித்தனுய்த் திரிவேனைக்
குணங்க ளுங்குறி யுமில்லாக் குணக்கடல்
கோமளத் தொடுங்கூடி
அணைந்து வந்தெனை யாண்டுகொண் டருளிய
வற்புதம் அறியேனே.

(இ - ள்). ஆண்டவனே! ஓரற்புத விண்ணப்பம்! தெண்ணிலா வணிந்த வேணியா! உன்றன் றிருநடங் கும்பிடப்பெற மண்ணிலே வந்த, இப்பிறவியே யெனக்கு வாலிதாமென நிட்டை கூடாது, வஞ்சப் பெண்களே இச்சையுடன் 'பாலொடு தேன் கலந்தற்றே, பனிமொழிவாலெயிறூறிய நீர்' என்றபடி, அவ்வாரியில் அழுந்திப் பைத்தியமாய்த் திரியும் பாவியை, குறிகள் குணங்கள் இவை யொன்றுமில்லாத நிட்கள சாட்குணிய பரமசிவன் தனது சத்தியுடன் என்னைப் பொருளாகப் புணர்ந்து உள்ளே யன்பாய் அடிமை செய்த சிவானந்த போகத்தை என்னறிவாற் காண்பனே? என் அருளியதைக் காண்க. (6)

573. இனி, திருநாம மந்திரத்தா லர்ச்சனை செய்வதே முத்தியென்ற (தி. - ன.) :—

இப்பி றப்பினி லீணமலர் கொய்துநா
னியல்பொடஞ் செழுத்தோதித்
தப்பி லாதுபொற் கழல்களுக் கிடாதுநான்
தடமூலை யார்தங்கள்

---

572. வணங்கும் - வணங்குதற்காகப்பெற்ற; உன்தன் திருநடம் கும்பிடப்பெற்ற என்னூர். நீனையாது - பிறவி பெற்றதன் பயனைக் கருதாமல். குணக்கடல் - சாட்குணிய பரமசிவன். கோமளம் - உமாதேவி; சத்தி அறியேன் - அறிவாற் காண்பேனே.

மைப்பு லாங்கண்ணு லேறுண்டு கிடப்பேனை
மலரடி யிணைகாட்டி
அப்பன் என்னைவந் தாண்டுகொண் டருளிய
அற்புதம் அறியேனே.

(இ - ள்). ஆண்டவனே! ஓரதிசய வானந்த விண்ணப்பம்; இப்போதருளிய பரிபாக தேகமே துணையாகக் கொண்டு எல்லாத் தவத்திற்கும் மேற்பட்ட நால்வகை மலர் விதியால் இணடை கொண் டேற அர்ச்சனை, வேத நான்கினு மெய்ப்பொருளான நாதன் நாமத் தாற் பூசிப்பதும், அவை தவறுத நியமமே அன்பென, திருவடி ஞான கிட்டை கூடாது, கண்ணுல் சன்னையிலழுந்திய பாவியைக் குஞ்சித சேவடியைக் கும்பிட்டிருப்பதாக, எனது அப்பன் ஆண்ட சிவானந்த போகத்தை என்னென்று புகல்வேன்? என அருளி யதைக் காண்க. (7)

574. இனி, வாசக ஞானத்துக் கெட்டாத வாச்சிய வநுபூதி யான (தி. - ன.):—

ஊச லாட்டுமிவ் வுடலுயி ராயின
இருவினை அறுத்தென்னை
ஓசையா லுணர் வார்க்குணர் வரியா
னுணர்வுதந் தொளியாக்கிப்
பாச மானவை பற்றறுத் துயர்ந்ததன்
பரம்பெருங் கருணையால்
ஆசை தீர்த்தடி யாரடிக் கூட்டிய
அற்புதம் அறியேனே.

(இ - ள்). ஆண்டவனே! ஓரற்புத விண்ணப்பம்; "பாசங் கழன்ருற் பசுவுக்கிடம் பதியாம் ஊசல் வடங்கழன்ற தொவ்வாதோ?" என்ற ஊனுயிர் வேறு செய்தது, வாக்கு மனேதீத சுவாமி யறிவே அருளென அருளி, மலபந்தம் நீக்கி, சிவானந்த போதம் பெருங்கருணை

---

573. மைப்பு உலாம் கண் - கருமை தவழ்ந்த கண். மலர்கொய்து, அஞ்செழுத்து ஓதி, கழல்களுக்கு இடாது, ஏறுண்டு கிடப்பேனை, அடி யிணை காட்டி, ஆண்டுகொண்டருளிய அற்புதம் என்க.

யால் அளித்து, இவ்வுலக வாசையறச் சீரடியாரிற் கூட்டுவதான அற்புதம் தற்சுட்டால் அறிவேனே? என அருளியதைக் காண்க.(8)

575. இனி, பெண்ணுசை நீக்கினமையைக் கூறும் (தி. - ன.):

பொச்சை யானவிப் பிறவியிற் கிடந்துநான்
புழுத்தலை நாய்போல
இச்சை யாயின ஏழையர்க் கேசெய்தங்
கிணங்கியே திரிவேனை
இச்ச கத்தரி யயனுமெட் டாததன்
[1]விரைமல ரடிகாட்டி
அச்சன் என்னையும் ஆண்டுகொண் டருளிய
அற்புதம் அறியேனே.

(இ - ள்). ஆண்டவனே! ஓரற்புத விண்ணப்பம்; பிறவியே காடாக வளர, அதனில் உழன்று புழுத்தலை நாய்போல, மாயா வித்தை யுருவான பேதையர் கருத்துப்படி, பணி செய்து இன்புள்ளுய்த் திரிவேனை, வித்தகராகிய அயனுமரியுங் காணுத செங்கமலப் பொற்பாத மருளிய அப்பனுன தேவரீர் அடிமை செய்த சிவானந்த போதத்தை என்னறிவாற் காண்பதுளதோ? என அருளியதைக் காண்க. (9)

576. இனி, அறியாமையுடைய அடியேற்கு அறிவுவர அருளிய (தி. - ன.):—

செறியு மிப்பிறப் பிறப்பினை நினையாது
செறிகுழலார் செய்யும்
கிறியுங் கீழ்மையுங் கெண்டையங் கண்களு
முன்னியே கிடப்பேனை

---

574. உடலுயிர் ஆயின இருவினை என்பதற்கு உடலுயிர் ஆவதற்குக் காரணமான இருவினை என்னலாம். ஓசையால் - நூலறி வான பாசஞானத்தால் வினையறுத்து, உணர்வுதந்து, ஒளியாக்கி, பற்றறுத்து, ஆசை தீர்த்துக் கூட்டிய அற்புதம் என்க.

பி - ம். 1. விரைமலர்க்கழல் காட்டி.

575. பொச்சை - காடு. ஏழையர் - மாதர். இச்சகத்து - இவ்வுலகிலே. அச்சன் - தந்தை.

இறைவன் எம்பிரான் எல்லையில் லாததன்
இணைமலர்க் கழல்காட்டி
அறிவு தந்தெனை ஆண்டுகொண் டருளிய
அற்புதம் அறியேனே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; அடியேனை நலிவதான இறப்புப் பிறப்புக்களைத் துன்பமெனக் கொள்ளாது, நெருங்கிய அளகபாரமுடைய பேதையர் செய்வதான பொய்மையும் ஈனகுணமும், ஆகியவற்றை மெய்யெனவும் நற்குணமெனவும் கொண்டு, வஞ்சமயக்கச் சேல்போன்ற கண்ணையும் நினைப்பாக உழல் வேனை, எம்பிரானை தேவரீர் கருணையால் அவை அநித்தியம் எனக் காட்டித் திருவடியே நித்தியப் பேரானந்தமென்ற அறிவை யருளி ஆண்டடிமையாக வியாப்பியஞ் செய்த அற்புத சிவானந்த போகத்தை என்னறிவால் அறியேன்—எனவே அவனருளாலறிவதே உண்மை யென அருளியதைக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

42. சென்னிப் பத்து

இனி, சென்னிப் பத்தாவன.

அகத்தியச் சூத்திரம்.

மன்னு திருவடிச் சென்னிப் பத்துத்
தன்னிகரான தனிச்சிவ விஷயவு.

பொழிப்புரை—

முற்பதிகக் குஞ்சிதபாதப் பேரானந்தம் சுவாநுபூதியான பின், கடையேனை யாண்ட கருணை மாகடல் அடைவே தானுய் ஆனந்தம் பெற முடிமலரடியிற் சூட்டும் முறைமையால், அதுவே இன்பவன்

---

576. செறியும் - நெருங்கும். கிறி - வஞ்சனை. உன்னி - நினைத்து.

பென்னும் அனுபவம்பெற்று, அவ்வடி மலர் முற்றும் அதுவென்று அருளால் தெவிட்டாப் பேரின்பமென அருளியது.

ஆசிரிய விருத்தமாகத் திருப்பெருந்துறையி லோதியது.

577. இனி, சிரடியார் திருவடி அநுபூதி பெறுவதன்றி, முத்தேவராலு மறியப்படாததென்ற (தி. - ன.) :—

தேவ தேவன் மெய்ச் சேவகன் தென்பெ ருந்துறை நாயகன்
மூவ ராலு மறிவொணு முதலாய ஆனந்த மூர்த்தியான்
யாவ ராகினு மன்பரன் றி யறிவொ ணுமலர்ச் சோதியான்
தூய மாமலர்ச் சேவடிக்கணம் சென்னி மன்னிச் சுடருமே.

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ. நமது சிவன் மகாதேவன் நம்பொருட்டுப் பரியாளனனவன், திருப்பெருந்துறைக் குருமணி, திருமால் அயன் இந்திரன் அறியவொண்ணுத சங்கார கர்த்தாவே முதலாளியான சிவானந்த வடிவுடையவன்; யாவரான எத்தேவராலும் அன்பர்களன்றி அறிவொணுத சருவ வியாபகப் பரஞ்சோதி; அப்பரமசிவனது மலர் மணமொத்த பாதத் தாமரையான திருவருட் சோதி என்போதச் சிரசிலே வியாபகமாகப் பிரகாசிக்குமென அருளியதைக் காண்க. (1)

578. இனி, அட்டமூர்த்தமான செய்தியைக் கூறும் (தி. - ன.):

அட்ட மூர்த்தி யழகனின்னமு தாய வானந்த வெள்ளத்தான்
சிட்டன் மெய்ச்சிவ லோகனயகன் தென்பெ ருந்துறைச்
[சேவகன்
மட்டு வார்குழல் மங்கையாளோயோர் பாகம் வைத்த
[அழகன்றன்
வட்ட மாமலர்ச் சேவ டிக்கணஞ் சென்னி மன்னி மலருமே.

திருவாசகத் திருவுள்ளக்கிடை: சிவ விஷயு எ - து. சிவனுக்கு நிச்சயப்படுதல்.

திருவாசகச் சிறப்பு :—

தூயவருட் குருபதத்தைச் சூட்டுதற்குப் பெற்றவுயிர் சுகத்தை
[நோக்கிச்
சேயமலர்ப் பதத்தருமை யடியரொடும் வியந்துரைத்தல்
[சென்னிப்பத்தே.

577. சேவகன், பரியாளன் என்று பொருள் கூறுகின்றார். சேவடிக்கணம்; கணம் - கூட்டம்.

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ! 'மண்ணெடு நீரனல் காலோடாகாய மதியிரவி யெண்ணில் வருமியமான வட்டமாமூர்த்தி யாய் எட்டுக் கொண்டாரான' திருவருளழகன்; இன்பவமிர்த சிவானந்த சுகவாரியான்; யாவர்க்கும் பெரியோனென சத்தியபோதச் சிவலோகநாயகன்; திருப்பெருந்துறைக்குருவே; பரியாளனுகினேன்; மட்டுவார்குழல் மங்கை பாகம் வைத்தோனென இன்ப வடிவுடையான்; தாமரை மலர் போன்ற திருவடி என் போதச் சிரசில் அபேதவத்துவித வியாபக வாழ்வாவன என வருளியதைக் காண்க. (2)

579. இனி, ஆன்ம நிவேதனங் கூறும் (தி. - ன.):—

நங்கை மீரெனை நோக்குமின்னங்க
ணைத னம்பணி கொண்டவன்
தெங்கு சோலைகள் சூழ்பெருந்துறை
மேய சேவக னையகன்
மங்கை மார்கையில் வளையுங்கொண்டெம்
முயிரும் கொண்டெம் [1]பணிகொண்டான்
பொங்கு மாமலர்ச் சேவ டிக்கணஞ்
சென்னி மன்னிப் பொலியுமே.

(இ - ள்). மகடூவான சிரடியார்களே! நோக்கிக் கேண்மோ, நமது பரமசிவன் நம்மை அடிமை கொண்டவன்; தென்னஞ்சோலை சூழும் திருப்பெருந்துறைக் குருவாகிய பரியாளன்; திருமதுரைப் பதியில் பரிபக்குவ நாரிகட்குப் பரிச தீட்சைக்காகத் திருக்கையால் சங்கணிந்து, எம்முயிரைப் பலியாகக் கொண்டு, அருட்பணி செய்யக் கொண்ட செங்கமலப் பொற்பாதங்கள் ஆன்ம சிற்சத்தி திருவருளாய் விளங்கி வியாப்பியமாக வியாபகமாக அநாதி போதமாக வாழும்; என அருளியதைக் காண்க. (3)

---

578. சிட்டன் - பெரியன். மட்டு - தேன். வட்டமாமலர் - தாமரை.

பி - ம். 1. பணிகொள்வான்.

579. அம்பு அணி கொண்டவன் என்று பிரித்து அம்பினை அழகுக் காகத் தாங்கியவன் என்று பிறர் பொருள் கூறுவர். கைக்கு வளையிட்டதைப் பரிச தீட்சை என்றார்.

580. இனி, சிரடியாருடன் நாதன் எழுந்தருளினமையைக் கூறும் (தி. - ன.) :—

பத்தர் சூழப் பராபரன் பாரில் [1]வந்தோர்பார்ப் பானெனச்
சித்தர் சூழச் சிவபிரான் தில்லை மூதூர் நடஞ்செய்வான்
எத்த னிவன் தில்புகுந்தமை யாளுங் கொண்டெம் பணி
[கொள்வான்
வைத்த மாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னி மன்னி மலருமே.

(இ - ள்). சிரடியார்களே ! கேண்மோ ; நமது பரம பராபர பரமசிவன் தனது உண்மைச் சிரடியார்களான அன்பர்கள் சங்கிதியில் சூழ்வதாகப் பூமியில் சிரேட்டமான திருப்பெருந்துறையில் பிராமணத் திருவுருவாய் எழுந்தருளிய நாதன் ; சித்தர் வித்தியாதரர் கின்னர கிம்புருடர் முதலான தேவர்கள் சங்கிதானத்தில் சூழ்ந்திருப்ப, சிவபிரான் திருத்தில்லை மன்றுள் பஞ்சகிர்த்திய நிருத்தம் செய்வோன் ; பெருங்கருணையால் இரங்கி அடியேன் உள்ளத்தில் எழுந் தருளி எம்பணி கொள்ள ஆண்டவன் ; அவனது திருவடியான பொற்கமலம் அடியேன் போத சிரசில் அபேத அத்துவிதமாக வியாபித்திருக்கும் ; என வருளியதைக் காண்க. (4)

581. இனி, வேயுறுதோளி பங்கனுள்ளுறலானமையைக் கூறும் (தி. - ன.) :—

மாய வாழ்க்கையை மெய்யென்றெண்ணி
மதித்தி டாவகை நல்கினன்
வேய தோளுமை பங்கெனெங்கள்
திருப்பெருந் துறை மேவினன்
காயத் துள்ளமு தூறவூறநீ
கண்டு கொள்ளென்று காட்டிய
சேய மாமலர்ச் சேவடிக்கணஞ்
சென்னி மன்னித் திகழுமே.

பி - ம். 1. வந்து.

580. பார்ப்பானென வந்தது திருப்பெருந்துறையில். சித்தர் என்றமை அவருடன் பிறரையும் கூட்டியுரைத்தார். எத்தன் - தந்திரம் செய்வோன். இல், இங்கு உள்ளத்தைக் குறித்தது. மலரும் - வியாபித் திருக்கும்.

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ; நமது பரமசிவன் நம்மை அநாதியே நலிவதான மாயாவின்பத்தை உண்மை கொள்ளா வகை அருளியதுமன்றி, வேயுறு தோளிபங்கனை சுவாமி, திருப் பெருந்துறையில் குருவடிவானன். அவையன்றி, மாயக்கள்ளுண்டு மயங்காது காயத்துள் மெய்ஞ்ஞானக் கள் ஊற, ஊறவே பேரானந்தச் சிவாநுபோகமருளிச் சிவந்தபாத கமலமான தடியேன் தற்போத முடியில் சிவபோகமாகப் பிரகாசிக்கச் செய்ததென வருளியதைக் காண்க.

582. இனி, சிவார்ச்சனையே பரமுத்தி யென்ற (தி. - ன.) :—

சித்த மேபுகுந் தெம்மையாட்கொண்டு
தீவி னைகெடுத் துய்யலாம்
பத்தி தந்துதன் பொற்கழற்கணே
பன்மலர் கொய்து சேர்த்தலும்
முத்தி தந்திந்த மூவுலகுக்கு
மப்பு றத்தெமை வைத்திடும்
அத்தன் மாமலர்ச் சேவடிக்கணஞ்
சென்னி மன்னி மலருமே.

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ; நமது பரமசிவன் அடியோங்கள் சித்தத்தில் எழுந்தருளி ஆட்செய்து வினைமுழுதும் கெட்டு நாம் பிழைப்புறுவதான அன்பருளி, திருவடிக் கமலத்தில் பன்மலரால் அர்ச்சனை செய்வதாக அருளி, திருவடி சேர பரமுத்தியளித்து, இம்மூன்று மாயாபுவனமும் கடந்த சிவபதத்தில் அடியோமை அபேதமாக வைக்கும் அப்பனுடைய திருவடி அடியேம் போத சிரசில் அநாதி நிலைமையாகத் திருவருள் வியாபகமாக மலரும்; என அருளியதைக் காண்க. (6)

---

581. நல்கினன் - அருளினன். காயத்துள் அமுது ஊறுதல், யோகப்பயிற்சியால் உண்டாவதென்பர். இங்கே மெய்ஞ்ஞானக்கள் என்றார். சேய - சிவந்த; செம்மையான.

582. புகுந்து, கொண்டு, கெடுத்து, தந்து, தந்து, வைத்திடும் அத்தன் என்க.

583. இனி, அடியாருறவே பொருளென்ற (தி. - ன.) :—

பிறவி யென்னுமிக் கடலிலீந்தத்தன்
பேரருள் தந்தருளினன்
அறவை யென்றடி யார்கடங்கள்
அருட்கு ழாம்புக விட்டுநல்
உறவு செய்தெனை யுய்யக்கொண்ட
பிரான்ற னுண்மைப் பெருக்கமாம்
திறமை காட்டிய சேவடிக்கணஞ்
சென்னி மன்னித் திகழுமே.

(இ - ள்). சீரடியார்களே! கேண்மோ; நமது பரமசிவன் பெரும் பிறவி வாரியைக் கடக்கத் தெப்பமாகப் பெருங்கருணைத் திருவடியை அருளி, அடியார் திருச்சபை சந்நிதானம் சேர, தமராக்செய, திருவடி சேர, செப்பமான உண்மைப் பேரின்ப வல்லமை ஆனந்த அன்பு காட்டிய திருவடிகள் என் போதச் சிரசில் திகழ்தல்; என அருளியதைக் காண்க. (7)

584. இனி, அடியாருள்ளமகலாமையைக் கூறும் (தி. - ன.) :—

புழுவி னுற்பொதிந் திடுகுரம்பையிற்
பொய்த னியொழி வித்திடும்
எழில்கொள் சோதியெம் மீசனம்பிரா
னென்னுடை யப்ப னென்றென்று
தொழுத கையின ராகித்தூய்மலர்க்
கண்க ணீர்மல்குந் தொண்டர்க்கு
வழுவி லாமலர்ச் சேவடிக்கணஞ்
சென்னி மன்னி மலருமே.

(இ - ள்). சீரடியார்களே! கேண்மோ; நமது பரமசிவன் கிருமியால் நிறைவு செய்த உடலெப் பொய்யென ஒழியச் செய்தருளும் நாதன் என்றும், எம்முடைய ஈசன் என்றும், என்னுயிர்ப் பிரானென்றும், அப்பனே என்றும், எக்காலமும் தொழுகையராய் விதித்த மலர் கொண்டு அன்பால் மலர் போன்ற கண் கணீராராமையால் பெருக, திருவருட்பணி செய்யும் அடியார்க்குக் குற்றமற்ற பொற்பாத

---

583. பிறவிக் கடல் கடக்க அருள் புணையாயிற்று. அறவை என்று - அநாதை என்று.

கமலம் போதச் சிரசிலே வியாபிக்க அருளாய் விளங்கும்; என அருளியதைக் காண்க. (8)

585. இனி, மெய்யடியார்க்குத் திருவடியே இன்பென்றருள்வ தான (தி. - ன.) :—

வம்ப னுய்த்திரி வேனைவாவென் றுவ
வல்வி னைப்படு மாய்த்திடும்
உம்ப ராலுல கூடறுத்தப்
புறத்த னுய்நின்ற வெம்பிரான்
அன்ப ரானவர்க் கருளிமெய்யடி
யார்கட் கின்பந் தழைத்திடும்
செம்பொன் மாமலர்ச் சேவடிக்கணஞ்
சென்னி மன்னித் திகழுமே.

(இ - ள்). சீரடியார்களே! கேண்மோ; நில்லாதவற்றை நிலை யென வுட்கொண்டு புல்லறிவாய்த் திரியும் பாவியை, கருணையால் திருமேனி கொண்டெழுந்தருளித் திருநோக்கம் பாலித்தழைத்து, மூல ஆணவப்பகையை வகை செய்யும் எத்தேவப் பதமுத்தியும் கடந்து நின்மலமாய் நின்ற என்னுயிர்ப்பிரான்; உள்ளபடி பத்தி செய்வார்க்குத் திருவடி ஞானம் அருளி, அபேதவத்துவித உண்மை அடியாருள்ளப் பேரின்பப் பெருக்கமான செங்கமலப் பொற்பாதம் என் போதமுடியிலருளாய் மலர்ந்து பிரகாசிக்கும் என அருளியதைக் காண்க. (9)

586. இனி, திருநாம உபதேசத் (தி. - ன.) :—

முத்த னெழுதற் சோதியைமுக்க
ணப்ப னெழுதல் வித்தினைச்
சித்த னச்சிவ லோகனைத்திரு
நாமம் பாடித் திரிதரும்

---

584. குரம்பை - கூடு; உடல். பொய் - இக்குரம்பையில் வாழும் வாழ்வின் பொய்மை. எழில் - அழகு.

585. வம்பன் - வீணன். வாவென்று அழைத்து என்க. உம்ப ரான் - மேலிடத்தை உடையவன். உலகு - ஊடறுத்து அப்புறத்தனுய் நின்ற - உலகைக் கண்டு அதற்கும் அப்பாலே நின்ற.

பத்தர் காளிங்கே வம்மினீருங்கள்
பாசந் தீரப் பணிமினே
சித்த மார்தருஞ் சேவடிக்கணஞ்
சென்னி மன்னித் திகழுமே.

(இ - ள்). காதலாகிக் கசிந்து, பரமுத்தனை, அறுவகைப் பொருட்கு மேலான முதலான சிவச்சோதியை, எல்லா வொளியும் தம்மொளியாக அருளும் திரிநேத்திர உயிர்க்கப்பனை, நினைப்பார்கள் மனதுக்கோர் முதலான வித்தினை, அருட்சித்தனை, கயிலாயப் பதியை, திருநாமம் இடைவிடாது துதிக்கும் சீரடியார்களே ! விரை விலே வந்து கேண்மோ. உங்களுடைய பாசம் தீர்வதாகத் திருவருட் பணி செய்வீர்களாகில், சிந்தையே சிவனெனவன் திருவடி, போத முடியில் திருவருளாய் வியாபிக்கும் என அருளியதைக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

43. திருவார்த்தை

இனி, திருவார்த்தையாவன :—

அகத்தியச் சூத்திரம்.

மலமறுக்கும் திருவார்த் தைப்பத்து
மிலகுமரு ளறிவிக்க வறிதல்.

பொழிப்புரை—

முற்பதிகத் திருவடி யின்ப மலர் சூட்டி, இதன்மேல் அவனே தானுய் ஆனந்தம் பெறல்; அடியார்க்கருளல், அருட்பெருங்கரு

---

586. முத்தன் - பாசங்களை விடுவிப்பவன். முதல்சோதி - மூல ஒளி. சித்தன் - சித்துக்களைச் செய்பவன்; சித்தத்தில் குடியிருப்ப வனும் ஆம். நீர் வம்மின் என்க. ஆர் தரும் - நிறைந்துள்ள.

ணையை எடுத்தெடுத்துரைத்தே வழிபடல், அன்பின் முறைமை என்று அருளால் மொழிந்தமை.

ஆசிரிய விருத்தமாகத் திருப்பெருந்துறையில் ஓதியது.

587. இனி, திருவடியைத் திருவருளால் உயிரறிவதான (தி. - ன.) :—

மாதிவர் பாகன் மறைபயின்ற
வாசகன் மாமலர் மேயசோதி
கோதில் பரங்கரு ணையடியார்
குலாவுநீதி குணமாக நல்கும்
போதலர் சோலைப் பெருந்துறையெம்
புண்ணியன் மண்ணிடை வந்திழிந்
தாதிப் பிரமம் வெளிப்படுத்த
அருளறி வாரெம் பிராஞ்வாரே.

(இ - ள்). சீரடியார்களே! கேண்மோ: நமது பரமசிவன், அம்மை வாமபாகனுன உருவே அன்றி வேறுரு வில்லாதவன்; அநாதி முத்தனுகவே எழுந்தருளி வேதவாசக மருள்வோன்; மலர் போன்ற சுத்தியவுருச்சோதி; குற்றமற்ற பராபர கருணையாளன்; சீரடியாரளவளாவும் ஞானநீதியன்; சாட்குணிய இன்பவான்மாக்களுக்கு அருள்வதான மலர்ச்சோலை சூழும் பெருந்துறைப்பதியான என் புண்ணியப் பலனுன நாதன்; பூமியின்கண் என் பொருட்டெழுந் தருளிய அநாதி பரப்பிரம சிவசொரூபம்; உள்ளும் புறமும் ஒரு தன்மைக் காட்சியான திருவருளே அவனருளால் அறியும் அறிவுடை

---

43. திருவாசகத் திருவுள்ளக்கிடை: அறிவிந்தன்புறுதல்: எ - து. உன்னுல் அறியப்படாத துரைக்க அறிதலென்றது.

திருவாசகச் சிறப்பு:

அறம்பெருகும் பெருந்துறையிற் றமையாண்ட செயல்முதலா யரன் [சிராட்டின்
திறமறிவா ரெம்பிரா ஞவரென வுரைத்தறிரு வார்த்தையாகும்.

(பழைய புராணம்)

யோர்களே என்னை இரட்சிக்கும் கடவுள் என்றே அருளியதைக் காண்க. (1)

588. இனி, பார்ப்பதியம்மைக் கருள்வன் என்ற (தி. - ன.) :—

மாலயன் வானவர் கோனும்வந்து
வணங்க வவர்க்கருள் செய்தவீசன்
ஞால மதனிடை வந்திழிந்து
நன்னெறி காட்டி நலந்திகழும்
கோல மணியணி மாடநீடு
குலாவு மிடைவை மடநல்லாட்குச்
சீல மிகக்கரு ணையளிக்கும்
திறமறி வாரெம்பி ரானுவாரே.

(இ - ள்). சிரடியார்களே ! கேண்மோ ; திருமாலயன் இந்திரன அடிதொழ அவரவர் பரிபாக பக்குவத்துக்குத் தக்கதாக அருள்பவனை ஈசன் ; அவனே சகளீகரித்து மண்மிசை எழுந்தருளி, ஆன்மாக்களை நன்னெறியான திருவடி சேர்வதான அன்பே இன்பாய் அருளுவதாகச் சிவரத்தினத்தால் பணி செய்த திருமாளிகையில் இடைவிடாது எழுந்தருளும் பார்வதி அம்மைக்குச் சிவகுணமே தானுகப் பெருங்கருணை அருள்வதான வல்லமையை அருளால் அறிபவர்களே, என் பிரானுவார் என அருளியதைக் காண்க. (2)

---

587. அருளறிவார் எம்பிரான் ஆவர் என்பது கருத்து. மலர் - அன்பரின் மனமாகிய மலர். குலாவு - அடிக்கடி பேசிக்கொண்டாடும். குணம் - சாட்குணிய இன்பம். இழிந்து - இறங்கி. பாகன், வாசகன், சோதி, கருணை, நீதி, புண்ணியன், பிரமன் என்பன இறைவனைக் குறிப்பன.

588. இடைவை என்பதற்கு இடைவிடாது எழுந்தருளும் என்று பொருள் கொண்டு, பார்வதியம்மைக்கு உபதேசம் செய்தமையைக் கூறுகின்றார். பிறர், இடைவை என்பது திருவிடை மருதூரைக் குறிக்கும் என்று கொண்டு அங்குச் சிவபிரான் வரதுண பாண்டியன் மனைக்கு அருளிய வரலாற்றைச் சுட்டுவர். திருவிடை மருதூரை இந்நூலில் வேறிடங்களில் இடைவை என்னும் பெயரால் ஆசிரியர் சுட்டாமை காண்க.

589. இனி, அடியார் பொருட்டுத் திருத்தோணிமேல் எழுந்தருளிப் பாசவலை வீசித் திருவிளையாடல் செய்தமையைக் கூறும் (தி. - ன.) :—

அணிமுடி யாதி யமரர்கோமான்
ஆனந்தக் கூத்த னறுசமயம்
பணிவகை செய்து படவதேறிப்
பாரோடு விண்ணும் பரவியேத்தப்
பிணிகெட நல்கும் பெருந்துறையெம்
பேரரு ளாளன் பெண்பா லுகந்து
மணிவலை கொண்டுவான் மீன்விசிறும்
வகையறி வாரெம்பி ரானுவாரே.

(இ - ள்). சீரடியார்களே ! கேண்மோ ; திருவருளழகு போன்ற சடாமகுட ஆதி; தேவதைதகட்கு மகாதேவன்; ஞாலனந்த நடராசன்; அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய் வேருங் குறியாகக் குடிலாந்த பொற்றேணி தங்கி யிருந்த பெருவாழ்வு ; இங்கெனையாளுடையான் ; உமையோடு பாரார் விசும்பார் துதிசெய்ய, சீவரத்தினச்சோதி பாசவலை சொண்டே எல்லா உயிர்ப்பாச விமோசனமாகக் கருணை வியாபகவிச்சை ஞானவகையாக அறிந்து நிட்டாபரர் ஆவார்களே ; அவ்வடிகளே எனதுயிர் ரட்சகர்—என அருளியதைக் காண்க. (3)

590. இனி, வேடத் திருவுருவான செய்தியைக் கூறும் (தி. - ன.) :—

வேடுரு வாகி மகேந்திரத்து
மிகுகுறை வானவர் வந்து தன்னைத்
தேட இருந்த சிவபெருமான்
சிந்தனை செய்தடி யோங்களுய்ய

---

589. ஆதி - முதல்வன். பணி வகை செய்து - அவரவரும் பணியும் வகையை அருளி. படவு - படகு. பால் - இடப்பக்கம். படவதேறி, மணிவலைகொண்டு, வான்மீன் லிசிறும் வகை என இயைக்க. இது வலை வீசிய திருவிளையாடலைக் குறிக்கும் என்று பிறர் கூறுவர். இவ்வுரை பொதுவகையாக உரை கூறுவதைக் காண்க.

ஆட லமர்ந்த பரிமாஏ றி
ஐயன் பெருந்துறை ஆதியங்காள்
ஏடர் கலேயெங்கும் ஆண்டுகொண்ட
இயல்பறி வாரெம்பி ரானுவாரே.

(இ - ள்). சீரடியார்களே! கேண்மோ; நமது பரமசிவன் திருமயேந்திரமென்கிற திருப்பதியிலே வேடத் திருவுருவாய் எழுந்தருளி இருப்பதைத் தேவர்களும் அறியார்களே. சிவபெருமானே சிந்தனை செய்து அடியோங்கள் அநுக்கிரகம் பெறும் வண்ணம் நன்னடனம் செய்யும் பரிமேலழகரானவர் திருப்பெருந்துறையில் அநாதியே அக்காலம் ஞானவுபதேசமான செவி யுணராமாக்களே எவ்விடம் அடிமை செய்த வண்ணவொழுக்கக் குணப்பெருமை தெரிந்தோர்களே, எனது கடவுள்! என அருளியதைக் காண்க. (4)

591. இனி, வண்டோதரியானவடிகட் கருளியதைக் கூறும் (தி. - ன.):—

வந்திமை யோர்கள் வணங்கியேத்த
மாக்கரு ணைக்கட லாயடியார்
பந்தனை விண்டற நல்குமெங்கள்
பரமன் பெருந்துறை ஆதியங்காள்
உந்து திரைக்கட லிலக்கடந்தன்
றேரங்கு மதிலிலங் கையதனில்
பந்தணை மெல்விர லாட்கருளும்
பரிசறி வாரெம்பி ரானுவாரே.

(இ - ள்). சீரடியார்களே! கேண்மோ; நமது திருப்பெருந்துறையில் அநாதியே தேவர்கள் வணங்கித் துதிக்கக் கருணைக் கடலான அடியார் பாச விமோசனம் அருளும் பரமசிவன், எற்றும் திரையுடைய கடலிலக் கடந்து இலங்கைக் கெழுந்தருளி வண்டோதரி

---

590. மகேந்திரத்தில் வானவர் தம்மைத் தேட இறைவர் வேடவுருவுடன் இருந்தார் என்று கூறப்பட்டது. நடனம் செய்யும் பரி என்க. ஏடர்கள் - செவியுணராமாக்கள் என்றார். எங்கும் ஆண்டுகொண்ட என்றமையால் கடலில் வலஞராகவும், மலையில் வேடுவராகவும், நிலத்தில் பரியாளராகவும் அவ்வவர் நிலைமைக்கேற்ப வேடங்கொண்டு ஆண்டமை கூறப்பெற்றது என்க.

யம்மைக்கு அநுக்கிரகம் செய்த குணத்தை அருளால் அறிபவர் களே, எமது கடவுள்—என அருளியதைக் காண்க. (5)

592. இனி, திருவருட்கோல வுருவாகி திருமுலைப்பாலளித்த செய்தியைக் கூறும் (தி. - ன.) :—

வேவத் திரிபுரஞ் செற்றவில்லி
வேடுவ னுய்க்கடி நாய்கள்சூழ
ஏவற் செயல்செய்புந் தேவர்முன்னே
எம்பெரு மான்ரு னியங்குகாட்டில்
ஏவுண்ட பன்றிக் கிரங்கியீசன்
எந்தை பெருந்துறை யாதியன்று
கேவலங் கேழலாய்ப் பால்கொடுத்த
கிடப்பறி வாரெம்பி ரானுவாரே.

(இ - ள்). சீரடியார்களே ! கேண்மோ ; நமது பரமசிவன் திரி புரம் புன்சிரிப்பால் எரியச்செய்து, மேருவை வில்லாகத் திருக்கையி லேந்திய சுவாமி ; வேடத்திருவுருவுடையராய்க் கைப்பிடியாக வேத சொரூபமான நாய்கள் சூழ்ந்துவர, அடிமைப்பணி செய்யும் தேவர்கள் கண்காண, எனது ஆன்மநாயகன், பாசுபதம் வேண்டிய பார்த்திபர்க் காக நந்தாவனக் காட்டில் எழுந்தருளியதுமன்றி, அம்பினுல் துன்பப் பட்டும் இறக்கும் பன்றி தன் குழவிக் கிரக்கமுற்றதும், அக்குழவி பசித்தழும்போது திருவுளமிரங்கி, எமதீசன் திருப்பெருந்துறைச் சிவகுருநாதன், அநாதியே அப்போது யாவரினும் எளிமையாக, கோலத் திருவுருவாக, அப்பறட்குத் திருமுலைப்பாலளித்த ஒப்பு உவமான மில்லாப்பொருளே, அருளால் அறிபவர்களே எம்பிரா னுவார் ; என அருளியதைக் காண்க. (6)

---

591. **பந்தனை வீண்டு அற** - பாசம் பெயர்ந்து நீங்க. **உந்துதிரை** - எற்றும் அலை.

592. **திரிபுரம் வேவ** என மாற்றுக. **செற்ற** - வென்ற. **வில்லி** - வில்லையுடையவன். **கடிநாய்** - காவல் நாய்கள். **வேடுவரானமை அருச் சனனுக்காக. ஏ** - அம்பு. **உண்ட** - வைத்த. **கேவலம்** - எளிமையாக ; பேச்சு வழக்கு. **பறன்** - குட்டி. **கேழல்** - பன்றி. **கிடப்பு** - இயல்பு.

593. இனி, தாணுவினோடு அத்துவித பேதமன்றிச் சும்மா விருப்பதனைக் கூறும் (தி. - ன.) :—

நாத முடையதோர் நற்கமலப்
போதினில் கண்ணிய நன்னுதலார்
ஓதிப் பணிந்தலர் தூவியேத்த
ஒளிவளர் சோதியெம் ஈசன்மன்னும்
போதலர் சோலைப் பெருந்துறையெம்
புண்ணியன் மண்ணிடை வந்துதோன்றிப்
பேதங் கெடுத்தருள் செய்பெருமை
அறியவல் லாரெம்பி ரானுவாரே.

(இ - ள்). சிரடியார்களே! தேண்மோ; சுவாமியினுடைய செங்கமலப் பொற்பாதத்திலே வாலகிரியர் முதலான அன்பர்கள் துதிசெய்யும் நாதமேயுடைய திருவடியைப் பரிபக்குவ வான்ம நாயகியான பேதை முதலாகப் பேரிளம் பெண்ணீறுக மாதிவருஞ் சொல்லார் மகிழ்ந்தீண்டி நால்வகை மலரால் அர்ச்சனை செய்து துதித்துப் பணியாகின்ற ஒளிவளரூறு காதற்சோதியை, எம்மீசனை, நிலைமையாயுள்ள மலர்ச்சோலை சூழுந் திருப்பெருந்துறை யென் புண்ணியப் பலனை, அப்பொருட்டானே பாரில் எம்பொருட் டெழுந்தருளித் திருவடி ஞானமான பேத, அபேதாபேத, அபேத, அத்துவித உண்மையும் அவை கடந்து சும்மாவிருப்பதான மவுனானந்த விறுமாப்பான அடியார்க்கடியோ மென்ற சுவானுபூதிகத் திருவருட்பெருமை விலாச உல்லாச நிட்டாபராளராகி அறிவானந்த சொரூபரே எம்பிரானுவார்; என அருளியதைக் காண்க. (7)

594. இனி, திருவுத்தரகோசமங்கைப்பதியில் ஓவியம் போலொத்த பரிபக்குவப் பெண்களைக் கலந்தன்பருளினமையைக் கூறும் (தி. - ன.) :—

பூவலர் கொன்றைய மாலைமார்பன்
போருகிர் வன்புலி கொன்றவீரன்
மாதுநல் லாளுமை மங்கைபங்கன்
வண்பொழில் சூழ்தென் பெருந்துறைக்கோன்

---

593. நாதம் - அன்பர்கள் துதிசெய்யும் நாதம். கமலப்போது இங்குத் திருவடிகளைக்குறித்தது. பேதம் - பேத, அபேதம் முதலியன.

ஏதில் பெரும்புக ழெங்கள்ஈசன்
இருங்கடல் வாணற்குத் தியீற்றேன்றும்
ஓவிய மங்கையர் தோள்புணரும்
உருவறி வாரெம்பி ரானுவாரே.

(இ - ள்). சீரடியார்களே! கேண்மோ; நமது பரமசிவன், சோதி யிதழியைச் சூடுவதானவன்; கருமகாண்டியர் அனுப்பின புலியை உடையாகத் தரிப்பவனை செயவீரபத்திரன்; பார்ப்பதி வாமபாகன்; திருச்சோலைசூழ்ந் திருப்பெருந்துறைப்பதி யுள்ளவன்; குற்றமற்ற பெரும்புகழையுடைய எமதுயிரீசன்; திருமால் செய்த தவத்துக் காகத் திருவுத்தரகோச மங்கைப்பதியில் அக்கினியில் தோன்றிய ஓவியம்போன்ற ஞானப்பெண்களை அவர்கள் வேண்டிய வரப்பிர சாதப்படி அவர்கட்குப் பரிச தீட்சையான அன்புப்புணர்ச்சி யருளிய பேரானந்த வடிவை அருளால் அறிபவர் எம்பிரானே; என அருளி யதைக் காண்க. (8)

595. இனி, மானிடம் போல் வந்து மாயாவுரு நிகர்த்தமை யைக் கூறும் (தி. - ன.) :—

தூவெள்ளை நீறணி யெம்பெருமான்
சோதிம யேந்திர நாதன்வந்து
தேவர் தொழும்பதம் வைத்தவீசன்
தென்னன் பெருந்துறை யாளியன்று
காதல் பெருகக் கருணைகாட்டித்
தன்கழல் காட்டிக் கசிந்துருகக்
கேதங் கெடுத்தென்னை யாண்டருளும்
கிடப்பறி வாரெம்பி ரானுவாரே.

(இ - ள்). சீரடியார்களே! கேண்மோ; பரையே நீருக அணி பவன்; பெரிய பெருமானை நற்சோதி உருவுடையவன்; திருமயேந் திரப்பதி நாதன்; தானே மானிடமாக வெழுந்தருளித் தேவர்கள் வணங்கும் திருவடியை என்முடியில் சூட்டியவீசன்; திருப்பெருந் துறையிலே அடியேற்குச் சிவஞானபோதப் பேரின்ப வடிமை இயல்பு

---

594. புலி கொன்றமை தாருகா வனத்தில். இருங்கடல் வாணன்; திருமால் என்று இங்கு உரை கூறப்பெற்றது. கடலரசனுகிய செம்பட வன் என்றும், வருணன் என்றும் பிறர் பொருள் கூறுவர்.

காட்டி அடிமை யன்பால் விளையும் திருவடி காட்டி, என்மலம் கெடச் செய்து, என்னறிவில் கசிந்துருகும் கருணையை அருள்வதான சருவ வியாபகத்தை அருளால் அறிவிலறிபவரான அடிகளே எமது கடவுள்; என அருளியதைக் காண்க. (9)

596. இனி, மடவார் திருமேனியிலே வெள்வளை சாத்துவதான விழாவின்பத்தைக் கூறும் (தி. - ன.):—

அங்கண னெங்க ளமரர்பெம்மான்
[1]அடியவர்க் கமுதன் அவனிவந்து
எங்கள் பிரானிரும் பாசந்தீர
இகபர மாயதோ ரின்பமெய்தச்
சங்கங் கவர்ந்துவண் சாத்திணைந்தும்
சதுரன் பெருந்துறை யாளியன்று
மங்கையர் மல்கு மதுரைசேர்ந்த
வகையறி வாரெம்பி ரானுவாரே.

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ; நமது பரமசிவன் அழகிய மணவாளன்; அமரர்கோன்; அடியார்க்காராவமுதன்; பார்மிசை எழுந்தருளும் தம்பிரான்; இருவினைத் தொடக்கற இகபரமான இன்பமருள்வோன்; அன்புடைய சதுரப்பெருமையன்; திருப்பெருந்துறை யாண்டவன்; அநாதியே பத்தியுடைய பேதையர்கள் விளங்கும் மதுரையில் திருவிளையிலிட்ட உண்மையையும், வந்தியம்மை முதலியோர்க்கருளிய அருளையும், அருளால் அறிபவர் எம்பிரானுவார்; என்றருளியதைக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்

---

595. கேதம் - துன்பம்; மலம். இடப்பு - இயல்பு.

பி - ம். 1. அடியார்க்.

596. அங்கணன் - அழகிய கண்களையுடையவன். அவனி - பூமி. இரும்பாசம் - பெரிய பாசம். சங்கம் - வளை. வளை கவர்ந்தது மகளிர் தம் மீது கொண்ட மையலால். சாத்து - வணிகர் கூட்டம். மங்கையர் என்றதால் வளையலிட்ட திருவிளையாடலையும் பிட்டுக்கு மண்சுமந்த திருவிளையாடலையும் சுட்டினர்.

திருச்சிற்றம்பலம்

44. எண்ணப் பத்து

இனி, எண்ணப் பத்தாவன.

அகத்தியச் சூத்திரம்.

அழியாவுயிர் நிவேதன வெண்ண்ப்பத்
தொழியாவின்பத் துவகை யுரைத்தது.

பொழிப்பநுபூதியுரை—

முற்பதிகத் திருஞான அநுபூதியால் பேரானந்தம் பிரியாதுற்றும், பேதையறிவாம் பித்தர்போல ஆசையுற்றே அலந்து பணிதல் அடியேற்கு இன்றுறுமோவென்ற தெளிவுபெற்று இன்பம் பெறுதல்; அது கருத்தென வருளியது.

ஆசிரிய விருத்தமாகத் தில்லையில் ஓதியது.

597. இனி, சிரடியார் நடுவுள் இருப்ப அருள வேண்டுமென்ற (தி. - ன.) :—

பாருரு வாய பிறப்பற வேண்டும்
பத்திமை யும்பெற வேண்டும்
சீருரு வாய சிவபெரு மானே
செங்க மலமலர் போல
ஆருரு வாயவென் ஆரமு தேயுன்
அடியவர் தொகை நடுவே
ஓருரு வாயநின் திருவருள் காட்டி
என்னையும் உய்யக்கொண் டருளே.

இது, எண்ணப் பதிகம் என்று பிறரால் கூறப்படுகிறது.

திருவாசக உள்ளக்கிடை : ஒழியாவின்பத்துவகை : எ - து. தேக முதலாகிய ஆசையை அறுத்தல்.

திருவாசகச் சிறப்பு :

நிறம்வளரு மலர்ப்பொழில் சூழ்ந்தோங்கு திருத்தில்லை
[மன்றுணிமலனுமத்
திறம்பெருகு மின்பமரு ளென்றலெண்ணப் பத்தெனவும்
(பழைய புராணம்)

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; அடியேன் தனக்குத் தத்துவக் கட்டான பிருதிவிப் பிறப்பு அறவும், திருவடிக்கன்பும் அருளவேண்டும்; செந்தாமரைக் காடனைய அருளுருவே! என்னுயிரின்ப அமிர்தமே! தேவரீர் திருக்கூட்டச் சந்நிதியில் ஒருருவென்ற அறிவுருவாக அடியேனைத் திருவருளால் காட்டிப் பரமுத்திசேர அருள்வாய்; என அருளியதைக் காண்க. (1)

598. இனி, பிரியாமையும், பிரிவொன்றுதலும், பிரியிற்றரியாமையும் கூறும்'(தி. - ன.):—

உரியே னில்லே னுனக்கடிமை
உன்னைப் பிரிந்திங் கொருபொழுதும்
தரியே னேயே னின்னதென்
றறியேன் சங்கரா கருணையினில்
பெரியோ னெருவன் கண்டுகொ ளென்றுன்
பெய்கழ லடிகாட்டிப்
பிரியே னென்றென் றருளிய அருளும்
பொய்யோ எங்கள் பெருமானே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; தேவரீர் திருவடிக்கன்புடைய உரிமை யடிமைப்பணிக்குப் பக்குவமுடையனல்லேன்; ஆனலும் எப்போதும் அடிமை விலக்கல்லேன்; அடிமையல்லனென்றுற் பெத்தமுத்த மிரண்டிலும் ஆதாரமில்லாவன்; நாயான நான் ஆட் பாலவர்க்கருளுந் திறமென்னறிவாலளக்க வொண்ணேன்; எல்லா வுயிரையும் இரட்சிக்குஞ் சங்காரப் பெருங்கருணையினுலே குருவடிவாகி எழுந்தருளி, வேறென்றிருந்த வென்னை வேறின்மை பெற அறிவில் அருளாற் காட்டியது, அடியேன் அநுபவம்பெற. திருவடி யென்னுயிரிற் கண்டதும், தேவர்கட்கெல்லாம் பெரியோனுனை குருநாதன், 'இனி உன்னைப் பிரிவதில்லை' என்றருளிய உபதேசமும் என்னளவே பொய்த்தனவோ? ஆன்மநாதனே! என அருளியதைக் காண்க. (2)

---

597. பார் உரு - பிருதிவியின் வடிவான உரு. பாருரு - பருத்த உரு எனலும் ஆம்; பூமியில் உருக்கொண்ட என்றும் கூறுவர். ஒருருவாய - ஒப்பற்ற உருவாய என்றும் கூறலாம்; அனைத்தையும் சிவமாகக் காணக் கூடிய என்றும் கூறுவர்.

598. உனக்கு அடிமை உரியேன் அல்லேன் என இயைக்க. இன்னது - அருளும் திறம் இத்தகையது. கண்டுகொள் - 'என்னை அறிந்து கொள்' என்றது.

599. இனி, ஆன்ம நிவேதனங் கூறும் (தி. - ன.) :—

என்பே யுருக நின்னரு ளளித்துன்
இணைமல ரடிகாட்டி
முன்பே என்னை யாண்டுகொண்ட
முனிவா முனிவர் முழுமுதலே
இன்பே யருளி யெனையுருக்கி
உயிருண் கின்ற வெம்மானே
நண்பே யருளா யென்னுயிர்
நாதா நின்னருள் நாணுமே.

(இ - ள்). ஆண்டவனே ! ஓர் விண்ணப்பம் ; தேவரீர் அநாதியே அறிவுளுக என்புருக்கத் திருவடி காட்டி, அடிமை கொண்ட திருச்சடைமுடியோய் ! தபோதனர்கட்குயிர் முதலே ! அடியேற்குப் பேரானந்தம் அருளி அன்பால் உருக்கி உயிரைப் பலியாகத் திருவடிக் கீழ் வியாப்பியஞ் செய்யும் எனதப்பனே ! திருவடிக்கன்பே யருள வேண்டும்; ஆன்மநாதனே! அடியேன் அடிமைப் பண்புளன் அயலல் லேன் ! திருவருள் வெட்காது பாதுகாக்க வேண்டும் என விரந் தருளியதெனக் காண்க. (3)

600. இனி, திருவடியை அகன்று நில்லேனென விரந்த (தி. - ன.) :—

பத்தில னேனும் பணிந்தில னேனுமுன்
உயர்ந்தபைங் கழல்காணப்
பித்தில னேனும் பிதற்றில னேனும்
பிறப்பறுப் பாயெம் பெருமானே
முத்தனை யானே மணியனை யானே
முதல்வனே முறையோவென்
றெத்தனை யானும் யான்றொடர்ந் துன்னை
இனிப்பிரிந் தாற்றேனே.

(இ - ள்). ஆண்டவனே ! ஓர் விண்ணப்பம் ; அடியேன் பிறவி யற எத்தவயோக முயற்சியாலுங் கூடாதென, திருவடிக்கே அன்பு செய்யத் தொடர்வனல்லேன் ; திருவருட்பணி செய்கின்றிலன் ;

---

599. முன்பே - திருப்பெருந்துறையில் ஆட்கொண்ட காலத்து. நாணுமே - கூசாமல்.

ஆகிலும் அத்திருவடி காணப் பிச்சியாகின்றிலன்; அன்றியும் ஞானப்பிதற்றலுமுடையேன் அல்லன்; ஆகலும், இனிப் பிறவா வண்ணம் அருளவேண்டும்; முத்தையா! மணியையா! ஆன்ம நாதனே! ஓலம்! சிறுபொழுதேனும் அடியேன் தொடர்வதான பாவி இனிப்பிரிவாகிப் பிழைப்பாவேனே? திருவுளமறியாதோ? என அருளியதை அன்புறுதலாகக் காண்க. (4)

601. இனி, திருவருள் நேர்பெற வுணர்விலவரினுமுயிர்வேட்குவதான (தி. - ன.):—

காணும தொழிந்தேன் நின்றிருப் பாதம்
கண்டுகண் களிகூரப்
பேணும தொழிந்தேன் பிதற்றும தொழிந்தேன்
பின்னையெம் பெருமானே
காணுவே யழிந்தேன் கின்னினைந் துருகும்
தன்மையென் புன்மைகளாற்
காணும தொழிந்தேன் நீயினி வரினும்
காணவும நாணுவனே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; நாதனே! தேவரீர் திருவருண் ஞானத்தை எனதறிவாற் காண்பதளவையையொழிந்தேன்; எனது கண் களிப்பெய்துவதையும் ஒழிந்தேன்; வணங்குவதுமொழிந்தேன்; ஞானத்தாலுறும் பிதற்றுதலும் துறந்தேன்; எனவே, சுவாமி! என் ஆன்மநாதனே! தாணுவடிவே! அடியேன் அறிவால் நினைந்து யோக பாவனை செய்வதும், அவற்றால் உருகுவதும் ஓர் வடிவைக் காண்பதும், ஒழிந்தன; தற்போதங் கெட்டேன்; ஆண்டவனே! எவ்விடத்தே திருவடி யெழுந்தருளினும் இவ்வளவு காலமறியாதே பிரிந்து உயிர் வாழ்ந்தோமே யெனத் தம்மைக்காண நாணியே பூவும்நீருங் கொண்டு நிற்பன்; என அருளியதைக் காண்க. (5)

---

600. பத்து - பற்று; அன்புத் தொடர்ச்சி. இத்தனை யானும் - சிறுபொழுதேனும்.

601. கண்டுகண் களிகூரப் பேணுமது ஒழிந்தேன். கண்டு களிப்பதையும் வணங்குவதையும் செய்யவில்லை. காணவும் நாணுவன் என்றது இதுகாறும் தாம் செய்த புன்மைகளே எண்ணி.

602. இனி, உயிரை யருள வேண்டுமென்றிரந்த (தி. - ன.):

பாற்றிரு நீற்றெம் பரமனைப்
பரங்கரு ணையோடு மெதிர்ந்து
தோற்றிமெய் யடியார்க் கருட்டுறை யளிக்கும்
சோதியை நீதியிலேன்
போற்றியேன் அமுதே எனதினைந் தேத்திப்
புகழ்ந்தழைத் தலறியென்னுள்ளே
ஆற்றுவ னுக உடையவ னேயெனை
ஆவவென் றருளாயே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; நாதனே! திரு மேனியில் பால்போன்ற நீறணி கடவுளே! அடியேன் அறிவு விளங் கப் பாரம்பரியமான திருவருளோடும் உணர்வு நேர்பெற வருஞ் சிவபோகமாகவே தோன்றி, உண்மை யடியார்க்கு அருட்டுறை யளிக்கும் பொருட்சுவைச் சோதியே! அடிமைத்திற நீதியில்லேன்; போற்றுகின்றேன்; என்னுயிர் அமுதே! என மனத்துள் வணங்கித் துதித்தழைப்பதானல் அறியாமையுடையனை இரட்சிப்பதாக; என்னையுடையோய்; ஆவ என என்னை வரக்கூவி அழைத்தரு ளாயோ? அருள்வதே கடன்; என வருளியதைக் காண்க. (6)

திருச்சிற்றம்பலம்

---

602. பால் திருநீறு - பால்போன்ற திருநீறு. பரமனே, சோதியை என்றவற்றைப் பரமனே, சோதியே என்று கொண்டு பொருள் கூறு கின்றார். உன்னை நினைந்து, ஏத்தி, புகழ்ந்து, அழைத்து, அலறி என் னுள்ளே ஆற்றுவனுக உடையவன்; என்றியைக்க.

திருச்சிற்றம்பலம்

45. யாத்திரைப் பத்து

இனி, யாத்திரைப் பத்தாவன.

அகத்தியச் சூத்திரம்.

யானென தறுமுரை யாத்திரைப் பத்து
ஊனமில் அனுபவா தீதமுரைத்தது.

பொழிப்புரை.

முற்பதிகக் குஞ்சிதபாதப் பேராவின்பப் பெருங்கடல் அழுந்திச் சிவானந்தம் பெற்று அறிவே சிவமாய்ச் சாக்கிராதீதத்தன்மை பெற்ருல், 'விந்து முதல் ஐம்பெரும்பூத மீருங்கரணங்களெ'வையுமருளாய் முத்தித்துணையாய், முடியு முறைமையாதலால், அத்தகுமின்பத் தோடு அருள் வீடடைதற்குத் தம்பரிசனமாக உவந்த அநுபூதி.

ஆசிரிய விருத்தமாகத் திருத்தில்லை யிலோதியது.

603. இனி, திருவடியடைய நற்காலமருள்வதான (தி. - ன.) :

பூவார் சென்னி மன்னனெம்
புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவா துள்ளங் கலந்துணர்வா
யுருக்கும் வெள்ளக் கருணையினல்
ஆவா வென்னப் பட்டன்பாய்
ஆட்பட் டீர்வந் தொருப்படுமின்
போவோங் காலம் வந்ததுகாண்
பொய்விட் டுடையான் கழல்புகவே.

---

45. திருவாசகத் திருவுள்ளக்கிடை : அநுபவாதீதம் உரைத்தல் எ - து. முதலாய ஆசையை யறுத்தல்.

திருவாசகச் சிறப்பு :

அறம்பெருகும்பெருந்துறையிற்றமையாண்டசெயன்முதலாயரன்
[சோட்டின்
நிறமறிவாரெம்பிரானுவரெனவுரைத்தநிருவார்த்தையாகும்.

(பழைய புராணம்)

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; தேவரீர் திருவருட் சத்தியான வியாக்கிரபாதரும் பதஞ்சலி பகவானுமான சீரடியார் களிருவரும். அறிவில்லாத பாவிகளாகிய நம்மைத் திருநோக்கர்லொழி யாது எமதுள்ளங் கலந்து அறிவாய், சுகவாரியாய், ஏகவுருவாய், இருப்பதைக் காட்டி., ஆச்சரியமாக அன்புருகக் காட்டி ஆண்டமை யால், குஞ்சிதபாத அடிமையாளேம்; இப்போது ஆளாவோம்; நமக்கோ திருவடி சேர்வதான காலம் நேர்பட்டமையால் தத்துவக் குப்பையையும் உதறிப் பரமுத்தி குஞ்சிதபாதமடைவோம், வம்மின்; செகத்தீரே! என அருளியதைக் காண்க. (1)

604. இனி, தளராத பேரன்பருள்வதைக் கூறும் (தி. - ன.):

புகவே வேண்டா புலங்களினீர்
புயங்கப் பெருமான் பூங்கழல்கள்
மிகவே நினைமின் மிக்கவெல்லாம்
வேண்டா போக விடுமின்கள்
நகவே ஞாலத் துள்புகுந்து
நாயே யனைய நமையாண்ட
தகவே யுடையான் றனைச்சாரத்
தளரா திருப்பார் தாந்தாமே.

(இ - ள்). சீரடியார்களே! கேண்மோ; இனி நீங்கள் விஷய ரூப விந்திரியப் புலன்வழி செல்வ தொழிமின்; ஞால நிருத்தர் குஞ்சிதபாதத்தை இடைவிடாது தியானஞ் செய்மின்; மற்ற தத்து வத் தொடர்ச்சியான போகமொழிமின்; விசுவத்தார் நகை செய்வ தான ஒன்றுக்கும் பற்றுத நாயனை, ஞாலத்திலெழுந்தருளி, நம்மை யடிமை செய்த திருவருட் பெருந்தகை யுடையவனை அன்படிமையால் அபேதவத்துவிதமாக நிட்டையிலே நட்டமாகச் சும்மா விருப்போ

---

603. பூவார் சென்னி மன்னன் எம் புயங்கப் பெருமான் என்பது சிவபிரானைக் குறிக்கும்: இங்கு வியாக்கிரபாதரையும் பதஞ்சலியையும் குறிப்பதாக உரை கூறுகின்றது. பூ ஆர் சென்னி - மலர் பொருந்திய சிரத்தையுடைய; புயங்கம் - ஒரு வகைக் கூத்து. பாம்பு என்றும் கொள்ள லாம். ஓவாது - நீங்காமல். வெள்ளக் கருணையால் - கருணைப் பெருக் கால். ஆவா என்னப்பட்டு ஐயோ எனப்பட்டு. ஒருப்படுமின் - ஒன்று சேருங்கள்.

மாஞல், துன்பம் அடராது ; இன்பாவோம் இத்தேகத்திலே தானே ; என வருளியதைக் காண்க. (2)

605. இனி, திருவடியே குறிப்பாகக் கொள்வதைக் கூறும் (தி. - ன.) :—

தாமே தமக்குச் சுற்றமும்
தாமே தமக்கு விதிவகையும்
யாமா ரெமதார் பாசமா
ரென்ன மாய மிவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும்
அவன்றன் குறிப்பே குறிக்கொண்டு
போமா றமைமின் பொய்நீக்கிப்
புயங்க ளுள்வான் பொன்னடிக்கே.

(இ - ள்). சிரடியார்களே ! கேண்மோ; பரமுத்த பஞ்சகிர்த்திய குஞ்சிதபாதமே நமக்குத்தமர்கள் ; அவையே விதி ; விலக்கு வேறு ளவோ ? தந்தையார் ? தாயாரார் ? உடன்பிறந்தார் யார் ? சுற்றத் தார் யார் ? தாரமார் ? புத்திரரார் ? தாந்தாமாரே ! மாயமாமிவையே யான தால், உண்மை வினவில், ஆன்மநாதனின் சிரடியருடன் நாமும் அவர் கொண்டியிற்பட்டு, மறக்கினுங் குறிக்கொண்மின் ; சுவாமி குஞ்சித பாதக்குறியே குறியாகத் திருவடி போயடைமின், சமாதியை; யானென தென்றவைடலாசை நீக்கி, நடராசரணிய பாதமே கதியாக ; என அருளியதைக் காண்க. (3)

606. இனி, திருக்கைலாசச் சிவானந்த சுவாநுபூதி யருள்வ தான (தி. - ன.) :—

அடியா ரானீ ரெல்லீரு
மகல விடுமின் விளையாட்டைக்
கடிசே ரடியே வந்தடைந்து
கடைக்கொண் டிருமுன் திருக்குறிப்பைச்

---

604. புலன்களில் புகவே வேண்டா என்றியைக்க. நகவே - உல கத்தார் நகைக்கவே. தகவு - தகுதி (கிருபை).

605. தாம் - இறைவர். என்ன மாயம் இவை போக - இவை யெல்லாம் மாயையே ; இவை ஒழிக. அடிக்கே அமைமின் என்றியைக்க.

செடிசே ருடலைச் செலநீக்கிச்
சிவலோ கத்தே நமைவைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன் றன்
பூவார் கழற்கே புகவிடுமே.

(இ - ள்). சீரடியார்களே ! கேண்மோ ; நமது தத்துவ காரிய மும் அக்கர்த்தாக்களும் நாதனடிமையாகி விட்டதால் உங்களுடைய கிறுதான(?) பஞ்சகிர்த்திய விளையாட்டை விட்டு விடுமின் ; ஏனெனிற் சிவமணம் பூத்த குஞ்சிதபாதத்தை உவந்து அபேத அத்துவித நிட்டையான அடிமை யன்பநுபூதி மறவாது அவன்றன் அருட் குறிப்பே குறிப்பாக அறிவுற்றுச் சிவன் முத்த தசையே பரமுத்தி யாகக் கயிலாசமான கமல நடுவணையிலே வைப்பன் ; நீறணி கடவுளான நடராசன் தனது சருவ வியாபகக் குஞ்சிதபாதத்தின் கீழ்க் குட்பட்டிருப்பதான வியாப்பியமாகவே ; என அருளியதைக் காண்க.

607. இனி, பரம வீடான திருக்கதவமன்பால் வெளிப்படுவதான (தி. - ன.) :—

விடுமின் வெகுளி வேட்கைநோய்
மிகவோர் காலம் இனியில்லை
உடையான் [1]கழற்கீழ்ப் பெருஞ்சாத்தோ
டுடன்போ வதற்கே யொருப்படுமின்
அடைவோம் நாம்போய்ச் சிவபுரத்துள்
அணியார் கதவ தடையாமே
புடைபட் டுருகிப் போற்றுவோம்
புயங்க னுள்வான் புகழ்களையே.

(இ - ள்). சீரடியார்களே ! கேண்மோ ; விட்டு விடுங்கோள் காமம் வெகுளி மயக்க நோய்களே ; குற்ற மிகுதியாகுங்கால் மேல் விளைவதில்லை ; 'புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றேன்' என்றும், 'கண்ணினுல் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தலே பரமுத்தி' யெனவும் ஆன்மலாப நிட்டை சேருமின் ; தற்போத மடங்கப் புக்கு, ஒன்றி, உடனுகக் கயிலாச மோட்சவாயிலை, 'அன்பிற்கு

---

606. விளையாட்டு - மானிடர் செய்யும் செயல்களை விளையாட்டுச் செயல்கள் என்றார். கடி - (சிவ) மணம். கடைக்கொண்டு - உறுதியாகக் கொண்டு. செடிசேர் உடல் - பாவங் கலந்த உடல். பொடி - நீறு.

பி - ம். 1. அடிக்கீழ்ப்.

முண்டோ வடைக்கும் தாழ்' என பொற்கதவத்தடியிலே கருணையா லுருகித் துதிப்போம்; பரமுத்த நடனஞ் செய்யும் திருப்புகழ்களையே! என அருளியதைக் காண்க. (5)

608. இனி, சீரடியாருளன்றிச் சிவலோகங் கிடைப்பதரிதென்ற (தி. - ன.) :—

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்
புயங்கன் தாளே புந்திவைத்திட்
டிகழ்மின் எல்லா அல்லலையும்
இனியோர் இடையூ றடையாமே
திகழுஞ் சீரார் சிவபுரத்துச்
சென்று சிவன்தாள் வணங்கிநாம்
நிகழுமடியார் முன்சென்று கெஞ்சம்
உருகி நிற்போமே.

(இ - ள்). சிரடியார்களே! பரமுத்த யாத்திரை குஞ்சிதபாதச் சிவலோகஞ்சேரக் கேண்மோ; திருவடியைத் துதியுங்கள்; அட்டாங்க, பஞ்சாங்க அங்கப் பிரதட்சிணஞ் செய்யுங்கள்; நால்வகை மலராலர்ச்சனை செய்யுங்கள்; ஞானநடராசப் பொருளையே தியான பாவனை செய்யுங்கள்; பிறவித் துன்பத்தை இகழுங்கள், துன்பமே யகல; சிறப்புப் பொருந்திய சிவபுரவருளிற் சென்று, பரமசிவனை அடிபணிந்து, சிவானந்த போகரான அடியார் சந்நிதியில் மனம் அன்பாலுருகி நிட்டையாவோம்; இவையே வீடென வருளியதைக் காண்க: (6)

---

607. காலம் இனி இல்லை என்றதால், விரைவினைச் சுட்டினார். சாத்து - கூட்டம். அடையாமே - அடையாமல். புடைப்பட்டு - பக்கத்திலே நின்று.

வெகுளி முதலியவற்றை விட்டு, சிவபுரவாயில் திறந்திருக்கும் இப்போதே அங்குச் சென்று அவன் திருத்தாள் அடைவோம் என்கின்றார்.

608. புனைமின்-அலங்கரியுங்கள். புந்தி-புத்தி. அல்லல் - துன்பம். இடையூறு - அடையாமே அல்லலை இகழ்மின் என்று கூட்டுக. நிகழும், அங்கு வாழ்கின்ற.

609. இனி, பரமுத்தி யாத்திரை கூறும் (தி. - ன.) :—

நிற்பார் நிற்கநில் லாவுலகில்
நில்லோ மினிநாம் செல்வோமே
பொற்பா லொப்பாந் திருமேனிப்
புயங்க ளுள்வான் பொன்னடிக்கே
நிற்பீ ரெல்லாந் தாழாதே
நிற்கும் பரிசே யொருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தாற்
பெறுதற் கரியன் பெருமானே.

(இ - ள்). சீரடியார்களே! கேண்மோ; பரமசிவன் திருவடியும் வீட்டுலகின்கண் நிற்கும் உண்மை அடியார் யாத்திரை செல்ல, அடியோம் மாயா உலகில் நிற்பதழகோ? திருவடி தேசயாத்திரை நிட்டை கூடுவோம்; அவ்விட மெவ்விடமென்னில், பொன்போலொளிர்வதான திருவுருவுடையான் நிருத்த வின்பன், அடியேனை அடிமை கொள்ளும் பொன்னங்கழலே; அவையே வீடென நிட்டை பொருந்துங்கள்; குறைவிலாப் பூரணமாவீர்கள்; அச் சமாதிக்கே அறிவால் திடமாவீர்கள்; இவையன்றி, வேறுகிப் பெருமை யின்பமாக எண்ணமுற்றீர்களாகில், பேரூன பரமுத்திச் சுவாநுபூதி அருளாது; அரியனை பெருமான்; என அருளியதைக் காண்க. (7)

610. இனி, பரமுத்தி குஞ்சிதபாதம் வெளிப்படுதலைக் கூறும் (தி. - ன.) :—

பெருமான் பேரா னந்தத்துப்
பிரியா திருக்கப் பெற்றீர்காள்
அருமா லுற்றுப் பின்னைநீர்
அம்மா வழுங்கி யரற்றுதே
திருமா மணிசேர் திருக்கதவம்
திறந்த போதே சிவபுரத்துத்
திருமா லறியாத் திருப்புயங்கன்
திருத்தாள் சென்று சேர்வோமே.

---

609. நிற்பார் நிற்க என்றதற்கு யாத்திரை செல்லும் அடியார் செல்ல என்று பொருள் கூறுகின்றார். பொற்பு - அழகு. ஒப்பாம் - தனக்குத்தானே ஒப்பாகும் என்று கூறலாம். பேழ்கணித்தால் - விழித்தால்; தன்னை மிகமதித்தல் என்று பொருள் கூறுகின்றார். பெற்பு - அழகு. ஒப்பாம் - தனக்குத்தானே ஒப்பாகும் என்று கூறலாம்.

(இ - ள்). சீரடியார்களே ! கேண்மோ ; மூதறிவார்க்கு அம்மை யும் இம்மையே யாமென்ற சிவானந்த போகத்தைப் பிரியாவண்ணம் ஆண்மலாப நிட்டாபராளானீர்கள் ; இனி இடருற்று வீணே, வீடெவ்விடம் ? எனத் துன்பால் வாயால் அரற்றாது, குஞ்சிதபாத ரகசிய இரத்தினமணி மன்றுள் திருக்கதவத் திரோதான சத்தி தானே திருவருள் இன்பசத்தி சுவாநுபூதியாங்காலமே, சிவபுரமான திருக்கயிலாயத்திலே, மால்அறியா மலர்ப்பாத ஞான நடனத்தின் கீழ் சேர்வோம் ; என அருளியதைக் காண்க. (8)

611. இனி, குஞ்சிதபாத தரிசனமே சிவலோக யாத்திரை யென்ற (தி. - ன.) :—

சேரக் கருதிச் சிந்தனையைத்
திருந்த வைத்துச் சிந்திமின்
போரிற் பொலியும் வேற்கண்ணுள்
பங்கன் புயங்க னருளமுதம்
ஆரப் பருகி யாராத
ஆர்வங் கூர அழுந்துவீர்
போரப் புரிமின் சிவன்கழற்கே
பொய்யிற் கிடந்து புரளாதே.

(இ - ள்). சீரடியார்களே ! கேண்மோ ; திருவடி ஞானம் அறி வில் அபேத அத்துவிதமாக வாழ்வதாக நிட்டைகூடித் தெளிவாகு வீர்கள் ; பார்ப்பதி வாமபாகன், ஞானநடராசன், திருவருளின்பத் தில் அழுந்தாமல் அழுந்தி, அன்பாலின்புறுவீர்கள் நாதன் பாதத் தாமரையையே ; அவையன்றி யானெனதென்ற அபாவத்தில் அழுந் தாமே பரமுத்த யாத்திரை தரிசனமே யெனச் சிவாநுபூதி பெறுமின் ; என அருளியதைக் காண்க. (9)

---

610. பெருமாள் - இறைவனது. மால் - மயக்கம் ; இடர் என்னூர் ; அரற்றாது - புலம்பாமல்.

611. சிந்திமின் - சிந்தியுங்கள். போரில் - போர்த்தொழிலால். அழுதப் பருகி என்க. போரப்புரிமின் - மிகவும் விரும்புங்கள். போர - போக என்றும் பொருள் கூறுவர்.

612. இனி, குஞ்சிதபாதமே பரமுத்தியெனக் கொள்ளாதாரை மயக்கறிவுடையோ ரென்ற (தி. - ன.) :—

புரள்வார் தொழுவார் புகழ்வாராய்
இன்றே வந்தா ளாகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பாரார்
மதியுட் கலங்கி மயங்குவீர்
தெருள்வீ ராகில் இதுசெய்ம்மின்
சிவலோ கக்கோன் திருப்புயங்கன்
அருளார் பெறுவா ரகலிடத்தில்
அந்தோ அந்தோ அந்தோவே.

(இ - ள்). சீரடியார்களே! கேண்மோ; நமது பரமசிவன் திருவடிக்கடிமை செய்வதே பரமுத்தி யெனத்தொழுது, வணங்கி, புரண்டு, துதித்து, ஆட்செய்பாது, மயக்கறிவால் விதேகமுத்தியுண்டெனவும், காணுத பொருளெனவும் தன்னறிவதனற் கலக்கமுற்று வேறுனவர்களே! சீரடியார்போல் அறிவினுல் அடிமைத்திடம் உள்ளவர்களாகில், இச்சென்ன மொன்றிலே சீவன் முத்தனுக்கக் குஞ்சிதபாதமே பொருளென அடிமையுருவண்ணம் வீணே போவீராகில், இப்பிரபஞ்சத்திலே இனிப் பரமுத்தி பெறுவாருளரோ? ஐயையோ? என இரங்கி யருளிய பரமுத்த குஞ்சிதபாதக் கீழாகிய யாத்திரை யென அருளியதைக் காண்க. (10)

திருச்சிற்றம்பலம்

---

612. ஆளாகாதவர்களே! மருள்வீர்; மயங்குவீர் தெளிவீராகில் இது செய்மின் என்றனர். மருளுதல் - மயங்குதல். தெருளுதல் - தெளிதல்.

46. திருப்படையெழுச்சி

இனி, திருப்படை யெழுச்சியாவன.

அகத்தியச் சூத்திரம்.

திருப்படைட் யெழுச்சி பின்னமதான
பிரபஞ்சப் போர்.

பொழிப்புரை—

முற்பதிக அநுபூதியிற் பெறுங் கருவிகளில் யாவும் பெரிதாஞ் சிவனடியாரென்ற அருமைகூறி, இன்பவானந்தத்திற்கு இடையூறின்றி எழுமின் முத்திக்கு, என்றியம்பியது.

திருப்பாக் கலி விருத்தமாகத் திருத்தில்லையி லோதியது.

613. இனி, அக்கியானவதையும், ஞானவிராசன் அபிஷேகமும் கூறும் (தி. - ன.) :—

ஞானவா ளேந்துமையர் நாதப் பறையறைமின்
மானமா வேறுமையர் மதிவெண் குடைகவிமின்
[1]ஞானநீற் றுக்கவச மடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோகாம் மாயப்படை வாராமே.

(இ - ள்). சீரடியார்களே! கேண்மோ; அநாதியாயுள்ள ஆணவ மலமாயா கன்மப்படைக்கூட்டம் இடர் அடராவண்ணம் சுத்த சைதனியமாகி, படைக்கலமாகத் திருநாமம் நாவிற் பதியுங்கள்; சுவாமியினுடைய குண்டலி சத்தியினிடமாகத் தோன்றிய நாத வொலிப்பறை முழக்குங்கள்; சிவ புண்ணிய விடையைப் போதப் பரியாக ஏறுங்கள்; ஞானசந்திர கலையைக் குடையாக வியாபியுங்கள்;

---

46. திருவாசகத் திருவுள்ளக்கிடை - பிரபஞ்சப்போர் எ - து. மல விளைவற்றது :

திருவாசகச் சிறப்பு :

அல்லாத துர்க்குணமாயப் படைகள் விளையாமலருள் வாளேந்தி
நல்லோர்களி யாருமெம் மோடெய்து மெனப்படை யெழுச்சி

(பழையபுராணம்)

பி - ம். 1. ஆனநீற்

தூலதேகஞ் சூட்சுமதேகம் மந்திரதேகம் அற ஞானமே பரைநீருக முழுதுங் கவசமாய் அணியுங்கள்; குஞ்சிதபாதமே அடைக்கலமாக அத்துவிதமாகக் கும்பிட்டிருங்கள்; இவையே ஞானவபிஷேக வருபூதி யென வருளியதெனக் காண்க. (1)

614 இனி, திருவருளணி வகுப்பைக் கூறும் (தி. - ன.) :—

தொண்டர்காள் தூசிசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்டிறல் யோகிகளே பேரணி யுந்தீர்கள்
திண்டிறற் சித்தர்களே கடைக்கூழை சென்மின்கள்
அண்டர்நா டாள்வோநாம் அல்லற்படை வாராமே.

(இ - ள்). சிவனடியார்களே! கேண்மோ; மாருமலமகன்று ஞானகாச தேசமன்றுளே இருப்பதாகப் பாதுகாக்கும் வண்ணம் வினவில், சாதுக்களே! படை வகுப்பில், ஞானக்கொடிப் படையாக முன்னெழுந்தருள, பத்திமார்க்கத்தாரானவர்கள் எங்குஞ்சூழ நிட்டை யிலிருப்ப, சிவயோகிகள் பெரிய படைவகுப்பாகத் தனித்தனி அங்க முடன் பாவனை பொருந்தியிருப்ப, சித்த சுத்தியுடைய நிட்டாபரர் களான சித்தர்கள் பின்படை வகுப்பாகச் சமாதியிருந்து செல்ல, இவ்வகை நடுவுள் குஞ்சிதபாத வடிமைப்பணி அடியேன் செய்தருளச் சுவாநுபூதி யருளியதைக் காண்க. (2)

திருச்சிற்றம்பலம்

---

613. மாளம் மா - பெரிய இடபம். புகுமின் - அணியுங்கள். கவசம் என்றதற் கேற்பப் புகுமின்கள் என்றார். வான ஊர் - வீடு.

614. தூசி - முன் படை. சூழப் போதல் - சுற்றிலும் நின்று போதல்: அணி - அணி வகுப்பு. உந்துதல் - செலுத்துதல். கடைக் கூடை - பின்னணி. அல்லல் படை - துன்பப்படை.

திருச்சிற்றம்பலம்

47. திருவெண்பா

இனி, திருவெண்பாவாவன.

அகத்தியச் சூத்திரம்.

இணையிலாத வின்பத் திருவெண்பாத்
தணவாச் சிவத்தணைந்தோர் அருட்டன்மை.

பொழிப்புரை.

முற்பதிக வநுபூதியிற் சிவத்தோடு பொருந்தியுஞ் சேரிடம் வேறுமுண்டோவென்று கண்டிருந்து அதுவே யானந்தமாகி, அன்பாலின்புறல் அவ்விடமேயென வற்புதமான ஆனந்த அநுபவம்.

திருப்பா, நேரிசை வெண்பாவாகத் [1]திருத்தில்லையி லோதியது,

615. இனி, திருவருளால் மனமுருகாத கிலேமையைக் கூறிய (தி. - ன.) :—

வெய்ய வினையிரண்டும் வெந்தகல மெய்புருகிப்
பொய்யும் பொடியாகா தென்செய்கேன்—செய்ய
திருவார் பெருந்துறையான் தேனுந்து செந்தீ
மருவா திருந்தேன் மனத்து.

(இ - ள்). சீரடியார்களே! கேண்மோ; திருப்பெருந்துறைக் குருபரத் தேனை இன்பத் தீவண்ணர் அடியேனுள்ளத்தில் அபேதவத்துவிதமாக வெழுந்தருளி, அடியேனுடைய இருவினையும் திருநோக்கால் நீறுபட்டொழிக்க, யானென தென்னுந் தற்போதந் தூளா

திருவாசகத் திருவுள்ளக்கிடை : அணைந்தோர்தன்மை எ - து. பரிச வேதிபோல என்றது.

திருவாசகச் சிறப்பு :

தொன்தமா மலமொறுத்துச் சுகம்பெருக்கிப் பெருந்துறைவாழ் சோதி [யென்றன்
சிந்தனையே யூராகக் கொண்டிருந் தாரென்றுரைத்த திருவெண் [பாவாம்)
(பழைய புராணம்.

1. திருப்பெருந்துறையில் அருளியது என்பர் பிறர்.

காதே போமானால், அடிமை எவ்வண்ணம் பணி செய்வேன்? தற் செயலுண்டோ? என அருளியதைக் காண்க. (1)

616. இனி, திருவடியே யானந்தமென்ற (தி. - ன.) :—

ஆர்க்கோ அரற்றுகோ ஆடுகோ பாடுகோ
பார்க்கோ பரம்பரனே என்செய்கேன் - தீர்ப்பரிய
ஆனந்த மாலேற்றும் அத்தன் பெருந்துறையான்
தானென்பார் ஆரொருவர் தாழ்ந்து.

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ; அன்பாலன்றித் தீர்வு செய்ய வொண்ணுத எனதப்பன், திருப்பெருந்துறைக் குருநாதன், தானெனப் புகலானவன், சிவானந்த மோகமளிப்பவனே, அடியேனென் செய்வேன் எல்லில், அடி வணங்கி ஓலமிட்டுத் துயருவேன், அழுவேன், ஆடுவேன், பாடுவேன், பரம்பரன் எங்கேயோ வென்னத் தேடிப் பார்ப்பேன்; இவையன்றி வேறு காணேன்—என அருளியதைக் காண்க. (2)

617. இனி, திருவருளாலேவல் கொண்டமையைக் கூறும் (தி. - ன.) :—

செய்த பிழையறியேன் சேவடியே கைதொழுதே
உய்யும் வகையி னுபிர்ப்பறியேன் - வையத்
திருந்துறையுள் வேன்மடுத்தென் சிந்தனைக்கே கோத்தான்
பெருந்துறையின் மேய பிரான்.

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ; இற்றை நாள்வரை திருவடி மறந்த பிழை அடியேன் அறிவதில்லையே! ஏனெனில், செங்கமலபாதமே பிரிவில்லாது அடிமையான தாற் பிழைப்பு வாய்ப்பும்

---

615. பொய்யும் - பொய்மையான வாழ்வும். செய்ய - செவ்வீய. திரு - அழகு. தேன் ஊற்று தீ - இல் பொருள் உவமை. தேனை இன்பத் தீ என்று உரை எழுதுகிறார். தீ - தீவண்ணர்.

616. ஆர்க்கவோ - ஆரவாரிக்கவோ. மால் - மோகம். ஆரொருவர் - ஒருவர் செய்யக் கூடியவர் யார்? என்று பொருள்பட்டு, ஆர்த்தல் முதலியன வன்றி வேறொன்றும் செய்யவியலாது என்று பொருள் கொள்ளலாம்.

தெரியாத சுதந்தர வீவேனேன் ; உலகத்திலெழுந்தருளி ஏவற்பணி கொண்டு என் சிந்தை கோத்த கருத்தினரான திருப்பெருந்துறைக் கடவுள்—என அருளியதெனக் காண்க. (3)

618. இனி, இருள்சேரிருவினையும் அறுப்பதைக் கூறும் (தி. - ன.) :—

முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்ரூன்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன் - தென்னன்
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரந் தீர்க்கு மருந்து.

(இ - ள் . சிரடியார்களே ! கேண்மோ ; அடியேன் முன்செய்த கொடிய தீவினை இரண்டையும் அடியோடருளினல் அறுத்தவன் ; என் முன்னிலை யறுத்துத் தானே முன்னின்ரருளி இனிப்பிறவா வண்ணஞ் செய்யும் பெரிய ஆண்டவன் ; திருப்பெருந்துறையில் எழுந்தருளும் பெருங்கருணையாளன் ; இனி என்னைத் துன்பம் அடராவகை செய்யும் பிணிக்கும் மருந்து ;—என அருளியதைக் காண்க. (4)

619. இனி, சிந்தையைப் பிரியாது நின்றவன் என்ற (தி. - ன.) :—

அறையோ அறிவார்க் கனைத்துலகு மீன்ற
மறையோனும் மாலுமால் கொள்ளும் - இறையோன்
பெருந்துறையுள் மேய பெருமான் பிரியா
திருந்துறையும் என்னெஞ்சத் தின்று.

(இ - ள்). சிரடியார்களே ! கேண்மோ ; திருவருளன்புடைய அடிகள் உள்ளமே கோவிலாகக் கொண்டோன் ; திருமாலும் அயனுங் காணாது மயக்கங் கொள்வதான சிவன் ; திருப்பெருந்துறைக்

---

617. பிழை - திருவடி மறக்த பிழை. உய்யும் வகையின் உயிர்ப்பு - பிழைக்கும் வழியின் தோற்றம். உயிர்ப்பு - வாய்ப்பு என்ரூர். உறையுள் வேல் - உறையிலுள்ள வேலை. மடுத்து - எடுத்து. திருப் பெருந்துறைக் கடவுள் தன் வேலை என் சிந்தையில் நாட்டினன் என்பர். வேல், ஞானத்தைக் குறித்தது என்று கூறுவர்.

618. இரண்டு வினை - நல்வினை, தீவினை என்பன.

குருநாதன் அடியேன் நெஞ்சத்து இன்றளவும் பிரிவில்லாத பரம சிவன் ; என அருளியதைக் காண்க. (5)

620. இனி, பித்தனைத் திருவருளுன்மத்தனுகச் செய்தமை யைக் கூறும் (தி. - ன.) :—

பித்தென்னை ஏற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதாம்
மத்தமே ஆக்கும்வந் தென்மனத்தை—அத்தன்
பெருந்துறையா னுட்கொண்டு பேரருளால் நோக்கும்
மருந்திறவாப் பேரின்பம் வந்து.

(இ - ள்). சீரடியார்களே ! கேண்மோ ; அடியேன் பிரபஞ்சப் பைத்திய குணத்தால் எற்குள தாகிய பிறப்பை நீக்கிய அருணோக் கால் வாக்குக்கெட்டாத சிவஞானமோன உன்மத்தனுகச்செய்த அப் பன் ; என மனத்தான் ; திருப்பெருந்துறைக் குருநாதன் ; அடியேனை யாண்ட பெருங்கருணையன் ; அருட்பார்வையான மருந்து ; என் இறவாத சிவானந்த போகம் ; என்னைப் போலெழுந்தருளி, அருள் வான் ; என அருளியதைக் காண்க. (6)

621. இனி, வாராவழியான அருள் அருள்வதான (தி. - ன.) :-

வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி
ஆரா வமுதா யமைந்தன்றே - சீரார்
திருத்தென் பெருந்துறையா னென்சிந்தை மேய
ஒருத்தன் பெருக்கும் ஒளி.

(இ - ள்). சீரடியார்களே ! கேண்மோ; அடியேன் இனிப்பிறவா வண்ணம் அருள்செய்து வேறின்றி ஆராத இன்ப அமிர்தாய் எழுந்தருளி அனாதியே திருப்பெருந்துறைக் குருநாதன் என் சிந்தை

---

619. மறையோனும் மாலும் மால் கொள்ளும் இறையோன் இன்று என்நெஞ்சத்து உறையும். இதனை அறிவார்க்கு அறையோ ? அறையோ-முறையோ, என்று சொல்லவோ என்றும் பொருள் கூறுவர் ; அறையோ பந்த மொழி என்றும் கூறுவர்.

620. அத்தன், துறையான், மருந்து, இன்பம் வந்து எற்றும் அறுக்கும், ஆக்கும் என்று கூட்டுக. வந்து என் மனத்தை மத்தமே ஆக்கும் என்க.

யிலெழுந்தருளிய ஏக நாயகன் உள்ளத்தே நின்ற ஒளியென அருளியதைக் காண்க. (7)

622. இனி, கீழோனே மேலோனுண்டமையைக் கூறும் (தி. - ன.) :—

யாவர்க்கு மேலாம் அளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழா மடியேனே—யாவரும்
பெற்றறியா வின்பத்துள் வைத்தாய்க்கென்
[னெம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை.

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ; நவந்தர பேதங் கடந்தும் அவர்களே அதிட்டிக்கும் திருமேனியன், நமது பரமசிவன்; எல்லாத் தேவர்கட்கும் மேலான அளவிலாச் செல்வச் சீர்ச் சிறப்பின்பவுல்லாச வாழ்வுள்ளான்; அடியேன் எல்லாச் சராசரத்துக்கும் உயிர்க்குங் கீழ்மையன்; அடியேனே, ஒருவரும் அறிவாற் பெறுவதல்லாத சுகவாரியை, என்னுள்ளத்தில் அபேதவத்துவிதமாகப் பேரின்பமருளியதற்கு என்ன கைம்மாறு செய்வது? அடிமைபாவதே கடன்; என அருளியதைக் காண்க. (8)

623. இனி, பரிமேலழகாய் எழுந்தருளிய கருணையை வியந்த (தி. - ன.) :—

மூவரும் முப்பத்து மூவரு மற்றெழிந்த
தேவருங் காணாச் சிவபெருமான் - மாவேறி
வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே யின்ப மிகும்.

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ; விட்டுணு, பிரமா இந்திரன் இவையோர் பகுதி முப்பத்துமூன்றுகோடி தேவர்களும், மகாதேவனே ஆன்மநாதன் என்றறியாத சிவபெருமான் இப்பூவிலே பரிமேலழகராய் எழுந்தருளிய திருவடியை வணக்கமுற்று அன்பிலை

---

621. ஒளி அமைந்தது என்று முடிக்க. வாராவழி - முத்தி வழி; பிறப்பு வராவழி. மாறின்றி - வேறின்றி; பகையின்றி எனலும் ஆம்.

622. செய்யும் வகை என்? அறியேன் என்று இயைக்க. வைத்தாய்க்கு - வைத்தவனுகிய உனக்கு.

ஆராதனை செய்ய என்னுடலிடத்தே பேரானந்த சிவாநுபூதி சுவாநு பூதிகமாம் என வருளியது. (9)

624. இனி, என்மனமுருக வந்தாண்டமையைக் கூறும் (தி. - ன.) :—

இருந்தென்னை ஆண்டான் இணையடியே சிந்தித்
திருந்திரந்து கொள்நெஞ்சே எல்லாம் - தருங்காண்
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
மருந்துருவாய் என்மனத்தே வந்து.

(இ - ள்). சீரடியார்களே ! கேண்மோ ; திருப்பெருந்துறையில் எழுந்தருளிச் சின்மயமாக இருந்தபடி யிருந்ததனைக் காட்டி, அடிமை செய்த குருநாதன் திருவடியே சிந்தித்து, வணங்காது வணங்கி, இரங்குவாய் நெஞ்சே ! உனக்கு சாட்சுணிய சருவஞானமும் அவன் அருள்வான் ; அவன் யாரெனில், திருப்பெருந்துறைச் சிவகுருவான பெருங்கருணையாளன் ; என் பிறவிப் பிணிக்கு மருந்துருவாகி அடியேனுள்ளம் பிரியாத சுவாமி ; என அருளியதைக் காண்க. (10)

625. இனி, என்னுள்ளமே குடியாகக் கொண்டமையைக் கூறும் (தி. - ன.) :—

இன்பம் பெருக்கி யிருளகற்றி யெஞ்ஞான்றும்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய் - அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டா னுவந்து.

(இ - ள்). சீரடியார்களே ! கேண்மோ ; நம்து சற்குரு என் உள்ளத்திலே சிவானந்தம் பெருகச்செய்து, என்னுடைய மலவிருணீக்கி, எக்காலுந் துன்பம் அடராவண்ணம் ஞானத்தொளியாய் அன்புருவாக்கி, திருப்பெருந்துறைநாதன், என்னுயிரே இருப்பிடமாக்கொண்டு எழுந்தருளினன் அபேதமாக ; என வருளியதைக் காண்க. (11)

திருச்சிற்றம்பலம்

---

623. முப்பத்து மூவர் - பதினேழருத்திரர், பன்னிரண்டு சூரியர், இரண்டு அச்சுவினி தேவர், எட்டு வசுக்கள் ஆகியோர் எனலும் ஆம். மா - பரி. வந்திக்க - வணங்க ; ஆராதனை செய்ய. மெய் - உண்மையாகிய.

624. இரந்து கொள் - இரங்குவாய். தரும் - கொடுப்பான்.

625. இருள் - மலவிருள். தொடர்பு - தொடர்ச்சி.

திருச்சிற்றம்பலம்

48. பண்டாய நான்மறை

இனி, பண்டாய நான்மறை.

அகத்தியச் சூத்திரம்.

பண்டாய நான்மறைத் தொண்டாய வெண்பா
அம்மை முத்தியனு பவத்துக்குக்
கைம்மாறடிமை சும்மாதி ரென்றது.

பொழிப்புரை.

முற்பதிக அநுபவந் தானேயாய் நிற்ப, அப்பேறு பெற்ற விடமே முத்தித்தானமாய் முன்னின்றருளும் பரமசிவங் கருணையே; அதுவே யன்றி வேறநுபூதியில்லை யென்றது.

திருப்பா நேரிசை வெண்பாவாகத் திருப்பெருந்துறையி லோதியது.

626. இனி, என்னை ஆண்டதற்குக் கைம்மாறில்லை யென்ற (தி. - ன.):—

பண்டாய நான்மறையும் பாலனுகா மாலயனும்
கண்டாரும் இல்லைக் கடையேனைத் - தொண்டாகக்
கொண்டருளுங் கோகழியெங் கோமாற்கு நெஞ்சமே
உண்டாமோ கைம்மா றுரை.

(இ - ள்). சிறப்புள்ள நெஞ்சமே! கேள்; நமது பரமசிவன் திருவடியை அநாதியாயுள்ள நால்வேதங் கூப்பிட்டுங் காண்கின்றதில்லை; திருமாலும் அயனும் அறியாப்பெருமையுடைய சுவாமி; யாவர்க்குங் கடையனனை என்னைத் திருத்தொண்டுக்கு அருகனாகத் திருவடி அறியாத உண்மைய எனைச் செய்த கோகழிநாதற்குக் கைம்மாறுளவோ? நெஞ்சே! சொல்வாயாக; என அருளியதைக் காண்க.

திருவாசக உள்ளக்கிடை: அநுபவத்துக் கையமின்மையுரைத்தல்.

48. திருவாசகச் சிறப்பு:

எந்தை திருப்பெருந் துறையை யேத்து நமரே வாழ்வுற் றிடர்சேர் பாச
பந்த மறுத்திடுவ ரென்ப பண்டாய நான்மறையும் பகர்ந்ததாமே.

626. பண்டாய - பழமையாகிய. பால் - அருகே. கோகழி - திருப்பெருந்துறை. கைம்மாறு உண்டாமோ என்க.

627. இனி, நம்மை யாண்ட குருநாதனே வாழ்த்துவதே நியம மென்ற (தி. - ன.) :—

உள்ள மலமூன்றும் மாய வுகுபெருந்தேன்
வெள்ளந் தரும்பரியின் மேல்வந்த - வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்
கருவுங் கெடும்பிறவிக் காடு.

(இ - ள்). வாழி நெஞ்சமே ! கேள் ; நம்துண்மைப் பொருளான ஆணவ கன்ம மாயாமல மூன்றுங் கெடவும், அவ்விடத்தே சிவானந்த சுகவாரியான நாதன் போத பரமானந்தப பரிமேலெழுந்தருளி வரம்பி லின்பமுடைமை நமக்கருள்வதான சிவகுரு தலத் திருப்பெருந் துறையை வாயார வாழ்த்தித் துதிப்பீர்களாகில், இனிப் பிறவா வண்ணங் காடான கருவே கெடுமெ ; என அருளியதைக் காண்க. (2)

628. இனி, குருவடிவு கொண்ட கோலமருள்வதான (தி. - ன.) :—

காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டிற் பரிப்பாகன் நம்வினையை - வீட்டி
அருளும் பெருந்துறையான் அங்கமல பாதம்
மருளுங் கெடநெஞ்சே வாழ்த்து.

(இ - ள்). நன்னெஞ்சே ! கேள் ; நமது பரமசிவன் அடியார் பொருட்டு காட்டிலே வேடத்திருவுருவானவன் ; சமுத்திரத்திலே பரதவேடுருவானவன் ; நாட்டிலே பரியாளனுகத் திருவுருவான சோமசுந்தரசுவாமி ; நமது அநாதி வினையை யறுத்து அடிமைப்பணி அநுக்கிரகஞ்செய்த திருப்பெருந்துறை நற்கமலப் பொற்பாதனே நம்மயக்கறிவுகெட இடைவிடாது வாழ்த்தித் துதி, நெஞ்சே ! என அருளியதைக் காண்க. (3)

---

627. உள்ள - உண்மையான ; உகு - சிந்தும். காடான கரு என்றார். நெருக்க மிகுதியால் காடு என்றார்.

628. வீட்டி - அறுத்து. மருள் - மயக்க அறிவு.

629. இனி, சிவப்பேறு பெற்றமையைக் கூறும் (தி. - ன.) :—

வாழ்ந்தார்க ளாவாரும் வல்வினையை மாய்ப்பாரும்
தாழ்ந்துலகம் ஏத்தத் தகுவாரும் - சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சி ஏத்தும் திருவார் பெருந்துறையை
நன்றிறைஞ்சி யேத்து நமர்.

(இ - ள்). 'நிலை பெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே'! கேள்; நம்து பரமசிவன் திருவடிக்கன்பு செய்து, ஞானவீடடைந்து சுக மானுர்கள் அநேக சீரடியார்கள்; பின்னும் மகத்தான வினையையுங் கெடச் செய்தார்கள்; பின்னும், அடிவணங்கி சிவலோக சாயுச்சிய மானுர்களே! தேவர்கள் வணங்கியேத்துந் திருப்பெருந்துறைக் குருமணியை அடிவணங்கித் துதிக்கும், நம் கேளிர்கள்; என அருளிய இரக்கத்தைக் காண்க. (4)

630. இனி, குரு திருவடி தரிசனத்தைக் கூறும் (தி. - ன.) :—

நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
எண்ணி எழுகோ கழிக்கரசைப் - பண்ணின்
மொழியாளொ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண்.

(இ - ள்). நன்னெஞ்சே! உனை இரந்தேன்; கேள்; நம்து அநாதி பிரதிபந்த இடர் கெடும்படியாகத் திருப்பெருந்துறையைத் தியானஞ்செய்; எழு; முன் சமாதி செய், திருக்கோகழிநாதனை; பண்ணின் மொழியளான என் தாயோடு பிரியாவண்ணம் வாழ்வ தான திருவுத்தரகோசமங்கைநாதனை, அறிவால் தரிசனஞ்செய்; திருவருள் கூடும்; மனதே!—என அருளியதைக் காண்க. (5)

631. இனி, எல்லாத் தத்துவமும் பேரின்பமென்ற (தி. - ன.) :

காணுங் கரணங்கள் எல்லாம்பே ரின்பமெனப்
பேணும் அடியார் பிறப்பகலக் - காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்
பிரியானை வாயாரப் பேசு.

---

629. ஏத்தும் நமர் வாழ்ந்தார்களாவார்; வல்வினையை மாய்ப்பார்; உலகம் தாழ்ந்து ஏத்தத் தகுவார் என்க. திரு - செல்வம். இறைஞ்சி - வணங்கி. வாழ்ந்தார் ஆவார் - ஞானவீடடைந்து சுகமானுர்கள்.

630. பண்ணின் மொழியார் - உமாதேவி. கழியாதிருந்தவன் - நீங்காதிருந்தவன்.

(இ - ள்). என்னுண்மை மனமே! கேள்; நம்து தத்துவ கரணமான கட்புலப்படுவது அடங்கலும் காண்பானுங் காட்சியும் அற்ற சிவானந்த போகமேயாக, பேணுவாரிச்சைப்படி பிறவியகல அருளும் மகாதேவரை, மனதே! திருப்பெருந்துறைப்பிரியானே, 'பன்னஞ் சீர்வாயதுவே பார்கண்ணே பரிந்திட' வென அருளியதைக் காண்க. (6)

632. இனி, ஓர் மொழியருள்வதான (தி. - ன.) :—

பேசும் பொருளுக் கிலக்கிதமாய்ப் பேச்சிறந்த
மாசில் மணியின் மணிவார்த்தை - பேசிப்
பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தினடி என்மனத்தே வைத்து.

(இ - ள்). உற்றார்போல் உசாவும் மனதே! அநுபூதி கேள். நம்து பரம்சிவனே அன்பால் அளவளாவுதற் செய்து துதிப்போர்க்கு வேதாகம புராண சாத்திர சம்பிரதாய அநுபூதியாக விளங்கும்; அவை வாக்கிறந்த மாசிலாமணிச்சோதி; அச்சோதி குருமுதலாய் வந்தருள்வதான கண்ணினற் சொன்ன மொழியே, அநுபூதியாகக் கொண்ட பெருமை போன்ற சைவத்துறையிலெழுந்தருளிய குரு, முதலான பிறவிப்பிணி மருந்தான நல்ல சஞ்சீவியைத் தியானிப்பாய் என அருளியதைக் காண்க. (7)

திருச்சிற்றம்பலம்

---

631. *காரணங்கள் எல்லாம் பேரின்ப மெனப் பேணும் அடியார் - காணப்படுகிற கரணங்கள் யாவற்றையும் பேரின்ப வடிவாகவே காண்கிற அடியார். அடியார் கரணும் பெரியான் என்று இணைக்க.*

632. *இலக்கிதம் - குறி; இலக்ஷிதம். இலக்கு இதம் என்றும் பிரித்துப் பொருள் கொள்வர். மருந்தின் அடி - மருந்து போல்பவரின் திருவடி. என் மனத்தே வைத்துப் பிறப்பறுத்தேன் என்க.*

49. திருப்படையாட்சி

இனி, திருப்படையாட்சி.

அகத்தியச் சூத்திரம்—

கருப்படை மாறுந் திருப்படை யாட்சிப்
பரசீவ உபாதிப் பாவக மொழிதல்.

பொழிப்புரை.

முற்பதிகத் திருவருளநுபூதிக்குச் சும்மாவிருப்பதான சிவானந்த வொழிவிலொடுக்கமாகி, அணைந்தோர் தன்மைகள் யாவுஞ் சரியா, கிரியா, யோக உண்மைத்தன்மை யாகும் என்றல்; அன்றியுங் குருபரனடிமை பூண்டு திருவுளப்பணியே செய்து பான்மையாய் நிற்றல்.

திருப்பா **ஆசிரிய விருத்தமாகத் திருத்தில்லையி லோதியது.**

633. இனி, பரதவேடத் திருவுருவா யெழுந்தருளினமையைக் கூறும் (தி. - ன.)!—

கண்களிரண்டு மவன்கழல் கண்டு
களிப்பன வாகாதே
காரிகை யார்கடம் வாழ்விலென் வாழ்வு
கடைப்படு மாகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு
மறந்திடு மாகாதே
மாலறி யாமலர்ப் பாத மிரண்டும்
வணங்கிடு மாகாதே

---

49. திருவாசக உள்ளக்கிடை: சீவோபாதியொழிதல் எ - து. கிரியாருணியம்.

திருவாசகச் சிறப்பு:

வாகுதிருப் பெருந்துறையா செழுந்தருளப் பெறிலெல்லா வளங்
[கண்முற்று
மாகுமெமக் கல்லாத தாகாதென் றியம்பல் படையாட்சி யாகும்.

(பழைய புராணம்)

பண்களி கூர்தரு பாடலோ டாடல்
பயின்றிடு மாகாதே
பாண்டிநன் னுடைடை யான்படை யாட்சிகள்
பாடுது மாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து
வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து
வெளிப்படு மாயிடிலே,

(இ - ள்). சிரடியார்களே ! கேண்மோ ; பூதாகாச வடலை ஞானாகாசமாக இன்புறு வேதகத்து இரும்பு பொன்னாகச் செய்யும் பரத வேடராய்ச் சிவரத்தினச் சோதியான அருட்பாசவலையால் அடியேன் விஞ்ஞவிய குருமுதலானவன் ; என் அறிவில் அருளாய் அநுபூதிக மாகில், அடியேன் கண்களிப்புறும் அவன் திருவடி தரிசித்த வுடன் ; அடியேன் வாழ்வெல்லாம் மாதர் முலைத்தலைக்கே, இடைக்கே, கருமமாகும் ; அவையே அன்பாலுறுவேன் ; மறந்தாலுமினி இங்கு வாரேன் ; திருமாலறியாத் திருவடியே கைதொழுவேன் ; திருவடியைத் தரிசித்தவுடன் கும்பிட்டுத் தட்டமிட்டு, பண்ணிசைவாற் பாண்டியனுரடி அநுபூதியுமதுவாய்ப் போவேனென வருளியது. ஆநராணே மறக்கலுமாமே யென்றமையானும் ஆமென் கிளவியன் றெனவும், அன்றென்கிளவி ஆமெனவுங் காணத்தக்கது. இவை யொன்றுமாகாதென மொழிவாருமுளர். (1)

634. இனி, கற்றுவின் மனம் போலுருகுவதைக் கூறும் (தி. - ன.) :—

ஒன்றினை டொன்றுமோ ரைந்தினை டைந்தும்
[1]உயிர்ப்பறு மாகாதே
உன்னடி யாரடி யோமென
உய்ந்தன மாகாதே

---

633. எட்டிலுள்ளபடி பொருள் எழுதப் பெற்றுள்ளது. ஆகாதே என்பது, இறைவனைக் கண்டவருக்கு ஒரு வியாபாரமும் ஆகாது என்பதைக் குறிப்பதாகக் கொண்டு, இச்செய்யுளில் கூறினவை யெல்லாம் நிகழா என்று பொருள் கூறுவர். இச் செய்யுளின் பொருள் ஆராயத் தக்கது. இப் பதிகம் முழுமையும் இவ்வாறே உள்ளது.

பி - ம். 1. உயிர்ப்பது

கன்றை நினைந்தெழு தாயென வந்த
கணக்கிது வாகாதே
காரண மாகும லதி குணங்கள்
கருத்துறு மாகாதே
நன்றிது தீதென வந்த நடுக்கம்
நடந்தன வாகாதே
நாமுமெ லாமடி யாருட னேசெல
நண்ணுறு மாகாதே
என்றுமெ னனன்பு நிறைந்த பராவமு
தெய்துவ தாகாதே
ஏறுடை யானெனை யாளுடை நாயகன்
என்னுள் புகுந்திடி லே.

(இ - ள்). அரிய சிரடியார்களே ! கேண்மோ ; அநாதியே என் புண்ணிய விடையுடையான் அடியேனை அடிமை செய்ய என்னறிவில் அபேத வத்துவித வன்பே சித்தாந்தமாக எழுந்தருள்வதால சிறாரு பூதிக காலத்திலே, முப்பத்தாறு தத்துவ மாயா காரியம் அற்று, ஞானமேயாம் ; அடியார் அடிக்கடிமையோம் எனப் பிழைப்புறுவோம் ; கற்றவின் மனம்போல வுருகிக் கசிவோம் ; கணக்காலுள்ள அநாதி சிவகுணமாவோம் ; நன்மை தீமை வருமுன்னிலை யற்றோம் ; அடியருறவாவோம் ; உள்ளன்பு நிறைந்த வாராவமுதாவோம்—என வருளியதைக் காண்க. (2)

---

634. இச்செய்யுளிலும் 'ஆகாதே' என்ற வற்றிற்கு ஆகும் என்றே கொண்டு பொருள் கூறுகின்றார்.

ஒன்றி னேடொன்றும் ஓர் ஐந்தினே டைந்தும் என்பதற்கு இங்கு முப்பத்தாறு தத்துவங்கள் என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இதற்கு, சிவ சீவர்கள், தசேந்திரியங்கள் என்றும் பிறர் பிறவாறு பொருள் கூறுவர். அடியார் அடியார் அடியோம் - அடியார்க்கு அடியார்க்கு அடியோம் ; அல்லது அடியார்க்கு அடிக்கு நிறைந்த அடியோம் எனப் பொருள் கொள்க. கருத்துறு மாகாதே என்பதற்கு உரை எழுதப் பெறவில்லை. பராவமுது - தோத்திரிக்கப்படும் அமுதத்தை யொத்தவன்.

635. இனி, அகண்டாகார சச்சிதானந்த சொரூபசிவம் என்ற (தி. - ன.) :—

பந்தவி காரகு ணங்கள் பறிந்து
மறிந்திடு மாகாதே
பாவனை யாயக ருத்தினில் வந்த
பராவமு தாகாதே
அந்தமி லாத வகண்டமும் நம்முள்
அகப்படு மாகாதே
ஆதி முதற்பர மாய பரஞ்சுடர்
அண்ணுவ தாகாதே
செந்துவர் வாய்மட வாரிட ரானவை
சிந்திடு மாகாதே
சேலன கண்க ளவன்திரு மேனி
திளைப்பன வாகாதே
இந்திர ஞால இடர்ப்பிற வித்துயர்
[1]எய்துவ தாகாதே
என்னுடை நாயக ஞெய ஈசன்
[2]எழுந்தருளப் பெறிலே.

(இ - ள்). சீரடியார்களே! கேண்மோ; நம்முடைய ஆன்ம நாயகனுன் நாதனடியேனுளத்தில் எழுந்தருளிய அநுபவ காலத்தில், ராகத்துவேஷ புண்ணியபாவ கிரியா வாசனை முழுதும் அக்குணங் கெட்டு, திருவருளேயாம்; நினைந்த வடிவொடு விரைந்து சேறலான இன்பமாவோம்; எல்லாந் தன்னுள்ளே காட்டக் காண்போம்; அநா தியே நம்மை விட்டுப் பிரியாத பரஞ்சுடரநுபவமேயாவோம். பெண் ணுசையகல்வோம்; அவனது திருமேனியிலம்மை விளையாடக் காண் போம்; இந்திர ஜாலம் போலொத்த மயக்குப்பிறவி யற்றுமென அருளியதைக் காண்க. (3)

பி - ம். 1. எகுவது. 2. எதிர்ப்படு மாயிடிலே.

635. பந்த விகார குணங்கள் - பிறவித் தளைக்குக் காரணமான மாறுபட்ட குணங்கள்; இராக துவேஷம் முதலியன. பறிந்து மறிந்திடு - வேரற்றுத் தலைகீழாக மாறும். பாவனை - நினைவு. பராவமுது - சிறந்த அமுது; இன்பம். அந்தம் இலாத அகண்டமும் - எல்லாமும். அண்ணுவது - நெருங்குவது. சேலன கண்கள் - அம்மையின் கண்கள்.

636. இனி, குணகுணி பாவ சத்திநிலைதரினம் கூறும் (தி. - ன.) :—

என்னணி யார்முலை யாக மலைந்துடன்
இன்புறு மாகாதே
எல்லையின் மாக்கரு ணைக்கட லின்றினி
தாடுது மாகாதே
நன்மணி நாத முழங்கியெ னுள்ளுற
நண்ணுவ தாகாதே
நாத னணித்திரு நீற்றினை நித்தலும்
நன்னுவ தாகாதே
மன்னிய அன்பரி லென்பணி முந்துற
வைகுவ தாகாதே
மாமறை யும்மறி யாமலர்ப் பாதம்
வணங்குது மாகாதே
இன்னியற் செங்கழு நீர்மல ரென்றலை
எய்துவ தாகாதே
என்னையு டைப்பெரு மானரு ளீசன்
எழுந்தரு ளப்பெறிலே.

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ; என்னை அநாதியே உடைய பொருளாக அடிமை கொண்ட ஈசன் அன்புருவாய் எழுந் தருளிய பரிபாக காலத்திலே என்னை ஆபரணமாகவுடைய இன்பத் தனமுடைய பார்வதி விநோயாடல் என் உயிர் இன்புறக் கண்டேன்; அடியேன் உள்ளே குண்டலி சத்தியுடைய ஆடரவக்கிண்கிணி யோசை தரிசனமானேன்; முழுநீறு நித்தியமமாகப் பூசிய தானேன்; அன்பர் திருச்சபையில் அடியேன் அடியார் பணி முன் ஏவல் புரிவதானேன்; நான்கு வேதமும் ஓலமிட்டும் காணுத திருவடி வணங்கலானேன்; செங்கழுநீர்மாலை என் சிரசில் அணிவ தானேன்; அடியேன் ஆக; என அருளியதைக் காண்க. (4)

---

636. என்னணியார்.....இன்புறும் ஆகாதே என்பதற்கு, என் அழகு பொருந்திய தனங்கள் இறைவனின் திருமார்போடு பொருந்திச் சுகித்தலும் ஆகாமல் என்று பிறர் பொருள் கொள்வர், இவ்வுரை, இன் புறும் மாக்கருணைக்கடல் என்று கொண்டு பார்வதி தேவியைக் குறிப்ப தாகக். கூறும். நன் மணி நாதம் - குண்டலிசத்தியையுடைய ஆடர வக்கிண்கிணியோசை என்றார்.

637. இனி, திருவடி ஞானம் பெற்றவுடன் எல்லாச் சித்தியும் எய்திய (தி - ன.) :—

மண்ணினில் மாயை மதித்து வகுத்த
மயக்கறு மாகாதே
வானவ ரும்மறி யாமலர்ப் பாதம்
வணங்குது மாகாதே
கண்ணிலி கால மனைத்தினும் வந்த
கலக்கறு மாகாதே
காதல்செ யும்மடி யார்மன மின்று
களித்திடு மாகாதே
பெண்ணலி ஆணென நாமென வந்த
பிணக்கறு மாகாதே
பேரறி யாதவ னேக பவங்கள்
பிழைத்தன வாகாதே
எண்ணிலி யாகிய சித்திகள் வந்தென
எய்துவ தாகாதே
என்னை யுடைப்பெரு மானரு ளீசன்
எழுந்தரு ளப்பெறிலே.

(இ - ள்). என்னை அடிமையுடைமையாக்கி அருளேவல் கொள்ள என் உயிரில் எழுந்தருளியபோது, சீரடியார்களே ! கேண்மோ ; மண்முதற் கரணமெல்லா மாயையும், அவையால் உளதாகிய குணகாரியமும் கெட்டிடும் ; வானவர்களால் அறியாத பாதம் தொழுவோம் ; நினைத்த நாள் தொடங்கிவரா நின்ற துன்பம் அடர்வதில்லை ; இற்றையே நாம் உய்யப் பெற்றோம் எனச் சீரடியார்கள் ஆனந்தமாவார்கள் ; நம்மை அடுத்துத் தொடர்ந்த அவன் அவள் அது எனும் பிரபஞ்சமும் வீடும் ; யான் என்ற குற்றம் போம். எண்பத்துநான்கு நூறுயிரம் தாயரும் ஏங்கினார்களே ! அளவிலாத சகல சித்தியும் பெறுவதானேம் என அருளியதைக் காண்க. (5)

---

637. மாயை வகுத்த மயக்கு அறும் என இயைக்க. கண்ணிலி காலம் - கணக்கற்ற காலம் ; இப்பகுதிக்கு எழுதப்பெற்ற உரை விளங்கவில்லை. பவம் - பிறப்பு ;

638. இனி, சிரடியார் சிரடி என் முடியிற் சூடுவதென்ற (தி. - ன.) :—

பொன்னிய லுந்திரு மேனிவெண் ணீறு
பொலிந்திடு மாகாதே
பூமழை மாதவர் கைகள் குவிந்து
பொழிந்திடு மாகாதே
மின்னிய நுண்ணிடை யார்கள் கருத்து
வெளிப்படு மாகாதே
வீணை முரன்றெழு மோசையி லின்பம்
மிகுத்திடு மாகாதே
தன்னடி யாரடி யென் தலைமீது
தழைப்பன வாகாதே
தானடி யோமூட னேயுய வந்து
தலைப்படு மாகாதே
இன்னிய மெங்கு நிறைந்தினி தாக
இயம்பிடு மாகாதே
என்னைமுன் னுடை யீசனெ னத்தன்
எழுந்தரு ளப்பெறிலே.

(இ - ள்). சிரடியார்களே ! கேண்மோ ; அநாதியே திருவடியில் பிரிவுறுது என்னைத் திருவடி காணத் திருவுளம் இரங்கி அடிமை செய்த நாதன் பழைய செல்வப்படி என் உள்ளத்தில் எழுந்தருளப் பெறுவனாகில், பொன்னசலமொத்த திருமேனியில் கயிலையொத்த நீறுபூசிய, திருவருள் ஒக்கக் காண்போம். மாதவமுடைய தேவ இருடிகள் புட்பமாரியாகக் கைகூப்பி அருச்சனை செய்வதும் காண் போம். பெண் வஞ்சமும் வெளிப்பட்டுப்போம். அடியார் செய்யும் கரணவோசைத் திருநாமத்திலே சிவானந்த போகமுறுவோம் ; சிரடி யாருடன் தலையன்பால் உருக அருகராவோம் ; எல்லா வாத்தியங் களும் திருநாமம் சொல்லி முழங்கக் கேட்போம் ; என அருளியதைக் காண்க.

(6)

---

638. நுண்ணிடையார்கள் - மகளிர். கருத்து - வஞ்சக கருத்து. தலைப்படும் என்றதற்குத் தலையன்பால் உருக அருகராவோம் என்றார். இன்னியம் - வாத்தியம்.

639. இனி, மாயா உடலின்ப உருவான (தி. - ன.) :—

சொல்லிய லாதெழு தூமணி யோசை
சுவைதரு மாகாதே
துண்ணென வென்னுள மன்னிய சோதி
தொடர்ந்தெழு மாகாதே
பல்லியல் பாய பரப்பற வந்த
பராபர மாகாதே
பண்டறி யாதப ராணு பவங்கள்
பரந்தெழு மாகாதே
வில்லியல் நன்னுத லார்மய லின்று
விளைந்திடு மாகாதே
விண்ணவ ரும்மறி யாத விழுப்பொருள்
இப்பொரு ளாகாதே
எல்லையி லாதன எண்குண மானவை
எய்திடு மாகாதே
இந்துசி காமணி எங்களை யாள
எழுந்தரு ளப்பெறிலே.

(இ - ள்). சீரடியார்களே ! கேண்மோ ; ஞான சந்திரகாந்த சுவயம்பிரகாச உலக ரக்ஷக நாதன் நம்மை அடிமை செய்ய எழுந்தரு ளப் பெற்றபோது, வாக்குக்கெட்டாத நாதஒளி ஒலியான ஆடரவப் பொற்பாத மூலாதாரத்திலே இன்பளிக்கும் ; விரைவிலே என் உள் ளத்தனுகியே இருப்பதான அருட்சோதி அன்பர் (மனத்தை) உருகச் செய்யும் ; பல வியல்பாகத் திருமேனியுடைய சிவம் அடியேன் பரப் பற்ற விடமே சிவானுபவம் ஒன்றினுக்கே உரித்தாம் ; அநாதியே பிரியாத சிவானுபவம் சுவானுபூதிகமாம் ; பெண்ணைசையின்பம் அகன்றிடும் ; விண்ணவரும்மறியாத நாதன் ; அவனிலதாகுவது அவனருள் அல்லால் இவனவனுகானே ; அளவிலாத எட்டுக்குண மும் நமக்கே அருள்வான், அவன் அடிமையாலல் ; என அருளி யதைக் காண்க. (7)

---

639. சொல் இயலாது, வாக்குக்கெட்டாத என்றார் ; சொல் ஓசை கலவாது என்றும் பிறர் கூறுவர். மணியோசை - ஆடரவக்கிண்கிணி ஓசை. சோதி தொடர்ந்து எழும் என்க ; இதற்கு அன்பர் மனத்தை உருகச் செய்யும் என்றார். பரப்பு அற. பராபரம் - சிவம் ; பரானுபவங்கள் - மேலான அநுபவங்கள் ; சிவானுபவம். வில் - வில் போன்ற. விழுப் பொருள் - அவன் ; இப்பொருள் - இவன்.

640. இனி, சிரடியார் பெறுஞ் சிவானுபவத்தைக் கூறும் (தி. - ன.) :—

சங்கு திரண்டு முரன்றெழு மோசை
தழைப்பன வாகாதே
சாதிவி டாதகு ணங்கள்நம் மோடு
சலித்திடு மாகாதே
அங்கிது நன்றிது நன்றெனும் மாயை
அடங்கிடு மாகாதே
ஆசையெ லாமடி யாரடி யோமெனும்
அத்தனை யாகாதே
செங்கய லொண்கண் மடந்தையர் சிந்தை
நிலைப்பன வாகாதே
சிரடி யார்கள் சிவானு பவங்கள்
தெரிந்திடு மாகாதே
எங்கு நிறைந்தமு தாறு பரஞ்சுடர்
எய்துவ தாகாதே
ஈறறி யாமறை யோனெனை யாள
எழுந்தரு ளப்பெறிலே.

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ; முடிவிலாத வேதத்தாலும் அறிவொண்ணுத சிவகுருநாதன் என்னை அடிமை செய்யக் கண்களிப்பு என் அறிவில் எழுந்தருளியபோது, இடை பிங்கலையாயது மாறிச் சுழுமுனை மார்க்கமாக உள்ளே சிவயோக நிட்டை விளங்கும். நாற்சாதி முக்குணம் அவையாலுளதான ஆன்ம சிற்சத்தி இவை சலித்து இனிச் சுதந்தரமில்லையென அற்றுப்போம். அம்மையே நலமென்றும் இம்மையே நலமென்றும் இருவகையும் துணிவு தெளிவு திடமில்லாது மயக்கும் மாயை அடியில் அடங்கும், அவாவெல்லாம்; திருக்கூட்டத்தன்பன்றி அற்றுப்போம்; பெண்ணுசை உடனே போமே; சிவஞான அன்புடைய அடிகள் சிவானுபவமே வெளிப்பட்டு விளங்கும்; எங்கும் சருவ வியாபகப் பேரானந்தப் பரஞ்சுடர் உள்ளே தோன்றும்; என அருளியதைக் காண்க. (8)

திருச்சிற்றம்பலம்

---

640. சங்கு திரண்டு முரன்றெழும் ஓசை - இடைபிங்கலைகளையடைத்துச் சுழிமுனையைத் திறந்து சென்ற விடத்து, அவ்விடத்திலே கேட்கப்படுகின்ற இறைவனது நடனச் சிலம்பொலி யோசையை'. இங்குச் சிவயோக நிட்டை என்றார். அடியார்க்கு அடியோம் என்ற அளவிலே ஆசை அடங்கும் என்றார். எய்துவது - உள்ளே தோன்றும்.

50. ஆனந்த மாலை

இனி, ஆனந்த மாலை.

அகத்தியச் சூத்திரம்.

மின்னேரனைய ஆனந்தமாலை
மன்னுசெயல்(?) வழக்கழி வென்றது.

பொழிப்புரை அநுபூதி :—

முற்பதிக அநுபூதியிலே தன்னுயிர்க்குறு அநுபூதி தானுய் விளங்கி, அணைந்தோர் தன்மைக்கநுபவம் யாதெனில், குருலிங்க சங்கமம் பொருளெனக் கொண்டு, அதுவே இன்ப அன்பென்ற அடிமையாகச் சருவசங்க நிவிர்த்திய சுத்தாவத்தை நீக்கில், தற்சிவ முண்டாதல்; இவன் தானென அன்பால் அருள் பெறுவதே வீடென்றது.

இனி, திருப்பா ஆசிரிய விருத்தமாகத் திருத்தில்லையிலே கூறினது.

641. இனி, திருவடி கூடும் வண்ணம் அருளவேண்டும் என்ற (தி. - ன.) :—

மின்னேரனைய பூங்கழல்கள்
அடைந்தார் கடந்தார் வியனுலகம்
பொன்னே ரனைய மலர்கொண்டு
போற்று நின்ரு ரமரரெல்லாம்
கன்னே ரனைய மனக்கடையாய்க்
கழிப்புண் டவலக் கடல்வீழ்ந்த
என்னே ரனையே னினியுன்னைக்
கூடும் வண்ணம் இயம்பாயே.

---

50. திருவாசக உள்ளக்கிடை : சிவானுபவ விருப்பம் : எ - து. சிவானந்தமேலீட்டில் கிரியாசத்தி யழிவுரைத்தல்.

திருவாசகச் சிறப்பு :

மோகமிகு மடியரொடுங்கூடவிரும்பிய தானந்தமாலை.

(பழையபுராணம்)

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம், தேவரீர் திருவடி தேச பாழுத்தியை அடைந்து அடியார்கள் திருமால் பதம் முதலான பதமுத்தியும் கைவிட்டார்கள். பொன்னொத்த ஒளி மலரால் அமரர் கள் துதித்து வணங்கிச் சங்கிதியிலே நிற்கின்றார்கள். அடியேன் இவை கண்டும் கல் மனதாய் அன்பன்றிக் கடையனாகப் பொய் மாய வாரியில் அழுந்திய பாவிக்கு ஒப்பு ஒருவர் உளரோ? காணேனே! அடியேன் திருவடி சேரும் வண்ணம் மொழியருளாயே! நாதனே! என அருளியதைக் காண்க. (1)

642. இனி, யானறியா முத்திநலம் அருளினமை கூறும் தி. - ன.) :—

என்னு லறியாப் பதந்தந்தா
யான தறியா தேகெட்டேன்
உன்னு லொன்றுங் குறைவில்லை
யுடையா யடிமைக் காரென்பேன்
பன்னு ளுன்னைப் பணிந்தேத்தும்
பழைய வடிய ரொடுங்கூடா
தென்னு யகமே பிற்பட்டிங்
கிருந்தே னெய்க்கு விருந்தாயே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; என்னறிவாற் காணப்படாத பரிபாக தேக தேச வருண சின்மய குஞ்சிதபாத தரி சனம் அடிமைப்பணி இவையே. அன்புள பரமுத்தி பெறுவதற்குக் குருலிங்க சங்கமமாக எழுந்தருளியும், அவை அறிவாற் கண்டும், அடியேன் அவை பொருளெனக் கொள்ளாது தற்சுதந்தர யான் எனது என்ற அபாவத்தால் கெட்டுப்போனேனே யொழிய, தேவரீர் திருவுளக் கிருபையில் குறைவு காணேனே! உடையவனே! அறி வுளனுக அடிமைப்பணியாக, எங்கே போவது? திருத்தொண்டருள் அருகனுகாமல், ஆன்மநாத சிவகுருவே! புறமானேன். எல்லாப்

---

641. மின் னேர் அனைய - மின்னலின் அழகை ஒத்த. வியனுலகம் - திருமால் பதம் முதலான பத முத்திகள். கல் நேர் அனைய மனம் - கல் லொத்த மனம். கடையாய் - கடையனுக. அவலக் கடல் - துன்பக்கடல்; மாய வாரி என்றார். என் நேர் அனையேன் - எனக்கு தானே ஒப்பா னேன்.

பிணிக்கும் என் உடலீ விருந்தாக, இவை திருவுளமோ? என் செய் வேன்! என இரங்கி அருளியதெனக் காண்க. (2)

643. இனி, குருதரிசனம் வாராமையுற்ற (தி. - ன.) :—

சீல மின்றி நோன்பின்றிச்
செறிவே யின்றி அறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலுங் காட்டி வழிகாட்டி
வாராவுலக நெறியேறக்
கோலங் காட்டி யாண்டானைக்
கொடியே னென்றே கூடுவதே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; தேவரீர் சங்கி தானத்துக்கருகரான ஒழுக்கமுள்ள அன்பருள், ஆசாரவுபசாரம் இவையோடு கூடிய சிவவிரத அடியார் நெருக்கமான அன்புச் சிவ ஞான அறிவு இவை முழுதும் இன்றி, நுண்மாண் நுழைபுலனில்லா னெழினல மண்மான் புனைபாவையா கின்றதோர் பாவைக் கூத்தாட் டவையில் சுழல்வதாகி, அழுந்திய மாயாவயத்தனைத் திருவுளமிரங் கித்திருவடியில் (விழுந்து கிடப்பேனை) அவாவுண்டாக்கி...? அன்பு நெறி காட்டி, இனிப்பிறவா வண்ணம் யாவராலும் அறிவொண்ணுத குஞ்சிதபாத தரிசன முத்தி காட்டி, என்போல் மானிடமாய் எழுந் தருளிய சிவகுருநாதத் திருமேனியும் காட்டி, அடிமை செய்த நாதனை, தீவினையேன் என்று கண்டு அன்பு செய்வேனே? என இரங்கி அருளியதைக் காண்க. (3)

---

642. **யான் அறியாது கெட்டேன்; எனினும் வேறு எவர் எனக்குத் தலைவராவார் என்று இரங்குகின்றார்.**

643. **சீலம் - ஒழுக்கம். நோன்பு - சிவவிரதம். செறிவு - நெருக் கமான சிவஞானம். தோலின் பாவை - தோலால் செய்த பொம்மை. மாலும் காட்டி - அவா உண்டாக்கி. வழி - அன்பு நெறி. வாரா உலகம் - பிறப்பினைக் கொடாத முத்தி.**

644. இனி, நடுவுள் இருப்பதைக் கூறும் (தி. - ன.) :—

கெடுவேன் கெடுமா கெடுகின்றேன்
கேடி லாதாய் பழிகொண்டாய்
படுவேன் படுவ தெல்லாநான்
பட்டாற் பின்னைப் பயனென்னே
கொடுமா நரகத் தழுந்தாமே
காத்தாட் கொள்ளுங் குருமணியே
நடுவாய் நில்லா தொழிந்தக்கால்
நன்றே வெங்கள் நாயகமே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; அநாதியே திருவடியிலிருந்தும், அவை தெரியாது மலத்தடையால் அறிவிலனாகக் கெடுவதே உண்மையானது என்னியல்பு; தேவரீரோ, மலரகித நின்மல ஒருவர்; அந்தர்ச்சோதி; அவை தெரியாது முன்னின்று அருள்வதைக் கண்டு பார்த்து, காக்கவில்லை என்று என் அறியாமையால், பழி சொன்னேன்; அவையும் கருணையாகப் பொறுத்ததும் அறியேன்; இவை அறியாதவனென்று பராமுகமானால், முடியக் கெட்ட நான்கெட்டால், எக்காலம் அருள் சேர்வது? தேவரீர் கருணநிதியானதுகொண்டு கொடிய மாயை நரகவேதனை அடராவண்ணம் பாதுகாத்தலே திருவுளக்கடன்; சிவகுருநாதா! நடுவிகந்தானுக்க மொழிய விட்டு ஒழிந்து நின்றால், அடியேன் எவ்வகை ஒழிவது? வேறு கடவுளருளரோ? இவை திருவுளமோ? ஆகையால் அடியேன் நடுவுளிருவீரும் வாழ்ந்தென்னை ஆள்வதே முத்தி; என விரங்கி முத்தி பஞ்சாக்கர நிட்டை அருளியதைக் காண்க. (4)

645. இனி, தாயாகப் பாதுகாத்தமையைக் கூறும் (தி. - ன.):

தாயாய் முலையைத் தருவானே
தாரா தொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனே
நம்பி யினித்தான் நல்குதியே

---

664. இச்செய்யுளின் உரை எட்டில் சிதைந்துள்ளது; ஒருவாறு சேர்த்து இங்கு எழுதப் பெற்றிருக்கிறது.

கெடுமா - கெடும் வண்ணம். பழிகொண்டாய்; நடுவாய் நிற்றல் பற்றி இதற்குக் காட்டப் பெற்ற உரைகளின் நயம் கவனிக்கத் தக்கது.

தாயே என்றுன் [1]னருளடைந்தேன்
தயாநீ யென்பா லில்லையே
நாயே னடிமை யுடனுக
ஆண்டாய் நான்றுன் வேண்டாவோ.

(இ - ள்). ஆண்டவனே ! ஓர் விண்ணப்பம் ; அடியேன் அறி யாமையாற் பசித்தழ, எண்ணரிய சிவஞானத் தின்னமுதருளால் அழுகை தீர்த்து அருள் புரிந்தாயே. அவ்வகை யிரங்காயாகில் நாயடியேன் ஆதாரமற்ற சடமாவேனே? தேவரிற் சிறந்தோய், இனி கருணை செய்யாவிடில்? என் அன்னையே! திருவடி கதியா னேன்; தயாவான சுவாமி! தேவரீர் அடியேற்கு இரங்காவிடில் அநாதியே மலவசமுற்றவனை அடிமை செய்யத் திருவுளங் கொண்டது ஏனை? சிவனன்றிச் சிவனுளதோ? சிவனன்றிச் சீவனுளதோ? எவ்வகைப் புறஞ் செய்வது? குருவே! என இரப்பாலிரங்கி அருளி யதெனக் காண்க. (5)

646. இனி, கருணை செய்யாவிடில் உய்யேன் என்ற (தி. - ன.) :

கோவே யருள வேண்டாவோ
கொடியேன் கெடவே யமையுமே
ஆவா வென்னை விடிலென்னை
அஞ்சே லென்பா ராரோதான்
சாவா ரெல்லா மென்னளவோ
[2]தக்க வாறென் றெண்ணுரோ
தேவே தில்லை நடமாடீ
திகைத்தே னினித்தான் தேற்றுயே.

(இ - ள்). ஆண்டவனே ! ஓர் விண்ணப்பம் ; எனது ஆன்ம நாதனே ! கருணையே ! இரங்கியருள வேண்டும் ; மல வுண்மைய னென்று திருவுளம் பராமுகமானால், முடியக் கெடுவதாகவேயர்கு

பி - ம் 1. தாளடைந்தேன்

645. மூலையருளல், சிவஞானமருள்தலாகக் கூறப்பட்டது. சவலை - பாலில்லாக் குழந்தை ; இங்கு, சடம் என்றார். தம்பி - சிறந் தோய். தாயே, இளி நல்குதி என்று உன் அருளடைந்தேன் என்று கூட்டுக. நல்குதியே என்பதற்குக் கருணை செய்யா விடில் என்ற உரை உளது. நல்குதியேல் என்ற பாடம் கொண்டிருத்தல் கூடும்.

பி - ம். 2. தக்கவறன்றெண்ணுரோ

மல்லால் வேறுளவோ? ஆ, ஆ என்று கருணை செய்திரங்காவிடில் அடியேனைப் பயமுறுவண்ணம் அபயங்காப்பது வேறு தெய்வ முண்டோ? சாவது இப்பூவில் என் விதியாகவே முடியுமே; அன்றியும் அடியேற்குள்ள அமைப்பென பூவிலுள்ளார் கருதுவாராகளே! மகாதேவனே! தில்லே நேர் போய் ஞானதடனஞ் செய்வோய்! மயக்கறிவானேனே! இனி அருளால் தெருண்ட அன்பு அருளாயாகில் வேறு பற்றுக்கோடு காணேன் என இரந்து இரந்து உண்மை யருளிய தெனக் காண்க. (6)

647. இனி, அடியேனை ஞானப்பித்தனுகச் செய்தமையைக் கூறும் (தி. - ன.) :—

நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞால மெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம்
பிச்ச தேற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே அவிநாசி
யப்பா பாண்டி வெள்ளமே
தெரிய வரிய பரஞ்சோதீ
செய்வ தொன்று மறியேனே.

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; விஷயத் தொடர்ச்சியான நரிகளை அன்புக் குதிரையாகக் கருணை வைத்து, உலகமெல்லாந்தெரிய, அடியேனை ஞானப்பித்தனுக வருளுந் திருப் பெருந்துறைச் சிவகுருவே! அரிதான பரமசிவனே! அவிநாசி யென்ற திருத்தலமேவும் அப்பனே! பாண்டிய சுகவாரியே! யாவராலும் அறிதற்கரிய பரமசிவனே! அடியேன் எவ்வகைச் சுதந்தர முளனுவேன்? என வருளியதைக் காண்க. (7)

திருச்சிற்றம்பலம்

---

646. அடிமையுமே - ஏகாரம் வினு. ஆ ஆ இரக்கக் குறிப்பு.

647. பரி குதிரை - தாங்குகின்ற குதிரை. நிகழ்வித்து - நடத்தி.

51. அச்சோப் பதிகம்

இனி, [1]அச்சோப் பத்தாவன.

அகத்தியச் சூத்திரம்.

நிச்சமுணர்த்து மச்சோப் பத்து
அநுபவம் வந்தவழி யறியாமை.

பொழிப்புரை—

முற்பதிகத்தில் அநாதி திருவருளின்பவநுபூதி யருளி, அவ்வின்பப்பேற்றை நோக்கிக் குஞ்சிதத்த சேவடிக்கீழ்க் கும்பிட்டேகிட்டைகூடி, அபேதவத்துவித சிந்தாந்த அன்பாலடிமையுற்று இளைப்பாறி, கேவல சகலஞ் சுத்தமுண்டாகி, அப்பேரின்பத்தாற் பெரிதுமுவந்து பேராளந்தப்பேறு கிடைத்தபின், நிறைய உண்டவனைப்போலும், நீரில் முழுகினவனைப்போலும் அநுபூதியுற்ற காலையில் பழைய இன்பப்பயந்தனை நோக்கி, அதன்றன்மை யுன்னல்.

கிடைத்ததென்னே வெளில், சுகவாரியிலழுந்திச் சும்மாவிருப்பதான திருவடியன்பே ; அநுபவம் வந்தவழி தெரியாமை ; இவையே சிவஞான போதத்தெளிவு என்றது.

திருப்பா, கலி விருத்தமாகத் திருத்தில்லையிலே குறியாக ஓதியது.

648. இனி, உயிரைச் சிவமாக்கி யாண்ட (தி. - ஸ.) :—

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனைக் கருளியவா ரூர்பெறுவார் அச்சோவே.

---

1. இதற்கு அச்சோப் பத்தென்ற பெயரு முண்டுபோலும்.

திருவாசக உள்ளக்கிடை : அநுபவ வழியறியாமை. எ - து. அநுபவத்ததிசயம்.

திருவாசகச் சிறப்பு :

போகசுகமெனக்களித்தாரார்பெறுவாரெனுமருமைபுகறலச்சோ.

(பழையபுராணம்)

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ; அடியேன் சித்தாந் தத்தே சிவன் திருக்கடைக்கண் சேர்த்தி, சென்ன மொன்றிலே சீவன் முத்தனுக்கி வைத்து ஆண்டு, மலங்கழுவி, ஞானவாரிமடுத்து, முத்தாந்தப் பாதமலரடிக்கீழ் வைப்பதான வழிதெரியாத மூர்க்க ரெல்லாம் பித்தர்; அந்தப்பெரும் பித்தற்றுப்பித்துப் பிராந்தர்களுடன் கூடித் திரியும் பாவியைப்பத்தி மலர் தூவ முத்தியாருமெனச் சித்தந் தெளிய மூலமலமகற்றி, அநாதி சிவரூபமாக்கி, அடியேனே அடிமை செய்த அற்புதத்தை, திருவருளிரக்கத்தை, என்னேவிடப் பெறுவரு ளரோ? எனக் கருணையை வியந்திரங்கியருளியதெனக் காண்க. (1)

649. இனி, திருவடம் பெறுவதான (தி. - ன.):—

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்றன் கூத்தையெனக்
கறியும்வண்ணம் மருளியவா ரூர்பெறுவார் அச்சோவே.

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ; அடியேன் சிவஞான அன்புவழி அகன்று, நில்லாதவற்றை நிலையென வுட்கொள்ளும் பாவியை, புல்லறிவிற் போகாவண்ணம் திருவருளே சேர்வதான வண்ணம், குறிகளும் அடையாளமுமின்றிப் பற்றற்ற நிட்கள ஆனந்த சுத்த பஞ்சகிர்த்திய ஞானநடராசர குஞ்சிதபாதம் அடியேற் கருளிய சிவானந்த சுகத்தை இவ்வுலகத்திலே பெறுவாருளரோ? எனக் கருணையை வியந்திரந்தருளியதெனக் காண்க. (2)

650. இனி, மாயாமயக்க மாதராசை யகன்று மகாதேவரருள் பெற்றமையைக் கூறும் (தி. - ன.):—

பொய்யெல்லாம் மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஐயனெனக் கருளியவா ரூர்பெறுவார் அச்சோவே.

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ; அநித்திய சிற்றின்ப வாழ்வை மெய்யெனக் காட்டிப் புணரும் பேதை தனத்திலே அன்

---

648. முயல்வேனை அறிவித்து, அறிவித்து, ஆக்கி, ஆண்ட அத்தன் எனக் கூட்டுக. பாரும் வண்ணம் - சிதறும்படி. அச்சோ - வியப் பிடைச் சொல். கருணை என்று இவ்வுரை கூறுகிறது.

649. நெறி - சிவ நெறி. நெறியல்லா நெறி - புறச்சமயமும் ஆம்.

புற்று மயக்கமாகும் என்னை, அதன் வசம் இறவாமல் பாதுகாத்துப் பெண்பாக நாதன் தன் திருவடியே பரமெனத் தன் வண்ணமாகச் செய்தருளுங் குருவேயென வந்த சிவானந்த போகத்தை இவ்வுலகிற் பெறுவாருளரோ? எனக் கருணையாக வியந்தருளியதெனக் காண்க.

651. இனி, திருவேட நீறே பொருளென்ற (தி. - ன.) :—

மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி எனையாண்டிட் டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத் தூநெறியே
[சேரும்வண்ணம்
அண்ணலெனக் கருளியவா ரூர்பெறுவார் அச்சோவே.

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ; மண்ணிலே பிறந் திறந்து எய்த்து மண்ணை வெண்ணீதத் தத்துவ இறப்பில் சாரா வண்ணம் அளவிலாத திருவடிஞான அன்பருளி, என்னைச் சைவஞ் சாரச் சிவஞானச் சாந்தான திருவெண்ணீறணிய வருளி, பரிசுத்த குஞ்சிதபாதஞ் சேர்ப்பதான எம் அண்ணல் அநுக்கிரகம் பெறுவா ருளரோ? என விரங்கி யருளியதெனக் காண்க. (4)

652. இனி, திருப்புன்முறுவற்றன்மையைக் கூறும் (தி. - ன.):

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணல் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேனுன் னருள்பெற்றேன்
உய்ஞ்சேனுன் உடையானே அடியேனை வருகவென்று
அஞ்சேலென் றருளியவா ரூர்பெறுவார் அச்சோவே.

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ; பஞ்சினும் மெல்லிய பாத பங்கய மடவரலியர் கடைநாட்டத்துள இன்பத்தினின்று எவ் வகைப் பிரிவேனெனத் துன்புறும் பாவியை, திருவருணேக்கால் அடியேனுய்வனுனேன்; எனையுடையானே! அடியேனை வழிமறித்து வாவென்ற திருப்புன்முறுவலால் அடியேன் பெறும் பேற்றை யார் பெறுவர், அக்கருணையே! என வருளியதைக் காண்க. (5)

---

651. எய்த்து - இளைத்து. எண்ணம் - எண்ணிக்கை; அளவு. சுண்ணம் - சாந்து.

652. உய்ஞ்சேன் - உய்ந்தேன், வருகவென்று அஞ்சேலென்று; உம், தொக்கது.

653. இனி, யான் செய்யுந் துரிசுகளுக்குடனுனைமையைக் கூறும் (தி. - ன.) :—

வெந்துவிழு முடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கிக்
கொந்துகுழற் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தமறுத் தெனையாண்டு பரிச்சவென் துரிசுமறுத்
தந்தமெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ; அடியேனுடல் சுடல் சேர்வது சொற்பிரமாணமன்றென நினைத்துத் தீவினையனைத்தையும் பெருக்கி, பூங்கொத்தணியும் அளகத்தையுஞ் சங்கு மணிவதான முலையாள் போகம் வேண்டிக் கெடும் பாவியைத் திருநோக்கால் தற்சுட்டற, யான் செய்யுந் திருவடி மறந்த குற்றம் பொறுத்ததுமன்றிப் பரமுத்தியு மருளியது யார் பெறுவார் கருணையே! என அருளியதைக் காண்க. (6)

654. இனி, ஓங்காரத்துள்ளொளிக்குள் உருவையருளினமையைக் கூறும் (தி. - ன.) :—

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி
உய்புகெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
ஐயனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ; இன்பத்துறையினில் எளியனை பாவியைத் திருவுளமிரங்கிப் பையப்பையப் பழுக்கும் அருளெனப் பரிபக்குவஞ் செய்து, பாசவிமோசனம் பண்ணி, திருவடியே பரமெனக் காட்டுவித்து, ஓங்காரத்துள் உறை சத்திபாசம் எழின் மாயை ஆவியுற நிற்பதும் அருளிய சற்குரு நாதனைப்போல் அடியேற்கு அருள்வாருளரோ கருணையே! என வருளியதைக் காண்க. (7)

655. இனி, திருவடியே ஆன்மலாபமென வருளிய (தி. - ன.) :

[1]சாதிகுலம் பிறப்பென்னுந் தடஞ்சுழியில் தடுமாறி
காதலின்மிக் கணியிழையார் கலவியிலே வீழ்வேனை
மாதொருகூ றுடையபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஆதியெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

---

653. கொந்து - பூங்கொத்து. பரிசு - தற்சுட்டு. அந்தம் - முத்தி.
654. பைய - மெதுவாக. தாழ் - தாழ்ப்பாள் உருவி - நீக்கி.
பி - ம். 1. சாதல் பிறப் பென்னும்

(இ - ள்). சிரடியார்களே! கேண்மோ; ஓர திசயவானந்தம்; கோத்திரமுங் குலமுமுட் கொண்டென் செய்வோமென வெண்ணுது துன்பமுறுவேனை, காதலியரின்பமே பொருளென இறப்பேனை, அம்மையப்பர் தமது திருவடி சேர்வதாக அனாதி சிவமருளிய சுகம் யார் பெறுவரோ? என, கருணையை வியந்தருளிய தெனக் காண்க.

656. இனி, நாயைச் சிவிகை மேலேற்றியதுபோல் உயிரை யடிமை செய்தமையைக் கூறும் (தி. - ன.):—

செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்றன்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

(இ - ள்). சிரடியார்களே! ஓரானந்தங் கேண்மோர்; சிவஞான போத சித்தி பிரகாசிக்காத அறிவிலாதாருடன் கூடிய பாவியை மும்மலங்களைய ஆதிமுதல் எழுந்தருளி, நம்மையொரு பொருளாகத் திருவுளங்கொண்டு உபதேசஞ் செய்தருளி, அடிமையாக்கி, நாயைச் சிவிகை யேற்றியதுபோலக் குஞ்சிதபாதம் அபேதவத்துவித பர முத்தி யருள்வதான கருணையை யாரறிவார்கள்? எனக் கருணையை இரங்கி வியந்தருளிய தெனக் காண்க. இவை பரமகுரு தரிசனம்.

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிய

திருவாசகத்துக்குச்

சீகாழித் தாண்டவராயர் அவர்கள்

இயற்றிய

திருவாசக அநுபூதி

என்னும்

திருவாசக வியாக்கியானம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்

---

655. தடம் சுழி - பெரிய சுழி. ஆதி - சிவபெருமான்.

656. செம்மை நலம் - சிவஞான போத சித்தி. சிதடர் - மூடர் மும்மை மலம் - மூன்று மலங்கள். அம்மை - வீடு.

*திருவாசகப் பதிக வரிசை

(வெண்பா அந்தாதி)

திருவகவல் நான்கின் திறங்கேளாய் நெஞ்சே
அருவமாய் எங்கும் அமர்ந்தோன்—ஒருவன்
சிவபுரா ணங்கீர்த்தி சீரண்டம் போற்றி
அவைபிரான் என்றெண்ணி யாய். 1

எண்ணுஞ் சதகந் திருவீத்தல் விண்ணப்பம்
அண்ணலார் எம்பாவை அம்மானை—சுண்ணமொடு
கோத்தும்பி தெள்ளேணம் கொண்டாடுஞ் சாழலுடன்
ஏத்தும்பூ வல்லியென் றேத்து. 2

ஏத்தரிய உந்தி எழிலாருந் தோணோக்கம்
பாத்தாடும் பொன்னூசல் பண்பினுடன்—கூத்தனுறை
அன்னை குயிலும் அழகார்த்த சாங்கமுடன்
பன்னியநூ லேபரிந்து பார். 3

பாராரும் பள்ளி யெழுச்சியுடன் பண்கோயிற்
சீராரு மூத்த திருப்பதிகம்—ஏராரும்
கோயிற் றிருப்பதிகம் கொண்டாடி நெஞ்சமே
நீயிறையை வாழ்த்தாய் நெகிழ்ந்து. 4

நெகிழாத நெஞ்சமே நீசெத்தி லாப்பத்
திகழா தடைக்கலமென் றேத்திப்—புகழுடைய
ஆசைப்பத் தோதி அதிசயத்தை இப்பொழுதே
பாசத்தை விட்டுநீ பற்று. 5

பற்றற்று நெஞ்சே பகராய் புணர்ச்சிப்பத்
துற்றருவா வாழாப்பத் தோதியபின்—மற்றை
அருட்பத்தை ஓதி அகற்றாய் வினையை
மருட்புத்தி ஏது மறந்து. 6

---

*இது காசிமடம் 1950 திருவாசகப் பதிப்பிலிருந்து எடுக்கப்பெற்றது.

மறவாது நீகழுக்குன் றந்தனையே வாழ்த்தி
இறவாதே கண்டபத் தேற்றி—உறவாம்
பிரார்த்தனைப் பத்தைப் பிதற்றிப்பே ணுய்பிரமன்
அராத்தலையோன் காணு அடி. 7

காணுய் குழைத்தஉயி ருண்ணி கவலச்சம்
பேணுய் திருப்பாண்டி பேணியபின்—கோணுர்
பிறைசூடி தாளைப் பிடித்தபத் தென்றும்
கறைபோம் மனமே கருது. 8

கருதே சறவுபுலம் பல்காண் குலாப்பத்
தரிதேயும் அற்புதமே சென்னி—பெரிதாம்
திருவார்த்தை எண்ணமுடன் யாத்திரையும் தேறி
ஒருவார்த்தை யாயிருந்தே ஓது. 9

ஓதும் படையெழுச்சி ஓங்கும் திருவெண்பா
நாதனுறை பண்டாய நான்மறையே—ஆதியதாய்
நற்படைய தாட்சிசிவா னந்தமச் சோவையே
செப்படையும் முத்தித் திரு. 10

———

*திருவாசகப் பதிகத்தொகை

சிவபுரா ணங்கீர்த்தித் திருவண்டம் போற்றித்
திருவகவன் முதனான்காஞ் சதக நூறாம்
இவர்நீத்தல் விண்ணப்ப மைம்ப தாகும்
மெம்பாவை யம்மானை சுண்ணங்கோத் தும்பி
புவனமகிழ் தெள்ளேணஞ் சாழலிரு பஃதாம்
பூவல்லி திருவுந்தி பத்தொன்ப தாகும்
உவமையிலாத் தோணோக்கம் பதினான்காகும்
ஊசலொன்ப தாகுமென வுரைத்த வாறே. (1)

திருவன்னை குயிற்பத்துத் திருத்த சாங்கம்
திருப்பள்ளி யொடுகோயின் மூத்ததிருப் பதிகம்
அருள்கோயிற் றிருப்பதிகஞ் செத்திலடைக் கலமே
யாசையதி சயம்புணர்ச்சி வாழாப்பத் தருட்பத்
தொருபதென வுரைசெய்வர் கழுக்குன்ற மேழா
மொருபதாங் கண்டபத்துப் பிரார்த்தனைபன் னொன்றே
திருமருவு குழைத்தபத்தோ ருயிருண்ணி யச்சந்
திருப்பாண்டி பிடித்தபத்தோ டேசறவும் பத்தே.

திருப்புலம்பன் மூன்றாகுங் குலாப்பத்தற் புதமே
சென்னிதிரு வார்த்தைபத் தெண்ணப்பத் தாறாம்
பரற்குரிய யாத்திரைப்பத் தொருப தாகும்
படையெழுச்சி யிரண்டாகும் பதினொன்று வெண்பா
இருட்டவிரும் பண்டாய நான்மறையே ழாகு
மெட்டாகும் படையாட்சி மின்னேரே ழாகும்
அருட்பெறுமச் சோவொன்பா னாற்பத்தேழ் பதிக
மகவலுடன் பாட்டறுநூற் றைம்பத் தாறே. (3)

---

*இது இந்நூல் நிலையத்து 632 நெ. சுவடியிலிருந்து எடுக்கப்பெற்றது.

செய்யுண் முதற்குறிப்பகராதி

(எண்—செய்யுள் எண்)

அங்கணனெ	596	அழுகே	92
அங்கியருக்	289	அளவறு	39
அட்டமூர்த்தி	578	அளவிலாப்	480
அடர்புல	142	அளித்து	405
அடற்கரி	136	அளிபுண்	420
அடியார்சில	484	அறவேபெற்	488
அடியாரானீ	606	அறவையேன்	539
அடியேனல்லல்	495	அறிவனே	54
அடியேனல்லேன்	87	அறிவிலாத	36
அண்டப்பகுதி	3	அறுக்கிலே	401
அண்ணுமலை	172	அறுகெடு	199
அணிமுடி	589	அறையோ	619
அத்தனே	541	அன்பராகி	399
அத்தியுரித்	293	அன்பினடி	387
அத்தேவர்	219	அன்றுலகீழ	287
அதுபழச்	372	அன்றேயென்	500
அப்பனே	102	அன்னேயிவை	161
அம்பரமாம்	273		
அம்பலத்தே	271	ஆட்டின்	304
அம்மையே	536	ஆட்டுத்தேவர்	400
அயன்றலை	212	ஆடரப்பூ	339
அயனை அநங்	258	ஆடுகின்றிலை	35
அரிக்கும்	237	ஆணைஅலியோ	331
அரியானே	22	ஆதமிலியான்	546
அருணனிந்தி	367	ஆதியுமந்தமு	155
அருந்தவருக்	274	ஆமாறுன்	18
அருமந்த	239	ஆயநான்	27
அருளாதொழி	383	ஆயமொழி	364
அருளாரமுத	485	ஆர்க்கோ	616
அருளுடை	537	ஆர்த்தபிறவி	166
அரைசனே	388	ஆவகைநாமும்	210
அரைசேபொன்	380	ஆவாஅரி	241
அரைசேயறி	141	ஆவாதிரு	299
அரையாடு	240	ஆற்றகில்லே	437
அல்லிக்கமல	439	ஆனையாய்க்	188
அலரவ்னு	260	ஆனைவெம்	125
அவமாய	238		
அழகேபுரிந்	503	இடக்குங்	564
அழிவின்றி	531	இணையார்	275

இந்திரனு 177
இந்திரிய 473
இப்பாடே 361
இப்பிறப்பி 573
இயக்கிமாரு 472
இரங்கும் 382
இரந்திரந் 391
இருகை 45
இருதலை 113
இருந்தென்னை ஆண்டான் 624
இருந்தென்னையாண்டு 122
இருடிணிங் 435
இருப்பு 84
இரும்புதரு 544
இல்லோகின 98
இழித்தன 70
இன்பந் 351
இனபம் 625
இன்பால் 363
இன்றெனக் 392
இன்னிசை 369

ஈசனேநீ 82
ஈசனேயென் 55
ஈண்டிய 529
ஈரம்பு 295

உகந்தானே 378
உங்கையிற் 173
உடையநா 101
உடையாருரு 376
உடையானே 60
உண்டொ 46
உண்ணப் 305
உணர்ந்தமா 389
உத்தமனத்த 7
உம்பர்கட் 534
உய்யவல்லா 297
உரியேனல்லே 598
உருகிப்பெருகி 249
உருத்தெரியா 475
உரைமாண்ட 326
உலக்கை 200
உலவாக் 58
உவலேச் 251
உழிதரு 12
உழைதரு 150
உள்ளப்படாத 230
உள்ளமல 627
உள்ளனவே 128
உற்றவாக்கை 434
உற்றுரை 556
உன்னற்கரியசி 341
உன்னற்கரியதிரு 333
உன்னையுகப் 352

ஊசலாட்டு 574
ஊனுயுயிரா 190

எங்கள்நாயகனே 458
எச்சம்மறிவே 512
எண்ணிலேன் 431
எணணுடை 321
எந்தையா 51
எந்தையெந் 276
எம்பிரான் 71
எய்த்தே 421
எய்தலாவ 81
எரிமூன்று 280
எறும்பிடை 129
என்பாலேப் 550
என்புள்ளுருக்கி 559
என்பேயுருக 599
என்றும் 314
என்னணி 636
என்னப்ப 256
என்னுலறியா 642
என்னையப் 120
எனைநானென்ப 506

ஏசாகிற்ப 381
ஏசினும்யா 154
ஏதமிலா 357
ஏய்ந்தமாமல 568
ஏர்தரு 347
ஏராரிளங் 356

ஏழைத்தொ 325
ஏனையாவரு 42

ஐயகின் 77

ஒண்ணித்தி 158
ஒண்மைய 126
ஒப்புனக்கில்லா 538
ஒருவனே 72
ஒன்ருய் முகோ 222
ஒன்றினை 634
ஒன்றும்போதா 496

ஓடுங்கவந்தி 557
ஓய்விலா 43
ஓயாதே 181
ஓரொருகாலை 169

கட்டறு 53
கடகரியும் 269
கடலின்திரை 509
கடலினுள் 117
கடலேயனைய 489
கடவுளே 68
கடையவ 105
கண்களிரண்டு 633
கண்டது 137
கண்ணஞ் 337
கண்ணப்ப 218
கண்ணுர் 502
கதியடி 146
கமலநான் 459
கயன்மாண்ட 245
கரணங்க 223
கருவாயுல 228
கருளக்கொடி 416
கல்லாதபுல் 476
கல்லாமன 179
கலந்துநின் 483
கள்வன்கடி 233
களிவந்த 119
கற்போலு 316
கற்றறியேன் 548

கறங்கோலை 242
கன்னருரித் 243
கனவேயுந் 244

காசணி 198
காட்டகத்து 628
காணலாம 48
காணுங் 631
காணும் 601
காணுமாறு 88
காதார் 168
காப்பாய் 445
காமனுட 323
காருடைப் 354
காருறு 107
காலமுண்டா 528
காஞ்புலித் 266

கிஞ்சுக 360
கிளியனர் 517
கிளிவந்த 192
கிற்றவா 38
கீதமினிய 346

குதுகுது 138
குலங்களோ 133
குலம்பாடி 254
குழைத்தாற் 494
குறியுநெறியும் 560
குறைவிலா 390

கூடிக்கூடி 493
கூவின 368
கூற்றை 533
கூறும்நாவே 498

கெடுவேன் 644

கேட்டாயோ 180
கேட்டாரு 32

கையார் 187
கையாற் 423

கொந்தணவும் 355
கொம்பரில் 124
கொம்பில் 562
கொம்மை 566
கொழுமணி 131
கொள்ளு 50
கொள்ளேர் 106
கொள்ளேன் 6
கொன்றை 345

கோணிலா 523
கோயில்சுடு 257
கோலமேனி 470
கோலவரை 334
கோலாலமாகி 262
கோவேயருள 646
கோழிசிலம்ப 162
கோற்றேன் 362
கோற்றேனென 511

சங்கமரற்றச் 208
சங்கரா 69
சங்குதிரண்டு 640
சச்சையனே 135
சட்டோநினை 221
சடையானே 555
சதுரை 525
சந்திரனே 189
சலமுடைய 272

சாடியவே 298
சாதல் 655
சாதிகுலம் 477
சாவமுன் 8

சித்தமேபுகு 582
சிந்தனை 30
சிந்தை 83
சிரிப்பார் 384
சிரிப்பிப்பன் 153

சீரார்திரு 292
சீரார்பவள 327

சீலமின்றி 643
சீவார்ந்தீ 418

சுடர்பொற் 436
சுந்தாத் 350
சுந்தரநீ 197
சுருள்புரி 410

சூடகந்தோள் 201
சூடுவேன் 191
சூரியனுர் 308

செங்கணவன் 171
செங்கணெடு 175
செடியாராக்கை 424
செப்பார் 185
செம்மை 656
செய்த 617
செய்யவாய் 359
செய்வதறி 56
செல்வம்நல் 52
செழிகின்ற 109
செழுக்கமல 406
செறியும்பிறவி 527
செறியுமி 576

சேரக்கருதி 611

சொல்லிய 639

சோதியாய் 394
சோதியே 456
சோலைப்பசு 365

ஞாலமிந்திர 404
ஞானக்கரு 209
ஞானவாளே 613

தக்கனு 309
தக்கனையும் 259
தகைவிலாப் 520
தச்சுவிடு 296
தந்ததுன் 395

தரிக்கிலேன் 65
தவமே 9
தறிசெறி 521
தன்மை 63
தனித்துணை 143
தனியனேன் 31

நாதாடு 358
தாதாய்மூவே 444
தாமேதமக்கு 605
தாயாய் 645
தாரகை 152
தாராயு 91
தாரார்வருளொன் 491
தாளியறுகி 343
தானந்தமில் 264

நிகழ்த்திகழு 440
திண்போர் 290
திருந்துவார் 465
திருமாலும் 235
திருவார் 256
தில்லைமூதூர் 2
தினைத்தனை 217

தீதில்லை 319
தீர்க்கின்ற 112
தீர்ந்தவன் 73

துடிகொள் 460
துடியேரிடு 558
துண்டப் 183
துணியாவுருகா 490
துப்பனே 461

தூவெள்ளை 595

தெங்குலவு 335
தென்பாலு 263

தேரைநிறுத்தி 312
தேவதேவன் 577
தேவர்கோ 34

தேன்பழச் 349
தேன்புக்க 268
தேனகமாமலர் 211
தேனுடுகொ 279
தேனைப் 62

தையலார் 654
தையலோர் 344

தொண்டர்காள் 614

தோலுந்து 232

நங்காயிதை 265
நங்கைமீரெனை 579
நஞ்சமர் 330
நடித்து 569
நண்ணிப் 630
நமச்சிவாய 1
நரியைக் 647
நல்கா 385
நல்லமலரி 311
நன்றுக 270

நாடகத்தா 15
நாதமுடைய 593
நாமகணேசி 306
நாயிற்கடைப்பட்ட 277
நாயிற்கடையாம் 501
நாயேனை 226
நான்மறை 307
நான்முகன் 4
நான்றனக் 227
நானுரடி 505
நானுரென் 216
நானுமென் 229
நானேயோ 553

நித்தமணு 338
நிருத்தனே 457
நிலநீர் 317
நிற்பார் 609
நினைப்ப 80
நினையப்பிறரு 442

நீக்கிமுன் 433
நீண்டகர 340
நீண்டமாலு 438
நீதியாவன 427
நீரின்பவெள் 526
நீலவுரு 348

நெக்குநெக்குள் 443
நெடுந்தகை 116
நெறிசெய் 282
நெறியல்லர் 649

நோயுற்று 224

பங்கயமா 322
பச்சைத்தாளர 547
பஞ்சாய...நஞ்சர 549
பஞ்சாய...நெஞ்சர 652
பஞ்சின்மெல் 451
படமாகளன் 288
பண்சுமந்த 182
பண்டாய 626
பண்ணுர்ந்த 545
பண்ணினேர் 450
பண்பட்ட 278
பணிவார் 93
பத்தர்சூழப் 580
பத்திமையும் 479
பத்திலனே 600
பந்தணைவிரலாள் 453
பந்தவிகார 635
பப்பற 371
பரந்துபல் 10
பரம்பர 139
பரவுவாரவர் 430
பரவுவாரி 21
பரிந்துவந்து 441
பருதிவாழொளி 452
பருவரை 524
பவனெம் 13
பழிப்பினின் 151
பழுதில்தொல் 455
பற்றுங்கவை 508
பன்னட்பரவி 283

பாங்கினெடு 481
பாசம்பரஞ் 156
பாசவேரறுக்கும் 540
பாடவேண்டும் 104
பாடிமால் புகழும் 448
பாடிற்றிலேன் 149
பாதாள 164
பார்ப்பதி 301
பார்பதம் 393
பார்பாடும் 247
பாராவிசு 176
பாருருவாய 597
பாரொடு 446
பாரோர் 422
பாலகனுக்கு 310
பாலுமமுதமு 285
பாவநாசா 454
பாழ்ச்செய் 565
பாற்றிரு 602
பானினைந்தூட்டு 542

பிட்டுநேர்பட 467
பிணக்கிலாத 466
பிணியெலாம் 518
பித்தனென்றெனை 429
பித்தென்னை 620
பிரமனரி 324
பிறவிதனை 478
பிறவியென்னு 583
பிறிவறியா 414

புகவேத 14
புகவேவேண்டா 603
புகழ்மின் 608
புகுவதா 40
புகுவே 64
புணர்ப்ப 75
புத்தன்புரந்தரர் 250
புத்தன்முத 318
புரந்தரனு 302
புரள்வார் 612
புலன்கள் 132
புலையனே 398

புவனியிற் 375
புழுவினுற் 584
புற்றில்வா 514
புற்றுமாய் 397
புறமே 90
புன்புலால் 543

பூங்கமலத் 554
பூசுவதும் 255
பூணுணுத 469
பூத்தாரும் 313
பூதங்கடோறு 370
பூதங்களைந்தாகி 482
பூமேலயனோடு 234
பூவலர் 594
பூவார் 603
பூவியல் 196
பூவேறு 215

பெருநீர்ற 130
பெரும்பெரு 408
பெருமான் 610
பெற்றது 127
பெற்றிபிறர்க் 194

பேசப்பட் 86
பேசிற்ரு 28
பேசும் 632
பேதமில்லதொர் 471
பேராசை 284
பேருங்குணமும் 561

பைங்குவளை 167
பைந்தாப்பட 504

பொச்சை 575
பொத்தையூன் 432
பொதும்புறு 140
பொய்யவனே 111
பொய்யனே 396
பொய்யாய 231
பொய்யெல்லாம் 650
பொருட்ப 315
பொருத்த 97
பொருந்து 570
பொருளே 121
பொலிகின்ற 114
பொழிகின்ற 409
பொன்னிய 638

போகம் 76
போதுசேரயன் 403
போரேறே 57
போற்றியருளுக 174
போற்றியிப்புவன 74
போற்றியென்போ 67
போற்றியென்வாழ் 366
போற்றியென்று 49
போற்றியோ 66

மஞ்சுலா 522
மடங்கவென் 123
மண்ணதனிற் 651
மண்ணினில் 637
மத்துறு 134
மதிக்குந் 563
மருவினிய 552
மருளனேன் 464
மலங்கினேன் 468
மலைமகளை 261
மலையரை 267
மறுத்தனன் 110
ம்ன்னவனே 147
மன்னவெம்பி 103

மாடுகை 205
மாடும்சுற்றமும் 571
மாதாடு 332
மாதிவர் 587
மாயவனைப் 530
மாயவாழ்க்கை 581
மாயனேமறி 402
மாலயன் 588
மாலறியா 159
மாலேபிரமனே 248
மாவடுவகிர 413

மாழைமை	411
மாறிநின்றென்னை	386
மாறிநின்றெனை	37
மாறிலாத	95
மாறுபட்	115
மானமழிந்	320
மானேநீ	160
மானேர்நோக்கிமண	497
மானேர்நோக்கியுடை	89
மானேர்நோக்கியுமை	59
மானோர்பங்கா	492
மிடைந்தெலும்	419
மின்கணினார்	412
மின்னிடை	207
மின்னேரனைய	641
முடித்த	61
முத்தணி	204
முத்தன்ன	157
முத்தனே	463
முத்தனைமுதற்	586
முத்திக்குழ	246
முத்திநெறி	648
முத்துநற்றாம	195
முதலைச்செவ்	145
முந்தியமுதல்	373
முழுதயில்	148
முழுமுதலே	379
முழுவதுங்	11
முன்னாய	291
முன்னானை	193
முன்னிக்கடலை	170
முன்னின்று	377
முன்னீறு	329
முன்னைப்பழம்	163
முன்னையென்	428
முன்னைவினை	618
மூத்தானே	551
மூவரும்	623
மூன்றங்	328
மெய்தா	5
மெய்யனே	462
மேலைவா	47
மேவுமுன்றன்	487
மைப்பொலி	186
மையமர்	206
மையலா	567
மையிலங்கு	96
மொய்ப்பால்	417
மொய்யார்	165
யாவர்க்கு	622
யானேதும்	16
யானேபொய்	94
வட்டமலர்	213
வண்ணந்	29
வணங்கத்தலை	281
வணங்குநின்	79
வணங்குமிப்	572
வந்திமை	591
வம்பனாய்த்திரி	585
வம்பனேன்	447
வருந்துவ	17
வல்லைவாளர	449
வலைத்தலை	144
வழங்குகின்	415
வளர்கின்ற	108
வளைந்தது	294
வன்புலால்	516
வன்னெஞ்ச	225
வாட்டடங்	202
வாராவழி	621
வாவிங்கே	353
வாழ்கின்றாய்	24
வாழ்த்துவ	20
வாழ்ந்தார்	629
வாளுலா	519
வான்கெட்டு	252

வான்பாவிய	513
வான்வந்த	178
வானாடா	99
வானவன்	286
வாணுகி	19
விச்சதன்றி	100
விச்சுக்	85
விச்சைதா	33
விடுமின்	607
விடைவிடா	535
விண்ணகத்	374
விண்ணுளுந்	184
விண்ணோர்	253
விரவிய தீவினை	532
வினைக்கேடரு	507
வினைப்பிறவி	474
வினையிலே	26
வினையென்	41
வெஞ்சின	303
வெஞ்சேலனைய	425
வெந்துவிழு	653
வெய்யவன	300
வெய்யவினை	615
வெருவரேன்	515
வெள்ளத்துள்	118
வெள்ளந்தாம்	25
வெள்ளைக்	342
வெறுப்பனவே	407
வேடுருவாகி	590
வேண்டத்தக்க	499
வேண்டுகின்	78
வேண்டும்வேண்டும்	486
வேண்டேன் புகழ்	510
வேதமும்	214
வேதமொழி	336
வேவத்திரி	592
வேனல்வேள்	44
வேனில்வேள்	23
வைத்தநிதி	220
வைப்புமா	426
வையக	203

நூலிற் கண்ட அரும்பதம் முதலியவற்றின் அகராதி

(எண்—பாட்டு எண்)

அக்காரம், 569
அகண்டம், 635
அகநெகுதல், 396; 488; 520; 550
அச்சப்பத்து, 514–523
அச்சுமுறிதல், 296
அச்சோ, 512; 547
அச்சோப்பதிகம், 648–656
அச்சோவே, 648–656
அஞ்சலி, 76: 369
அஞ்செழுத்தின்புணை, 31
அஞ்செழுத்து, 431; 573
அஞ்ஞானந்தன்னை அகல்விக்கும் நல்லறிவு, 1
அட்டமாசித்தி, 2
அட்டமூர்த்தம், 317; 578
அடர்புலன், 142
அடவிமரம், 513
அடிச்சுவடு தலைமேற் பொறித்தல், 241
அடிமைசால அழகுடைத்து, 502
அடியவர்க்கெளியான், 39
அடியாருள்ளம், 2
அடைக்கலப்பத்து, 406-415
அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம், 3
அண்டாண்டம், 541
அதிகாரம், 501
அதிசயப்பத்து, 426-435
அதும்புதல், 140
அதெந்து, 456
அந்தணன், 175; 192; 235; 373
அந்தமிலா ஆனந்தம், 177; 183; 473
அந்தரம், 473; 189
அரங்கன், 258
அம்பரம், 124; 273
அம்மை, 656; 566
அமளி, 155
அயில்வேல், 148
அர்த்தநாரீசுவரவர்ணனை, 232
அரற்றுதல், 503
அருக்கன், 3; 278; 289
அருட்டுறை, 602
அருட்பத்து, 456-465
அருண்மலை, 2
அருநரகு, 435; 546
அருமந்த, 239
அருள் நீவினைக்காட்டைக் கொளுத்தல், 123
அல்லல், 477; 495
அல்லற்பிறவி, 1
அல்லிக்கமலத்துயன், 439
அவகதி, 238
அவம், 9; 158; 238; 375
அவலக்கடலாயவெள்ளம், 24
அவனருளாலே அவன் ருள் வணங்கி, 1
அவனி, 4; 240; 375; 596
அவாவெள்ளக்கள்வனேன், 28
அவிதாவிடுதல், 8
அழிதரும் ஆக்கை, 3
அழுக்குமனம், 406
அழுங்குதல், 415
அள்ளூறித்தித்திக்கப்பேசுதல், 157
அள்ளூறுதல், 364; 438
அள்ளூறுதேன், 102
அள்ளூறுள்ளம், 438
அளவு, 1
அளி, 517
அற்புதப்பத்து, 567–576
அறம்பாவம் என்னும் அருங் கயிறு, 1
அறவை, 539; 583
அறுகு எடுப்பார் அயனும் அரியும், 1 99

அறுபதம், 367
அறுவகைச்சமயத்தறுவகை யோர், 3
அறுவகைச்சமயம், 3
அறைகூவிவீடருளல், 175
அறைகூவுதல், 3; 175
அன்பின்மெய்ப்பாடு, 441
அன்பின்மெய்ப்பாடுகூறியது, 5
அன்பிலல்விகீயுஞ்செயல்கள், 443
அன்பிலல்விகீயும் மெய்ப்பாடுகள், 4: 80-86
அன்னப்பத்து, 4: 336-345
அனுதிருணங்கள், 634
அனுகுலம், 4

ஆக்கம், 1
ஆக்கம் அளவு இறுதியில்லார், 1
ஆகமம், 1
ஆசைப்பத்து, 416-425
ஆட்டுத்தேவர், 400
ஆட்பட்டவுடனே இழந்தவை, 275
ஆடும் அரவம், 213
ஆத்தமானர், 4
ஆதமிலி, 477; 546
ஆதிமூர்த்திகள், 2
ஆர்கலி, 347
ஆர்வம், 483; 484
ஆராத இன்பம், 1
ஆரியன், 2
ஆலின்கீழ்அறமுரைத்தது, 274
ஆறுகோடிமாயாசக்திகள், 4
ஆனந்தம், 2
ஆனந்தமாலை, 616; 641-647
ஆனந்தவாரி, 4
ஆனெய், 42

இகபரம், 596
இடர்க்கடல், 409; 432
இடவை, 588
இணக்கு, 466
இந்திரஞாலம், 2; 635
இந்திரன்குயிலானது, 302
இந்திரியப்பறவை, 326
இந்திரியவயம், 473
இயமான், 307
இயமானன், 1, 67
இராவணன்சிரம் இற்றமை, 312
இருஞ்சுனைநீர், 166
இரும்பின்பாவைஅனைய, 26
இரும்புநெஞ்சு, 84
இருமுச்சமயத்தொருபேய்த்தேர், 3
இருவினை, 559; 574
இலக்கிதம், 332
இறவு, 539
இறுதி, 1
இறுமாக்க, 234
இறுமாத்தல், 504
இறைவன்தோன்றி ஆட்கொண்டபோது மாணிக்கவாசகரிடம் தோன்றிய நிகழ்ச்சிகள் உருவகம், 3: 68-95
இன்பஊர்தி, 2
இன்பம் அலர்தல், 3
இன்றெனக்கெளிவந்தருளி, 3
இன்னியம், 638

ஈசன், 1; 540; 543; 588
ஈறறியாமறை, 640

உடம்பெல்லாம் கண்ணுய் வெள்ளம் பாயாதால், 25
உணக்குதல், 466
உத்தூளித்தல், 126
உபாயம், 429
உமை :—
இமவான்மகள், 207
ஏழை, 496
ஏலமேலுநற்குழலி, 98
கண்வெருள்புரிமானன்ன நோக்கி, 410
கயல்மாண்டகண்ணி, 245
கனிதரு செவ்வாயள், 2

காவிசேருங்கயற்கண்ணுள், 487
கிஞ்சுகவாயவள், 2
குரவுவார்குழன்மடவாள், 21; 430
கூறுடை மங்கை, 2
கொடிமங்கை, 248
கொடியேரிடையாள், 495
கொம்பனையாள், 566
கொன்றைச்சடையாள், 335
கோமளக்கொழுந்து, 72
கோமளம், 572
சுரிகுழல்மடந்தை, 460
திரைசேர்மடந்தை, 141
துடிகொள்நேரிடையாள், 460
நல்லாள், 2
பங்குலவு கோதை, 335
பஞ்சின்மெல்லடியாள், 451
பஞ்சேரடியாள், 4
பண்ணுர்ந்தமொழிமங்கை, 545
பண்ணினேர் மொழியாள், 550
பந்தணைவிரலி, 373; 453
பரங்கருணை, 602
பழுதில் தொல்புகழாள், 455
பார்ப்பதி, 301
பான்மொழி, 2
பெய்வளை, 168
பெருந்தேவி, 533
பேரமைத்தோளி, 3
போரிற்பொலியும் வேற்கண்ணுள், 611
மட்டுவார்குழல்மங்கை, 578
மதிக்கண்ணி, 13
மருவார்குழலி, 2
மலையரையன்பாவை, 267
மலையாள், 144
மாதுகல்லாள், 594
மாவடுவகிரன்னகண்ணி, 413
மாவின்வகிரன்ன கண்ணாள், 196
மானேர்நோக்கி, 59; 497
மைகலந்தகண்ணி, 77
மையிலங்குநற்கண்ணி, 96
வஞ்சிக்கொம்பு, 123
வரைமங்கை, 524
வரையாடுமங்கை, 240
வேயதோளுமை, 581
உயிருண்ணிப்பத்து, 504-513
உரும், 522
உரைமாண்டவள்ளொளி, 326
உலப்பிலா அன்பு, 481
உலப்பிலா ஆனந்தம், 542
உலோகாயதன், 4
உலோகாயதனெனும் ஒண்டிறற் பாம்பு, 4
உவமனிலிறந்தன, 43
உவமைகள் :—
அழலுறுமெழுகு, 399
அன்னத்தின்மேலறியாடு மணிமயில், 333
ஆரழல்போல்செய்யன், 165
இரைதேர்கொக்கு, 380
ஊற்றுமணல்போல்நெக்கு நெக்கு உள்ளேஉருகல், 437
எல்லாப்பிறப்பும்பிறந்திளைத்தல், 1
ஐம்புலப்பந்தணைவாளரவு, 3
கற்றவின்மனம், 556
கறந்தபால்கன்னலொடு நெய் கலத்தல், 1
கன்றைநினைந்தெழுதாய், 634
சிறைபெருநீர், 390
தடக்கையின்நெல்லிக்கனி, 3
தழல்முழுகும்விழுது, 148
தழலதுகண்டமெழுகு, 4
தீசேர்மெழுகு, 161
பசுமரத்தாணி அறைந்தது, 4
பலாப்பழத்து ஈ, 150
பள்ளந்தாழ்றுபுனல், 25
பூவினுற்றம், 3
பொய்கைபிராட்டியும்கோனும் போன்றது, 167
மத்திடுதயிர், 44
மலர்எழுதருநாற்றம், 434
மழை அம்மைக்கும் அவள் அருளுக்கும் உவமை, 170

உவலேச்சமயங்கள், 251
உழைத்தாலுறுதியுண்டோ, 494
உள்குதல், 181
உள்மதர்த்தல், 3
உளக்கரு, 45
உளுத்தல், 432
உன்மத்தம், 345
உன்மத்தன், 485

ஊடுவது உன்னோடு உவப்பதும் உன்னை உணர்த்துவது உனக்கு, 448
ஊன்மிடைந்தசிதலேச்செய்காயம், 145
ஊனுர்புழுக்கூடு, 59
ஊனைஉருக்குதல், 188

ஏச்சத்தார், 547
எச்சம், 512
எச்சன், 189; 259; 278; 289
எட்டினோடிரண்டும் அறியேன், 53
எண்குணம் செய்தல், 472
எண்ணப்பதிகம், 597-602
எண்ணில்பல்குணம்விளங்குதல், 2
எண்ணிறத்தல், 1
எண்ணுதற்கெட்டா எழிலார் கழல், 1
எத்தனையோயிந்திரர் பிரமர் மாண்டனர், 321
எய்த்தல், 485
எய்ப்பிடம், 538
எய்ப்பினின் வைப்பு, 3; 102; 143
எரிசடை, 430
எரிமூன்றுதேவர், 280
எல்லே — இரக்கக்குறிப்பிடைச் சொல், 507
எழில், 1
என்சொல்லிவாழ்த்துவன், 19
என்னைசெய்தநாடகம்நகவே தகும், 14

ஏ—அம்பு, 592
ஏசற்றிருந்தேவேசற்றேன், 380
ஏசறுதல், 154; 465; 489
ஏடர்—தோழர், 590
ஏண்—ஆற்றல், 88
ஏதம், 370; 427; 471
ஏதாமணி, 444
ஏதிலார், 471
ஏமாறிநிற்றல், 284
ஏர், 169
ஏல், 2
ஏலக்குழல், 159
ஏலுடைத்தாதல், 2
ஏழ்தலம், 3
ஏழில், 162
ஏழுலகு, 347
ஏற்றுக்கொடி, 366
ஏறத்துரத்தல், 2

ஐந்து நிறங்கள், 1
ஐம்புலனுயசேறு, 437
ஐம்முகம், 2
ஐவர்கண்டகர்தம் வல்லாட்டம், 564
ஐவர்கோக்கள், ஐம்பொறிகள், 533

ஒப்பிலாமணி, 536
ஒருங்கியசாயல், 3
ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமில் லாற்காயிரம் திருநாமம் பாடுதல், 235
ஒற்றிவைத்தல், 122
ஒன்பதுவாயிற்குடில், 1
ஒன்றுநீயல்லையன்றியொன் றில்லை, 392

ஓடு—திருவோடு, 557
ஓலமிடுதல், 159; 437; 457
ஓவாது, 484

கங்கணம், 213
கங்காளம், 265

கங்குல், 173
கங்கையிரைப்ப அராவிரைக்கும் கற்றைச் சடைமுடி, 208
கட்டன்—துன்பவடிவினன், 467
கடகரி, 269
கடலேயனைய ஆனந்தம், 489
கடிமலர், 442
கடுவினை, 484
கடைக்கூழை, 614
கண்டபத்து, 473-482
கண்டும்கண்டிலேன், 47
கண்ணப்பர் பூசையின்திறம், 315
கண்ணப்பனெப்படிதாரன் பின்மை கண்டபின், 218
கணவர், 163
கமலத்திரள், 406
கயக்கவைத்தல், 472
கரணமெல்லாம் இறைவன், 498
கரம், 1
கருடக்கொடியோன், 416
கருணைக்கடல், 117; 223; 249; 484; 591; 636
கருணைக்கண், 1
கருணைத்தேன், 561
கருணைமாகடல், 535
கருமால், 436
கருவில்உயிர்வளர்ச்சி, 4: 13-25
கல்லாமனத்துக்கடைப்பட்ட நாயன், 179
கல்லுமென்கனியாக்கும்விச்சை, 98; 179
கல்விஞானம், 406
கல்வியென்னும்பல்கடல், 4
கலதி, 233
கலாபேதத்தகடுவிடம், 4
கலாபேதம், 4
கலைஞானம, 548
கலைஞானிகள், 431
கவடு, 222
கவந்தி—கோவணம், 557
கழற்புணை, 409
கழுக்கடை, 2; 362; 525
கழுக்குன்று, 2; 466-472
கழுது, 11
கழுநீர்மாலை, 2
கழுமணி, 131
கற்றுமனம், 4; 556
கற்றைவார்சடை, 514
கறங்கோலைபோல்வதுகாயம், 242
கறையுரல், 198
கன்றுல்வினவெறிந்தான், 314
கன்னல், 188
கனகம், 2

காமச்சுறவு, 31; 409
காமப்பெருங்கடல், 325
காயம்—உடல், 37
காயம், 501
காயாரூயம், 400
கார்முகில் நிறத்துக்கண்ணன், 459
காரிகை, 633

கிஞ்சுகம், 2; 360
கில்லேன், 37
கிழியீடு—பொன்முடிப்பு, 565
கிற்பன், 45
கிற்றவர, 38
கிற்றிலேன், 45
கிறி, 36, 282, 517, 576
கிறிசெய்தல், 180, 282
கிறிமுறுவல், 517

கீடம், 3, 188
கீர்த்தித்திருவகவல், 2

குடநாடு, 2
குதிரைப்பரி, 647
குதுகுதுப்பு, 137, 138
குப்பாயம், 417
கும்பி, 413
குமண்டை, 557
குயிற்பத்து, 346-355
குரம்பை, 1, 3, 58, 173, 406, 433
குருகு, 167, 368

குலீப்பத்து, 557-566
குழகன், 3, 503
குழைத்தபத்து, 494-503
குழைத்தல், 494
குறியும்நெறியும்குணமும், 559
குனித்தல், 493, 557

கூற்றுவன் சிற்றம், 523

கெளிறு, 2

கேதம், 3, 482, 595
கேவேடர், 2
கேழ், 162

கொக்கிறகு, 254
கொங்கு, 171, 335
கொட்குதல், 3
கொடுமாநரகம், 644
கொன்றைத்தார், 168
கொன்றைமதியமும்கூவிளமத்த
மும் துன்றியசென்னியர், 345
கொன்றைமாலை, 133, 213, 520

கோதாட்டுதல், 159. 171
கோது, 403, 477
கோமளம், 72. 124, 572
கோயிற்பிணிப்பிள்ளைகள், 164
கோயிற்றிருப்பதிகம், 386-395
கோயின்மூத்ததிருப்பதிகம், 376-385
கோற்றேன், 3, 362, 511

சகம்பேய், 4
சங்காரா ஆர்கொலோ சதுரர், 395
சட்டம்—உடல், 467
சட்டோ—சற்று, 221
சத்திசோமி பார்மகள்நாமகள்
பல்லாண்டிசைத்தல், 195
சண்டமாருதம், 4
சதுர், 4, 18, 262, 273. 471,
525
சதுர்படுதல், 2
சமயவாதிகள், 4
சலிப்பெய்தல், 2
சவலை, 645
சவலைக்கடல், 251
சழக்கன், 467

சாத்திரம், 251
சாத்து, 2, 596, 607
சாதல்பிறப்பென்னும்தடஞ்சுழி,
655
சாதிகுலம்பிறப்பென்னும்சுழி,
477

சிக்கெனப்பிடித்தல், 534-543
சிட்டர், 213
சித்தம்சிவமாக்குதல், 318
சித்தமலம்அறுவித்தல், 648
சித்தமழகியார், 157
சித்தமெனும்திண்கயிற்றால்
திருப்பாதம் கட்டுவித்தல்,479
சித்தர்கள், 614
சித்தவிகாரக்கலக்கம், 220
சித்தி, 195, 637
சித்தி கௌரி பார்ப்பதி கங்கை
கவரிகொள்தல், 195
சிதடர், 656
சிந்தனையுள் தேனூறுதல், 1
சிந்தனையைத்திருத்தியாளல்,491
சிந்துரச்சேவடி, 350
சிந்தைதனைதெளிவித்துச் சிவ
மாக்கி ஆண்டமை, 473
சிந்தையால் அறிதல், 51
சிலம்புதல், 162, 570
சிவபதம், 475, 536, 560
சிவபுராணம், 1
சிவபெருமான், 534, 536, 537,
538, 539, 541, 542, 550, 553,
590, 597
I சிவபெருமான் அருமை :—
அடியொடு நடுவீறுனவன், 4
அயனும் மாலும் அல்லா
தோரும் அமரர் கோனும்
சொல்லிப் பரவும் நாமத்
தன், 439

அளவறுப்பதற்கரியவன், 39
அறிவரியான், 159, 160
ஆதி இடை முடிவுமாகிய மூவரறியா அடி, 350
ஆராலும் காண்டற்கரியன், 176
உன்னற்கரியான், 161
எப்பாலவர்க்குமப்பாலாமாரமுது, 417
ஏனைநாடருந்தெரியாணவன், 99
காண்பரிய பேரொளி, 1
சித்தமுஞ் செல்லாச்சேட்சியன், 3
சிந்தனைக்கரிய சிவம், 4
சொல்லற்கரியான், 1
தேவர் கோவறியாத தேவ தேவன், 34
தேவரும் அறியாச் சிவன், 3, 47, 99, 237, 241, 291, 374, 418, 421
நாலுணர்வுணரா நுண்ணியோன், 3
நோக்கரிய நோக்கு, 1
மறைதேடிய அரும்பொருள், 89, 99, 569, 636
மாலயன் அறியான், 2, 3, 159, 174, 175, 192, 234, 260, 269, 314, 324, 341, 393, 405, 408, 436, 440, 448, 449, 454, 456, 459, 499, 515, 528, 554, 575, 619, 626
மாலுக்கு எட்டாதவன், 11, 235, 334, 416, 518, 610, 633
மாலுநான்முகத்தொருவர் யாரினும் முன்னவன், 103
மூவரறியாதவன், 350, 577
மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின் நோக்கரிய நோக்கு, 1
யார்க்கும் அரும்பொருள், 52

II சிவபெருமான் எழுந்தருளிய தலங்கள் :—
அண்ணாமலை, 4, 184
அம்பலம், 379. 516
அவிநாசி, 647
ஆரூர், 2, 4, 85, 356, 554
ஆனைக்கா, 193
இடைமருது, 2, 4, 276, 328, 552, 588
இலங்கை, 347, 591
ஈங்கோய்மலை, 2, 4
உத்தரகோசமங்கை, 2, 105-124, 152, 293, 327, 328, 329, 330, 331, 332, 334, 335, 348, 358, 372, 630
ஏகம்பம், 2, 4, 198, 199, 295
ஐயாறு, 2, 4, 187, 423
ஓரியூர், 2
கடம்பூர், 2, 4
கயிலை, 2, 465
கல்லாடம், 2
கவைத்தலை, 4
கழுக்குன்று, 2, 4
கழுமலம், 2
குவைப்பதி, 4
குற்றாலம், 2, 4, 556
கூடல், 4
கோகழி, 1, 4, 626, 630
சந்திரதீபம், 2
சாந்தம்புத்தூர், 2
சிராப்பள்ளி, 4
சிவபுரம், 1, 44, 424, 446-455, 608, 610
சிற்றம்பலம், 168, 179, 213, 478
திருப்பனையூர், 2
திருவாஞ்சியம், 2
தில்லை, 1, 2, 4, 59, 71, 166, 179, 203, 225, 254, 263, 268, 281, 288, 313, 449, 473-482, 557-566, 580, 646
துருத்தி, 2, 475

தென்பராய்த்துறை, 399
தேதவூர், 2
நந்தம்பாடி, 2
பஞ்சப்பள்ளி, 2
பட்டமங்கை, 2
பராய்த்துறை, 4
பழனம், 4
பாண்டி நாடு, 1, 2, 184, 193 340, 524, 528, 633
பாண்டூர், 2
புலியூர், 2
புயம்பயம், 2
பூவணம், 2, 4
பூவலம், 2
பெருந்துறை, 1, 2, 3, 175, 176, 177, 179, 182, 183, 184, 189, 192, 193, 203, 236, 292, 347, 359, 360, 363-375, 386-404, 446-455, 466-472, 504-513, 550, 555, 577-579. 581, 587, 589, 590, 591-596, 615-621, 624, 625, 627-629, 630-632
பொன்னம்பலம். 376, 377 378, 380, 384-335
மகேந்திரம், 2, 590, 595
மதுரை, 182, 290, 596, 647
மந்திரமாமலை, 2, 4
வாதவூர், 2
வெண்காடு, 2
வேலம்புத்தூர், 2
III சிவபெருமான் திருமேனி:—
அங்கணன், 75, 171, 175, 412, 458, 596
அப்பார் சடையப்பன், 185
அரவன், 430
அரவு வார்கழல் இணைகள், 21
அவிர்சடை, 140
ஆடரவப் பூணுடைத்தோல் பொடிப்பூசிற்றேர் வேடம், 339
ஆழியான், 162
உமைபங்கன், 4, 21, 42, 69, 77, 79, 96, 98, 141, 162 164, 165, 181, 182, 184, 192, 193, 240, 297, 332, 344, 358, 405, 410, 413, 425, 427, 450, 451, 453, 455, 456, 487, 492, 495, 496, 504, 545, 554, 566, 578, 587, 594, 611, 650, 655
உழுவையின் தோலுடுத்தது, 11
எண்டோன்முக்கன் எம்மான், 496
ஏலவார் குழலிமாரிருவர் தங்கள் நாயகன், 458
ஏனத்தெயிறணிந்தோன், 3
ஒளிப்பரப்பு, 393
ஒளியான், 1
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியான், 1
கங்கைச் சடையன், 261. 544
கங்கை பங்கன், 89
கண்சுமந்த நெற்றிக்கடவுள், 182
கண்டங்கரியான் 183
கண்ணஞ்சனத்தர், 337
கண்ணுர் நுதலோன், 457, 502, 514
கமல உருவினன், 354
கரும்பணக்கச்சைக்கடவுள், 3
கழுநீர்மாமலைக்கடவுள், 4
கறைக்கண்டன், 136
கறைமிடற்றன், 223
காதாடுகுண்டலங்களுடைமை [332
காபாலி, 284
கானப்புலியுரியரையோன், 3
குவளைக்கண்ணிகூறன், 3
குன்றனையான், 500
கையில் தாளம் வைத்திருப்பவர், 344
கொன்றை அலங்கல் தரித்தவன், 133

கொன்றைச்சடையான், 325
கொன்றைமாலைமார்பன், 593
சச்சையன், 134-135
சடைமுடிதனில் இளமதி வைத்தது, 428
சடையன், 140, 521
சடையான், 555
சடையுளே கங்கைவைத்த சங்கரன், 68
சந்தனச்சாந்தின் சுந்தரன், 4, 343
சுண்ணப்பொன்னீற்றன், 218
சூழொளிவிளக்கு, 456
செச்சைமலர்புரையுமேனி, 33
செந்தழல்புரைதிருமேனி, 373, 453
செந்தாமரைக்காடனையமேனி, 30
செம்பெருமான், 356
செம்மேனியர், 183, 336
செய்யான், 187
செழுஞ்சுடர்மூர்த்தி, 538, 540
செழும்தியணிந்தமை, 455
சேர்ந்தறியாக்கையான், 187
சேயான், 181
சோதி, 456, 489, 586, 587, 593, 602
தழற்பிழம்பன்ன மேனி, 462
தாபதவேடத்தர், 344
தாமரைமேனியப்பன, 133
தாழ்தடையோன், 353
தாளியறுகின்தாரன், 4
தாளியறுகினர், 343
தீமேனியான், 234
துண்டப்பிறையான், 183
தெற்றர் சடை, 508
தேசப்பளிங்கின்திரள், 4
தேசன், 1, 55, 156
தேசுடை, விளக்கு, 540
தோளுலா நீற்றன், 519
நஞ்சமர் கண்டத்தன், 330
நிலா அணியிளஞன், 525
நிறங்களோரைந்துடையான், 1
நீண்டகரத்தர், 340
நீற்றன், 3, 37, 126, 457, 595
நெறிதருகுஞ்சியர், 340
பங்கன், 107
பச்சையன்செய்யமேனியன், 135
படர்சடையான், 547
பருதிவாழொளியான், 452
பள்ளிக்குப்பாயத்தர், 342
பிஞ்ஞகன், 193
பிறையணிந்தவன், 331, 402, 494, 509, 515
பின்னப்புதுமைக்கும் அப்பெற்றியான், 163
புயங்கன், 4, 66
புரிநூலோன், 183
புலித்தோலுடையவன், 257, 266
பூப்போது—திருவடி, 445
பெண்ணீற்றர், 336
பொங்குவாளரவம் கங்கை நீர் தங்கு செஞ்சடையன், 464
பொடியாடி, 420
பொன்மேனி, 115
பொன்னெனவென்றதோர்புரிசமை, 428
பொனின்மேனிஅமுது, 354
மணியனையான், 600
மலர்ந்தமலர்ச்சுடர், 1
மழவிடையான், 455
மாசறுசோதி, 215
மாசுணக்கச்சை, 213
மாவுரியான், 454
மின்னுர் உருவன், 4
முத்துமாமணிமாணிக்கவயிரத்தபவளத்தின் முழுச்சோதி அத்தன், 432
முயற்கறையின் அரும்பரநேர் வைத்தணிந்தவன், 139
மூலபங்கன், 185
மூவிலைவேல்வலன் ஏந்திப் பொலிபவன், 113
மையமர்கண்டன், 206

வண்ணம் சேயதன்று வெளி தேயன்று, 29
வயிரத்தொப்பன், 461
விடமுண்டகண்ட த்தழு து, 111, 402
வியன்கங்கை பொங்கிவருநீர் மடுவின் மலைச்சிறுதோணி வடிவின் வெள்ளக்குருநீர் மதிப்பொதியுஞ் சடை வாளக்கொழுமணி, 130
வெண்டலைமிலைச் சிக் கெ ரத் துறுபோது மிலைந்து குடர் நெடுமாலைசுற்றித் தத்துறு நீறுடனரச்செஞ் சா ந் தணி சச்சையர், 134
வெண்டிரு முண்டத்தர், 342
வெண்ணீறணிந்தான், 165, 187, 554
வெண்தலைமுழையிற்ப தியுடை பாளர்ப்பார்த்திறை பைத் துச்சுருங்கவஞ்சி ம தி நெடு நீரில் குளித்தொளிக்கும் சடையன், 146
வெண்மதிக்கொ ழுந் தென் றெளிர்கின்ற நீண்முடி, 108
வெள்ளக்கலிங்கத்தர், 342
வெளியநீருடுமேனிவே தி யன், 517
வேங்கையின் தோலுடையவர், 105
வேழத்துரியான், 128
IV சிவபெருமான் திருவிளை யாடல்கள் :—
அங்கிகை தறிந்தது, 300
அடையார்புரம் எரித்தமை, 398
அத்திக்கு அருளியது, 246
அத்தியுரித்தது போர்த்தது, 293
அந்தணனாகி, இந்திரஞாலங் காட்டிய இயல்பு, 2
அந்தணனாகி வந்தது, 355
அம்பலத்தே கூத்தாடியது, 271
அயன்றலைகொண்டு சென்டா டல், 212
அருக்கனெயிறு பறித்தல், 212
அருச்சுனன் பொருட்டு வேடு வனாய் இயங்கியது, 592
அலைகடன் மீமிசை நடந்தது, 4
அலைகடல்வாய்மீன்விசிறுதல், 176
அழலாய் நின்றது, 353
அனலேந்தி ஆடுதல், 191
ஆல்கீழ்அறமுரைத்தது, 287
ஆலாலமுண்டல், 262, 286
ஆலின்கீழிருந்தங்கறமுரைத் தான், 270
இடைமருதூரில் படிமப் பாதம் வைத்தல், 2
இத்தி தன்னின்கீழ் இரு மூவர்க்கத்திக்கருளியது, 4
இயக்கிமார் அறுபத்து நால் வரை எண்குணம் செய் தமை, 472
இரவு நின்று எரியாடிய இறை, 430
இராவணனை மிதித்தமை, 563
இருங்கடல்வாணற்குத் தீயிற் றோன்றும் ஓவிய மங்கை யர் தோள்புணர்ந்தமை, 594
இறைவன் மானுடனாகி வந்து நோக்கியது, 95
உத்தரகோசமங்கையில் வித் தக வேடங்காட்டியது, 2
உமையுடன் வந்தருளுதல், 57, 228, 244
எரியைக்கரம் குறைத்தது. 323
ஏகம்பத்தில் பாகம் பெண் ணானது, 2
ஏற்றூர் மூதூர் எழினகை எரி, 3
ஏனக்குருளைக்கருளினது, 4
ஏனத்தின் பின்னே நடந்தமை, 564

ஐம்முகங்களால் ஆகமம் பணித்தது, 2
ஒருமூவரைக்காவல் கொண்டமை, 297
ஓரியூரில் பாலகனாகியது, 2
கடவுள்வேதியனாய் வந்தது, 4
கதிரோன் பல் தகர்த்தது, 323
கயந்தனைக்கொன்றுரிபோர்த்தல், 212
கரிகடந்தமை, 125
கருங்குருவிக்கன்றருளியது, 4
கழுதைதாடு காட்டிமை நாடகமாடியது, 11
காத்து .....காந்தும் விளையாடியது, 166
காமனை எரித்தது, 458
காலன் உயிர் வாங்கியது, 323 404
காலனைக் காலாலுதைத்தல், 212, 462
கிராதவேடங்கொண்டது, 2
கெளிறுபடுத்து ஆகமம் வாங்கியது, 2
குதிரையின்மேல் வந்தருளியது, 177, 194, 524, 526, 532, 590, 623, 627
குதிரையைக்குடநாடதன்மிசை செலுத்தியது, 2
கூற்றெருங்க உறும்கடிப்போது, 129
கேவேடராகிக் கெளிறு வகுத்தது, 2
சண்டேசுவரருக்கு அநுக்ரகம் செய்தமை, 319
சந்திரதீபத்துச் சாத்திரனுகியது, 2
சலந்தரனைத் தடிந்தது, 272
சிலையாலெரித்தது, 114
சூரியனுர் தொண்டை வாயினிற் பற்களை வாரி நெரித்தமை, 308
சோமன் கலை குறைத்தது, 323
சோமன்முகனெரித்தது, 306
தக்கன், எச்சன் தலை குறைத்தது, 323
தக்கன் தலை சூஞ்சியது, 303
தக்கன் யாகத்தில் தேவர்களை வடுச்செய்தது, 258, 259
தக்கன் வேள்வி தகர்த்தது, 8, 298
தக்கன் வேள்வியில் இறைவன் செய்தருளியவை, 189
தக்கனுக்கு ஆட்டின் தலை கூட்டியது, 304
தண்ணீர்ப்பந்தல் வைத்தது, 2
தர்ப்பணமதனில் வேடற்கீந்தது, 2
தாயாய் முலையைத் தருதல், 645
திருமாலுக்குச் சக்கரம் அருளியது, 322
திருவாஞ்சியத்தில் திண்சிலையேந்திப் பாவகம் பல காட்டியது, 2
திருவாரூரில் ஞானந்தன்னை நல்கியது, 2
தில்லையில் உமையொடு காளிக்கு அருளியது, 2
தியாடுங்கூத்தன், 166
தேனூர்த் தென்பாற்றீவில் கோவார் கோலம் கொண்டது, 2
நஞ்சேயமுதாய் நயந்தது, 4, 132, 136, 153, 284, 331, 398, 528, 546
நரியைக்குதிரையாக்கியநன்மை, 2, 544, 647
நாகம் அணிந்தமை, 291
நாமகள் நாசி அரியுண்டது, 306, 323
நாரணற்கு ஆழி அளித்தல், 272
நிலத்தின் வந்தருளியது, 1
பகன்கண் பறியுண்டது, 305
பட்டமங்கையில் அட்டமாசித்தி அருளியது, 2

பதஞ்சலிக்கருளிய பரம நாடகன், 2
பரகதி பாண்டியர்க்கருளியது, 4
பரிப்பாகன், 353
பன்றிக்குட்டிக்குப்பால் கொடுத்தது, 592
பாண்டி நாட்டைச் சிவலோகமாக்குவித்தது, 185
பாண்டியன்தனக்குத் தோற்றியது, 2
பாண்டியனுல் புண்பட்டது, 290
பார்ப்பானுக வந்தது, 580
பார்வதியின் துணமுலைக் கண்கடோய்சுவடு பெரடி கொள்வான் தழலிற் புள்ளி போலிரண்டும் பொங்கொளி தங்கும் மார்பினன், 460
பாலகனுர்க்கன்று பாற்கடல் ஈந்திட்டமை, 310
பிட்டமுது செய்தது, 290
பிட்டுக்கு மண் சுமத்தல், 182, 467
பித்த வடிவு கொண்டது, 293
பிரமன் சிரம் கொய்தது, 306, 311, 323
புகைமுகந்தெரிகை வீசிப் பொலிந்த அம்பலத்துள் ஆடுதல், 520
புரம்பல எரித்தல், 4
புரமூன்றெரித்தல், 269, 270, 280, 294-296, 435, 462, 592
புலிகொன்றவீரன், 594
புலிமுலை புல்வாய்க்கருளியது, 4
புறம்பயத்தில் அறம்பல அருளியது, 2
பூவணமதனில் தூவண மேனி காட்டியது, 2
பூவலத்தில் பாவ நாசமாக்கிய பரிசு, 2
பெருந்துறையிற்சோதியிற் கலந்தது, 2
பொற்சிலம்புணித்தல், 17
மகேந்திரத்தில் ஆகமம் சொல்லியது, 2
மகேந்திரத்து வேடுருவாகியிருந்தமை, 590
மண்டோதரிக்கருளினமை, 347, 591
மதுரையில் குதிரைச் சேவகனுகியது, 45
மதுரையில் மண் சுமந்தது, 2
மறையோர் கோலம் காட்டியது, 3
மாயவனப்பரிமேல் கொண்டமை, 530
மீன்வலை வீசியது, 589, 628, 633
முப்புரமெய்தல், 212
மும்மதில் எய்தவில்லி, 199
மெய்க்காட்டிட்டுத் தக்கனுருவனுகியதன்மை, 2
மெய்க்காட்டிடுதல், 2
மொக்கணியருளிய தழல்மேனி காட்டியது, 2
வராகமாய்த்தோன்றியது, 470
வாதவூரில் பாதச்சிலம்பொலி காட்டியது, 2
விட்டேறருளியது, 2
விருந்தினனுகி வெண்காடதனில் குருந்தின் கீழ் இருந்தது, 2
வீரபத்திரரால் தக்கன் யாகம் அழித்தது, 278
வெங்கரியினுரி தரித்தது, 153
வேடுவனுகிக்காடதுதன்னிற் கரந்த கள்ளம், 2

V சிவபெருமான் நாமம் முதலியன :—
அச்சந்தவிர்த்த சேவகன், 3
அச்சன், 575
அட்டமூர்த்த வடிவு, 67
அட்டமூர்த்தி, 578

அடிகள், 343, 460
அடியவர்க்கண்மையன், 126
அடியார் உடல் இலமே மன்னு பவர், 117
அடியார் உள்ளத் துள்ளான், 118
அண்டத்தவர் நாதன், 330
அண்டமுதலாயினன், 183
அண்ணல், 651
அணுவணுவில் இறந்தான், 29
அத்தர், 338
அத்தன், 1, 157, 396, 422, 463, 541, 582, 616, 648
அந்தணன், 192
அந்தம் நடுவாகியல்லான், 1
அந்தமிலமுது, 453
அந்தமும் ஆதியும் அகன்றவன், 3
அநேகன், 1, 3
அநேகன் ஏகன், 29
அப்பன், 426, 461, 521, 536, 573, 584
அப்பாலீக்கப்பாலன், 185
அம்பரவன், 22
அம்பலத்தமுது, 549
அம்பலவன், 55
அம்மை, 536
அமரப்பெம்மான், 596
அமரர் கோமான், 589
அமலன், 459
அமுதன், 157, 596
அமுது, 380, 477, 486, 512, 578, 602
அரசன், 396
அரவாட்டி, 547
அரன், 1
அரிகேசரி, 4
அரியதில் அரிய அரியோன், 3
அரியபொருள், 647
அரியவன் எளியவன், 428
அருக்கனிற் சோதி அமைத்தோன், 3
அருட்பெருங்கடல், 396, 405
அருட்பெருஞ்சோதி, 155
அருணனிசுரக்கும் அமுது, 3
அருத்தன், 457
அருந்தவர்க்கரசு, 537
அருந்தவர்க்கருளும் ஆதி, 3
அரும்பெரும்பொருள், 453
அருமருந்து, 511, 512
அருமாமணி முத்து, 486
அருவமும் உருவமும் ஆனவன், 4
அருவாய் உருவமுமாயபிரான், 236
அருளமுதம், 17
அருளாரமுதப்பெருங்கடல், 485
அருளாரமுதம், 415
அருளுடைச்சுடர், 537
அழகன், 578
அளவிலாப்பெம்மான், 1
அற்புதன், 3
அறிவாம் தேற்றன், 1
அறுவகைச்சமயத்தறுவகையோர்க்கும் வீடுபேரூய்நின்ற விண்ணோர் பகுதி, 3
அன்பர்க்கு மெய்யான் அல்லாதார்க்கல்லாதவன், 187
அன்பரன்றி யறியொணாதவன், 577
அன்பருக்கன்பன், 1
அன்பருள்ளங்கரந்து நில்லாக்கள்வன், 10
அன்பினில் விளைந்த ஆரமுது, 536
அன்பு, 538
அன்னை, 428
ஆகமமாகி நின்றண்ணிப்பான், 1
ஆடகச்சிர்மணிக்குன்று, 15
ஆணை அலியோ அரிவையோ என்றிருவர் காணக்கடவுள், 331
ஆதி, 427, 541, 590

ஆதி—அந்தம், 168
ஆதிஅந்தம், 174
ஆதிகுணமொன்றுமில்லான் அந்தமிலான், 346
ஆதிப்பிரமம், 587
ஆதிமுதற்பரமாய பரஞ்சுடர் 635
ஆதியன், 1
ஆதியும் அந்தமும் ஆயினர், 214
ஆதியுமந்தமுமற்றவன், 155
ஆரமுது, 1, 4, 171, 207, 373, 420, 438, 453, 545, 597
ஆராத இன்பம் அருளுமலி, 1
ஆராவமுதம், 176
ஆராவமுது, 1, 4, 327, 422 621
ஆரியன், 1
ஆழ்ந்தகன்ற நுண்ணியன், 1,
ஆழியப்பன், 411
ஆற்றின்பவெள்ளம், 1
ஆனந்த ஆறு, 359
ஆனந்தக்கூத்தன், 320
ஆனந்தத்தேனிருந்தபொந்து, 276
ஆனந்தமூர்த்தி, 577
ஆனந்தர், 338
ஆனந்தவெள்ளம், 264, 578
ஆனந்தன், 157
இகபரமாகியிருந்தவன், 121
இடபவாகனன், 613
இணைப்பரும்பெருமையில் ஈசன், 3
இணையிலி, 474
இந்துசிகாமணி, 639
இமவான்மகட்குத் தன்னுடைக்கேள்வன், மகன், தகப்பன், தமையன், 207
இமைப்பெழுதும் என்னெஞ்சின் நீங்காதான், 1
இருளேவெளியே, 121
இறையோன், 619
இறைவன், 1, 4
இன்பப்பெருமான், 1
இன்பம், 543
இன்பமும் துன்பமும் இல்லான் உள்ளான், 1
இன்னமுது, 193
இன்னிசைவீணையில் இசைந்தோன், 3
ஈசன், 4, 540, 543, 584, 593 595
ஈறும் ஆதியும் இல்லான், 329
உண்ணின்றுருக்குவர், 337
உண்மையுமசய் இன்மையுமாய்ப்பூத்தான், 551
உம்பர்கட்கரசு, 534
உமையாள் கொழுகன், 197 497
உய்ய என்னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யன்,
உயிர்த்தலைவன், 458
உருவன்றுமாகியவன், 280
உரையுணர்விறந்த ஒருவன், 4
உலகுக்குயிரானவன், 374
உலகுடையவொருமுதல், 478
உலகேழும் ஆயான், 181
உள்ளத்து ஒளிர்கின்ற ஒளி, 538
உளத்தெழுகின்ற ஞாயிறு, 392
உள்விருக்குமுள்ளான், 181
உன்மத்தன், 11
ஊழிமுதல், 325
ஊனைநாடகமாடுவித்தவர், 99
எங்கும் செறிந்தான், 187
எண்டோள் முக்கண் எம்மான், 500
எண்ணிறந்தெல்லையிலாதோன், 1
எத்தன், 541, 580
எந்நாட்டவர்க்கும் இறைவன், 4
எப்பெருந்தன்மையும் எவ்வெவர்திறமும் அப்பரிசதனுல் ஆண்டு கொண்டருள்பவன், 2

எப்பொருட்கும் தானேயான வன், 186
எம்பிரான், 522, 584
எம்பெருமான், 548-551
எய் தினர்க்காரமுதளிப்போன், 3
எல்லாஉயிருமாய்த் தழைத்த வன், 541
ஏழுலகும் முழுதாளி, 351
ஏகன், 1
ஏகன் அநேகன் இறைவன், 1
ஏழ் பொழிற்கும் நாதன், 257
ஏறுடை ஈசன், 2
ஐயம்புகுவார், 344
ஐயன், 206, 359, 396, 400, 462, 654
ஒப்பில்லா ஒருவன், 538
ஒப்பிலாத திருவடியுடையவன், 426
ஒருத்தன், 457, 621
ஒருவர், 524
ஒருவன் என்னும் ஒருவன், 3
ஒல்லேவிடையான், 179
ஒன்றுமிலாதவர், 524
ஓங்காரத்துட்பொருள், 654
ஓசையாலுணர்வார்க்குணர்வரியன், 574
ஓதவுலவாவொருதோழன், 164
கடவுள், 535
கண்ணுக்கினியான், 158
கரங்குவிவாருண்மகிழ்ங் கோன், 1
கரணங்களெல்லாங் கடந்து நின்றவன், 223
கருணைகரன், 132
கருணையன், 436
கருணைக்கடல், 223, 337, 591
கருணைமலை, 4
கள்ளப்புலக்குரம்பை கட்டழிக்க வல்லான், 1
கற்பமும் இறுதியும் கண்டோன், 3
கன்னுருரித்த கனி, 537
காக்குங்காவலன், 1
காக்கும் கடவுள், 3
காட்டகத்துவேடன், 628
காலின் ஊக்கங்கொண்டவன், 3
குணங்கடாமில்லா இன்பம், 389
குணங்களும் குறிகளுமில்லாக் குணக்கடல், 572
குணமிலி, 150
குருபரன், 4
குருமணி, 1, 4, 418, 644
குருவன், 72
குழகன், 503
குறியொன்றுமில்லாத கூதன், 649
குறைவிலா நிறைவு, 390
கூத்தன், 209, 555
கூரிருட்கூத்தொடு குனிப்போன், 3
கைலையுயர்கிழவோன், 2
கோ, 417, 418, 493, 646
கோகழியாண்ட குருமணி, 1
கோலமறையோன், 503
கோன், 1, 492, 497, 503
சங்கரன், 221, 398, 395, 598
சதுரன், 596
சிகாமணி, 470
சிட்டன், 467, 578
சிட்டாயசிட்டன், 221
சித்தத் திருப்பர், 338
சித்தன், 463, 541
சிந்தனையுள் ஊற்றுன உண்ணமுது, 1
சிந்தாத நன்மணி, 325
சிந்தையே கோயில் கொண்டபிரான், 395
சிரங்குவாரோங்குவிக்கும் சீரோன், 1
சிவலோகன், 87, 156, 467, 491, 495, 498, 578, 612
சிவன், 490, 611

சிறவு, 4
சுடுகாட்டரசன், 142, 153, 257
சூலப்படையான், 555
சூழிருந்துன்பந்துடைப்போன், 3
சூறைமாருதத்தெறிய துவளியின்,
செம்பொருட்டுணிவு, 534
செல்வம், 534, 536, 537, 538, 539, 541, 542
சேயான் நணியான், 1
சேவகன், 171, 181, 190, 533
சைவன், 565
சொல்லும்பொருளும் இறந்த சுடர், 439
சொற்கழிந்தவன், 147
சொற்பதங்கடந்த தொல்லோன், 3
சோதி, 168, 543. 577, 584, 595
சோதியுமாய் இருளாயினர், 214
ஞானக்கரும்பின்தெளி, 209
ஞானச்சுடர், 425
ஞானவாள் ஏந்துமையர், 613
தம்பிரான், 515
தழலாடி, 555
தன்பெருமைதானறியாத்தன்மையன், 273
தன்னேரில்லோன், 3
தன்னேத்தந்த என்னரமுது, 436
தன்னையே ஒப்பவன், 120
தனையொப்பாரையில்லாத்தனி, 442
தாதை, 444
தாமேதமக்கு விதிவகையானவன், 605
தாயானஈசன், 226
தாயான தத்துவன், 181
தாயிற்சிறந்த தயாவான தத்துவன், 1
தாயிற்பெரிதும்தயாவுடைதம்பெருமான், 277
தாயுமிலிதந்தையிலி, 257
தாளடைந்தார் நெஞ்சுருக்கும் தன்மையினன், 185
தானேயாகிய தயாபரன், 2
தானெருவனுமே பலவாகிநின்றவன், 317
திருமேனியொன்றல்லன், 164
தீமைநன்மைமுழுதும் இறைவன், 498
தீயிடைமூன்றுய்த்திகழ்ந்தவன், 4
தீயின்வெம்மைசெய்தோன், 3
தீர்த்தன், 166
துப்பன், 461
துரியமும்இறந்தசுடர், 4
துன்பமுமாயின்பம் ஆயினன், 214
தூயான், 461
தென்னவன், 530
தென்னன், 175, 181, 595, 647
தென்னன்பெருந்துறையான், 185
தென்னுடையசிவன்,
தேவதேவன், 577
தேவர்க்குமேலாயவன், 184
தேவர்தேவன், 454
தேவர்பிரான், 356
தேவன், 418, 646
தேற்றத்தெளிவு, 1
தேனுர் அமுது, 1
தேறும் வகையும் திகைப்பும் இறைவன், 498
தொழும்பர்க்கமுது, 142
தோளாமுத்து, 436
தோன்றுப்பெருமையன், 1
நச்சரவாட்டியநம்பன்,
நம்பிரான், 522
நல்வேலன்தாதை, 197
நள்ளிருளில் நட்டம்பயின்றருளுநாதன், 1
நாட்டிற்பரிப்பாகன், 628
நாடற்கரியநலம், 209

நாதப்பறையினர், 336
நாதன், 400, 636
நாற்றத்தினேரியான், 1
நான்மறையோன், 27
நான்முகன்மாலுக்கும்நாதர், 336
நிச்சலும் ஈர்த்தாட் கொள்வோன், 3
நித்தமணாளர், 338
நிமலன், 457
நிரம்பவழகியர், 338
நிருத்தன், 65, 457
நிற்பதும் செல்வதும்ஆனேன், 3
நிறைந்தயோகம், 534
நின்மலன், 511
நீதி, 456
நீரிடைநான்காய்நிகழ்ந்தவன், 4
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன், 3
நீருறுதீ, 393
நுணுக்கரிய நுண்ணுணர்வி, 1
நூலே நுழைவரியான், 248
பக்திவலையிற் படுவோன், 3
பசுபதி, 555
படைக்கும்பழையோன், 3
பண்டைப்பழவடியார்க்கு அண்டம்ஈந்தருள்வான், 183
பந்தமுமாய்வீடும் ஆயினன், 214
பந்தனையறுப்பான், 36
பரங்கருணை, 162, 587
பரங்கருணைத்தடங்கடல், 249, 552
பரஞ்சுடர், 641
பரஞ்சோதி, 162, 238, 246, 386, 422, 555
பரம்பரம், 2
பரம்பரன், 9, 138–139, 325, 424, 427, 616
பரமன், 445, 591, 602
பரமானந்தப்பழங்கடல், 3
பரன், 422, 456
பராபரம், 639
பராபரன், 580
பாரொடுவிண்ணுய்ப்பரந்தபரன், 446
பல்லுயிர்க்கும்கோன், 190
பல்லுயிரெல்லாம் பயின்றனன், 2
பலிதேர் அம்பலவன், 216
பவன், 4, 13
பழம்பொருள், 540
பழையோன், 3
பனவன், 506
பாசமாம்பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியன், 1
பாண்டியர்க்கதிபன், 527
பாண்டியற்காரமுது, 524
பாண்டியனுர், 529, 532
பாண்டிவெள்ளம், 647
பாதியுமாய் முற்றும் ஆயினர், 214
பார்ப்பான், 445
பாரிடை ஐந்தாய்ப்பரந்தவன், 4
பாவகன், 4
பாவநாசன், 454
பிச்செமையேற்றிய பெரியோன், 3
பிச்சைத் தேவன், 85
பிஞ்ஞகன், 1, 402
பிணிப்பட்டுமடங்கினர்க்கு மருந்தினன், 112
பித்தன், 541
பிரான், 596
பிறந்தபிறப்பறுக்கும் பெருமான், 1
பிறப்பறுக்கும்பிஞ்ஞகன், 1
பிறவி அறுப்பான், 1
பிறவிநாசன், 55
பிறவிப்பிணிக்கோர் மருந்து, 444
புகழ்ச்சியைக் கடந்தபோகம், 537
புகழில்திகழுமழகன், 352
புண்ணியன், 587, 593

புத்தன், 250, 318
புத்தேளிர் கோமான், 18
புயங்கப்பெருமான், 603, 604
புயங்கன், 141, 607
புராணன், 4, 503
புறத்தார்க்குச் சேயோன், 1
புனிதன், 454
பூவேறுகோன், 215
பெண் ஆண் அலியெனும் பெற்றியன், 3, 46, 126
பெம்மான், 182, 514
பெருங்கருணைப்போரேறு, 1
பெரும்பித்தன், 263, 467
பெருமான், 1, 547, 598, 610
பேரருளாளன், 589
பேராயிரமுடைப்பெம்மான், 4
பேரின்பவெள்ளம், 526
பொய்யர்தம்பொய்யன், 206
பொருளன், 464, 551
பொருளுடைக்கலை, 537
பொல்லாமணி, 14, 416, 436-445
பொலாமணி, 516
போக்கும் வரவும் புணர்வு மிலாப் புண்ணியன், 1
போரேறு, 57
மஞ்சன், 4
மண்ணில் திண்மை வைத்தோன், 3
மதியிற்றிண்மை வைத்தோன், 3
மதுரையர் மன்னர், 525
மருந்து, 433, 534, 620, 632
மருவியெப்பொருளும் வளர்ப்போன், 3
மலைக்குமருகன், 200
மறைபயின்ற வாசகன, 587
மறைமுதல்வன், 4
மறையான், 183
மறையோன், 640
மனத்துணை, 143
மன்னன், 1, 497, 603
மாசில்மணி, 543, 632
மாணிக்கக்கூத்தன், 206
மாதேவன்,
மாயப்பிறப்பறுக்கும் மன்னன், 1
மாயன், 402
மால்விடையூர்தி, 69
மாவூர்தியான், 183
மாற்றம்மனங்கழியநின்ற மறையோன், 1
மானிடன், 150
மிக்கான், 1
மீனவன், 529, 535
முக்கணப்பன், 199
முக்கணன், 463
முடியாமுதல், 376
முத்தன், 421, 463, 586
முத்தனையான், 600
முதல்வன், 463, 600
முதனடுவிறுதியும் ஆனவன், 373
முழுதோன், 3
முற்றுக்கும்பின்றன், 193
முன்னேப்பழம்பொருட்கு முன்னேப்பழம்பொருள், 163
முன்னோன், 3
முனிவர்முழுமுதல், 599
முனிவன், 463, 599
மூத்தான், 551
மூலபண்டாரம், 528
மூவர்க்குமுன்னோன், 193
மூவர்கோன், 4
மூவாதமுதலான், 551
மூவாமுதல், 445
மூவுலகுக்கொருதலைவன், 113
மூவேழுலகுக்கும் தாய், 444
மூன்றுநயனத்தன், 328
மெய்ச்சேவகன், 577
மெய்ப்பொருட்கட்டேர்ற்றம், 186
மெய்ப்பொருள், 535
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினர், 214
மெய்யர்மெய், 206

மெய்யன், 462
மெய்யேகிலேபேருனவன், 186
மேலொடு கீழாய் விரிந்தோன், 3
யாவர்க்கும் தந்தைதாய் தம் பிரான், 51
யாவரும் பெறவுறும்ஈசன், 3
யாவைக்கும் வீடானவன், 186
யோகத்தின் பொலிவு, 537
வல்லாளன், 179, 476
வாழ்முதல், 143
வானநாடர்மருந்து, 206
வானவன், 188, 193
வானிற் கலப்பு வைத்தோன், 3
வானோர்க்கரியமருந்து, 4
விகிர்தன், 4, 462
விடைப்பாகன், 1, 401, 420, 504, 506, 555
விண்ணவர்கோ, 535
விண்ணவர்நண்ணாமாட்டாகழல், 521
விண்ணுகியவன், 172
விண்ணிறைந்து மண்ணிறைந்துமிக்கோன், 1
விண்ணோர்களேத்த மறைந்திருந்தான், 1
விண்ணோர்பகுதி, 3
விண்முதற்பூதம் வெளிப்படவகுத்தோன், 3
வித்தகன், 479
விமலன், 1, 459
விருத்தன், 65
விஜைக்கேடன், 504
வெளியிடையொன்றுய்வி லோன்தவன், 4
வேகங்கெடுத்தாண்டவேந்தன், 1
வேண்டத்தக்கதறிபவன், 499
வேதப்பொருள், 168
வேதமுதல், 164
வேதமும் வேள்வியும் ஆயினன், 214
வேதமெய்ந்நூல் சொன்னவன், 147
வேதமொழியன், 326
வேதவிழுப்பொருள், 158
வேதியன், 179, 181, 184, 187, 517
சிவபிரானுல் அழிந்த பலரின் பெயர்கள், 289
சிவமாக்குதல், 648
சிவன், 1
சிவனருள் பெற்றதும், மாண்டவை, 245
சிவாயநம, 553
சிவானுபவம், 640
சிறவேசெய்தல், 4, 90
சிறுமையைப் பெருமையினுல் பொறுத்தல், 407
சினமால்விடை, 506

சீலம், 643

சுகம்—கிளி, 360
சுடர், 456, 483, 509
சுடரொளி, 1
சுண்ணவெண்ணீறு, 651
சுந்தரவேடம், 2
சுருள்புரிகூழை, 410
சுழித்தலைப்படுதல், 567
சுற்றமென்னும் தொல்பசுக்குழாங்கள், 4

தூக்கமொடுதூலம், 3
சூடகம், 201
சூறைமாருதம், 3

செங்கழுநீர்மலர், 636
செச்சைமலர், 33, 512
செஞ்சவே—செம்மையாய், 451
செடி—முடைநாற்றம், 424
செடிசேருடல், 495
செடிசேருடலம், 87
செந்நிலாப்பத்து, 396-405
செந்நாவலர், 504

செம்மையேயாய சிவபதம், 536
செல்வம் என்னும் அல்லல், 4
செறிவு, 643
சென்னிப்பத்து, 577–586

சே, 4, 215
சே அகம் ஏந்திய கொடி., 210
சேட்டைத்தேவர், 400
சேடு. 315
சேலனையகண், 240, 425, 635
சேவகன், 2, 171, 181, 190, 210, 578, 579
சேவடியென்னும் பொருள், 416

சொக்கு, 2
சொல்லாத நுண்ணுணர்வு, 1
சொன்மாலை, 4

சோத்தம், 419
சோத்து, 148, 202
சோத்தெம்பிரான், 202

ஞாலம், 285, 470, 528
ஞானநாடகம், 99
ஞானவள், 613

தக்கன், 189, 259, 278, 289, 301, 304, 309
தகர், 8
தச்சுவிடுதல், 296
தசாங்கம் கூறியது, 2
தசும்பு, 432
தட்டுளுப்புப்பட்டு நிற்றல், 318
தண்ணந்தமிழ், 184
தத்தை, 358
தந்திரம், 3
தர்ப்பணம், 2
தலைதடுமாறுதல், 567
தலைமாலை, 152
தலையணித்தாட்கொண்டருளல், 160
தவம்செய்வார் தொழில், 397
தழல்விழியுமுவை, 521
தறிசெறிகளிறு, 521

நாமரைத்தாள், 49
தாமேதமக்குச்சுற்றமும், 605
தாய்போல்தலையளித்திடுதல், 178
தாரகை, 152, 172, 368
தாவரசங்கமம், 1
தான்றி, 4

நித்திக்கும் சிவபதம், 475
நிதலை, 145
நிமிலநான்மறை, 459
திருக்கழுக்குன்றப்பதிகம், 466–472
திருக்கோத்தும்பி, 215–234
திருச்சதகம், 5–104
திருச்சாழல், 255–274
திருத்தசாங்கம், 356–365
திருத்தெள்ளேணம், 235–254
திருத்தோணேக்கம், 313–326
திருநீறு, 28, 636, 638
திருநெடுமால், 3
திருப்படையாட்சி, 633–640
திருப்படையெழுச்சி, 613–614
திருப்பள்ளியெழுச்சி, 366–375
திருப்பாண்டிப்பதிகம், 524–533
திருப்புலம்பல், 554–556
திருப்பூவல்லி, 275–293
திருப்பெருந்துறையில் குருந்தம் மேவியது, 456–465
திருப்பொற்சுண்ணம், 195–214
திருப்பொன்னூசல், 827–335
திருமால் அவிர்ப்பாகம் கொண்டது, 299
திருமால் கண் இடந்தது, 322
திருமுண்டம், 522
திருவண்டப்பகுதி, 3
திருவம்மானை, 175–194
திருவார்த்தை, 384, 587–596
திருவுந்தியார், 294–312
திருவெண்பா, 615–625
திருவெம்பாவை, 155–174
திருவேசறவு, 544–553
திறவு, 539

துகள், 433
துக்கசாகரம், 3
துணிநிலா, 518
துதைதந்து, 461
துப்பன், 102, 461
துயக்கு, 472
துரிசறுத்தல், 561
துவந்துவங்கள், 559
துழனி, 128
துன்பப்புயல்வெள்ளம், 409
துன்னம்பெய்கோவணம், 256

தூசி, முன்படை, 614
தூண்டாவிளக்கு. 486

தெங்குதிரள்சோலை, 175

தேவதேவன், 2, 577
தேவர்தகர்தின்றது, 8
தேவர்முதலியோர் தவம்செய்யும் முறை, 178

தொழுகுலம், 132
தொழும்பர், 147, 518
தொழும்பாளர், 102
தொழும்பு, 1, 106, 188, 436

தோலின்பாவைக்கூத்தாட்டு, 643
தோள்வலீ, 201
தோளாச்சுரை, 492
தோளாமுத்து, 4, 431

நட்டம்பயிலுதல், 1, 268
நடைக்கூடம், 419
நம்சிவாய, 1, 66, 402
நல்குரவென்னும் தொல்விடம், 4
நல்லறிவு, 1
நவமாய செஞ்சுடர், 238
நன்னெறி, 285, 588

நாட்டார் நகைசெய்தல், 180
நாட்டுத்தேவர், 400
நாத்தழும்பேறுதல், 4, 209
நாத்திகம் பேசுதல், 4
நாதப்பறை, 336, 363, 613
நாதப்பெரும்பறை, 2
நாதன்ருள், 1
நாமங்கள் பேசுவார்க்கு இன்பமே வரும், 466
நாமம் உரைத்தல், 356
நாதம்பிதற்றல், 385
நாயகம், 500, 642
நாரணன் நயனம் இடந்தது, 272
நாவேறு செல்வி, 215
நான்மறையோன், 2, 27, 307

நிரந்தரம், 10, 427
நில்லாஉலகு, 609

நீத்தல்விண்ணப்பம், 105–154
நீற்றுக்கவசம், 613
நீற்றுக்கோடி, 2

நுகமின்றிவிளாக்கைத்தல், 433
நுடங்குமிடையார், 412
நுந்துகன்று, 224

நூக்குதல், 497
நூறு நூருயிரம், 2

நெல்லிக்கனி, 439
நெறியல்லாநெறி, 649
நென்னல், 160

நேரியான், 1

நொடியனசொல், 433

நோன்பு, 643

பங்கயம், 171, 456
பச்சூன், 149
பச்சைத்தாளரவு, 547
பசுபாசம், 479, 563
பசுபாசம் அறுத்தல், 476
பஞ்சேரடி, 425

பட்டிமண்டபம், 53
படம், 288
படவு—படகு, 589
படிமப்பாதம் வைத்தல், 2
படிற்றுக்கை, 48
படிறி, 159
படிறு, 44, 48, 139, 506, 509
பண்சுமந்தபாடல், 182
பண்டாயநான்மறை, 626-632
பணிலம், 151
பத்தர்—பக்தர், 541, 614
பத்தி—பக்தி, 582
பத்திநெறி, 648
பத்திமை, 479, 597
பத்து—பக்தி, 219
பத்து—பற்று, 600
பதஞ்சலி, 2
பதம், 503
பந்தமாக்கரை, 3
பந்தவிகாரகுணங்கள், 635
பந்தனை, 591
பப்பற, 371
பரகதி, 463
பரசுதல், 504
பரஞ்சோதி, 555, 647
பரம்பெருங்கருணை, 574
பரமநாடகன், 2
பரமானந்தப்பழங்கடல், 3, 487
பரமானந்தம், 3, 441
பராவமுது, 635
பரிசு, 13, 95, 182, 479, 481, 498, 653
பரிதல், 177
பரிமா, 2
பல்லாண்டிசைத்தல், 195
பலிதிரிந்தது, 271
பவம், 9, 111, 238, 637,
பவளத்திருவாய், 425
பழஞ்சொல்புதுக்குதல், 173
பழமொழிகள் :—
அழல்சேர்மெழுகு, 422
ஆனவெம்போரிற்குறுந்தூறென அலைப்புறல், 125
இருதலைக்கொள்ளியினுள்ளெறும்பு, 113
உங்கையிற்பிள்ளையுனக்கேகயடைக்கலம், 173
உடைந்துதாழியைப்பாவுதயிர், 411
ஊராமிலைக்கக்குருட்டாமிலைத்தல், 91
எங்கெழிலென்ஞாயிறு, 173
எய்ப்பினில் வைப்பு, 3, 102, 143
எறும்பிடைநாங்கூழ், 129
கடலுள்நாய்நக்குதல், 117
கண்கெட்டஊரேருழுதல், 57
கல்நாருரித்தல், 243, 283
கல்லைப்பிசைந்துகனியாக்குதல், 179
கொடிறும் பேதையும் கொண்டதுவிடா, 4
கொம்பரில்லாக்கொடிபோல அலமருதல், 124
சுழல்வன் தயிரிற் பொருமத்து, 133, 134
தவிசு நாய்க்கிடுதல், 548
தாம்வளர்த்ததேர்நச்சுமாமரமாயினுங் கொளார், 100
தீப்புகுவிட்டில், 109
நாய்க்குத்தவிசிடல், 32, 234, 505
நாய்சிவிகையேற்றுவித்தல், 656
நாயுற்றசெல்வநயந்தறியாவண்ணம், 224
நீரற மீன் துவள்தல், 130
நெய்க்குடந்தன்னை எறும்பு மொய்த்தல், 128
பா இடையாடும் குழல், 413
பிரைசேர்பாலின் நெய், 380
பொறுப்பரன்றே பெரியோர் சிறுநாய்கடம்பெரியினையே, 110

மழக்கையிலங்கு பொற் கிண்ணம், 96
வற்றல்மரம்போல்நிற்றல், 493
வாயில்பொடி அட்டுதல், 277
வாழைப்பழத்தின் மனங்கனிவித்தல், 138
பழவினைகள் மாறுதல், 648
பளகு, 39
பறைதல், 89

பரங்கும்பரிசும், 481
பாசமாம் பற்று, 1
பாசமெனும்தாழ், 654
பாசவினை, 198
பாசவேரறுத்தல், 540
பாண்டிநாடேபழம்பதி, 2
பாண்டிப்பெரும்பதம், 531
பாணேபேசுதல், 88
பாதப்போது, 30
பாதாளம், 176
பாதாளம்ஏழு, 164, 345
பார்ப்பு, 48
பாரித்தல், 1
பாருரு, 597
பால்கொள்வெண்ணீறு, 456
பால்திருநீறு, 602
பாவகம், 2, 248, 480
பாவனையிரும்புகல் மனம்செவி இன்னதென்றறியேனே, 41
பாழ்த்தபிறப்பு, 20
பாற்கடலான்—திருமால், 356
பானல், 23, 209
பானலார் கண்ணியர், 23
பானினைந்தூட்டுந்தாய், 542

பிச்சதேற்றல், 647
பிச்சேற்றுதல், 176, 179
பிடித்தபத்து, 534-543
பிணக்கு, 466
பிணநெஞ்சு, 35, 36
பிணிமூப்பு, 478
பிரார்த்தனைப்பத்து, 483-493
பிலமுகம், 261

பிறக்கம், 3
பிறதெய்வம் கொள்ளாமை, 6
பிறவிக்காடு கருவும்கெடும், 627
பிறவிகள் பலவற்றில் பிறந்தெய்த்தல், 188
பிறவித்தாழைப் பறித்தல், 325
பிறவிப்பௌவம், 31
பிறவியை வேர் அறுத்தல், 407, 408
பிறவிவேரறுத்தல், 539

புங்கமானபோகம், 75
புடைபட்டிருத்தல், 436
புணர்ச்சிப்பத்து, 436-445
புத்தேளிர், 18
புரந்தரன், 6 215, 307
புரந்தரனூர்குயிலாகி மரத்திலேறியது, 302
புரந்தராதியின்பம், 76
புரைபுரைகனிதல், 338, 543
புலக்குரம்பை, 1
புலர்தல், 158
புலனைந்து, 1
புலனைந்தும் வஞ்சனை செய்தல், 1
புலையன், 100, 536
புவனி, 2, 375
புழுக்குரம்பை, 406, 535, 584
புழுக்கூடு, 59, 60, 104
புழுத்தலைநாய், 575
புள்ளித்தோல், 273
புற்றில்வாளரவு, 514
புன்கணன், 412

பூடு, 1
பூதங்கள், 370, 482
பூதங்கள் தத்தம் தன்மாத்திரையில்ஒடுங்குங்காலம், 12
பூதலம், 2, 175

பெருஞ்சாத்து, 607
பெருநெறி, 402

பேய்த்தேர், 3, 313

பேரணி, 614
பேராயிரம்பரவுதல், 422
பேரானந்தம், 194, 491, 610
பேழ்கணித்தல், 609

பைதல், 81

பொக்கங்கள், 159
பொங்குகங்கை, 407
பொச்சை, 575
பொத்தை, 432
பொதும்பு, 139–140
பொய்த்தேவு, 219
பொய்ந்நெறி, 435
பொய்யர்தம் மெய், 514
பொல்லா விஞையேன், 1
பொலிவு, 2
பொன்னடி, 1

போக்கும்வரவும் புணர்வும், 1
போற்றித்திருவகவல், 4
போனகம், 286

மகம், 378
மட்டு, 137
மண்டலத்தீசன், 182
மண்ணிலே பிறந்திறந்தும் மண்ணுவதற்கொருப்படுகின்றேன், 431
மண்ணும் விண்ணும், 2
மணிகண்டம், 402
மணிவார்த்தை, 30, 632
மத்தம், 213, 320, 345, 620
மத்தமனம், 7
மத்தேதான்மத்தன், 506
மதியிலிமடநெஞ்சே, 37
மதிவெண்குடை, 613
மதுகரம், 20
மதுரக்கனி, 492
மந்தாரத்தில் தாரம்பயின்று மந்தம் முரல்வண்டு, 140
மந்தாரமாலே, 2, 189
மரக்கண், 399, 404
மரகதக்குவால், 3
மரகதம், 357, 482
மலங்குதல், 1, 468
மலமாக்குரம்பை, 58
மறிவறியாச் செல்வம், 414
மனமே கோயில், 539

மாடு—செல்வம், 205, 426, 571
மாணி, 319
மாணிக்கத்தொளி, 426
மாதர்த்திரை, 409
மாப்பேரூழி, 3
மாய இருள், 1
மாயப்படை, 613
மாயப்பிறப்பு, 1, 277
மாயப்பிறவி, 501
மாயாவாதம், 4
மாயாவாதம் என்னும் சண்டமாருதம், 4
மாயாவிருள், 529
மார்கழிநீராடல், 174
மால், ஈரடியாலே மூவுலகளந்தது, 3
மால், ஏனம் ஆனது, 3
மால் கொள்தல், 525
மாலவன் மிகுதி, 3
மாலும் காட்டி வழிகாட்டி, 643
மாலுறுதல், 441
மாழைமைப்பாவிய கண்ணியர், 411
மான்கணம், 3, 380
மானுடம், 371

மின்கணினர், 412

மீண்டுவாராவழி, 2
மீண்டுவாராவழியருள்பயன், 2

முகோர்என்னல், 165
முஞ்சுதல், 4
முடிவில்லா ஓத்து, 551
முடை—புலால்நாற்றம், 535
முடையார் பிணம், 484

முடையார் புழுக்கூடு, 60
முத்திநெறி, 648
முதலந்தமில்லா மல்ல ற் க ரை முத்தி, 31
முதலிச்செவ்வாய்ச்சியர், 145
முந்தைவினை, 1
முந்நீர், 132, 532
மும்மலங்கள், 2, 362, 472
மும்மலப்பழவல்வினை, 472
மும்மைமலம், 656
முருடு, 399
முழுப்புழுக்குரம்பை, 535
முழுமுதல், 379, 599
முழுவதுங்கண்டவன்—பிரமன், 11
முளைக்குடம், 195
முறிசெய்தல், 282
முறையுளி, 3

மூங்கிற் சிந்தை, 490
மூர்க்கர், 648
மூலமாகிய மும்மலம், 2
மூவர் இராக்கதர் துவாரபாலகரானமை, 321
மூவாநான்மறை, 4
மூவிலைச்சூலம், 555
மூவேழ்சுற்றம், 4

மெய்ச்சுடர் 1, 388
மெய்ஞ்ஞானம், 1
மெய்ந்நெறி, 435
மெய்ப்பதம், 538
மெய்யடியார், 486, 585, 602,
மெய்யன்பு, 485, 488

மேருவில்லானமை, 462

மையல், 567, 650, 654

மொட்டருமலர்பறித்திறைஞ்சுதல், 463
மொய்ப்பு, 417

மோக்கழல், 2

யாக்கை புளியம்பழம் ஒத்திருத்தல், 420
யாத்திரைப்பத்து, 603-612
யாமார்க்குங்குடியல்லோம் யாதும் அஞ்சோம், 34
யானெனதென்னுரை, 477

யோகி, 614
யோகு, 263

வண்டோதரி, 317
வல்வினை, 12, 585
வல்வினைக்காடு, 123
வலித்தலைமான், 144
வளைக்கையான்—திருமால், 405
வன்மம், 411

வாராவழி, 176, 621
வாராவுலகநெறி, 643
வாராவுலகம், 422, 643
வாழ்முதல், 127, 143, 144
வாழாப்பத்து, 446-455
வாள்உறைகழித்தல், 527
வாளா, 161, 483
வானேருலகு, 2

வி—மலர், 138
விக்கினேன் தண்ணீர் பருகத் தந்துய்யக் கொள்ளாய், 415
விட்டேறு, 2
விடக்குடம்பு, 1
விடர்—பிளவு, 142
விடலை, 65
விடை—இடபம், 25, 112, 504
விண்சுமந்த கீர்த்தி, 182
வித்தகத்தேவர், 220
வித்துறுதல், 134
வித்தைப்பொருள், 435
விதலை—நடுக்கம், 145
விதுவிதுத்தல், 138
விமலன், 1, 459
வியாத்திரன், 303
விரதம், 3

விருகம், 1, 459
விலங்குமனம், 1
விளரி, 114
விளாக்கைத்து, 433
விளாவுதல், 565
விஸாயாடல், 479
விஸைஓய்தல், 1
விஸைக்கடல், 515
விஸைப்பிறவி சார்தல், 1
விஸைப்பிறவியென்கின்ற வேதனை, 474
விஸையொத்தல், 466

வீறு, 538

வெகுளிவலி, 412, 425
வெண்சங்கு, 162
வெண்ணீற்றன், 456
வெண்ணீறு, 165, 518, 651
வெண்மலரான்—பிரமன், 356
வெள்ளக்கருணை, 603
வெறுவியன், 480

வேசறுதல், 154
வேட்கை, 515
வேடுரு, 590
வேதியர் சாத்திரங் காட்டுதல், 4
வேதியன் தொகை, 3
வேற்கண்ணுள், 611
வேற்றுவிகாரம், 1
வேனில்வேள், 23, 44

வைப்புமாடு, 426

உரையிற்கண்ட அரும்பதம் முதலியவற்றின் அகராதி

(எண்—பக்க எண்)

அகண்ட பரிபூரண சச்சிதானந்த நித்திய சுத்தமான திருவடி, 499
அகண்டாகார சச்சிதானந்த சொரூபன், 636
அகம்பிரமம், 662
அங்கப்பிரதட்சணம், 497, 916
அங்கப்பிரத்தியாங்க உபாங்கங்களெல்லாம் அருட்பணி, 682
அசபவாசத்திருப்பொன்னூசல், 707
அசபைச்சத்திபீடம், 710
அசபைநிருத்தப் பொன்னூசல், 706
அசபையான மூலாதாரப் பொருள், 710
அசபையொத்த அன்னநடை, 706
அஞ்சனபூரணி, 745
அட்டவித்தீசுவர அதிகாரம், 651
அடியார்காணத்திருமேனியுடையவன், 605
அடியேன்வினைபுகைந்தெழும்ப அக்கினியைக் கையிலேந்தியது, 852
அண்டகோசத்தில் நிலமேழு, நீரேழு, பாதலமேழு, வானேழு, குலகிரிகளெட்டு, 798
அணுசித்துரூபசதாசிவ அட்டமூர்த்தங்கள், 648
அணுபட்ச அதிகாரப்பொருள், 478
அணுபட்சத்தில் உருத்திரனகின்றமை, 536
அணுபட்சமான திருவுரு, 485
அணைந்தோர் தன்மை பத்து வகையான பரிபாக சத்தியாயிருக்கும், 456
அத்துவித அன்பு இன்பக் காட்சி, 597
அத்துவித சமாதி, 643
அதிதீவிர சத்திநிபாதம், 711
அதிதீவிரபக்குவபோதன், 643
அதிரகசிய நடனம், 537
அநாதி நித்தியசத்தி, 714
அநாதி நித்திய வியாபகம், 481
அநாதி வழக்கு, 539
அநுக்கிரகமே வரமென்று உணர்த்தும் சிவசத்தி, 456, 528
அபிமானச்சுழல், 823
அபேத அத்துவிதம், 619
அர்த்தநாரீசுவரத்திருமேனி, 642
அர்த்தநாரீசுவரம், 585
அர்த்தநாரீசுவரர், 630
அர்த்தநாரீசுவரன், 604
அருட்கரை, 645
அருட்சத்தி, 582, 583
அருட்பாசவலி, 933
அருளுருச்சடாதாரி, 625
அருளே ஆபரணம், 625
அவித்தியாகாரி, 745
அறம்பொருளின்பவீடான நாற்பாதமான், 628
அன்பேதிருமேனியாகக்கொண்டவன், 723
அன்பைப்புலப்படுத்தும் சிவசத்தி, 456, 475

ஆட்டவிர்ப்பாகம், 461
ஆணவமல அச்சு, 686
ஆணவமலசத்தி, 576
ஆதாரசத்தி, 605
ஆதாரப்பிருதிவியே ஞானஉரல், 622

ஆதிசத்தி, 579
ஆபத்தாரணவடுகேச வயிரவன், 665
ஆறத்துவா, 720
ஆறத்துவாவும் திருமேனி, 699
ஆன்மசுத்தி, 731
ஆன்மஞான அனகபாரம், 809
ஆன்மதரிசனம், 730
ஆன்மதட்சத்திரசிற்சத்தி, 788
ஆன்மபோதத்திற்கு வெளிப் படாப்பொருள், 644
ஆன்மரட்சகன், 641
ஆன்மரூபம், 730
ஆனந்த அனந்தல், 575, 578
ஆனந்தக்கடல், 644
ஆனந்த நிருத்தம் செய்யும் தியாகராசர், 646
ஆனந்த வடிவான பராசத்தி, 608
ஆனந்தவாரி, 857

இச்சாசத்தி, 577
இச்சாஞானகிரியா சக்திகளே மூன்று நேத்திரங்கள், 660
இடபம் பிரத்தியங்கம், 475
இந்திரிய வேடர், 820
இயக்கிமாரான செட்டிப்பெண் களுக்கு அருளியது, 819
இரகசிய இரத்தினமணிமன்று, 918
இரட்சிப்பதே சத்தியமென ஏந் தும் மழு, 628
இரண்டாமிடமான அருள், 538
இரண்டாமிடமான திருவருள், 456
இரணிய கோசத்திருவடி, 873
இருதயபுரம், 683
இருவினையொப்பு, 737
இவற்றில் ஆறு பொருளும் அடங்கிய வகை, 480
இன்பசத்தியான கொக்கிறகு, 656
இன்பாதீத அருட்சத்தி, 585
இன்பாதீத சிவசத்தி, 585
இன்பான சிவசத்தி, 584

ஈசானமூர்த்தி, 575

உத்தித்தந்திரக்கதை, 480
உபாங்கமெல்லாம் அருள், 673
உலக ரட்சைக்கு அர்த்தசந்திர ஊசச்சிரசில் தரித்தவன், 605, 638
உள்ளத்தொளியே திருத் தோணி, 469

ஊனகிருத்திய காளிக்கூட்டம், 667

எச்சதத்தனர், 700
எண்பத்துநான்கு நூறுயிரம் தாயர், 937
எருதுடையான் அடிமையென்ற பழமொழி, 632
எல்லா அத்துவித அசைவுகளும் திருவடியே, 591
என் உள்ளத்தொளியே திருத் தோணியாக எழுந்தருளியது, 817

ஏகதேசவுருவகம், 491
ஏகபரப்பிரமஅறிவு, 676
ஏகபரப்பிரமம், 513
ஏகபரப்பிரும்மசொரூபசிவன், 583
ஏழிசையானசங்கான அசபை, 583

ஐந்தவசரீரி, 619
ஐந்துமலமும்அருளாய் நின்ற முறைமை, 753

ஓர்மொழிப்பிரேரகம், 599

கங்கைச்சத்தி, 615
கபாடவாசல், 577
கயிலையொத்த நீறு, 938
கரணத்தை அருள்வழியாகச் செலுத்தும் சிவசத்தி, 508
கருமகாண்டியர், 905

கருவிகரணம் அருளுதல், 633
கல்லிலே நாருரித்தல், 678
கலிசத்தி, 615
கலிஞானக்காதலன், 865
கலிஞானத்துக்கெட்டாத பரஞானம், 653
கலிஞான வெண்சங்கு, 737
கலிஞானி, 596
கழுகான அடியார், 817
கற்பகால சங்கற்பத்தில் உண்டான பஞ்சபூதம், 464
கன்மப்படைக்கூட்டம், 920
கஜானனன், 745

காட்டறிவான சுவாமி, 500
காயக்கிலேசம், 564
காயமே கோயிலான சிவபுரம், 628
காலாதீதப்பொருள், 496
காலாதீதப்பொருள்நாதன், 464

கிஞ்சிஞ்ஞன், 543
கிரியாசத்தி, 578
கிரியாவழியான சத்தியாலருளிய சுத்தபஞ்சகிருத்தியம், 487

குஞ்சிதபாதசேவை, 478
குஞ்சிதபாதத்தெப்பம், 674
குஞ்சிதபாதபரமுத்தி, 599
குடிலை என்றொரு பெண், 745
குடிலையினின்று பிரபஞ்ச முழுதும் உற்பத்தியான திறம், 572
குடிலையென்ற நாதமே முழுக்கொலி, 713
குண்டலி சத்தி, 920, 936
குண்டலி ரத்தின சிவ சிம்மாசனம், 705
குணகுணிபாவம், 590
குணகுணிபாவமான சத்திசிவ சொரூபம், 641
குணரகிதன், 868
குரவைத்துதி, 472
குருலிங்கசங்கமம், 480, 676
குலகோத்திர பரமசிவன், 872

கேவலாதீதமே உண்மை, 487

கொடுத்தவாழ்வெல்லாம் பேரின்பமே என அருளும் சிவசத்தி, 456, 522
கொண்டி, 649

கோபப்பிரசாதம், 835

கௌமாரிசத்தி, 615

சகளநிட்கள சகளாகள உரு, 646
சகளீகரித்தல், 900
சங்கார கர்த்தாவான நாதனே முதலாளி, 461, 892
சச்சைகொட்டுதல், 559
சட்டைநாதன் என்ற பெயர்க்குக் காரணம், 717
சடசித்து, 607, 617, 858
சண்டீசுபரநாயனர், 700
சத்திதரன், 745
சத்தியஞானச்சிலம்பு, 683
சத்தியஞானமயில், 706
சத்தியஞானவேல், 705
சத்தியபோத சாங்குசித்தஅகங்கிய அபேத அன்புள அடியார், 517
சத்தியபோதத்திருமஞ்சள், 622
சதசத்தானமனம், 490
சந்திரசேகரநாதன், 854
சம்புபட்சமான திருவுரு, 485
சர்ப்பர்பரணம் பரித்திருப்த சக்தியை உயிர்க்குத் திரோதானம் நீங்கத்தரித்தது, 658
சர்வஞான சத்தியாகிய கங்கை, 625
சர்வவியாபகத்திருச்சடை, 475
சருவசங்கநிவர்த்தியுடைய சிரடியார், 525
சருவசுதந்திரம், 651
சருவஞானசத்தியாகிய கங்கை, 663, 808
சருவவியாபகப்பொருள், 636

சாக்கிராதீத நின்மல சாக்கிரம், 650
சாக்கிராதீதம், 866
சாங்குசித்தத்தன்மை, 577
சாட்குணியம், 677
சாந்தபீசமயமான சிவமயச் சிவன், 627
சாயுச்சியம் வேண்டிய இருடிகள் மோட்சபதம் கண்டமை, 819

சித்துவித்தை, 592
சிலையில் நாருரித்தல், 650
சிவகோசரியார் அடிகள், 698
சிவசாட்குணியம், 488
சிவசாட்குணிய வாரி, 857
சிவஞானக்குண்டலங்கள், 709
சிவஞான தீர்த்தம், 591, 592
சிவஞானப்புனல், 591
சிவஞானபராபரமான இரண்டு திருவடிகள், 816
சிவஞானம், 576
சிவஞானமூலபண்டாரம், 858
சிவஞானமே கண்ணுக நெற்றியி லுடையவன், 605
சிவஞான மோட்சப் பிரேரக உலக்கை, 622
சிவஞான மோன உன்மத்தம், 925
சிவதரிசனம், 733
சிவபிரான் பராசத்திக்கு அணுக் கிரககர்த்தாவால் குரு, 625
சிவபிரான் பராசத்திக்குத் திரு வுருவால் மகன், 625
சிவபிரான் பராசத்திக்குப் பஞ்ச கிருத்தியம் பொருட்டுக்கண வன், 625
சிவபிரான் பராசத்திக்குப் பிரேரக கர்த்தாவால் தகப்பன், 625
சிவபுண்ணிய விடை, 920
சிவபுர ஞானப்போர், 682
சிவபோகம், 734
சிவயோக ஆனந்த இன்பப் பொந்து, 674
சிவயோகம், 733
சிவரூபம், 732
சிவாநுபவ சுவாநுபூதிகம் விளைந்த அடியார்கள், 631
சிவானந்தபோதத்தீர்த்தம், 590
சிவானந்தமேகடனம், 673
சிவானந்த மோகம், 923
சிற்சத்தி, 592, 615
சிற்சத்தி சொரூபம், 647

சீவபோதத்தைச் சிவபோதமாக வருளல், 835
சீவமருந்து, 624
சீவரத்தினகளி, 546
சீவரத்தினப் பிரகாச நாதன், 466
சீவரத்தினம், 620
சீவரத்னப்பிரகாசமணி, 556
சீவரத்னமலை, 468
சீவன்முத்தன், 647
சீவன்மன், 745

சுகவாரி, 946, 947
சுத்தசாக்கிரத்தானம், 655
சுத்தசைதன்யபோதாகாசம், 615
சுத்தபஞ்சகிருத்தியம், 599
சுத்தமாயாபுவனம், 704
சுத்தாவத்தையநுபூதிபெறுதல், 650
சுமமாவிருப்பதான சிவானந்த மான ஒழிவிலொடுக்கம், 932
சுருதி, குருவாக்கு, கேள்வியர், 475
சுழிமுனை மத்திய மருதப்பிரான், 674
சுழுத்தித்தானம், 655

சேகத்சொரூப ஆதாரசிவன், 640

சைதன்ய குருந்த விருட்சம், 807

சொப்பனத்தானம், 655

சோமசத்தி, 615

ஞான அக்கினி மலை, 579
ஞான உலக்கை, 619
ஞானக்குருந்தடி, 811
ஞானக்கொடிப்படை 921
ஞானச்செருப்பரணம், 707
ஞானச்சோதி ஈட்டி, 856
ஞானசத்தி, 575, 615
ஞானசந்திரகலை, 845
ஞானசந்திரகலைக்குடை, 920
ஞானசந்திரகலையைத் திருச்சடையில் தரித்தவன், 834
ஞானசமுத்திரன், 637
ஞானத்தாலி, 625
ஞானநூதல், 849
ஞானப்பித்து, 856
ஞானப்பித்தன், 946
ஞானப்புரவி, 731
ஞானப்பூங்கோதை, 711
ஞானப்பூங்கோதையான திரோதானகேசம், 591
ஞானப்பெண்கள் அக்கினியில் தோன்றியது, 905
ஞானமகரகுண்டலம், 841
ஞானமாணிக்கநிருத்தன், 624
ஞானமுச்சில், 646
ஞானமேபரைநீறு, 921
ஞானவபிஷேக அநுபூதி, 921
ஞானவாணி வகையல், 708
ஞானவாரி, 948
ஞானவாள், 857
ஞானவித்தக மகாதேவர், 635
ஞானவெற்றி, 696
ஞானாகாசசருவபூத ஆதாரன், 473
ஞானாகாச மன்று, 591
ஞானானந்தவாரி, 857

தசகாரிய உண்மை, 727
தசசத்தி, 574
தசவித சத்தி, 598
தஞ்சாவூர்த் தட்டான், 494
தட்டமிட்டுக்கூத்தாடுதல், 536, 629
தத்துவ அதிட்டானம், 593
தத்துவ உற்பத்தியன், 509
தத்துவக்குப்பை, 913
தத்துவ சுத்தி, 729
தத்துவத்திருவாபரணங்கள், 591
தத்துவதரிசனம், 729
தத்துவபட்சிகள், 590
தததுவம்தொண்ணூற்றாறு, 837
தத்துவரூபம், 728
தமிழே நிரதிசய இன்பம், 606
தமோமயமான மூலமல இன்ப சத்தி, 580
தரிசனமேவீடு, 820
தற்சுட்டான போதம், 641
தக்ஷிணாமூர்த்தி முகம், 671

திரிபதார்த்த நிச்சயத் தெளிவு, 506
திரிபுண்டரத்தின்பொருள், 716
திரிபுண்டரம், 854
திரிபுரம் அழித்தல் மும்மலந்தீர்த்தல், 673
திரிபுரமலம், 679
திரிபுரமும்மலதகனம், 684
திரியம்பகன், 706
திரிவிதகரணம், 598, 631, 633
திரிவிதவேடம், 849
திருக்கழுகான இருடிகள் பூசித்த குன்றம், 816, 817, 819
திருக்கைசருவவியாபகமுடையது, 715
திருக்கையால் சியத்தம் வைத்தல், 541
திருச்சதகம் பத்து சத்திகளின் தன்மைகளைக் கூறும், 456
திருநாமப்பரிகலப்பரிச்சின்னவோசை, 582
திருநாமம் படைக்கலம், 920
திருநெற்றியிலுள்ளது சருவஞானக்கண், 808
திருப்பெருந்துறையே திருத்தோணி, 817
திருவடி தேசயாத்திரை நிட்டை, 917

திருவடி பராபரஞ்ஞானப்பொருள், 720
திருவடியான ஞான தீர்த்தம், 591
திருவடியான ஞானானந்தமடு, 590
திருவடியில் மும்மை வணக்கம் செய்தல், 510
திருவருட்சடை, 628
திருவருட்சத்தியான வியாக்கிர பாதரும் பதஞ்சலிபகவானும், 913
திருவருட்பணி சோதியிதழி திரு முடி, 628
திருவருட்போத சத்திய சிவ ஞானம், 642
திருவருள்தனம், 541
திருவருள்வடிவான வண்டோ தரி, 721
திருவருளாதார உரல், 618
திருவருளான ஞானமழை, 593
திருவருளான தீர்த்தம், 590
திருவருளின்பசத்தி, 580
திருவருளுலக்கை, 618
திருவாசகத்திருவருட்பா மகா வாக்கியமுழுதும் அவ்வ நு பூதியாயிருப்பது, 482
திருவீழிமழலைநாதன், 702
திருவேணி நன்மார்க்க விதியன்பு அருளுவது, 715
திரோதானசத்தி, 576, 578, 581, 583, 585, 596, 710
திரோதானசத்தி சொரூப அளக பாரம், 622
திரோதான நீக்கல், 592
திரோதானப்பாம்பின் கச்சை, 630
திரோதானம், 577
திரோதானவடிவுடைய ஞானக் குயில், 721
தில்லையம்பலம் ஆரணஉரு, 785

நீட்சாவநுபூதி, 545

துரியத்தானம், 655
துரியாதீதம், 655

தூலவுடல், 858

தெருள்சத்தி, 581, 591

நேகத்திற்காணும் பரிபாக சின்னங்களைச் செலுத்தும் சிவசத்தி, 456, 458
தேவர்களை இரட்சித்த கருணை தோன்றச் சாட்சியாக நஞ்சைத் தரித்தவன், 605
தேவர் மனிதர் உயிர்பிழைக்க நஞ்சை அமுதாகக் கொண்டது, 628

தோத்திரமே அநுபவமென்றுணரும் சிவசத்தி, 456, 501

நஞ்சணி கண்டன், 637
நவசத்தியான பட்சிசாலங்கள், 737
நவந்தரபேதஉரு, 646
நவந்தரபேதம், 615
நவந்தரபேதவுருவத்திருமேனி, 640
நவரச அநுகரண அலங்கார ஓசை, 588

நாதமாலை பிரணவக்கோழி, 583
நாதவிந்து, 640
நாமரூபமில்லாதவன், 645
நால்வகைமலர், 470, 679, 885
நாலாமிடமான கருணை, 735
நாலாமிடமான கருணையின் பெருமை, 598
நாளீகரம், 711
நாற்பத்தேழு பதிகங்களும் பன்னிரண்டாம் சூத்திரக்கருத்தின் பயன், 456
நான்காமிடமான சுத்தாநுபோக சாங்கசித்தத் திருத்தொண்டு, 456
நான்கு அகவல்களின் பொருள்கள், 455

நான்கு அகவல்களும் முதலிடம், 456

நிக்கிரகமே அநுக்கிரகம், 497, 673
நிச்சம், 51
நிட்களை ஏக பரப்பிரமம், 636
நிட்களமே சகளமானது, 657

நொடித்தான் மலையுத்தமன், 879

பசுபோதத்துக்கு எட்டாத திருவடி, 636
பசுபோதத்தைப் பதிபோதமாக்கிய பெருமை, 514
பசுபோதை என்றொருபெண், 745
பஞ்சகிருத்திய குஞ்சிதபாதம், 914
பஞ்சகிருத்திய நடனம், 894
பஞ்சகிருத்தியமே திருநடனம், 670
பஞ்சகிருத்திய விளையாட்டு, 915
பஞ்சப்பிரம சடங்க பஞ்சாக்கர நாமம், 618
பஞ்சப்பிரம மந்திர சொரூபம், 861
பஞ்சப்பிரம மடங்க வாழ்வு, 478
பஞ்சபாசக்கட்டு, 845
பஞ்சபாசம், 550
பஞ்சபாசவினை, 618
பஞ்சபூதமாலாசித்துவித்தை, 559
பஞ்சமலக்கட்டு, 499
பஞ்சமலகாரிய சத்தி, 553
பஞ்சவிம்சதிவடிவு, 585
பஞ்சவிஷயநுபன், 547
பஞ்சான்மா, 561
பத்துவகைச்சிவசத்தி, 538
பதமுத்தி, 897
பதிபோதத்துக்கு வெளிப்படும் பொருள், 644
பரநாதக்குயில், 737
பரநாதமே குடமுழவாத்தியப் பறை, 713
பரநாதமே பறை, 733
பரம் உயிரைப்பற்றலே பராசத்தி, 575
பரமகுருதரிசனம், 951
பரமுத்தபஞ்சகிர்த்தியநடனம், 667
பரமுத்தபஞ்சகிருத்தியம், 584
பரமுத்தயாத்திரை, 916
பரமுத்தயாத்திரை தரிசனம், 918
பரமுத்தி தசையிலே சூட்சும நடனத்தால் சுத்தபஞ்சகிர்த்தியம் செய்தலை, 532
பரமுத்தி பஞ்சகிர்த்தியம், 597
பரமுத்தியானை குஞ்சிதபாதம், 591
பரவிந்து, 705
பராசத்தி, 574, 575, 592, 595, 596
பராசத்தியே அருள்மேகமாக வந்தது, 593
பராபரையான பார்ப்பதி, 664
பரிசதிட்சை, 893, 905
பரித்திரிதசத்தியான நாகம், 625
பரிபாகதாகமுடையசிவசத்திகள், 589
பரையொளியாகிய நீறு, 606
பரையொளியாகிய விபூதி, 523, 588
பரைவெளி, 578, 579, 580
பன்றிப்பறழ், 818

பாசச்சேதனம், 630
பாசசாலம், 845
பாசவலிவிசியது, 901
பாம்பின்படமான குண்டலினி, 842
பார்ப்பதி சத்தி, 615

பிச்சாடனத்தியாகராசன், 522
பிரகிருதி முதலான ஆறத்துவா, 651
பிரகிருதி மாயா புவனம், 464
பிரணவக்கோழி, 737
பிரத்தியாங்க உபாங்கம், 713
பிருதிவி முதல் நாதம் வரை, 622

பிரேரகப் பிரேரியப்பொருள், 593
பிரேரக வாக்குக்கள், 651
பிரேரகாண்ட சுத்தமாயைப்பட்சி, 583
பிறவிச்சாகரம், 593

புண்ணிய சொரூப இடபம், 475
புண்ணிய சொரூப விடை, 628
புண்ணிய விடை, 511

பூசத்தி, 615
பூதபரிணமதேதகம், 496

பெத்தசையை முத்தமாக்கும் திரோதானசத்தி, 713
பெத்தமுத்தமிரண்டிலும் அடிமை, 465

பேரின்பமான பிரமக்கிழத்தி, 856

பொன்வண்ணத்தந்தாதி, 489

போததேதகம் திருக்கழுக்குன்றம் 815
போதநாகம், 630
போதப்பரி, 856, 920
போதப்புரவி, 871

பௌத்தன், 654

மகாகேவல இருட்டைத்துரத்த, திருக்கை மழுவேந்தி நடனம் செய்தது, 786
மகாகேவலத்துக்கிடமான மூல மலம், 651
மகாகேவலம், 487, 599
மகாமந்திர உபதேசம், 597
மணிமந்திர ஔஷதமாளன், 578
மந்ததரம், 711
மந்திரமந்திரீசுவரர்கள், 583
மலசத்தி, 575, 588
மலப்பிரேரகப்பொருளாகிய பரசிவம், 603
மலபரிபாக சத்திநிபாத இருவினைச்சமமான காலம், 615
மலபரிபாக நிமித்தம் அருளிய தேகம், 887
மல மாதான இச்சா சத்தி, 577
மலரகிதமாக, 624
மறக்கும் மறதியைத் தரிசிப்பிக்கும் சிவசத்தி, 456, 487
மனதைப்பரிபாகம் செய்யும் சிவசத்தி, 456, 468

மாணிக்கத்துள்ளே மரகதச்சோதியானவன், 825
மாமேரு உலக்கை, 622
மாயப்பிரேரக நாதன், 859
மாயாதத்துவப்பிரதமெல்லாம் சர்வசங்காரிவர்த்தி, 674
மாயாபுவனம் மூன்றும், 546
மாயாவல்லவன், 745
மாயாவல்லி, 745
மாயாவித்தையுருவான பேதையர், 890
மாயையான இருவினை, 651
மார்கழித்திருவிழாநீராடல், 597

முச்சத்தி மூன்று கவராகப் பிரகாசிக்கும் சூலப்படை, 877
முத்திபஞ்சாக்கர பஞ்சநாதம், 615
முத்திமண்டபம், 615
முதல் நான்கு ஆகவல்களும் பதிலொரு சூத்திரக் கருத்து, 455
முதலிடமான சிவசொரூபம், 538
முதலிடமான தலைமை, 455
முப்புரிநூல் ஆன்மாக்களுக்கு அறிவு விளங்கத் தரித்தவன், 605
முப்பொருளில் ஆறுபொருளும் அடங்கின, 481

மூலமலசத்தி, 575
மூலவருளின்பக்கொங்கை, 622
மூலாகம வடமொழி, 849
மூலாதார ஞானப்புற்று, 728

மூலாதாரப்பொருளாகிய தியாகராசர், 646
மூவகை அக்னி, 676
மூவகை அணுக்கள், 808
மூவகை ஆன்மாக்கள், 659
மூவேடனை, 478
மூன்றுமிடமான திருவருட் செயலே தன்செயல் என்றது, 456, 598
மூன்றுமிடமான திருவருட் செயலே தன் செயலாக வருவது, 572
மூன்று மாயாபுவனங்கள், 600
மூன்று மாயா புவனம், 599, 895

மோட்சப்பிராப்தி, 647

ரிஷிபத்னிக்குக் கற்பளித்தமை, 818

யோங்க போகாங்கமாக, 618

லிங்கோற்பவம், 595
லிங்கோற்பவமூர்த்தம், 703

வட்டாடல், 629
வண்டோதரியம்மை, 903
வல்லமையானந்தவல்லி, 745

வாக்கைப்பரிபாகப்படுத்தும் சிவசத்தி, 456, 494
வாசகங்கடந்த வாச்சியப்பயன், 852
வாசக ஞானத்துக்கெட்டாத வாச்சிய அநுபூதி, 889
வாலகிரியார், 542, 904
வாள் அணிந்ததின்பொருள், 732

விசாரசருமனார், 700
விந்துசத்தி, 622

வீதிவிடங்கப்பெருமாள், 710

வெள்ளியங்கிரி பரமசிவன் உபாங்கம், 695

வேதசொரூபமான நாய்கள், 903

ஸ்ரீ வித்தியாபீட அசபாகிருத்தம், 710
ஸ்ரீ வித்தை தகரவித்தை, 746

திருச்சிற்றம்பலம்